எனது நினைவுகள்

குற்றேவல் குஞ்சு சுவாமி

எனது நினைவுகள்

குற்றேவல் குஞ்சு சுவாமி

ஸ்ரீ ரமண பகவான் நூற்றாண்டு வெளியீடு

பதிப்பாளர் :

ஸ்ரீ டி. என். வெங்கடராமன்

தலைவர், நிர்வாகக்குழு,

ஸ்ரீ ரமணாச்ரமம்

திருவண்ணாமலை.

முதற்பதிப்பு, ஜூலை 1980

விலை ரூ. Rs 11-00
(அஞ்சல் செலவு தனி)

அச்சிட்டோர்
வினாயகா ஃபைன் ஆர்ட் பிரிண்டர்ஸ்
சென்னை - 600 084

பதிப்புரை

ஸ்ரீ ரமண பகவானது ஸ்கந்தாச்ரம வாஸத்தின் இறுதிப் பகுதியில் ஸ்ரீ பகவானிடம் சரண் புகுந்தது முதல், தற்போதுள்ள ஸ்ரீ ரமணாச்சிரமத்தில் ஸ்ரீ பகவான் விதேக முத்தியெய்தும் பரியந்தம், அன்னாரது அணுக்கத் தொண்டராய்ப் பல்லாண்டுகள் தொடர்ந்து குரு கைங்கரியம் செய்து கிருதார்த்தரான **ஸ்ரீ குஞ்சு சுவாமி** என்னும் பழைய பக்தரால் எழுதப் பெற்றது இந்த ஞாபகக் குறிப்பு நூல்.

ஸ்ரீ பகவான் சந்நிதியில் தினசரி வாழ்க்கையில் நிகழும் அனுக்ரக விலாசங்களின் அற்புத மகிமையையும் முன்னடியார் பலரின் வரலாற்றையும் இந்நூலிற் காண்கிறோம்.

சுவானுபூதியின் விளைவாய் பேரின்பச் சுவை சிறந்து, எளிய இனிய சரள நடையிற் செல்லும் இப்புனித நூல் படித்தற் கினிதாகவும் புருஷார்த்தம் பயப்பதாகவும் அமைந்திருப்பது இதன் தனிச்சிறப்பாம்.

இத் திரு நூலை அன்பர்கள் யாவரும் பக்தி விசுவாசத்துடன் ஓதி யுள்ளொளி யெய்தி வாழ்க்கைப்பயனைப் பெறத் திருவருள் துணைபுரிய வேண்டுகிறோம்.

T. N. வேங்கடராமன்
தலைவர், நிர்வாகக் குழு,
ஸ்ரீ ரமணாச்ரமம்.

முகவுரை

இந் நூலாசிரியரான தவத்திரு குஞ்சு சுவாமிகள் பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளின் பழைய பக்தர்களில் ஒருவர். இவர் இளமையிலே பூர்வ ஜன்ம சத்கர்மாக் களால் தூண்டப்பெற்றவராய் சிவபூஜை செய்யத் தொடங்கி, அடியார்க்குரிய தெய்வச் சின்னங்களான திரு நீற்றுப்பை–அக்கமணிமாலை முதலிய அரும்பொருள்களை அரனுலேயே அருளப்பெற்றமையால் சற்குருவின் கிருபைக் குப் பாத்திரராகி 1920ம் ஆண்டில் பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளைச் சரணடைந்தவர்.

இவர் முதன்முறையாக ஸ்கந்தாச்ரமத்தில் பகவான் சந்நிதியைச் சார்ந்தது முதல் பகவானது திருமேனிக்குச் செய்து வந்த இவரது திருத்தொண்டுகளும், இவரது தூய துறவற வாழ்வும், எப்போதும் பரமார்த்தம் பற்றியே பேசும் இவரது இறைமைப் பண்பும் என்னை வெகுவாய்க் கவர்ந் தமையே இவரது நூலுக்கு யான் முகவுரை எழுத முகாந் தரமாயிற்று.

தமது அருட்பிதாவான ஸ்ரீ பகவான் பரிநிர்வாண ராயினபின், தமக்கு வாழ்வு அளித்து வரும் தெய்வசிந்தனை களைத் தொகுத்து இவர் நூலாக்கியுள்ளமையால் இது ஸ்ரீ பகவானது ஞானக்காட்சிகளைப் பல கோணங்களிற் பளிச்சிடச் செய்யும் சற்போத தர்ப்பணமாகச் சிறப்பதில் வியப்பில்லை.

ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை
24—4—79

ஸஜ்ஜனசரணாராதகன்
ஸ்ரீவத்ஸ நடேசன்

ஸ்ரீ ரமண சற்குரு துணை

நூலின் வரலாறு

சுமார் இரண்டாண்டுகளுக்கு முன் திருவண்ணுமலை ஸ்ரீ ரமணுச்சிரம நிர்வாகக் குழுவின் தலைவரான ஸ்ரீ வேங்கடராமன் அவர்களின் தவப்புதல்வரும், பகவான ருளைப் பாரெங்கும் பரப்புந் திருப்பணிக்கே தமது வாழ் நாளை அர்ப்பித்தவரும், ***The Mountain Path*** பத்திரிகை யின் போஷகாசிரியருமான ஸ்ரீ V. கணேசன் அவர்கள், இந்நூலாசிரியனுன அடியேனையும், என்போன்ற பழம் பக்தர்களான ஸ்ரீ விசுவநாத சுவாமி, சாது ராமசாமிப் பிள்ளை ஆகியோரையும் விளித்து :

“நீங்கள் பகவானடியிற் சரணடைந்தது முதல் பகவத் ஸந்நிதியில் உங்களுக்குத் தெரிந்து நிகழ்ந்த அருட் செயல்களையும், உங்கள் காலத்தில் வாழ்ந்த மற்ற அடியார் களைப் பற்றி நீங்கள் அறிந்துள்ள விஷயங்களையும் விவர மாக எழுதிக் கொடுங்கள். அவை வெளியானுல் வருங்கால பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்பது எனது எண்ணம்” என்று தமது நற்கருத்தை வேண்டுதலாக வெளியிட்டார்.

அவ்வுத்தமரின் உயரிய வேண்டுகோட்கிணங்க என் சார்பாகவும், எனது சக அடியார் சார்பாகவும் சாவதான மாகச் சிந்தித்து நான் பகவானை அண்டிய நாள் முதல் அவர் விதேகராகுங் கால பரியந்தம் அவருடனிருந்தறிந்த எண்ணிறந்த அற்புத நிகழ்ச்சிகளில், நினைவுக்கு வந்த

வற்றை ஒவ்வொன்ருக யான் கூறிக்கொண்டுவர, அவற்றி லொன்றையும் விடாது ஸ்ரீ ரமண பக்தரான திரு சோம சுந்தரம் பிள்ளையவர்களின் சற்புத்திரியும் பகவானிடத்து அபார பக்தி பூண்டு வாழும் புண்ணியவதியுமான திருமதி M. பங்கஜாக்ஷி அம்மையார் உவகை கொண்டு அதி சிரத்தையோடு உடனுக்குடன் ஏட்டிற் றீட்டி வரலானர்.

இவ்வாறு உருவான இவ்வனுபவ ஞான நூலை ஸ்ரீ பகவானுடன் நெருங்கிப் பழகிய பழம் பெரும்பக்தரான ஸ்ரீசாது நடனுநந்தர் அவர்கள் ஆர்வமுடன் படித்துப் பார்த்து, ஆங்காங்கு சில திருத்தங்கள் செய்தும் விஷயங் களை அட்டவணைப்படுத்தியும் உதவியதோடு இந்நூலுக்குச் சிறப்புரையும் வழங்கினர்.

பக்தர்களைப் பவித்திரராக்கும் இப்புனித நூல் உருவா தற்கும் வெளிவரற்கும் முறையே காரணபூதராம் வாய்ப் புற்ற ஸ்ரீ கணேசன் அவர்கட்கும் அன்னரின் அருமைத் தந்தையாருக்கும் பக்தருலகம் பெரிதும் கடமைப்பட் டுள்ளது. இது பகவானது பாத கமலங்களிற் சமர்ப்பிக்கப் படுகிறது.

— **ஆக்கியோன்**

ஓம்
ஸ்ரீ ரமணாய நம:

சிறப்புப் பாயிரம்

நடனானந்தர் இயற்றியது

நேரிசை வெண்பா

1. கல்லா லடியன்று கையாற் பொருணிலையை
நல்லார்நால் வர்க்குநவி னாயகனே — எல்லார்க்குங்
கண்ணா லதைச்சொலற் காரமண னாகியின்
றண்ணா மலையடியுற் றான்.

2. வாலறிவன் பண்பெல்லாம் வாய்ந்தரம ணன்ஞானச்
சீலமெலாஞ் செவ்வே திகழ்த்தினான் — பாலனிற்றான்
பிஞ்சகன் பாலுற்ற பேறுசொலுந் தன்கதையிற்
குஞ்சுமுனி ஞாபகங் கூர்ந்து.

3. சிறுவயதி லேயே சிவபத்த னாய்ப்பின்
னுறுதிகொடு யோக முஞற்றி — யிறுதியிற்
சற்குருவைச் சார்ந்துமுற் சன்மத் தவக்குறை
முற்றுப் பெறமுயன் றான்.

4. வெல்லரிய சூரனை வேலெய் தழித்தன்ப
ரல்ல லறச்செய் யறுமுகனிற் — பல்லுருவாய்த்
துன்றிப் புலவின்பந் துய்ப்பிக்குஞ் சீவனைக்
கொன்றனன் ஞானவாள் கொண்டு.

5. பாதபூ சைக்கும் பணம்பெறற்குஞ் சம்மதியா
நாதனடைக் கொவ்வா நடையிற்சின் — னூதனர்போற்
கைதவத் தைம்புலக் கான்புக் குழலாது
மெய்தவத் தெய்தினன் வீடு.

6. குருத்தனமுஞ் சீடர் குழூஉம் பொருளுஞ்
சரித்திரமு நாடுந் தருக்கார் — விருத்திக்
கிடஞ்சிறிது நல்கா திவன்போ லிதயத்
தடங்கி யிருக்கை யரிது.

7. திருநீற்றுப் பைக்காசுஞ் செங்கண் டிகையு
முருவேற் றெழுத்துமரன் பாலுற் — றருள்சேர்
குருவைக்கொண் டுய்யிக் குணமணியொத் தாரை
விரலைக்கொண் டெண்ணிவிடும் மேல்.

8. தன்னிலையிற் பேராத் தவரமணன் வாழ்வைமற்
றன்னவன் வாக்கை யறைந்திடுமிம் — மெய்ந்நூலைத்
தன்னுணர்ந் துய்யத் தலைப்படுமெய் யன்பரெலாம்
பொன்னெனப் போற்றிமகிழ் வார்.

9. ஒருமொழியாற் றன்னை யுசாவப் பணிக்குங்
குருவழியிற் சென்றுகுறி யற்றுக் — கருவொழியச்
சாதனை செய்நான் றலைநாண மிஞ்சுவது
போதமென விந்நூற் பொருள்.

10. வாழ்க ரமணன் வளர்பெயர் வானோங்கி
வீழ்க வெளிறறவே வித்தகத்தாற் — சூழ்கவே
நேமிமுழு தும்மெய்ந் நிலையை விளக்குனர்நிட்
காமகரு மத்திற் கலந்து.

ஸ்ரீ ரமணார்ப்பணம்

உள்ளுறை

மூன்றும் பகுதி


நான்காம் பகுதி

அநுபந்தம்—1

---

* பக்க எண்களே மாறியுள்ளன. விஷயம் எதுவும் விடுபடவில்லை

அநுபந்தம் 2



பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி

உ

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷியின் வாழ்வும் வாக்கும்

பற்றிய

எனது நினைவுகள்

நூல்

மங்கலம்

குறள் வெண்பா

தந்தைதா யாவானும் சற்குருதே வாவானும்
சிந்தைதோய் சீரமண னே.

விழுமந் தருரமணன் மெய்வாழ்வும் வாக்கும்
கழறற்கன் னுன்கழல் காப்பு.

முதற் பகுதி

இளமையில் வாய்த்த ஈசன் அருட்கொடை

அண்ணுமலையான் அடிக்கமலத் தேனுண்டு ஆத்மாநுபவத்தில் தன்மயாநந்தராய் வீற்றிருந்து அடுத்தோரையும் உய்விக்கும் அருட்குருவான ஸ்ரீ பகவானின் அருளமுதம் உண்டு ஆனந்தத்திற்றிளைக்கும் பேறுற்ற அடியேன் கேரள நாட்டில் பாலக்காட்டிற்கும் சித்தூருக்கும் இடையிலுள்ள 'செறக்கோடு' என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்த நடுத்தரக் குடும்பத்தினரான என் பெற்றோருக்கு மூன்ருவது குழந்தையாக 1897 ஜனவரியில் பிறந்தேன். என்னுடைய மூன்ருவது வயது வரை யாதொரு விசேஷமும் இன்றி வளர்ந்து வந்தேன். மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவதோ, பிடிவாதம் பிடித்து அழுவதோ ஏதுமின்றி, ஒரிடத்தில் அமைதியாக உட்கார்ந்திருப்பேன். குழந்தைகளின் இயற்கையான குணத்திற்கு மாறுபட்ட நிலையில் என்னைக் கண்ட என் தகப்பனுர் என் ஜாதகத்தை என் தாய் மாமனிடம் காண்பித்தார். ஜாதகம் கணிப்பதில் வல்லவரான அவர் ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்து மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்து, "இந்தக் குழந்தை நம் குடும்பத்தில் பிறக்கக் கூடியதல்ல, தெய்வீக சம்பத்து நிறைந்தது. ஆகையால், இக் குழந்தையிடம் ஆகார விஷயத்திலும், மற்றவைகளிலும் ஆசாரமும் கவனமும் இருக்க வேண்டும்", என்ருர். இதைக் கேட்ட என் தகப்பனுர் மிக்க சந்தோஷம் அடைந்தார். அவர் கைவல்யம் முதலான வேதாந்த நூல்களை பாடங் கேட்டவர். தெய்வ பக்தியிலும் வேதாந்தத்திலும் மிக ஈடுபாடுடையவர். ஆகையால் தனக்கு இப்படி ஒரு குழந்தை பிறந்திருப்பதில் பெருமகிழ்ச்சி அடைந்தார். அதுமுதல்

தனிப்பட்ட முறையில் வளர்க்கப்பட்டேன். என் ஐந்தாவது வயது முடிவில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் என்னை சேர்த்தார்கள். ஓலையில் மலையாள மொழியை ஓரளவு எழுதவும் படிக்கவும் கற்று வந்தேன். என்னுடைய ஏழாவது வயதிலிருந்து என் தகப்பனுருடன் நீராடக் குளத்திற்குச் செல்வேன். அது சமயம் பக்கத்துத் துறையில் குளித்துக்கொண்டிருக்கும் வைதிக பிராமணர்கள் ஜலத்தில் நின்று கொண்டு மந்திரம் ஜபிப்பதைப் பார்த்து எனக்கும் அம் மாதிரி ஜபம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் தீவிரமாக உதித்து, மனதில் சதா அதே சிந்தையாக இருந்தது. ஒரு நாள் இரவு கனவில் ஜடாமுடியும், விபூதி ருத்திராட்சமும் தரித்த கோலத்தில் பரமேச்வரன் என் கண் முன் தோன்றி பஞ்சாட்சரத்தை மூன்று முறை என் காதில் ஓதினுர். ஆனல் விழித்தவுடன் மிகச்சிறுவனுகிய எனக்கு அந்த மந்திரம் சரியாக நினைவு வரவில்லை. உறக்கம் கலைந்து எழுந்த எனக்குப் பெருநிதி கிடைத்து கை நழுவ விட்டது போல் சொல்ல முடியாத ஏமாற்றமும் ஏக்கமும் ஏற்பட்டு அன்று பகல் முழுவதும் வேதனை அடைந்தேன். அன்று இரவு படுக்கும் போதும் அதே நினைவுடன் படுத்தேன். மீண்டும் கனவில் ஈச்வரன் தோன்றி பஞ்சாட்சரத்தை உபதேசித்தார். இம்முறை மிகக் கவனமாக அதை ஏற்றுக் கொண்டேன். அது முதல் மனம் இடைவிடாமல் பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக் கொண்டே இருந்தது. இந் நிலையில் இருக்கும்போது ஒரு விபூதிப் பை வேண்டும் என்ற பேராவல் எழுந்தது. அந் நாளில் பிராமணர்களும், பண்டாரங்களும் தவிர வேறு யாரும் விபூதிப் பை வைத்திருக்கும் வழக்கமில்லை. ஆகையால் பிறரைக் கேட்கவும் பயந்து, மறக்கவும் முடியாமல் வாட்டமுற்றிருந்தேன். இப் பிஞ்சு நெஞ்சத்தின் அபிலாஷையை நிறைவேற்றும் பொருட்டு கருணுமூர்த்தியான கங்காதரன் என் கனவில் தோன்றி, நான் வழக்க

மாகக் குளிக்கும் குளக்கரையில் உள்ள ஒரு குறிப்பிட்ட பெரிய மரத்தின் கீழ் சில்லரை இருக்கிறது, அதை எடுத்து விபூதிப் பை வாங்கிக்கொள் என்ருர். மறுநாட் காலை கண் விழித்து எழுந்ததும், ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளா மல் குளக்கரைக்குப் போய் குறிப்பிட்ட மரத்தடியில் பார்த் தேன். என்ன ஆச்சரியம் ! வேர்களுக்கிடையில் மூன்று காலணு நாணயங்கள் இருந்தன. அவைகளை வெகு ஆவ லுடன் எடுத்து, அதிலுள்ள களிம்புகளை நீக்கி சுத்தம் செய்து கொண்டு வந்து வீட்டில் வைத்திருந்தேன். பகல் நேரத்தில் கடைக்குச் செல்லத் தயங்கி, மாலை சற்று இருட் டியதும் கடைக்குச் சென்று விபூதிப் பையின் விலையைக் கேட்டேன். அதன் விலை மூன்று காலணுக்கள் என்றதும் மகிழ்ச்சியுடன் காசைக் கொடுத்துப் பையை வாங்கி வந்து வீட்டில் பத்திரமாக வைத்திருந்தேன். ஒரு நாள் அதனைக் கண்ட என் தகப்பனர் விபூதிப் பை ஏதெனக் கேட்க, அது கிடைத்த விதத்தைக் கூறினேன். அவர் வியப்படைந்து என்னிடம் முன்னிலும் அன்பும், கவனிப்பும் கொண்டார். இதையறிந்த என் சகோதரர்களும் 'மற்றவர்களும் என்னு டன் சஹஜமாகப் பழகத் தயங்கினர்கள்.

பின்னும் ஒரு வருடம் சென்றது. உள்ளத்தில் மறு படியும் ஓர் ஆவல் பிறந்தது. யாரிடமும் வெளியிட முடியாத அந்த ஆவல் ஒரு ருத்திராட்ச ஜபமாலை வேண்டுமென்பதே. எங்கும் நிறைந்த இறைவன் இதை யாரும் நம்ப முடியா வண்ணம் நிறைவேற்றி வைத்தான். என் நண்பன் ஒருவனுடன் குளத்திற்கு நீராடப் போவது வழக்கம். சம்பவ தினத்தன்று நாங்களிருவரும் குளத் திற்குப் போய்க்கொண்டிருக்கும் போது பாதி வழியில் என் நண்பன் என்னிடம், "என் தகப்பனர் சொல்லிய ஒரு முக்கியமான வேலை ஒன்று செய்ய மறந்து விட்டேன். ஆகையால் வீட்டிற்குப் போகிறேன்" எனக் கூறிப் போய் விட்டான். நான் மட்டும் தனிமையில் சிறிது தூரம் நடந்

தேன். அங்கே பாதையில் ஒரு பெரிய தாமரைப் புஷ்பம் இருப்பதைக் கண்டு ஆர்வமுடன் எடுத்தேன். எடுத்த நான் திகைத்து விட்டேன். காரணம் இது வரையிலும் இனியும் காண முடியாத மிகப் பெரிய தாமரைப் புஷ்பத்தின் நடுவில் தங்கத்தில் கட்டிய ருத்திராட்ச மாலை ஒன்று பொலிந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட நான் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக, நாற்புறமும் நோக்கினேன். ஒருவரும் தென்படவில்லை. பிறகு வெகு பயபக்தியுடன் அதை எடுத்துக் கொண்டு, வீடு வந்து என் தகப்பனரிடம் காட்டி நடந்ததைச் சொன்னேன். இதைக் கேட்ட என் பெற்றோர்களும் மற்றவர்களும் சொல்லொணு வியப்பில் ஆழ்ந்தார்கள். அதிலிருந்து அந்த ஜபமாலை என் கழுத்திலேயே இருந்து வந்தது. தற்சமயம் என் சகோதரர்கள் வசம் பூஜையில் வைக்கப்பட்டு உள்ளது. நம்ப முடியாத இவ்வதிசயங்களைக் கற்பகத் தருவாய்ப் பரிந்தளித்த பரமேச்வரனுடைய அளவிலாக் கருணையை எண்ணுந்தோறும் உள்ளம் பரவசமாகின்றது.

எனக்கு வயது பத்து இருக்கும். என் தகப்பனர் ஒரு மைல் தூரத்தில் உள்ள பக்கத்து கிராமத்தில் சில தமிழ்ப் பண்டிதர்கள் கூடித் திருவிளையாடற் புராணம் படித்து மலையாளத்தில் அர்த்தம் சொல்வதறிந்து என்னையும் அழைத்துக்கொண்டு அவ்விடம் சென்ருர். நானும் ஆர்வமுடன் அதைக் கேட்டு வந்தேன். வீட்டிற்கு வந்ததும், “அங்கு கேட்டதை உன் அம்மாவிற்குச் சொல் பார்க்கலாம்”, என்ருர் என் தந்தை. நானும் அங்கு கேட்ட அனைத்தையும் சிறிதும் பிழையற அப்படியே சொன்னேன். இதைக் கேட்ட என் தாயார் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தார். அது முதல் தினமும் உபன்யாசம் கேட்பதும், வீட்டிற்கு வந்து அதை அப்படியே சொல்வதும் வழக்கமாயிற்று. இதன் பிறகு பல இடங்களுக்குப் புராண உபன்யாசங்கள் கேட்பதற்குப் போய்

வந்தேன். அச்சிறு வயதிலேயே எனக்கிருந்த நினை வாற்றலை அறிந்த பக்கத்து கிராமங்களில் உள்ளவர்களும் என்னை அழைத்துச் சென்று என் பேச்சைக் கேட்டு சந்தோஷப்படுவார்கள். இப்படியே சில வருடங்கள் சென்றன. அப்பொழுது மலையாளத்திற்கு வந்திருந்த "கொடுமுடி ஸ்வாமிகள்" என்பவர் மிகப் பிரக்யாதி பெற்றவர். கௌபீனதாரியாய் உலவி வந்தார். பைரவ உபாசகர். பல சித்திகள் செய்பவர். பலரும் அவரைத் தரிசித்து வந்தனர். என் தகப்பனுர் அவரிடம் என்னை அழைத்துச் செல்ல விரும்பினுர். ஆனுல் எனக்கு, "நமக்கோ ஈச்வரனே குருவாக வந்து மந்திரோபதேசம் செய்தும், அவ்வப்போது சில சந்தேகங்களை நீக்கும் பொருட்டு கனவில் விளக்கியும் இருக்கும் போது எதற்காக வேறொருவரைப் போய்ப் பார்க்க வேண்டும்", எனத் தோன்றியதால் நான் போகவில்லை.

மேலும் சில வருடங்கள் கடந்தன. எனக்கு வயது 18. எங்கள் கிராமத்திற்குச் சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள ஓரிடத்தில் துறவி ஒருவர் தங்கி வயது முதிர்ந்த சில பெரியவர்களுக்கு வேதாந்த பாடங்கள் நடத்தி வந்தார். என் தகப்பனுர் தம் சொந்த வேலையாக அவ்விடம் சென்றவர் இதையறிந்தார். நான் பிரசங்கம் செய்வதும், மந்திரம் ஜபிப்பதுமாக இருப்பது சரியல்ல. இது ஒரு சித்தி போன்றது தான். அது நிலைக்காது. வேதாந்த பாடம் கேட்டு மனன நிதித்யாசனங்கள் செய்து தெளிந்தால் தான் எக் காலத்திற்கும் நல்லது என்று எண்ணினுர். இதற்கு முன்பே கொடுமுடி ஸ்வாமிகளை நான் பார்க்க விரும்பாததால் இவரைப் பார்க்கவும் வரமாட்டேன் எனக் கருதி, அந்த ஸ்வாமிகளிடம் என்னைக் குறித்த விவரங்களையெல்லாம் கூறி, அழைத்து வருவதாகவும், எப்படியாவது அவரிடம் வேதாந்த பாடங் கேட்க என்னை இணங்கும்படி செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டு

வந்தார். ஆகவே ஸ்வாமிகளைப் பற்றி என்னிடம் ஒன்றும் தெரிவிக்காமலேயே தான் வேலையாகப் போகுமிடத்திற்கு வரும்படி சொல்லி ஸ்வாமிகளிடம் அழைத்துச் சென்று சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார்கள். பிறகு என்னைப் பார்த்து, "நீ இங்கேயே இரு, நான் வெளியில் சென்று வருகிறேன்", எனக் கூறி சென்றுவிட்டார்கள். எனக்கு மனமில்லாமலேயே உட்கார்ந்திருந்தேன். சில நிமிடங்கள் கழிந்தன. ஸ்வாமிகள் மெதுவாக என் பக்கம் திரும்பி என்னைக் குறித்து விசாரித்தார். பிறகு அங்குள்ளவர்களை ஜாடையாக அனுப்பிவிட்டு "நீ இப்படியே பிரசங்கம் செய்து கொண்டும், வெளியில் பலர் புகழ இருப்பதிலும் உனக்கு லாபமில்லை. "முனிவர் சித்திகள் விநோத மாத்திரம் தரும், முக்தியைத் தாராவே" எனச் சொல்லி வேதாந்த பாடங்களைக் கேட்டு, படித்து அதில் தெளிவு பெற்றால் தான் நல்லது. அதுவே ஆத்மாநுபவத்திற்கு வழியாகும். ஆகையால் நீ என்ன செய்யப் போகிறாய் எனக் கேட்டார். நான் "உங்களுக்கு எது சரியெனத் தோன்றுகிறதோ அதன்படி செய்யுங்கள்" எனக் கூறினேன். அதற்கு ஸ்வாமிகள், நானாக இன்னது தான் என்று சொல்லக் கூடாது. நீயாக எது விரும்பிக் கேட்கிறாயோ அதைத் தான் நான் உனக்கு சொல்ல வேண்டும். எனக்கு புராணம், ஆரூடம், மந்திரவாதம், வைத்தியம், வேதாந்தம் இவை யாவும் தெரியும். இதில் உனக்கு எது விருப்பமோ அதைத் தான் நான் சொல்ல வேண்டும் என்றார். அப்பொழுதும் எனக்கு எதுவெனத் தீர்மானிக்க முடியவில்லை. இது கண்ட ஸ்வாமிகள் திருவுளச் சீட்டு போட்டுப் பார்ப்பதெனத் தீர்மானித்து அதன் படியே போட்டுப் பார்த்தார். வேதாந்தமென வந்தது. ஸ்வாமிகளும் சந்தோஷத்துடன் இன்று நாள் நன்றாக உள்ளது இன்றே ஆரம்பிக்கலாம் எனச் சொல்லி கைவல்யத்திலிருந்து பின் வரும் ஆறு பாடல்களை ஓலையில்

மலையாள மொழியில் எழுதி என்னிடம் கொடுத்து படித்துக் கொண்டு மறுநாள் அதே நேரத்திற்கு வரும்படி சொல்லி அனுப்பினர்.

கைவல்யம்.

பாயிரம்.

ஈன்றளித் தழிக்குஞ்செய்கைக் கேதுவாய் மயனுய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த்தானே அநந்த மூர்த் தியுமாய்
நிற்கும்
மூன்றமுத் தனுமாயின்பப் புணரியா தவனுய் நாளும்
தோன்றிய விமலபோத சொரூபத்தை பணிகின்றேனே.

படர்ந்தவே தாந்த மென்னும் பாற்கடல் மொண்டு
முன்னூற்
குடங்களி னிறைத்து வைத்தார் குரவர்க ளெல்லாங்
காய்ச்சிக்
கடைந்தெடுத் தளித்தே னிந்தக் கைவல்ய நவநீ தத்தை
அடைந்தவர் விடய மண்தின் றலைவரோ பசியி லாரே.

தத்துவ விளக்கப் படலம்.

நித்திய வநித்தியங்கள் நிர்ணயந் தெரிவிவேகம்
மத்திய இகபரங்கள் வருபோகங் களினிராசை
சத்திய முரைக்கவேண்டுஞ் சமாதியென் றுறுகூட்டம்
முத்தியை விரும்புமிச்சை மொழிவர்சா தனமிந்நான்கே.

சமந்தமம் விடல்சகித்தல் சமாதானஞ் சிரத்தை யாறும்
சமமகக் கரணதண்டந் தமம்புறக் கரணதண்டம்
அமர்தரு கருமம்பற்று தறுத்தலே விடலென்றுகும்
அமர்செயுங் காமமாதி வரினடக் குதல்சகித்தல்.

சிரவணப் பொருளைத்தானே சித்தஞ்சிந் திக்குமாறு
சரதமா வைக்குமித்தைச் சமாதான மென்பர்மேலோர்
பரமசற் குருநூலன்பு பற்றலே சிரத்தையாகும்
வரமிகு சமாதியாறு வகையின்சொற் பொருளிதாமே

சாதன மின்றியொன்றைச் சாதிப்பா ருலகிலில்லை
ஆதலா லிந்தநான்கும் அடைந்தவர்க் கறிவுண்டாகும்
நூதன விவேகியுள்ளே நுழையாது நுழையுமாகில்
பூதசன் மங்கள்கோடி புனிதனும் புருட னுமே.

வீட்டிற்கு வரும் வழியிலேயே பாட்டுக்களை மனனம் செய்துவிட்டேன். வீட்டிற்கு வந்ததும் என் தகப்பனுர் என்ன நடந்தது என விசாரித்தார். விஷயங்களைச் சொல்லி பாட்டுக்களையும் ஒப்புவித்தேன். அன்றிலிருந்து 15 நாட்கள் போய் வந்தேன். 100 பாடல்கள் மனன மாயிற்று. ஒரு நாள் என் தகப்பனுர், "பாட்டுக்கள் மட்டும் கற்றுப் பயனில்லை அதற்குள்ள அர்த்தமும் கேட்டுத் தெரிந்து கொள்", என்ருர்கள். அதன்படியே அர்த்தத் துடன் கற்றுக் கொண்டேன். கைவல்யமும் முடிந்தது. அச்சமயம் பொள்ளாச்சி தாலுக்காவிலுள்ள புதுப்பாளை யம் ஸ்வாமியார் கவுண்டரென்னும் ரங்கஸ்வாமி கவுண்டர், ஸ்வாமிகளைக் காண வந்தார். ஸ்வாமிகளுடன் என்னை யும் பார்த்து என்னைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டு, என் தகப்பனுர் உத்தரவு பெற்று ஸ்வாமிகளு டன் என்னையும் புதுப்பாளையம் அழைத்துச் சென்ருர். அங்கு போனதும் ஞான வாஸிஷ்ட பாடம் ஆரம்பித்து நடந்தது. அப்போது வாஸிஷ்டத்தில் சொல்லப்பட்ட சமாதி முதலான அனுபவங்கள் ஒன்றும் எனக்கு இது வரை ஏற்படவில்லையே எனத் தனிமையில், ஸ்வாமிகளிடம் "இப்படியே படித்துக் கொண்டிருந்தால் போதுமா, அல்லது என்ன செய்ய வேண்டும்" எனக் கேட்டேன். ஸ்வாமிகள், படித்தால் மட்டும் போதாது. அதற்கான

சில அப்பியாஸங்களும் செய்து வர வேண்டுமெனச் சொல்லி, அவைகளைச் செய்ய வேண்டிய முறைகளையும் உபதேசித்தார். அதன்படியே அப்யாஸங்களையும், வேதாந்த சிரவணமும் செய்து வந்தேன். கொஞ்ச நாட்களுக்குப் பின்னும் அந்த அனுபவங்கள் ஏற்படாததால் ஸ்வாமிகளிடம் என்ன செய்வதெனக் கேட்டேன். அவர் இன்னும் தீவிரமாகவும், மௌனமாகவும் இருந்து செய் அப்போது அனுபவங்கள் உண்டாகுமென்றார். நான் புதுப்பாளையம் வந்து சில மாதங்க ளாகிவிட்டதால் நம் வீட்டிலேயே மௌனத்துடன் இருந்து அப்யாஸிக்கலாம் என நினைத்து ஸ்வாமிகளிடம் விடை பெற்றுக்கொண்டு ஊர் திரும்பினேன். அதன்படியே மௌனத்துடன் அப்யாஸங்கள் செய்து வந்தும் ஒரு பலனும் ஏற்படவில்லை. என் பழைய அமைதியும் போய் புதிய அனுபவங்களும் கிடைக்காமல் மனக் குழப்பத்திலேயே சுமார் இரண்டு வருடங்கள் சென்றன. இந்த நிலையில் ஸ்வாமிகள் தமிழ் நாட்டில் சில இடங்களுக்கு யாத்திரை போய் திரும்பி வந்தார். அவருடன் வசதி படைத்த சில பெரிய மனிதர்களும், புதுப்பாளையம் கவுண்டரும் வந்திருந்தார்கள். ஸ்வாமிகள் தான் இன்னும் இரண்டு வருடத்தில் இன்ன மாதம் இன்ன தேதியில் ஜீவசமாதியாகப் போவதாகவும், அதற்கான ஏற்பாடுகள் செய்யவே அந்தப் பெரியவர்களும் வந்துள்ளதாகவும் சொன்னார்.

எங்கள் ஊரிலிருந்து மூன்று மைல் தூரத்தில் சமாதி வைக்க வேண்டிய இடத்தில் பெரிய குகைக் கட்டிடம் கட்ட ஆரம்பித்து வேலை நடந்து வந்தது. என் தகப்பனாரைக் கேட்டு என்னையும் அழைத்துக் கொண்டார். அங்குள்ள யாவருக்கும் என்னைத் தன்னுடைய பிரதம சிஷ்யனென்றும், தனக்குப் பிறகு அந்த மடத்திற்கு நான் தான் அதிபதி என்றும் சொல்லி வந்தார். எனக்கு இந்த விவகாரங்களும் ஆடம்பரங்களும் பிடிக்கவில்லை. மனம் சஞ்சலத்

தில் ஆழ்ந்திருந்தது. ஒன்றரை வருடங்கள் சென்று விட்டன. இனியும் என்னால் தாங்க முடியாத நிலையில் ஒரு நாள் ஸ்வாமிகளிடம், "இத்தனை நாளாகியும் அநுபவம் ஒன்றும் ஏற்படவில்லையே, புராண காலங்களில் இருந்த மஹரிஷிகள் போன்றவர்களும், அந்த அனுபவம் பெற்றவர்களும் இந்தக் காலத்தில் யாருமே இல்லையா?" எனத் தாபத்துடன் கேட்டேன். உடனே ஸ்வாமிகள், "ஏன் இல்லை! திருவண்ணாமலையில் ரமண மஹரிஷி என்று ஒரு மகான் இருக்கிறார். பதினாறு வயதிலேயே சகல ஞானநுபவங்களும் பெற்று விளங்குகிறார். நானும் அவரை தரிசித்து வந்தேன்", எனக் கூறினார். இதைக் கேட்டதும் உடம்பில் மின்சாரம் பாய்வது போல் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டு மனம் ஸ்தம்பித்து விட்டது. என் வாழ்நாளில் அதுவரை அடைந்திராத பரவசநிலை அடைந்தேன். அதனால் உடனே திருவண்ணாமலைக்குப் பறந்து சென்றுவிட வேண்டும் என்ற துடிப்பும் ஏற்பட்டது. ஸ்வாமிகளிடம் அப்பொழுதே உத்தரவு கேட்டேன். அவருக்கு வெகு கோபம் வந்து விட்டது. இன்னும் ஆறு மாதத்தில் நான் ஜீவ சமாதியாகப் போகிறேன், நீ தான் யாவற்றையும் கவனிக்க வேண்டும். என் சமாதிக்குப் பிறகு நீ சுதந்தரமாக எங்கு வேண்டுமானாலும் போய் வரலாம் என்றார். என்னால் ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலையில் ஒரு வாரம் சென்றது. என் கிராமத்திற்கு அடுத்த கிராமத்திலிருந்த ராமகிருஷ்ணன் என்ற நண்பர் என்னைத் தேடிக்கொண்டு வந்தார். என்னை விட ஓரிரு வயது மூத்தவர். நான் சாது விருத்தியில் ஈடுபட்டிருந்ததால் என்னிடம் அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். என்னைப் போல் தானும் சாது மார்க்கத்தில் செல்ல விரும்பினார். சற்று வசதியான குடும்பத்தில் உள்ளவர். அவருக்குத் திருமணத்திற்கு ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. அதை அவர் சற்றும் விரும்பாததால் அந்த இக்கட்டிலிருந்து விடுபட வழி கேட்க என்னிடம்

வந்தார். நான் அவரிடம், "திருவண்ணாமலையில் ரமண மஹரிஷி என்ற பெரிய மஹானொருவர் இருக்கின்றாராம். அவரிடம் செல்ல என் மனம் துடித்தாலும், ஸ்வாமிகள் உத்தரவுப்படி ஆறு மாதங்களுக்கு முன் செல்ல முடியாது. ஆகையால், நீங்கள் உடனே புறப்பட்டு திருவண்ணாமலை செல்லுங்கள். பிறகு நானும் வந்து விடுகிறேன். நீங்கள் போய்ச் சேர்ந்ததும், அந்த மஹானைக் குறித்தும், அவரிடம் நீங்கள் பெற்ற உபதேசங்களையும் எனக்கு விவரமாக எழுதுங்கள்" எனச் சொல்லி யாருக்கும் தெரியாமல் அவரை நானே ரயில் ஏற்றி விட்டேன். இரண்டு நாட்கள் கழித்து, ராமகிருஷ்ணனைத் தேடிக் கொண்டு அவரது உறவினர்கள் என்னிடம் வந்து, "அவர் எங்கே சென்றிருக்கிறார்? நீ தான் அவரை அனுப்பியிருக்க வேண்டும்" என்றார்கள். அதற்கு நான், "அவரை நானாக அனுப்பவில்லை, அவர் வழி கேட்டார், நான் சொன்னேன். திருவண்ணாமலைக்குத்தான் சென்றுள்ளார்" எனக்கூறி அனுப்பி விட்டேன். ஒரு வாரம் கழிந்த பின் ராமகிருஷ்ணனிடமிருந்து ஸ்ரீ பகவானின் திருவுருவப் படமும் கடிதமும் வந்தது. ஸ்ரீ பகவானின் திருவுருவைக் கண்டதும் சொல்லொணா ஆனந்தமும் மனச் சாந்தியும் பெற்றேன்.

பின்னர் ஸ்வாமிகள் சமாதியாகும் நாள் நெருங்கிற்று. பொது ஜனங்களின் கூட்டமும் ஆரவாரமும் பெருகியது. ஸ்வாமிகள் சமாதியாவதற்கு மூன்று தினங்களுக்கு முன்பே பால் மட்டும் அருந்தி வந்தார். சமாதியாகும் நாளும் வந்தது. ஜன நெருக்கடியை சமாளிக்க முடியாமல் போலீஸ் பாதுகாப்பும் செய்யப்பட்டது. பிற்பகல் மணி மூன்றுக்கு ஸ்வாமிகள் சமாதிக் குகையில் இறங்கினார். பிரதான சிஷ்யனாகிய நானும், அவருடன் நெருங்கிப் பழகிய குடும்பத்தார்கள் சிலரும் அருகிலிருந்தோம். ஸ்வாமிகள், தன் தலை சிறிது நேரம் ஆடிக் கொண்டி

ருந்து, பிறகு அசைவற்று விடும். உடனே சமாதி குகையை பெரிய பலகைக் கல் கொண்டு மூடி விடுங்கள் என உத்தரவிட்டிருந்தார். அதன்படியே செய்ய நாங்களும் காத்திருந்தோம். அரைமணி சென்றது, ஒரு மணியும் சென்றது. ஒன்றும் எதிர்பார்த்தபடி நிகழவில்லை. ஸ்வாமிகள் உள்ளே உட்கார்ந்திருக்க முடியாமல் எழுந்து வெளியே வந்து ஜனக் கூட்டத்தினிடையே புகுந்து மறைந்து விட்டார். ஜனங்களெல்லாம் அவரை கேலி செய்து கொண்டும், திட்டிக் கொண்டும் கலைந்து விட்டார்கள். நானும் என்னுடன் இருந்த சிலருமாக அவரைத் தேடிச் சென்று பக்கத்திலுள்ள ஒரு தோப்பின் மரத்தடியில் கண்டோம். அவர் மிக வேதனையும் திகிலும் அடைந்திருந்தார். ஊரை ஏமாற்றும் எண்ணம் இல்லாமல் உண்மையாகவே தனக்கு ஜீவசமாதி வந்து விட்டதாக எண்ணி தானே ஏமாந்து விட்டார். எங்களிடம் மிக வருத்தத்துடன் எதிர்பாராதது நடந்துவிட்டது. நான் புதுப்பாளையம் ஸ்வாமியார்க் கவுண்டர் வீட்டிற்கும், பழனிக்கும் சென்றுவிட்டு சில நாள் கழித்து வருகிறேன். நீங்கள் அவரவர் வீட்டிற்குச் செல்லுங்கள். பிறகு சந்திக்கலாம் எனச் சொல்லி என்னை வேதாந்த சிரவணமும், அப்யாஸமும் செய்து வரும்படிக் கூறி மறுநாள் விடியற்காலை புறப்பட்டு விட்டார். எலப்புள்ளி குப்பாண்டி ஸ்வாமிகளின் ஜீவசமாதி சம்பவம் இப்படியாக முடிவுற்றது.

2. அருணைப் பயணத் ததிசய நிகழ்ச்சிகள்

நானும் என் வீடு வந்து சேர்ந்தேன். என்னைக் கண்டதும் என் பெற்றோர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். வீட்டில் இரண்டு நாள் தங்கியிருந்தேன். மனம் மட்டும் திருவண்ணாமலையிலேயே இருந்தது. எப்படிப்

போவது, பணத்திற்கு என்ன செய்வது என்ற சிந்தனை யிலேயே இருந்த என்னை என் தகப்பனார் கூப்பிட்டு, "அங்கு ஸ்வாமிகளுடன் தங்கி இருந்தபோது சாப்பாட் டிற்கு யாருக்காவது பணம் கொடுக்க வேண்டுமா" எனக் கேட்டார்கள். கொஞ்சம் கொடுக்கவேண்டுமெனச் சொன்னேன். அப்பொழுதே ரூ. 5/- என் கையில் கொடுத்து நாளைக் காலையில் கொடுத்துவிடு என்றார்கள். எனக்கு திருவண்ணாமலைக்குப் போக வழி பிறந்தது. ஒரு மிகப் பெரிய உயர்ந்த லக்ஷியத்தை அடைய, ஒரு சிறு பொய் சொல்வதில் பாவமில்லை என மனதைத் தேற்றிக்கொண்டேன். மிக்க அமைதியான உள்ளத் துடன் படுக்கச் சென்றேன். உறக்கம் பிடிக்காமல் இரவு சென்றது. மறுநாள் 1920 ஜனவரி விடியற் காலை மூன்று மணிக்கு என் வீட்டிலிருந்து ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஸ்ரீ பகவானைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் புறப்பட்டேன். இனி, இந்த வீட்டிற்கு நாம் திரும்பி வரமாட்டோம் என்ற எண்ணத்தில் அந்த வீட் டிற்கும், அதில் உள்ள என் பெற்றோர்களுக்குமாகச் சேர்த்து சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து என் கிராமத்திலிருந்து புறப்பட்டேன். பாலக்காடு ஸ்டேஷ னுக்குப் போனால் எனக்குத் தெரிந்தவர்கள் யாரும் காணக்கூடும் என்ற பயத்தில் கஞ்சிக்கோடு என்ற சின்ன ரயில் நிலையத்திற்குப் போய் திருவண்ணாமலை செல்லும் ரயில் எப்பொழுது என விசாரித்ததில் மாலையில்தான் வண்டி எனத் தெரிந்தது. அதுவரை என்னை யாரும் பார்த்துவிடக்கூடாதே என்றகவலையுடன் காத்திருந்தேன். மனம் மட்டும் ஸ்ரீ பகவானைக் காணவேண்டுமென்ற ஒரே தீவிரத்தில் பசி, தாகம் மறந்துவிட்டது. கையில் உள்ள ரூ. 5/-ம் டிக்கெட் வாங்க வைத்திருந்ததால் மாலைவரை ஆகாரமும் வாங்கிச் சாப்பிடவில்லை. ஒரு வழியாக மாலை ஆறு மணிக்கு ரயிலும் வந்து சேர்ந்தது. திருவண்ணா

மலைக்கு டிக்கெட் கேட்டதற்கு, அதற்குக் கொடுப்பதில்லை என காட்பாடிக்கு கொடுத்தார்கள். டிக்கெட் வாங்கிக் கொண்டு ரயிலில் ஏறி அமர்ந்ததுதான் தெரியும். அன்று இரவு எப்படிப் போயிற்றென்றுகூட அறியாமல் "பகவான் தரிசனம்" என்ற ஒரே எண்ணம் தவிர வேறொன்றும் உணர முடியாத நிலை. மறுநாள் விடியற்காலை நான்கு மணிக்கு காட்பாடி வந்து சேர்ந்தேன். உடனே திருவண்ணாமலைக்கு ரயில் எப்பொழுது எனக் கேட்டதில் ஆறரை மணிக்கு என்று சொன்னதின்பேரில் ஒரு புற மாக உட்கார்ந்திருந்தேன். ஆறு மணிக்கு டிக்கெட் கொடுக்குமிடம் சென்று திருவண்ணாமலைக்கு டிக்கெட் கேட்டதற்கு, திருவண்ணாமலை ரயில் ஐந்தரை மணிக்கே சென்று விட்டதாகச் சொன்னதும் திகைத்து நின்றுவிட்டேன். இனி மாலை ஆறு மணிக்குத்தான் என்றதும், இனி என்ன செய்வதெனப் புரியவில்லை. பிறகு சற்று மனம் தெளிந்து சமாதான மடைந்தேன். முதல் நாள் காலையிலிருந்து ஆகாரம் ஒன்றும் சாப்பிடவில்லை. அங்கு ரயில் நிலையத்தில் விற்ற இலந்தப் பழத்தை அரையணவுக்கு வாங்கினேன். கால்படிக்கும் அதிகமாக இருந்த அந்தப் பழத்தில் சிறிது உண்பதும், குழாய் ஜலம் பருகுவதுமாக அன்றையப் பகற்பொழுது சென்றது. ஆகாரப் பிரச்சினையும் தீர்ந்தது. மாலை ஆறு மணி ரயிலுக்கு ஐந்தரை மணிக்கே டிக்கெட் வாங்க நினைத்து போய்க் கேட்டதற்கு திருவண்ணாமலைக்கு டிக்கெட் கிடையாது என்று கூறி விட்டார்கள். காரணம் தெரியாமல் நான் மலைத்து நின்ற சமயம் பக்கத்தில் நின்ற ஒரு பெரியவர் என்னை அழைத்து எங்கு போக வேண்டுமெனக் கேட்டுத் தெரிந்துகொண்டு, திருவண்ணாமலையில் பிளேக்காக இருந்து தற்சமயம் சுமாராக இருக்கிறது. ஆனாலும் அந்த இடத்திற்கு டிக்கெட் தரமாட்டார்கள். ஆகையால் நீ திருக்கோவிலூருக்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு, ரயிலேறிப் போய், வழியில் திருவண்ணாமலையில் தபால் இறக்குவதற்காக

ரயில் நிற்கும்போது இருட்டில் நீயும் இறங்கிவிடு எனச் சொன்னார். எனக்கு பெரிய ஆறுதலாக இருந்தது. அதன் படி திருக்கோவிலூருக்கு டிக்கெட் கேட்டு கையிலுள்ள சில்லரையைக் கொடுத்தேன். ஆனால் இன்னும் கால் ரூபாய் வேண்டுமெனச் சொன்னதும் நான் சொல்ல முடியாத ஏமாற்றத்தால் பகவானை நினைத்து வருத்தத் துடன் பிளாட்பாரம் ஓரமாக நின்றேன். ரயில் வர சில நிமிடங்களே இருந்தன. ஆஹா! என்னே பகவானின் கருணை! நான் நின்ற இடத்திலிருந்து சற்றுத் தள்ளி இரு தண்டவாளங்களுக்கிடையில் ஒரு கால் ரூபாய் மின்னியது. மறுகணம் ஓடி அதை எடுத்துக் கொண்டுபோய் டிக்கெட் வாங்கவும், வண்டி ரயில் நிலையத்திற்குள் நுழையவும் சரியாக இருந்தது. இந்த ஏழையிடம் பகவான் காட்டிய கருணையை நினைந்து வியந்து ரயிலில் ஏறி அமர்ந்தேன்.

இரவு சுமார் 9-மணியளவில் ரயில் திருவண்ணாமலை நிலையத்திற்குள் நுழைந்தது. ஸ்டேஷனில் விளக்குகள் எரியவில்லை. ரயிலில் இருந்தவர்களின் பேச்சிலிருந்து இதுதான் திருவண்ணாமலை எனத் தெரிந்து கொண் டேன். உடனே யாராவது இறங்குகிறார்களா என்று கவனித்தேன். எனக்கெதிரில் உட்கார்ந்திருந்த ஒருவர் இருட்டில் இறங்குவதைப் பார்த்து, நானும் இறங்கி அவரை தொடர்ந்து நடக்கலானேன். காட்பாடியில் காலை ரயிலைத் தவற விட்டதும் ஸ்ரீ பகவான் சித்தமே. அப்படி வந்திருந்தால் நான் திருவண்ணாமலையில் பகலில் இறங்க முடியாதநிலை ஏற்பட்டிருக்குமல்லவா? பிறகு அவர் எந்த திசையில் எவ்விடத்திற்குப் போகிறார் என்பதை அறியா மலேயே நானும் சென்றேன். எவ்வளவு தூரம் சென்றி ருப்போமென்பதும் தெரியாது. முடிவில் ஒரு பெரிய மண்டபத்தை அடைந்து என் வழிகாட்டியாக வந்தவர் மேல் துண்டினால் கீழே உள்ள தூசியைத் துடைத்து விட்டு படுத்துவிட்டார். இரண்டு நாள் பட்டினி, அலைச்சல்

யாவும் சேர்ந்த களைப்புடன், என்னுடைய லட்சிய ஸ்தானத்தை அடைந்து விட்டப் பேரானந்தமும் சேர்ந்து படுத்ததும் உறங்கி விட்டேன். மறுநாட்காலை 5 மணி சுமாருக்குக் கண் விழித்தேன். அங்கு அருகில் படுத்திருந்தவரைக் காணவில்லை. எதிரில் அண்ணுமலையின் தரிசனம் கிடைத்தது. முன்பு ராமகிருஷ்ண ஸ்வாமி தன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த அடையாளத்தை நினைவில் வைத்துக் கொண்டு அருணுசலேஸ்வரர் ஆலயத்திற்குப் பின்புறம் மலையடிவாரத்திலிருந்து ஆரம்பிக்கும் படிகளில் ஏறினுல் ஸ்ரீ பகவான் இருக்குமிடத்தை அடையலாம் எனத் தெரிந்து மலையடிவாரம் வந்தேன். மலை ஏறுவதற்கு மூன்று இடங்களில் படிகள் இருப்பதைப் பார்த்து எதில் ஏறுவது எனப் புரியவில்லை. பிறகு துணிந்து வலதுபுறமிருந்த படிக்கட்டில் ஏறிச்சென்றேன். சிறிது தூரம் சென்றதும் ஒரு கட்டிடம் தெரிந்தது. அருகில் நெருங்கினேன். அங்கு காஷாயதாரியாய் தரையில் புரளும் நீண்ட சடைகளுமாய் ஒருவர் நின்றிருந்தார். (ஜடை ஸ்வாமிகள்) அதற்கு முன் ஸ்ரீ பகவான் உருவத்தைப் படத்தில் பார்த்திருப்பதால் இவர் வேறு என்பதறிந்து திரும்பிப் பாராமல் ஒரே ஓட்டத்தில் கீழே வந்து விட்டேன். ஜடாமுடி தரித்த முனிவர்கள் கோபம் வந்தால் சபித்து விடுவார்கள் என்பதே நான் அப்போது நம்பியிருந்தது. அதனுல் பயந்து ஓடி வந்து விட்டேன். மறுபடி நடுவில் பெரிய படிகளாயிருந்ததில் ஏறிச் சென்றேன். சிறிது தூரம் ஏறினதும் அங்கு ஒரு குளமும் (பாததீர்த்தம்) அதன் கரையில் இருவர் நிற்பதையும் கண்டேன். (முதலியார் பாட்டியின் மகன் தம்பிரான் ஸ்வாமியும், மருமகள் காமாக்ஷி அம்மாளும்). அவர்களை நெருங்கி ஸ்ரீ பகவான் இருப்பிடம் கேட்டேன். என் களைத்த முகத்தையும் மலையாளங்கலந்த தமிழையும் பார்த்து என்னிடம் அனுதாபத்துடன், "பாவம்! சோர்ந்திருக்கிருய், இங்கேயே குளத்தில் குளித்து விட்டு இந்தப் பாதை வழியாக

மேலேறினுல் அங்கு பகவான் இருக்குமிடம் தெரியும் (ஸ்கந்தாசிரமம்). நீ அங்கே போய் இரு. நாங்கள் ஆகாரம் கொண்டு வருகிறோம், சாப்பிடலாம்", என்ருர்கள். நானும் ஸ்நானம் செய்துவிட்டுப் புறப்பட்டேன். புற அழுக்கு நீங்கிற்று. அக அழுக்கு நீங்கி தூய்மை பெற தாய்ப் பசுவை நாடும் கன்ருக மேல் நோக்கி விரைந்தேன். மனம் பரவசத்துடன் என்னை முந்திக் கொண்டு ஸ்ரீ பகவானிடம் நெருங்கிக் கொண்டிருந்தது.

3. ஸத்குரு தரிசனம்.

குருநாதர் எதிரில் சென்றதும் எப்படி நமஸ்கரிப்பது, எப்படி நடந்து கொள்வது என்றெல்லாம் சிந்தித்தேன். பிறகு ஸ்ரீ பகவான் தம் திருவாக்கால் முதன் முதலாக என்னிடம் என்ன பேசுகிருர்களோ அதையே உபதேசமாகக் கொள்வது என்ற திடமான தீர்மானத்துடன் ஸ்கந்தாஸ்ரமம் சென்றடைந்தேன். ஸ்ரீ பகவானைக் கண்டு மெய்சிலிர்த்து நின்றேன். அச் சமயம் என் நண்பர் ராமகிருஷ்ணஸ்வாமி, பெருமாள்ஸ்வாமி, அகண்டாநந்தர் மூவரும் ஸ்ரீ பகவானுக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தனர். நானும் அவ்விதமே செய்தேன். என்னைக் கண்டதும் ராமகிருஷ்ணஸ்வாமிக்கு வியப்பும் சந்தோஷமும் ஏற்பட்டது. அவர் உடனே ஸ்ரீ பகவானிடம், "இவர் எங்கள் ஊரிலிருந்து வந்துள்ளார். அங்கு சிறு வயதிலிருந்தே சாமியாராக இருந்து வருகிருர். என்னை இங்கு அனுப்பியதும் இவர் தான்," என்ருர். ஸ்ரீ பகவான் சரி தான் என்பதற்கு அடையாளமாக தலையசைத்தார்கள். பிறகு ராமகிருஷ்ணஸ்வாமி "நீங்கள் இங்கேயே இருங்கள், நாங்கள் கீழே போய் வருகிறோம்" என்று சொல்லி அம் மூவருமாகச் சென்று விட்டார்கள். ஸ்ரீ பகவானுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டிருந்த அண்ணாமலை ஸ்வாமி என்பவர் ப்ளேக்கினுல் அன்று இறந்து விட்டதாகவும்,

அவரை அடக்கம் செய்ய மூவரும் சென்றுள்ளதாகவும் பிறகு தெரிந்து கொண்டேன். அச் சமயம் தாழ்வாரத்தின் உட்புற அறையிலிருந்து யாரோ விம்மியழும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒரு மூதாட்டி துக்கம் தாங்காமல் "அநியாயமாக, தங்கமான இந்த அண்ணுமலை போய்விட்டானே" என்று புலம்பிக் கொண்டிருந்தார்கள். பக்கத்தில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். ஸ்ரீ பகவான் அவர்கள் பக்கம் பார்த்து "வீணுக ஏன் துக்கப்படுகிறீர்கள்? அந்தப் பிள்ளைக்குப் பதிலாகத்தான் இதோ ஒரு பிள்ளை வந்திருக்கிருனே" என்று என்னைக் காட்டி சமாதானம் கூறினுர்கள். அச் சமயம் அப் பொன்னுன சொற்களின் பொருளைப் புரிந்து கொள்ளவில்லை. பிறகு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்ட போதுதான் அதன் கருத்தை உணர்ந்தேன். உட்புறத்தில் அமர்ந்திருந்த அந்த அம்மையார் ஸ்ரீ பகவானை ஈன்றெடுத்து உலகிற்களித்த புனிதவதி அழகம்மையாரும், அவருடன் கூட இருந்தவர் ஸ்ரீ பகவானின் சகோதரர் ஸ்ரீ நிரஞ்சனுனந்த ஸ்வாமிகளும் எனப் பிறகு அறிந்தேன். காலை மணி 8. அப்போது அங்கிருந்த பின்னலூர் துரியானந்தர் என்ற ராமலிங்கம் பிள்ளை என்னை அழைத்து ஒரு மண் திருவோடு கொடுத்து, தானும் ஒன்று எடுத்துக் கொண்டு என்னுடன் அங்கிருந்த நாவல் மரத்தடியில் சாப்பிட அமர்ந்தார். ஸ்ரீ பகவானும் எங்களுக்கு அருகிலிருந்த மேடையில் திருவோட்டுடன் அமர்ந்திருந்தார்கள். ஸ்ரீ பகவானுக்கு பிக்ஷையளித்து வந்த எச்சம்மாளின் தங்கை வேணு அம்மாள் எங்கள் மூவருக்கும் அன்னமும் பருப்பு ரசமும் பரிமாறினுர்கள். சாப்பிட்டு முடித்தோம்.

4. குருவின் ஆக்ஞையே உபதேசம்

சிறிது நேரம் சென்றது. ஸ்ரீ பகவானும் நானும் ஏகாந்தமாக இருந்தோம். அதுவரை ஸ்ரீ பகவான் என்னுடன் ஒரு வார்த்தையும் பேசவில்லை. அப்பொழுது ஸ்ரீ

பகவான் தன்னருகிலிருந்த சிறு டின்னிலிருந்து கரண்டி யினுல் சிறிது மாவு எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு கமண்டலத்தில் இருந்த ஜலத்தை விட்டுக் கரண்டியினுல் கரைத்து பக்கத்தில் குளிர் காய்வதற்காக வைத்திருந்த கும்முட்டி அடுப்பில் வைத்தார்கள். நான், அவர்கள் ஏதோ காயகல்பம் செய்வதாக எண்ணி எனக்கும் கிடைக் குமென மௌனமாகப் பார்த்திருந்தேன். ஸ்ரீ பகவான் அடுப்பிலிருந்ததை கூழ்போல் காய்ச்சி இறக்கினுர்கள். அதை அருகிலிருந்த சிறிய தட்டில் கொஞ்சம் ஊற்றி விட்டு, எழுந்து சென்று, ஒருபுறமாகக் கவிழ்த்து வைத்தி ருந்த கூடையைத் திறந்தார்கள். அவ்வளவுதான், நான்கு நாய்க்குட்டிகள் துள்ளி ஓடி வந்து தட்டில் இருந்த கஞ்சியைக் குடிக்க முயன்றன. ஸ்ரீ பகவான் அவைகளுக் குச் சுட்டு விடுமோ என அவைகளை விலக்கப் பார்த்தார் கள், முடியவில்லை. அதுவரை என்னிடம் ஒரு வார்த்தை யும் பேசாத ஸ்ரீ பகவான் “நான்கையும் பிடி” என்று என்னிடம் சொன்ஞர்கள். உடனே நான்கு குட்டிகளையும் பிடித்துக் கொண்டேன். கூழ் ஆறிய பிறகு ஸ்ரீ பகவான், “ஒவ்வொன்ருக விடு” என்ருர்கள். என் முன் சங் கல்பப்படி, “நான்கு மகா வாக்கியங்களையும் பிடி” என்பதே முதல் உபதேசமாகக் கொண்டேன். மன திலுள்ள ஆசாபாசங்களை விட்டு விட வேண்டுமென்பது இரண்டாவது உபதேசமாக ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு குட்டியாகக் கீழே விட்டேன். அவைகள் தட்டிலிருந்த கஞ்சியைக் குடித்து வயிறு புடைக்கத் தள்ளாடி நடந்தன. சிறிது நேரத்தில் ஒரு குட்டி ஓரிடத்தில் சிறுநீர் விட்டது. உடனே ஸ்ரீ பகவான் எழுந்து கமண்டலத்திலிருந்து சிறிது ஜலத்தை ஊற்றி, பழைய சாக்கினுல் துடைத்தார் கள். இதைப் பார்த்த எனக்கு, நான் எழுந்து செய்ய வேண்டுமென்ற தவிப்பு ஏற்பட்டது. பெரியவர்கள் சொல் லாமல் நாம் எப்படிச் செய்வது என பயந்து உட்கார்ந்தி ருந்தேன். ஸ்ரீ பகவான் வந்தமர்ந்தார்கள். அதற்குள்

இன்ஞெரு குட்டி சிறுநீர் விட்டது. என் தவிப்பைக் கண்ட ஸ்ரீ பகவான் என்னைப் பார்த்துத் "துடை" என்ருர்கள். உடனே எழுந்து ஜலம் விட்டு துடைத்தேன். ஒருவாருக அந்த வேலை முடிந்தது. மூன்ருவது உப தேசம் மனதைத் துடைத்துத் தூய்மையாக வைத்துக் கொள் என்பதாகக் கருத்தில் கொண்டேன். எனக்கு மிக்க மகிழ்ச்சியும் சாந்தியும் ஏற்பட்டது.

5. அநுக்ரகப் பிரார்த்தனையும் குரு உபதேசமும்.

இப்பொழுது ஸ்ரீ பகவான் அமைதியாக உட்கார்ந் திருந்தார்கள். தனிமையான சூழ்நிலேயில் ஸ்ரீ பகவானிடம் பேசுவதற்கு இதுவே சந்தர்ப்பம் என எண்ணி, என்னு டைய சிறு வயதிலிருந்து நடந்தவைகள், பிரசங்கமும் ஜெபமுமாக இருந்தது, தகப்பஞரின் விருப்பப்படி வேதாந்த பாடம் கேட்டது, ஒரு அநுபவமும் வராமல் மனக்குழப்பத்தில் இருந்த சமயம் ஸ்ரீ பகவானைக் குறித்து கேட்ட மாத்திரத்தில் மன சாந்தி அடைந்தது, வேதாந்த பாடம் சொல்லிக் கொடுத்த ஸ்வாமிகளின் ஜீவ சமாதி விஷயம் யாவும் மலேயாளத்தில் சொன்னேன். ஸ்ரீ பகவான் எல்லாவற்றையும் புன்னகையுடன் கேட்டுக்கொண்டிருந் தார்கள். என் மனக் குழப்பம் தீர்ந்து தெளிவுபெற என்ன செய்ய வேண்டுமெனக் கேட்டேன். அதற்கு ஸ்ரீ பகவான் "நீ தான் கைவல்யம் படித்திருக்கிருயே, அதில் தன்னையும் தனக்காதாரத் தலேவனையும் கண்டானேற், பின்னையத் தலேவன் தானுய் ப்ரம்மமாய் பிறப்புத் தீர்வன், உன்னை நீ அறிந்தாயாகில் உனக்கொரு கேடுமில்லே" என அதில் கூறியபடி தன்னைத் தெரிந்து கொண்டால் எவ்வித கலக்க மும் இருக்காது என்ருர்கள். தன்னை எவ்விதம் அறிந்து கொள்வது எனக் கேட்க, நீ யார் என முதலில் தெரிந்து கொள் என்ருர்கள். நான் யார்? என்று என்னை எவ்விதம் அறிந்து கொள்வது எனவும் கேட்க, அதற்கு,

“நினைப்பு எங்கிருந்து வருகிறது எனப் பார்” என்றார்கள். அதை எப்படி பார்ப்பது என்றதும், “மனதை அந்தர்முகப்படுத்தி இதயத்தில் பார்” எனச் சொல்லி தானும் தன்னுடைய எதார்த்த நிலையாகிய மோனத்திலாழ்ந்தார்கள். நானும் அப்படித்தான் இருக்க வேண்டுமென நினைத்து மௌனமாக உட்கார்ந்திருந்தேன். ஸ்ரீ பகவானின் அருட் பார்வை என்மேல் நிலைத்திருந்தது. அந் நிமிடமே என் உள்ளத்திலிருந்த குழப்பங்கள் நீங்கி அதுவரை அடைந்திராத சாந்தியும் ஆனந்தமும் அடைந்தேன்.

6. சிறுமைக்களைவு

அன்று ஸ்கந்தாஸ்ரமத்தில் மற்றொரு பக்கத்தில் ராமநாத பிரம்மச்சாரி என்பவர் பிளேக்குக் கட்டி வந்து அது உடைந்து அந்த வேதனையுடன் படுத்திருந்தார். அவருக்கு ப்ளேக்கு ஆரம்பித்த சமயம் அவரை ஸ்கந்தாஸ்ரமத்திலேயே இருக்கும்படி பணித்துவிட்டு ஸ்ரீ பகவான், பெருமாள்ஸ்வாமி, ரங்கஸ்வாமி அய்யங்கார் முதலியவர்களுடன் கிரி பிரதக்ஷணம் புறப்பட்டு வரும் வழியில் பச்சையம்மன் கோவிலில் சற்றுத் தங்கினார்கள். அப்பொழுது பெருமாள் ஸ்வாமியும், அய்யங்காரும் “பிரம்மச்சாரிக்கு தொற்றுநோய் கண்டிருப்பதால் ஸ்ரீ பகவானுடன் தாங்களும் பச்சையம்மன் கோவிலிலேயே தங்கிக்கொண்டு ராமநாத பிரம்மச்சாரிக்கு ஸ்கந்தாஸ்ரமத்தில் ஆகாரம் கொண்டு போய்க் கொடுத்துக் கவனித்துக் கொள்ளலாம்” என்று தாங்கள் முன்பே திட்டம் போட்டு வைத்திருந்ததை ஸ்ரீ பகவானிடம் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் தயாமூர்த்தியான ஸ்ரீ பகவான் தன்னடியார்களின் சிறுமைக்கிரங்கி ஆஹா! அருமையான யோசனை! சிறு பையனாக இருக்கும் போதே என்னிடம் வந்தவன். முழுவதுமாக நம்மையே நம்பி இருப்பவன். இந் நிலையில் அவனைத் தனியே விட்டு நாம் இங்கு இருப்பது நியாயமா?

உங்களுக்குப் பயமாக இருந்தால் நீங்கள் எல்லோரும் இங்கேயே இருங்கள். நான் அவனுடன் போய் இருக்கிறேன். அவனுக்கு ஆகாரம் கொண்டு வரும்போது எனக்கும் கொண்டு வந்தால் போதும், என்ருர்கள். இதைக் கேட்ட அவ்வன்பர்கள் வாய் திறக்க வழி இல்லாமல் மௌன மாஞர்கள். இச்சம்பவம் நான் ஸ்ரீ பகவானிடம் வருவதற்கு ஒரு வாரம் முன்னதாக நடந்திருக்கிறது.

7. என் புனர்ஜன்ம ஜயந்தி

நான் வந்த அன்று அடக்கம் செய்யப்பட்ட அண்ணுமலே ஸ்வாமி ஸ்ரீ பகவான் பேரில் 100 பாட்டுக்கள் எழுதியிருந்தார். அவர் சகோதரரும், அன்பர்களும் பிரதி வருஷமும் அண்ணுமலேஸ்வாமி குருபூஜையன்று அவர் சமாதிக்கு அபிஷேக ஆராதனேகள் செய்துவிட்டு ஆஸ்ரமத்திற்கு வந்து அவர் எழுதிய 100 பாட்டுக்களேயும் ஸ்ரீ பகவான் சந்நிதியில் பாடிவிட்டு அன்று ஏற்பாடாகி இருக்கும் விசேஷ பிக்ஷையில் கலந்து கொள்வார்கள். இப்படிப் பல வருடங்கள் நடந்து வந்தது. இதிலுள்ள முக்கிய விசேஷம் அவர் அடைந்த தினத்தன்றுதான் நான் ஸ்ரீ பகவானே தரிசித்துப் புனர்ஜன்மம் அடைந்தது. ஆகையால், ஒவ்வொரு ஆண்டும் அவர் குருபூஜை தினத்தில் நடக்கும் விசேஷமான பிக்ஷையை என் புனர்ஜன்ம ஜயந்திக்கு விருந்தாக எண்ணிக் கொள்வேன்.

8. சந்நிதி மகிமை

பின்னர் ஸ்ரீ பகவான் சந்நிதியில் இருக்கும் வரை அந்த ஆனந்தமும் அநுபவமும் இருந்து கொண்டிருந்தது. இப்படியே 18 தினங்கள் தங்கியிருந்தேன். ஸ்ரீ பகவான் சந்நிதான மகத்துவத்தால் ஹ்ருதய லக்ஷியத்தில் ஆழ்ந்திருக்கும் அமைதியான நிலே பிடிபட்டது. இச்

சமயத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. நமக்குத் தான் அநுபவம் வந்து விட்டதே, இங்கிருந்தால் அடிக்கடி நித்தியகடன் முடிக்க வேண்டியதன் நிமித்தம் தியானம் கலைய வேண்டியுள்ளது. நம் வீட்டில் இருந்தால் நாள் கணக்கில் கூட தியானத்தில் இருக்கலாம். அத்துடன் இங்கு ஒரு கைங்கர்யமும் செய்யாமல் குருவினிடம் உண்பது பாபம் என எண்ணி, ராமகிருஷ்ணஸ்வாமி யிடம் சொன்னேன். அவரும் நான் சொல்வதே சரி என்றார். இருவரும் ஸ்ரீ பகவானிடம் நாங்கள் ஊருக்குப் போய் வருவதாகச் சொல்லி புறப்பட்டோம். இருவரும் ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும், அவரவர் வீட்டில் ஏகாந்த மாய் தனியிடத்திலிருந்து மௌனமாக சமாதியிலாழ்ந்து இருக்க வேண்டியது. யார் வந்து பேசினாலும் பேசக் கூடாது, நாமும் ஒருவரை ஒருவர் சந்திக்கக் கூடாது எனப் பேசி ஊர் போய்ச் சேர்ந்தோம். என் இருப்பிடம் தெரியாமல் மனம் கலங்கிப் போயிருந்த என் பெற்றோர் களும் மற்றவர்களும் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். எங்கள் முன் யோசனைப்படி அவரவர் வீட்டில் மௌனமாக இருந்து வந்தோம். என் பெற்றோர்களுக்கு ஏதோ இந்த மட்டில் நம் பிள்ளை வீட்டிற்கு வந்ததே பெரிய காரியம். மற்றபடி எப்படி இருந்தாலும் சரியென்று நினைத்தார்கள். சில நாட்கள் சென்றன. ஸ்ரீ பகவான் சந்நிதானத்தில் இருக்கும் போது இருந்த தியானுனுபவங்கள் சிறுகச் சிறுகக் குறைந்து, "பழைய கந்தனே கந்தன்" என்ற கதையாயிற்று. சமாதியும் கூடவில்லை. அநுபவமும் காணவில்லை. அப்பொழுது தான் என் அறியாமையை உணர்ந்தேன். நான் இப்படி ஏமாற்றத்தினுல் கலக்க மடைந்து, வெளியிலும் சொல்ல முடியாத நிலையில் இருக் கும் சமயம் ஒரு நாள் இரவு ராமகிருஷ்ணஸ்வாமி என் இருப்பிடம் வந்தார். என்ன பொருத்தம்! அவர் கதையும் என்கதையேதான். இருவரும் ஆலோசித்தோம். முற்காலத் தில் பெருநிலை அடைய பல ஆண்டுகள் காட்டிலும் பெரிய

மஹான்களின் பார்வையிலும் இருந்து கொண்டு எவ்வளவோ பாடுபட்டு அடைந்த நிலையை சில நாட்களிலேயே அடைந்து விட்டதாக எண்ணிய பேதமையை நினைத்து நாணினேம். ஸ்ரீ பகவானின் சந்நிதான மகத்துவத்தை முழுவதுமாக உணர்ந்தோம். இனி வீட்டில் இருப்பதில் பயனில்லை. ஸ்ரீ பகவானைச் சரணடைவது ஒன்றேதான் வழி எனத் தீர்மானித்து புறப்பட நாளும் குறிப்பிட்டு விட்டு ராமகிருஷ்ணஸ்வாமி தன் வீடு போய்ச் சேர்ந்தார். என் முடிவை என் பெற்றோர்களுக்குத் தெரிவித்தேன். இதை சற்றும் எதிர்பார்க்காத அவர்கள் திடுக்குற்று, என்னை வீட்டில் தங்க வைக்க எத்தனையோ முயன்றும் என் தீவிரத்தை அவர்களால் மாற்ற முடியவில்லை. நானும், அவர்களுக்கு வீட்டில் உள்ள நான்கு பிள்ளைகளில் நான் ஒருவன் இந்த வழியில் போவது அவர்களுக்குப் பெருமையும் புண்ணியமுமே தவிர நஷ்டம் ஒன்றுமில்லையே என்று சொல்லி என்னுல் இயன்ற அளவு சமாதானம் செய்தேன். முன்போல் சொல்லிக் கொள்ளாமல் போகவில்லை. பெரியவர்கள் சம்மதமும் ஆசியும் பெற்றுப் போவதே என் விருப்பம். அத்துடன் திருவண்ணுமலையில் ஸ்ரீ பகவான் சந்நிதானத்திலேயே நான் இருக்கப் போகிறேன். எப்பொழுது வேண்டுமானுலும் நீங்கள் வந்து பார்க்கலாம், நானும் வருவேன் எனப் பலவிதத்திலும் சமாதானம் சொல்லி உத்திரவு பெற்றேன்.

9. குரு கைங்கர்யம்

இரண்டு தினங்களில் குறிப்பிட்டபடி நானும் ராமகிருஷ்ணஸ்வாமியும் புறப்பட்டு திருவண்ணுமலை வந்து சேர்ந்தோம். எங்களைக் கண்டதும் ஸ்ரீ பகவான் சந்தோஷமாக வரவேற்கும் முறையில் பார்த்தார்கள். நாங்களும் மனம் குளிர்ந்தோம். நான் முதன் முறை இங்கே வந்த பொழுது எவ்விதக் கைங்கர்யமும் செய்யாமல் குருவி

னிடத்தில் சாப்பிடுவது பாபம் என எண்ணி சஞ்சலப் பட்டேன். இம்முறை அக் குறையும் இல்லாமல் ஸ்ரீ பக வான் என்னை முழுவதுமாக ஆட்கொண்டு எல்லோருக் கும் கிடைக்காத பெரிய பாக்கியத்தை எனக்குக் கிடைக்கச் செய்தார்கள். ஸ்ரீ பகவானுக்கு ஸ்நானத்திற்கு வென்னீர் எடுத்து வைப்பது, உடைகளை சுத்தம் செய்வது, இரவில் படுப்பதற்கு முன் பாதங்களில் எண்ணெய் தேய்த்து விடு வது முதலிய கைங்கர்யங்களைச் செய்து வந்த பெருமாள் ஸ்வாமி நாங்கள் வந்த இரண்டு தினங்களுக்குப் பிறகு வெளியூர் செல்லும்படி நேர்ந்தது. தான் ஸ்ரீ பகவானுக்கு செய்து வந்த கைங்கர்யத்தை செய்வதற்கு அருகதையுள்ள வனுக என்னைத் தேர்ந்தெடுத்து அவர் அதை என்னிடம் ஒப்படைத்தார். சிறு வயதிலிருந்தே சத் விஷயங்களில் ஈடுபட்டவனுகையால் எவ்வித அபசாரமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வேன் என்பதே அவர் துணிவு. இன் னும் இரண்டு தினங்கள் கழித்து நாங்கள் வந்திருந்தா லும் இப்பெரும் பேற்றை இழந்திருப்பேன். முதன்முறை நான் ஸ்ரீ பகவானிடம் வந்த தினம் கைங்கர்யம் செய்துவந்த அண்ணுமலை ஸ்வாமி இறந்துவிட்டதை எண்ணி துக்கப்பட்ட அன்னையாருக்கு என்னைக்காட்டி, அண்ணுமலைக்குப் பதிலாகத்தான் இவன் வந்திருக் கிருனே என ஸ்ரீ பகவான் சொல்லியதன் கருத்து, இப்படி சில தினங்களுக்குள்ளாகவே எனை ஆட்கொண்டு பெறுதற்கரிய இப்பெரும் கைங்கர்யத்திற்கு அடியேனை ஆளாக்கிக் கொண்டதன் குறிப்பே அன்று உணர்த்திய தென்பதை உணர்ந்து மேன்மையாம் குருவின் திருவடி களை மனத்திலிருத்தி மெய்சிலிர்த்து நின்றேன். இவ்வாறு ஸ்ரீ பகவான் என் உள்ளத்தில் உடனே திருவண்ணுமலை செல்ல வேண்டுமென்னும் எண்ணத்தை உண்டாக்கி வலிந்து ஆட்கொண்ட அற்புதத்தை என்றென்றும் மறக்க முடியாது. திருவண்ணுமலை வந்து 1977 வரை ஆண்டு கள் 57 முடிந்தும் அன்று அடைந்த ஆனந்தம் இன்றும்

புல்லரிக்கச் செய்கின்றது. ராமகிருஷ்ணஸ்வாமிக்கு வெளி விவகாரங்களை கவனித்துக் கொள்ளும் பொறுப்பும், நான் இல்லாத சந்தர்ப்பங்களில் ஸ்ரீ பகவானுக்குக் கைங் கர்யம் செய்யும் பாக்கியமும் கிடைத்தது. இவ்விதமாக ஸ்ரீ பகவானுடைய கைங்கர்யம் நடந்துக்கொண்டிருக்கும் போது, ஒருநாள் ஸ்ரீ பகவானிடம், முதன்முறை ஸ்ரீ பக வான் சந்நிதானத்திற்கு வரும்போது ஏற்பட்ட அநுபவங் கள் நான் மலையாளத்திற்குச் சென்ற பிறகு அங்கும் இவ் வநுபவங்கள் தொடர்ந்து நிலைத்து இராமல் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து ஒன்றுமே இல்லாமல் போயிற்றே அதன் காரணம் என்னவென்று கேட்டேன். அதற்கு ஸ்ரீ பகவான் “தஞ்சமாங் குருவும் சொன்ன தத்துவ வழி தப்பாமல்” என்னும் கைவல்ய தத்துவ விளக்கப் படலத்தில் 83 முதல் 93 வரை உள்ள பாடல்களை படிக்கச் சொல்லி அதில் என்னுடைய கேள்விக்கு பதில் இருப் பதையும் கூறி தெளிவு படுத்தினார்கள். ஸ்ரீ பகவான் குறிப்பிட்ட கைவல்யப் பாடல்கள் :

83 தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமல்
பஞ்சகோ சமுங்க டந்து பாழையுந் தள்ளி யுள்ளில்
கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடத்தன் பிரமமென்னும்
நெஞ்சமு நழுவி யொன்ருய் நின்றபூரணத்தைக் கண்
[டான்.

84 அனுபவா நந்த வெள்ளத் தழுந்தியே யகண்ட மாகித்
தனுகர ணங்களாதி சகலமு மிறந்து சித்தாய்
மனதுபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் காண
நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானன்

85 அளிமக னெடும்போ திவ்வா ருனபின் மனது மெள்ள
வெளியில் வந் திடவுணர்ந்தான் விமலதே சிகனைக்
கண்டான்
துளிவிழி சொரியப் பாதந் தொழுதுவீழ்ந் தெழுந்து
சூழ்ந்தான்
குளிர்முகச் சுவாமி கேட்கக் கும்பிட்டு நின்று சொல்வான்.

86 ஐயனே யெனதுள் ளேநின் றநந்த சன்மங்க ளாண்ட
மெய்யனே உபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன்
செய்யுமா றென்றுங் காணேன் திருவடி போற்றி போற்றி.

87 சிட்டனிவ் வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா வெனவி ருத்திக் கிருபையோ டருளிச் செய்வார்
துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடராமற் சொரூப
நிட்டனு யிருக்கி னீதே நீசெய்யு முதவியாமே. [ஞான

88 நீநானென் றிரண்டி லாமல் நிறைந்தபூ ரணமா யெங்கும்
நானாகத் தெளிந்த ஞானம் நழுவுமோ குருவே என்னுன்
தானாகும் பிரம்ம ரூபஞ் சற்குரு நூலாற் றேன்றும்
ஆனாலுந் தடைக ளுண்டே லநுபவ முறைத்திடாதே.

89 தடையெவை யெனிலஞ் ஞான சந்தேக விபரீ தங்கள்
படர்செயு மிந்த மூன்றும் பலசன்மப் பழக்கத் தாலே
உடனுடன் வரும்வந் தக்கா லுயர்ஞானங் கெடுமிவற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே

90 அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட் டாது
மக்கின ஞானத் தாலே வந்தபந் தமும்வே வாது
சிக்கெனப் பழகிக் கேட்டல் சிந்தித்தல் தெளித லாலே
விக்கின மடஞ்சந் தேகம் விபரீதம் போக்கு வாயே.

91 பிரமபா வனையை மூடிப் பேதங்காட் டுவதஞ் ஞானம்
குரவன்வாக் கியநம் பாமற் குழம்புவ தாஞ்சந் தேகம்
திரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்று முள்ளே
விரவிய மோகந் தானே விபரீத மென்பர் மேலோர்.

92 தத்துவ வநுபோ கந்தான் சாதித்தல் கேட்ட லென்பார்
ஒத்துள பொருளூ கத்தால் உசாவல்சிந் தித்த லென்பார்
சித்தமே காந்த மான தெரிசனந் தெளித லென்பார்
நித்தமிப் படிசெய் தக்கால் நிர்வாணம் பெறுவாய் நீயே.

93 எத்தனை நாள்ஞா தாவும் ஞானமு மிருக்கு முன்பால்
அத்தனை நாளும் வேண்டும் அப்பா லோர் செயலும் வேண்டா
நித்தமும் வெளிபோற் பற்று ஞேயமாத் திரமாய்ச் சீவன்
முத்தரா னவர்வி தேகமுத்திபெற் றிருப்பா ரென்றும்.

10. சந்தேகந் தெளிதல்

நான் எப்பொழுதும் ஸ்ரீ பகவான் அருகிலேயே இருந்ததால் பல அன்பர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ பகவான் விடையளிப்பதைக் கேட்டே என் உள்ளத்தில் தோன்றும் சந்தேகங்களுக்கு பதில் கிடைத்து விடும். புதிய விஷயங்களும் தெரிந்துகொள்ள வாய்ப்பு கிடைத்தது. நம் மனதில் தோன்றும் சாஸ்திர சம்பந்தமான கேள்விகளை ஸ்ரீ பகவானிடம் கேட்க சந்தர்ப்பம் பார்த்திருப்போம். அந்நிலையில் வேறு ஒரு அன்பர் நம் மனத்தில் உதித்த அதே கேள்வியை ஸ்ரீ பகவானிடம் கேட்பார். அவருக்கும் நமக்குமாகச் சேர்த்து பதில் கிடைத்துவிடும். இதைத் தான் தெய்வகதி என்பது. வாசிட்டத்தில் ஜனகருக்கு சித்தர்களின் சம்பாஷணைகளைக் கேட்டே சந்தேகம் தெளிந்து ஞானனுபவம் பெற்றதாக இருக்கிறது. விவேக கதி, விரக்தகதி தெய்வகதியாகிய மூன்றும் வேதாந்த சூடாமணி முதலிய கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சற்குருவையடைந்து தன்னுடைய விவேகத்தால் பல நூல்களைப் படித்துத் தெரிந்து ஞானத் தெளிவு பெறுவது விவேக கதியாகும். வயது, சூழ்நிலை ஏதுமின்றி மின்னலடித்தாற்போல் வரும் ஞானம் விரக்தகதியாகும். புத்தர், பட்டினத்தார், ஸ்ரீ பகவான் போன்ற ஞானிகளே இதற்கு எடுத்துக் காட்டாகும். "ஆகாச பலம் வீழ்தல் போல், மெய்ஞ் ஞானம் எளிதில் உண்டாம்" என்பது வாசிட்டத்தின் பிரமாண வாக்கியம். ஒரு மகானைத் தரிசிக்க மனதில் யாதொரு சங்கல்பமுமின்றிச் சென்ற

சமயம் அங்கு அவர் தம் சிஷ்யனுக்கு ஞான பரமான கேள்விக்கு விடையளிக்கிருர். தரிசிக்கச் சென்றவருக்கு பூர்வ புண்ணியத்தால் அதைக்கேட்ட மாத்திரத்திலேயே, பொத்தானை அழுத்திய கணமே மின்சாரம் பாய்ந்து ஒளி தருவதுபோல், ஞான ஒளி உதயமாகின்றது. ஞானியாகின்ருன். இதுவே தெய்வகதி. இம் மூன்று விதத்திலும் பெறக்கூடிய ஞானநிலையை அடைய பல ஜன்மங்களில் செய்த நல்வினையே காரணமாகிறது. வேறு பல சாஸ்திரங்கள் சொல்வதும் அதுவே.

இரண்டாம் பகுதி

1. அச்சுததாஸர் பாராட்டு

ஸ்ரீ பகவான் குருமூர்த்தத்தில் தவராஜயோகியாக அமர்ந்திருந்த சமயம், ஒரு நாள் முகத்தில் தேஜஸ் நிறைந்த ஒருவர் தம் சீடர்கள் சிலருடன் ஸ்ரீ பகவானை தரிசிக்க வந்தார். சிறிது நேரம் பஜனை செய்தார். பிறகு ஸ்ரீ பகவான் அருகில் அமர்ந்து அவர்களின் திருவடிகளை யும் கரங்களையும் பிடித்துப் பணிந்து பரவசமடைந்தார். அவருடைய சீடர்களும் ஸ்ரீ பகவானின் பாதங்களைப் பிடிக்க நெருங்கியபோது அவர் சீடர்களைத் தடுத்து இது பெரிய அக்னி. நீங்கள் யாரும் நெருங்க முடியாது என்றார். பிறகு தமிழில் அருமையான வேதாந்த கீர்த்தனைகள் சிலவற்றை பாடினார். அச்சமயம் ஸ்ரீ பக வான் மௌனமாக இருந்ததால் யாவற்றையும் சாட்சி மாத்திரமாகப் பார்த்துக் கொண்டும் கேட்டுக்கொண்டும் இருந்தார்கள். கடைசியாக அவர் ஸ்ரீ பகவானை வணங் கிப் பிரிய மனமின்றி புறப்பட்டுச் சென்றார். சில நாள் கழித்து இங்கு வந்து போனவர் தமிழில் வேதாந்த கீர்த் தனம் பாடியுள்ள அச்சுததாஸர் எனத் தெரிந்தது. அவர் எழுதிய பாட்டுப் புத்தகமும் ஸ்ரீ பகவான் பார்வைக்கு அனுப்பி வைத்தார்.

2. பழனிஸ்வாமியின் பரிவு

ஸ்ரீ பகவான் குருமூர்த்தத்தில் இருக்கும்போது பழனி ஸ்வாமி ஐயங்குளத்தெரு விநாயகருக்கு பூஜை செய்து கொண்டு சாது விருத்தியில் இருந்து வந்தார். பாலக் காட்டிற்குச் சமீபமுள்ள வடவனூரில் பிறந்தவர். அப்

பொழுது "பிராமணஸ்வாமி" என விளங்கி வந்த ஸ்ரீ பகவானைக் குறித்து யாவரும் மிக உயர்வாகப் பேசுவதைக் கேட்டுத் தானும் சென்று ஒரு நாள் தரிசித்தார். பார்த்த மாத்திரத்திலேயே அவருக்குச் சொல்லொணு ஆனந்தமும் அமைதியும் ஏற்பட்டது. அன்றிலிருந்து பிராமணஸ்வாமியின் தொண்டு ஒன்றுதான் அவருக்குப் பிரதானமாகியது. "ஸ்வாமி"யைவிட 30 வயது மூத்தவர். தவக் கோலத்தில் பால்வடியும் முகத்துடன் மௌனமாக ஞானஒளிவீசி அமர்ந்திருக்கும் பாலகனைக் காண அவர் உள்ளத்தில் தந்தைக்குரிய பாசம் பிறந்து பரிவுடன் கண்ணை இமை காப்பதுபோல ஸ்வாமியைக் காத்து வரலானுர். தாம் வெளியில் செல்ல நேர்ந்தால் பிறருடைய உபத்திரவம் "ஸ்வாமிக்கு" ஏற்படாமலிருக்க குருமூர்த்தத்தை பூட்டிச்சென்று ஆவலுடன் விரைந்து வந்து விடுவார். அவருடைய அனுமதியின்றி ஸ்வாமியை யாரும் அருகில் நெருங்க முடியாது. ஸ்வாமிகளும் மிகவும் கடும் தவமிருந்த சமயமாதலால் இப்படிப்பட்ட ஒரு பெரும் பாதுகாப்பு ஸ்ரீ அருணுசலேஸ்வரரே ஏற்படுத்தியதுபோல் அமைந்துவிட்டது. குருமூர்த்தத்தில் சுமார் ஒன்றரை ஆண்டு காலம் தங்கியிருந்த ஸ்ரீபகவான் பிறகு மலையிலுள்ள விருபாக்ஷி குகையில் வந்து தங்கினுர்கள். பழனிஸ்வாமியும் உடன் வந்து விட்டார். பழனிஸ்வாமி முழங்காலளவுக்கு துண்டு ஒன்றைத் தவிர வேறு ஒன்றும் உடுத்தமாட்டார். அத்துண்டும் இரண்டுக்கு மேல் இராது. உபயோகிப்பதெல்லாம் மண்பாத்திரங்களே. அலுமினியம், பித்தளை டம்ளர்கூட இருக்காது. விருபாக்ஷி குகையில் அன்பர்கள் வருகை சற்று அதிகமாகியது. வரும் பக்தர்கள் குடிப்பதற்கு ஜலம் கேட்டால் அவர்களுக்கும் மண்குடுவையில் தான் கிடைக்கும். சிலர் அதில் குடிப்பதற்கு விருப்பமில்லாதவராய் வருகின்ற அன்பர்களுக்காகவாவது ஒரு டம்ளர் வைத்துக் கொள்ள

லாமே என்றுலும், நாங்கள் வாங்கிவருகிறோம் என்று லும் கண்டிப்பாக மறுத்து விடுவார். யாரிடமும் எப் பொருளும் வாங்க மாட்டார். அதனுல் யாருக்காகவும் தாக்ஷண்யம் பார்க்காமல் நேர்மையாக நடந்து கொள் வார். உலகத்தில் ஸ்ரீ பகவான் தொண்டு ஒன்றைத் தவிர மற்ற யாவையும் உதாசீனப்படுத்தும் தீரர்.

3. அண்மய ரமுக்காறு

ஸ்ரீ பகவான் மலேயில் விருபாக்ஷியில் வாசம் செய்ய ஆரம்பித்த புதிதில், மலேயில் ஆஸ்ரமம் அமைத்து இருந்து வந்த சாதுக்களில் சிலருக்கு தங்களிடம் வரும் பக்தர் களில் பெரும்பாலோர் ஸ்ரீ பகவானே தரிசிக்க, அவர் களிருக்குமிடம் நாடிப் போவதைப் பார்த்து தங்க ளுடைய பெருமை குறைந்து விடுமோ என்ற பயம் உண்டாகி அதன் காரணமாக சில இடையூறுகள் செய்ய ஆரம்பித்தார்கள். ஈதறிந்த ஸ்ரீ பகவான் தன்னுல் அச் சாதுக்களுக்கு மனக்கிலேசமும் சிரமமும் வேண்டா மெனும் காருண்யத்தால் காட்டிற்குப் போய் தங்க நினேத்தார்கள். ஸ்ரீ பகவானுக்கு சில நேரங்களில் தீடீ ரென மின்னலடித்தாற் போல் தன் தேகம் மறைந்து அணுக்களாகச் சிதறிப் பரந்து, புகை போன்று ஒரு உருவெளித் தோற்றம் உண்டாகி அதன் பிறகு பனித் துகள் போன்று ஒன்று சேர்ந்து மறுபடியும் தேகம் தெரியுமாம். இவ்வநுபவம் ஒரே நிலேயில் இருக்கும் போதும், ஆகாரம் இல்லாமல் தேகம் ஒடுங்கி இருக்கும் போதும் உண்டாகுமாம். இவ்வாறு அணுக்களாக விரிந்து, தேகமற்று பஞ்சபூதத்துடன் கலந்துவிடும் நிலேக்கு "பிரணவ தேகம்" எனப்பெயராகும்.

4. பிரணவ தேகம்

ஸ்ரீ பகவான் காட்டிற்குள் போய் உபவாசமாக இருந்து பிரணவதேகி ஆகிவிடலாம் என்ற எண்ணத்

3

துடன் தனித்து ஒரு நாள் காலையில் பச்சையம்மன் கோயில் பக்கம் காட்டிற்குள் புகுந்து போக ஆரம்பித்தார்கள். அச்சமயம் சிறு பையனுக வேத பாடசாலையில் படித்து வந்த வாசுதேவ சாஸ்த்ரி ஸ்ரீ பகவானைப் பார்த்து விட்டு ஓடிவந்து இப்படித் தனியாக வந்திருக்கிறீர்களே, விருபாக்ஷிக்குப் போகலாம் என அழைக்க, அதற்கு ஸ்ரீ பகவான் நான் காட்டிற்குள் இரண்டு நாள் தங்கி விட்டு வருகிறேன், 'நீ போ' என்ருர்கள். இதைக் கேட்ட சிறுவன் வாசுதேவன் ஸ்ரீ பகவானை அங்குத் தனிமையில் விட்டுப் பிரிய மனமின்றி அழ ஆரம்பித்தான். இதைக் கண்ட ஸ்ரீபகவான் அவனைச் சமாதானம் செய்து, தான் சீக்கிரம் வந்து விடுவதாகச் சொல்லி அனுப்பிவிட்டு, சிறிதுதூரம் சென்ருர்கள்.

5. ஈசான்ய மடாதிபதியின் பரிவு

அப்பொழுது அங்கிருந்து சற்று தூரத்தில் உள்ள சாலையில் ஒரு வண்டி வந்து கொண்டிருந்தது. அதில் ஈசான்ய மடாதிபதி ஸ்ரீ சாத்தப்பஸ்வாமிகள் (ஸ்ரீ மஹாதேவ ஸ்வாமிகளுக்கு முன் இருந்தவர்) மடத்திற்குச் சொந்தமான நிலங்களைப் பார்த்துவிட்டு வண்டியில் திரும்பி வந்து கொண்டிருந்தார். தூரத்தில் ஸ்ரீ பகவானைப் பார்த்ததும் "பிராமணஸ்வாமி" போல இருக்கிறதே என கவனித்துப் பார்த்துத் தெரிந்துகொண்டு வண்டியை விட்டு இறங்கி வெகு வேகமாக ஸ்ரீ பகவானருகில் வந்தார். பிராமணஸ்வாமியைக் கண்டதும்மிகவும் சந்தோஷமுற்று "ஸ்வாமி! தங்களை இங்கு பார்ப்பேன் என நினைக்கவில்லை. என் பாக்கியம் தங்கள் தரிசனம் கிடைத்தது. தங்களை எங்கள் மடத்திற்கு அழைத்துச் செல்ல நீண்ட நாட்களாக எனக்கு ஆவல். ஆனுல் தாங்கள் வர மாட்டீர்களே எனத் தயங்கி இதுவரை இருந்து விட்டேன். இப்பொழுது நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அவசியம்

எங்கள் மடத்திற்கு வர வேண்டு”மென வெகு ஆர்வத் துடன் கூறினர். ஸ்ரீ பகவான் எங்கும் செல்ல விரும் பாததால் மறுத்துப் பார்த்தார்கள். ஆனல் ஆஜானுபாகு வாக வாட்ட சாட்டமாக இருந்த ஸ்ரீ சாத்தப்பஸ்வாமி களிடம் ஒன்றும் பலிக்கவில்லே. தவத்தால் மெலிந்துள்ள சிறுவயது பிராமண ஸ்வாமிகளே ஒரே தூக்காகத் தூக்கி வண்டியில் உட்கார வைத்து விட்டார். அவருடைய தீவிர அன்பிற்கு முன் ஸ்ரீ பகவானல் ஒன்றும் செய்ய இயல வில்லே. மடாதிபதியும் மிக்க மகிழ்ச்சியுடன், வழியில் கண்டெடுத்த ஞானப் பொக்கிஷத்தை ஈசான்யமடம் அழைத்துச் சென்று தனிப்பட்ட ஆசனத்தில் அமரச் செய்து ஆகாரம் செய்வித்து மிகக் கொண்டாடினர். ஸ்ரீ பகவானுக்கு இந்த ஆடம்பர உபசாரங்களெல்லாம் ஒத்து வரவில்லே. “எனக்கு இவைகளெல்லாம் ஏற்க முடியவில்லே, நான் போகிறேன்” என்றதற்கு ஸ்ரீ சாத் தப்ப ஸ்வாமிகள், தங்களுக்கு எப்படி விருப்பமோ அப் படியே இருக்கலாம். தயவு செய்து எங்களுடன் இன்னும் சிறிது காலம் தங்கியிருக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். ஸ்ரீ பகவானல் ஒன்றும் சொல்ல இயலவில்லே. ஒரு வாரம் சென்றது. மேலும் ஸ்ரீ பகவானல் அங்கு கட்டுப்பட்டிருக்க முடியாமல் ஒருநாள் விடியற்காலேயில் எழுந்து யாருக்கும் தெரியாமல் மடத்தை விட்டுப் புறப் பட்டு பவளக்குன்று கோயிலில் போய் அமர்ந்து விட்டார் கள். காலேயில் எழுந்து பார்த்த ஸ்ரீ சாத்தப்பஸ்வாமிகள் மிக ஏமாற்றமடைந்தார். பிறகு பிராமணஸ்வாமிகள் பவளக்குன்றில் இருப்பதறிந்து வந்து ஸ்ரீ பகவானேத் தரிசித்தார். ஈசான்ய மடத்தைச் சேர்ந்த பவளக் குன்று மடாதிபதியைச் சந்தித்து அம் மடத்திலிருந்து ஸ்ரீ பக வானுக்கு தினம் ஆகாரம் அனுப்ப ஏற்பாடு செய்தார். நாம் செய்த பூர்வ புண்ணியத்தால், நாம் காண முடியாத ஓர் நிலேக்குச் செல்வதாயிருந்த ஸ்ரீ பகவானேத் தன் அளவிலா அன்பால் கட்டிப் பிடித்து, நாம் எல்லோரும்

ஒப்பிலா ஞானக்குன்றும் அப் பெருமானைக் கண்டுய்ய ஒரு வாய்ப்பளித்த பெருந்தகையாம் ஸ்ரீ சாத்தப்பஸ்வாமி களுக்கு நம் போன்ற அடியார் குழு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமை பட்டிருக்கிறோமல்லவா !

6. ஸ்ரீ பகவான் கண்ட பழமைக் காட்சிகள்

ஸ்ரீ பகவான் விருபாக்ஷிகுகையில் இருக்கும் போது ஒரு நாள் சாக்கிர சொப்பன மிரண்டு மில்லாத ஒரு நிலையில் தாம் மலையில் ஓரிடத்தில் உள்ள குகை ஒன்றி னுள் நுழைந்து செல்ல அங்கு பல பர்ண சாலைகளும், ரமணீயமான தடாகங்களும், பூத்துக் குலுங்கும் மரம், செடி, கொடிகளுமாக அதி அற்புதத்துடன் விளங்குவதைக் கண்டார்கள். தமக்குப் புதிய இடமாக இல்லாமல் தாம் முன்பே பார்த்துப் பழகிய இடம் போல் இருந்ததாக ஒரு காக்ஷி தோன்றிற்று. பிறகு அடியண்ணாமலை கோவில் திருப்பணி நடந்து கொண்டிருக்கும் போது கோவிலின் கிழக்குப் பக்கத்திலிருந்து மலைக்குள் ஒரு சுரங்கம் செல் வதைத் திருப்பணி செய்து கொண்டிருந்தவர்கள் கண் டனர். அச் செய்தியை ஸ்ரீ பகவானுக்குத் தெரிவித்தனர். ஸ்ரீ பகவான் மறுநாள் கிரிப்பிரதக்ஷிணம் செய்யும் போது அச் சுரங்கத்தைச் சென்று பார்த்தார்கள். அது தாம் முன்கண்ட காக்ஷியில் உள்ளது போலவே இருப்பது கண்டு மனதிற்குள் வியந்தார்கள். வெளியில் யாரிடமும் சொல்லவில்லை. அங்கிருப்பவர்கள் அதை என்ன செய்வ தெனக் கேட்க, ஸ்ரீ பகவான் இதனை நாம் சோதனை செய்வது சரியல்ல, மூடிவிடுங்கள் எனச் சொன்னபடி மூடி விட்டார்கள். பிறகு ஸம்ஸ்கிருத அருணசல மாகாத் மியத்தில் உள்ள ஒரு ஸ்லோகத்தில் தாம் கண்ட காக்ஷி களின் வர்ணனை அப்படியே இருப்பதைக் கண்டார்கள். அதைக் கண்டதும் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. பிறகு அந்த ஸ்லோகத்தையே ஸ்ரீ பகவான் தமிழில்

எழுதினது ஸ்ரீ ரமண நூற்றிரட்டில் உள்ளது. ஸ்லோகமும் அதன் மொழி பெயர்ப்பும்.

அருணாத் ரிரயம் ஸாக்ஷாத் அநலாத்ரிஸ் திரோஹித:।
தேஜோமய மிதம்ரூபம் ப்ரசாந்தம் லோகரக்ஷணாத்॥
அத்ரஸித்த புநர்நித்யம் வஸாம்யக்ரே சுரார்ச்சித:।
மமாந்தரே குஹா திவ்யா த்யாதவ்யா போகஸம்யுதா॥

அங்கியுரு வாயுமொளி மங்குகிரி யாகத்
தங்கலரு ளாலுகந் தாங்குவதற் கன்றி
இங்குறைவன் சித்தனென வென்றுமென துள்ளே
பொங்கியொளி ருங்குகைபல் போகமொடென் றுள்ளே.

7. மாறு வேடம்

ஒரு முறை புரட்டாசி மாதம் அண்ணாமலையார் கோவிலில் புதிதாக கல்யாண மண்டபம் கட்டி அதில் முதல் முறையாக நவராத்திரி விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதைச் சென்று பார்த்து வந்த பழனிஸ்வாமி ஸ்ரீ அபீதகுசாம்பிக்கைக்கு வெகு சிறப்புற அலங்கரித்திருக்கும் அழகைக் கண்டவர் அதைத் தம் ஞானச் செல்வரும் கண்டுகளிக்க வேண்டுமென விரும்பினார். ஸ்ரீ பகவானும் பழனிஸ்வாமியும் விருபாக்ஷியில் ஏகாந்தமாக இருந்த சமயம் அது. பழனிஸ்வாமியோ வேறு அன்பர்களோ உடன் வந்தால் கோவிலில் தம்மை மற்றவர் அடையாளம் கண்டு கொள்ள நேரிடுமென்ற எண்ணத்தால் ஸ்ரீ பகவான் தாம் மட்டும் மாறு வேடத்தில் தனித்துச் செல்ல நினைத்தார்கள். பழனிஸ்வாமியை விருபாக்ஷியில் இருக்கும்படி சொல்லி விட்டு அவருடைய துவைத்து உலர்த்திய துண்டை தாம் உடுத்திக் கொண்டு நெற்றியில் நாமமிட்டுக் கொண்டு இரவு 10 மணி சுமாருக்கு கோவிலுக்கு சென்றார்கள். ஒருவித உற்சாகத்தில் கிளம்பி விட்டார்களே தவிர தன்னை யாராவது கண்டு

கொள்வார்களோ என்ற எண்ணத்தில் சுற்றுப்புறத்தையும் மற்றவர்களேயும் பார்ப்பதிலேயே மனம் சென்றது. அம் பாளின் அழகைக்கூட பார்க்கத் தோன்றவில்லே. தன் எதார்த்த உருவை மறைக்க மாற்றுருவில் சென்றது பிறருக் குத் துன்பமோ நஷ்டமோ ஏற்படுத்தவில்லேயாளுலும் அச்சிறு தவறு கூடச்செய்ய மனம் சங்கடப்பட்டது. எப்படியோ அம்பாளேத் தரிசித்து சீக்கிரம் திரும்ப நினேத்த சமயம் அங்கிருந்த குருக்கள் ஒருவர் ஸ்ரீ பகவானேக் கண்டுவிட்டு 'ஏய்! ஏய்! எல்லோரும் இங்கே வந்து பாருங்கோ! பிராமணஸ்வாமி பெருமாளாகக் காக்ஷியளிக் கிருர்" என சந்தோஷத்துடன் கூறிவிட்டு அம்பாளுக்குச் சாற்றியிருந்த பூமாலேயை எடுத்து ஸ்ரீ பகவானுக்கு அணி வித்தார். அதற்குள் மற்ற குருக்களும் கூடிவிட்டனர். ஸ்ரீ பகவான் பாடு திண்டாட்டமாகிவிட்டது. உடனே திரும்ப நினேத்தார்கள். ஒரு குருக்கள் இலேயில் சுண்டல் முதலிய பிரசாதங்களே வைத்து ஸ்ரீ பகவானுக்குக் கொடுத் தார். ஸ்ரீ பகவானும் தப்பித்தால் போதுமென விருபாக்ஷிக் குத் திரும்பி விட்டார்கள். நேர்மையுள்ள உள்ளத்தின் மன சாட்சியின் அரசாட்சி விளேயாட்டாகக்கூட சிறு தவறும் செய்வதை அது அநுமதிக்காது என்பதற்கு இது ஒரு திருஷ்டாந்தமாகும்.

8. ஸ்ரீ பகவான் படித்த வேதாந்தம்

சாதுக்கள் சத்திரத்தின் ஸ்தாபகர் காரைக்குடி சா. நா. சாத்தப்ப செட்டியாரும் அவர் மனேவியாரும் தங்கள் சத்திரத்தில் நேர் பார்வையில் தயாராகும் உணவை, வரும் சாதுக்களுக்கெல்லாம் மனங்குளிர அன்னதானம் நடத்தி வந்தனர். ஸ்ரீ பகவானிடம் ஈடுபாடுள்ளவர்கள். வழக்கம் போல் ஸ்ரீ பகவானே தரிசிக்க வந்த செட்டியார் ஒரு நாள், தான் நடத்தும் அன்னதானத்தின் சிறப்பாக ஸ்ரீ பகவான் தினம் ஒரு பிடி அன்னமாவது ஏற்றுக்

கொண்டால் எங்களுக்கு அது மிக பாக்கியமாகும் என வேண்டினர். அவர் அன்புள்ளத்திற்கிணங்க பழனிஸ்வாமியும் தினம் சாதுக்கள் சத்திரத்திற்குப் போய் சாதம் எடுத்து வருவார். வந்ததும் சாதத்தை வைத்து விட்டு மலையாளத்தில் எழுதியுள்ள அத்யாத்ம ராமாயணத்தில் ஒரு அத்யாயத்தை தட்டுத் தடுமாறிப் படித்து முடித்த பிறகு ஸ்ரீ பகவானுக்கு ஆகாரம் அளித்துவிட்டுத் தானும் உண்பார். சில சமயங்களில் வெளியூரிலிருந்து வந்து தங்கியிருக்கும் அன்பர்களுக்கும் உணவளிக்க வேண்டியிருக்கும். இவர் தடுமாற்றத்துடன் படித்து முடிக்க நேரமாகிவிடும். வந்திருப்பவர்கள் பசியுடன் காத்திருப்பதைப் பார்த்து ஸ்ரீ பகவானுக்குக் கஷ்டமாக இருக்கும். அதைத் தவிர்க்க நினைத்து ஒரு நாள் பழனி ஸ்வாமியிடம், "என்ன பழனிஸ்வாமி! அதை நீங்களே தான் படிக்க வேண்டுமா, அல்லது வேறு யாராவது படிப்பதைக் கேட்டால் போதுமா", எனக் கேட்டார்கள். அதற்கு அவர் "படிப்பதைக் கேட்டாலே போதும்" என்றார். மறுநாள் ஸ்ரீ பகவான் அப்புத்தகத்தை எடுத்துப் பார்த்தார்கள். அதில் தான் முன்பே அறிந்திருந்த கிரந்த அக்ஷரங்களும் தமிழும் சேர்ந்த நடையில் மலையாள மொழி இருந்ததால் தெரியாத சில எழுத்துக்களை மட்டும் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு அவருக்கு அத்யாத்ம ராமாயணத்தைப் படித்துக் காட்ட ஆரம்பித்ததால் ஸ்ரீ பகவானுக்கும் மலையாள மொழி படிக்கவும் எழுதவும் தெரிந்து கொள்ள காரணமாக அது அமைந்தது. ஊருக்குள் இருந்த நர்கலிங்க ஸ்வாமி என்பவர் வீட்டிலிருந்து பழனி ஸ்வாமி கைவல்யம், வேதாந்தசூடாமணி, ஞான வாசிட்டம் முதலிய நூல்களை எடுத்து வருவார். விருபாக்ஷி குகையில் பக்தர்கள் கூட்டம் அதிகமில்லாத காலமாகையால் ஸ்ரீ பகவான் அந்நூல்களை அமைதியாக ஆழ்ந்து படிக்க முடிந்தது. அந்நூல்களில் சொல்லியுள்ள ஒவ்வொரு நிலைக்கும் தாமே அத்தாட்சியாக இருப்பது ஸ்ரீ பகவா

னுக்கு அதிசயமாகத் தோன்றியது. மறந்து போன விஷயம் நினைவிற்கு வருவது போலிருக்கும், அப்புத்தகங் களை படிக்கும் போது. இவ்விதம் ஒப்பிட முடியாத ஓர் உறவுப் பிணைப்புடன் ஆறு வருடங்கள் விருபாக்ஷி குகை யில் ஸ்ரீ பகவானுடன் இருந்து வந்தார் பழனிஸ்வாமி. அன்பர்கள் சிலர் விருபாக்ஷி குகையில் ஸ்ரீ பகவானுடன் தங்கலானார்கள். சாதுக்கள் சத்திரத்திலிருந்து எடுத்து வரும் சாப்பாடு எல்லோருக்கும் போதவில்லை. ஆகையால் ஊருக்குள் பிக்ஷைக்கு போய் வருவதெனத் தீர்மானித்து அதன்படி செய்து வந்தனர். ஒரு வீட்டிற்கு முன்பு போய் நின்று கேட்பதில்லை. ஸ்ரீ ஆதிசங்கரரின் ஸ்லோகத்தை பாடிக்கொண்டு தெருவில் மெல்லப்போவார்கள். பிக்ஷை இடுபவர்கள் இவர்கள் இருக்குமிடத்தில் கொண்டுவந்து போடுவார்கள். சில பரதேசிகளும் இச்சுலோகத்தைப் பாடிக் கொண்டு ஆஸ்ரம அன்பர்களுக்கு முன்னதாக பிக்ஷையை வாங்கிச் செல்ல ஆரம்பித்தனர். இச் சங் கடத்தை தவிர்க்க வேண்டி பழனிஸ்வாமி கேட்டுக் கொண்டதன் பேரில் ஸ்ரீ பகவானால் "அருணாசல அக்ஷர மணமாலை" இயற்றப்பட்டது. பிறகு ஸ்ரீ பகவானின் அன்னையாரும் வந்து சேர்ந்தார்கள். அன்பர் கூட்டமும் பெருகியது.

9. தீக்ஷை முயற்சி

ஸ்ரீ பகவான் தனக்கென ஒரு குருவைக் கொள்ளா ததும் அவரது சந்நியாசம் பிராமண சந்நியாசத்திற்குரிய சம்பிரதாய முறைப்படி இல்லாததும் அறிந்து சாஸ்திரங் களறிந்த ஒரு பண்டிதர் சிருங்ககிரி மடத்திலிருந்து ஸ்ரீ பகவானைக் காண விருபாக்ஷிக்கு வந்தார். சாஸ்திரிகள் வந்த சமயம் பழனிஸ்வாமி ஆகாரம் எடுத்துவர சாதுக் கள் சத்திரம் சென்றிருந்தார். சாஸ்திரிகளுக்கும் ஸ்ரீ பகவானுடன் தனித்துப் பேச சந்தர்ப்பம் கிடைத்தது.

குருவின் அவசியத்தைக் குறித்தும் தீக்ஷையாதிகளின் மகிமையைப் பற்றியும் ஒரு மணி நேரம் பேசினுர். அவதார புருஷர்களாகிய ராமர், கிருஷ்ணர், ஆதிசங்கரர் முதல் பெருநிலை அடைந்த பெரியோர்களின் சரிதைகளை அடுக்கடுக்காகச் சொல்லி, தங்களைப் போன்ற தபோதனரைப் பார்ப்பது அரிதிலும் அரிது என்று கூறினுர். பிறகு மிகவும் மரியாதையுடனும் பயபக்தியுடனும் கைகளை கூப்பிய வண்ணம் விண்ணப்பித்தார் : "சுவாமி, நீங்கள் பிராமண குலத்தவராகையால் சந்நியாசத்தை சம்பிரதாயப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்களுக்கு எல்லாம் தெரியும், நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது. உங்களை எங்கள் குரு பரம்பரையில் சேர்த்துக் கொள்ள ஆவலுடையவனுக இருக்கிறேன். சுவாமி உத்தரவு கொடுத்தால் சந்நியாச தீக்ஷைக்குரிய ஏற்பாடுகளை நடத்த சித்தமாய் இருக்கிறேன். காஷாய வஸ்திரம் அணிவதற்கு சம்மதமில்லா விட்டால் காஷாய கௌபீனமாவது ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விண்ணப்பித்தார். ஸ்ரீ பகவான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு மௌனமாக இருந்தார்கள். நான் ஊரினுட் சென்று பிற்பகல் 3 மணிக்கு திரும்பவும் வருகிறேன் என்று கூறிச் சென்ருர் சாஸ்திரிகள். அவர் சென்ற கால் மணிக்குள் பெரியவர் ஒருவர் ஒரு சிறு மூட்டையுடன் வந்தவர் பரபரப்புடன் "காலை 8 மணிக்கு வர வேண்டிய ரயில் 10 மணிக்குத்தான் வந்தது. இன்னும் ஸ்நானமும் சந்தியாவந்தனமும் செய்யவில்லை. இந்த மூட்டை இங்கேயே இருக்கட்டும், பார்த்துக் கொள்ளுங்கள், நான் போய் ஸ்நானம் செய்து சீக்கிரம் வருகிறேன்" என்று சொல்லி அவசரமாகச் சென்றுவிட்டார். ஸ்ரீ பகவானுக்கு ஒன்றும் புரியவில்லை. இவர் இதுவரை இங்கு வந்தவராகவும் இல்லை. ஆனுல் பார்த்த முகமாகவும் இருக்கிறது. நம்மைத் தெரிந்தவர்கள் யாரும் இப்படி மூட்டையை பார்த்துக் கொள்ளும்படி சொல்ல மாட்டார்களே ! என ஆச்சரியத்துடன் யோசித்துக்

கொண்டே அம் மூட்டையைப் பார்த்தார்கள். ஒரு துண்டின் அடியில், மடித்த இரண்டு வேஷ்டிகளும் அதற்கு மேலாக சில புத்தகங்களும் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. ஸ்ரீ பகவானுக்கு அப் புத்தகங்களைக் கண்டதும் உடனே எடுத்துப் படிக்க வேண்டுமெனும் ஒரு உத்வேகம் ஏற்பட்டது. பிறர் பொருள் எதையும் மனதாலும் தீண்டாதவர்களுக்கு எப்படியும் எடுத்துப் படித்தே ஆகவேண்டுமெனும் தீவிரம் உண்டாகி ஆவலுடன் அம் மூட்டையைப் பிரித்து மேலாக வைத்திருந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்தார்கள். அது வடமொழியில் எழுதியுள்ள "அருணசல மாகாத்மியம்" எனத் தெரிந்தது. இதுவரை தமிழில் "அருணசல புராணம்" மட்டுமே பார்த்திருந்த ஸ்ரீ பகவான் மிக்க ஆர்வத்துடன் புத்தகத்தை நடுவில் பிரித்தார்கள். அந்தப் பக்கத்தில் இரண்டு ஸ்லோகங்களைக் கண்டதும் அவைகளை ஒரு சீட்டில் எழுதிக் கொண்டு அப் புத்தகத்தை முன் போலவே மூட்டையில் வைத்துக் கட்டி விட்டார்கள். அதற்குள் பழனி ஸ்வாமியும் வந்து சேர்ந்தார். சாப்பாடு முடிந்ததும் ஸ்ரீ பகவான் அங்கு வைத்திருந்த மூட்டையைப் பார்த்தார்கள். காணவில்லை. பழனிஸ்வாமியை விசாரித்தார்கள். அவர் தாம் வந்ததிலிருந்து மூட்டை ஒன்றையும் பார்க்கவில்லையே என்றார். அப்பெரியவரும் வந்ததாகத் தெரியவில்லை. மூட்டை மறைந்த மாயமும் புரியவில்லை. 3 மணிக்குப் பண்டிதர் வந்து சேர்ந்தார்.

அவரிடம் ஸ்ரீ பகவான் தாம் ஸ்லோகம் குறித்து வைத்திருந்த சீட்டைக் கொடுத்தார்கள். அதில்

(1) ந்ருணாம்ச தர்சனாத்தூரே கைவல்யம் ஸ்மரணாதபி!
அஸ்து வேதாந்த விஜ்ஞாநம் அஸாத்யம் நிஷ்ப்ரயாஸத:

(2) யோஜநத்ரயமாத்ரேஸ்மின் க்ஷேத்ரே நிவஸதாம் ந்ருணாம்!
தீக்ஷாதிகம் விநாப்யஸ்து மத்ஸாயுஜ்யம் மமாஜ்ஞயா!!

என்ற இரு ஸ்லோகங்களைப் படித்துப் பார்த்த சாஸ்திரிகள் பணிவுடன் கைகூப்பி வணங்கி விடைபெற்றுச் சென்று நடந்த சம்பவங்களை ஸ்ரீ நரசிம்ம பாரதி சுவாமிகளிடம் விவரித்தார். இதைக் கேட்ட ஸ்ரீ சுவாமிகள் மிக வருத்தமடைந்ததுடன், இனி இம்மாதிரி முயற்சி களில் ஈடுபட வேண்டாம் என்று சாஸ்திரிகளை கண்டித் தார்கள். அருணாசல மாகாத்மியத்திலுள்ள மேற்படி இரு ஸ்லோகங்களும் ஸ்ரீ பகவானால் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டது, ஸ்ரீ ரமண நூற்றிரட்டில் உள்ளது.

உருத்தெரி யெல்லை யுற்றுகண் ணுற்றாற்
கருத்தினாற் றூரக் கருதினு லும்மே
வருத்த முறுது வராதவே தாந்த
வருத்தவிஞ் ஞான மார்க்கு முண்டாமே

யோசனை மூன்று மித்தல வாசர்க்
காசறு தீக்கை யாதியின் றியுமென்
பாசமில் சாயுச் சியம்பயக் கும்மே
யீசனு மென்ற னாணையி னானே.

10. வடவாலவிருக்ஷமும் வரிக்குளவி கொட்டும்

விருபாக்ஷி குகையில் ஸ்ரீ பகவான் இருந்த போது ஒரு முறை தனியாக மலையின் வடக்குப்புறமாக ஏறிச் செல்கையில் சில ஓடைகள் குறுக்கிட்டதைக் கடந்து போகும் போது மூன்றாவது ஓடையின் அருகில் ஒரு பெரிய ஆலிலை கிடப்பதைக் கண்டு ஸ்ரீ பகவான் அதை எடுத்துப் பார்த்தார்கள். அது பெரிய தேக்கிலை அளவு இருந்ததால் ஆச்சரியத்துடன் சுற்றுப்புறத்தைக் கவனித் தார்கள். அங்கு மிக உயரத்தில் மேடை போன்ற பெரிய பாறையும் அதனருகில் படர்ந்து விரிந்த ஆல விருக்ஷமும் இருப்பது புலப்பட்டது. ஸ்ரீ அருணாசல புராணத்தில் கூறப்பட்டுள்ள வடவாலவிருக்ஷம் இதுவாகத்தான் இருக்

குமென நினைத்து அங்கே சென்று பார்த்து வர எண்ணி மெதுவாக ஏறத் தொடங்கினுர்கள். கரடு முரடான பாதையில் சிரமத்துடன் நடக்கும் போது பக்கத்திலிருந்த புதரில் இருந்த குளவிக் கூட்டில் ஸ்ரீ பகவானின் இடது கால் தொடை பட்டுவிட்டது. உடனே அக் கூட்டிலிருந்து மிகப்பெரிய மலைக்குளவிகள் கிளம்பி ஸ்ரீ பகவானின் இடது தொடையிலேயே கொட்டின. "செய்த தப்புக்குத் தக்க தண்டனை பெற வேண்டியதுதான்" என ஸ்ரீ பகவானும் பொறுமையாக அங்கேயே நின்ருர்கள். கால் சிவந்து வீங்கி விட்டது. எந்த இடத்தால் தங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதோ அந்த இடத்தை மட்டுமே அவைகள் கொட்டி, தங்கள் ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டதைப் பார்த்து அந்த நிலையிலும் ஸ்ரீ பகவான் அதிசயித்தார்கள். காலில் வலியும் வீக்கமும் அதிகரிக்க ஆரம்பித்ததும் மலை ஏற்றம், வடவாலவிருக்ஷம் யாவும் மறந்து மிக சிரமத்துடன் விருபாக்ஷி குகை வந்து சேர்ந்தார்கள்.

அச் சமயம் ஸ்ரீ பகவானை கண்ணுங்கருத்துமாக கவனித்து பணிவிடை செய்துவந்த பழனிஸ்வாமி ஸ்ரீ பகவானின் சிவந்து வீங்கிய காலைப் பார்த்துப் பதறி விட்டார். உடனே காலுக்கு நல்லெண்ணை தடவி முள் வாங்கியால் குளவிகளின் கொடுக்குகளை மெல்ல எடுத்து விட்டார். ஸ்ரீ பகவானுக்கும் சிறிது சிறிதாக வீக்கம் வடிந்து சிரமமும் நீங்கிற்று. இச்சம்பவத்தை ஸ்ரீ பகவான் சிலமுறை கூறிக் கேட்டதிலிருந்து எங்களில் சிலருக்கு அந்த வடவாலவிருக்ஷத்தைச் சென்று பார்க்க வேண்டுமெனும் ஆவல் ஏற்பட்டிருந்தது. சிலகாலம் சென்று அதற்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. வடவாலவிருக்ஷ சம்பவத்தை ஸ்ரீ பகவான் சொல்லியதைக் கேட்டிருந்த முருகனுர் ஸ்வாமிகள் ஸ்ரீ பகவானிடம் அதைப் பற்றி வினவாக ஒரு பாட்டை எழுதி ஸ்ரீ பகவானிடம் கொடுத்தார். அதைப் பார்த்த ஸ்ரீ பகவான் அதற்கு விடையாக

மற்றொரு பாட்டை எழுதிக் கொடுத்தார்கள். பின்னர் முருகனுர் ஸ்வாமிகள் எழுதிய குருவாசகக் கோவையில் இவ்விரண்டு பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

முருகனுர் ஸ்வாமிகள் :—விஞ

பச்சையிலைத் தூறு படர்ந்தபுத ரென்றெண்ணி
வைச்சிடுகால் வீங்க வரிக்கதண்டு கொட்டலுமே
நிச்சயமாய் வேங்கட நின் னெஞ்சொப்பிச் செய்தாற்
றற்செயலாய் நேர்ந்த தவற்றுக் கிரங்கலென்னே. [போற்

ஸ்ரீ பகவான் :—விடை

பச்சிலைகட் கூடே படர்ந்ததங் கூடுலைய
வைச்சிடுகால் வீங்க வரிக்கதண்டு கொட்டிடினும்
தற்செயலாய் நேர்ந்த தவறேனுந் தானிரங்கும்
அச்செயலு மின்றே லவன்மனதின் றனமையென்னே.

11. நாவன்ஞ ஸ்வாமியின் குருகைங்கரிய போதனை.

சுமார் 1914 முதல் விருபாக்ஷி குகைக்கு வந்து ஸ்ரீ பகவானைத் தரிசித்துச் செல்பவர் நாராயணஸ்வாமி. அவரை நாங்கள் எல்லோரும் நாவன்ஞஸ்வாமியென மரியாதையாகக் குறிப்பிடுவோம். கோயிலூர் மடத்தில் மிக பிரசித்தி பெற்றவர். அவர் ஈசான்ய மடத்தில் வந்து தங்கிக் கொண்டு விருபாக்ஷி வந்து ஸ்ரீ பகவானை தரிசித்து செல்வார். தெளிந்த அறிவுடைய தூய்மையான துறவி. தனித்த முறையில் வேதாந்த பாடங்களை அநுபவத்துடன் போதிப்பார். ஒரு நாள் ஸ்ரீ பகவானை நமஸ்கரித்துவிட்டு அமர்ந்தார். அவரிடம் ஸ்ரீ பகவான் தாம் அப்போதுதான் எழுதி முடித்த "அருணுசல அஷ்டகம்" அடங்கிய காகிதத்தைக் கொடுத்தார்கள். நாவன்ஞ ஸ்வாமியுடன் வேதாந்தம் தெரிந்த சில மடாதிபதிகளும், அன்பர்கள் சிலரும் வந்திருந்தார்கள். நாவன்ஞஸ்வாமி பக்கத்தில்

உள்ளவர்களுக்கும் கேட்கும்படி வாய்விட்டு தானும் அர்த்தம் புரிந்து அஷ்டகத்தைப் படித்துக்கொண்டே வந்தவர் திரைப்பட உபமானம் வந்ததும், இது ப்ராசீன கிரந்தங்களில் இல்லாததால் ஸ்ரீ பகவானைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். பாட்டின் கருத்துக்களை தெளிவுற அறிந்து கொண்டு ஸ்ரீ பகவானின் உண்மையான நிலையையும் தெரிந்து கொண்டார். ஸ்ரீ பகவானை அதுவரை மகா தபஸ்வி என்று மட்டும் நினைத்திருந்தவர், இப்பொழுது வெறும் தபஸ்வி மட்டும் அல்ல. வேதாந்த அநுபவமும், பரோக்ஷ அபரோக்ஷமும் தெளிந்த ஸ்திதபிரஞ்ஞர் என அறிந்தார். வந்திருந்த மற்றவர்களும் தெரிந்து கொண்டனர். அவர்களுடைய பறைசாற்றலினால்தான் பல மடங்களிலிருந்தும் படித்த சாதுக்கள் ஸ்ரீ பகவானைத் தரிசிக்க அதிகம் வர ஆரம்பித்தனர். நான் ஸ்கந்தாஸ்ரமத்தில் கைங்கரியம் செய்து கொண்டிருந்த காலத்தில் நாவன்னு ஸ்வாமிகள் ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு வந்தவர் ஒரு முறை என்னைத் தனியாகக் கூப்பிட்டு குரு கைங்கர்யம் எப்படிச் செய்ய வேண்டுமென்பதை வேதாந்த சூடாமணியில் உள்ள கீழே வரும் பாட்டைச் சொல்லி விளக்கினார்.

ஆத்தமுட னங்கமே தானஞ்சற் பாவ
மாமவற்றுட் குருபரனுக் கனுகூல விருத்தி
யாத்தமுயர் குருபரன் குற் றேவலே யங்க
மருட்குரவற் குரியமனை நிலமுதலா மவற்றைக்

காத்தலது தானமாஞ் சற்குருவே மெய்யாய்க்
கண்டசிவ மெனநம்பு மதுவேசற் பாவ
மேத்துகரு மம்பத்தி மிகுஞான காண்ட
மெனுமிவற்ருன் மூவதிகா ரிகள்வேறு முளரால்.

ஆப்தம், அங்கம், தானம், சத்பாவம் என நான்கு. அதில் "ஆப்தம்" சாஸ்திர விதிப்படி சீடனுக்குரிய விதி முறைகள் தெரிந்து, குருவிற்கு அனுகூலவிருத்தியாக நடந்து கொள்வது. "அங்கம்" குருவின் திருமேனியின்

இதாஹிதங்களைக் கவனமாகத் தெரிந்து அதற்கேற்ப பணி விடைகள் செய்வது. "தானம்" குருவினுடைய ஆஸ்ரம சர அசரமாகிய கால்நடைகள், மரம், செடி, கொடிகள் ஆகிய எல்லாப் பொருள்களேயும் கிரகஸ்தர்கள் தங்கள் சொத்துக்களே எவ்வளவு சிரத்தையுடன் பாதுகாப்பார் களோ, அதனினும் கோடி பங்கு கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக் கொள்ளல். 'சத்பாவம்' எல்லாவற்றையும் குருசொரூபமாகப் பார்ப்பது. இப்படியாக கைங்கர்யம் செய்ய வேண்டிய முறைகளே விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துச் சொல்லி இப்படிச் செய்துவந்தால் வேறு அப்பியாசங்கள் ஏதுமின்றி ப்ரம்ம சாக்ஷாத்காரத்தை அடையலாம். ப்ரம்மம் வேறு சொரூபம் வேறல்ல என்று விளக்கினர். அவர் சொன்ன விதி முறைப்படியே ஸ்ரீ பக வான் கைங்கர்யம் செய்து வந்து இப்பொழுதும் குருசொரூ பத்தையே தியானித்திருக்கும் பாக்யம் பெற்றுள்ளேன்.

மூன்றும் பகுதி

கந்தசாமியும், ஸ்கந்தாஸ்ரமமும்.

விருபாக்ஷிக்கு மேற்குபுறம் சற்று தள்ளி கரும்பாறை ஒன்று உள்ளது. ஸ்ரீ பகவான் விருபாக்ஷியில் இருந்து வந்த சமயம் ஒருமுறை அங்கு சென்றவர்கள், அப்பாறையின் அடியில் ஓரிடத்தில் ஈரக்கசிவு இருப்பதை பார்த்து, தன் கைத்தடியினுல் அந்த இடத்தைக் குத்திப் பார்த்தார்கள். அங்கிருந்து சிறிது ஜலம் கசிந்து வந்தது. அச்சமயம் அங்கு வந்த ஸ்ரீ ஜடைஸ்வாமிகளிடம், அக் கரும்பாறைக்கடியில் ஊற்று இருக்கக்கூடும் என்ற தன் ஊகத்தைச் சொன்னுர்கள். ஸ்ரீ ஜடைஸ்வாமிகள் அதை அப்பொழுதே சோதித்துப் பார்த்துவிடலாம் என்று உடனே சில ஆட்களை தருவித்து கடப்பாரையால் குத்திப் பார்த்ததும் அங்கிருந்த ஊற்றிலிருந்து தெளிந்த ஜலம் ஓடி வந்தது. அவ்வூற்றிற்கு அடியில் சிறு பள்ளமும் வெட்டப்பட்டது. அதன் பிறகு ஸ்ரீ பகவான் அந்தப் பக்கம் செல்லும் பொழுதெல்லாம் அவ்வூற்று நீரை கமண்டலத்தில் கொண்டு வந்து உபயோகிப்பது வழக்கமாகியது. விருபாக்ஷியில் ஸ்ரீ பகவானை அடுத்த சில அடியார்களில் கொங்குநாட்டைச் சேர்ந்த கந்தசாமியும் ஒருவர். அந்த காலத்தில் விருபாக்ஷி குகைக்கு சமீபத்தில் குடிநீர் வசதியில்லை. சமையல் செய்யவும், பக்தர் பலர் அமர்ந்திருக்கவும் போதிய இட வசதியும் இல்லை. இக் குறையை போக்குங் கருத்துடன் கந்தசாமி, கோடையிலும் வற்ருத கரும்பாறை ஊற்றைச் சூழ்ந்துள்ள கற்களையும், முட்புதர்களையும் களைந்து மேடுபள்ளங்களை நிரவி சமப்படுத்தி, ஒரு பெரிய கட்டிடத்திற்குத் தேவையான மனையை உருவாக்கினுர். அத்துடன் கட்டிடத்திற்கெதி

ரில் கீழ்புற மலைச்சரிவை கருங்கல் சுவர் எழுப்பி, சமப் படுத்தி அப்பள்ளத்தை, அங்கு வெட்டிய சாப்பாத்தி களால் தூர்த்து, கட்டிடத்திற்கெதிரில் குளிர்நிழல் தரும் தென்னை, மா, பலா முதலியவைகளும் வைத்து பூஞ் சோலைகளும் ஏற்படுத்தினர். பின்னர் பெருமாள் ஸ்வாமியின் ஒத்துழைப்புடன் தற்போதுள்ள செங்கற் கட்டிடத்தையும் மிக பிரயாசையுடன் எழுப்பி அப்புதிய இடத்திற்கு ஸ்ரீ பகவான் வந்து தங்கும்படி செய்தார். பிறகு ஸ்ரீ பகவானுடன் சில நாள் இருந்துவிட்டு தம் சொந்த ஊருக்குச் சென்ற கந்தசாமி, மறுபடி திருவண் ணாமலை வரவே இல்லை. அவரைக் குறித்துத் தகவலும் பிறகு தெரியவில்லை. எங்கும் பிரசித்தி பெற்றுள்ள மேற்படி ஸ்கந்தாஸ்ரமம் எனும் மலை ஆஸ்ரம நிர்மாணத் தில் பெரும்பங்கு கொண்டவர் அன்பர் கந்தசாமியாதலால், அவரின் ஈடற்ற முயற்சியின் ஞாபகர்த்தமாக, அன்னாரின் பெயரையே ஸ்ரீ பகவான் அந்த ஆஸ்ரமத்திற்குச் சூட்டி யருளினார்கள். புகழ் வாய்ந்த ஸ்கந்தாஸ்ரமம் இன்னும் ஸ்ரீ ரமணாஸ்ரமத்தாரால் போற்றி பாதுகாக்கப்படுகிறது. ஸ்ரீ பகவான் சேவார்த்திகளுக்கு இது புனிதஸ்தலமாகவும் விளங்கி வருகிறது.

2. ஸ்கந்தாஸ்ரமப் பிரவேசம்.

ஸ்ரீ பகவான் விருபாக்ஷி குகையில் பல வருடங்கள் தங்கியிருந்தபின்பு ஸ்கந்தாசிரமம் வந்து தங்கலானார்கள். பழனிஸ்வாமியும் ஸ்ரீ பகவானுடன் ஸ்கந்தாஸ்ரமத்தில் வந்து சில மாதங்கள் தங்கியிருந்தவர் தனக்கு தள்ளாமை அதிகம் இருப்பதால் தான் விருபாக்ஷி குகையிலேயே தங்கியிருப்பதாக ஸ்ரீ பகவானிடம் கூறிவிட்டு விருபாக்ஷி குகைக்குத் திரும்பி விட்டார். ஸ்ரீ பகவான் தினம் ஒரு முறை மாலை நேரத்தில் வழக்கமாக உலாவப் போகும் போது விருபாக்ஷி குகைக்கு வந்து பழனிஸ்வாமிக்கு ஆறுதலாக சிறிது நேரம் தங்கிச் செல்வார்கள். பழனி

ஸ்வாமிக்கும் தள்ளாமையால் உடல்நலக் குறைவு ஏற்பட்டது. ஒரு நாள் வழக்கம் போல் ஸ்ரீ பகவான் பழனி ஸ்வாமியைப் பார்க்க வந்தவர்கள் அன்று அவருக்கு உடல் நிலே சற்று அதிக சீர் கேடடைந்திருப்பதைப் பார்த்து அவர் பக்கத்தில் அமர்ந்தார்கள். சற்று நேரத்தில் அவருக்கு மேல்சுவாசம் கண்டது. உடனே ஸ்ரீ பகவான் அவர் சிரசைத் தம் மடியில் வைத்துத் தாங்கிக் கொண்டார்கள். அப் புண்ணிய புருஷரின் ஆவியும் அடங்கிற்று. எப்படிப்பட்ட மேலாம் தவம் செய்திருக்க வேண்டுமோ இப்பேறு பெற! பிறகு பழனிஸ்வாமியின் உடல் ஈசான்ய மடத்தருகில் அடக்கம் செய்யப்பட்டது. ஸ்ரீ பகவானின் மடியில் தலேவைத்து இவ்வுலக விடுதலேப் பெற்றவர்கள் மூவர். அதில் முதல் பாக்கியசாலி பழனிஸ்வாமியாகும். அடுத்தது ஸ்ரீ பகவானது அன்னேயாராகும். கடைசி பாக்கியசாலி பசு லக்ஷ்மியாகும்.

3. அக்ஷரமணமாலே

நான் வருவதற்கு முன், இரவு ஒரு வேளே மட்டும் ஸ்கந்தாசிரமத்திலிருந்து இறங்கி ஊருக்குள் சென்று ஆசிரம அன்பர்கள் பிக்ஷை எடுத்து வந்து ஸ்ரீ பகவானுடன் சாப்பிட்டது போக மீதியிருப்பதை மறுநாள் காலே உபயோகித்துக் கொள்வதும் பகல் ஆகாரம் எச்சம்மாள், முதலியார்பாட்டி, கண்ணம்மாள் முதலியவர்கள் கொண்டு வருவதை சாப்பிடுவதும் வழக்கம். ஸ்ரீ பகவானுடைய பக்தர்கள் பிக்ஷைக்கு வரும்போது, ஸ்ரீ ஆதி சங்கரர் இயற்றிய “அற்புதவிக்ரக அமராதீஸ்வர” என்ற அக்ஷரமாலேயைப் பாடுவது வழக்கம். ஸ்ரீ பகவான் பக்தர்கள் பிக்ஷைக்கு வருவதறிந்து வீட்டிலுள்ளவர்கள் சுத்தமான ஆகாரம் அளித்து வந்தார்கள். ஈதறிந்து ஊருக்குள்ளிருந்த சில பரதேசிகளும் அச் சுலோகங்களேப் பாடிக் கொண்டு ஆஸ்ரம பக்தர்களுக்கு முன்பே அதை வாங்கி வந்து விடுவார்கள். பிறகு ஆஸ்ரம அன்பர்கள் பிக்ஷைக்கு

வரும்போது தான் தாங்கள் ஏமாற்றப்பட்டது அவ்வீட்டுக் காரர்களுக்குத் தெரிந்து வருந்துவார்கள். இச்சங்கடத்தை தவிர்க்க வேறு தோத்திரப் பாடல் ஸ்ரீ பகவான் எழுதிக் கொடுத்தால் இப் பிரச்சினைக்கு ஒரு முடிவும் பிக்ஷையிடு பவர்களுக்கு சௌகரியமாகவும் இருக்குமென பழனி ஸ்வாமி, பெருமாள்ஸ்வாமி முதலியவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதன்படி ஸ்ரீ பகவான் அருளிய அக்ஷர மணமாலைப் பாடலை பாடிக்கொண்டு பிக்ஷைக்கு போவது வழக்கமாகியது. பிளேக்கினால் ஊர்காலியாகியதால் நான் ஸ்ரீ பகவானிடம் வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பே பிக்ஷைக்குப் போவது நின்றுவிட்டது. ஆஸ்ரமத்திலும் ஆட்கள் குறைந்திருந்தது. நான் வந்த பிறகு பிளேக்கின் காரணமாக வெளியூர் சென்றிருந்த சாமா ஐயர், ஈஸ்வர ஸ்வாமி முதலியவர்கள் வந்து விட்டார்கள்.

4. உணவு ஏற்பாடு

ஸ்ரீ ரமண நகரில் 1932-ஆம் ஆண்டு முதற்கொண்டு வசித்து வரும் கல்கத்தா K. R. ராமநாதய்யரின் மூத்த சகோதரர் K. R வேங்கடசுப்ரமண்ய அய்யர் கல்கத்தாவி லிருந்து வந்திருந்தார். தன்னுடைய கைங்கரியமாக ஏதாவது ஆஸ்ரமத்திற்குச் செய்ய வேண்டுமென எண் ணினார். அப்பொழுது ஆஸ்ரம காரியங்களில் பொறுப் பேற்றிருந்த கம்பீரம் சேஷய்யரிடம் கலந்து ஆலோசித் தார். இனி பிக்ஷைக்குப் போக வேண்டியதில்லை. எச் சம்மாள், முதலியார் பாட்டி, கண்ணம்மாள் முதலியவர் கள் வீட்டிலிருந்து ஆகாரம் வருவதுடன் சில அன்பர்கள் கொடுக்கும் பணத்துடன் மேற்கொண்டு ரூ. 40/- இருந் தால் போதுமென்று கம்பீரம் சேஷய்யர் சொன்னார். வேங்கடசுப்ரமண்ய அய்யர் தாம் ரூ. 60/- மாதாமாதம் அனுப்புவதாகச் சொல்லி அப்பொழுதே ரூ. 60/- கொடுத் துச் சென்றார். அதுமுதல் கம்பீரம் சேஷய்யர் ஒரு பெட் டியில் அன்றைய சமையலுக்கு வேண்டிய அரிசி, பருப்பு,

எண்ணெய் யாவற்றையும் ஒரு ஆள் மூலம் ஸ்கந்தாஸ் ரமத்திற்கு ஒவ்வொரு நாளும் அனுப்பிவிடுவார். அதற்கு தபால் பெட்டி என்று பெயர். அந்நாளில் ஆஸ்ரமத்திற்கு எந்த உணவுப் பொருள் வந்தாலும் நாளைக்கு வேண்டு மென வைக்காமல், அவ்வப்பொழுதே செலவழித்து விடு வது வழக்கம். அதன் காரணமாகவே கம்பீரம் சேஷய்யர் ஒரு நாளைக்கு மட்டும் வேண்டிய பொருட்களை அனுப்பி வந்தார்.

5. விசார சங்கிரகம்

கம்பீரம் சேஷய்யர் 1900-ஆம் வருடத்தில் திருவண் ணுமலை முனிசிபல் ஓவர்சீயராக இருந்தார். அச்சமயம் விருபாக்ஷி குகையில் மௌனத் தவராஜயோகியாக இருந்த ஸ்ரீபகவானிடம் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். அஷ்டாங்க யோகத்தில் பற்றுடையவர். ஸ்ரீ மத் விவே கானந்த சுவாமிகளின் ராஜ, ஞானயோகப் பிரசங்கங்கள், ராம கீதை முதலிய நூல்களை விரும்பிப் படிப்பார், ஆனுல், அவற்றின் பொருளைப் புரிந்துகொள்ள முடிவ தில்லை. ஸ்ரீ பகவானிடம் அப்புத்தகங்களைக் கொடுத்து தனக்கு தெளிவுறுத்தும்படி வேண்டினுர். ஸ்ரீ பகவான் மௌனமாகையால் அவ்வப்பொழுது அவர் சந்தேகங் களுக்குத் துண்டுச் சீட்டுகளில் பதில் எழுதிக் கொடுப் பார்கள். அவ்விதம் 1900 முதல் 1902 வரை உள்ள மூன்ருண்டுகளில் கிடைக்கப் பெற்ற விடைகளைச் சேர்த்து ஒழுங்குற வைத்திருந்தார். அவர் காலமான சில வருடங்கள் கழித்து ஸ்ரீ நிரஞ்சனுனந்த ஸ்வாமிகள் அக் குறிப்புகளை கம்பீரம் சேஷய்யரின் சகோதரரிட மிருந்து வாங்கி அதை நடனுனந்த சுவாமிகளைக் கொண்டு தொகுத்து "விசார ஸங்கிரக வினுவிடை" என்ற புத்தகமாக வெளியிட்டார். ஸ்ரீ ரமண நூற்றிரட் டிலும் இது சேர்க்கப்பட்டுள்ளது. கம்பீரம் சேஷய்யரும் அவரது குடும்பத்தினரும், கடலூரில் சமாதி கொண்டி

லங்கும் ஸ்ரீ பகவந்த ஸ்ரீ தயானந்த ஸ்வாமிகளிடம் மிகுந்த பக்தி கொண்டவர்கள். ஆசிரம காரியங்களை மிகப் பொறுப்புடன் கவனித்துக் கொண்டிருந்தவர்.

6. சிக்கன வாழ்க்கை

ஸ்ரீ பகவான் படுக்கையில் தலையணை வைத்து நீட்டிப் படுத்தோ திரும்பி ஒருக்களித்துப் படுத்தோ நாங்கள் யாரும் பார்த்ததில்லை. முதுகிற்கு திண்டுகளை வைத்துக் கொண்டு சாய்ந்திருப்பார்கள். சில சமயங்களில் தம் கரத்தில் தலையைத் தாங்கிக் கொண்டு சாய்ந்திருப்பார் கள். எல்லோரையும் போல் படுக்கையில் படுத்துறங்கும் பழக்கமில்லை. எப்பொழுதும் சாய்ந்த நிலையிலேயே இருப் பார்கள். ஆசிரமத்திலேயே தயாரிக்கும் பற்பொடியை சிறு பொட்டலங்களாக மடித்து வைத்திருப்பதை ஸ்ரீ பக வானும் நாங்களும் உபயோகிப்போம். ஸ்ரீ பகவான் பல் துலக்க எடுக்கும் பொட்டலத்தில் ஒரு சிட்டிகை பற்பொடி அதிகமாக இருந்தாலும், அதை அக் காகிதத்திலேயே மடித்துத் தருவார்கள். அதை ஜாக்கிரதையாக வைத்தி ருந்து மறுநாள் உபயோகிக்கக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறிவிட்டால், எங்கள் அஜாக்கிரதை யையும் சிக்கனமின்மையையும் குறிப்பிட்டுக் கண்டிப்பார் கள். ஸ்ரீ பகவான் ஸ்கந்தாஸ்ரமத்திலும் பிறகு கீழே ஆஸ்ரமம் அமைத்து அங்கே தங்க ஆரம்பித்து சில வருடங்கள் வரையிலும் பஞ்சகற்பம் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தார்கள். அதன் பிறகு முற்றல் தேங்காயி லிருந்து பால் பிழிந்தெடுத்து காய்ச்சி அதிலிருந்து வரும் எண்ணெயில் மிளகும் தும்பைப்பூவும் போட்டு வடித்து எடுத்து வைத்திருப்போம். அதைத் தேய்த்து ஸ்நானம் செய்வார்கள். அந்த எண்ணெய் தெளிவாகவும், வாசனை யாகவும் இருக்கும். தினமும் அதில் சிறிதளவு எண்ணெயை ஸ்ரீ பகவான் தன் உள்ளங்கையில் விட்டு தலையில் தேய்த்துக் கொள்வார்கள். நாங்கள் வென்னீர்

எடுத்து வைப்போம். குளியலறைக்குள் வந்ததும் சிறிது ஜலத்தை எடுத்துத் தலையில் வைத்துக் குழப்பி அந்த ஜலத்துடன் சேர்ந்த எண்ணெயை வழித்து உடம்பிற்கு தடவிக் கொள்வார்கள். இப்படிப் பலமுறை செய்வதால் அச்சிறிது எண்ணேயே உடம்பு முழுவதுக்குமாக ஆகி விடும். பிறகு சிக்கனமாக சிறிது சிறிதாக உடம்பிற்கு ஜலம் விட்டுக் கொண்டு வழக்கமாக உபயோகிக்கும் குடிகூரா ஸ்நான சோப்பை கையில் கொஞ்சமாகத் தடவி அதை உடம்பில் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய் வார்கள். எண்ணெய், சோப்பு, ஜலம் எல்லாவற்றிலுமே நாம் ஆச்சரியப்படும் வகையில் அவர் சிக்கனத்தை கையாளுவதே ஒரு கலேயாகும். எல்லோராலும் 'நாயனு' என்றழைக்கப்பட்ட காவ்யகண்ட கணபதி முனிவர் ஒருமுறை பலாக்கொத்தில் தங்கியிருந்தார். ஸ்ரீ பக வான் ஒருநாள் வழக்கம்போல் பகல் ஆகாரம் முடிந்து 12 மணிக்குப் பலாக்கொத்துப் பக்கம் சென்ருர்கள். நாயனு நோட்டு தைக்க வேண்டிய பேப்பர்களே அளவாக கத்தரித்தது போக மீதமிருந்த கையகலமுள்ள நீண்ட துண்டுப் பேப்பர்களே கீழே போட்டிருந்தார். அதைக் கண்ட ஸ்ரீ பகவான் அவற்றை ஒரு சிறு நோட்டாகத் தைத்து ஏதாவது எழுதலாமே என்று சொன்னுர்கள். அவ்வாறே தான் செய்வதாக விசுவநாதசுவாமி அவைகளே ஒழுங்காகச் சேர்த்து ஒரு சிறு நோட்டாகத் தைத்து மேலுக்கு அட்டையும் போட்டு அதில் ஒரு ஸ்தோத்தி ரத்தை எழுதி வைத்தார். ஸ்ரீ பகவானுக்கு அந்த சிரமம் வேண்டாமென்றே அவர் அவ்வாறு செய்தார். ஸ்ரீ பக வான் அந்த நோட்டைப் பார்த்து "நான் எண்ணிய வாறே நீ அதை உபயோகப்படுத்தினுய்" என்று கூறி சந்தோஷித்தார்கள். எச்சிறு பொருளேயும் வீணுகாமல் பயன்படும்படி செய்யும் ஸ்ரீ பகவானின் திறன்மிகு செயலே எண்ணி வியந்தார் முனிவர். எல்லாம் இருந்தும் ஏது

மின்மையராக இருந்து எல்லோருக்கும் சிக்கனத்தின் அவசியத்தை குறிப்பால் உணர்த்துவார்கள்.

7. நடைமுறை

ஸ்கந்தாஸ்ரமத்தில் ஸ்ரீ பகவானின் அன்னையார் காலை 4-மணிக்கு விழித்தெழுந்து தோத்திரப் பாடல்களைச் சொல்ல ஆரம்பிப்பார்கள். ஸ்ரீ பகவான் படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருப்பார்கள். நாங்களும் தியானத்தில் அமர்ந்திருப்போம். 5-மணிக்கு ஸ்ரீ பகவான் வெளியில் சென்று அரை மணி நேரத்தில் திரும்புவார்கள். உடனே நாங்கள் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் துவங்கி 6 மணிக்கு முடிப்போம். அதன் பிறகு ஸ்ரீ பகவான் எழுந்து ஸ்நானத்திற்குப் போவார்கள். நாங்களும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு 8-மணிக்கு ஸ்ரீ பகவானுடன் ஆகாரம் சாப்பிட அமர்வோம். காலை 4-மணிக்கு சாமா அய்யர் எழுந்து குளித்து, காலை ஆகாரமாகிய பருப்பு ரசமும், சாதமும் தயாரித்து வைத்திருப்பார். எங்களுக்கு அவரும் ராமநாத பிரம்மச்சாரியுமாகப் பரிமாறுவார்கள். உணவு முடிந்ததும் ஸ்ரீ பகவான் தாழ்வாரத்தில் உள்ள தன் ஆசனத்தில் அமர்ந்திருப்பார்கள். சில பக்தர்கள் ரிபுகீதை முதலிய கிரந்தங்களைப் படிப்பதும் தியானம் செய்வதுமாக அமைதியான சூழ்நிலை இருக்கும். சில சமயங்களில் அன்பர்களின் சந்தேகங்களுக்கு ஸ்ரீ பகவான் விடையளிப்பார்கள்.

8. தூர தரிசனம்

ஸ்ரீ பகவான் காலை 6-மணிக்கு பாராயணம் முடிந்து எழுந்ததும் ஸ்கந்தாஸ்ரமத்தில் இப்பொழுது கிழக்குப் பக்கத்தில் கட்டியிருக்கும் கைப்பிடிச்சுவர் இருக்குமிடத்தில் முன்பு அகலமான ஒரு கல் இருந்தது. அதில் பற்

பொடியும் ஜலமும் வைத்திருப்போம். ஸ்ரீ பகவான் எவ்வளவு பனியாக இருந்தாலும் குளிராக இருந்தாலும் அந்தக் கல்லின்மீது உட்கார்ந்துதான் பல் துலக்குவார்கள். காலையில் இளஞ்சூரியனின் ஒளிபட்டு ஸ்ரீ பகவானது தங்கத் திருமேனி பிரகாசிக்கும். அதிகப் பனியாய் இருக்கும் போது அங்கு வேண்டாமென பக்தர்கள் கேட்டுக் கொண்டாலும் ஸ்ரீ பகவான் அங்கேயே தான் உட்காருவார்கள். அதற்கான காரணம் பிறகுதான் புரிந்தது. ஸ்ரீ அண்ணுமலையார் கோவிலுக்கு வடபுறமுள்ள பெரிய தெருவில் சௌபாக்யத்தம்மாள் என்ற வயது முதிர்ந்தவர் இருந்தார்கள். அந்த அம்மையாரும் மற்றும் சில முதியவர்களும் தினந்தோறும் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளையும் ஸ்ரீ பகவானையும் தரிசிப்பதற்கு முன் ஆகாரம் சாப்பிடுவதில்லை என்ற நியமத்தோடு இருந்தார்கள். அவர்களெல்லாம் தினம் மலையேறி வந்து ஸ்கந்தாஸ்ரமத்தில் ஸ்ரீ பகவானை தரிசித்துப்போவது வழக்கம். ஒரு நாள் சௌபாக்யத்தம்மாள் வரவில்லை. தினந்தோறும் தன்னை நாடிவரும் அன்பர் கூட்டத்தில் யாராவது ஒரு அன்பர் வரவில்லை என்ருலும் ஸ்ரீ பகவான் கவனித்து அவர்களுக்கு என்ன நலக் குறைவோ என விசாரிப்பார்கள். அதுபோலவே சௌபாக்யத்தம்மாளைக் குறித்தும் நினைத்துக் கொண்ட ஸ்ரீ பகவான் மறுநாள் அவர்களைப் பார்த்து "ஏன் நேற்று வரவில்லை" எனக் கனிவுடன் கேட்டார்கள். அதற்கு அந்த அம்மாள் "நேற்று பகவானை தரிசித்தேனே" என்ருர்கள். ஸ்ரீ பகவான் "நேற்று தான் நீங்கள் வரவில்லையே" என, அந்த அம்மையார் "என் தள்ளாமையை அறிந்து என் வீட்டிற்கருகிலிருந்தே தரிசிக்கும் பாக்கியம் அளித்தீர்களே" எனக்கூறி, ஸ்ரீ பகவான் பல் துலக்கும் இடத்திலிருந்து காக்ஷி அளித்ததையும் தன்ஞல் தினந்தோறும் மலை ஏறிவருவது இயலாததால் இனி கீழிருந்தவாறே தரிசனம் செய்யப் போவதாகவும் கூறினர். அன்றிலிருந்து எந்த சிரமத்தையும் பொருட்

படுத்தாமல் அக்கல்லின் மேலேயே அமர்ந்திருந்து பல் துலக்குவது வழக்கமாகியது. மற்ற வயதானவர்களுக்கும் அது சௌகரியமாக அமைந்தது.

9. தூய்மைத் துறவியர்

சபாபதிஸ்வாமி என்பவர் அடிக்கடி ஸ்கந்தாஸ்ரமம் வந்து தங்குவார். சுத்த சைவம். நிறைய சாஸ்திரங்கள் படித்துத் தெளிந்தவர். ஸ்ரீ பகவானின் அன்னையாருக்கு அவரிடம் அதிக பிரியம். சைவமாதலால் தனக்கு உதவியாகச் சில வேலைகள் செய்ய அவரை அனுமதிப்பார்கள். அவருடனேயே எப்பொழுதும் ஒன்ருக இருப்பவர் நாராயணஸ்வாமி எனும் மௌனஸ்வாமி. இருவரும் ஆஸ்ரமத்தில் மட்டுந்தான் பந்தியில் உட்கார்ந்து சாப்பிடுவார்கள் பகவத் பிரஸாதம் என்பதற்காக. மற்ற சமயங்களிலெல்லாம் கைபிக்ஷை எடுத்துச் சாப்பிட்டு வந்தார்கள். ஒரு நாள் ஆஸ்ரமவாசிகள் யாவரும் உணவருந்தி முடிந்த சமயம் ஸ்ரீ பகவான் வெளியிற் சென்று வந்தார்கள். சபாபதி ஸ்வாமியும், நாராயணஸ்வாமியும் அப்பொழுதுதான் வந்தவர்கள், அடியார்களின் உச்சிஷ்ட விசேஷத்தை நினைத்து சாப்பிட்ட இலைகளிலிருந்து மிஞ்சியவற்றை சேர்த்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்டதும் ஸ்ரீ பகவான் "அம்மா, இங்கு வந்து பார்" என்ருர்கள். அன்னையாரும் வந்து பார்த்தார்கள். ஸ்ரீ பகவான், "பார்த்தாயா, உன் சைவப் பிள்ளையின் ஆசாரத்தை" எனக் கூறிச் சிரித்தார்கள். ஆனுலும் அவ்விருவருடைய விகற்பமற்ற துறவு மனப்பான்மையைப் பார்த்து மகிழ்ந்தார்கள். சபாபதிஸ்வாமி தன்னிடம் இருப்பதை யார் கேட்டாலும் உடனே கொடுத்து விடுவார். அதுபோல் தான் உடுத்திக்கொள்ள வைத்திருந்த வேஷ்டியைக் கேட்டவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அன்னையாரிடம் எனக்கு மாற்று வேஷ்டி வேண்டும், கொடுங்கள்

எனக் கேட்டார். அன்னையார், "என்னிடம் ஏது வேஷ்டி" எனச் சொன்னதும். இல்லாவிடில் உங்கள் நார்மடிப் புடவையிலிருந்து நாலு முழம் கிழித்துக் கொடுங்கள் என்ருர். சபாபதி ஸ்வாமியின் அன்பையும் உரிமையையும் கண்ட அன்னையார் அவ்விதமே தன் புடவையிலிருந்து கிழித்துக் கொடுத்தார்கள். இவ்விருவரும் இருந்த காலத்தில் வெட்டவெளிப் பழனிஸ்வாமி என்பவரும் இருந்தார். "எங்கிருந்து வருகிறீர்கள்" எனக் கேட்டால் "வெட்டவெளியிலிருந்து" வருகிறேன் என்பார். ஆகவே, அதுவே அவருக்குப் பெயராகியது. அவர் ஸ்ரீ பகவான் பேரில் ஒரு பாட்டு எழுதியிருந்தார். சீவனை வந்தவனை சிவனைகச் செய்தார் என்ற பாவத்தில் எழுதினர். இம்மூவரும் ஸ்ரீ பகவானின் அடியார்கள் பலரில் முற்றும் துறந்த உத்தமத் துறவிகளாவர்.

10 காவிய கண்டரும் ஸ்ரீ ரமண கீதையும்

காவியகண்ட கணபதி முனிவரை யாவரும் 'நாயன' என்றழைப்பது வழக்கம். அவரும் அவர் மனைவி விசாலாக்ஷியம்மாளும் மலையிலுள்ள மாமரத்துக் குகையில் தங்கிக் கொண்டு தினமும் மாலையில் ஸ்கந்தாஸ்ரமம் வந்து ஸ்ரீ பகவானை தரிசித்து விட்டு தாம் எழுதிய "உமாஸஹஸ்ரம்" முதலிய நூல்களைப் படிப்பதும் அங்குள்ளவர்களுக்கு அர்த்தம் சொல்லுவதும், தியானம் செய்வதுமாக இருந்து இரவு சாப்பிட்டுவிட்டு மாமரத்துக் குகைக்குத் திரும்புவார்கள். அப்படி இரவு நேரத்தில் போகும்போது அவர்களுடன் நானும் விளக்குடன் சென்று அவர்களை அங்கே விட்டுவிட்டு ஆஸ்ரமம் திரும்பி விடுவேன். ஒருநாள் வழக்கம்போல் துணையாக அவர்களுடன் சென்றபோது அங்கு எச்சம்மாள் தங்கை வேணு அம்மாள் என்னை நோக்கி, "குழந்தே! இன்றைக்கு பௌர்ணமியாச்சே, நாயன எல்லோருக்கும் மந்திரோப

தேசம் செய்வார். நீயும் உபதேசம் வாங்கிக்கோ'' என்ருர்கள். அதற்கு நான் “எனக்கு முன்பே ஈஸ்வர ஞலும் ஸ்ரீ பகவாஞலும் மந்திரோபதேசம் ஆகிவிட்டது'' என்று கூறிவிட்டுத் திரும்பினேன். ஸ்ரீ பகவானிடம் அன்பர் பலர் தம் மனம் தெளிவுபெற வேண்டிக் கேட்ட கேள்விகளுக்கு ஸ்ரீ பகவான் விடையளித்தவைகளை வட மொழியில் “ரமண கீதை'' என்ற தலைப்பில் நாயஞ எழுதியுள்ளார்கள். ஸ்ரீ பகவானை மஹரிஷி என உலகிற்கு அறிவித்தவரும் நாயஞ தான். அவர் மந்திர ஜபத்திஞலும், தவ வலிமையினுலும் எல்லா காரியங்களையும் சாதிக் கலாம் என்ற திடமான நம்பிக்கை உள்ளவர். லலிதா சஹஸ்ர நாமத்தை ஒரு நாளைக்குப் பலமுறை பாராயணம் செய்வார். சிவ பஞ்சாக்ஷரியை சதா விரலில் எழுதிக் கொண்டே இருப்பார். லலிதா சஹஸ்ரநாமம் சொல்லி முடிந்ததும் சில சமயம் வெளியில் வந்து நிற்பார். எந்த மாதமாஞலும் அவர் உடம்பில் மழைத்துளிகள் விழுந்தி ருக்கும். இது அம்பாள் பிரசாதமென்று சொல்லி மகிழ் வார். பக்கத்தில் உள்ள நம்மீது ஒரு துளியும் படாது. அவரிடம் இன்னும் எவ்வளவோ மகிமைகள் இருந்தன. ஒரு சமயம் குண்டலினி சக்தி கிளம்பி தாங்க முடியாத லஹரியும், சூடும், எரிச்சலும் உண்டாகி மாமரத்துக் குகையில் இருந்தபோது ஸ்ரீ பகவான் வந்து தன்னைத் தொட்டால் சாந்தமாகும் என்ருர். சாதாரணமாகப் பிரதக்ஷிணம் தவிர வேறெங்கும் ஸ்ரீ பகவான் போவ தில்லை. அன்று அவர்கள் அதிர்ஷ்டம் ஸ்ரீ பகவானும் நாங்களும் பிரதக்ஷிணம் போயிருப்பதறிந்து அவர் மனைவி, மகன் மகாதேவன் முதலியவர்கள் ஸ்கந்தாஸ் ரமம் செல்லும் மூன்று படிக்கட்டு வழிகளிலும் நின்று ஸ்ரீ பகவானை எப்படியாவது மாமரத்து குகைக்கு அழைத் துச் செல்லக் காத்திருந்தார்கள். ஸ்ரீ பகவான் அவ்விடம் வந்ததும் அழைத்துச் சென்று நாயஞ அருகில் அமரச் செய்தார்கள். நாயஞ தம் சிரசில் எங்களையெல்லாம்

கைவைத்துப் பார்க்கச்சொன்னார். அப்படிச் செய்த போது பொறுக்க முடியாத சூடும், சிரசின் வழியாகப் பிராணன் வருவதும் தெரிந்தது. பிறகு தம் தலையில் கைவைத்து ஆசீர்வதிக்கும்படி ஸ்ரீ பகவானைப் பிரார்த் தித்து, ஸ்ரீ பகவானின் கரத்தை அவரே தம் சிரசின்மேல் எடுத்து வைத்துக் கொண்டார். சிறிது நேரம் அமைதி யாக இருந்துவிட்டு, "எல்லாம் சரியாகப் போகும்" என்று சொல்லி ஸ்ரீ பகவான் புறப்பட்டார்கள். நாயனாவுக்கும் அப்பொழுதே சாந்தி கிடைத்தது. ஸ்கந்தாஸ்ரமம் திரும்பும் வழியில் ஸ்ரீ பகவான் "அவர் என்னிடம் சொன்னார், நான் யாரிடம் சொல்வது" என்றார்கள். உடன் ஒரு பக்தர் "பகவானுக்கும் இப்படி இருந்ததா' 'நின்னெரி எரித்தென்னை நீருக்கிடுமுன் நின்னருள் மழை பொழி' என்றது அதுதானா?" என்று கேட்க ஸ்ரீ பகவான் புன்முறுவலுடன், "ஊம், ஊம்," என்றார்கள்.

11. சக்தியும் சாந்தமும்

ஸ்ரீ பகவானின் பெருநிலையைக் கண்டு மஹரிஷி எனப் போற்றிப் பணிந்த காவியகண்ட கணபதி முனி வரிடம் பக்தரொருவர் ஸ்ரீ பகவானின் மகிமையைக் குறித் துச் சொல்லும்படி கேட்டபோது அவர் கூறினதாவது :— "சாதனையில் ஈடுபட்டு மேல் நிலைக்குச் சென்றவர்களுக்கு சக்தி, சாந்தம் என இருவித அனுபவம் உண்டாகும். அந்த சக்தி வந்ததும் அவர்கள் திக் விஜயம் செய்வது, பல நூல்கள் எழுதுவது, தன்னை மறந்து ஆடல் பாடு களில் ஈடுபடுவது போன்ற செய்கைகளால் அவர்கள் சக்தி வெளிப்படும். புத்தர் தவம் செய்து சக்தி பெற்ற காலத் தில்தான் மதஸ்தாபனம் செய்தார். ஸ்ரீ ஆதி சங்கரரை திக் விஜயம் செய்வித்ததும் பிரம்ம சூத்ர பாஷ்யம் முதலான கிரந்தங்கள் இயற்றுவித்ததும், ஷண்மதஸ்தா பனம் செய்வித்ததும் சக்தியின் மகிமையே ஆகும். ஸ்ரீ மத்

விவேகானந்த சுவாமிகள் சிகாகோ சென்று ஞான வீர முழக்கம் செய்தது, மீராபாய், துக்காராம், சைதன்யர் போன்றவர்கள் ஆடல் பாடல்களில் தம்மை மறந்தது ஆகியவை இந்நிலேயிலேதான். மற்றும், அவதார புருஷர் களானாலும் குரு இல்லாமல் தெளிவு உண்டாகாது என் பதும் அறிந்ததே. ஆனல் ஸ்ரீ பகவானே எல்லாவற்றிற்கும் மேலாக சக்திகளே வெளிக்காட்டாமலும், செலவழிக்கா மலும் உள்ளடக்கிக் கொண்டு மலேயை விழுங்கிய மகாதேவனுக இருக்கிருர்கள்" என வியந்து நாயனு கூறினுர். "அசல வுருவில் அச்சுத்தி ஒடுங்கிட ஓங்கும் அருணுசல மென்றறி" என்ற ஸ்ரீ பகவானின் திருவாக் குக்கு ஸ்ரீ பகவானே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கு கிருர்கள். ஸ்ரீ பகவானின் எதார்த்த ஸ்வரூபமும் அதுவே. சகல சக்திகளேயும் அடக்கிப் பரமசாந்தி நிலேயே தாஞ யிருக்கும் மஹான்களுடைய பெருமையை அளவிட முடி யாது.

12. யாழ்ப்பாணியின் திருத்தொண்டு

அமிர்தானந்தர் என்பவரால் ஸ்ரீ பகவானின் பெரு மைகளேக் கேள்விப்பட்டு ஸ்ரீ பகவானே தரிசிக்க வந்த யாழ்ப்பாணி ஒருவர் இங்கு ஸ்கந்தாஸ்ரமத்திலேயே தங்கி விட்டார். அவருக்கு ஏதாவது கைங்கர்யம் செய்து கொண்டே இருக்கவேண்டுமென்பது எண்ணம். தரை யில் ஒரு இலே, குப்பை இல்லாமல் பொறுக்கி விடுவார். பல இடங்களில் அலேந்து பசுஞ்சாணம் கொண்டு வந்து மண் உள்ள இடங்களிலெல்லாம் கரைத்துத் தெளித்து பெருக்கி சுத்தம் செய்வார். மெழுகின தரைபோல் பளிச் சென்றிருக்கும். சில சமயங்களில் ஸ்கந்தாஸ்ரமத்தி லிருந்து கீழே ஊருக்குள் செல்பவர் ஓரிரு தினங்கள் தங்கிவிட்டும் வருவார். அந்த நேரங்களில் கீழே விழுந்து கிடக்கும் இலே, சருகுகள் முதலிய குப்பைகளேப் பார்க்கும்

போது ஸ்ரீ பகவான் "ஒகோ! யாழ்ப்பாணி இங் கில்லையோ" எனக் கேட்பதுண்டு. ஒரு நாள் பசுஞ் சாணத்தைக் கெட்டியாக நிறையத் தெளித்திருந்தார். கால்களில் ஒட்டும்படியாக இருந்தது. இதைக்கண்ட பெருமாள்ஸ்வாமிக்கு கோபம் வந்து விட்டது. "இந்த யாழ்ப்பாணி சும்மா இருக்காமல் சாணியைப் போட்டு எல்லா இடங்களையும் பாழ் செய்கிறார். இனி இங்கு அவருக்கு சாப்பாடு போடவேண்டாம்" என இரைந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் யாழ்ப்பாணியைக் காணவில்லை. பிறகு அவர் தென்னை மரத்தில் ஏறி உட்கார்ந்திருப்பதைப் பார்த்த பெருமாள்ஸ்வாமி அவரைக் கீழே இறங்கும்படி சொன்னார். இதைக் கேட்ட யாழ்ப்பாணி பதிலேதும் சொல்லாமல், மரத்திலிருந்த இளநீர்க் காய்களைப் பறித்து அங்கேயே உடைத்துக் குடிக்க ஆரம்பித்தார். பெருமாள் ஸ்வாமி ஒன்றும் சொல்ல இயலாமல் இருந்துவிட்டார். நாங்களும் கூப்பிட்டுப் பார்த்தோம். எதற்கும் அசைய வில்லை. பகல் சாப்பாட்டிற்கு எல்லோரும் அமர்ந்தோம். ஸ்ரீ பகவான் எல்லோரையும் பார்த்துவிட்டு "யாழ்ப்பாணி எங்கே" என்றார்கள். அவர் தென்னை மரத்தில் ஏறி உட்கார்ந்திருப்பதாகச் சொன்னோம். ஸ்ரீ பகவான் ஏன் என்று கேட்டதற்கு, பெருமாள்ஸ்வாமி கோபித்துக் கொண்டதைக் கூறினோம். உடனே ஸ்ரீ பகவான் எழுந்து வந்து அவரைப் பார்த்து "என்ன யாழ்ப்பாணி! சாப்பிடவேண்டாமா?" எனக் கேட்டதும் சாதுவாக இறங்கி வந்து விட்டார்.

13. ரிஷிகேசத்தில் ஸ்ரீ ரமணாஸ்ரமம்

ஒரு சமயம் அமிர்தானந்தர் ரிஷிகேசம் முதலான இடங்களுக்கு யாத்திரை சென்றுவிட்டு ஆஸ்ரமம் வந் திருந்தார். கோவிந்தகிரி என்பவர் ஸ்ரீ பகவானை தரிசித் துச் சென்றவர் ரிஷிகேசத்தில் ஸ்ரீ ரமணாஸ்ரமம் ஒன்று

நிறுவி பல சாதுக்களுடன் சாதனைகள் பயின்று வந்தார். அமிர்தானந்தர் அந்த ரமணாஸ்ரமத்திற்கும் சென்று வந்தார். ஒரு நாள் ஸ்ரீ பகவான் அமிர்தானந்தாரிடம் ஒரு குறிப்பிட்ட புத்தகத்தின் பெயரைச் சொல்லி "அது உங்களிடம் உள்ளதா" எனக் கேட்டார்கள். அமிர்தானந்தர் எப்பொழுதும் தன்னிடம் வைத்திருந்த அந்த புத்தகத்தை ரிஷிகேசம் ரமணாஸ்ரமத்தில் வைத்து வந்து விட்டதாகக் கூறினார். மறுநாள் யாழ்ப்பாணியைக் காணவில்லை. அவர் நினைத்தால் திடீரென்று எங்காவது சென்று விடுவார். அந்தக் காலத்தில் அவருடைய கோலத்தைப் பார்த்து ரயிலிலும் பயணச்சீட்டு கேட்பதில்லை. பின்னர் ஒரு நாள் ஸ்ரீ பகவான் கேட்ட புத்தகத்துடன் வந்து நின்றார். யாவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அமிர்தானந்தர் புத்தகத்தை ரிஷிகேசத்தில் வைத்து விட்டதாகக் கூறக் கேட்டவர் உடனே புறப்பட்டு ரிஷிகேசம் சென்று புத்தகத்துடன் திரும்பி விட்டார். என்னே அவரது குருபக்தி! அவருடைய கைங்கரியத்தின் பெருமையே பெருமை! ஸ்ரீ அன்னையாரை பாலிதீர்த்தக் கரையில் சமாதி வைத்த பிறகு அங்கு பூஜைக்கென்று முதன்முதல் அரளிச்செடி பதியன் வைத்தவர் அவர்தான். பிறகுதான் அது நந்தவனமாக விரிவடைந்துள்ளது. சில காலம் கழித்து யாத்திரை சென்ற இடத்தில் யாழ்ப்பாணி சமாதியாகி விட்டார். அவர் சமாதியான செய்தியறிந்த ஸ்ரீ பகவான் அவரைக் குறித்து, "அவர் பெரிய சித்தராயிற்றே" என்றவர்கள் அவரைப்பற்றிய ஓர் சம்பவத்தையும் சொன்னார்கள்.

14. கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணத்தில் ஒருமுறை மழையில்லாமல் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது அமிர்தானந்தர் யாழ்பாணத்தில் உள்ள ஒரு சிறு காட்டின் மத்தியில்

உள்ள மாரியம்மன் கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்து ஏழைகளுக்கு அன்னதானமும் செய்தால் சுபிட்சம் உண்டாகுமெனத் தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளை செய்து கும்பாபிஷேகத்திற்கு முதல்நாள் மாலேயே, அதற்கான ஏற்பாடு எலுமிச்சம்பழம், இளநீர், வெல்லம் முதலிய பொருட்களை கொண்டு வந்து கோவிலுக்கு அருகில் சேகரித்து வைத்து, அதற்கு யாழ்ப்பாணியை பாதுகாவலாக நியமித்துவிட்டுச் சென்றூர். அன்று இரவே பக்கத்து கிராமங்களிலுள்ள ஏழை ஜனங்கள் யாவரும் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாகக் கூடி விட்டார்கள். முன்னிரவு தாண்டியது. அப்பொழுது கடுங்கோடை காலமாதலால் அங்கு கூடியிருந்த அனைவரும் தாகத்தால் தவித்தனர். குழந்தைகள் அழ ஆரம்பித்தனர். இதைக் கண்ட யாழ்ப்பாணி ஒரு பெரிய அண்டாவில் இளநீரை உடைத்து ஊற்றி, எலுமிச்சம் பழங்களைப் பிழிந்து, இருந்த வெல்லத்தையும் போட்டு நிறைய ஜலத்தை விட்டுக் கரைத்து அங்கிருந்த அனைவருக்கும் வழங்கி அவர்கள் தாகத்தைத் தணித்தார். ஏழைகளின் வயிறும் மனமும் குளிர்ந்தது. மறுநாள் விடியற்காலே அமிர்தானந் தரும் மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள். நிறைய இளநீர் மட்டைகளையும் எலுமிச்சபழத் தோலேயும் கண்ட அமிர் தானந்தர், "ஈதென்ன, யாழ்ப்பாணி" எனக் கேட்க, அவர் "நீங்கள் செய்ய வேண்டிய கும்பாபிஷேகத்திற்கு தேவையான சில இளநீரும், எலுமிச்சம்பழமும் இதோ இருக்கின்றன. மற்றவைகளை இரவே கும்பாபிஷேகம் நடத்தி விட்டேன்" என்று இரவு நடந்ததை சொல்லி "மக்கள் பூஜையே மஹேச்வர பூஜையல்லவா" என்ருர். அவர் செய்கையின் உயர்வைக் கண்டவர்களால் ஒன்றும் சொல்ல முடியவில்லே. "அப்பேர்ப்பட்ட மனப்பக்குவம் உள்ளவராயிற்றே அவர்" என ஸ்ரீ பகவான் மிக சிலாகித்துக் கூறினுர்கள்.

15. ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகளின் திரிகால ஞானம்

நான் ஸ்கந்தாச்ரமம் வந்து சில வாரங்கள் சென்றன. கண்ணம்மாள் வீட்டிலிருந்து தினமும் ஆகாரம் எடுத்துவரும் ஆள் உடல் நலக்குறைவால் வர இயலாததால் பெருமாள் ஸ்வாமி என்னைப் போய் சாப்பாடு எடுத்து வரும்படி சொன்னார். நானும் அவர்கள் வீட்டிற்கு சென்று ஒரு பெரிய பித்தளைத் தூக்குப் பாத்திரத்தில் கொடுத்ததை எடுத்துக் கொண்டு வரும் வழியில் சிலர் கூட்டமாக ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகளை தரிசிக்க அவர்களைத் தொடர்ந்து போவது தெரிந்தது. நானும் அவர்களுடன் சென்றேன். ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் அன்ன சத்திரத்தின் பின்புறமுள்ள ஒரு திண்ணையில் போய் அமர்ந்தார்கள். நான் அப்பொழுதுதான் முதன்முறையாக ஸ்வாமிகளை தரிசித்தேன். அவ்விடத்தில் சடைச்சியம்மாள் என்னும் பெண் துறவி, அவருக்குத் தாயினும் பரிந்து மிரட்டி உணவருந்தச் செய்தார்கள். அவர் ஏதேதோ பேச்சுகளுக்கிடையில் "கிடாரங்காய் ஊறுகாய் நிறையப் போட்டாள், சாதுக்களுக்கெல்லாம் கொடுத்தாள் மோக்ஷத்திற்குப் போய்விட்டாள்" என்றும் இன்னும் பல பேசினார். நான் ஆச்ரமம் திரும்பிப் போனதும், ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளைத் தரிசித்ததும், அவர் பேசியதையும் சொன்னேன். ஸ்ரீ பகவானும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு சாப்பாட்டு நேரத்தில் அந்தத் தூக்குப் பாத்திரத்தில் பார்த்தால் எல்லோருக்கும் நாலைந்து நாட்களுக்குத் தேவையான அளவு நிறைய கிடாரங்காய் ஊறுகாய் இருந்தது. அதைக்கண்ட ஸ்ரீ பகவான் "ஒகோ இதைத் தெரிந்து தான் அவர் சொல்லியிருக்கிறார்" என்றார்கள்.

16. கோபால்ராவும் தியான ஹாலும்

மற்றும் சில மாதங்கள் சென்று கோபால்ராவ் என்பவர் வந்தார். மிகச் சுறுசுறுப்பானவர். அவர் வந்து ஒரு

வாரம் கழித்து தாம் ஏதாவது கைங்கரியம் செய்யவேண்டு மென்ற எண்ணத்தில், சாமா அய்யர் வழக்கம் போல் காலை 4 மணிக்கு எழுந்திருக்கு முன்பே ஒரு நாள் தாம் எழுந்து ஸ்நானம் செய்து அந்த நாளைய காலை உணவா கிய சாதமும் பருப்பு ரசமும் தயார் செய்து வைத்துவிட்டு எப்பொழுதும் போல் எங்களுடன் பாராயணத்தில் கலந்து கொண்டார். சாமா அய்யர் என்றும் போல் அன்றும் எழுந்து குளித்து சமையலறைக்குள் சென்றார். அங்கு சுடச்சுட சாதமும் பருப்ப ரசமும் தயாராக இருப்பதைக் கண்டு யார் செய்தது என்று புரியாமல் நாங்கள் பாராய ணம் செய்து கொண்டிருக்கும் இடத்திற்கு வந்து விசாரித் தார். எங்களுக்கு ஒன்றும் புரியாததால் பேசாமல் உட் கார்ந்திருந்தோம். அங்கிருந்தவர்களில் கோபால்ராவ் ஒருவர் தான் பிராமணர். ஆகையால், அவரைக் கேட்ட தற்கு 'ஆம்' என்றார். அன்று ரசம் வெகு அற்புதமாக இருந்தது. கோபால்ராவிடம், நீங்களே தினமும் ரசமும் சாதமும் செய்துவிட்டால் மற்ற வேலைகளை சாமா அய்யர் கவனித்துக் கொள்வார். அவருக்கும் உதவியாக இருக்கும் என்றோம். அவரும் அவ்விதமே செய்து வந்தார். ஸ்கந் தாச்ரமத்திலிருந்து ஸ்ரீ பகவான் நிரந்தரமாக கீழே வந்த பிறகும் அவர் எங்களுடனே இருந்து தம்முடைய சுறு சுறுப்பாலும் புத்தி கூர்மையாலும் ஆச்ரம நிர்வாகத்தை ஏற்று நடத்தி வந்தார். இப்பொழுது ஆச்ரமத்திலுள்ள பழைய ஹால் கட்டக் காரணமானவரும் அவர் தான். சில வருஷங்கள் ஆச்ரமத்தில் இருந்துவிட்டு பிறகு ஸ்ரீ அண்ணா மலையார் ஆலயத்திலுள்ள மூலை மண்டபத்தில் ஸ்ரீ ஈச்வர சுவாமிகளுடன் "பிரம்மச்சாரி ஆச்ரமம்" என ஒன்று நடத்தி வந்தார். தினமும் பிக்ஷையெடுப்பதும் ஸ்ரீ பக வானை தரிசிப்பதுமாக இருந்து வந்தார். விசுவநாத ஸ்வா மிகள், ராமநாத பிரம்மச்சாரி முதலியவர்களும் அங்கு தங்கியிருந்தார்கள். அதன் பிறகு அருணையிலேயே கதர் கடை நடத்தி, கதர் தொண்டில் ஈடுபட்டிருந்து ஸ்ரீ பகவா

ளேயும் தரிசித்து வந்தவர் கடைசியாக ஈரோட்டில் தங்கி யிருந்து தமது 76-வது வயதில் இயற்கை எய்தினுர்.

17. ஸ்ரீ பகவானது மெய்காவலர்

சிப்பாய்ஸ்வாமி என்பவர் ராணுவத்தில் சிப்பாயாக இருந்து பிறகு சொந்த ஊராகிய வாணியம்பாடியில் மணி யகாரராக இருந்தவர். நான் ஸ்ரீ பகவானிடம் வருவதற்கு முன்பே அவர் ஸ்கந்தாச்ரமம் வந்து தங்கிச் சென்று கொண்டிருந்தார். பிறகு நிரந்தரமாக இங்கேயே தங்கி விட்டார். தான் ஸ்ரீ பகவானுக்கு மெய்காப்பாளனுக இருப்பதாக அவருக்கு ஒரு எண்ணம். அதன் காரணமாக காலேயில் எழுந்து ஸ்நானம் செய்து சிப்பாய்போல் உடை யணிந்து கையில் துப்பாக்கி போல் தடியை வைத்துக் கொண்டு ஸ்ரீ பகவானுக்கு ராணுவ முறையில் வணக்கம் செலுத்தி விட்டு ஸ்கந்தாச்ரம வாசலில் நின்று கொண் டிருப்பார். எப்படிப்பட்ட விருந்தாலுைம் பந்தியில் உட் கார்ந்து சாப்பிடமாட்டார். எஜமானருடன் சேர்ந்து சாப்பிடக்கூடாது என்ற மரியாதையே அதற்குக் காரணம். ஆகையால் இலேயில் ஆகாரத்தை வாங்கிக் கொண்டு வெளியில் தனியாக உட்கார்ந்து சாப்பிடுவார். ஸ்ரீ பகவா னின் தாயார் அடைந்து மலேயடிவாரத்தில் சமாதிவைத்து சிலநாள் கழித்து, சிப்பாய்ஸ்வாமிக்கு ஸ்ரீ பகவான் உலக யாத்திரை புறப்படப் போவதாக ஓர் தோற்றம் உண்டா யிற்று. அதற்கு முன்னேற்பாடாக தன் கையில் உள்ள பணத்தையெல்லாம் போட்டு பத்துக்கு மேற்பட்ட குதிரை களே வாங்கி அவைகளே ஓட்டிக் கொண்டு ஒரு நாள் மலே மேல் வந்து சேர்ந்தார். இதைக் கண்ட நாங்கள் கார ணம் கேட்டு தெரிந்து கொண்டு ஸ்ரீ பகவானிடம் அறிவித் தோம். ஸ்ரீ பகவானும் வந்து குதிரைகளேப் பார்த்துவிட்டு இவைகளெல்லாம் பாறைகளில் ஏறிவர மிகச் சிரமப்பட்டி ருக்குமே என வருந்தினுர்கள். பிறகு அவைகளுக்கு மலே மேல் ஏற வசதிப்படாதாகையால் கீழே தாயார் சமாதி

இருக்குமிடத்தில் போய் இருக்கட்டும் என்ருர்கள். அவ ரும் கீழே ஓட்டி வந்து நிறுத்தி விட்டு சமாதியிருந்த கொட்டகையில் தங்கியிருந்த ஸ்ரீ நிரஞ்சனுனந்த ஸ்வாமி களிடமும், ஸ்கந்தாச்ரமத்திலுமாக சாப்பிட்டு இருந்து வந்தார். சரியான கவனிப்பும் ஆகாரமும் இல்லாமல் சில குதிரைகள் காணுமல்போயும் வேறு விதத்திலும் போனது போக மீதியிருந்த குதிரைகளேயும் காப்பாற்ற முடியாமல் விற்றுவிட்டார். அவர் உடல் நிலேயும் சீர்கேடடைந்து வந்தது. வாணியம்பாடியில் மணியக்காரராக இருந்த அவரது மகன் வந்து அழைத்துப் போனுர். ஊர் போய்ச் சேர்ந்த சில நாள் கழித்து சிப்பாய்ஸ்வாமி சமாதியாகிவிட் டார். அவருடைய மறைவை அறிந்த ஸ்ரீ பகவான் அன் ஞரின் குணுதிசயங்களேயும் ஏக பக்தியையும் குறித்து எங்களுக்கு பெருமிதமாகச் சொன்னுர்கள்.

18. ஸ்ரீ நாராயண குரு விஜயம்

ஸ்ரீ நாராயணகுரு கேரளாவில் வர்க்கலேயில் சிவகிரி மடமும், மற்றும் பல ஆச்ரமங்களும், தமிழ்நாட்டில் சென்னே, காஞ்சீபுரம் முதலிய இடங்களில் பல மடங்க ளும் நிறுவினவர். அவர் யாரையும் தாமேசென்று பார்ப்பது கிடையாது. மகாத்மாகாந்தி, சிரத்தானந்தர், ரவீந்த்ர நாத் தாகூர், ஆண்ட்ரூஸ் முதலியவர்களெல்லாம் அவர் இருப்பிடம் சென்று தரிசித்திருக்கிருர்கள். ஸ்ரீ நாராயண குருவும் அவருடைய ஆச்ரமத்தைச் சேர்ந்த சீடர்களும் ஸ்ரீ பகவானிடம் பெரிதும் ஈடுபாடுடையவர்கள். ஸ்ரீ நாரா யணகுருவின் முக்கிய சீடர்களில் ஒருவரான அச்சுதா னந்தரை தம் ஆச்ரமத்தில் காணவில்லே என்ருல் உடனே ஸ்ரீ ஸ்வாமிகள் "அச்சுதானந்தன் கையில் ஐந்து ரூபாய் கிடைத்திருக்கும். அவன் திருவண்ணுமலேக்குச் சென்றி ருப்பான்", என்பார்களாம். உண்மையும் அதுவாகவே இருக்கும். நான் ஸ்ரீ பகவானிடம் வருவதற்குமுன் சுமார் 1917-ல் ஸ்ரீ நாராயணகுரு யாத்திரையாகத் தென்னுட்

டிற்கு விஜயம்செய்தவர். தம் மடங்களில் ஒன்ருன காஞ்சீ புரம் "நாராயண சேவாசிரமம்" வந்திருந்த சமயம் அம் மடத்தின் மடாதிபதியாகிய ஸ்ரீ கோவிந்தானந்தர், ஸ்ரீ ஸ்வாமிகளிடம் ஸ்ரீ பகவானைக் குறித்துச் சொல்லி தாம் பலமுறை திருவண்ணுமலை சென்று ஸ்ரீ பகவானை தரிசித் துள்ளதாகவும் ஸ்ரீ ஸ்வாமிகளும் பார்க்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். ஸ்ரீ நாராயண குருவுக்கும் அந்த எண்ணம் முன்பே இருந்தது. அதனுல் சரியென ஆமோ தித்து திருவண்ணுமலை வந்தார். அவருடன் அவருடைய சீடர்களான அச்சுதானந்தா, வித்யானந்தா, கோவிந்தா னந்தா முதலியவர்களும் வந்தனர். ஸ்ரீ பகவானுக்கு கைங்கரியம் செய்து வந்த பழனிஸ்வாமி ஸ்ரீ ஸ்வாமிகளை ஊரில் தற்செயலாகப் பார்த்தவர் "ஸ்ரீ ஸ்வாமிகள் ஆச்ர மம் வரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அவரும் "ஆஹா! மகரிஷிகளைத் தானே! சென்று பார்க்க வேண்டி யதுதான், அவர் எங்கும் போகாதவர், நாம்தான் போய் பார்க்க வேண்டும்" எனச் சொல்லி, தம் சிஷ்யர்களுடன் ஸ்கந்தாச்ரமம் வந்தார். ஸ்ரீ நாராயணகுரு ஸ்கந்தாச்ர மத்தில் நுழைந்தவர், அங்கு தாழ்வாரத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீ பகவானைப் பார்த்துக் கொண்டே சற்று நின்றுவிட்டு மெதுவாக நடந்துபோய் மேலே இருந்த மாமரத்தடியில் அமர்ந்தார். அவர் சிஷ்யர்கள் ஸ்ரீ பகவானை நமஸ்கரித்து அங்கேயே அமர்ந்தார்கள். ஸ்ரீ நாராயணகுருவின் எதிரில் அவர் சிஷ்யர்களோ மற்றவர்களோ உட்காரவே மாட்டார் கள். யாருடனும் சமமாக அமர்ந்து பந்தியில் அவர் சாப்பிடுவதோ, சாதாரணமாக வருபவர்களுடன் சகஜமா கப் பேசுவதோ கிடையாது. ஆனுல் நம் பகவானே கரு ணைக் கடலாயிற்றே! எல்லாரிடமும் எளிமையாகப் பழகி, இனிமையாகப் பேசி, சமபந்தி போஜனமாகக் கலந்து கொள்ளும் சகஜ நிலையை நினைந்து, அப்படிப்பட்ட மா மேரு நமக்காக இவ்வளவு எளிமைக் கோலம் கொண்

டதை எண்ணி, எண்ணி நாம் செய்த புண்ணியத்தின் பெருமையை நினைத்துப் பெருமிதம் அடையலாமல்லவா ?

ஸ்ரீ நாராயணகுரு வந்திருப்பதறிந்து ஊருக்குள் இருந்த பக்தர்கள் உணவு வகைகளும், பழங்களும் எடுத்துக் கொண்டு ஸ்கந்தாச்ரமம் வந்துவிட்டார்கள். பகல் உணவு அருந்தும் நேரமாயிற்று. வழக்கம்போல் நாவல் மரத்தடி மேடையில் ஸ்ரீ பகவானுக்கும் பக்கத்தில் ஸ்ரீ நாராயண குருவிற்கும் இலை போட்டு, மற்றவர்களுக்கு மேடைக்கு கீழே இலை போடப்பட்டது. ஸ்ரீ பகவான் நாவல் மரத்தடி மேடையில் நின்று மேலே மாமரத்தடியில் அமர்திருந்த ஸ்ரீ நாராயண குருவை நோக்கி "எங்களுடன் சாப்பிடலாமே" என மலையாளத்தில் கேட்டார்கள். (ஞங்களோடே ஊணு கழுச்சுக் கூடே). அவரும் "ஆஹா ! சாப்பிடலாமே" எனக்கூறி எழுந்து வந்து ஸ்ரீ பகவான் பக்கத்தில் வந்தமர்ந்தார். பிறகு, தான் பத்திய உணவு சாப்பிடுவதால் தனக்கு மோர் சாதம் மட்டும் போதுமெனக் கூறினர். பழங்கள், அப்பளம், பாயஸம் முதலியவைகளுடன் மோர் சாதம் மட்டும் சாப்பிட்டார். சாப்பாடு முடிந்ததும் ஸ்ரீ பகவான் வழக்கம் போல் மலைப்பக்கம் சென்று அரை மணியில் திரும்பினர்கள். அதற்குள் ஸ்ரீ ஸ்வாமிகள் தம் சீடர்களிடம் "மஹரிஷிகளுக்கு ஏதாவது காணிக்கையாக நாம் கொடுக்க வேண்டாமா ?" எனக் கேட்டுவிட்டு ஒரு காகிதமும் பென்சிலும் வாங்கிக் கொண்டு மாமரத்தடிக்குச் சென்று விட்டார். பிறகு ஈசான்ய மடத்திற்கு அவரை அழைத்துச் செல்ல ஈசான்ய மடாதிபதி ஸ்ரீ மகாதேவ ஸ்வாமிகளும் மற்றும் சிலரும் வந்திருந்தார்கள். ஸ்ரீ நாராயண குரு மாமரத்தடியில் இருந்து இறங்கி வந்து ஸ்ரீ பகவான் அருகில் அமர்ந்தார். தம் சிஷ்யர்களைப் பார்த்து "நீங்களெல்லாம் ஸ்வாமியை (ஸ்ரீ பகவானை) பார்த்ததுண்டோ ?" என மலையாளத்தில் கேட்டார்.

அவர்கள் முன்பே பார்த்திருப்பதாகச் சொன்னதும் "ஓகோ! நாம்தான் இதுவரை பார்த்ததில்லை, பாவம்!" எனக் கூறிக்கொண்டு தம் கையில் வைத்திருந்த சீட்டை காணிக்கையாக ஸ்ரீ பகவான் பக்கத்தில் வைத்துவிட்டு "இவர்கள் மடத்திற்கு அழைக்கிறார்கள்" என்று கூறி எழுந்து ஒரு நிமிடம் ஸ்ரீ பகவானைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு மலையாளத்தில் "அங்ஙனே ஆவட்டே" (அப்படியே ஆகட்டும்) எனச் சொல்லிவிட்டு புறப்பட்டார். அவருடைய சிஷ்யர்கள் ஸ்ரீ பகவானை நமஸ்கரித்து ஸ்வாமிகளுடன் ஈசான்ய மடம் சென்றார்கள். ஸ்ரீ நாராயணகுரு, ஸ்ரீ பகவானைக் கூர்ந்து பார்த்த பார்வையாலும் "அங்ஙனே ஆவட்டே" என்ற சொல்லினாலும் ஞானிகளுக்குரிய பரிபாஷையில் என்னென்ன பேசிக்கொண்டார்கள் என்பது நம் போன்றவர்களால் புரிந்துகொள்ள முடியாத ஓர் அரிய விஷயமாகும்.

ஈசான்ய மடம் சென்ற ஸ்ரீ நாராயணகுரு அங்கு யாவற்றையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகையில் கையில் பூக்குடலையுடன் நின்றிருந்த சிறுவன் நடேசனைப் பார்த்ததும் மலையாளத்தில் "இப் பையன் ரொம்ப கெட்டிக்காரன், நன்றாகப் படிப்பான், படிக்க வைக்கலாம், பெரியவனாவான்" என்று சொன்னார். அவர் வாக்குப் படியே அச்சிறுவன் பிற்காலத்தில் ஈசான்ய மடாதிபதியாகவும், கோயிலூர் மடத்தின் சாதுக்களின் பரம்பரையில் ஒரு நல்ல உத்தம சாதுவாகவும் ஸ்ரீ பகவானிடம் மிக ஈடுபாடுடையவராகவும் விளங்கினார். அவர்தான் ஈசான்ய மடாதிபதி ஸ்ரீ நடேச ஸ்வாமிகளாகும். ஸ்ரீ நாராயண குரு சென்றதும் ஸ்ரீ பகவான் அவர் கொடுத்துச் சென்ற சீட்டைப் பார்த்தார்கள். அதில் ஸம்ஸ்கிருதத்தில் "நிர்விருத்தி பஞ்சகம்" என்ற பெயரில் ஐந்து சுலோகங்கள் அவரால் எழுதப்பட்டிருந்தது. ஸ்ரீ நாராயண குரு வர்க்கலை சென்றதும் "முனிசர்யா பஞ்சகம்" என்னும்

மற்றெறு பஞ்சகத்தையும் எழுதி அனுப்பினர். அப் பஞ்சகங்கள் இரண்டும் ஸ்ரீ பகவானின்எதார்த்த நிலையை விளக்குவதாக உள்ளன. அதில் "நிர்விருத்தி பஞ்சகம்" கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. கோ நாம தேச: கா ஜாதி: ப்ரவ்ருத்தி: கா க்ரியத்வய:
இத்யாதி வாதோபரதிர் யஸ்ய தஸ்யைவ நிர்வ்ருதி:
2. ஆகச்ச கச்ச மாகச்ச ப்ரவிச க்வநு கச்சஸி
இத்யாதி வாதோ பரதிர்: யஸ்ய தஸ்யைவ நிர்வ்ருதி:
3. க்வ யாஸ்யஸி யதாயாத: குத ஆயாஸி கோஸி வை
இத்யாதி வாதோபரதிர்: யஸ்ய தஸ்யைவ நிர்வ்ருதி:
4. அஹம் த்வம் ஸோய மந்தர்ஹி பஹிரஸ்தி நவாஸ்திவா
இத்யாதி வாதோபரதிர் யஸ்யதஸ்யைவ நிர்வ்ருதி:
5. க்ஞாதாக்ஞாதஸம்: ஸ்வாந்ய பேதசூன்ய: குதோ பிதா
இத்யாதி வாதோபரதிர் யஸ்ய தஸ்யைவ நிர்வ்ருதி:

மேற்படி சுலோகங்கள் இரண்டும் ஆசிரமத்திலுள்ள பெரிய நோட்டில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ நாரயண குரு, இங்கிருந்து யாராவது வர்க்கலைக்குச் சென்றுல் "மஹரிஷி சௌக்யந்தானே, நலமாக இருக் கிருர்களா?" என ஆவலுடன் அன்போடு விசாரிப்பார். தமிழ் நாட்டிலிருந்து போனவர்களிடம் "மஹரிஷியைப் பார்த்திருக்கிறீர்களா" எனக் கேட்பார். அவர்கள் பார்த்த தில்லை என்று கூறினுல் "தமிழ் நாட்டில் இருந்து கொண்டு மஹரிஷியை பார்க்கவில்லையென்றுல் மனித ராய்ப் பிறந்து பயனில்லையே" என்று அறிவுறுத்துவார். ஸ்ரீ பகவானிடம் அப்படியொரு ஈடுபாடும், அன்பும் வைத் திருந்தார். "அவர் ஒரு ராஜ சர்ப்பம்" என ஸ்ரீ பகவானை மிக உயர்வாகக் குறிப்பிடுவார். அவர் இங்கு வந்து சென்று சில வருடங்கள் கழித்து 1928-ல் அவருக்கு உடல்நிலை சரி யில்லையென வர்க்கலையிலிருந்து, ஆச்ரமத்திற்கு முதலில் கடிதமும் பிறகு தந்தியும் வந்தது. ஸ்ரீ பகவான் இங் கிருந்து யாராவது போனுல் நல்லது எனச்சொல்லி,

என்னைப் போய்வரும்படி கூறினர்கள். நானும் புறப்பட்டு வர்க்கலைக்குச் சென்றேன். என்னுடன் அறுபத்து மூவர் மடம் மலையாள சங்கரானந்தரும் வர்க்கலை வந்தார். நான் எலுமிச்சம்பழம் வைத்து நமஸ்கரித்தேன். என்னைப் பார்த்து "மஹரிஷி இடமிருந்துதானே வந்திருக்கிருய்? மஹரிஷி சௌக்கியந்தானே?" எனக் கேட்டு எலுமிச்சம் பழத்தை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டார். பிறகு நான் சென்ற பத்தாம் நாள் ஸ்ரீ நாராயணகுரு மகாசமாதியடைந்தார். சமாதிபூஜை முடிந்ததும் நாங்கள் அருணை திரும்பினேம்.

கேரளாவைச் சேர்ந்த ஆல்வாயில் சம்ஸ்கிருத பண்டிதராக வேலை பார்த்து வந்து, பிறகு அவ்வேலையை விட்டு விட்டு ஸ்ரீ நாராயணகுருவினிடம் சந்நியாசம் பெற்று வர்க்கலை மடத்தில் இருந்து வந்த ஸ்ரீ ஆத்மானந்தரை, தம்முடன் காஞ்சீபுரம் சேவாச்ரமத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பிய ஸ்ரீ கோவிந்தானந்தர், ஸ்ரீ ஸ்வாமிகள் உத்தரவுபெற்று இருவரும் காஞ்சீபுரம் செல்லும் வழியில் திருவண்ணுமலை வந்து ஸ்ரீ பகவானை தரிசித்து பிறகு காஞ்சீபுரம் சென்றுர்கள். இங்குள்ள ஆச்ரம அன்பர்களுக்கு தைலம், லேகியம் முதலியவைகள் கொடுத்தும் உடல்நலம் இல்லாதவர்களை தங்கள் சேவாச்ரமத்திற்கு அழைத்துச் சென்று, தக்க வைத்தியம் செய்வதற்காக சில தினங்கள் தங்க வைத்து நலமுடன் அனுப்பிவைப்பார்கள்.

ஸ்ரீ கோவிந்தானந்தர் மறைந்த பிறகு, அச் சேவாச்ரமத்தின் தலைவரான ஸ்ரீ ஆத்மானந்தர் ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ கோவிந்தானந்தரின் குருபூஜையை மிக சிறப்பாக நடத்தி வந்தார். அதற்குத் தவருமல் நான் சென்று வருவது வழக்கம். அச்சமயங்களில் ஸ்ரீ பகவானுக்கென்று தைலமும், மாணிபத்திர லேகியமும் என்னிடம் விருப்பமுடன் கொடுத்தனுப்புவார். ஸ்ரீ பகவான் மாணி

பத்திரலேகியம் சாப்பிடுவதறிந்து, நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட லேகியம் ஸ்ரீ பகவான் சாப்பிடவேண்டும் என்ற விருப்பத்துடன் அவர் கொடுத்தாலும், 'அவர் களுக்கு செலவும், சிரமமும் எதற்கு" என ஸ்ரீ பகவான் நினைப்பார்கள். அதன் காரணமாக, அவர்கள் செய்யும் முறையைத் தெரிந்து கொண்டால் நாமே செய்து கொள்ள லாமே என எண்ணி ஒருமுறை நான் காஞ்சீபுரம் சென்ற சமயம் லேகியத்திற்கான முறையை எழுதி வாங்கி வரும்படிச் சொன்னார்கள். அதன்படியே எழுதிக்கொண்டு வந்த சீட்டை பார்த்த ஸ்ரீ பகவான், அது அப்படியே இருந்தால் காணாமற் போகக்கூடும், பாட்டாக இருந்தால் என்றும் நினைவில் இருக்கும் என்று நினைத்து அதையே பாட்டாக எழுதி வைத்தார்கள்.

ஒருமுறை ஸ்ரீ ஆத்மானந்தர் ச்யவனப்ராச லேகியம் ஸ்ரீ பகவானுக்காக என்னிடம் கொடுத்து, பால் அநுபானத் துடன் சாப்பிட வேண்டுமென்றும், ஸ்ரீ பகவான் லேகியம் சாப்பிடும் விவரத்தைத் தனக்கு எழுதும்படியும் சொல்லி அனுப்பினார். அவ்விதமே அதை ஸ்ரீ பகவானிடம் கொடுத்து பால் அநுபானத்துடன் சாப்பிடவேண்டிய முறையையும் கூறினேன். சில தினங்கள் கழித்து ஸ்ரீ பக வானிடம், ஸ்ரீ ஆத்மானந்தருக்கு என்ன எழுதுவதெனக் கேட்டேன். அவர் சொல்லியபடியே சாப்பிடுவதாக எழு தச் சொன்னார்கள். (ஸ்ரீ பகவான் பால் சாப்பிடுவதில்லை). அதற்கு நான் "பகவான்தான் பால் அநுபானமாக இல்லாமல் வென்னீரில் சாப்பிடுகிறீர்களே எப்படி எழுதுவது?" என்றேன். ஸ்ரீ பகவான் பயஸில் சாப்பிடுவதாக எழுது என்றார்கள். ஒன்றும் புரியாமல் நான் நிற்பதைப் பார்த்து சிரித்துக் கொண்டே ஸம்ஸ் கிருதத்தில் பயஸ் என்றால் பாலையும் குறிக்கும், ஜலத் தையும் குறிக்கும். இரண்டிற்கும் ஒரே பெயர்தான் என்றார்கள். அதன்பின் அப்படியே எழுதினேன். பிறகு

ஸ்ரீ பகவான் மகாசமாதி கட்டிடத்திற்கு தன் காணிக்கை யாக சிறு தொகையும் கொடுத்தார். ஸ்ரீ ஆத்மானந் தருக்குப் பிறகு அவரிடம் சந்நியாச தீக்ஷை பெற்ற ஒரே சிஷ்யரான சதானந்தஸ்வாமியும் அடிக்கடி ஆச்ரமம் வருவதும், ஆச்ரம பக்தர்களுடன் அன்புடன் பழகுவது மாக இருந்து வருகிறார். தலைமை மடமான வர்க்கலை, சிவகிரி முதலாய மடங்களின் தற்போதைய தலைவர்களும் ஆச்ரமத்துடன் தொடர்பும் அன்பும் கொண்டவர்களாக இருந்து வருகிறார்கள்.

19. ஸ்ரீ பகவான் கிரிப்பிரதக்ஷிணம்

ஸ்கந்தாச்ரமத்தில் ஸ்ரீ பகவான் இருந்தபோது ஸ்ரீ பகவானுடன் பக்தர்களும் சேர்ந்து அடிக்கடி கிரிப்பிர தக்ஷணம் செய்வது வழக்கம். பிரதக்ஷணத்திற்கு மூன்று பாதைகள் உண்டு. மலையடிவாரத்தில் செல்வது உட்பிர காரம். அடுத்தது காட்டுப் பாதை. மூன்றாவது ரோட்டுப் பாதை. பகல் நேரத்தில் மலையடிவாரப் பாதையிலோ காட்டுப் பாதையிலோ செல்வதும், இரவு நேரத்தில் மட்டும் ரோட்டுப் பாதையில் போவதும் வழக்கம். சில சமயங் களில் புறப்பட்டால் இரண்டு மூன்று தினங்கள்கூட ஆகும், ஆச்ரமம் திரும்புவதற்கு. அந்த சமயங்களில் அன்னையாருக்குத் துணையாக ஸ்ரீ நிரஞ்சனானந்தஸ்வாமி களும், சாமா அய்யரும் தங்கியிருப்பார்கள்.

இரண்டு மூன்று வேளைக்கு வேண்டிய ஆகாரத்தை கட்டுசாதமாகக் கட்டிக் கொண்டு போவோம். ஸ்ரீ பக வான் பிரதக்ஷணம் புறப்பட்டது தெரிந்தால் ஊரிலுள்ள ஜெயராமய்யர் மற்றும் பல அன்பர்கள் சமையலுக்கு வேண்டிய சாமான்களுடன் கௌதம ஆச்ரமத்திற்கோ, பச்சையம்மன் கோவிலுக்கோ வந்து விடுவார்கள். அப்படி நேரும் போது மேலும் ஓரிரண்டு நாட்கள் வழியில் தங்க வேண்டி வரும். தை, மாசி மாதங்களில் இரவு காலத்தில்

பிரதக்ஷணம் சென்ருல் வழியில் கிடக்கும் காய்ந்த சருகு களைக் குவித்து நெருப்பு மூட்டி குளிர் காய்வோம். நானும் மற்ற சில பக்தர்களுமாக முன்னுல் சென்று காய்ந்த சருகுகளைச் சேர்த்து தீ மூட்டுவோம். அதற்குள் ஸ்ரீ பகவானும் மற்ற அன்பர்களும் வந்து விடுவார்கள். அவர்கள் குளிர் காய்ந்துவிட்டு வருவதற்கு முன்னுல் சென்று மறுபடியும் சருகு சேர்த்து எரிய விடவும் ஸ்ரீ பகவானும் மற்றவர்களும் வருவதற்கும் சரியாக இருக்கும். இதைப்பார்த்து ஸ்ரீ பகவான் "சருகு சேர்க்க நேரமிருக்கு, குளிர் காய நேரமில்லை" என்பார்கள், இவர்களுக்கு அது சரியாகத்தானிருக்கிறது எனக் கூறி சிரிப்பார்கள். எங்களுக்குப் பெருமையாகவும் மிக உற்சாகமாகவும் இருக்கும்.

20. போக்கிரி மணி

மதுரையில் ஸ்ரீ பகவான் வேங்கடராமனுகப் படித்துக் கொண்டிருக்கும் போது அவருடன் சேர்ந்து படித்தவரும் தூரத்து உறவினருமான விளாச்சேரி மணி அய்யர் என்பவர் ஸ்ரீ பகவானை முதன்முறையாக விருபாக்ஷியில் வந்து தரிசித்து நமஸ்கரித்துவிட்டு கண்களில் கண்ணீர் பெருக உருகி நின்ருர். ஸ்ரீபகவான் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். பக்கத்திலிருந்த ஸ்ரீ அன்னையாருக்குத் திகைப்பாக இருந்தது. உடன் படித்தவர் எதிரில் நின்றிருந்தும் உணராதவர்களாக இருந்ததைக் கண்டு, மறந்து விட்டார்களென நினைத்து, "இவரைத் தெரியவில்லையா?" என்று கேட்டதற்கும் பகவான் மௌனமாகவே இருந்தார்கள். மணி அய்யரும், உலகைத் துறந்தவர்களுக்கு பழைய நினைவு எப்படியிருக்குமென எண்ணினுர். தாயார் மறுபடியும் "யாரென்று தெரியவில்லையா. மதுரை" என்ருர்கள். உடனே ஸ்ரீ பகவான் புன்சிரிப்புடன் "ஏன் தெரியாது, போக்கிரி மணிதானே" என்றதும் யாவருக்கும் ஆச்சரியமும் மணி அய்யருக்கு சொல்லொணு ஆனந்தமும் ஏற்பட்டது.

21. பக்தர்களின் மும்மூர்த்தி பாவனைகள்

மேற்படி மணி அய்யரும் இவர்களுடன் சேர்ந்து படித்த வேம்பு அய்யரும் ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்தில் இருந்த போது அடிக்கடி வந்து தங்கிப்போவது வழக்கம். நான் வந்த புதிதில் ஒரு நாள் விடியற்காலை ஸ்கந்தாச்ர மத்தின் அருவியின் அருகில் உள்ள பெரிய கரும்பாறை யில் இருவர் படுத்திருப்பதைப் பார்த்துவிட்டு அங்கு சென்று பார்த்தேன். அவர்கள் என்னிடம் பிரம்மாவும், விஷ்ணுவும் வந்திருக்கிறோம், வரலாமா எனக் கேட்டு வா என்றார்கள். எனக்கு வேடிக்கையாக இருந்தது. உடனே ஸ்ரீ பகவானிடம் சென்று தெரிவித்தேன். ஸ்ரீ பகவான் சிரித்துக்கொண்டே, "அவர்கள் வரலாம் எனச் சொல்" என்றார்கள். நான் போய், வரச் சொன்னதாகக் கூறிய தும் அவர்களிருவரும் வந்தார்கள். அவர்களே மணி அய்யரும், வேம்பு அய்யரும் எனத்தெரிந்து கொண்டேன். அவர்கள் சிலநாள் தங்கி ஊருக்குப் போனதும், அவர்களி ருவரும் தங்களை பிரம்மா, விஷ்ணு என்று சொல்லிக் கொள்ளும் காரணத்தைக் கேட்டபோது ஸ்ரீ பகவான், "அதற்கென்ன செய்வது அது அது அவரவர் பாவனை. அவர்களுக்கு நான் சிவனாகவும், மணி பிரம்மாவாகவும் வேம்பு விஷ்ணுவாகவும் பாவனை. இதோ, சிப்பாய்ஸ்வா மியைப் பார்! அவருக்கு, தான் என் மெய்காப்பாளன் என்ற பாவனை" என்றார்கள்.

22. ஸ்ரீ அன்னையாரின் ஆத்மசாந்தி

நான் ஸ்ரீ பகவானிடம் வந்து சில காலத்திற்குப் பிறகு ஸ்ரீ அன்னையாருக்கு அதிசாரம் கண்டது. படுத்தபடுக் கையில் இருந்தார்கள். அவர்கள் புடவைகளை ஸ்ரீ நிரஞ்ச னானந்த ஸ்வாமிகள்(ஸ்ரீ பகவானின் சகோதரர்)துவைத்து சுத்தம் செய்வார். தனிமையில் அவர் சிரமப்படுவதைப்

பார்த்து நானும் தாயாரின் துணிகளைத்துவைத்துச்சுத்தம் செய்து அவர்களுக்குப் பணிவிடை செய்யும் மகா பாக்யம் பெற்றேன். ஸ்ரீ அன்னையாருக்கு மருந்துகள் கொடுத்து வந்தும் குணம்ஏற்படாமல் அதிகரித்துக்கொண்டிருந்தது. ஸ்ரீ பகவான் அமர்ந்திருக்கும் இடத்திற்கு தென்புறமுள்ள அறையில் படுத்திருந்த ஸ்ரீ அன்னையாருக்கு 19-5-1922 அன்று காலையிலிருந்தே அதிக சிரமமாக இருந்தது. ஸ்ரீ பகவானும் காலையில் வெளியில் சென்று வந்தவர்கள் தாயார் படுத்திருந்த அறைக்குள் சென்று அன்னையின் அருகில் அமர்ந்தார்கள். பகல் உணவருந்தும் நேரத்தில் தனக்கு ஆகாரத்தை அங்கேயே கொண்டுவரும்படி சொல்லி உணவருந்திவிட்டு அன்னையின் அருகிலேயே இருந்தார்கள். மாலையில் மூச்சுத்திணரலினல் மார்பில் சப்தம் ஏற்பட்டு ஸ்ரீ அன்னையார் மிகச் சிரமப்படுவதைப் பார்த்து ஸ்ரீ பகவான் தனது வலதுகரத்தை அன்னையின் மார்பில் வைத்துக்கொண்டிருந்தார்கள். அதனல் சற்று சாந்தியடைந்த ஸ்ரீ அன்னையாருக்கு விடுதலை நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஸ்ரீ பகவான் தாயாரின் சிரசில் ஒரு கரமும், மார்பில் ஒரு கரமுமாக வைத்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தார்கள். இருக்கும் நிலையைப் பார்த்த மற்றவர்கள் மாலை 6 மணிக்கே ஆகாரத்தை முடித்துக் கொள்வது நலமெனக் கருதி இலை போட்டு ஸ்ரீ பகவானை சாப்பிட அழைத்தார்கள். ஸ்ரீபகவான் மற்றவர்களை சாப்பிடும்படியும் தான் பிறகு சாப்பிடுவதாகவும் கூறினர்கள். ஸ்ரீ பகவானுடன் ஸ்ரீ நிரஞ்சனுனந்த ஸ்வாமிகள், நான், ராமகிருஷ்ணஸ்வாமி முதலியவர்கள் தாயாரருகில் இருந்தோம். மற்றவர்கள் சாப்பிட்டு முடித்தார்கள். பிறகு ஓரிடத்தில் காவ்யகண்ட கணபதி முனிவர் அமர்ந்திருந்தார். ராஜு சாஸ்திரிகள், வைத்திய நாத சாஸ்திரிகள், சுந்தரேஸ்வரய்யர் முதலியோர் வேத பாராயணம் செய்யத் தொடங்கினர்கள். சரணுகதி ராமஸ்வாமி அய்யர், பஞ்சாபிபக்தர் மற்றும் பலர்சேர்ந்து

ராமஜபகோஷம் செய்து கொண்டிருந்தார்கள். ஸ்ரீ பகவானருகில் இருந்த நாங்கள் "ஸ்ரீ அருணுசல அக்ஷரமண மாலை" பாராயணம் செய்தோம். இரவு 8 மணிக்கு தவ யோகியாம் ஸ்ரீ பகவானை ஈன்றெடுத்த புண்ணியவதியான ஸ்ரீஅன்னை அழகம்மையாரின் ஆன்மா சாந்தியடைந்தது. சிறிது நேரம் மௌனமாக ஸ்ரீ பகவான் அமர்ந்திருந்து விட்டு எழுந்தார்கள். ஸ்ரீ அன்னையாரின் பூதவுடலுக்கு புதுகாவிப்புடவை அணிவித்து, நெற்றியில் திருநீறுபூசி மாலையும் சாத்தி வெளித் தாழ்வாரத்தில் ஆசனமிட்டு அதில் கொண்டுவந்து அமர்த்திஞேம். இவை முடிந்ததும் ஸ்ரீ பகவான் இனி சாப்பிடலாம் எனக்கூறி நாவல் மரத் தடியில் சாப்பிட அமர்ந்தார்கள். முற்றும் துறந்த முழு ஞானிக்கு துக்கமேது? தீட்டேது? நாங்களும் சாப்பிட அமர்ந்தோம். சாப்பிட்டு முடிந்ததும் யாவரும் கலந்து யோசித்து மலை லிங்க ரூபமானதால் மலையில் எந்த இடத் திலும் தகனமோ, சமாதியோ செய்யக்கூடாதாகையாலும், விஷயமறிந்து வரும் பக்தர்கள் மலை ஏறி வருவதென்பது சிரமமென்பதாலும் காலை 5 மணிக்கே கீழேபோய்விடுவது என்று முடிவாயிற்று. அவ்வாறே நாயனு முதலியவர்கள் கீழே சென்றுவிட்டு காலை ஐந்து மணிக்கு பாலி தீர்த்தக் கரைக்கு யாவரும் வருவதென்று ஏற்பாடாயிற்று. அதன் படி சமாதி வைப்பதற்கு வேண்டிய சிமெண்டு, பலகைக் கல் முதலியவைகளைச் சேகரிக்க பெருமாள்ஸ்வாமி, ராம கிருஷ்ணஸ்வாமி முதலானோர்களும் இரவே இறங்கி ஊருக்குள் போனுர்கள்.

23. சமாதி வைபவம்

பிறகு ஸ்ரீ பகவான் அன்னையாரை உட்கார வைத்தி ருந்த இடத்திற்கு அருகில் அமர்ந்தார்கள். முன்பு ஸ்ரீ அரு ணுசலேச்வரர் ஆலயமடப்பள்ளியில் கைங்கரியம் செய்து கொண்டிருந்து பிறகு துறவியாகி ஸ்ரீ பகவானிடம்ஈடுபாடு

கொண்டிருந்த பிரம்மசாரி அருணுசலஸ்வாமியும் நானும் பக்கத்திலிருந்தோம். ஸ்ரீ பகவான் திருவாசகம் படிக்க வேண்டுமென்ருர்கள். அப்படியே ஸ்ரீ பகவான் ஒரு பகுதியும் நாங்கள் ஒரு பகுதியுமாகப் படித்தோம். நாங்கள் படிக்கும்போது ஏற்படும் தவருன உச்சரிப்புக்களை அவ்வப்பொழுது ஸ்ரீ பகவான் திருத்துவார்கள். இவ்விதமாக காலை 4 மணிக்குள் திருவாசகம் முழுவதும்படித்து முடித்தோம். அதற்குள் சமாதிக்கு வேண்டிய பொருள்களைச் சேகரிக்கச் சென்றிருந்தவர்களும் வந்து சேர்ந்தார்கள். தாயாரின் பூத உடலைக் கீழே கொண்டு செல்வதற்கு வேண்டிய மூங்கில்கள் தற்செயலாக நான்கு தினங்களுக்கு முன்பே கிடைத்திருந்தன. நானும் ராமசாமி பிள்ளையும் மலை உச்சிக்குச் சென்றிருந்தோம். அங்கே யாரோ மூங்கில் வெட்டி எடுத்துப் போனதுபோக பெரிய மூங்கில்கள் சில கிடந்தன. நாங்கள் அவைகளை எவ்வித எண்ணமும் இல்லாமல் கொண்டு வந்தது இப்போது உபயோகப் பட்டது. எல்லோரும் கீழே போய் விட்டால் உணவுப் பொருள்கள் அடங்கிய தபால் பெட்டி வரும். தாயாருக்கு உடம்பு அதிகமாகியதுமே ஸ்ரீ பகவானின் தங்கை அலமேலு அம்மாளுக்குத் தந்தி கொடுத்திருந்தது. அவர்களும் வேறு பக்தர்களும் வரக்கூடும். தபால் பெட்டியை வாங்கி வைத்து விட்டு வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு பாலிதீர்த்தக் கரைக்கு வரவேண்டும். ஆகையால் யாராவது ஸ்கந்தாச்ரமத்தில் இருக்க வேண்டுமென யோசித்து முடிவில் என்னை மட்டும் நிறுத்திவிட்டு, ஸ்ரீ பகவானும் மற்றவர்களும், பெருமாள்ஸ்வாமி, ராமகிருஷ்ணஸ்வாமி முதலானேர் தாயாரின் திருமேனியைத் தாங்கி சுமந்து வரப் புறப்பட்டு பாலிதீர்த்தக் கரைக்குச் சென்ருர்கள். எனக்கு அந்தச் சூழ்நிலையில் தனிமையில் இருக்க அச்சமாக இருந்தும் அங்கேயே இருந்து தபால் பெட்டியை வாங்கி வைத்துவிட்டு 7 மணி சுமாருக்குக் கீழே இறங்கி வந்தேன். பாலிதீர்த்தக் கரையிலுள்ள பெரிய அரசமரத்

தடி மேடையில் தாயாரை அமர்த்தியிருந்தது. ஸ்ரீ பகவானும் மற்றவர்களும் அருகில் அமர்ந்திருந்தார்கள். சமாதி வைக்கும் இடத்தைச் சுற்றி நூறு பேர் இருக்கக்கூடிய அளவு சப்பாத்திப்புதர்கள் அகற்றப்பட்டிருந்தது. அலமேலு அம்மாள், அவர் கணவர் பிச்சுவையர் மற்றும் பல பக்தர்களும் வந்திருந்தார்கள். ஊருக்குள்ளிருந்து திருவிழாக் கூட்டம் போல் ஜனங்கள் திரண்டிருந்தார்கள். இரவே ஊரில் விஷயம் பரவி விட்டதால் ஏராளமான புஷ்பங்கள், பழவகைகள், தேங்காய் முதலியவைகள் நிறைந்திருந்தன. ஒரு பக்கத்தில் மேள வாத்தியமும், மற்றொரு பக்கத்தில் பஜனை கோஷ்டியின் முழக்கமுமாக இருந்தது. திருமூலர் திருமந்திரத்தின் விதிப்படி சமாதி கட்டும் வேலையும் நடந்து கொண்டிருந்தது. 10 மணிக்கு அபிஷேகம் ஆரம்பித்து பக்தர் கொண்டு வந்திருந்த பால், தயிர், இளநீர் மற்றுமுள்ளவைகளை அபிஷேகம் செய்து முடித்து சமாதி வைக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. சமாதி குகையில் விபூதி, தர்ப்பைகளைப் பரப்பி சம்பிரதாயப்படி அதில் தாயாரின் பூதவுடல் இறக்கப்பட்டது. ஸ்ரீ பகவான் கையில் விபூதியும் கற்பூரமும் கொடுக்கப்பட்டு சமாதி குகைக்குள் அவர்கள் போட்டதும் நாங்களும் ஆளுக்கு ஒருபிடி அள்ளிப் போட்டோம். பிறகு நிறைய கற்பூரம், வில்வம், விபூதி, செங்கற்பொடிகளைக் கொட்டி நிறைத்து மேலே பலகைக் கல் கொண்டு மூடி ஒரு லிங்கம் வைத்து நைவேத்தியத்துடன் கற்பூர ஆரத்தி நடந்தது. மணி பன்னிரண்டாயிற்று. யாவரும் பலாக்கொத்திற்குப் புறப்பட்டோம். ஸ்ரீ பகவான் மெல்ல நடந்து வர நாதஸ்வரம் வாசிப்பவர் ஸ்ரீ பகவானைப் பார்த்தபடியே, பின்புறமாகவே நடந்து தமக்குக் கிடைத்த மிக அருமையான சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு வெகு பிரமாதமாக வாசித்தார். இந்த ஊர்வலம் சமாதி வைத்த இடத்தி

லிருந்து சுமார் ½ பர்லாங்கு தூரத்தில் உள்ள பலாக்கொத்து போய்ச் சேர ஒரு மணி நேரத்திற்கு மேலாயிற்று. நாதஸ்வரக்காரர் ஸ்ரீ பகவானைப் பார்த்துக் கொண்டே அநுபவித்து வாசித்ததும், ஸ்ரீ பகவானும் அதற்கேற்ப மெல்ல நடந்து வந்த அழகும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பிறகு அப்படியொரு சந்தர்ப்பம் வாய்க்கவேயில்லை. அன்பர்களால் பலாக்கொத்தில் சமையல் தயாராக இருந்தது. நூறு பேருக்கு மேல் சாப்பாடானது. நாங்கள் மாலை வரை தங்கியிருந்து சமாதிக்கு தீபாராதனை செய்து விட்டு இரவு ஸ்கந்தாச்ரமம் திரும்பினோம். நாயனா, எச்சம்மாள், முதலியார் பாட்டி யாவரும் இருப்பிடம் சென்று விட்டார்கள்.

24. மோக்ஷ தீபமும் மண்டல பூஜையும்

மறுநாள் சில பக்தர்களின் யோசனைப்படி பத்தாம் நாள் சமாதி பூஜை செய்ய வேண்டுமென்றும், அதுவரை நித்திய நைவேத்தியம் வைக்க வேண்டுமென்றும் தீர்மானித்து அதன்படி சின்னஸ்வாமியும் யோகநாதரின் பிள்ளை ராமநாதனுமாக ஸ்கந்தாச்ரமத்திலிருந்து நைவேத்தியத்திற்கு அன்னம் எடுத்துக் கொண்டு கீழே சமாதிக்கு வந்து பூஜை செய்துவிட்டு பகல் ஆகாரத்திற்கு ஸ்கந்தாச்ரமம் திரும்பி விடுவார்கள். பத்தாம் நாள் பூஜைக்காக முதல் நாள் மாலையே ஸ்ரீ பகவானும் நாங்களும் பலாக்கொத்தில் உள்ள பிள்ளையார் கோவிலில் வந்து தங்கினோம். அன்றிரவு திருச்சுழியிலிருந்து வந்திருந்த மீனாக்ஷி அம்மாள், ஸ்ரீ பகவான் தங்கை அலமேலு அம்மாள் முதலியவர்கள் சுவையுள்ள மணமான திருச்சுழி தோசை தயாரித்திருந்தார்கள். மறுநாள் காலை 7 மணிக்கு சமாதிக்கு பால், பஞ்சாமிர்தங்களுடன் சிறப்புற அபிஷேகம் முடிந்து புஷ்பாலங்காரம் செய்து ஷோடசோபசாரங்களுடன் மந்திரோக்தமாக மிக விமரி

சையாக பூஜை முடிந்தது. கும்பகோணம் அய்யங்கார் ஸ்வாமி நைவேத்தியத்திற்கு வேண்டிய பிரசாதங்களும் சித்ரான்னங்களும் தயாரித்திருந்தார். சத்திரம் நாராய ணஸ்வாமி அய்யர் என்பவரின் மேற்பார்வையில் பலாக் கொத்தில் பிள்ளையார் கோவிலுக்கருகில் கொட்டகை போட்டு முறைப்படி சமையல் ஆகியிருந்தது. அங்குள்ள இலுப்பை மரத்தடியில் பெரிய பந்தல் போட்டு சுமார் 1000 பேருக்கு மேல் போஜனம் நடந்தது. பிறகு மாலை வரை தங்கியிருந்து சமாதிக்கு மோக்ஷ தீபம் ஏற்றி விட்டு ஸ்ரீ பகவானுடன் ஸ்கந்தாச்ரமம் வந்துசேர்ந்தோம். மறுபடியும் 48 ஆம் நாள் மண்டல பூஜை செய்ய வேண் டும், அதுவரை நித்ய நைவேத்தியம் செய்ய வேண்டுமென நினைத்து சில பக்தர்களின் விருப்பப்படி ஸ்கந்தாச்ரமத்தி லிருந்து அன்னம் கொண்டு போய் பூஜை நடந்துவந்தது. அபிஷேகத்திற்குத் தீர்த்தம் பலாக்கொத்திலிருந்து கொண்டு வருவது வழக்கம். ஒரு முறை நல்ல மழை பெய்திருந்த சமயம். தாயார் சமாதிக்குச் சற்றே தள்ளி, சமாதி கட்ட மண் எடுப்பதற்காக வெட்டியிருந்த சிறு பள் ளத்தில் ஜலம் தங்கியிருந்தது. மழை நின்று சில நாள் கழித்தும் அதில் ஜலம் வற்ருமல் தெளிந்து சுத்தமாக இருந்ததைக் கண்ட ஸ்ரீ சின்ன ஸ்வாமிகளும், சின்ன ராமநாதனுமாக அதிலிருந்த ஜலம் முழுவதையும் இறைத் தார்கள். அடியிலிருந்த ஊற்றிலிருந்து பன்னீர் போன்ற சுத்த ஜலம் ஊறியது. அதையே அபிஷேகத்திற்கு உப யோகிக்கத் தீர்மானித்து ஸ்கந்தாச்ரமத்திற்குச் சிறிது ஜலம் எடுத்துப் போய் ஸ்ரீ பகவானிடம் காண்பித்தார்கள். மாலையில் ஸ்கந்தாச்ரமத்திலிருந்து கீழே சமாதிக்குவந்த ஸ்ரீ பகவான் ஊற்று ஜலத்தை பார்த்து விட்டு ஒரு கஜ ஆழம், அகலத்திற்குத் தோண்டச் செய்தார்கள். ஊற்றி லிருந்து தெளிந்த நீர் நிறைய ஊறியது. அதுதான் தற் சமயம் ஆச்ரமத்திற்கு நடுவில் உள்ள வற்ருத பெரிய கிணருக உருவெடுத்துள்ளது. அன்று முதல் இன்று

வரை ஸ்ரீ அன்னேயாரின் சமாதிக் கோயிலிருக்கும் ஸ்ரீ மாத்ருபூதேச்வரருக்கும் இப்பொழுது ஸ்ரீ பகவானின் மஹாசமாதிக்கும் அபிஷேகதீர்த்தமாகப் பயன்படுகிறது. இந்தக் கிணறு ஸ்ரீ மாத்ருபூதேச்வரருக்கும் ஸ்ரீ பகவான் அதிஷ்டானத்திற்கும் ஈசானிய மூலேயில் அமைந்துளது தனிப் பெரும் சிறப்பே.

25. வசுதேவரும் வாசுதேவரும்

மலேயிலிருந்து அன்னம் எடுத்து வந்து பூஜை முடித்து உடனே ஸ்கந்தாச்ரமம் செல்வது சிரமமாக இருந்ததால் அங்கிருந்து சிறிது அரிசி, பருப்பு முதலியவைகளேக் கொண்டு வந்து கீழேயே சமைத்து பூஜை முடித்து விட்டு சாப்பிட்டுவிட்டு மாலேயில் ஸ்கந்தாச்ரமம் திரும்பும் வழக்கம் ஏற்பட்டது. சமையலுக்கான சிறு கீற்றுக் குடிலும் அமைக்கப்பட்டது. தண்டபாணி ஸ்வாமிகளும் கீழேயே வந்து தங்கினர். பிறகு ஸ்ரீ சின்ன ஸ்வாமிகளும் தண்டபாணி ஸ்வாமிகளும் நிரந்தரமாக கீழ்க் குடிலிலேயே தங்க ஆரம்பித்தார்கள். தபால்பெட்டி மூலம் வரும் ஆகாரப் பொருள்களில் ஒரு பாகம் இவர்கள் கொண்டு வந்து விடுவதால் ஸ்கந்தாச்ரமத்தில் இருப்பவர்களுக்கு உணவு பற்றுக்குறை ஏற்பட்டது. சில சமயங்களில் இரவில் போதாமல் இருக்கும். இதனல் சில அன்பர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு சலசலப்பு உண்டாகி அதன் எதிரொலியாக ஸ்கந்தாச்ரமநிர்வாகத்தைக் கவனித்துவந்தவாசுதேவ சாஸ்திரிகளின் காதுக்கு எட்டியது. வாசுதேவ சாஸ்திரிகள் கீழேயிருந்து சீட்டு ஒன்று எழுதி ராமநாத பிரம்மச்சாரிக்கு அனுப்பினர். அதில் "அன்பர்கள் தருவது வசுதேவருக்கு அல்ல. வாசுதேவருக்குத்தான்" என்று எழுதியிருந்தது. (தாயாருக்கல்ல, ஸ்ரீ பகவானுக்குத்தான் எனும் அர்த்தத்தில்). ராமநாத தீக்ஷிதர் ஸ்ரீ பகவானிடம் அச் சீட்டைக் காண்பித்தார். ஸ்ரீ பகவான் அதைப்

படித்துவிட்டு, "ஓகோ! வசுதேவர் இல்லாமல் வாசுதேவர் வந்து விட்டாரோ", என்ருர்கள். இது விஷயம் வாசுதேவ சாஸ்திரிக்கும் தெரிந்தது. அவரும், இனி இந்த விஷய மாக, தான் எதுவும் பேசக் கூடாது எனத் தீர்மானித்தார். ஸ்ரீ பகவான் திருவுருவப் படம் (பச்சையம்மன் கோவிலில் எடுத்தது) ஸ்கந்தாச்ரமத்தில் ஸ்ரீ பகவான் அமரும் இடத் திற்கருகில் வைக்கப்பட்டிருந்தது. (தற்சமயம் ஸ்ரீ பக வான் விக்ரகம் இருக்கும் மண்டபத்தில் வைக்கப்பட்டி ருக்கிறது). முதலியார் பாட்டி தினம் சாப்பாடு எடுத்து வரும்போது தும்பைப்பூ மாலையாவது வேறு புஷ்ப மாலையாவது கொண்டு வந்து ஸ்ரீ பகவான் படத்திற்கு சாற்றிவிட்டு, கற்பூரம் ஏற்றி வைத்து நமஸ்கரிப்பது வழக்கம். அங்கு ஏற்றி வைத்திருக்கும் குத்து விளக் கிற்கு ஊருக்குள் இருந்த அன்பர் ஒருவர் எண்ணெய் வாங்கிக் கொடுத்து இரவு பகல் எரியும்படி செய் திருந்தார். கீழே ஸ்ரீ அன்னையார் சமாதியிலிருந்த தீபத்திற்கு எண்ணெய் வேண்டுமென இந்த எண்ணெயி லிருந்த எடுத்துப் போவார்கள். இங்கு எண்ணெய் போதாமல் சிரமமாக இருக்கும். எண்ணெய் விட்டு விளக்கெரிக்கும் பொறுப்பேற்றிருந்த ராமநாத தீக்ஷித ருக்கு இதனுல் சங்கடமாக இருக்கும். ஒன்றும் சொல்ல வும் முடியவில்லை. பிறகு ஒரு நாள் மாலையில் ஸ்ரீ சின்ன ஸ்வாமிகளும், தண்டபாணி ஸ்வாமிகளும் ஸ்கந்தாச் ரமம் வந்து "இங்குதான் பகவான் இருக்கிருர்களே, ஆகையால், எங்களுக்குப் படம் வேண்டும்" எனக் கூறி விட்டு ஸ்ரீ பகவான் திருவுருவப் படத்தையும், குத்து விளக்கையும் கீழே சமாதிக் கட்டிடத்திற்கு எடுத்துச் சென்று விட்டார்கள். தீப எண்ணெய் பிரச்சனையும் தீர்ந்தது.

26. பாராயணமும், ஸ்ரீ பகவான் விட்டையும்

ஸ்கந்தாச்ரமத்தில் மாலை ஆறரை மணிக்கு ஸ்ரீ பக வான் எதிரில் அமர்ந்து ஸ்ரீ அருணாசல அக்ஷர மணமாலை பாராயணம் செய்வோம். அச்சமயம் ஸ்ரீ பகவான் திண் டில் சாய்ந்து கொண்டு கண்மூடி அமர்ந்திருப்பார்கள். பாராயணம் முடியவும், ஏழரை மணிக்கு இரவு ஆகாரம் சாப்பிடவேண்டிய நேரத்திற்கும் சரியாக இருக்கும். இவ்வாறு பாராயணம் நடந்து கொண்டிருக்கும்போது அநேகமாக இரண்டு, மூன்று நாட்களுக்கொருமுறை ஸ்ரீ பகவான் சமாதியில் ஆழ்ந்து விடுவார்கள். எங்கள் பாராயணம் முடிந்த பிறகும் ஸ்ரீ பகவான் கண்விழிக் காததைக் கண்டு மெதுவாகக் கூப்பிடுவோம். ஆனால் ஸ்ரீ பகவானுக்கு புறநினைவே இருக்காது. ஸ்ரீ பகவானை எழுப்ப, பெருமாள்ஸ்வாமி, அகண்டானந்தர், மஸ் தான் ஸ்வாமி முதலியவர்களுடன் நானும் சேர்ந்து அப் பொழுது ஆச்ரமத்தில் இருந்த ஐந்து சங்குகளையும் ஆளுக்கொன்ருக எடுத்து ஊதுவோம். அச்சங்கநாதம், உள்ளாழ்ந்து அசைவற்றிருக்கும் ஸ்ரீ பகவானின் உள் ளுணர்வில் போய் தொனித்து அவர்களை மெதுவாகப் புறவுலகத்திற்கு அழைத்துவரும். அன்று இரவு சாப்பாடு ஒன்பது மணிக்குதான் நடக்கும். இவ்வாறு அடிக்கடி நேர்வது வழக்கம். ஸ்ரீ அன்னையார் சமாதிக் கட்டிடத் திற்கு வந்த பிறகும் ஒருவாரம், பத்து நாட்களுக்கொரு முறை இப்படி, ஏற்படும். அச்சமயம் தண்டபாணி ஸ்வாமிகள், ஸ்ரீ பகவானின் பாதத்தை அழுத்திப் பிடித்து அசைத்து எழுப்ப முயற்சிப்பார். ஒன்றும் பலிக்காது. நாங்கள் ஊதும் சங்கு த்வனியால் மட்டுமே அவர்களை எழுப்பமுடியும். பிறகு நாள் செல்லச் செல்ல அந்நிலை மாறி விட்டது. வாஸிட்டத்தில் பிரகலாதனைத் தவத்தி லிருந்து எழுப்புவதற்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் சங்கெடுத் தூதி எழுப்பியதாகக் கூறப்பட்டுள்ளது.

வாஸிட்டம்—பிரகலாதன் கதை.

வலம்புரித்தொனி கிளப்பினன் மாதிரம் பிளப்ப
நிலம்பிளப்புற நெடுந்திசை பிளப்புற நிமிர்ந்த
அலம்புமோசையால் மெல்லென மெல்லென அறிந்தான்
நலம்பயப்புறு தற்பதத் தோன்றிய நல்லோன்.

27. ஸ்ரீ பகவான் ஹாஸ்யம்

ஸ்ரீ பகவான் எப்பொழுதாவது காலையிலோ, மாலையிலோ மலையிலிருந்து ஸ்ரீ அன்னையாரின் சமாதிக்கு வந்து போவது வழக்கம். ஐந்தாறு மாதங்கள் சென்றன. ஒருநாள் ஸ்ரீ சின்ன ஸ்வாமிகள் என்னிடம் "சாயந்திரம் கீழே வந்துவிடு, முடக்கத்தான் தோசைக்குப் போட்டிருக்கிறது, நாளைக் காலையில் தோசை வார்த்துத் தருகிறேன், ஸ்ரீ பகவானுக்கும் மற்றவர்களுக்கும் எடுத்துப் போகலாம் என்ருர்கள். நானும் சரியென்று கூறினேன். ஸ்ரீ பகவான் கைங்கர்யத்தை ராமகிருஷ்ணஸ்வாமியை பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு அன்று மாலையே ஸ்ரீ தாயார் சமாதிக்குடிலுக்கு வந்து விட்டேன். மறுநாள் விடியற்காலை எழுந்து பலாக்கொத்திலிருந்து சமாதிக்கருகில் உள்ள ஓடையில் டம்ளர்கள், தோசை எடுத்துப் போக வேண்டிய பாத்திரம் முதலியவைகளை துலக்கிக் கொண்டிருந்தேன். சரியான வெளிச்சம் கூட பரவவில்லை. திடீரென்று, "அதிதிக்கு ஏதாவது ஆகாரம் கிடைக்குமா?" என்ற குரல் கேட்டுத் திடுக்குற்று நிமிர்ந்து பார்த்தேன். மெய்சிலிர்த்து விட்டது. எதிரில், போர்வையைப் போர்த்திக் கொண்டு தலையில் துண்டுக் கட்டும், கையில் தடியுமாக தவயோகராஜராக ஸ்ரீ பகவான் நின்று கொண்டிருந்தார்கள். காணக்கிடைக்காத எழிற்கோலமாக இருந்தது. இதற்குள் பேச்சுக்குரல் கேட்டு வெளியில் வந்த ஸ்ரீ சின்ன ஸ்வாமிகளும், தண்டபாணி ஸ்வாமி

களும் ஸ்ரீ பகவானைப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் அங்கேயே இருந்து சூடாக தோசை சாப்பிடும்படி ஸ்ரீ பகவானிடம் மிக வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள். ஸ்ரீ பகவான் முதலில் மறுத்தும் பிறகு அவர்களுடைய அன்பு வேண்டுகோளைத் தட்ட முடியாமல் சம்மதித்தார் கள். வேப்பங்குச்சியால் பல் துலக்கி ஓடையிலேயே முகங் கழுவிக் கொண்டு உள்ளே வந்தமர்ந்தார்கள். அதற்குள் வாடிக்கையாக வரும் ஆட்டுப் பாலும் வந்தது. தோசையும் காபியும் ஸ்ரீ பகவான் சாப்பிட்டார்கள். என்னைப் பார்த்து "இப்படிப்பட்ட சாப்பாடு இங்கு கிடைப்பதால் தான் ஒவ்வொருவராக இங்கே வந்து சேர்ந்து விடுகிறார்கள் போலும்" எனக்கூறிச் சிரித்தார்கள்.

நான்காம் பகுதி

1. ஸ்ரீ அன்னையின் சமாதி ஆலய பிரவேசம்

எல்லோரும் சாப்பிட்டு முடிந்தது. இதற்குள் ஊருக்குள் இருந்த சடையப்பச் செட்டியார் காட்டுத் திரௌபதியம்மன் கோவிலுக்கு வந்தவர் (அவர் அக் கோவிலின் தர்மகர்த்தா) ஸ்ரீபகவான் ஸ்கந்தாச்ரமத்திலிருந்து இங்கு வந்திருப்பதறிந்து உடனே வீட்டிற்குச் சென்று அன்று சமையலுக்கு வேண்டிய பொருட்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு ஸ்ரீ அன்னையார் சமாதிக் கட்டிடத்திற்கு வந்து விட்டார். வயது முதிர்ந்த தன் தமக்கையாரால் மலை ஏறிவர இயலாததால் ஸ்ரீ பகவானைத் தரிசிக்க முடியாமல் வருந்துவதாகவும், அன்று ஸ்ரீ பகவான் அங்கேயே தங்கி பிக்ஷையை ஏற்றுக் கொள்ளும்படியும் தன் தமக்கையாரும் மற்றவர்களும் வந்து விடுவார்களென்றும் மிகக் கேட்டுக் கொண்டார். அதன் பேரில் ஸ்ரீ பகவானும் மறுக்க முடியாமல் சம்மதித்து விட்டார்கள். ராமகிருஷ்ண ஸ்வாமி ஸ்ரீ பகவான் இன்னும் ஸ்கந்தாச்ரமம் வரவில்லையே என நினைத்து ஸ்ரீ பகவானது வஸ்திரங்களுடன் வந்து சேர்ந்தார். ஸ்கந்தாச்ரமத்திலிருந்த மற்ற அன்பர்களும் வந்து விட்டனர். அன்று விமரிசையாக பிக்ஷை நடந்தேறியது. ஸ்ரீ பகவான் இங்கு வந்திருப்பதும் பிக்ஷை நடந்ததும் டவுனுக்குள் பரவி விட்டது. வழக்கமாக ஸ்கந்தாச்ரமம் வரும் நாயனாவும் இங்கேயே வந்து விட்டார். மற்ற பக்தர்களும் வந்து சேர்ந்தனர். மாலை மணி ஆறுக்குமேல் ஆயிற்று. ஸ்ரீ பகவானால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. டவுனிலிருந்து வந்திருந்தவர்கள் ஒவ்வொருவராகச் சென்று விட்டனர். நன்றாக இருட்டி விட்டதால் ஸ்ரீ பகவானும் நாங்களும் மலைக்குத் திரும்ப இயலவில்லை. வேறு வழியில்லாமல் அன்றிரவு இங்கேயே தங்கி விட்டோம். மறுநாள் அதிகாலையில் யாரும் எதிர்

பாராமல் வேறு ஒரு அன்பர் பிக்ஷை செய்விக்க வேண்டிய பொருள்களுடன் வந்து விட்டார். அன்றும் இங்கேயே தங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதற்கடுத்த நாளும் வேறொரு அன்பரின் பிக்ஷை. இந்நிலை தொடர்ந்து வந்தது. ஸ்ரீ பகவானால் இந்த அன்புத் தளையிலிருந்து மீள முடியவில்லை. ஸ்கந்தாச்ரமத்தில் சாமான்களெல்லாம் இருந்ததால் யாராவது அங்கே போயிருப்பது நல்லதென யோசித்தும் எவரும் தனிமையில் அங்கிருக்கப் பயந்து, போக விரும்பவில்லை. முடிவில் என்னை அனுப்பத் தீர்மானமாயிற்று. நானும் கோபால்ராவும் ஸ்கந்தாச்ரமம் போய்த் தங்கினோம். இங்கிருந்து எங்களுக்கு சாப்பாடு வந்து கொண்டிருந்தது. அன்பர்களும் தங்களுக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பை நழுவ விடாமல் போட்டி போட்டுக் கொண்டு பிக்ஷை நடத்தினார்கள். நானும் கோபால் ராவும் ஒரு வாரம் பொறுத்திருந்து பார்த்தோம். "ஸ்ரீ பகவான் சன்னிதானத்தில் இருப்பதற்கல்லாமல் கட்டிடக் காவலுக்காகவா வந்தோம்" எனப் பேசிக் கொண்டு நாங்களிருவரும் கீழே வந்தோம். எங்களைக் கண்டதும் ஸ்ரீ சின்ன ஸ்வாமிகள் "ஏன் வந்துவிட்டீர்கள் என்றார். "ஸ்ரீ பகவானை விட்டுவிட்டு எங்களால் இருக்க முடியவில்லை" என்றதும் யாரும் ஒன்றும் சொல்லவில்லை. ஸ்ரீ பகவானும் எதிர்பாராத சூழ்நிலையால் இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார்கள். சில தினங்கள் கழித்து ஸ்கந்தாச்ரமம் போய் வந்த அன்பர்கள் "அங்கே கட்டிடத்தின் கதவுகளெல்லாம் திறந்து கிடக்கிறது, சாமான்கள் திருட்டுப் போய்விட்டது" என்றார்கள். உடனே மேலே சென்று பார்த்தோம். ஸ்ரீ பகவான் உபயோகித்து வந்த நீண்ட பலகை, கடிகாரம் முதலியவைகள் திருட்டு போயிருந்தன. மிஞ்சியிருந்த சில சாமான்களை எடுத்து வந்துவிட்டோம். ஸ்ரீ பகவானும், "நல்லதாயிற்று, இனி யாரும் காவலுக்குப் போகவேண்டிய வேலையில்லை" என்றார்கள். சடையப்ப செட்டியாரின் தமக்கையாரைப்

போன்ற மற்றும் சில வயதுமுதிர்ந்த மெய்யன்பர்களின் சிரமத்தை நீக்கி அவர்களும் மனச் சாந்தி பெற்றுய்ய அருளும் நோக்கத்துடன் சில காரணங்களைக் காட்டி ஸ்ரீ அன்னையாரின் சமாதிக் கட்டிடமாகிய ஸ்ரீ மாத்ரு பூதேஸ்வரர் ஆலயத்தை நிரந்தர வாசஸ்தலமாகக் கொண்ட பேரருளை என்னென்று யாரால் உரைக்க முடியும் ?

2. பாண்டவாள் தீர்த்த ஸ்நானம்

இங்கு எல்லோரும் தங்க ஆரம்பித்த புதிதில் ஸ்நானத்திற்கு விடியற்காலை நாலு மணிக்கே எழுந்து காலைக்கடன் முடித்து ஸ்ரீ பகவானுடன் மலையடிவாரத்தி லுள்ள பாண்டவாள் தீர்த்தத்திற்குச் செல்வோம். ஸ்ரீ பக வானும் நாங்களும் பாண்டவாள் தீர்த்தத்திற்கு வருவ தறிந்து அண்ணாமலையார்கோயில் மூல மண்டபத்தி லிருந்து ஈச்வர சுவாமிகளும் மற்றவர்களும் தவறாமல் வந்து சேர்ந்து கொள்வார்கள். ஸ்ரீ பகவானும் ஈச்வர சுவாமிகளும் ஜலத்தின் மேல் பத்மாசனமிட்டுப் படுத் திருப்பார்கள். சாமாதாத்தாவும் ஜலத்தின்மேல் படுத் திருப்பார். நாங்களும் பழகிப் பார்ப்போம். அந்தக் காலத் தில் குளிர்மிகக் கடுமையாக இருக்கும். கட்டட வசதியோ, படுக்கை வசதியோ மிகக் குறைவு. ஸ்ரீ பகவானுக்கு ஒரு மேடையும் அதில் ஒரு விரிப்பும், திண்டும் இருக்கும். எங் களுக்கெல்லாம் முடைந்த தென்னங்கீற்றும், செங்கல்லும் இருக்கும். ஸ்ரீ பகவான் மேடைக்கருகில் நாங்களெல்லோ ரும் படுத்துக்கொள்வோம். ஸ்ரீ பகவான் பக்கத்தில் கும் மட்டி அடுப்பில் கரி கனன்று கொண்டிருக்கும். கரி குறைவாக இருந்தால் நாங்கள் புளிய மரத்தின் பட்டை யின் மேலிருக்கும் சிருய்த் தூள்களை நிறையச் சேகரித்துக் கொண்டு வந்து விடுவோம். ஸ்ரீ பகவான் இரவிலும் அதிகம் தூங்க மாட்டார்கள். குளிரினுல் எங்களுக்கும் தூக்கம் வராது. குமட்டியில் கணகணவெனத் தணல் இருக்கும்.

அதைச் சுற்றி ஸ்ரீ பகவானும் நாங்களும் உட்கார்ந் திருப்போம். அந்த அமைதியான வேளையில் ஸ்ரீ பகவா னின் திருவாக்கிலிருந்து ஞான முத்துக்கள் உதிரும். இனியொருமுறை திரும்பப்பெற முடியாத பொற்கால மாகும் அது. வெளியூரிலிருந்து பக்தர்கள் வந்திருந்தால் இரவில் அவர்களுக்கு எங்கள் இடங்களை விட்டுவிட்டு நாங்கள் எதிரிலிருக்கும் மண்டபம், காட்டுத் திரௌபதி யம்மன் கோவில் முதலிய இடங்களில் படுத்திருந்து விடியற்காலையில் ஆச்ரமம் திரும்பி விடுவோம். வெய்யிற் காலமாக இருந்தால் அரச மரத்தடியிலும் படுத்திருப்ப துண்டு.

3. பலகீரை உணவு

அந்நாளில் அரிசி குறைவாக இருக்கும்போது காட் டிற்குள் போய் பலவகைக் கீரைகள் பறித்து வருவோம். கீரையை ஆய்ந்து சுத்தம் செய்யும்போதே ஸ்ரீ பகவான் ஒவ்வொரு கீரையின் குணுகுணங்களையும், இது உஷ் ணம், இது சீதளம், இது இன்ன வியாதிக்கு நல்லது என விளக்குவார்கள். ஒரு பெரிய பாத்திரம் நிறைய ஆய்ந்து எடுத்து அவர்கள் சொல்லும் பக்குவத்தில் சமைப்போம். சாப்பிடும்போது கீரையை சாப்பாடாகவும் சாதத்தை தொட்டுக் கொள்ளவுமாகச் சாப்பிட சொல்லுவார்கள். தேவாமிர்தமாகத் திருப்தியாக வயிறு நிறைந்துவிடும். கீரைகளின் குணவிசேஷங்களை எப்படி அறிந்து சொல் வார்களோ தெரியாது. பள்ளியில் படித்துக் கொண்டிருந் தவர்கள் இங்கு வந்து தவத்தில் ஈடுபட்டார்கள். ஈதன்றி வேறெதிலும் ஈடுபடாதவர்களுக்கு சமையல் பக்குவத்தி லிருந்து இலை தைத்தல், பூத்தொடுத்தல், பலவகை ஊறு காய்கள் போடுதல் போன்ற எல்லாவிதமான காரியங் களும் எப்படி அறிந்தார்கள் என்பது மிக ஆச்சரியம்! பூரணப் பொருளான ஸ்ரீ பகவான் அறியாதது ஒன்று

யில்லை. இலை தைப்பதற்கு இலை பறித்து வருவோம். எச்சம்மாள், அவர் தங்கை இன்னும் இலை தைக்கத் தெரிந்த அன்பர்களும் ஸ்ரீ பகவானுடன் சேர்ந்து தைப்பார்கள். நன்ருக தைக்கத் தெரிந்தவர்களைவிட வேகமாகவும், அழகாகவும், சுத்தமாகவும் ஸ்ரீ பகவான் தைப்பார்கள். பார்க்கும்போதே கண்ணில் ஒற்றிக் கொள்ளும் படியாக இருக்கும்.

4. தொடர்ந்து கிரிபிரதக்ஷிணம்.

அந்தக் காலத்தில் வெளியூரிலிருந்து யாராவது பக்தர்கள் வந்தால் ஸ்ரீ பகவானுக்கு பிக்ஷை செய்து வைப்பார்கள். அப்பொழுதெல்லாம் ஐந்து ரூபாய் இருந்தால் ஒரு பிக்ஷை நடத்தி விடலாம். ஆச்ரமவாசிகளும் மிகச் சிலரே இருந்தோம். சாமான்களும் விலை சகாயமாக இருக்கும். பிக்ஷை நடத்திய பக்தர் அன்று மாலை ஸ்ரீ பகவானுடன் கிரிப் பிரதக்ஷிணம் செய்ய விரும்புவார். அவர் விருப்பப்படி ஸ்ரீ பகவானுடன் யாவரும் புறப்பட்டு மிக மெதுவாக நடந்து தியானமும் ஸ்தோத்திரங்களும் செய்து கொண்டு பிரதக்ஷிணம் முடிந்து ஆச்ரமம் வந்து சேர சில சமயங்களில் விடியற்காலையாகிவிடும். எங்களுக்கெல்லாம் ஸ்ரீ பகவானேடு சென்ற சந்தோஷத்தில் சிறிதும் அலுப்பே தோன்ருது. இரவு முழுவதும் கண் விழித்து நடந்த எங்களுக்கு மறு நாள் பகலில் சற்று கண்ணயர முடியும். ஆனுல் ஸ்ரீ பகவானுக்கோ தனிமையில் சிறிதும் ஓய்வெடுக்க முடியாது. காரணம், அன்பர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். அன்று பகல் மற்ருெரு அன்பரின் பிக்ஷை இருக்கும். அவரும் ஸ்ரீ பகவானுடன் பிரதக்ஷணம் செல்ல விரும்புவார். அவர் திருப்திக்காக ஸ்ரீ பகவானும் சம்மதித்து விடுவார்கள். முதல் நாள் இரவு பிரதக்ஷணம் சென்று வந்ததைச் சொல்லவேண்டாமென எங்களுக்குக் குறிப்பாக உணர்த்தி விடுவார்கள்.

இப்படியே இரண்டு, மூன்று தினங்கள்கூட இரவு, பகல் தூங்க முடியாத நிலை ஏற்படுவதுண்டு. ஆனால் இளம் வயதினரான எங்களுக்கு ஈதெல்லாம் விளையாட்டாகவும் உற்சாகமாகவும் இருக்கும்.

5. திரிவித ஜப முறை.

தண்டபாணி ஸ்வாமிகளும் ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்தில் இருக்கும் போதே வந்தவர். வந்து ஓரிரண்டு நாட்கள் கழித்து ஸ்ரீ பகவானிடம், தான் பெரியகுடும்பஸ்தரென்றும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஸ்ரீ பகவானே கதியென்று வந்து விட்டதாகவும், தனக்கு ஏதாவது உபதேசம் செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். ஸ்ரீ பகவானும் 'உபதேசம் என்றால் என்ன? தான் தானாயிருப்பதுதான்' என்றார்கள். அவர் மறுபடியும் ஸ்ரீபகவான் வாக்கால் உபதேசிக்கவேண்டுமெனப் பலமுறை கேட்கவும், ஸ்ரீ பகவான், இவர் விடமாட்டார், எனத் தெரிந்து அவரிடம், நீங்கள் இத்தனை நாள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் எனக் கேட்க, அவர் "எனக்கொன்றும் தெரியாது. ஸ்ரீ ராமநாம ஜபம் கோடி செய்திருக்கிறேன்" என்றார். ஸ்ரீ பகவான் "அதுபோதுமே, வேறென்ன வேண்டும், விடாமல் அதையே செய்துவந்தால் போதும்" என்றார்கள். அதை எப்படி ஜபிப்பது எனக் கேட்டார். உச்ச ஜபம், உபாம்ஸ ஜபம், மானசீக ஜபம் என மூன்று வகையுண்டு. உச்ச ஜபம் என்பது உதடு அசையும்படி ஜபிப்பது. அதைவிட உயர்ந்தது உபாம்ஸ ஜபம். உதடு அசையாமலே வாய்க்குள்ளேயே ஜபிப்பது. அதனினும் உயர்ந்தது மானசீக ஜபம். மனதையே வாயாகக் கொண்டு ஜபிப்பதாகும். இதன்படி இடைவிடாமற் செய்தாலே போதும் என்றார்கள். தண்டபாணி ஸ்வாமிகளும் இதைக் கேட்டு சமாதானமடைந்து சிறிது காலம் ஆச்ரமத்தில் தங்கியிருந்து சென்னைக்குச்

சென்றார். அங்கு கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக இருந்துவந்த தன் மாப்பிள்ளை சுப்ரமண்ய அய்யர் வீட்டிற்குக் கௌபீனதாரியாகப் போனார். தாம் சந்நியாசியாகி விட்டதாகவும் ஸ்ரீ பகவானிடம் உபதேசம் பெற்றதாகவும் கூறி ஸ்ரீ பகவான் அருளிய ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை புத்தகத்தையும் கொடுத்தார். சுப்ரமண்ய அய்யராகிய முகவைக் கண்ண முருகனார் ஸ்வாமிகள் ஸ்ரீ பகவானிடம் வரக்காரணமாக இருந்தவர் அவர் மாமனாராகிய தண்டபாணி ஸ்வாமிகளே.

6. இஞ்சிக்கொல்லை தீக்ஷிதரின் விஷமம்.

இஞ்சிக் கொல்லை யக்ஞராம தீக்ஷிதர் என்பவர் தற்சமயம் சென்னையில் உள்ள மகா பண்டிதர் ஜகதீச சாஸ்திரிகளின் தமயனார். அவர் ஆச்ரமம் வந்து இரண்டு மூன்று மாதங்கள் தங்கிச் செல்வார். மிக வைதீகர். தாமே துவைத்து உலர்த்திய நீர்காவியேறிய வேஷ்டியை பஞ்சகச்சமாக உடுத்துவார். ஆனால் மிக சுத்தமாக இருக்கும். சற்றுக் கிழிந்த வேஷ்டிகளை நாலு மூலைச் சவுக்கங்களாகத் தைத்து உபயோகத்திற்கு மடித்து வைத்திருப்பார். அந்தத் துண்டுகளின் சுத்தத்தைப் பார்த்து ஸ்ரீ பகவான், ஏது, எனக்குக்கூட ஒரு துண்டு கிடைக்குமா? என்பார்கள் விளையாட்டாக. அந்த நாளில் சிவைய்யா என்னும் ஆந்திர பக்தர் ஸ்ரீ பகவான் விருபாக்ஷியில் இருக்கும்போதே தரிசித்துச் செல்வார். அப்பொழுது சாதாரண கிருகஸ்த நிலையில் இருந்தார். ஆச்ரமம் வந்தால் சதா மந்திரம் ஜபித்துக்கொண்டே இருப்பார். ஒரு சருகு, குப்பை எது கிடந்தாலும் அவ்வப்பொழுது பெருக்கிச் சுத்தம் செய்வார். எச்சம்மாளுக்கு உதவியாக ஆச்ரமத்திலுள்ளவர்களுக்கு அவர்கள் கொண்டு வரும் சாப்பாட்டு பாத்திரத்தை, தான் எடுத்து வருவார். ஏதாவது கைங்கர்யம் செய்து கொண்டிருக்க

வேண்டுமென்ற ஆசை அவருக்கு. ஒரு முறை ஸ்ரீ பகவானும் சில பக்தர்களும் உச்சிமலைக்குச் சென்றிருப்பதறிந்து ஒரு குடம் நிறைய குடிஜலம் எடுத்துக்கொண்டு மலை உச்சிக்கு வந்து விட்டார். இப்படி கைங்கரியம் செய்து வந்தவர் கடைசி முறையாக ஸ்ரீ பகவானைத் தரிசிக்க ஆச்ரமம் வந்திருந்தார். அச்சமயம் இஞ்சிக் கொல்லை தீக்ஷிதரும் இருந்தார். சிவைய்யா தாம் சந்நியாசம் எடுத்துக்கொண்டு தென்னுட்டு யாத்திரை போகப் போவதாகவும் ஆந்திரரான தனக்கு வேறு பாஷையும் தெரியாது. மௌன விரதமும் எடுத்துக் கொள்வதால் தன்னைக் குறித்து கேட்புவர்களுக்கு காட்டுவதற்காக தன் குலம், கோத்திரம், சந்நியாச வரலாறு முதலியவைகளைச் சுருக்கமாக எழுதித் தரும்படி காவ்ய கண்ட கணபதி முனிவரிடம் கேட்டுக்கொண்டார். கணபதி முனிவரும் பத்து ஸ்லோகத்தில் அவரை மிக உயர்வாக வைத்து எழுதிக் கொடுத்தார். அந்த சுலோகம் எழுதிய சீட்டின் பின்புறத்தில் இஞ்சிக்கொல்லை தீக்ஷிதர் "இதில் எழுதியுள்ளவைகள் உண்மையல்ல" என்று தமிழில் அழகாக பென்சிலில் யாருக்கும் தெரியாமல் எழுதிவிட்டார். சிவைய்யா இங்கிருந்து யாத்திரை புறப்பட்டுச் சில இடங்களுக்குப் போனபின் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்திற்கும் சென்ருர். அங்குள்ளவர்களிடம் ஸ்லோகம் எழுதியுள்ள சீட்டைக் காண்பித்தார். அவர்கள் படித்துவிட்டு பின்பக்கத்தில் இஞ்சிக் கொல்லை தீக்ஷிதர் எழுதியிருந்ததையும் படித்துவிட்டு எல்லோரும் சிரித்து விட்டார்கள். சிவைய்யா, அவர்கள் சிரித்ததற்குக்காரணம் கேட்டுத் தெரிந்து கொண்டு உடனே இங்கு ஆச்ரமத்திற்கு வருத்தத்துடன் "யாரோ இப்படி எழுதி வைத்து விட்டார்கள்" என எழுதியிருந்தார். ஸ்ரீ பகவான் அக்கடிதத்தைப் படித்து எங்கள் எல்லோரையும் பார்த்து "யார் இப்படி எழுதினது" எனக் கேட்டுவிட்டு இஞ்சிக் கொல்லை தீக்ஷிதரையும் பார்த்தார்கள். உடனே அவர்

"நான் தான் எழுதினேன், பகவானே! கணபதி முனிவர் அவரை அப்படி தூக்கி வைத்து எழுதினது எல்லாம் உண்மையல்லவே, அதனுல்தான் அப்படி எழுதினேன்" எனத் தயங்கிக் கொண்டே சொன்னுர். ஸ்ரீ பகவான் சிரித்துக் கொண்டு சும்மா இருந்துவிட்டார்கள்.

7. மௌனஸ்வாமியின் சித்தியோகம்.

பிறகு சிவைய்யா குற்றுலத்தில் பெரிய மடங்களுடன் பெயரும் புகழுமாக விளங்கி "குற்றுலம் மௌனஸ்வாமிகள்" என பிரசித்தமாக இருந்து வந்தார். அச்சமயம் எச்சம்மாளும் வாசுதேவ சாஸ்திரிகளும் அவரைக்காணச் சென்றுர்கள். அப்பொழுது மௌனஸ்வாமிகள் ஸ்ரீமீனுக்ஷி அம்மன் குங்குமம் நினைத்த மாத்திரத்தில் வரவழைத்துக் காட்டினுர். பிறகு வாசுதேவ சாஸ்திரிகளிடம் "உங்கள் ஸ்வாமியால் இப்படி நினைத்ததெல்லாம் செய்ய முடியுமா" என எழுதிக் கேட்டார். அதற்கு சாஸ்திரிகள், "ஆமாம் ஸ்வாமி! அதுதானே முடியவில்லை! என்றுர். ஸ்வாமிகள், "எது முடியவில்லை" என வினவ, உடனே சாஸ்திரிகள் "நினைப்பு என்று ஒன்று எங்கள் பகவானுக்கு இருந்தால் தானே. அது இல்லாததால் தான் முடியவில்லை. நினைப்பு மறப்பு அற்ற இடத்தில் சும்மா இருத்தலேதான் ஸ்ரீ பகவானின் எதார்த்தநிலை, உபதேசமும் அதுதானே?" என்றதும் அருகில் இருந்தவர்கள் சிரித்து விட்டார்கள். ஸ்வாமிகளுக்கு முகம் சுண்டிவிட்டது.

8. தாத்தா ரெட்டியாரின் ஆரூடம்

குருமூர்த்தத்தில் ஸ்ரீ பகவான் இருந்தபோது தரிசிக்க வந்த அச்சுததாஸருடன் கூட வந்தவர் அச்சரப்பாக்கம் கிருஷ்ணு ரெட்டியார் என்பவர். அவர் பல வருடங்களுக்குப் பிறகு இங்கேயே வந்துவிட்டார். ரெட்டி

யார் வந்த சமயம் ஸ்ரீ பகவான் ஸ்ரீ அன்னையார் சமாதிக் கட்டிடத்தில் இருந்தார்கள். நாங்கள் அவரை தாத்தா ரெட்டியார் எனச் சொல்வது வழக்கம். நல்ல தியான புருஷர், திடகாத்திரர். ஜோதிடமும் தெரியும். அதில் மிக நம்பிக்கையும் உண்டு. அவர் ஸ்ரீ பகவான் சந்நி தானத்தில் இரண்டு மூன்று வருடங்கள் இருந்தார். அப்படித் தங்கியிருந்த காலத்தில் நந்தவனத்தில் நிறைய புஷ்பச்செடிகள் வைத்தும் மற்றும் பல கைங்கரியங்கள் செய்தும் வந்தார். பிறகு ஒரு முறை தம் சொந்த ஊருக் குச் சென்றுத் திரும்பி வந்தார். மறுதினம் எங்களிடம் தனக்கு இன்னும் ஒரு வாரத்தில் ஆயுள் முடியப்போவ தாகச் சொன்னுர். ஆனுல் அவரிடம் மாறுதல் ஒன்றும் தெரியவில்லை. சகஜமாக இருந்து கொண்டிருந்தார். அவர் குறிப்பிட்டிருந்தபடி அந்த வாரத்தின் கடைசி நாளன்று மாலை இலேசான ஜுரமும், சிறு மயக்கமும் ஏற்பட்டது. நாங்கள் ஸ்ரீ பகவானுக்குத் தெரிவித்தோம். ஸ்ரீ பகவான் "அவர்தான் பெரிய ஜோஸியராயிற்றே, தன் முடிவு தெரிந்துதான் அண்ணுமலையிலேயே அடங்க வேண்டுமென வந்துள்ளார்," என்ருர்கள். ரெட்டியார் அன்று இரவு முழுவதும் அதே நிலையிலேயே இருந்து வந்தார். அப்பொழுது இருந்த ஆச்ரமத்தின் ஒரு பகுதியிலிருந்த சிறு கொட்டகையில் படுத்திருந்தார். ஸ்ரீ பகவான் இரவு ஆகாரம் முடிந்து இப்பொழுது கோசாலை இருக்கும் பக்கம் சென்று வந்தவர்கள் ரெட்டி யார் படுத்திருந்த கொட்டகையில் வந்து பார்த்துவிட்டு அங்கேயே அமர்ந்திருந்தார்கள். ஸ்ரீ நரஸிம்மஸ்வாமியும் அங்கேயே உட்கார்ந்து பஜனை செய்து கொண்டிருந்தார். பத்து மணி சுமாருக்கு, நாங்கள் பார்த்துக் கொள்வதாக வும் ஸ்ரீ பகவானை போய் படுத்துக் கொள்ளும்படியும் கூறி ஞேம். வயதானவரான ஸ்ரீ நரஸிம்மஸ்வாமிகளும் சிறிது நேரம் இருந்துவிட்டு படுக்கச் சென்ருர். நானும், ராமகிருஷ்ணஸ்வாமியும் அங்கேயே இருந்தோம். விடி

யற்காலே நாலுமணிக்கு தாத்தா ரெட்டியாரின் ஆன்மா சாந்தியடைந்தது. உடனே ஸ்ரீ பகவானிடம் சென்று தெரிவித்தோம். ஸ்ரீ பகவானும் காலே எட்டுமணிக்குள் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யச் சொன்னூர்கள். அவ் விதமே எட்டு மணிக்குள் அடக்கம் - செய்யப்பட்டது. கிருஷ்ணுரெட்டியாரின் மறைவு குறித்து அச்சரப்பாக்கத் திற்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவர் அண்ணன் மகனுகிய சிவராம ரெட்டியார் என்பவர் வந்தார். கிருஷ்ணுரெட்டியார் தம் சிறிய தகப்பனுர் என அறிமுகம் செய்து கொண்டார். சிலநாள் ஸ்ரீ பகவான் சந்நிதியில் தங்கியிருந்து ஊர் திரும்பியவர் அடிக்கடி ஆச்ரமம் வந்து போவார். இப்படி சில முறை வந்து போனவர் பிறகு நிரந்தரமாக ஆச்ரமவாசியாகத் தங்கி ஆச்ரமப் புத்தக சாலே கைங்கர்யத்தை ஏற்று சுமார் 15 ஆண்டுகள் சிறப் புறச் செய்துவந்து சில வருடங்களுக்கு முன் கால மானுர்.

9. பிக்ஷான்னத்தின் பரமப்பிரயோசனம்

ஸ்ரீ பகவான் அடிக்கடி சொல்வார்கள், பிக்ஷை எடுப்பது சாதனேக்கு நல்லது என்று. “நான்” என்னும் அபிமானம் அழிந்து, தேகாத்மபாவமும் போகும் என் பார்கள். கீழ்ஆச்ரமம் வந்த புதிதில் ராமகிருஷ்ண ஸ்வாமிக்கு தான் பிக்ஷைக்குப் போகவேண்டுமென்னும் எண்ணம் தோன்றி ஸ்ரீ பகவானிடம் சொல்லிக்கொண்டு விருபாக்ஷிகுகையில் தங்கியிருந்து, ஊருக்குள் பிக்ஷைக் குப் போனுர். தெருவில் போய்க்கொண்டே “பிக்ஷை! பிக்ஷை”! எனக் கூறிக்கொண்டு போனுர். பொருள் விற்பவர்கள் சப்தமாகக் கூவுவதைப்போல் சொல்வதைக் கேட்ட சில சிறுவர்கள் அவரிடம் “காசுக்கு எத்தனே பிக்ஷை” எனக்கேட்டு கேலி செய்தனர். ஒரு நாள் போன தெருவிற்கு மறுநாளும் பிக்ஷைக்கு போகக்கூடா

தென ஸ்ரீ பகவான் சொல்வார்கள். அதன்படி இரண்டு மூன்று நாட்கள் வெவ்வேறு தெருவிற்குப் போய்வந்தார். நான்காம் நாள் ஒரு தெருவிற்குப் போய் பிக்ஷை, பிக்ஷை எனக் கூவினர். அப்பொழுது அத்தெருவிலுள்ள லக்ஷ்மி அம்மாள் என்பவர்கள், ராமகிருஷ்ணஸ்வாமியைப் பார்த்து அவர் ஆச்ரமவாசியெனத் தெரிந்து வற்புறுத்தி தம் வீட்டிற்குள் அழைத்துச் சென்று பாதம் கழுவி ஆசனமிட்டு, இலே போட்டுப் பரிமாறினர்கள். பிறகு ஸ்வாமியைப் பார்த்து சிவபுராணம் சொல்லும்படி கேட்க இவர் ஒன்றும் புரியாமல் உட்கார்ந்திருந்தார். இதைக் கண்ட லக்ஷ்மி அம்மாள் தானே அவர் எதிரில் உட்கார்ந்து சிவபுராணம் சொல்லி "கொண்டு வந்து மனே புகுந்து' என்ற பெரியபுராணப் பாடலும் பாடி கற்பூர ஆரத்தியும் செய்து நமஸ்கரித்துவிட்டு ராமகிருஷ்ண ஸ்வாமியை சாப்பிடும்படிச் செய்தார். ராமகிருஷ்ண ஸ்வாமிக்கு மிக அவமானமாக இருந்தது. தனக்கு அந்த சம்பிரதாயங்களெல்லாம் தெரியவில்லேயே என வருத்தமாகவும் இருந்தது. அத்துடன் பிக்ஷை எடுத்தது போதுமென ஆச்ரமம் திரும்பிவிட்டார்.

10. ஸ்ரீ பகவான் உரைத்த சம்பிரதாயம்

ராமகிருஷ்ணஸ்வாமி ஆச்ரமம் திரும்பியதும் நாங்கள் அவரிடம் விசாரித்து விவரம் தெரிந்துகொண்டோம். ஸ்ரீ பகவானுக்கு இது தெரிந்ததும் சிரித்துக் கொண்டே, "என்ன செய்வது? வறுமையினல் பிக்ஷைக்குப் போனல் கூனிக்குறுகி, தயங்கிக் கேட்க வேண்டியிருக்கும். அவனுக்கு என்ன, பணமில்லேயா? சாப்பாட்டிற்கில்லேயா? ஏதோ ஒரு சம்பிரதாயத்திற்குப் போனவன் தானே? அதனுல்தான் கம்பீரமாக 'பிக்ஷை' என்று கூவியிருக்கிருன். நானும் பிக்ஷைக்குப் போகும் காலத்தில் உதாசீனமாக, கம்பீரமாகப் போவேன். அது

இயற்கையாக ஏற்படுவதுதான் என்ருர்கள்.'' பிறகு சாதுக்களாக இருப்பவர்களுக்கு சிவபுராணம், பெரியபுராணப் பாடல் முதலியவைகள் தெரிந்திருக்கவேண்டும். பிக்ஷைக்குப் போனுலும் பெரிய மடங்களுக்குச் சென்ருலும் பந்தியில் உட்கார்ந்து சாப்பிடுவதற்கு முன் சொல்லவேண்டும். வடதேசத்திற்குப் போனுல் சொல்ல வேண்டியது பகவத்கீதை 15ஆம் அத்தியாயமும், சிவமஹிம்ன ஸ்தோத்திரமும் ஆகும். ஆனுல் அது இங்கு எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்ருர்கள். இதைக் கேட்ட பிறகுதான் நான் சிவபுராணம், பெரிய புராணப்பாடல், பகவத்கீதை சுலோகம் முதலியவைகளைக் கற்றுக் கொண்டேன். ஏதாவது மடங்களுக்கோ, ஆச்ரமங்களில் விசேஷமென்ருலோ ஸ்ரீ பகவான் என்னைப் போகச் சொல்வார்கள். நானும் சம்பிரதாயம் தெரிந்த தைரியத்தில் சென்று வருவேன்.

11. தாயும் சேயும்

ராமகிருஷ்ணஸ்வாமிக்கு பிக்ஷை செய்வித்த லக்ஷ்மி அம்மாள் சிறந்த பக்தியுள்ளவர்கள். அமாவாசை, கிருத்திகை, மாதப்பிறப்பு போன்ற விசேஷ தினங்களில் விடியற்காலையிலேயே ஸ்நானம் செய்து ஆசாரமாக தம் ஒரே மகனுன எட்டுவயதுப் பிள்ளையுடன் கிரிபிரதக்ஷணம் புறப்பட்டு வரும் வழியில் காலை 5 மணி சுமாருக்கு ஆச்ரமம் வருவார்கள். அவர்களைக்கண்டதும் ஸ்ரீ பகவான் ''ஓகோ! இன்று கிருத்திகையா? மாதப்பிறப்பா? எனக் கேட்பார்கள். இவர்களைப் பார்த்தால்தான் நாள் கிழமைகள் தெரிகிறது என்பார்கள். லக்ஷ்மி அம்மாள் தன் பிள்ளை ராமச்சந்திரனை தக்ஷிணுமூர்த்தி ஸ்தோத்திரம் சொல்லும்படி சொல்வார்கள். அப்பிள்ளைக்கு பாட்டின் தலைப்பு மட்டும் நினைவு வராது. ஸ்ரீ பகவான் தலைப்பு எடுத்துக் கொடுப்பார்கள். ஸ்ரீ ஆதிசங்கரரின்

தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்திரத்தை ஸ்ரீ பகவான் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். சிறுவன் ராமச்சந்திரனுக்காகவே அத்தோத்திரத்தின் தலைப்புக் கவிகளைத் தொகுத்து எழுதி கொடுத்தார்கள். "மன்னுமா, மௌனமா, உலகுகண், வித்துளே, எவனெளி, பலதுளை, உடலுயிர், இராகு, குழவிமுன், உலகையார், மண்புனல், சருவமும்" என்பதாகும். அடியார்களிடம் மிக்க பக்தியும், அன்பும் கொண்டிருந்த லக்ஷ்மி அம்மாளின் குமாரராகிய ராமச்சந்திரன் செட்டியார், முனிசிபல் மானேஜராக, அண்ணாமலையிலேயே வேலை பார்த்து தற்சமயம் ஓய்வில் இருந்து கொண்டு ஸ்ரீ அண்ணாமலையாரையும் ஸ்ரீ பகவானையும் தரிசனம் செய்து கொண்டு அமைதியாக வாழ்ந்து வருகிறார்.

12. தபஸ் லக்ஷணம்

ஸ்ரீ பகவானுக்கு நானும், ராமகிருஷ்ணஸ்வாமியுமாக கைங்கரியம் செய்து வந்தோம். ஆனால் இருவரும் செய்வதற்கு வேண்டிய கைங்கரியம் இருக்காது. ஆகையால் குரு சந்நிதானத்தில் வேலை இல்லாமல் சாப்பிடுவது முறையல்ல என்ற எண்ணத்தில் நானும் அவரும் தபசுக்கென்றும் பிக்ஷைக்கென்றும் ஒருவர் மாற்றி ஒருவர் போவது வழக்கம். அவருக்கு அவர் அண்ணன் மாதம் ரூ 25/- அனுப்பி வந்தார். அந்தக் காலத்தில் அது ஒரு பெரிய தொகையாகும். ஊருக்குள் இருந்த சௌபாக்யத்தம்மாள் சாதுக்களுக்கு மாதம் ஐந்து ரூபாய்க்கு சாப்பாடு செய்து வைப்பார்கள். அந்த அம்மாள் சாதுக்களுக்குக் கைங்கரியம் செய்ய வேண்டுமெனும் எண்ணத்தில் ஊருக்குள் தங்கிக்கொண்டு சாதுக்களுக்கு அன்ன கைங்கரியமும் ஸ்ரீ பகவான் தரிசனமுமாக இருந்து வந்தார்கள். நான் ஆச்ரமத்திற்கு வெளியில் தங்கியிருக்கும்

காலத்தில் ராமகிருஷ்ணஸ்வாமி எனக்காக சௌபாக்யத் தம்மாளிடம் ரூ. ஐந்து கொடுத்துவிடுவார். தானும் அப் படி வெளியில் தங்கியிருக்கும் சந்தர்ப்பங்களில் ஏற்பாடு செய்து கொள்வார். காலே, இரவு ஆகாரம் சாப்பிடமாட் டோம். பகல் ஒரு வேளே மட்டும் அந்தம்மாள் வீட்டு ஆகாரத்துடன் இருந்து விடுவோம். ஆச்ரமவாசிகளாம் நாங்கள் தங்கியிருந்த விருபாக்ஷி குகைக்கே ஆகாரத்தை அனுப்பிவிடுவார்கள். ஒருமுறை ராமகிருஷ்ணஸ்வாமி தபசுக்கென்று விருபாக்ஷியில் தங்கும் எண்ணத்துடன் சென்ருர். மூன்று நாள் சென்றன. நான்காம் நாள் தியானம் செய்யும் பொழுது அவருக்கு ஒரு பெரிய ஜோதி தெரிந்தது. உடனே ஆனந்தமும் ஆச்சரியமும் அடைந் தவர், இவ்வளவு பெரிய ஜோதியில் கும்பகோணம் தெரி யுமா, என நினேத்தாராம். கும்பகோணம் தெரிந்ததாம். அப்படியானுல் கும்பகோணத்திலுள்ள ரமணுச்ரமம் தெரியுமா என நினேத்தாராம். அங்குள்ள ரமணுச்ரமும் தெரிந்ததாம். அவர் மிக வியந்து மகிழ்ச்சியுடன் ஆஹா! நமக்கு இவ்வளவு சீக்கிரம் அண்ணுமலேயார் ஜோதி தரி சனம் கொடுத்துவிட்டாரே! அத்துடன் நினேத்ததெல்லாம் தெரிகிறதே என்ற சந்தோஷத்துடன் ஆச்ரமம் திரும்பி விட்டார். வந்தவர் எங்களிடமெல்லாம் தம் ஜோதி தரிசன அனுபவத்தைச் சொல்லி சொல்லி ஆனந்தித் தார். எங்களுக்கெல்லாம் பெரிய ஆச்சரியமாக இருந் தது. இதை ஸ்ரீ பகவானிடம் சொன்னதும், "ஓகோ! இது தான் தபசா! வெகு அருமையாக இருக்கிறது. தபசுக்குப் போனுராம், கும்பகோணம் தெரிந்ததாம், ஆச்ரமம் தெரிந்ததாம். நல்ல தபசய்யா இது! தபசு என்ருல் மனம் தோன்றும் இடத்திலேயே அடங்கி இருந்து ஆத்மஸ்புரணமாக இருப்பதுதான். அதன்றி, அதைப் பார்த்தேன், இதைச் செய்தேன் என்பதெல்லாம் நிலேத்த நிலேகளல்ல," எனச் சொன்னுர்கள். பிற்காலத்தில் உபதேச உந்தியாரிலும்:

உதித்த விடத்தி லொடுங்கி யிருத்த
லது கன்மம் பத்தியு முந்தீபற
அதுயோக ஞானமு முந்தீபற,

தானு யிருத்தலே தன்னை யறிதலாந்
தானிரண் டற்றதா லுந்தீபற
தன்மய நிட்டையீ துந்தீபற

என்று எழுதியுள்ளார்கள்.

13. விரத சேஷ்டை

ஸ்ரீ பகவான் சன்னிதியில் இருந்த எங்களுக்கு எப்பொழுதும் ஆனந்தலஹரிதான். இளம் பிரம்மச்சாரிகளான எங்களுக்கு எல்லாமே விளையாட்டுகள்தாம். பட்டினி கிடப்பது, தனியாக தபசுக்குப் போவது, செத்த ஜடமாக இருந்து பார்ப்பது, ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை கிரி பிரதக்ஷிணம் செய்வது, படுக்கையில்லாமல் வெறும் தரையில் நாள் கணக்கில் படுப்பது போன்றவைகளே எங்களுடைய விளையாட்டுகளாகும். ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்திலிருந்து நிரந்தரமாக இங்கே வந்த பிறகு ஸ்ரீ அண்ணாமலையார் கோவில் குருக்களாகிய விருத்தாசலம் என்பவர் ஸ்கந்தாச்ரமத்தில் வந்து தங்கியிருந்தார். அவர் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி உபாசகர். அவருக்கு பலவித மருந்து மூலிகைகள் தெரியும். ஒரு பச்சிலைச்சாற்றை பேதிக்காக சாப்பிடுவார். மறுநாள் வேறு ஒரு பச்சிலைச்சாறு ஒரு டம்ளர் நிறைய குடித்து விடுவார். பிறகு ஸ்கந்தாச்ரமத்தின் உள்ளே உள்ள சின்ன அறையில் போய் உட்கார்ந்து கொண்டு வெளியில் பூட்டிவிடுமாறு சொல்வார். அதற்கெல்லாம் நம்பிக்கையானவன் நான்தான். ஒரு வாரத்திற்குப்பின்

அறையைத் திறந்து, அவரைப் பிடித்து அசைத்து எழுப்பி விடுவேன். இப்படி பலமுறை நடந்ததுண்டு. எனக்கும் அப்பச்சிலேயைக் காட்டிக் கொடுத்தார். எனக்கு அந்த முறைகளில் விருப்பம் இல்லாததால் அப்பொழுதே அதை மறந்துவிட்டேன். ஒருநாள் நானும் குருக்களு மாகப் பேசிக்கொண்டு எட்டு நாளேக்கு இரவு பகல் தூங்காம லிருப்பதென முடிவு செய்தோம். வழக்கம் போல் ஸ்ரீ பகவானின் கைங்கரியங்களே ராமகிருஷ்ண ஸ்வாமியை கவனித்துக் கொள்ளும்படி கூறி விட்டு நானும், குருக்களும் டீ தவிர வேறொரு ஆகாரமும் சாப்பிடாமல், படிப்பதும் தியானம் செய்வதுமாக பகல் நேரத்தைக் கழித்துவிட்டு, இரவு பத்துமணிக்குப் பிறகு ஸ்கந்தாச்ரமத்திலிருந்து மிக மெதுவாக நடந்து கீழே ஆச்ரமத்திற்கு 12 மணி சுமாருக்கு வந்து சேருவோம். அந்த நேரந்தான் ஸ்ரீ பகவான் எழுந்து வெளியில் வரும் வழக்கம். நாங்கள் ஸ்ரீ பகவான் சன்னிதியில் வெகு நேரம் இருந்துவிட்டு விடியற்காலே ஸ்கந்தாச்ரமம் திரும்பி விடுவோம். நான்கு நாட்கள் சென்றது. ஐந்தாம் நாள் எங்களால் சமாளிக்க முடியவில்லே. எத்தனே நாள் உப வாசம் இருந்தாலும் இருக்கலாம். தூக்கத்தை அறவே நீக்க முடியவில்லே. ஐந்தாம் நாள் இரவு வழக்கம்போல் ஆச்ரமம் சென்ருேம். எங்களுடைய சோர்வைக்கண்ட ஸ்ரீ பகவான் "போதும், போதும், உங்கள் விரதமும் சேஷ்டையும், விரதத்தை முடித்துவிட்டு அவியலும், சாப் பாடும் இருக்கிறது, போய்ச் சாப்பிடுங்கள்" என்ருர்கள். நாங்களும், இனி முடியாது எனத் தெரிந்து கொண் டோம். குருக்கள் எனக்கும் ஆகாரம் கொடுத்து விட்டு தானும் சாப்பிட்டார். அத்துடன் எங்கள் விரதமும் முடிந்தது. மறுபடியும் ஸ்ரீ பகவான் கைங்கரியம் செய் யத் தொடங்கினேன்.

14. ஏகபக்தியும் நமஸ்கார தத்துவமும

சிலநாள் கழித்து யாத்திரையாகப் புறப்பட்டுக் கோவிலூர் மடம் போய்ச் சேர்ந்தேன். அப்பொழுது கோவிலூர் மடாதிபதியாக இருந்த ஸ்ரீ மகாதேவஸ்வாமிகள் முன்பு திருவண்ணுமலை ஈசான்ய மடாதிபதியாக இருந்தவர். இங்கிருக்கும்போது அடிக்கடி வந்து ஸ்ரீ பகவானை தரிசித்துச் செல்வார். எங்களிடமெல்லாம் அன்பாகப் பேசுவார். ஒவ்வொரு தீபாவளிக்கும் தவருமல் ஸ்ரீ பகவானுக்கு ஒரு பாட்டிலில் எண்ணெ, சீயக்காய்ப் பொடி, புது லங்கோடு கௌபீனம் முதலியவைகளை அனுப்புவார். தலைமை மடமாகிய கோவிலூர் மடாதிபாதியாகச் சென்றபிறகும் தனக்குப் பதிலாக ஈசான்ய மடாதிபதியாக வந்த ஸ்ரீ நடேச ஸ்வாமிகளிடம் சொல்லி ஏற்பாடு செய்து தம் கடைசிக்காலம் வரை அனுப்பி வந்தார். ஸ்கந்தாச்ரமக் கட்டிட வேலைக்கு ஸ்ரீ மகாதேவ ஸ்வாமிகள் பணஉதவி செய்தார். அதற்கு தலைமை மடத்தைச் சேர்ந்த மற்றவர்கள் தங்கள் மடத்திற்கு சம்பந்தமில்லாதவைகளுக்கு அவர் எப்படிப் பணம் கொடுக்கலாம் என ஆட்சேபித்தார்கள். அதற்கவர், நாமும் நம் மடங்களும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் அடங்கியவை. ஆனுல் ஸ்ரீ பகவானே, அவர் நிலையோ எதற்குள்ளும் அடக்கமுடியாத மேல் நிலையில் உள்ளது. அப்படிப்பட்ட மஹானுக்கு செய்யக்கூடிய பாக்கியம் கிடைத்தது நம் பாக்கியமே. மடத்துப் பணத்தில் கொடுப்பது சரியல்ல என்ருல் என் சொந்தக் கணக்கில் வைத்துக் கொள்கிறேன் என்ருர். ஸ்ரீ பகவானிடம் அவ்வளவு ஈடுபாடு. நான் கோவிலூர் மடம் சென்று சில தினங்கள் தங்கியிருந்து ஆச்ரமம் திரும்பினேன். ஸ்ரீ பகவான் நான் எங்கு போய்வந்தாலும் யாவற்றையும் விவரமாகக் கேட்பார்கள். அதுபோல் கோவிலூர் மடம்போய் வந்தது குறித்தும் விசாரித்தார்கள். நான் ஸ்ரீ மகாதேவஸ்வாமிகள் என்னிடம் ஸ்ரீ பகவான்

நலத்தையும் ஆச்ரமவாசிகளைக் குறித்தும் அன்பாக விசாரித்து உட்காரச் சொன்னார். நான் சென்ற தினம் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரும் அவரைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தார்கள் என்றேன். செட்டியார் என்ன செய்தார் என ஸ்ரீ பகவான் கேட்டார்கள். அவர் மிக பவ்யமாக உத்தரீயத்தை இடுப்பில் கட்டிக் கொண்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து விபூதி வாங்கிக்கொண்டதாகச் சொன்னேன். ஸ்ரீ பகவான், 'நீ நமஸ்காரம் செய்தாயா?' என்றார்கள். நான் தயங்கிக்கொண்டே இல்லை என்றதும், ஏன் எனக்கேட்டார்கள். ''பகவானுக்கு நமஸ்காரம் செய்யும் பாக்கியம் கிடைத்த பிறகு வேறு ஒருவருக்கு எப்படி செய்ய முடியும், ஆகையால்தான்" என்றேன். ஸ்ரீ பகவான் என்னைப் பார்த்து "ஆஹா! ரொம்ப பகவானைத் தெரிந்தவன், மஹாபுத்திசாலி! உன் பகவான் இந்த கட்டிடத்திற்குள் சோபாவில் ஐந்து, ஆறடி சரீரத்திற்குள்தான் இருக்கிறார். வேறு எங்கும் இல்லை போலும்? அப்படி ஏகபக்தி உள்ளவன் மற்ற இடங்களுக்குப் போகக்கூடாது. அப்படிப் போனால் சம்பிரதாயப்படி நடக்கத் தெரியவேண்டும். எங்கு எவரை யார் நமஸ்கரித்தாலும் தன் இஷ்ட தெய்வத்தையோ, குருவையோ மனதில் தியானித்து நமஸ்கரித்தால் அந்த நமஸ்காரம் அவர்களைப் போய் சேர்ந்துவிடும். அதுதான் முறை" என்றார்கள். நான் என் தவறை உணர்ந்தேன். அதிலிருந்து யாரை நமஸ்கரிக்க நேர்ந்தாலும் ஸ்ரீ பகவானை மனதில் தியானித்து செய்வது வழக்கம்.

15. கிரிப்பிரதக்ஷண பலனும் சஞ்சார சமாதியும்

சாது ஒருவர் தினம் தவறாமல் கிரிப்பிரதக்ஷணம் செய்து வந்தார். அது தவிர வேறு தியானமோ, ஜபமோ ஒன்றும் செய்வதில்லை. அவர் ஒருநாள் ஸ்ரீ பகவானிடம் ஒரு குறிப்பிட்ட புத்தகம் வேண்டுமெனக் கேட்டார்.

ஸ்ரீ பகவானும் என்னைக் கூப்பிட்டு எடுத்துத்தரச் சொன்னார்கள். பிறகு அவருக்கு புத்தகம் கொடுத்தாயா? எனக் கேட்டார்கள். நான் கொடுத்துவிட்டதாகச் சொல்லி ஸ்ரீ பகவானிடம் மெதுவாக, அவர்தான் பிரதக்ஷணம் தவிர வேறொன்றும் செய்வதில்லையே, ஒன்றும் தெரியவும் தெரியாதே, அவருக்கு புத்தகம் எதற்கு என்று கேட்டேன். ஸ்ரீ பகவான் என்னைப் பார்த்து பிரதக்ஷணத்தைவிட மேலானது வேறு என்ன இருக்கிறது. அது ஒன்றே போதுமே! ஒரே இடத்தில் அமர்ந்து தியானமோ ஜபமோ செய்தால்கூட மனம் வெளியில் அலையும். ஆனால் பிரதக்ஷணம் செய்யும்போது கருவிகரணங்கள் வேலை செய்து கொண்டிருந்தாலும், மனம் ஒரே தாரையில் நிற்கும். வேறு ஒரு எண்ணமும் இல்லாமல் தியானமோ ஜபமோ செய்துகொண்டு ஏகாக்ர சிந்தையுடன் செல்வதுதான் சஞ்சார சமாதி என்பதாகும். அதனால்தான் அந்தக் காலத்தில் யாதொரு வாகன வசதியும் இல்லாமலே, நடந்தே யாத்திரை செல்வதென்பது முக்கியத்துவம் பெற்றிருந்தது. அதிலும் கிரிபிரதக்ஷணம் மிக விசேஷமானதாகுமே! இம் மலையில் பலவித மூலிகைகள் இருப்பதால் அதன் காற்று உடம்பிற்கும் நல்லது. மலையில் பல சித்தர்களும் மஹான்களும் இப்பொழுதும் இருக்கிறார்கள். அவர்களும் நம் கண்களுக்குப் புலப்படாமல் கிரிவலம் வருகிறார்கள். ஆகையால் நாம் கிரிபிரதக்ஷணம் செய்யும்போது நமக்கு இடது புறமாக ரோடு ஓரமாக நடக்க வேண்டும். அப்படிச் சென்றால் அச்சித்தர்களுக்கு நாம் இடையூறாக இல்லாமலும் அவர்களையும் சேர்த்துச் சுற்றிய பலனும் கிடைக்கும். அவர்கள் ஆசியும் கிட்டும். உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆரோக்கியமும் ஆத்ம சாந்தியும் கிடைக்கிறது. ஆகையால் கிரி பிரதக்ஷணம் சாமான்யமானதல்லவென்றும், மற்றும் பல மகிமைகளையும் சொன்னார்கள். கிரிபிரதக்ஷண மேன்மையை ஸ்ரீ பகவான் வாக்கால் கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்றேன்.

அதிலிருந்து பிரதக்ஷணம் போவதில் ஆர்வமும் ஆனந்த மும் ஏற்பட்டது.

16. திரும்பிய கந்தன்

மதுரை திருப்புகழ் அலமேலு அம்மாளுக்கு ஸ்ரீ சுப்ர மண்யமே கண்கண்ட தெய்வமாகும். அவரே தமக்கு குருவாக வரவேண்டுமென்றும், வேறு யாரையும் குருவாக ஏற்பதில்லை என்றும் சங்கற்பித்திருந்தார். சதா திருப் புகழ் பாடி வந்ததால் திருப்புகழ் அலமேலு அம்மாள் எனப்பெயர் வந்தது. இங்கு டிப்டி கலெக்டராக இருந்த அவர் தகப்பனார் வீட்டிற்கு மதுரையிலிருந்து வந்திருந்த சமயம் ஸ்ரீ பகவானை தரிசிக்க தன் தகப்பனார் அழைத்த போது வர மனமின்றி இருந்துவிட்டார். அன்றிரவு கனவில் ஸ்ரீ பகவானை தரிசித்தார்கள். ஸ்ரீ பகவான் திரு வுரு மறைந்து ஸ்ரீ சுப்ரமண்யமாகக் காக்ஷி அளித்ததைக் கண்ட அலமேலு அம்மாள் மறுநாள் ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானை தரிசித்து அமர்ந்திருந்தார். முதலில் பார்க் கும்போது ஸ்ரீ பகவானின் திருமேனியைக் கண்டார். அப்படியே பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஸ்ரீ சுப்ர மண்யமாகக் கண்டு பூரண சரணாகதி அடைந்தார். பிறகு அடிக்கடி வந்து ஸ்ரீ பகவானை தரிசித்துச் செல்வார். 'அருணாசல அக்ஷரமணமாலை பாராயணத்தின்போது மற்றவர்கள் "திரும்பியகந்தனை தினமகக்கண்காண்" எனப் பாடும்போது, அலமேலு அம்மாள் மாத்திரம் "திரும்பிய கந்தனை தினமகக்கண்காண்" எனப்பாடு வார். அவர்களுடைய சுப்ரமண்ய ரமணனிடம் உள்ள ஏகபக்திக்கு அது ஓர் எடுத்துக்காட்டாக இருக்கும்.

17 யார்?

புதுக்கோட்டை கி. லக்ஷ்மண சர்மா, B. V. நரசிம்ம ஸ்வாமிகள் இங்கு இருந்த காலத்தில் அவருடன் இருந்

தவர். இருவரும் முன்னர் வக்கீலாகத் தொழிலாற்றி யவர்கள். சர்மாவுக்கு ஸ்ரீ பகவானது விசார மார்க்கத்தில் அழுத்தமான பிடிப்பு ஏற்பட்டு ஸ்ரீ பகவான் சந்நிதியிலேயே பல ஆண்டுகள் இருக்கும் பாக்கியம் பெற்றவர். ஸ்ரீ பகவானின் "உள்ளது நாற்பது" எனும் நூலை பல விருத்தங்களில் வடமொழியில் இயற்றினர். தாம் எழுதியது பிரசுரமாக வேண்டுமென்றோ, அல்லது வேறு ஒரு எண்ணத்திலேயோ எழுதாமல் அத்தெய்வீக நூலில் தன்னை மறந்து ஈடுபட்டார். அவருடைய ஈடுபாட்டைப் பார்த்து ஸ்ரீ பகவான், "அதைப் பலவித விருத்தங்களாக எழுதிப் பார்ப்பதே அவருக்குப் பெரிய தபஸாக இருக்கிறது போலும்" எனக் கூறினர்கள். அந்த ஸம்ஸ்கிருத விருத்தங்கள் கையெழுத்துப் பிரதியாகவே ஆச்ரமத்தில் உள்ளது. ஸ்ரீ பகவானின் விசாரமார்க்கத்தை அவர் ஆங்கிலத்தில் அழகுற எழுதியது "மகாயோகம்" எனும் நூலாக வெளிவந்துள்ளது. "உள்ளது நாற்பது"க்கு "யார்" எனும் பெயரில் தமிழில் விரிவுரையும், ஸ்ரீ பகவானருளிய "ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை"க்கு பொழிப்புரையும் எழுதியுள்ளார்.

18. எவரிடத்தும் நன்மையையே காணும் ஸ்ரீ பகவானது தனிச்சிறப்பு

எவரைக் குறித்தும் நல்லது கெட்டது எதுவும் ஸ்ரீ பகவானுடைய வாக்கிலிருந்து வராது. ஆனல் யாராவது இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டால் உடனே ஸ்ரீ பகவான் இறந்தவரின் மேலான குணாதிசயங்களைக் குறித்து அருகிலிருப்பவர்களிடம் சொல்வார்கள். சாதாரணமாக பிறர் அறிந்து கொள்ள முடியாத நல்ல குணங்களை எல்லாம் எப்படித்தான் அறிந்து கொள்வார்களோ தெரியாது. அவர்கள் சொல்வதைக் கேட்கும் நமக்கு, இறந்தவர் இத்தனை நற்குணம் படைத்தவரா? என ஆச்-

சரியமாக இருக்கும். அதன் காரணமாக நாம் இறந்து, நம்மைக் குறித்து ஸ்ரீ பகவான் வாக்கால் புகழும் பாக்கியம் பெற வேண்டுமெனும் ஆவல் எங்களுக்கு ஏற்படும். ஆனல் நாம் யாரும் அந்தப் பெருமை பெற பாக்கியம் செய்யவில்லையே! ஒருவர் மறைந்த செய்தி அறிந்ததும் உடனே ஸ்ரீ பகவான் சந்நிதியில் போய் அமர்ந்து விடுவோம். ஏனென்ருல் ஸ்ரீ பகவான் வாக்கால் பேசப்படும் குணுதிசயங்களைக் கேட்கும் ஆவலினுல். ஊருக்குள் கந்தசாமி என்பவர் பணவசதி படைத்தவர். ஆனல் அவருடைய பண்பு குறைவான நடத்தையினுல் பொது மக்களுக்கு அவர் மீது மிக வெறுப்பு உண்டாயிற்று. எப்பொழுதாவது ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானைத் தரிசித்துச் செல்வார். கடைசி நாளில் மிக வறுமையால் கஷ்டப்பட்டு நோயினுல் வருந்தினுர். ஆச்ரமத்திற்கு எதிரிலுள்ள மண்டபத்தில் வந்து படுத்திருந்தவர் வேறு ஒருவர் மூலம் தனக்கு மலையாளக் கஞ்சி வேண்டுமெனக் கேட்டனுப்பினுர். உடனே ஸ்ரீ பகவான் கஞ்சி தயாரித்து அனுப்பும்படி சொன்னுர்கள். அன்றும் மறுநாளும் கஞ்சி அனுப்பினேம். கந்தசாமியின் உடல்நிலை அதிக மோசமாக இருந்தது. இவர் இறந்துவிட்டால் இவரைப் பற்றி ஸ்ரீ பகவான் எந்த நல்ல குணத்தைச் சொல்ல முடியும் எனப் பார்க்க வேண்டுமென நாங்கள் பேசிக் கொண்டோம். அதற்கு அடுத்த நாள் கந்தசாமி காலமாகிவிட்டார். உடனே நாங்கள் ஸ்ரீ பகவானிடம்போய்த் தெரிவித்துவிட்டு அங்கேயே அமர்ந்துவிட்டோம். அவரைக் குறித்து புகழ்ந்துரைக்க ஸ்ரீ பகவானுக்கு ஒன்றும் இருக்காதென எண்ணியிருந்த எங்களுக்கு என்ன ஏமாற்றம்! ஸ்ரீ பகவான் எங்களிடம் "கந்தசாமிபோல் உடம்பும் துணியும் சுத்தமாக வைத்துக் கொள்ள யாராலும் முடியாது. இஞ்சிக்கொல்லை தீக்ஷிதருக்கு அடுத்தபடியாக சுத்தத்தில் இவர்தான். எண்ணெயும் தேய்த்துக் கொள்வதில்லை, சோப்பும் போட்டுக் கொள்வதில்லை.

காலே எட்டு மணிக்குக் குளத்திற்கு வந்து வேஷ்டியை நனைத்து கசக்கித் துவைத்து உலர்த்திவிட்டு கை, கால்களைத் தேய்த்துக் குளிக்கப் பகல் மணி 12 ஆகிவிடும். அவர் தலைமுடி, தாடி யாவும் மிகச் சுத்தமாக இருக்கும்" என்றார்கள். நாங்கள் நாணித் தலை குனிந்தோம். யாவரிடத்திலும் நல்ல குணங்களின் சிறப்பு ஒன்றினையே காணும் ஸ்ரீ பகவானுக்கு ஈடேது! இணையேது!

19. வேதாந்தம் கற்க விழைதல்

ஒரு முறை நான் கோயம்புத்தூர் அருகிலுள்ள பேரையூர் ஸ்ரீ சாந்தலிங்க ஸ்வாமிகள் மடத்திற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது பேரையூர் கோயில் கும்பாபிஷேகம் நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் நடைபெற்றது. அவர்களின் அழைப்பின் பேரில் கோவிலூர் மடம் சம்பந்தப்பட்ட சாதுக்களும் தமிழ் நாட்டிலுள்ள முக்கியமான படித்த சாதுக்களும் பழனியிலிருந்து சாது ஸ்வாமிகளும் அவரைச் சேர்ந்தவர்களும் மேற்படி மடத்தில் வந்து தங்கி இருந்தார்கள். முன்னரே ஸ்ரீ பகவானை தரிசிக்க வந்து எனக்கு அறிமுகமான சாதுக்களும் இருந்தார்கள். கோவில் கும்பாபிஷேகம் முடிந்து உணவருந்தி விட்டு ஓய்வாக யாவரும் சேர்ந்து உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கும்போது முன்பே எனக்குப் பழக்கமாகியிருந்த சாதுக்கள், நான் ரமணாச்ரமத்திலிருந்து வந்திருப்பதாக மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். இதைக் கேட்ட அச் சாதுக்கள் நாம் எல்லோரும் இங்கு ஒன்று சேர்ந்திருக்கிறோம். ஏதாவது சம்பாஷணை செய்யலாம் எனக்கூறி என்னைப் பார்த்து அகண்டாகார விருத்தியைப் பற்றி விளக்கம் கேட்டார்கள். ஸ்ரீ பகவான் சந்நிதியில் அன்பர்கள் சிலர் இவைகளைக் குறித்து கேட்ட கேள்விகளுக்கு ஸ்ரீ பகவான் சொல்லிய விளக்கங்கள் எனக்குத் தெளிவாக ஞாபகத்தில் இருந்ததால் ரிபுகீதையிலுள்ள ஒரு பாடலைச் சொல்லி

விளக்கினேன். அந்த பாடல் பின்வருமாறு :

அகண்டாகாரவிருத்தி விளக்கம்

தேகமுத னெனென்னல் துவித விருத்தி
திகழ்சாட்சி நானெனன்னல் சாட்சி விருத்தி
ஏகபரம் நானென்ன லகண்ட விருத்தி
இம்மூன்று விருத்திகளி லிரண்டைத் தள்ளி
ஆகுமகண் டாகார விருத்தி தன்னை
அநவரத மாதரவாய் அப்யாசித்துச்
சோகமுறுஞ் சித்தவிகற் பங்கள்தீர்த்துச்
சொன்ன வகண்டேகரச சொருப மாவாய்.

அகண்டாகாரவிருத்தியின் அப்யாஸங்கள்

புகலுமகண் டாகார விருத்தி தன்னைப்
புரையறவே பழகியிடு மியல்பைக் கேளா
யகிலமுமே அகண்டபர பிரம மென்று
மதுதானே நானென்று நானதென்றும்
இகழறவே யெப்போது மிடைவி டாம
லேகபர பாவனையே யிதயத் தின்கண்
விகலமறச் செய்வதுவே யகண்டா கார
விருத்திதனைப் பழகியிடு மியல்பா மைந்தா.

என்பதாகும். பிறகு பிரதிபந்தம் குறித்தும் கேட்டார்கள். அதற்கும் வேதாந்தசூடாமணியிலிருந்து பின் வரும் செய்யுளைச் சொல்லி அர்த்தமும் கூறினேன்.

மடிவிடயா சத்தியபி மானமொடு குதர்க்க
மறுகிடுஞ்சிற் றினஞ்சேர்தல் சபலத்து வாதி
அடைதலின்மெய் தெரிந்துமுயி ருண்மையுரு தழித்து
அதுவாகும் வர்த்தமா னப்பதிபந் தங்காண்

விடலரிய சனனமின்னுஞ் சிலவடைந் தாலன்றி
விடாதுபிர மாதியுல கிச்சையெனுந் தோட
மொடுமருவி மறைப்பொருளை யுணர்ந்திடினு மான்ம
வுண்மையுரு தழித்தலாகார் மியப்பதி பந்தமே.

(தா-ம்) குருமுகமாய் ஆத்ம விசாரஞ் செய்யுமிடத்து முன்னனுபவித்த விஷயவாதனைகளின் தாக்குதலால் மனங்கலங்குவது, "பூதப் பிரதிபந்தமும்" அங்ஙனம் விசாரித்த மெய்யுணர்வை, இப்போது ஜடபுத்தியானது விஷயசக்திகளால் கெடுப்பது வர்த்தமானப் பிரதிபந்தமும், இன்னும் சில பிறப்பெடுத்துப் பெறும் போகங்கள் அநுபவித்தாலல்லாது, இச்சை விடாதென்கிற சங்கற்பம், வஸ்து நிச்சயந் தெரிந்தும், அதாகவொட்டாமற் செய்வதால் ஆகாமியப் பிரதிபந்தமுமாம். பிரதிபந்தம்-தனக்கு வேருக நின்று பந்திப்பது.

இவ்வாறு யாவற்றையும் விளக்கிக் கூறியதைக்கேட்டு அச் சாதுக்கள் மகிழ்ந்தனர். அதன் பிறகு எனக்கு ஒரு எண்ணம் உதித்தது. மடங்களில் நடத்தும் வேதாந்த பாடங்கள் எவை, அவைகளைக் கற்கவேண்டிய முறைகளென்ன என்பவைகளை அறிந்து கொள்ள விரும்பினேன். என் பால்ய நண்பரும் தற்சமயம் திருக்களர் மடத்தின் மடாதிபதியுமான ஸ்ரீ கிருஷ்ணனந்த ஸ்வாமிகளும் பேரையூர் கும்பாபிஷேகத்திற்கு வந்திருந்தார். கோயிலூர் மடாதிபதி ஸ்ரீ மகாதேவ ஸ்வாமிகளிடம் வேதாந்த பாடம் கேட்டவர். அவரிடம் என் எண்ணத்தைச் சொன்னேன். அவர் நானுஜீவவாதக் கட்டளை, கீதாசாரத்தாலாட்டு, சசிவர்ணபோதம், வேதாந்த சூடாமணி, கைவல்யம் முதலான 16 நூல்களை எங்கள் மடங்களில் பாடங்களாக வைத்திருக்கிறோம். இது ஸ்ரீ சிருங்ககிரிமடம் ஸ்ரீ நரசிம்மபாரதி ஸ்வாமிகள் வகுத்துத் தந்த முறையாகும். வேதாந்திகள் காவியங்கள், இதிகாசங்

கள், கண்டன மண்டனங்கள் படிக்கக்கூடாது என்பது ஸ்வாமிகளின் கட்டளையாகும். மேற்சொன்ன கிரந்தங்களை கிரமமாகப் பாடம் கேட்க வேண்டுமென்றால் பல வருடங்களாகும் என்றார். அவரிடம், "எனக்கு அந்த நூல்களெல்லாம் படிக்க வேண்டும். ஆனால் கிரம பாடமாக வேண்டாம், நானாகப் படிக்கிறேன். தெரியாத பொருள்களை விளக்கம் செய்தால் போதும். இரண்டு மாதத்தில் படிக்க முடியுமா ?" எனக் கேட்டேன். என்னுடைய ஆர்வத்தைப்பார்த்து "மூன்று மாதத்தில் படித்து முடிக்க முயற்சிக்கலாம், நீங்கள் திருக்களர் வாருங்கள்" என்றார். நானும் கூடிய சீக்கிரம் வருவதாகக் கூறி ஆச்ரமம் திரும்பினேன்.

20. "தானா" யிருந்தால் சகலமும் தெரியும்

நான் வந்து சில நாட்கள் கழித்து பேரையூரில் நடந்தவைகளை ஸ்ரீ பகவானிடம் கூறினேன். "இங்கு நம் ஆச்ரமத்திலிருந்து வந்தவர்களென்று எங்களை மற்ற மடங்களிலுள்ள வேதாந்தம் படித்தவர்கள் கேள்விகள் கேட்கிறார்கள். அவர்களுக்குத் தக்க பதில் சொல்லா விட்டால் நம் ஆச்ரமத்திற்குக் குறைவுதானே என்று கருதி, திருக்களர் கிருஷ்ணானந்தரிடம் நான் வேதாந்த பாடம் கேட்க வேண்டுமெனக் கேட்டேன். அவர் என்னை திருக்களர் வாருங்கள், எங்கள் சம்பிரதாய பாடங்களை எல்லாம் எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க லாமோ, அவ்வளவு விரைவில் முடிக்கலாம் என்று சொன்னார். திருக்களர் சென்று படித்து வரலாம் என நினைக்கிறேன்" என்றேன். ஸ்ரீ பகவான் புன்னகையுடன் கேலியாக என்னைப் பார்த்து, இப்பொழுது நீ வேதாந்தம் படிக்கப் போகிறாய்; அப்புறம் சித்தாந்தம், பிறகு ஸம்ஸ் கிருதம், அடுத்து கண்டன மண்டனம் என்று அடுக்கிக் கொண்டே போனார்கள். எனக்கு ஒன்றுமே தோன்

ருமல் நின்று கொண்டிருந்தேன். என் முகவாட்டத்தைக் கண்ட ஸ்ரீ பகவான், எல்லாம் ஒன்றைப் படித்தால் போதுமே என்றூர்கள். மறுபடியும் ஒன்றும் புரியாமல் திகைப்பதைப் பார்த்து "தன்னில் தானுயிருக்கப் படித்தால் எல்லாம் படித்ததாகும். நான் எந்த வேதாந்த பாடம் கேட்டேன்? தான் தானுயிருந்தால் ஹிருதயத்திலிருந்து வரும் எதிரொலி அநுபவமாகவும், சுருதிசம்மதமாகவும் இருக்கும். இதைத்தான் தெய்வவாக்கு என்று சொல்வது" எனக் கருணையுடன் என்னைப் பார்த்துச் சொன்னுர்கள். வேதாந்த பாடம் கேட்டு மற்றவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டுமெனும் எண்ணம் என்னை விட்டு நீங்கிற்று. அன்றிலிருந்து யாராவது வேதாந்த சம்பந்தமான கேள்விகள் கேட்டால் ஸ்ரீ பகவானருளால் அவர்கள் கேள்விக்குத் தக்க பதில் உள்ளிருந்து கிடைத்துவிடுகிறது. மேலும் ஸ்ரீ பகவான் தான் எழுதியுள்ள "ஆன்மவித்தை" கீர்த்தனையில்,

தன்னை யறிதலின்றிப் பின்னையெ தறிகிலென் ?
தன்னை யறிந்திடிற்பின் னென்னை யுளதறிய ?

எனக் கூறியுள்ளார்கள்.

21. பண்டிதரும் நம்போல் ஆகிவிட்டார்

வடக்கே இருந்து பெரிய பண்டிதர் ஒருவர் ஸ்ரீ பகவானை தரிசிக்க வந்தவர் சிலநாள் ஆச்ரமத்திலேயே தங்கியிருந்தார். பண்டிதர் தினமும் ஸ்ரீ பகவான் அருகில் உட்கார்ந்து கொண்டு ஸம்ஸ்கிருதத்திலேயே உபநிஷத்திலிருந்தும் மற்றும் பல நூல்களிலிருந்தும் சுலோகங்களை இடைவிடாது சப்தமாக வாசித்துக் கொண்டிருப்பார். எங்களுக்கெல்லாம் ஸ்ரீ பகவானிடம் பேசவோ தியானம் செய்யவோ மிக இடையூருக இருந்தது. ஸ்ரீ பகவான் பொறுமையாக யாவற்றையும் கேட்

டுக்கொண்டிருக்கும்போது எங்களால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. இப்படியாக பத்து தினங்களுக்கு மேல் சென்றன. ஒரு நாள் காலையில் ஸ்ரீ பகவான் அருகில் இடம் காலியாக இருந்தது, சப்தமும் இல்லை. பண்டிதர் அங்கே ஒரு மூலையில் அடங்கி அமர்ந்திருந்தார். நான் ஆச்சரியத்துடன் பார்ப்பதைக் கவனித்த ஸ்ரீ பகவான் "பண்டிதரும் நம்போல் ஆகிவிட்டார்" எனச் சிரித்துக் கொண்டே மலையாளத்தில் சொன்னார்கள். ஆம்! அநுபவம் ஒன்றும் இல்லாமல் ஏட்டுப் படிப்பை மட்டும் வைத்துக்கொண்டு தானும் ஈடேற முடியாது, பிறரையும் தூக்கிவிட முடியாது. ஞானதினகரனும் ஸ்ரீ பகவானிடம் தன் ஆற்றலை எல்லாம் கொட்டித் தீர்த்துவிட்டு அடங்கி உட்கார்ந்திருந்தார் பண்டிதர். ஸ்ரீ பகவானிடம் வந்தடைந்தவர்கள் பண்டிதராயினும், பாமரராயினும் தங்களிடம் உள்ள அறியாமை, அகங்காரம், மனச்சுமை யாவும் தீர்ந்து ஸ்ரீ பகவானின் அருட்பார்வையால் பரம சாந்தி பெற்றுய்வது யாவரும் அறிந்த உண்மையன்றோ?

22. ஈசா! ஜெகதீசா! கபாலீசா!

சென்னைக்கு அருகிலுள்ள திருவள்ளூரிலிருந்த ஒரு வக்கீலின் பெண் சுந்தராம்பாள். அவர் சிறுவயதிலேயே சுழி முனையில் நாட்டம் வைத்து அந்த வழியில் சென்றவர். சென்னையில் திருமணமாகி தம் கணவர் வீடு சென்றவர்க்கு தாங்கமுடியாத தலைவலி ஏற்பட்டு எந்த சிகிச்சைக்கும் சரியாகாமல் தம் தகப்பனார் வீட்டிற்குச் சென்றார். உடனே ஒரு வைத்தியமும் இல்லாமல் தலைவலி நின்றுவிட்டது. இப்படியே அவர் கணவன் வீடு சென்றதும் தலைவலி வருவதும் அங்கிருந்து தன் தகப்பனார் வீட்டிற்கு வந்ததும் நின்று விடுவதமாக இருந்தது. அவர் கணவர் மிக நல்லவர். தம் மனைவியின் நிலைமைக்கு இரக்கப்பட்டு சுந்தராம்பாளைத் தன் தகப்பனார்

வீட்டிலேயே இருக்க அனுமதித்துவிட்டார். சில வருடங்கள் சென்று ஸ்ரீ பகவானை குறித்துக் கேள்விப்பட்ட சுந்தராம்பாள் தன் தகப்பனுருடன் ஆச்ரமம் வந்தார். நல்ல உயரமுடன் கம்பீரமாக இருப்பார். ஸ்ரீ பகவானிடம் தம் நிலைமையைச் சொல்லி மனச்சாந்தி பெற்று தான் மட்டும் ஊருக்குள் எச்சம்மாள் வீட்டில் தங்கிக் கொண்டு ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானை தரிசித்துச் சில நாட்கள் தங்கியிருந்தார். அப்பொழுது ஒரு நாள் ஸ்ரீ பகவானுடன் நாங்கள் எல்லோரும் கிரிபிரதக்ஷிணம் செல்லும்போது சுந்தராம்பாளும் எங்களுடன் வந்தார். ஸ்ரீ பகவானிடம் நிறையக் கேள்விகள் கேட்டு சந்தேக நிவர்த்தி செய்து கொண்டார். பிறகு ஸ்ரீ பகவான் என்னைப் பார்த்து “அவருக்கு சூடாலை கதையைச் சொல்லு ” என்றுர்கள். நானும் வாஸிஷ்டத்திலுள்ள சூடாலை கதையை விஸ்தாரமாக உற்சாகத்துடன் சொன்னேன். ஸ்ரீ பகவான் சந்தோஷத்துடன் “பரவாயில்லையே !, நன்ருகப் புரியும்படிச் சொல்கிருனே” எனப் பாராட்டினுர்கள். ஸ்ரீ பகவான் எதிரில் பேசுவது, படிப்பது என்ருல் சாதாரணமாக எல்லோருக்கும் சிறிது தடுமாற்றம் ஏற்படும். ஆனுல் எனக்கு வெளியிடங்களில் பேசும்போது ஏற்படும் தடுமாற்றங்கூட ஸ்ரீ பகவான் எதிரில் பேசும்போதும் படிக்கும்போதும் சிறிதுகூட ஏற்படுவதில்லை. அன்புத்தாயின் அருகில் இருக்கும் போது குழந்தை மிக உற்சாகமாகவும் தைரியமாகவும் தன் ஆற்றலை வெளிப்படுத்துவது போல் எனக்கும் ஸ்ரீ பகவான் அருகில் இருக்கும்போது ஸ்தோத்திரங்கள் படிப்பது, நல்ல விஷயங்கள் பேசுவது என்ருல் மிக மகிழ்ச்சியுடன் தைரியமாக இருப்பேன். சுந்தராம்பாள் பிறகு ஊர் திரும்பிவிட்டார்.

மறுபடியும் சில மாதங்கள் சென்று சுந்தராம்பாள் திருவண்ணுமலை வந்து எச்சம்மாள் வீட்டில் தங்கிக்

கொண்டு ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானை தரிசித்துச் சென்றவர், மறுநாள் வரவில்லை. எச்சம்மாள் ஆச்ரமம் வந்தவர்கள் "சுந்தராம்பாள் 21 நாள் உபவாசம் இருக்கப் போகிறுளாம்" என்றுர்கள். பிறகு 20 நாள் கழித்து எச்சம்மாளிடம் பணம் கொடுத்து பிக்ஷை செய்விக்க வேண்டிய சாமான்களை ஆச்ரமம் அனுப்பி விட்டு மறுநாள் ஆச்ரமம் வந்தார். மிக மெலிந்து காணப்பட்டார். அன்று ஸ்ரீ பகவான் சந்நிதியில் தம் 21 நாள் உபவாசத்தை முடித்தார். மௌன விரதத் துடன் இருந்து கொண்டு அவசியம் நேரும்போது ஸ்ரீ பகவானிடம் மாத்திரம் மிக மெதுவாகப் பேசுவார். தினம் பச்சை ஜலத்தில் ஸ்நானம் செய்து, கவனியாது விட்டதால் தலைமுடி ஜடை விழுந்துவிட்டது. நாங்க ளெல்லோரும் ஜடினி சுந்தராம்பாள் எனக் குறிப்பிடு வோம். அந்த காலத்தில் வெளியூரிலிருந்து யாராவது பெண்கள் ஆச்ரமம் வந்தால் காலை ஆறு மணியி லிருந்து மாலை ஆறு மணி வரை இங்கு தங்கியிருந்து விட்டு, பிராமணுளாய் இருந்தால் எச்சம்மாள் வீட்டிலும் மற்றப் பெண்கள் முதலியார் பாட்டி வீட்டிலும் இரவு தங்கியிருந்து மறுநாள் காலை ஆச்ரமம் வருவது வழக்கம். அதன்படி எச்சம்மாள் வீட்டில் தங்கியிருந்த சுந்தராம் பாள் இனியும் அதிகநாள் அங்கு தங்கியிருந்தால் எச்சம் மாளுக்குச் சிரமமாக இருக்குமென எண்ணி குகை நமசிவாயர் மடம் எதிரில் ஒரு அறையை வாடகைக்கு வைத்துக் கொண்டு தானே உணவு தயாரித்து சாப்பிட்டு கிரிபிரதக்ஷணமும், ஸ்ரீ பகவான் தரிசனமுமாக இருந்து வந்தார். அச்சமயத்தில் அவர் கணவர் அவருக்கு மாதாமாதம் பணம் மணியார்டர் செய்து வந்தார். அந்த மணியார்டர் கூப்பனில் "ஈசா! ஜெகதீசா! கபாலீசா!" என்பதுதவிர வேறென்றும் எழுதியிருக் காது. அவருடைய உயர்ந்த பண்பார்ந்த உள்ளத்தைக் கண்டு வியப்பாக இருக்கும். இப்படியே சில வருடங்கள்

இங்கு தங்கியிருந்த சுந்தராம்பாள் வடதேச யாத்திரை யாகச் சென்று திரும்பினர். மறுபடியும் சிலநாள் தங்கி யிருந்து தென்னுட்டு யாத்திரை புறப்பட்டுச் சென்றவர் பிறகு திருவண்ணுமலே வரவே இல்லே. நான் ஒருமுறை பழனியில் பார்த்தேன். பிறகு அவரை குறித்து ஒரு தகவலும் தெரியவில்லே.

23. ஆரம்ப பாட ஆசிரியர்

ஒரு முறை சிறுவயதில் எனக்கு வேதாந்த பாடம் சொல்லிக் கொடுத்தவரும், முதன்முதலாக ஸ்ரீ பகவானேக் குறித்து எனக்கு அறிவித்தவருமான மலே யாளம் குப்பாண்டி ஸ்வாமிகள் ஸ்ரீ பகவானேத் தரிசிக்க வந்தார். அச்சமயம் நான் ஸ்ரீ பகவான் கைங்கரியம் செய்து கொண்டிருந்தேன். என்னேக் கண்டதும் அவருக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆச்ரமத்தில் தங்கி 48 நாள் தினம் தவருமல் கிரி பிரதக்ஷணம் செய்து வந்தார். அவர் வைத்திருந்த ஓலேச்சுவடியை ஸ்ரீ பகவா னிடம் காண்பித்தார். அதில் நல்ல இலக்கண சுத்தமாக மிக உயர்வான வேதாந்த விஷயங்கள் தமிழில் எழுதி யிருந்ததைப் பார்த்து ஸ்ரீ பகவான் "மலேயாளியாக இருந்தும் இவ்வளவு அழகாக ஓலேச்சுவடியில் தமிழில் எழுதியிருக்கிருரே" என வியந்து பாராட்டினர்கள். பிறகு அவர் ஊருக்குப் புறப்படும்பொழுது ஸ்ரீ பகவா னிடம் சொல்லிக் கொண்டு போக வந்தவர் ஸ்ரீ பகவானி டம் நெருங்கி அருகில் நின்ற என் கையைப் பிடித்து ஸ்ரீ பகவான் கரத்தில் வைத்து, "இந்தப் பையனின் தகப் பனுர் மிக நல்லவர். தன் மகன் பெரிய வேதாந்தியாக, ஞானபரனுக வேண்டும் என்ற ஆவலுடன் என்னிடம் ஒப்படைத்தார். நானும் சில காலம் வேதாந்த பாடம் சொல்லிக் கொடுத்தேன். தன் தகப்பனுரின் நல்ல

நினைவுகளை நிறைவேற்றத் தகுதியானவன்தான். ஆனால் சில காரணங்களால் என்னால்தான் முடியாமல் யாத்திரை சென்று விட்டேன். அவனுடைய பூர்வ புண்ணியத்தால் தங்களிடம் வந்து சேர்ந்திருக்கிறான். இனி தாங்கள் தான் அவனுக்கு அடைக்கலம், அவனைக் கைவிடாமற் காப்பற்றவேண்டும்,'' என வெகு உருக்கமாக வேண்டிக் கொண்டு ஸ்ரீ பகவானை நமஸ்கரித்து என்னையும் ஆசீர் வதித்து யாத்திரையாகச் சென்று விட்டார். பிறகு அவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவர் என்மீது வைத்திருந்த அன்பை எண்ணி என் மனமும் உருகிற்று.

24. ஸ்ரீ ஜடைஸ்வாமிகளின் சமாதியும், ஸ்ரீ பகவான் பாராட்டும்

ஸ்ரீ ஜடைஸ்வாமிகள், ஸ்ரீ பகவான் அண்ணாமலைக்கு வருவதற்கு முன்பிருந்தே மலைமீது ஆச்ரமம் அமைத்து இருந்து வந்தவர். நல்ல பரோபகாரி. தான் உண்பதற்கு முன் தன் பக்கத்திலுள்ள குகைகளில் வசித்துவரும் சாதுக்கள் சாப்பிட்டார்களா என விசாரித்து, சாப் பிடாதவர்களுக்கு தன் ஆச்ரமத்திலிருந்து ஆகாரம் அனுப்பிவிட்டுத்தான் அவர் சாப்பிடுவார். தலையின் ஜடை தரையில் புரளும். ஸ்நானம் செய்யாமல் சாப்பிட மாட்டார். ஸ்நானம் செய்ததும் ஜடையை ஒருவர் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தால்தான் ஈரம் உலரும். ஸ்ரீ பகவானிடம் மிக ஈடுபாடும், அன்பும் கொண்டவர். ஸ்ரீ பகவானின் தாயார் ஸ்ரீ அழகம்மையார் சமாதியன்று காலையிலேயே பாலிதீர்த்தக் கரையில் ஸ்ரீ பகவானுடன் கூடவே இருந்து சமாதி வைத்து முடித்த பிறகே தன் ஆச்ரமம் திரும்பினார். ஸ்ரீ பகவானுக்குத் தொண்டு செய்பவர்கள் என்பதால் எங்களிடமெல்லாம் மிகப் பிரியமாக இருப்பார். ஸ்ரீ பகவான், அன்னையாரின்

சமாதிக் கட்டிடத்திற்கு நிரந்தரமாக வந்து தங்கிய சில ஆண்டுகளின் பிறகு ஒரு கார்த்திகை மாதம் தீபஉற்சவம் நடந்து கொண்டிருந்தது. ஆறும்நாள் உற்சவத்தன்று இரவு பதினேரு மணிக்குமேல் ஒரு ஆள்வந்து ஸ்ரீ ஜடை ஸ்வாமிகள் அடைந்து விட்டதாகக் கூறிச்சென்றதும், ஸ்ரீ பகவான் என்னைப் பார்த்து, "நீ உடனே போய் அங்கு என்ன ஆகவேண்டுமோ அதைப் பார்த்துவிட்டு வா" என்ருர்கள். நானும் அந்த நேரத்திலேயே தனியாக ஸ்ரீ ஜடைஸ்வாமிகள் ஆச்ரமம் போய்ச் சேர்ந்தேன் அந்த சமயம் ஸ்ரீ ஜடைஸ்வாமிகளுடன் கூடவே இருந்து வந்த சிஷ்யரான மாதவானந்தர் ஊரில் இல்லை. அறு பத்துமூவர் மடத்திலிருந்து சங்கரானந்த ஸ்வாமிகள் மட்டும் வந்திருந்தார். நாங்கள் இருவரும் யோசித் தோம். உற்சவ சமயமாக இருக்கிறது, மலைமீதோ, சந்நிதி வீதியிலேயோ யாராவது இறந்துவிட்டால் ஸ்வாமி புறப்பாடு நின்றுவிடும். அதன்றி மறுநாள் ஏழாம்நாள் உற்சவத்தன்று விடியற்காலையிலேயே பெரியதேர் வடம் பிடிப்பதற்கும் இடையூருக இருக்கும். பொழுதுவிடிந்து ஊருக்குள் ஒரு பிரச்சினை ஏற்படுமுன்பே ஸ்ரீ ஜடை ஸ்வாமிகளின் சரீரத்தை மலையிலிருந்து அப்புறப்படுத்தி விடுவதெனத் தீர்மானித்தோம். நாங்கள் இருவர்மட்டும் என்ன செய்வதெனத் திகைத்தோம். பிறகு அங்கு ஸ்வாமிகள் உபயோகித்து வந்த மர சாய்வு நாற்காலி இருந்தது. அதில் அவர் சரீரத்தை உட்கார வைத்து, அவர் துணி உலர்த்தியிருந்த கொடிகயிற்றை எடுத்து நாற்காலியுடன் சேர்த்துக் கட்டினேம். கட்டிடத்தைப் பூட்டிக்கொண்டு இருவருமாக மலையிலுள்ள பாததீர்த்தக் கரை வழியாகத் தூக்கிக் கொண்டுவந்து ஆச்ரமம் அருகில் உள்ள ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் சமாதிக்கு மேற்புறம் இறக்கி வைத்தோம். எங்களுக்கு மூச்சுத் திணறிவிட்டது. ஒரு வாரம் வரை தோள் வலி போக வில்லை.

பொழுதும் விடிய ஆரம்பித்தது. நானும், சங்கரானந்தரும் ஸ்ரீ பகவானிடம் விஷயத்தைச் சொன்னதும் ஸ்ரீ பகவான் "பரவாயில்லையே! கெட்டிக்காரத்தனமாக, அண்ணுமலையார் உற்சவத்திற்கு இடையூறு இல்லாமல் செய்து விட்டீர்களே! மிக சாமர்த்தியசாலிகள் தான்!" எனச் சந்தோஷத்துடன் பாராட்டினுர்கள். பொழுது புலர்ந்ததும் தகவலறிந்து பெரியகோயில் மூலைமண்டபம் ராமசாமி ஸ்வாமிகளும் மற்ற சாதுக்களும் வந்து சேர்ந்தார்கள். அக்காலத்தில் சாதுக்கள் யாராவது அடைந்து விட்டால், பணவசதி இல்லாதவர்களுக்குக் கடைத்தெருவிலுள்ள முக்கிய வியாபாரிகளான தீர்த்தகிரி செட்டியார் போன்றவர்கள் வஸ்த்திரம், எண்ணெய், அபிஷேக சாமான்களுடன் சிறு தொகையும் கொடுத்துதவுவார்கள். ஸ்ரீ ஜடைஸ்வாமிகள் பலருக்கும் பரோபகாரியாய் இருந்து வந்ததால் ரொக்கம் ஒன்றும் வைத்திருக்கவில்லை. ராமசாமி ஸ்வாமி முதலியவர்கள் கடைத்தெருவில் வசூலித்து விதிமுறைப்படி செய்யவேண்டுமெனத் தீர்மானித்து அதன்படியே சாமான்கள் சேகரித்து நல்ல முறையில் சமாதிவைத்து பகல் ஒருமணிக்கு முடிந்தது. ஆச்ரமவாசிகள் அனைவரும் சமாதி பூஜையில் கலந்துகொண்டோம். பிறகு ஸ்ரீ பகவான் விருப்பப்படி அங்கு வந்திருந்த அனைவரும் ஆச்ரமம் வந்து பகல் உணவு அருந்திச் சென்றுர்கள். ஒவ்வொரு கார்த்திகை மாதமும் ஏழாம் திருவிழாவன்று ஸ்ரீ ஜடைஸ்வாமிகளின் சிஷ்யரான மாதவானந்தர் இருக்கும்வரை, ஸ்வாமிகளின் குருபூஜையை நடத்திவந்தார். 1920ஆம் ஆண்டு நான் முதன்முதலாக ஸ்ரீ பகவானை தரிசிக்கப் பாலக்காட்டிலிருந்து அண்ணுமலை வந்து ஆவலுடன் மலைமீது ஏறிச் செல்கையில் எதிர்பாராமல் முதலில் ஸ்ரீ ஜடைஸ்வாமிகளைப் பார்க்க நேரிட்டது. அவருடைய ஜடாமுடி தோற்றத்தைக் கண்டு மிரண்டு கீழே ஓடிவந்துவிட்ட நான், பிறகு பல வருடங்கள் சென்று, ஸ்வாமிகள்

அடைந்ததும் நானே அவருடைய சரீரத்தை மலை மேலிருந்து கீழே சுமந்துவர நேரிட்டது ஒரு வேடிக்கை யான சம்பவமல்லவா ?

25. உபதேச உந்தியாரின் தோற்றம்

ஸ்ரீ பகவான் பேரில் முகவைகண்ண முருகனுர் ஸ்வாமிகள் எழுதிய "ஸ்ரீ ரமண சந்நிதிமுறை" புத்த கத்தில், மாணிக்கவாசகரின் திருவாசகத்திலுள்ளது போல் திருவெம்பாவை, பள்ளியெழுச்சி, அம்மானை, திருச்சாழல் போன்ற பல பாடல்களையும், மூவர் தேவாரம், திவ்யபிரபந்தப் பாடல்களைப் போன்றும் எழுதி யுள்ளார். மாணிக்கவாசகரின் திருவுந்தியாரைத் தழுவி எழுத எண்ணி கணபதி, முருகன், விஷ்ணு, சிவன் யாவும் ரமணனனே எனும் பாவத்தில் உந்தியார் 100 பாடல்கள் எழுதினர். அதன் கடைசி பாகம் சிவபர மாக உள்ளதில் தாருகாவன ரிஷிகள்

பாடல் 71 கன்மத்தை யன்றிக் கடவு ளிலையெனும்
வன்மத்த ராயின ருந்தீபற
வஞ்சச் செருக்கினு லுந்தீபற.

—எனத் தொடங்கி

89 பாரப் படிவத்தர் மூளும் பழி அபி
சாரத்தீ வேள்வியொன் றுந்தீபற
சலமொடு வேட்டனர் உந்தீபற.

90 பொங்கும் புலியைப் புராரி யுயிரினை
நுங்க விடுத்தன ருந்தீபற
நுட்ப உணர்வில ருந்தீபற.

91 உகிரா லுரித்தவ் வுழுவை யுரியைத்
தகுமா றுடுத்தன னுந்தீபற
தவர்வெள்கி நின்றன ருந்தீபற.

92 வெஞ்சினப் பாம்புகள் வீய விடுத்தனர்
நஞ்சணி கண்டன்மே லுந்தீபற
நல்லணி யாக்கின னுந்தீபற.

93 மற்றவ ரேவிய மான்மழுத், தீ,துடி
பற்றினன் கைகளி லுந்தீபற
பராபர வேங்கட னுந்தீபற.

94 உட்கச் சிரித்துரு மென்ன வுரறுபு
கொட்குங்கூர் வெண்டலே யுந்தீபற
குழகன்மே லுய்த்தன ருந்தீபற.

95 அவ்வெண் டலேயை யதிசயிக் கப்பலர்
செவ்வே யணிந்தன னுந்தீபற
சென்னிக் கணியாக உந்தீபற.

96 கூளிக் குழாங்கள் குறுகி யறிவறத்
தாளிற் பணிந்தன உந்தீபற
தானேயாக் கொண்டன னுந்தீபற.

97 முதல்வனேக் கொல்லமுயலக னென்னும்
பதகனே ஏவின ருந்தீபற
பாதத் தொடுக்கின னுந்தீபற.

98 முயற்சி யனேத்தும் முறிபட வன்ஞேர்
அயற்சியுற் றன்ஞேனே உந்தீபற
அறிந்தா ரிறையென உந்தீபற.

99 கன்ம பலந்தருங் கர்த்தற் பழித்துச்செய்
கன்ம பலங்கண்டா ருந்தீபற
கர்வ மகன்றன ருந்தீபற.

100 காத்தரு ளென்று கரையக் கருணேக்கண்
சேர்த்தருள் செய்தன னுந்தீபற
சிவனுப தேசமீ துந்தீபற.

என்று எழுதி முடித்திருந்தார்.

தாருகாவன ரிஷிகள், யாகம் முதலிய காமிய கர்மங்களே கடவுளாகும். அதன்றி வேறு கடவுளில்லை எனச் செருக்குற்று அகங்கரித்திருந்தனர். அம் முனிவர்களின் பத்தினியரும் தாம் கொழுநர்த் தொழுதெழு கொள்கையராதலால் ஏழுலகத்திலும் தம்மைவிட உயர்ந்தவர்கள் யாருமில்லை என இறுமாந்திருந்தனர். உத்தமர்களாகிய அவ்விருபாலரும் பூர்வ கர்மத்தால் மனந்தடுமாறி பூரணப்பொருளாம் முழுமுதற்கடவுளை மறந்து மோசம் போவதற்கிரங்கி அவர்களைத் தடுத்தாட்கொள்ள எண்ணிய இறைவன் தாம் பிக்ஷாடனர் வடிவமெடுத்து, மஹாவிஷ்ணு, மோகினி ரூபத்தில் தன்னுடன் வர தாருகாவனம் சென்றூர். பரமாத்மாவின் மோகினி வடிவத்தைப் பார்த்து அந்த ரிஷிகள் தங்களுடைய வேள்விக்குறிய தர்ப்பை முதலியவைகளை சேகரிக்க வனத்திற்குச் சென்றவர்கள், தங்களை மறந்து காமவயப்பட்டு, அவரைத் தொடரலாயினர். பர்ணசாலைகளிலிருந்த ரிஷிபத்தினிகளும் இறைவனின் மன்மதரூபத்தைக் கண்டு சித்தம் பேதலித்து அவர்பின் போயினர். அத் தபோதனர்கள் தாம் செய்குற்றம் மறந்து, தம் மனைவியர் மனம் மயங்கிச் செல்வதைக் கண்டு பொருதவர்களாய் தங்களுடைய யாகம், மனம், மனைவியர் யாவும் கெடும்படிச் செய்த ஈச்வரன்மேல் சினங்கொண்டு அவரை அழிக்க எண்ணி அபிசார வேள்வியொன்று செய்தனர். அவ்வேள்வித் தீயினின்றும் சீறி எழுந்த வெம்புலியை சிவன் மேல் ஏவினர். பொங்கிவரும் புலியை புராரியாம் ஈசன் தம் நகத்தால் தோலுரித்து அதையே ஆடையாக உடுத்திக் கொண்டார். பிறகும் கோபம் தணியாத மாதவத்தோர் அந்த யாகத்தீயினின்றும் வந்த கடுவிடநாகங்களை விட்டனர். அவற்றையும் ஆண்டவன் ஆபரணமாகப் பூண்டு நாகாபரணரானூர். மற்றும் அந்த ஹோம குண்டத்திலிருந்து தம்மைத் தாக்க வந்த மான், மழு, அக்னி, உடுக்கை, கபாலம் யாவற்றையும் அடக்கிக்

கைக் கொண்டார் பரமன். பிறகும் வேள்வியிலிருந்து வெகுண்டெழுந்த பூத கணங்களேயும் தம்மைப் பணிந்து வணங்கும்படிச் செய்து, தம் சேனேயாக ஏற்றுக்கொண் டார். இத்தனேக்குப்பிறகும் மனந்தெளியாத ரிஷிகள் முயலகனெனும் அசுரனே ஏவ, அக்கொடுஞ்சூரனேயும் தம் திருவடிக்கீழ் மிதித்து அடக்கிவிட்டார் இறைவனுர். இவ்வாறு தங்களுடைய முயற்சிகள் யாவும் வியர்த்த மாகியது கண்ட முனிவர்கள் களேத்து அகந்தை அடங்கி மதிதெளிந்து இறைவனேப் பணிந்து துதித்தனர். சிவ பெருமானும் மகிழ்ந்தார். தங்கள் பிழை பொறுத்து மன்னித்துத் தங்களுக்கு உபதேசித்தருள வேண்டுமென முனிவர்கள் பிரார்த்திக்க அவ்வாறே அரனும் உபதேசித் தருளினுர் என முருகனுர் ஸ்வாமிகள் பாட்டு வடிவத்தில் உந்தியாராக எழுதியதில் தாம் புராண சம்பந்தமாக எழுதியதற்கு மேல் உபதேசபரமாக உந்தியார் அமைய வேண்டுமென விரும்பினுர். அதை ஸ்ரீ பகவானே எழுதித் தர வேண்டுமென ஸ்ரீ பகவானே பலமுறை கேட்டுக் கொண்டார். அவரது அன்பு வேண்டுகோளுக் கிணங்க ஸ்ரீ பகவான் எழுதியதுதான் "உபதேச உந்தி யார்" முப்பது பாடல்களுமாகும்.

கன்மம் பயன்றரல் கர்த்தன தாணையாற்
கன்மங் கடவுளோ உந்தீபற
கன்மஞ் சடமதா லுந்தீபற.

என ஆரம்பித்து கர்மம், பக்தி, யோகம், ஞானம் எனும் நான்கையும் அழுத்தமாகவும் அநுபவ பூர்வமாகவும் எழுதியுள்ளார்கள் அப் பாட்டிலுள்ள அநுபவ காம்பீர்யத் தைக் கண்ட காவ்யகண்ட கணபதி முனிவரும், புதுக் கோட்டை கி. லக்ஷ்மண சர்மா முதலானவர்களும் தங் களுக்கு ஸம்ஸ்கிருதத்தில் எழுதித்தர வேண்டுமென வேண்டிக் கொள்ள ஸ்ரீ பகவானும் ஸம்ஸ்கிருதத்தில்

உபதேச சாரமெனும் பெயரில் "கர்த்து ராஜ்ஞயா" என்ற சுலோகங்களை எழுதிக் கொடுத்தார்கள். அதற்கு காவியகண்ட முனிவர் பாஷ்யமும் எழுதியுள்ளார். அதைப் பார்த்த யோகி ராமையா முதலாம் பக்தர்கள் தங்களுக்கு தெலுங்கில் எழுதித்தர வேண்டுமெனக் கேட்க ஸ்ரீ பகவானும் அதை வசன நடையில் எழுதினார்கள். தமிழும் ஸம்ஸ்கிருதமும் பாட்டு வடிவத்தில் இருக்க, தெலுங்கு மட்டும் வசனமாக இருக்கிறதே எனக் குறைபட்டார்கள். ஸ்ரீ பகவான் காவ்யகண்ட முனிவரிடம் தெலுங்கு த்விபத விருத்தத்தின் லக்ஷணத்தைக் கேட்க அவர் அதை விளக்கினார். அவர் சென்றதும் அவர் சொல்லிய இலக்கணங்களை ஸ்ரீ பகவான் சுருக்கி ஓர் சூத்திரமாக எழுதி விட்டார்கள். பிறகு வந்த கணபதி முனிவர் அச்சூத்திரத்தைக் கண்டு விளக்கமாகவும் சுருக்கமாகவும் இருக்கும் அருமையைப் பார்த்து வியந்தார். ஸ்ரீ பகவான் கைப்பட எழுதியது இன்றும் ஆச்ரமத்தில் உள்ளது. பிறகு தெலுங்கில் "உபதேச ஸாரமு" என எழுதிக் கொடுத்தார்கள். மலையாளிகளாகிய நானும் மற்றும் ராமகிருஷ்ண ஸ்வாமி, மாதவ ஸ்வாமி முதலானோர் மலையாளத்தில் எழுதித்தரவேண்டுமெனப் பிரார்த்திக்க ஸ்ரீ பகவான் உபதேச சாரத்தை மலையாள மொழியில் கும்மியாக எழுதியருளினார்கள். இவ்வாறு பல மொழியில் ஸ்ரீ பகவானுடைய உபதேசம் யாவரும் பெற்றுப் பயனடையக் காரணமாக இருந்த முகவைக் கண்ண முருகனார் ஸ்வாமிகளுக்கு நம் எல்லோருடைய நன்றியும் உரித்தாகுக! ஸமஸ்கிருதத்தில் "கர்த்து ராஜ்ஞயா" எனத் தொடங்கும் ஸ்லோகம் அன்றிலிருந்து இன்றுவரை ஸ்ரீ பகவான் சந்நிதியில் வேத பாராயணத்துடன் சொல்லப்பட்டு வருகிறது.

26. அடைக்கல சீட்டினை அகல விடாமை

தண்டபாணி ஸ்வாமிகள் ஆச்ரமத்தில் இருந்து கொண்டு சமையற்கட்டு வேலைகளை மேற்பார்த்து வந்தார். அப்போது அவர் தினமும் சட்னி, துகையல் என விதவிதமாகச் செய்வார். அவைகளை ஆட்டுரலில் இட்டு அவர் அரைக்க, ஸ்ரீ பகவான் தள்ளிக் கொடுப் பார்கள். சில சமயங்களில் ஸ்ரீ பகவான் அரைக்க அவர் தள்ளிக் கொடுப்பார். அந்தக் காலத்தில் ஆச்ரமத்தில் நிரந்தரமாகத் தங்கி இருந்தவர்கள் ஏழெட்டு பேர்கள் தான். ஆகையால் காய் நறுக்குவது, அரைப்பது போன்ற காரியங்களில் ஸ்ரீ பகவான் சகஜமாக எங் களுடன் ஈடுபடுவார்கள். தண்டபாணி ஸ்வாமிகள் பிராமணராதலால் அரைக்கும் வேலைகளுக்கு எங்களை அனுமதிக்கமாட்டார். சேர்ந்தாற்போல் தினம் அரைத் ததில் ஸ்ரீ பகவானுக்கு வலதுகை சுட்டுவிரலில் கொப்பளம் கண்டது. இதைக்கண்ட எனக்கும் ராமகிருஷ்ண ஸ்வாமி முதலானவர்களுக்கும் மிக வேதனையாக இருந்தது. தண்டபாணி ஸ்வாமிகளிடம் விஷயத்தைச் சொல்லி தற்போது சட்னி, துகையல் முதலியன அரைக் கும் வேலை வேண்டாமெனக் கேட்டுக் கொண்டோம். அவர் அதை லக்ஷியம் செய்யவில்லை. நான் ஸ்ரீ பகவா னிடம் தனிமையில் "பகவானே தங்கள் கையில் இப்படி கொப்பளித்து இருக்கும்போது இனியும் அரைக்கும் வேலையெல்லாம் செய்ய வேண்டாம். இது எங்களுக் கெல்லாம் பெரிய அபசாரமாகும். அப்படிச் செய்ததை நான் சாப்பிட மாட்டேன். என மிக வருந்திக் கூறி னேன்.' மறுநாளும் தண்டபாணி ஸ்வாமிகள் நிறைய புளிச்சக்கீரையை வாங்கி ஆய்ந்து துகையல் அரைக்க ஏற்பாடு செய்தார். நாங்கள் யாரும் ஆய்வதற்குப் போக வில்லை. அன்றும் ஸ்ரீ பகவான்தான் அரைத்தார்கள்.

சாப்பிடும்போது நான் மட்டும் துகையல் போட்டுக் கொள்ளவில்லை. இதை யாரோ ஸ்ரீ பகவானிடம் சொல்லி விட்டார்கள். அடுத்த வேளை சாப்பாட்டின்போது ஸ்ரீ பகவான் என்னை கூப்பிடச் சொன்னார்கள். நான் போனதும், "என்ன ஓய்! நான் சாப்பிடலாமா" எனக் கேட்டார்கள். நான் ஒன்றும் புரியாமல் திகைத்தேன். "ஆமாம், இவர்கள் சொல்வதையெல்லாம் நான் கேட்க வில்லை என்றால் சாப்பிட மாட்டார்கள். இவர்கள் உத்தி ரவுப்படிதானே நான் நடக்க வேண்டும். ஒவ்வொருவரும் இங்குவரும்போது சாதுவாக வருவார்கள். நாள் செல்லச் செல்ல நம்மையே அதிகாரம் செய்ய ஆரம்பித்து, சாமி நாம் சொல்வதை கேட்கவேண்டுமென நினைக்கிறார்கள்," என்று கேலியாகச் சொன்னார்கள். என் மனம் மிகக் கலங்கிவிட்டது. இதுபோல் மேலும் இரண்டு மூன்று தினங்கள் "நான் குளிக்கலாமா, சாப்பிடலாமா, வெளி யில் செல்லலாமா" எனக் கேட்க ஆரம்பித்தார்கள். அதற்குமேல் ஸ்ரீ பகவானின் கேலி வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ள எனக்கு சக்தி இல்லை. ராமகிருஷ்ண ஸ்வாமியிடம் என் மனக்கஷ்டத்தைச் சொல்லி, என் மனமாறுதலுக்காக சிலநாள் திருப்பதி போய்த் தங்கி வருவதாகக்கூறி அன்று மாலை 6-30 மணி ரயிலில் போக முடிவு செய்து ஸ்ரீ பகவானிடமும் உத்திரவு பெற்றேன்.

அன்று பிற்பகல் 3 மணிக்குமேல் ஸ்ரீ பகவான் திடீ ரென்று பிரதக்ஷணம் புறப்பட்டார்கள். ராமகிருஷ்ண ஸ்வாமி என்னிடம் நீங்கள் ரயிலுக்குப் போவதை எங் களுடன் பிரதக்ஷணமாக வந்து போகலாமே என்றார். நானும் யாத்திரைக்கு வேண்டிய வேஷ்டி துண்டுடன் எல்லோருடனும் பிரதக்ஷணம் சென்றேன். அன்று ஸ்ரீ பகவான் மிகமிக மெதுவாக நடக்கலானார்கள். அவர்களை முந்திக் கொண்டு போவது முறையல்ல என்ப

தால் என்னுல் முன்னுல் போக முடியவில்லை. குபேர லிங்கம் தாண்டி நடக்கும்போது ஆறரை மணி ரயில் போவதைப் பார்த்து ஸ்ரீ பகவான் என்னிடம் "அதோ உன் ரயில், போகுதுபார்! சீக்கிரம் பறந்து போ, போ" என்று கூறிச் சிரித்தார்கள். இதைக் கேட்ட மற்றவர் களும் சிரித்துவிட்டார்கள். நான் செயலற்று மௌன மானேன். ஆச்ரமம் வந்து சேர்ந்தோம். இரவு சாப் பாடு ஆனதும் தண்டபாணி ஸ்வாமிகள் ஸ்ரீ பகவானிடம் "நீங்கள் துகையல் அரைக்கக்கூடாது என்ருனும், அதற் காகத் தாங்கள், இனி யாவும் அவன் உத்திரவுப்படிதான் நான் நடக்கவேண்டும் போல் இருக்கிறது என்றீர் களாம். அதனுல்தான் மனவருத்தத்துடன் எங்காவது சென்று வந்தால் சமாதானமாக இருக்கும் என நினைத்து திருப்பதி புறப்பட்டானும். பகவானுக்கு கோபம் வரும் படி நடந்ததற்கு மனம் வருந்தி தங்களிடம் மன்னிப்பு கேட்கிருன்" என்ருர். உடனே ஸ்ரீ பகவான் "எனக்கு அவன் மேல் என்ன கோபம்? அவன் என்ன தப்பு செய்து விட்டான்? என் கையில் கொப்பளித்ததை பார்த்து, மனம் தாங்காமல், அப்படி அரைத்ததை அவன் சாப்பிடவில்லை. இதில் கோபித்துக் கொள்ள என்ன இருக் கிறது? நான் கோபித்துக் கொண்டேனும், இவன் திருப்பதிக்குப் புறப்பட்டானும். மஹா புத்திசாலி! அவன் இங்கு ஆச்ரமச் சாப்பாட்டையே பிடிக்காமல் சாப்பிடு வான். குழம்பிலும், ரசத்திலும் தண்ணீரை விட்டுக் கொண்டு மருந்து போல் விழுங்குவான். வெளியில் போனுல் என்ன கிடைக்கும்? எப்படிச் சாப்பிடுவான்? அதல்லாமல் இவன் பூர்வாச்ரம குரு மலையாளஸ்வாமி இவன் கையைப் பிடித்து என்னிடம் கொடுத்து, இவனைக் கைவிடாமல் காப்பாற்ற வேண்டுமென ஒப்படைத்து விட்டுப் போனுர். நாளை அவர் வந்து என் சிஷ்யன் எங்கே என்று கேட்டால் நானல்லவா பதில் சொல்ல

வேண்டும்? இவன் என்னவென்ருல் திருப்பதி போகிருனும் திருப்பதி" என சிரித்துக் கொண்டே சொன்னதும் எனக்கு சமாதானமும் சந்தோஷமும் ஏற்பட்டது. "நாம் பகவானுக்கு கைங்கரியம் செய்கிறேம், நாம் தான் பகவானைக் காப்பாற்றுகிறேம்" எனும் அகங்காரத்தை நீக்குவதற்காகவே ஸ்ரீ பகவான் நடத்திய நாடகமன்றே இது! ஸ்ரீ பகவானே என்னை முழுவதுமாக ஏற்று ஆட்கொண்ட பிறகு கலக்கத்திற்கும் கவலைக்கும் இடமேது?

27. இளைஞன் வாசு

ராமகிருஷ்ண ஸ்வாமியின் அண்ணனிடமிருந்து ஆச்ரமத்திற்குக் கடிதம் வந்தது. ராமகிருஷ்ணஸ்வாமியின் தம்பி வாசுதேவன் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தவன் ஒரு சாதுவிடம் நெருங்கிப் பழகினன். அவர் அவனுக்கு சுழி முனையில் நாட்டம் வைத்து ஜோதியைப் பார்க்கும்படி சொல்லிக் கொடுத்துவிட்டு போனர். வாசுவிற்கு அதற்கு முன்பே, நானும் தன் அண்ணனும் அண்ணுமலையில் ஸ்ரீ பகவானை அடுத்து ஞானமார்க்கத்தில் செல்வது போல் தானும் இருக்கவேண்டுமெனும் ஆவல் உண்டு. சிறு பையன் சுழிமுனையில் தீவிரமாக நாட்டம் செலுத்த ஆரம்பித்ததும் அதன் உஷ்ணம் மூளையில் தாக்கி எப்பொழுது பார்த்தாலும் ஈச்வரா; அருணுசலேச்வரா! நாராயணு! என்று அரற்றிக் கொண்டு, சாப்பிடாமல், தூங்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், என்னையும், ராமகிருஷ்ண ஸ்வாமியையும் அனுப்பி வைத்து அவனைத் தெளிவிக்க வேண்டுமென்றும் எழுதியிருந்தார். ஸ்ரீ பகவான் எங்களைப் போய்வரும்படி சொன்னர்கள். நாங்கள் இருவரும் போய் விட்டால் இங்கு ஸ்ரீ பகவானுடைய கைங்கரியத்திற்குத் தடங்கல் ஏற்படுமென யோசித்து ராமகிருஷ்ண ஸ்வா

மியை மட்டும் போய் வரச் சொன்னேன். அவர், இது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது, நீங்கள்தான் போக வேண்டுமென்று கூறினர். ஸ்ரீ பகவானும், நீ போவது தான் நல்லது என்று என்னையே போகச் சொன்னர்கள். அன்று மாலை ரயிலில் காட்பாடி போய் பாலக்காடு செல்வ தாக முடிவாயிற்று. அச்சமயம் ராமகிருஷ்ணஸ்வாமி யின் கையிருப்பு எனக்கு டிக்கெட்டுக்கு மட்டும்தான் போதுமானதாக இருந்தது. அன்று பகல் மூன்று மணிக்கு எதிர்பாராமல் ஓர் அன்பர் நிறைய பூரிகள் செய்து கொண்டு வந்து ஆஸ்ரமத்தில் ஸ்ரீ பகவானுக்கும் மற்றவர் களுக்கும் பரிமாறினர். ஸ்ரீ பகவான் எப்பொழுதும் இரண்டுக்கு மேல் வைத்துக் கொள்ளாதவர்கள் அன்று அந்த அன்பர் ஆறு பூரிகளை வைத்ததற்கு ஒன்றும் சொல்லாமல் ஏற்றுக் கொண்டது எங்களுக்கெல்லாம் ஆச் சரியமாக இருந்தது. பரிமாறி முடிந்ததும் ஸ்ரீ பகவான் ஒரு பூரியை மட்டும் அருந்திவிட்டு மீதியை அப்படியே அந்த இலையோடு எடுத்து வைத்துவிட்டார்கள். பிறகு பேப்பரும் நூல்கயிரும் கொண்டுவரும்படி சொல்லித் தம் கையாலேயே அப்பூரிகளை அழகாகப் பொட்டலம் கட்டி என்னிடம் கொடுத்தார்கள். மற்றவர்களிடம் "பாவம்! அவனுக்கு ரயிலுக்குத்தான் பணமிருக்கிறது. வழியில் ஆகாரத்திற்கு என்ன செய்வான்?" என்றார்கள். அவர் களுடைய கருணை உள்ளத்தைக் கண்டு எல்லோருக்கும் மெய் சிலிர்த்தது.

நான் பாலக்காடு போய் வாசுவின் வீடு சென்றேன். வழியில் நான் எடுத்துக் கொண்டது போக மீதமிருந்த பூரிகளை வாசுவுக்கும் மற்றவர்களுக்கும் ஸ்ரீ பகவத் பிரசாத மாகக் கொடுத்தேன். பிறகு வாசுவிடம் அவன் என்ன அப்பியாசம் செய்து வருகிறான் எனக் கேட்டேன். சுழி முனை லக்ஷ்யமும் ஜோதி தரிசனத்தில் தீவிர நாட்டமும்

கொண்டதால்தான் இந்நிலை ஏற்பட்டதெனத் தெரிந்தது. ஸ்ரீ பகவானின் தத்துவப்படி ஹிருதயத்தில் லக்ஷியம் வைத்து தியானமோ, ஜபமோ செய்வதுதான் சரியான வழியாகும் எனத் தெளிவுபடுத்தினேன். ஆனல், அவன் அப்பொழுது இருந்த நிலையில் இதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் அண்ணனிடம் சொல்லி சிறந்த முறையில் மலையாள வைத்தியம் செய்யும்படி கூறி வாசுவுக்கும் ஆறுதல் சொல்லிவிட்டு ஆச்ரமம் திரும்பினேன். பிறகு சில நாட்களில் வாசுவுக்கு உடம்பு குணமாகி ஸ்ரீ பகவானின் நூல்களை படித்துத் தெளிவு ஏற்பட்டு தன் உயர்நிலைப்பள்ளி படிப்பைத் தொடர்ந்து படித்து வந்தான். சில மாதங்கள் சென்று ஸ்ரீ பகவானின் சரித்திரத்தை மலையாளத்தில் எழுதுவதற்காக ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியிருந்த சரித்திரங்களை எடுத்துக்கொண்டு நான் பாலக்காடு சென்றேன். அங்கு வாசுவுடன் தங்கி அவன் ஆசிரியராகிய எக்கணத்து அப்புண்ணி என்பவரிடம் கொடுத்து மலையாளச்சரிதை எழுத நானும் வாசுவும் ஆவன செய்தோம். வாசு அடிக்கடி வந்து ஸ்ரீ பகவானை தரிசித்து போவான். தன் வாழ்நாள் முழுவதும் பிரம்மசாரியாகவே மிக்க நெறியுடன் இருந்து ராணுவத்தில் சேவை செய்து ஓய்வு பெற்று 1958 ஆம் ஆண்டு ஸ்ரீ பகவான் திருவடி அடைந்தான். 1939 ல் “பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி” என்ற மலையாள சரித்திரத்தில் அவன் பெயரும் ஸ்ரீ பகவானுடன் அப்புண்ணியும் மற்ற அன்பர்களும் உள்ள புகைப்படத்திலும் இருக்கிறுன்.

28. ஸ்ரீ வீரசுப்பைய சுவாமிகளின் புகழுரை

நான் ஒரு முறை யாத்திரையாகச் சில இடங்களுக்கு சென்ற பிறகு பேரையூர் ஸ்ரீ சாந்தலிங்க ஸ்வாமிகள் மடத்திற்குச் சென்றிருந்தேன். அதுசமயம் வீரசுப்பைய ஸ்வாமிகள் சற்று உடல்நலமில்லாமல் மடத்தில் ஓய்வெடுத்துக்

கொண்டிருந்தார். அவரை தரிசித்தேன், ஸ்ரீ பகவானை யும் ஆச்ரம க்ஷேமங்களையும் பற்றி விசாரித்தார். என்னி டம் இருந்த நோட்டுப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தார். அதில் ஸ்ரீ பகவான் எழுதியுள்ள "உள்ளது நாற்பது" பாடல்களை ஸ்ரீ பகவானே தம் கரத்தினால் அழகுற எழுதி யிருப்பதைப் பார்த்து என்னைப் படிக்கச் சொன்னார். நானும் படித்தேன். முதற்பாட்டான "உள்ளதல துள்ள வுணர் வுள்ளதோ" என்ற பாடலையே மூன்று முறை திரும்பத் திரும்பப் படிக்கச் சொல்லி ரசித்தார். இவ்வளவு அழகாக அடி, தொடை, தளை முதலிய இலக்கணங்களும் சிறப்பான பொருளும் அமைந்திருக்கிறதே. உங்கள் ஸ்வாமி "சும்மா" இருப்பதில் தான் வல்லவர் என்று எண்ணியிருந்தேன். இவ்வளவு உயர்வாக கவிதை எழுது வதிலும் மேன்மையானவராக இருக்கிறாரே என அதிச யித்தார். ஸ்ரீ பகவானைப் போல் "சும்மா" இருப்பதென் பது எல்லோராலும் முடியாது. எனக்கு சாஸ்திர சமாதி சித்தியுண்டு. நூல்களை படிக்க, எழுத ஆரம்பித்தால் பசி, தாகம், நேரம் எதுவும் தெரியாமல் அதிலேயே மூழ்கி விடுவேன். யாராவது வந்து நினைவுறுத்தினால்தான் நித்தி யக் கடன்களை முடிக்க எழுந்திருப்பேன். தற்சமயம் என்னை வைத்தியர் பூரண ஓய்வில் இருக்கச் சொல்லி இருப்பதால் படிக்க, எழுத முடியாமல் சும்மாவிருப்பது மிக சிரமமாக உள்ளது. ஆகையால் நீங்கள் இங்கு இருக் கும்வரை தினமும் ஸ்ரீ பகவான் நூல்களை எனக்குப் படித் துக் காண்பிக்க வேண்டுமெனக் கூறினார். அதன்படியே ஸ்ரீ பகவான் நூல்களை படித்தேன். அவரும் கேட்டு மகிழ்ந் தார். அங்குள்ள சாதுக்களிடம், "பள்ளியில் படித்துக் கொண்டிருந்தவர், ஒரு குருவினிடமும் தங்கி வேதாந்த பாடம் கேளாதவர். ஆகையால் அவருக்கு வேதாந்த மொன்றும் தெரியாதென்பது சிலருடைய எண்ணம். ஆனால் அவர் எழுதியுள்ள நூல்களில் வேதாந்த சம்பிர

தாயச் சிறப்பும் அநுபவ ஆழமும் எவ்வளவு தெளிவாக இருக்கிறது" என்று ஸ்ரீ பகவானின் பெருமையை உவகையுடன் கூறினர். என்னையும் குறிப்பிட்டு மலையாளியாகிய இவர் தமிழ் எப்படிப் படிக்கிருர் பார்த்தீர்களா? அதுவும் இவர் இருக்கும் இடத்தின் மகத்துவம்தான் என்று சிலாகித்துப் பேசினர். நான் அங்கு சில நாள் தங்கி ஆச்ரமம் திரும்பினேன்.

29. கற்ருரைக் கற்ருரே காமுறுவர்

இங்கு வந்த பிறகு அங்கு நடந்த சம்பாஷணைகளையும் நான் படித்ததையும் ஸ்ரீ பகவானிடம் சொன்னேன். அதற்கு ஸ்ரீ பகவான் வீரசுப்பைய ஸ்வாமிகள் பெரிய பண்டிதராயிற்றே! ஆத்மபுராணம் ஹிந்தியில் உள்ளதை தமிழில் மொழிபெயர்த்திருக்கிருர். ஞானவாசிட்டத்திற்கு விரிவுரை எழுதியுள்ளார். கோவிலூர் மடத்திலுள்ள எல்லா வேதாந்திகளுக்கும் தலைவராக உள்ளவர் என்று கூறி ஒரு பழைய சம்பவத்தையும் குறிப்பிட்டார்கள். "நான் விருபாக்ஷி குகையில் இருக்கும் போது சில மடத்துத் தலைவர்களுடன் வீரசுப்பைய ஸ்வாமிகள் என்னைப் பார்க்க வந்திருந்தார். எல்லோரும் அமைதியாக உட்கார்ந்திருந்த சமயம் அவருடன் வந்திருந்தவர்கள் வீரசுப்பைய ஸ்வாமியிடம் ஏதோ ஜாடையாகச் சொல்ல, அவர் என்னைப் பார்த்துத் தயங்கி மற்றவர்களின் வற்புறுத்தலால் என்னிடம், "ஸ்வாமி! இவர்கள் தங்களிடம் கேள்வி கேட்டு தங்கள் வாக்கால் விடைபெற விரும்புகிருர்கள். நான் தங்களை சிரமப்படுத்த வேண்டாம் என நினைத்தும் இவர்களின் அபிலாஷையை நிறைவேற்றவே தங்களிடம் கேட்கிறேன்" எனச் சொல்லி விட்டு சகஜ நிர்விகற்ப சமாதிக்குரிய அப்யாசங்களைக் கேட்டார். அதற்கு நான் ஷட்வித சமாதிகளைச் சொல்லி அதன்

அப்யாச பலத்தால் சகஜ நிர்விகற்பசமாதி சித்திக்கும். அது அநுபவத்திற்கு வந்தவருடைய லக்ஷணங்கள், "பார்த்தும் பாராதவன், கேட்டும் கேளாதவன், செய்தும் செய்யாதவன் எனச் சொல்லி ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய விவேக சூடாமணியையும், திருக்கு-திருசிய விவேகத்தையும் நான் மொழி பெயர்த்ததைக் காட்டி அதிலுள்ள ஷட்வித சமாதிகளையும் காண்பித்தேன். அதைக் கண்டதும் அவருக்கு சந்தோஷமும் மற்றவர்களுக்கு வியப்பும் ஏற்பட்டது," என்று ஸ்ரீ பகவான் கூறினார்கள். கற்றாரைக் கற்றாரே காமுறுவரல்லவா? ஸ்ரீ பகவானைக் குறித்து வீர சுப்பைய ஸ்வாமிகளும், வீரசுப்பைய ஸ்வாமிகளைப்பற்றி ஸ்ரீ பகவானும் புகழ்ந்துரைத்த பெருமைமிகு சொற்களைக் கேட்கும் பாக்கியமும் அவர்களுடன் இருக்கும் வாய்ப்பும் பெற்றது என் பூர்வபுண்ணியத்தாலன்றோ!

30. வீரப்பச் செட்டியாரின் கைங்கரியச் சிறப்பு.

அந்த நாளில் நாட்டுக் கோட்டை ராவ்பகதூர் வீரப்பச் செட்டியார் என்பவர் ஸ்ரீ அண்ணாமலையார் கோவில் பரம்பரை தர்மகர்த்தா வழியில் வந்தவர். அவர் தர்மகர்த்தாவாக இருந்த காலத்தில்தான் கற்பக விருக்ஷம், காமதேனு, மயில் முதலிய பெரிய வெள்ளி வாகனங்கள் மற்ற நாட்டுக்கோட்டை செட்டியார்களின் உதவியுடன் செய்விக்கப்பட்டன. தம் சொந்தத் திருப்பணியாக ஸ்ரீஅபீதகுசாம்பிகைக்கு வைரத்தில் திருமாங்கல்யம், தோடு,ஒட்டியாணம் மற்றும் பலவைர நகைகளும், பெரிய வெள்ளி இந்திரவிமானமும் செய்வித்தார். ஒவ்வொரு கார்த்திகை உற்சவ சமயத்திலும் இரவு பகல் கூடவே நின்று தம் மேற்பார்வையில் மிக விமரிசையாக உற்சவம் நடத்துவார். அவரைப் போலவே தற்போது ஸ்ரீ அண்ணாமலையார் தீப உற்சவ சமயத்தில் பத்து நாளும் ஸ்வாமி

புறப்பாட்டில் இரவு பகலாக முழு ஈடுபாட்டுடன் கூட்வே நின்று நடத்தி வருபவர்கள், தர்மகர்த்தாக்களில் ஒருவ ரான திரு. S.S.V.S. முத்தைய செட்டியாரும் அவருக்கு உறுதுணையாக நிற்கும் C.P. அமிர்தலிங்கமும் ஆவர். வீரப்பச் செட்டியார் உற்சவ சமயங்களில் பெரிய பாட்டு வித்வான்களையும் நாதஸ்வர கோஷ்டிகளையும் வரவழைத் துக் கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்வார். அவர்களில் சிலரை ஆச்ரமம் அழைத்து வந்து ஸ்ரீ பகவான் சந்நிதி யிலும் கச்சேரி நடத்தச் செய்வார். ஒரு முறை புதுக் கோட்டை தக்ஷிணாமூர்த்திப்பிள்ளை கஞ்சிரா, சுந்தரம் அய்யர் கடம் முதலிய பக்க வாத்தியங்களுடன் அரியக்குடி ராமானுஜ அய்யங்காரின் கச்சேரி ஸ்ரீ பகவான் சந்நிதியில் நடைபெற்றது. பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்த கச்சேரி இரவு 7 மணிக்குத்தான் முடிவுற்றது. மிகவும் சிறப்பாக அமைந்தது. ஸ்ரீ பகவான் மாலை ஐந்தரை மணிக்கு வழக்கமாக வெளியில் சென்று வருபவர்கள் அன்று அதற்குகூடச் செல்லவில்லை. ஸ்ரீ பகவான் சந்நிதியில் பாடிய மகிழ்வில் பாடியவர்களும் அதைக் கேட்டவர்களும் மெய்மறந்து விட்டார்கள். பிறகு கும்பகோணம் ராமஸ் வாமி அய்யங்கார் ஸ்வாமிகள், அவர்களையெல்லாம் உப சரிப்பதில் ஈடுபட்டார். அய்யங்கார் ஸ்வாமிகள் கும்ப கோணத்தில் ஸ்ரீ ரமணாச்ரமம் அமைத்து அதில் ஒவ் வொரு வருடமும் ஸ்ரீ ரமண ஜயந்தியை விமரிசையாக நடத்தி வந்தார். அச்சமயம் பெரிய வித்வான்களுடைய கச்சேரிகள் அங்கு நடைபெறும். ஆகையால் எல்லா வித்வான்களையும் அவருக்கு நன்கு தெரியும். யாவரும் ஸ்ரீ பகவானை நமஸ்கரித்து விடைபெற்று ஹாலிலிருந்து வெளியில் வந்தார்கள். அய்யங்கார் ஸ்வாமிகள் வித்வான் களுக்கெல்லாம் தம் கையாலேயே சந்தனம் பூசி, தாம்பூ லம் கொடுத்து மகிழ்வித்து தானும் மகிழ்ந்தார். இவை களையெல்லாம் ஹால் ஜன்னல் வழியாகப் பார்த்துக்

கொண்டிருந்த ஸ்ரீ பகவான், அய்யங்கார் ஸ்வாமிகளின் உற்சாகத்தைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். வித்வான்களும் மற்றவர்களும் மனநிறைவோடு சென்றூர்கள்.

31. சஹஜ நிர்விகற்ப சமாதி நிலை.

பிறகு இரவு ஆச்ரமத்திலுள்ளவர்கள் உணவருந்தி முடித்து உட்கார்ந்திருக்கும்போது ஒரு அன்பர் ஸ்ரீ பகவானைப் பார்த்து "இன்று கச்சேரி வெகு அருமையாக இருந்தது. எங்களுக்கு எங்கிருக்கிறோம் என்பது கூட மறந்து விட்டது, பகவானுக்கு எப்படி இருந்ததோ" எனக் கேட்டார். அதற்கு ஸ்ரீ பகவான் "அவர்கள் வந்து நமஸ்கரித்துப் பாட ஆரம்பித்ததுதான் தெரியும். பிறகு கச்சேரி முடிந்து அவர்கள் எழுந்ததுதான் தெரியும். நமக்குள் இருக்கும் ஆசாமி எல்லாவற்றையும் சாப்பிட்டு விடுகிறுன். அப்புறம் என்னத்தைக் கேட்கிறது என்றூர்கள். சகஜநிர்விகற்பசமாதி அநுபவத்திற்கு வந்தவர்களுடைய லக்ஷணங்களைப் பார்த்தும் பார்க்காதவன், கேட்டும் கேட்காதவன், செய்தும் செய்யாதவனுக இருப்பானென ஸ்ரீ பகவான் முன்னரே கூறியுள்ளதற்கு தானே சாக்ஷியாய் இருந்தார்களென்பது விளங்குகிறது.

வீரப்ப செட்டியார் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை உற்சவம் முடிந்ததும் ஆச்ரமத்தில் ஸ்ரீ பகவானுக்குப் பெரிய பிக்ஷை நடத்துவார். அப்படி பிக்ஷை நடத்தும் தினத்தில் பெரிய கோவிலிலிருந்து அதிர்வேட்டு கொண்டு வந்து ஆச்ரமத்தில் வைப்பார். ஆச்ரமத்தில் வெடி சப்தம் கேட்டால் அன்று வீரப்ப செட்டியாரின் பிக்ஷையென எல்லோருக்கும் தெரியும். ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகள் உடல்நலமில்லாமல் இருந்த போது அவருக்கு சமாதி கட்டிடம் கட்ட நினைத்த செட்டியார் ஸ்ரீ பகவானிடம்

வந்து சமாதி கட்ட வேண்டிய விதிமுறைகளை அறிந்து கொள்ள விரும்பிக் கேட்டார். ஸ்ரீ பகவானும் உடனே "திருமூலர் திருமந்திரம்" புத்தகத்தை எடுத்து அதிலுள்ளபடி விவரமாக எழுதிக் கொடுக்கும்படி சொன்னார்கள். அதை வைத்துக் கொண்டு அதன்படி ஆச்ரம அருகிலுள்ள ஸ்ரீ அண்ணாமலையார் கோவில் தேவஸ்தானத்தைச் சேர்ந்த இடத்தில் சமாதிக் கட்டிடம் 20 நாளில் கட்டி முடித்தார். ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் "ப்ராயோபவாசம்" இருந்து 21ஆம் நாள் 14-1-1929-ல் மகாசமாதியாகவும் கட்டிடம் கட்டி முடிக்கவும் சரியாக இருந்தது. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாசமாதி வைபவத்திற்கு ஸ்ரீ பகவான் வரவேண்டுமென வீரப்பச் செட்டியாரும் மற்ற அன்பர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஸ்ரீ பகவான், சமாதி வைத்து முடிக்கும்வரை இருந்து விட்டு ஆச்ரமம் திரும்பினார்கள். தன் தாயாரின் சமாதி வைபவத்திற் கலந்து கொண்டதற்குப் பிறகு ஸ்ரீ பகவான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் சமாதி விசேஷத்தில், தான் கலந்து கொண்டார்கள். செட்டியாரும் மற்ற அன்பர்களும் மிக விமரிசையாகச் செய்து முடித்தார்கள். இப்படி பல கைங்கரியங்கள் செய்து சிறப்புப் பெற்றவர் வீரப்பச் செட்டியார்.

32. சமாதிக் கட்டட விதிமுறை.

திருமூலர் திருமந்திரத்திலுள்ள சமாதிக் கிரியை பாடல்கள் ஞானிகள் மகாநிர்வாணம் அடைந்த பிறகு அவர்கள் திருமேனியை இன்னது செய்தால் இன்னது நேருமென்பதற்கு விளக்கம்.

1. அந்தமின் ஞானிதன் னாகந் தீயினில்
வெந்திடில் நாடெலாம் வெப்புத் தீயினில்
நொந்தது நாய்நரி நுகரி னுண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும்வை யகமே.

2. எண்ணிலா ஞானி உபலெரி தாவிடில்
அண்ணல்தங் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்
மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமாம்
எண்ணரு மன்னர் இழப்பார் அரசே.

3. புண்ணிய மாமவர் தம்மை புதைப்பது
நண்ணி அனல்கோக்கில் நாட்டில் அழிவாகும்
மண்ணி லழியில் அலங்கார பங்கமாம்
மண்ணுல கெல்லாம் மயங்குமனல் மண்டியே.

4. அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கால்
அந்த உடல்தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னரும் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே.

சமாதி குகை கட்ட வேண்டிய விதிமுறைகள்

5. நவமிகு சாணுலே நல்லாழஞ் செய்து
குவைமிகு சூழவைஞ் சாணுகக் கோட்டித்
தவமிகு குகைமுக் கோணமுச் சாணுக்கிப்
பவ்மறு நற்குகை பத்மா சனமே.

6. தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை
நன்மலர்ச் சோலை நகரிநற் பூமி
உன்னருங் கானம் உயர்ந்த மலைச்சாரல்
இந்நிலந் தான்குகைக் கெய்தும் இடங்களே.

7. நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்
நிற்கின்ற பாத நவபாத நேர்விழப்
பொற்பம ரோசமும் மூன்றுக்கு மூன்றணி
நிற்பவர் தாஞ்செயும் நேர்மைய தாமே.

8. பஞ்ச - லோகங்கள் நவமணி பாரித்து
விஞ்சப் படுத்ததன் மேலா சனமிட்டு
முஞ்சி படுத்துவெண் ணீறிட் டதன்மேலே
பொன் செய்த நற்சுண்ணம் பொதியலு மாமே.

9. நள்குகை நால்வட்டம் படுத்ததன் மேற்சாரக்
கள்ளவிழ் தாமங் களபங்கத் தூரியுந்
தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்து
ஒள்ளிய தூபம் உவந்திடு வீரே.

10. ஓதிடும் வெண்ணீற்ருல் உத்தூளங் குப்பாய
மீதினி லிட்டா சனத்தின் மேல்வைத்துப்
போதறு சுண்ணமும் நீறும் பொலிவித்து
மீதி லிருத்தி விரித்திடு வீரே.

11. விரித்தபின் ஞற்சாரு மேவுதல் செய்து
பொரித்த கரிபோ னகமிள நீருங்
குருத்தலம் வைத்தோர் குகைமுகம் பார்வை
தரித்தபின் மேல்வட்டஞ் சாத்திடு வீரே.

12. மீது சொரிந்திடும் வெண்ணீறும் சுண்ணமும்
போது பலகொண்டு தர்ப்பைப்புல் வில்வமும்
பாத வுதகத்தான் மஞ்சனஞ் செய்துபார்
மீதுமூன் றுக்குமூன் றணிநிலஞ் செய்யுமே.

13. ஆதன மீதில் அரசு சிவலிங்கம்
ஏதும் இரண்டினில் ஒன்றைத்தா பித்து
மேதகு சந்நிதி மேவுத் தரம்பூர்வங்
காதலிற் சோடசங் காணுப சாரமே.

33. அய்யங்கார் ஸ்வாமிகளின் பக்தியும் தொண்டும்.

கும்பகோணம் ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமிகள் ஸ்கந்தாச்ரமத்தில் ஸ்ரீ பகவானிடம் நான் வருவதற்கு முன்பிருந்தே வந்து தங்கிப் போவது வழக்கம். அவர் சிறு வயதிலிருந்தே ஸ்ரீ பகவானிடம் மிக ஈடுபாடுள்ளவர். நைஷ்டிக பிரம்மசாரி. லங்கோடு கௌபீனம் மட்டும் தரித்திருப்பார். இங்கு திருவண்ணுமலை வரும்போது மாத்திரம் இடுப்பில் ஒரு துண்டு கட்டிக் கொள்வார். ஸ்ரீ பகவான் எதிரில் அவர்களைப் போலவே தானும் லங்கோடு

கௌபீனத்துடன் இருப்பது மரியாதைக் குறைவு எனும் எண்ணமே காரணமாகும். கும்பகோணத்தில் தாம் நிறுவிய ரமணாச்ரமத்தில், ஸ்ரீ பகவான் ஜயந்தியை பத்து நாட்களுக்கு அதிவிமரிசையாகக் கொண்டாடுவார். பத்து நாட்களும் பூஜையும், அன்னதானமும், பெரிய வித்வான்களின் கச்சேரியுமாகக் கோலாகலமாக இருக்கும். நான் ஒருமுறை அங்கு போய் பத்து நாட்களும் தங்கி அவற்றைக் கண்டு மகிழ்ந்தேன். ஸ்ரீ பகவானது தாயார் சமாதியான பத்தாம் நாள் விசேஷத்திற்கு வந்திருந்து நைவேத்தியத்திற்கு வேண்டிய பலவித பக்ஷணங்கள், சித்ரான்னங்கள் முதலியவைகள் செய்து சமையல் வேலைகளைக் கவனித்துக் கொண்டார். அதற்காக வேண்டிய ஆட்களையும் அழைத்து வந்திருந்து யாவற்றையும் பொறுப்புடன் பார்த்துக் கொண்டார். பிறகும் அடிக்கடி வந்து ஸ்ரீ பகவானை தரிசித்து தங்கிச் செல்வார். ஆனால் ஸ்ரீ பகவான் பார்வையில் படும்படி இருக்க மாட்டார். ஊரிலிருந்து வந்ததும் ஸ்ரீ பகவான் அமர்ந்திருக்கும் ஹால் வாசற்படி அருகில் நமஸ்காரம் செய்தால் பிறகு ஊருக்குப் புறப்படும் போதுதான் எதிரில் வந்து நமஸ்கரிப்பார். மற்ற நேரங்களில் ஸ்ரீ பகவான் மலைக்குச் செல்லும் போதும் திரும்பி வரும் போதும் தூர இருந்தே தரிசிப்பார். ஸ்ரீ பகவான் மலையிலிருந்து வருவதற்கு முன் ஹாலுக்குள் வந்து ஸ்ரீ பகவான் பாதம் பட்ட இடமெல்லாம் படுத்துப் புரண்டு ஆனந்திப்பார். ஸ்ரீ பகவான் அமரும் சோபாவிலுள்ள துணிகளை உதறிப்போட்டு சுத்தம் செய்து எங்களுடன் கைங்கரியத்தில் பங்கு கொள்வார். கடைசி நாளில் அவருக்கு ஏதோ ஒரு தோற்றம் உண்டாகி ஒரு பௌர்ணமி அன்று ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானைத் தரிசித்துவிட்டு பலாக்கொத்தில் என்னுடைய கட்டிடத்தில் வந்து தங்கினார். ஸ்ரீ பகவான் தினம் பலாக்கொத்து வழியாக வரும் போது தரிசித்துக் கொள்வார். டவுனிலிருந்து மிகப்பெரிய

மண்பானைகளைத் தருவித்து ஊறுகாய் போடுவதற்கு ஏற்பப் பக்குவப்படுத்தி ஆவக்காய், கடாரங்காய், எலுமிச்சை ஆக மூன்றுவித ஊறுகாய்கள் போட்டு புதுத்துணிவாங்கி சுத்தம் செய்து பானைகளுக்கு வேடுகட்டி காய்கள் ஊறி பதமானதும் பாதுகாப்பாக ஆச்ரமத்திற்கு அனுப்பி வைத்தார். நிறைய எண்ணெய் விட்டு அருமையாக தயாரிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ பகவானும் அவருடைய அன்புக் காணிக்கையைப் பாராட்டி "அவருக்கென்ன பெரிய ஜமீன்தார்களெல்லாம் அவருடைய சிஷ்யர்கள், அவருக்குப் பணக்கஷ்டமுமில்லை, அய்யங்காராகையால் எதையும் பக்குவமாகச் செய்வதிலும் வல்லவர். அவர் செய்ததற்குக் கேட்கவா வேண்டும்" என்றார்கள். பிறகு அய்யங்கார் ஸ்வாமிகள் வந்த பௌர்ணமிக்கு அடுத் பௌர்ணமி மாலையில் அவருக்கு சற்று தேக அசௌக்யம் ஏற்பட்டு அன்று இரவு சிறிது சிரமமாக இருந்து விடியற் காலை நாலரைமணி சுமாருக்கு ஸ்ரீ பகவான் திருவடி அடைந்தார். காலையில் கும்பகோணத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது. பிறகு அண்ணாமலையிலேயே தகனம் செய்யப்பட்டு அவருடைய அஸ்தியை கும்பகோணம் எடுத்துச் சென்று சமாதி வைத்து பூஜை நடைபெற்று வந்தது. அய்யங்கார் ஸ்வாமிகள் மறைந்த சிலமாதங்கள் சென்று இங்கு ஸ்ரீ பகவானுக்குக் கைங்கரியம் செய்து வந்த மாதவ ஸ்வாமிகள் கும்பகோணம் ரமணாச்ரமம் சென்றவர் அங்கு சமாதியாகிவிட்டார். ஸ்ரீ பகவான் "அந்த ஆச்ரமத்திலிருந்த அய்யங்கார் இங்கு வந்து காலமானார், இந்த ஆச்ரமத்தில் இருந்த மாதவன் அங்கு போய் சமாதியாகி விட்டான்" என்றார்கள்.

34. பக்தரின் வழக்கும் மலைவலத்தீர்வும்.

ஸ்ரீ பகவானுடன் நாங்கள் அடிக்கடி கிரிப்பிரதக்ஷிணம் செல்லும் போது இங்கு ஆச்ரமத்தில் சமையற்கட்

டில் கைங்கரியம் செய்பவர்களில் ஓரிருவரும், வெளி கைங் கரியம் செய்பவர்களாகிய ராமகிருஷ்ணஸ்வாமி முதலிய எங்களில் யாரேனும் ஒருவரும் ஆச்ரமப் பாதுகாப்பிற் காகத் தங்கிக் கொண்டு மற்றவர்கள் செல்வது வழக்கம். முதல்முறை போனவர்கள் மறுமுறை தங்கிக்கொள் வோம். அந்த சமயம் சமையற் கைங்கரியப் பொறுப் பேற்றிருந்தவர் நாராயணராவ் என்பவர். ஆங்கிலம் நன்கு கற்றவர், வாட்ட சாட்டமாக இருப்பார். ஸ்ரீ சின்ன ஸ்வாமிகளின் பால்ய சிநேகிதர். அவர் பழைய நினைவை மனதில்கொண்டு ஸ்ரீ சின்னஸ்வாமிகள் சமையல் திட்டத் தில் ஏதாவது சொன்னுல் உடனே “நான் ராயராக்கும்! சமையல் நீங்கள் கற்றுத் தருகிறீர்களா?” என விதண்டா வாதம் பேசுவார். நிலாக்காலங்களில் மாலையில் பிரதக்ஷ ணம் செல்லும் போது பூரி, உருளைக்கிழங்கு போன்ற பலகாரங்கள் செய்து சாப்பிட்டுவிட்டு, வழியில் சாப்பிடு வதற்கும் ஏதாவது உணவுப் பொருட்கள் எடுத்துச்சென்று விடியற்காலை ஆச்ரமம் வந்து சேருவோம். அவ்வாறு ஒரு முறை கிரிப்பிரதக்ஷணம் புறப்பட்டோம். வழக்கம்போல் டிபன் சாப்பிட்டு வழியில் அருந்த வேண்டிய உணவுகளை யும் தயார் செய்தோம். ஸ்ரீ சின்ன ஸ்வாமிகள், நாராயண ராவை அவர் முறைக்கு அன்று ஆச்ரமத்தில் இருந்து பார்த்துக் கொள்ளும்படிக் கூறினுர். அதற்கு ராயர் “நீங்களெல்லோரும் எந்தநேரமும் பகவான் அருகிலேயே இருக்கிறீர்கள், எனக்கு சமையற்கட்டு வேலை தீர்ந்து இப்பொழுதுதான் பகவானுடன் போக முடிகிறது, ஆகை யால் இந்தக் கணக்கு முறைகளெல்லாம் எனக்கு வேண் டாம், நானும் பிரதக்ஷணம் போகிறேன்” எனப் பிடிவாத மாகச் சொல்லவும், இருவருக்கும் வாக்குவாதம் ஏற் பட்டது. ராயர் “அப்படியானுல் நான் ஆச்ரமத்தை விட்டுப் போகிறேன்” என்றுர். சின்ன ஸ்வாமிகளும் “இஷ்டமில்லையானுல் போகலாம்” என்று கூறிவிட்டார். இவ்விஷயம் ஸ்ரீ பகவான் காதிற்கும் எட்டியது.

நாங்களெல்லோரும் தயாரானதும் ஸ்ரீ பகவானிடம் "புறப்படலாம்" எனக் கூறினோம். ஸ்ரீ பகவான் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு "நீங்களெல்லாம் போய் வாருங்கள்" என்றார்கள். மறுபடியும் நாங்கள் ஒன்றும் புரியாமல் "சாப்பாடெல்லாம் கட்டித் தயாராக இருக்கிறது" என்றதும் "அந்த சாப்பாட்டு மூட்டைகளை பிரதக்ஷணம் செய்துவிட்டுச் சாப்பிடுங்கள்" எனக் கூறினார்கள். நாங்கள் திகைத்து நின்று விட்டோம். ஸ்ரீபகவான் "நான் பிரதக்ஷணம்போவதால்தானே சாமியோடு நான் போகிறேன், நீ போகிறாய் என்ற வம்புகள் வருகின்றன. ஆகையால் நீங்களெல்லோரும் போய்வாருங்கள்" என்று அமைதியாகவும், அழுத்தமாகவும் கூறிவிட்டார்கள். அன்றிலிருந்து ஸ்ரீ பகவான் கிரிப்பிரதக்ஷணம் போவது நிரந்தரமாக நின்று விட்டது. ஸ்ரீ பகவானுக்கும் சற்றுத் தள்ளாமை ஏற்பட்டுப் பிரதக்ஷணம் சென்றுவந்த பிறகு சிறிது சிரமமாக இருக்கும். இதைக் காணும் சில அன்பர்களுக்கு ஸ்ரீ பகவான் இனி பிரதக்ஷணம் போகாமலிருந்தால் நல்லதாயிற்றே என்ற எண்ணம் ஏற்பட்டதுண்டு. இவ்வன்பர்களின் ஆத்மார்த்தமான எண்ணம் எவ்வாறோ நிறைவேறி விட்டது. பிறகு சில மாதங்கள் சென்று நாராயணராவ், "தன்னால் ஒரு பிரச்சனை ஏற்பட்டு அதன் காரணமாக ஸ்ரீ பகவான் பிரதக்ஷணம் செல்வது நின்று விட்டதே" என்னும் வருத்தத்தில் ஆச்ரமத்திலிருந்து விலகி பவளக்குன்றில் தங்கிக்கொண்டு அடிக்கடி ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானை தரிசித்துச் செல்வார். அப்பொழுதிருந்த ஈசான்ய மடாதிபதி, ராயரை தங்கள் மடத்தில் வந்து இருக்கும்படி அழைத்துச் சென்றார். அம்மடத்தில் தங்கி இருந்த போதும் ராயர், ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு வந்து போவார். பிறகு காளையார் கோயில் மடாதிபதியின் அழைப்பின் பேரில் அங்கு போய் இருந்து, கோயிலூர் மடத்தில் சந்நியாசம் பெற்று

நாராயணஸ்வாமி என இருந்து வந்தார். அப்பொழுதும் இங்கு ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானை தரிசித்துச் செல்வார். ஒரு சமயம் யாத்திரையாகக் காளையார் கோயிலுக்கு வந்திருந்த சத்தியானந்த ஸ்வாமியை, ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு இங்கு முதன் முறையாக அனுப்பி வைத்தவர் நாராயணஸ்வாமிதான். ஸ்ரீ பகவானுக்குக் கடைசியாகச் சிலகாலம் கைங்கரியம் செய்யும் பாக்கியம் பெற்ற சத்தியானந்தஸ்வாமி, தற்சமயம் ஆச்ரமத்தில் இருந்து வருகிருர். நாராயணஸ்வாமி பல மடங்களில் தங்கியிருந்து சமீப காலத்தில் சமாதி அடைந்தார்.

35. லய சமாதியும் நிவாரணமும்.

சங்கரானந்தர் ஆந்திரர். அஞ்சல் அலுவலகத்தில் அதிகாரியாக இருந்தார். அவர் ஜலத்திலேயே மணிக்கணக்கில் நின்று கொண்டு ஜபம் செய்வாராம். அவருக்கு லயசமாதி ஏற்பட்டு எந்தத் தொழிலும் செய்ய முடியாமல் விடுமுறை எடுத்துக் கொண்டு ஸ்ரீ பகவானை தரிசிக்க வந்தார். எங்கு உட்கார்ந்தாலும் லயத்தில் ஆழ்ந்துவிடுவார். அவர் நிலையைப் பார்த்த ஸ்ரீ பகவான் ஞானத்திற்கு லயம், விக்ஷேபம், கஷாயம் என்ற மூன்றும் தடைகளாகும். அதில் அகப்படாமல் இருப்பதற்குத்தான் சிரவண-மனன நிதித்யாசனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவரை எங்கும் உட்கார விடாமல் நடத்திக் கொண்டும், லயத்திற்குப் போகாதவாறும், விசார வழியில் பேசிக் கொண்டும் இருந்தால் சரியாகிவிடும் என்ருர்கள். நாங்களும் அவரை அவ்வாறே நடத்தித் தெளிவித்தோம். இதன் காரணமாக லயஸ்திதி மாறி விசாரஞான புருஷராஞர். பிற்காலத்தில் ஸ்ரீ சின்னஸ்வாமிகளை ரங்கூனுக்கு அழைத்துச் சென்றவர் இவர்தான்.

36. சமாதிநிலை காலதேசங்களைக் கடந்தது

கடப்ப சச்சிதானந்த யோகீஸ்வரர் மிகப் பிரசித்தி பெற்ற ஹடயோகி. ஒருமுறை அவர் இந்தியா முழுவதும் யாத்திரையாகப் புறப்பட்டு ஒவ்வொரு முக்கியமான ஊரிலும் மூன்று தினங்கள் தங்கிப் பிரசங்கம் செய்து வந்தார். அப்படியே திருவண்ணுமலை வந்தவர் ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானுடன் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு தாம் தங்கியுள்ள இடத்திற்குத் திரும்பினுர். அவருடன் வந்தவர்கள் அங்கு நடக்கும் பிரசங்கத்தைக் கேட்க எங்களை வரும்படிச் சொல்லிப் போனுர்கள். நானும், நல்ல படிப்பாளியாகிய பழனிமலைஸ்வாமி என்பவரும் அங்கு சென்ரேம். அவ்வமயம் யோகீச்வரர் யோகசமாதியில் இருந்தார். அவருடன்கூட இருக்கும் பிரசங்கியார் எங்களை வரவேற்று "ஸ்வாமிகள் சமாதியில் இருக்கிருர், இத்தனை மணிக்குத்தான் எழுந்திருப்பார், பிறகுதான் பிரசங்கம்" எனக்கூறிவிட்டு "உங்கள் பகவான் எப்பொழுதெல்லாம் சமாதியில் இருப்பார்" எனக்கேட்டார். இதைக்கேட்டதும் பழனிமலைஸ்வாமி "அப்படியா"! என்று கேட்டு சிரித்து விட்டார். இதைக் கண்ட பிரசங்கியார் ஏன் எனக் கேட்டார். நான், "வேருென்றுமில்லை, இத்தனை மணிக்கு சமாதியில் இருப்பது, எழுந்திருப்பது என்பது ஞானிகளுக்கில்லை. சமாதியில் இருப்பது, எழுந்திருப்பது என்பதைக் கேட்டுச் சிரித்து விட்டார்" என்றேன். ஞானிகள் சமாதிவிட்டு இருக்க முடியாது. பல கிரந்தங்களிலும் அவ்வாறே கூறியுள்ளது. வாசிட்டத்தில் :

வெறி திருக்கினும் தொழிலினை மேவினும் விடாமல்
அறிஞனென்றுதான் சமாதி விட்டகன்றவனுகும்?
செறியும் ஞானஞ்சேர் மனத்தினர் சகத்தொழில் செயினும்
பிறிவிற் றத்துவநிட்டராய்ச் சமாதியிற் பெயரார்.

(தா-ம்) சும்மா இருந்தாலும் இடைவிடாமல் எத்தொழிலைப் புரிந்தாலும் ஆத்மஞானி எப்போதுதான் சமாதியை விட்டு நீங்கினவனுவான்? நிறைந்த ஞானமுடைய மனதையுடையவர்கள் உலக விவகாரங்களைச் செய்தாலும் பிரிவில்லாத உண்மை நிஷ்டையை உடையவராய் சமாதியை விட்டு நீங்க மாட்டார்கள். நீங்கவும் முடியாது எனக் கூறப்பட்டுள்ளது.

"பகவான் எப்பொழுதும் சகஜநிஷ்டையில் இருப்பவர்கள்" என்றேன். பிறகு சிறிது நேரம் அங்கிருந்து பிரசங்கம் கேட்டுவிட்டு ஆச்ரமம் திரும்பினேம். வழக்கம் போல் ஸ்ரீபகவான், என்ன விசேஷம் எனக் கேட்டார்கள். அங்கு நடந்ததைச் சொன்னேன். ஸ்ரீ பகவான் புன்முறுவலுடன் "சமாதிநிலை என்பது ஏதோ காலதேசத்திற்குள் அடங்கினது என நினைக்கிருர்கள். ஒரே இடத்தில் ஆடாது அசையாது கண்மூடி மணிக்கணக்கில் அமர்ந்திருப்பதுதான் சமாதியென எண்ணுகிருர்கள், என்ன செய்வது?" என்ருர்கள். வாசிட்டத்திலுள்ள மற்ருெரு பாட்டிலும் கூறியுள்ளதாவது :—

பிரமவஞ்சலி யுடன்பதுமா தனம்பெறினும்
விரவசாந்தர்கள் சமாதியின் மேவலர் ஆசைத்
திரண பாவகனுகிய சிற்றுணர் வொன்றே
வரசமாதியாம் வெறிதிருக்கு மஃதன்று வள்ளால்.

(தா-ம்) பூரணமான சாந்தியில்லாதவர்கள் பிரம்மாஞ்சலியுடன் பத்மாசனத்திலிருந்தாலும் சமாதியிற் பொருந்தார்கள். இச்சையெனும் துரும்புக்கு அக்னியாயிருக்கின்ற ஆத்மஞானமொன்றே மேன்மையான சமாதியாகும். சாந்தியில்லாமற் சும்மா இருக்கும் அது சமாதியல்ல என்பதாகும்.

பிறகு ஸ்ரீ பகவான் எழுதியுள்ள "உள்ளது நாற்பது" எனும் நூலில் அநுபந்தம் பாடல் 31-ல்

வண்டிதுயில் வானுக்கவ் வண்டிசெலல் நிற்றலொடு
வண் டிதனி யுற்றிடுதன்-மானுமே—வண்டியா
மூனவுட லுள்ளே யுறங்குமெய்ஞ் ஞானிக்கு
மானதொழி னிட்டையுறக் கம்.

(தா-ம்) வண்டியில் தூங்குகின்ற ஒருவனுக்கு, அந்த வண்டி செல்லுதல், நிற்றல், வண்டியிலிருந்து மாடுகளை அவிழ்த்து அவற்றைத் தனியாக விடுதல் என்ற மூன்றும் எப்படியோ, அப்படியே வண்டி போன்ற இவ் விழிவான வுடலில் தூங்குகின்ற மெய்ஞ் ஞானிக்கும், உடம்பால் செய்யப்படும் தொழில், நிட்டை, தூக்கம் என்ற மூன்றும் ஒன்றே ஆகும் என்பதாகும்.

37. ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிகளின் சாதுசேவை.

ஸ்ரீ நரசிம்மஸ்வாமிகள் சேலத்தில் பிரபல வக்கீலாக வும் காங்கிரஸ் அரசியல்வாதியாகவும் பிரஸித்திபெற்ற B. V. நரசிம்ம அய்யராவார். ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ர மத்திலிருந்து இங்கு ஆச்ரமத்தில் தங்க ஆரம்பித்தபிறகு வந்தவர். அவர் வந்த சமயம் ஆச்ரமத்தில் நாலைந்து பேர்கள்தான் நிரந்தரமாகத் தங்கி இருந்தவர்கள். மிக அமைதியான சூழ்நிலை. ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிகள் இங்கு வந்ததும் இந்த ரமணீயமாகிய இடம் அவர் மனதிற்கு வெகுவாகப் பிடித்துவிட்டது. ஸ்ரீ பகவானின் மகத்து வத்தை முழுவதுமாக உணர்ந்தார். இப்படிப்பட்ட ஞான ஒளி குடத்துதீபமாக இருக்கிறதே, இதை குன்றின்மேல் வைத்தால் உலகத்தவர் உய்ய வழியுண்டாகுமே என்று நினைத்தார். ஸ்ரீ பகவான் சரித்திரத்தை முதன்முதல் ஆங்கிலத்தில் எழுதத் துவங்கி சில மாதங்களுக்குள்ளா

கவே எழுதி முடித்தார். அதுவரை யாரும் ஸ்ரீ பகவான் சரிதத்தை எந்த மொழியிலும் எழுதவில்லை. அவர் எழுதிய ஆங்கில சரித்திரத்தைப் பார்த்துத்தான் பால் பிரண்டன், சாட்விக், பிக்ஷு ப்ரக்ஞானந்தா முதலிய மேலை நாட்டவரும் ஸ்ரீ பகவான் அருள் பெற விழைந்த னர். ஸ்ரீ நரசிம்மஸ்வாமிகளுக்கு நாம ஜபத்திலும் நாமா வளி பஜனையிலும் ஈடுபாடு மிக உண்டு. அந்த நாளில் கைங்கரியத்தில் பங்கு கொண்டுள்ள சிலர் மட்டும் ஆச்ர மத்தில் தங்கியிருந்ததால் சமையல் திட்டமும் சிறிய அள விலேயேதான் இருந்தது. ஆகையால் வெளியூரிலிருந்து வரும் பக்தர்கள், ஸ்ரீ பகவான் சந்நிதானத்தில் அதிகநாள் தங்கி ஆத்மலாபம் பெற விரும்பினாலும், யாதொரு கைங்க ரியமும் இன்றி ஆச்ரமத்தில் நீண்ட நாட்கள் தங்கி சாப் பிட்டுக் கொண்டிருக்க விரும்புவதில்லை. ஆகாரத்திற்காக ஒவ்வொரு வேளையும் ஊருக்குள் போய் வருவதும் சிரம மாக இருக்கும். இதையெல்லாம் அறிந்த ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிகள், அண்ணாமலையின் கோயிலைச் சேர்ந்த நந்த வனமாகிய ஆச்ரமத்திற்கு மேற்கில் உள்ள பலாக்கொத் தில் தனக்கென ஒரு இடம் அமைத்துக் கொண்டு நிரந்தர மாக, ஸ்ரீ பகவானுக்கு அண்மையிலேயே தங்குவதற்கு விரும்பிய சாதுக்களும் தனித்தனியே குடில் அமைத்துக் கொண்டு இருப்பதற்கு வழி காட்டினார். அவரவர்களுக்கு ஆகாரம் அவரவர்களே தயாரித்துக் கொள்ள வேண்டும். சமைப்பதற்கே நேரமெல்லாம் வீணாகாமல் இருப்பதற்கும் குக்கரில் சமைப்பதற்கும் திட்டம் வகுத்தார். அதிக விலை கொடுத்து குக்கர் வாங்க முடியாத சாதுக்களுக்குத் தகரத் தினால் வெளிப்பாத்திரம் அமைத்து அதில் கிண்ணங்களை அடுக்கி வைத்து அதிக செலவில்லாமல் சமையல் செய்ய வும் தம்முடைய அறிவுத்திறமையால் ஆவன செய்தார். குடிப்பதற்கு அருமையான தண்ணீர் அங்குள்ள குளத்தி லேயே கிடைத்தது. ஆச்ரமத்திற்கும் அருகாமையிலேயே

இருந்தது. பிற்காலத்தில் பால்பிரண்டன் முதலானோரும் அங்கே கட்டிடம் கட்டிக் கொண்டு வந்து தங்கினார்கள். சாதுக்கள், ஸ்ரீ பகவான் சந்நிதியில் நீண்ட நேரம் தங்கி பக்தர்களுக்கு ஸ்ரீ பகவானின் அமுதவாக்கிலிருந்து கிடைக்கும் அருள்மொழிகளைக் கேட்டு ஆனந்திக்கவும், சந்தேகம் தெளிந்து கொள்ளவும், தியானம் செய்யவும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆகாரம் செய்வதற்கும் சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளவும் பலாக்கொத்து வசதியாக அமைந்தது.

ஸ்ரீ நரசிம்மஸ்வாமிகளுக்கு பஜனையில் மிக ஈடுபாடு இருந்ததால் எந்த இடத்தில் பஜனை நடப்பதாக இருந்தாலும் சென்று, விடிய விடிய நடந்தாலும் இருந்து விட்டே வருவார். அவருக்கு வேதாந்தமும் தெரிந்து: கொள்ள வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டு ஸ்ரீ பகவானிடம், கைவல்யம் என்ற வேதாந்த கிரந்தம் ஒன்று இருக்கிறதாமே, அதைப் படிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். ஸ்ரீ பகவானும் சந்தோஷமாக கைவல்யம் புத்தகத்தை எடுத்து அதிலுள்ள பாட்டுகளுக்கு சுருக்கமாக அர்த்தம் சொல்லி விளக்கினார்கள். ஸ்ரீ நரசிம்மஸ்வாமிகளும் மிக ஆர்வத்துடன் கவனமாகக் கேட்டுத் தெளிவாக மனதில் கிரகித்துக் கொண்டார். அவருடைய தீவிரத்தையும் அறிவையும் பார்த்து ஸ்ரீ பகவானும் உற்சாகமாக ஒரு வாரத்தில் பாட்டுகளுக்கு அர்த்தம் சொல்லி முடித்தார்கள். பிறகு ஒரு நாள் ஸ்ரீ பகவான் அருகிலிருந்தவர்களிடம், "கோவிலூர் மடம் போன்ற இடங்களிளெல்லாம் வேதாந்த பாடம் கேட்க வேண்டுமென்றால் பலவருடங்கள் மடத்தில் தங்கி சேவை செய்தும். வேதாந்தம் கற்பதற்கு வேண்டிய நூல்களாகிய நானுஜீவவாதக் கட்டளை, கீதாசாரத்தாலாட்டு, சசிவர்ணபோதம், கைவல்யம் முதலான கிரந்தங்களில் உள்ள பாடல்களை மனனம் செய்தபிறகுதான் மேற்

படி நூல்களுக்கு அர்த்தம் சொல்வார்கள். ஆனல் நர சிம்மஸ்வாமியைப் போன்ற அறிவு கூர்மையுடையவர்க ளுக்கு அந்த சம்பிரதாயமெல்லாம் அவசியமில்லையே," என்ருர்கள். பிறகு ஸ்ரீ நரசிம்மஸ்வாமிகள் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளுடைய சரித்திரக் குறிப்புகளை எழுதி வைத்தி ருந்தார். அவை பிரசுரமாகாமல் கையெழுத்துப் பிரதிக ளாகவே இருந்தன. அவர் எழுதிய ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வா மிகள் சரித்திரக் குறிப்புகளை வைத்துக் கொண்டுதான் பிற்காலத்தில் குழுமணி நாராயண சாஸ்திரிகள் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் சரித்திரத்தை விரிவாக எழுதி வெளியிட்டார். ஸ்ரீ நரசிம்மஸ்வாமிகள் சாது விருத்தியிலிருந்துகொண்டு அமைதியாக இருந்து வந்தார். அவருடைய பூர்வாச்ரமத்தில் அரசியல்வாதியாக அறிந்த வர்களும் அவர் எழுதிய ஸ்ரீ பகவானுடைய ஆங்கில சரித் திரத்தைப் படித்த மேலைநாட்டவரும் மற்றவர்களும், அவரை அடிக்கடி பார்க்க வந்து கொண்டிருந்தார்கள். இதனல் அவருக்கு ஜபதியான பஜனைகளுக்கு இடைஞ்சல் ஏற்பட்டது. தம்மைத் தெரிந்தவர்கள் இருக்கும் இடத்தில் தாமிருந்தால் நிம்மதியாக இருக்க முடியாது என தீர்மா னித்து வடதேச யாத்திரை புறப்பட்டார். பல இடங்களை தரிசித்து பிறகு சீரடி ஸ்ரீ சாயிபாபா ஆச்ரமம் சென்று தங்கினர். அங்கு அவருக்குப் பிடித்தமான பஜனை முதலி யவைகளில் கலந்து கொண்டு அமைதியாக சிலகாலம் இருந்து வந்தார். அதன்பிறகு தென்னுட்டிற்கு யாத்திரை யாக ஸ்ரீ சாயிபாபா பக்தர்களுடன் வந்து ஸ்ரீ பகவானையும் தரிசித்து சென்னை சென்று ஸ்ரீ சாயிபாபா ஆச்ரமம் ஒன்று நிறுவி அங்கேயே தங்கியிருந்து சில வருடங்களின் பின் சமாதியடைந்தார்.

38. சோபா கவுண்டரும் வீட்டு மனைகளும்.

ஸ்ரீ நரசிம்மஸ்வாமிகள் சாதுக்கள் தங்கி நலம் பெற வழிகாட்டியது போல் அதே பாதையில் குடும்பத்தினரும் தங்கி ஸ்ரீ பகவானின் பூரண கடாக்ஷம் பெற வழிவகுத்தவர் பொள்ளாச்சி தாலுக்கா புதுப்பாளையம் ரங்கஸ்வாமிக் கவுண்டராவார். கிருகஸ்தர்கள் ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு வெளியூரிலிருந்து வந்தால், பெண்களும் குழந்தைகளும் இரவில் தங்க இடமில்லாமல் சிரமமாக இருக்கும். பலாக்கொத்திலும், ஆச்ரமத்திலும் பெண்கள் இரவில் தங்கக் கூடாததால் ஊருக்குள் போய் இருந்துவிட்டு காலையில் ஆச்ரமம் வருவார்கள். சிறு வயதிலிருந்தே என்னுடன் ஆத்மார்த்தமாகப் பழகியவர் ரங்கஸ்வாமிக் கவுண்டர். பணவசதியும் நல்ல உள்ளமும் படைத்தவர். ஆச்ரமம் வந்து சில மாதங்கள் தங்கிச் செல்வார். கவுண்டரவர்கள் ஸ்ரீ பகவானுக்குக் காணிக்கையாக சமர்ப்பித்த சோபாவில் (பழைய ஹாலில் உள்ளது) அமர்ந்துதான் நீண்ட காலம் பக்தர்களுக்கு ஸ்ரீ பகவான் அருள்மழை பொழிந்தது. இதன் காரணமாக அவரை சோபா கவுண்டர் எனக் குறிப்பிடுவார்கள். கோசாலைக் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய பொருளுதவி அளித்தது கவுண்டரும், ஜட்ஜு சுந்தரம் செட்டியாரும் ஆவர். இப்படிப் பலவித கைங்கரியம் செய்துவந்த கவுண்டரிடம், குடும்பத்துடன் வருபவர்கள் தங்குவதற்கு ஆச்ரமம் அருகிலேயே வீடுகள் கட்ட மனைவாங்கும்படி நானும், கல்கத்தா K. R. ராமநாத அய்யரும் சொன்னோம். இந்த நல்ல யோசனையை ஏற்றுக் கொண்டு அதன்படியே இவ்வூரிலிருந்த மொட்டைய முதலியாரின், ஆச்ரம அருகிலுள்ள நிலத்தை முழுவதுமாக வாங்கினார். வாங்கிய நிலத்தை மனைகளாகப்பிரித்து சிறிதும் லாபமின்றி வாங்கின விலைக்கே பக்தர்களுக்குக் கொடுத்தார். பல அன்பர்கள் குடும்பத்துடன் இருந்து

ஸ்ரீ பகவானின் அருள்வெள்ளத்தில் மூழ்கி தாங்களும் தங்கள் வழித்தோன்றல்களும் உய்ய வீடுகள் கட்டிக் கொண்டு மீளா அடிமைகளாக வாழ்ந்து வரும் ஸ்ரீ ரமண நகர் தோன்ற காரணகர்த்தாவாக இருந்தவர் ரங்கஸ்வாமிக் கவுண்டராவார்.

39. ஸ்ரீ பகவான் போதனையும் எனது தவ வாழ்க்கையும்

நான் ஸ்ரீ பகவான் கைங்கரியம் செய்து கொண்டிருக்கும் போது ஸ்ரீ பகவான் அடிக்கடி பொதுவாகச் சொல்வார்கள்: "பகவான் கைங்கரியம் செய்கிறேன், படுக்கை தட்டிப் போடுகிறேன், இத்தனே வருஷம் சேவை செய்தேன் என்பதிலெல்லாம் பிரயோசனமில்லே. குரு கைங்கரியத்துடன், குரு காட்டிய வழியிற் செல்வதுதான் முக்கியம். விசாரம், தியானம் முதலியவைகளில் திரிகரணசுத்தியுடன் தீவிரமாக ஈடுபாடு கொள்வதுதான் குருவுக்குச் செய்யும் உத்தமமான கைங்கரியமாகும்". கைவல்யத்திலுள்ள ஒரு முக்கியப் பாடலின் கருத்தையும் சுட்டிக் காட்டுவார்கள். கைவல்யம் தவவிளக்கப் படலம் பாடல் 86-ல் குருவின் கருணேக்குக் கைம்மாறு ஒன்றுங் காணேனென வருந்திய சீடனுக்கு நீ செய்யும் கைமாறு ஈதென (பாடல் 87)

சிட்டனிவ் வாறுகூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்
கிட்டவா வெனவிருத்திக் கிருபையோ டருளிச் செய்வார்
துட்டமாந் தடைகள் மூன்றுந் தொடராமற் சொரூப
நிட்டனு யிருக்கி னீதே நீசெயு முதவி யாமே. [ஞான

என்று விளக்குகிருர் குரு. இதைக் கேட்கும் போதெல்லாம் நானும் சில காலத்திற்குத் தனிமையில் இருந்து விசார மார்க்கத்தில் பழக வேண்டுமென்று எண்ணுவேன். இந்நிலேயில் ஒருமுறை மலேயாளத்திலுள்ள ஒரு கிராமத்

தில் ஸ்ரீ பகவான் பக்தர் பழனிமலைஸ்வாமி நிறுவி இருந்த ஆச்ரமத்திற்குச் சென்றிருந்தேன். அவ்வமயம் அவர், மாதவன் என்பவரை அறிமுகப்படுத்தி. இவர் ஏதாவது ஆச்ரமங்கள் அல்லது மடங்களில் தங்கி இருக்கப் பிரியப் படுகிறார். அதற்கு நீங்கள் தான் ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொண்டார். நானும், மாதவனிடம் திருவண்ணாமலை வருவதற்கு வேண்டிய விவரங்களை எல்லாம் சொல்லி வேறு சில ஊர்களுக்குச் சென்று திருவண்ணாமலை திரும்பினேன். மாதவனும் வந்து சேர்ந் தார். அப்பொழுதெல்லாம் ஸ்ரீ பகவான் முழு ஆரோக்கியத் துடன் இருந்தார்கள். எனக்கும் ராமகிருஷ்ணஸ்வாமிக் கும் அதிக வேலைகள் இருப்பதில்லை. மாதவஸ்வாமி இங்கு வந்த பிறகு அவரை ஸ்ரீ பகவான் கைங்கரியத்திற்கு விட்டு விட்டு, நான் சிறிது காலத்திற்கு பலாக்கொத்தில் தனிமை யில் மௌனமாக இருந்து விசாரம் தியானம் முதலியவை களில் ஈடுபட நினைத்து, ஸ்ரீ பகவானுக்குச் செய்ய வேண்டிய கைங்கரியங்களை ஒரு வாரத்தில் அவருக்குக் காட்டிக் கொடுத்தேன். பிறகு ஒரு நாள் இரவு ஏகாந்த மாக இருக்கும் போது ஸ்ரீ பகவானிடம், நான் மௌன மெடுத்துக்கொண்டு பலாக்கொத்தில் தங்கப் போவதற்கு உத்தரவு பெற்றுக் கொள்ளும் போது, இதுவரை கைங் கரியம் செய்து கொண்டிருந்தேன், இனி அங்கு போய் நான் எப்படி இருக்க வேண்டுமென்பதை ஸ்ரீ பகவான் சொல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். ஸ்ரீ பகவான் என் விண்ணப்பம் சரியே என நினைப்பவர் கள் போல் புன்சிரிப்புடன் "மனதை ஏகாக்ரமாக வைத்து விசாரம், தியானம், ஜபம், பாராயணம் தவிர வேறெதிலும் மனம் நாடாமலிருந்தால் அதுவே போதும்" எனப் பரிவுடன் பகர்ந்தார்கள். ஸ்ரீ பகவானின் பூரண அனுக் கிரகத்துடன் விடை பெற்றுக் கொண்டேன்.

மறுநாள் விடியற்காலே ஆச்ரமத்திலிருந்து புறப்பட்டு பலாக்கொத்திலுள்ள பிள்ளேயார் கோவிலுக்குப் பக்கத்திலிருந்த சிறிய அறையில் மௌனத்துடன் போய்த் தங்கினேன். அங்கு பிள்ளேயாருக்கு பூஜை செய்துவந்த சபாபதிப் பிள்ளே என்பவர், சாதுக்களிடம் மிகுந்த மரியாதையும் அன்பும் உள்ளவர். ஊருக்குள்ளிருந்து காலே ஐந்தரை மணிக்கு ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானேதரிசித்து, பலாகொத்திற்குச் சென்று ஸ்நானம் செய்து நைவேத்தியம் வைத்து விநாயகருக்கு அபிஷேக ஆராதனேகள் முடித்து, அந்த அன்னத்துடன் ஆச்ரமத்திலிருந்து சிறிது குழம்பு வாங்கி வந்து சாப்பிட்டு, மாலேயில் அண்ணுமலேயார் கோவிலுக்கு நிறைய புஷ்பம் எடுத்துக் கொண்டு ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானே தரிசித்து டவுனுக்குத்திரும்புவது வழக்கம். நான் போய் அங்கே தங்கிய அன்று ஒன்றும் சாப்பிடாமல் மௌனமாக இருப்பதைப் பார்த்து நைவேத்திய ஆகாரத்தில் எனக்கும் சிறிது கொடுத்தார். நானும் சாப்பிட்டேன். ஆச்ரமத்தில் இருக்கும் போதே இரவில் ஏதாவது பழம் இருந்தால் சாப்பிடுவது, இல்லாவிடில் பகல் உணவோடு இருந்து விடுவது வழக்கம். ஆகையால் சபாபதி கொடுக்கும் ஒரு வேளே உணவோடு இருப்பது சிரமமாக இல்லே. இரண்டு வேளேயும் ஆச்ரமம் சென்று ஸ்ரீ பகவான் சந்நிதியில் இருப்பதும், மாலேயில் தமிழ்பாராயணத்தில் கலந்து கொள்வதுமாக இருந்தேன். ஒரு வாரம் சென்றது. ஒரு நாள் புதுப்பாளேயம் ரங்கஸ்வாமிக்கவுண்டர் ஆச்ரமம் வந்தார். அவரிடம் ஸ்ரீபகவான் "என்ன திடீரென வந்திருக்கிறீர்கள்? உங்கள் நண்பரைப் பார்த்தீர்களா" என்று கேட்டார்கள். கவுண்டர், "இன்னும் பார்க்கவில்லே, போய் பார்க்கிறேன்" எனச் சொல்லி முதல் நாள் இரவு தன் கனவில் ஸ்ரீ பகவான் வந்து "நீ என்ன இப்படி தூங்கிக் கொண்டிருக்கிறுய்? அங்கே உன் சினேகிதன் பட்டினி கிடக்கிறுன்" என்று

கூறியதைக் கேட்டு உடனே புறப்பட்டு வந்து விட்டேன் என்ருர். ஸ்ரீபகவான் சிரித்துக் கொண்டே ” சரி, சரி, சாப்பிட்டுவிட்டு போய்ப் பாருங்கள் ” என்ருர்கள். அவரும் சாப்பிட்ட பிறகு பலாக்கொத்திற்கு என்னைப் பார்க்க வந்தார். நான் மௌனமாகையால் சபாபதியிடம் விவரம் தெரிந்து, தினம் மோர் வாங்கவும் மற்றச் செலவுகளுக்குமாக ரூ. 25/- கொடுத்து என்னை கவனித்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்துவிட்டு மேலும் சில தினங்கள் ஆச்ரமத்தில் தங்கி திரும்பினுர். இவ்வாறு மூன்று வாரங்கள் சென்றன. அப்பொழுது கும்பகோணத்திலிருந்து ஸ்ரீ பகவானை தரிசிக்க அடிக்கடி ஆச்ரமம் வரும் கண்ணுசாமி பத்தரென்பவர் வழக்கம் போல் வந்தார். நான் ஆச்ரமத்தில் இல்லாததால் பலாக்கொத்து வந்து பார்த்தவர் தினம் ஆறிபோன சாதத்தை பிறரிடமிருந்து சாப்பிடுவதைவிட நாமே சமைத்துக் கொள்வது நல்லதாயிற்றே, நான் குக்கர் வாங்கி அனுப்புகிறேன், நீங்களே சமைத்துக் கொள்ளலாம் எனச் சொன்னுர். அவ்விதமே ஊருக்குச் சென்றதும் புதுக் குக்கரும் செலவுக்கு பணமும் அனுப்பி வைத்தார். ஸ்ரீ நரசிம்மஸ்வாமிகள் குக்கர் வைப்பவராதலால் அவரிடம் கேட்டுத்தெரிந்து அதிலிருந்து குக்கரில் சமையல் செய்ய ஆரம்பித்தேன். இப்படித்தான் என் பலாக்கொத்து வாசம் ஆரம்பித்தது.

40. அண்ணுமலையில் ஒரு ஸ்வர்க்காச்ரமம்.

சில காலம் கழித்து பால் பிரண்டன், பௌத்தபிக்ஷு பிரக்ஞானந்தா, முனகால வெங்கட்ராமய்யா, விஸ்வநாத ஸ்வாமிகள், யோகிராமையா, முருகனுர் ஸ்வாமிகள், மௌனி சீனிவாசராவ் முதலிய சாதுக்களும் ஒவ்வொருவராக பலாக்கொத்து வந்து தங்கலானுர்கள். இப்படி பலாக்கொத்து பல சாதுக்களின் இருப்பிடமாக விரிவ

டைந்தது. வெளி ஊர்களிலிருந்து வரும் அன்பர்கள் ஸ்ரீ பகவானை தரிசித்து விட்டு, அமைதி நிலவும் பலாக் கொத்திற்கும் சாதுக்களைக் காண வருவார்கள். அப் பொழுதிருந்த பலாக்கொத்து, ரிஷிகேசத்திலுள்ள ஸ்ரீசிவா னந்தாச்ரமம் போன்ற பல பெரிய ஆச்ரமங்களுக்கிடை யில் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்த சாதுக்களின் இருப் பிடமாக அமைந்த "ஸ்வர்க்காச்ரமம்" போன்று இருந் தது. தினம் விடியற்காலையில் பாராயணம் செய்து கொண்டு ஸ்கந்தாச்ரமம் சென்று ஸ்நானம் முடித்து ஏழரை மணி சுமாருக்குத் திரும்புவேன். ஸ்ரீ பகவான் காலை உணவு முடிந்து அந்த நேரத்தில்தான் மலைமேல் ஏறிவருவது வழக்கம். ஆகையால் தினம் மலைமேல் ஸ்ரீ பகவானை தரிசிப்பேன். ஸ்கந்தாச்ரமம் போகும் போதும், திரும்பும் போதும் விடாமல் பாராயணம் செய்வ தறிந்து, "அது தான் நல்லது, ரொம்ப சரி, இப்படி செய்து வந்தால் நடைசிரமமும் தெரியாது" என சந்தோஷத்துடன் ஆமோதித்தார்கள். அப்பொழுதி லிருந்து இன்று வரை காலையில் நடக்கும்போது தவருமல் பாராயணம் செய்துவருகிறேன்.

41. ஸ்ரீ பகவான் பரிவும் பாராயணமும்.

பகல் 11 மணிக்கு பலாக்கொத்து வாசிகள் ஆச்ரமத் திலிருந்து பலாக்கொத்திற்குத் திரும்பி விடுவோம். ஸ்ரீ பக வான் 11½ மணிக்கு பகல் ஆகாரம் முடிந்ததும் பலாக் கொத்து வருவது வழக்கம். நாங்கள் யாவரும் ஸ்ரீ பக வானை தரிசிக்க அங்கு காத்திருப்போம். ஸ்ரீ பகவானும் அவ்விடம் வந்ததும் நின்று, எங்களுடைய யோகக்ஷேமங் களை விசாரித்து, தம்மை அண்டிநிற்கும் குழந்தைகளாகிய எங்களுக்குத் தாய் போல் அன்பும் ஆதரவும் மிக்க இன் சொற்களால் மனங்குளிரச் செய்வார்கள். ஸ்ரீ பகவான்

சந்நிதானத்தில் நடக்கும் தமிழ்ப் பாராயணத்தில் தினமும் தவருமல் கலந்து கொள்வேன். நித்தியமும் ஒரு முறையாவது ஸ்ரீ பகவானிடம் பேசாத நாளே இருக்காது. வரவர ஆச்ரமம் விரிவடைந்த காலத்தில் அன்பர் கூட்டமும் பெருகியதால் என்றைக்காவது ஒரு நாள் ஒரு வார்த்தையும் கூட ஸ்ரீ பகவானிடம் பேச முடியாத நிலே ஏற்படும். அன்று பாராயணம் செய்யும்போது வேண்டுமென்றே ஒரு வரியை விட்டுப் படிப்பேன். பாராயணத்தை மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கும் ஸ்ரீ பகவான் உடனே திருத்துவார்கள். எனக்கும் ஸ்ரீ பகவானுடன் பேசினேம் எனும் திருப்தி ஏற்பட்டுவிடும். ஸ்ரீ பகவானிடம் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளேயல்லவா ? பாராயண நோட்டில் ஏதாவது பாட்டுக்கள் எழுத நேரிட்டால் மத்தியில் ஒரு வரி விட்டு எழுதுவேன். ஸ்ரீ பகவானுடைய கை அக்ஷரம் நோட்டில் இருக்க வேண்டுமெனும் ஆசையே காரணம். ஸ்ரீ பகவானும் பார்த்துத் திருத்தி எழுதுவார்கள். இப்படிப் பலமுறை எழுதி வாங்கிய பாராயண நோட்டைப் பெரும் பொக்கிஷமாகப் போற்றிப் பாதுகாத்து வைத்திருக்கிறேன். ஸ்ரீ அண்ணுமலேயின் படமொன்று பாராயண நோட்டில் ஒட்டி வைக்கவேண்டுமென விரும்பினேன். அச்சமயம் எனக்குக் கிடைக்கவில்லே. இதை எவ்வாருே அறிந்த கருணுமூர்த்தி' ஹாலில் வைத்திருந்த என் நோட்டில் தம் தங்கத் திருக்கரத்தாலேயே ஸ்ரீ அண்ணுமலேயின் படத்தை வெகு அழகாக வரைந்து வைத்திருந்தார்கள். இது யாருக்கும் கிடைக்காத பெரும் பாக்கியமல்லவா ? அந்தப் படம் தற்சமயம் "மவுண்டன் பாத்" பத்திரிகையில் வெளி வந்துள்ளது. உள்ளது நாற்பது, உபதேச உந்தியார் முதலிய புத்தகங்கள் அச்சாகி வந்தால் அதன் புரூப் பாரங்கள் யாவும் ஸ்ரீ பகவான் கைக்கு வந்துவிடும். அவைகளில் ஒரிரு பக்கங்கள் விட்டுப் போயிருந்தால் அவைகளே தம்

கரத்தாலேயே எழுதிச் சேர்த்து முழுப் புத்தகமாக்கி விடுவார்கள். இப்படி இரண்டு மூன்று சேர்ந்துவிடும். அதில், இருப்பதில் பிழை அதிகம் இருப்பதைத் தனக் கென்று வைத்துக்கொண்டு நல்லவைகளை எங்களுக்குக் கொடுத்துவிட்டு “நமக்கு இதுவே போதும். புதுப்புத்தகம் வேண்டுமென்ருல் நாம் பணத்திற்கு எங்கே போவது? இதை யாரும் விரும்பிக் கேட்கவும் மாட்டார்கள், திருடும் போகாது” எனச் சொல்லி எங்கள் இல்லாமையை நாங் கள் உணராவண்ணம் எடுத்தாண்ட வள்ளலன்றோ ஸ்ரீ பகவான்.

42. பக்தர் குறும்பும், ஸ்ரீ பகவான் க்ஷமிப்பும்.

ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ பகவான் ஜயந்தி தினத் தன்று மாலை ஸ்ரீ பகவானுடன் பக்தர்கள் எல்லோரும் சேர்ந்து கிரிப்பிரதக்ஷணம் செல்வது வழக்கம். ஆனல் முன்கூறியபடி ஸ்ரீ பகவான் பிரதக்ஷணம் போவது நின்று விட்டபடியால் அந்தமுறை ஸ்ரீ பகவான் ஜயந்தி யன்று, ஸ்ரீ பகவானுடன் சேர்ந்து செல்லாமல் நாங்கள் மட்டும் பிரதக்ஷணம் போக மனதிற்குப் பிடிக்கவில்லை. ஆகையால் மறுநாட்காலை எல்லோரும் உச்சிமலைக்குப் போவதெனத் தீர்மானித்தோம். அதன்படி மறுநாள் விடியற்காலை ஐந்து மணிக்கு, நான்கு கூலி ஆட்களிடம் எங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களைக் கொடுத்து மலை உச்சிக்குப் போகும் வழியில் உள்ள ஏழுசுனையில் இருக்கும்படி அனுப்பிவிட்டு, நாங்களும் ஸ்ரீ பகவானை நமஸ்கரித்து விடைபெற்ருேம். தலையார்கான், கோஹன், அச்சமயம் போஸ் காம்பவுண்டில் இருந்த சில அன்பர் கள், வெளியூர் பக்தர்கள் சிலர், ஆக சுமார் 40 பேர்கள் சேர்ந்து புறப்பட்டோம். மலையடிவாரம் குகைநமசிவாயர் கோயில் படிகட்டு வழியாக யாவரையும் ஏற்றி அனுப்பி

விட்டு, முருகனார்ஸ்வாமி, முனகால வெங்கட்ராமய்யர், புத்தகாலயத்தில் இருந்த கல்யாணசுந்தரமய்யர், தாம் ஸன் எனும் ஆங்கிலேய பக்தர், அவர் நண்பன் ஒரு ஜமீந் தார் மகன், அவனுடைய காவலாளி, நான் உட்பட ஏழு பேரும் பச்சையம்மன் கோயில் வழியாக ஏறினோம். முன்பு ஸ்ரீ பகவான் குறிப்பிட்ட வடவாலவிருக்ஷத்தை நாங்கள் சென்று பார்த்துவிட்டு அப்படியே மலை உச்சிக் குப்போய் மற்றவர்களுடன் சேர்ந்து கொள்வதாக எங்க ளுக்குள் ஒரு ரகசிய திட்டத்துடன் புறப்பட்டோம். ஸ்ரீ பகவான் குறிப்பிட்ட மூன்று ஓடைகளை குறிப்பாகக் கொண்டு காலை ஆறு மணிக்கு ஏற ஆரம்பித்தோம். பகல் பன்னிரெண்டு மணி சுமாருக்கு மூன்று ஓடைகளை யும் தாண்டி செங்குத்தான ஒரு இடத்தை அடைந்தோம். அங்கிருந்து பார்த்தால் மலையின் அடி, முடி ஏதும் காண வில்லை. திரிசங்கு சொர்க்கமாக நின்று திகைத்து விட் டோம். முருகனார்ஸ்வாமியை காணவில்லை. பிறகு சற்று மனந்தெளிந்து கவனித்துப் பார்த்தால் ஒரு புதரில் கிடந்தார். நாங்கள் குரல் கொடுத்ததும் மெதுவாக எழுந்து நான்கு கால்களில் சிறு குழந்தைபோல் தவழ ஆரம்பித்தார். "என்ன ஸ்வாமி! இப்படி நடக்கிறீர்கள்" என்றதற்கு தன் நினைவில்லாமல் "எப்படி நடப்பது" எனக் கேட்டார். வெங்கட்ராமய்யர் மூச்சுவிடமுடியாமல் திணறிக் கொண்டு படுத்துவிட்டார். கல்யாணசுந்தர மய்யர் நிலை ஒன்றும் சொல்ல முடியாத நிலை. தாம்ஸன் பிரம்மை பிடித்தாற் போல் அசைவற்று உட்கார்ந்து விட் டார். அவர் நண்பனும், வேலைக்காரனும் பயத்தால் தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தார்கள். இவை யாவற்றிற் கும் காரண நாயகனாகிய அடியேன் ஏதும் புரியாமல் செயலற்று நின்று விட்டேன்.

இத்துடன் நாம் முடிந்து விட்டோம். கடைசி நேரத்தில் ஸ்ரீ பகவான் முகத்தைப்பார்க்கக்கூட முடியாத நிலையில் முடிவு வந்துவிட்டதே எனுந்துக்கத்தால் மனம் கலங்கித் தேம்பிவிட்டேன். நான் பிழைத் தாலும் என்னுடன் கூட இருப்பவர்களில் யாரை யாவது இழக்க நேரிட்டால், எந்த முகத்துடன் ஸ்ரீ பகவா னிடம் போவது? அப்படி ஏதாவது ஏற்பட்டால் அங்கேயே உயிர்விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று நினைத்த போது, இனி என்றுமே என்பகவானை பார்க்க முடியாதே என்னும் எண்ணம் மேலிட்டதும், கண்கள் இருண்டு மெய்விதிர்த்து உணர்விழந்து நின்றேன். அதுவரை காமியமாக எந்த வரத்தையும் மனதால்கூட நினைத்தது கிடையாது. ஆனல் அது சமயம் என்னையும் மீறி “பகவானே! தங்கள் தரிசனம் கிடைக்காமல் ஏற்படும் துர்பாக்கிய முடிவிலிருந்து எங்களை மன்னித்துக் காப் பாற்ற வேண்டுமெனத் திரிகரணங்களாலும் பிரார்த்தித்து நிற்கையில், வெகு தூரத்தில் ஒருவன் விறகு வெட்டிக் கொண்டிருப்பது அப்பொழுதுதான் தெரிந்தது. உடனே அவனைக் கூவிக் கூப்பிட்டேன். அவன் எங்களைக் காட்டி லாக்கா ஆட்களென நினைத்துப் பயந்து வரவில்லை. என் காவித்துணியை ஆட்டிக் காண்பித்து, நாங்கள் ஆச்ரம வாசிகள், உனக்கு வேண்டியதைத் தருகிறோம், பயப்ப டாமல் வா! என இரைந்து அழைத்தேன். அவனும் அருகில் வந்து எங்கள் நிலைமையைப் பார்த்து, ஏன்சாமி! இங்கே வந்தீர்கள்? இங்கிருந்து உச்சிமலைக்குப் போக முடியாதே, நீங்களெல்லாம் எங்கே போக வேண்டுமெனக் கேட்டான். நாங்கள் ஏழுசுனைக்குப் போக வேண்டு மென்றதும், ஒவ்வொருவர் கையையும் பிடித்து வந்த வழியாகவே தாண்டச் செய்து எல்லோரையும் ஜாக்கிர தையாக மீட்டு ஒன்று சேர்த்தான். அச்சமயம் சிறு மேகம் வந்து, ஸ்ரீ பகவானின் கருணை உள்ளம் போல்

மழையால் எங்களை நனைத்துச் சென்றது. வான்துளி யில் நனைந்த நாங்களும் களைப்பு நீங்கிப் புத்துயிர் பெற்று ஏழுசுனையை அடைந்தோம்.

அங்கிருந்த மற்றவர்கள் காலையிலேயே மலை உச்சிக் குச் சென்றுவிட்டு, ஏழுசுனைக்கு வந்து சாப்பிட்டு, எங்க ளுக்காகக் காத்திருந்தார்கள். மலை மீது கொளுத்தி யிருந்த புற்களின் கரியும், சற்றுக் கிழிந்த உடைகளும், உடம்பில் சிறு சிருய்ப்புகளுமாக இருந்த எங்கள் கோலத் தைக் கண்டு, விஷயமறிந்து தங்களை ஏமாற்றிச் சென்ற நாங்கள் திண்டாடியதைக் குறித்து கேலி செய்தார்கள். பிறகு நாங்களும் சாப்பிட்டோம். அப்பொழுதுதான் மலையில் திண்டாடித் திணறிய எங்களிடம் பிஸ்கட், தயிர் போன்ற சில உணவுப் பண்டங்கள் கைவசம் இருந்தும், எங்கள் நினைவை இழந்த நிலையில், அவைகளை உண்டு, களைப்பு நீங்கலாம் என்னும் உணர்வுகூட எழாததை உணர்ந்தோம். பிறகு சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு, எல்லோருமாக இறங்கி விருபாக்ஷி வந்து சேர்ந்தோம். எங்கள் எழுவருக்கும், இந்தக் கரி வேஷத்துடன் ஸ்ரீபகவான் எதிரில் எப்படிப் போவது? என்ன சொல்வது? என்ற பயம் வந்து விட்டது. விருபாக்ஷியிலிருந்து தாம்ஸன் முதலிய மூவரையும் அவர்கள் டவுனில் தங்கி யிருந்த ஜாகைக்கு அனுப்பி விட்டு, தலையார்கான், கோஹன் முதலிய கோஷ்டிகளையும் அனுப்பி விட்டோம். மற்ற நாங்கள் நால்வரும் சற்று இருட்டும் வரை அங்கேயே தங்கியிருந்துவிட்டுப் பலாக்கொத்துக்குச் சென்று ஸ்நானம் செய்து பிறகு ஸ்ரீ பகவான் சந்நிதிக்குச் செல்வ தெனத் தீர்மானித்துப் புறப்பட்டோம். மலையிலிருந்து இறங்கிய தாம்ஸன் முதலான மூவரும், தங்களை பேராபத் திலிருந்து கைகொடுத்துக் காத்து ரட்சித்த ஸ்ரீ பகவானை முதலில் தரிசித்து விட்டுத்தான் தங்கள் இடத்திற்குப்போக

வேண்டுமெனும் தீர்மானத்தில் ஒரு குதிரை வண்டி வைத்துக் கொண்டு ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவான் பார்வையிற் படாமல் ஹாலுக்கு வெளியிலேயே நமஸ்காரம் செய்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். எங்களுடன் வந்த வெங்கட் ராமய்யரும் அவ்விதமே செய்திருக்கிறார். இவை யாவையும் அறியாத நான் பலாக்கொத்தில் ஸ்நானம் செய்து விட்டு, மெதுவாக ஏழு மணிக்கு ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானை நமஸ்கரித்து எழுந்ததும், ஸ்ரீ பகவான் "என்ன சேஷ்டை செய்து விட்டு வந்து நிற்கிறாய்?" என்றதும் திடுக்குற்று வெலவெலத்துப் போய் நின்றேன். "அந்த ஜமீந்தார் பையன் கரி வேஷமும், கோலமுமாக வந்து ஹாலுக்கு வெளியில் நமஸ்காரம் செய்து விட்டு ஓடி விட்டான்! அதை விட அலங்கோலமாக வெங்கட் ராமய்யர் வந்து அவரும் வெளியிலேயே நமஸ்காரம் செய்து போய் விட்டார், நீயோ வெகு சாதுவாக இப்பொழுதுதான் வந்து நிற்கிறாய்! என்ன குறும்பு செய்தாய்" என்றார்கள். உடனே நடந்தவைகளை முழுவதும் சொல்லி "முதலிலேயே பகவானிடம் சொன்னால் அங்கே போக வேண்டாமெனத் தடுத்து விட்டால் என்ன செய்வது என்று பயந்து, போய் வந்த பிறகு பகவானிடம் சொல்லலாம் என நினைத்தோம். ஆனால் சொல்லாமற் போனதற்கு எங்களுக்குச் சரியான பாடம் கிடைத்தது, எங்களை மன்னிக்க வேண்டும்" என்று மீண்டும் நமஸ்கரித்தேன். ஸ்ரீ பகவான் "என்னிடம் முதலிலேயே சொல்லி இருந்தால் போக வேண்டாமென்றுதான் தடுத்திருப்பேன், சரி, சரி" என்றார்கள். ஸ்ரீ பகவானின் "சரி, சரி" என்ற வாக்கையே மன்னிப்பாகக் கொண்டு அத்துடன் நாங்களும் சமாதானமடைந்தோம்.

43. நவீன நாயன்மார் குடும்பம்

காரைக்காலில் நல்ல சைவ பரம்பரையில் வந்தவர் அலங்காரத்தண்ணி. அவர்கள் மகன் சுப்பைய முதலியார்; மருமகள் காமாக்ஷியம்மாள். இவர்கள் காரைக்காலில் இருந்த ஒரு மகானை அடுத்து அவரிடம் மிகுந்த பக்தியும், அன்பும் பூண்டு அவருக்குத் தொண்டு புரிந்து வந்தார்கள். அப்பெரியவரின் இறுதிக் காலத்தில் அலங்காரத்தண்ணி "எங்களுக்கு இது வரை தங்களுக்குச் சேவைசெய்யும் பாக்கியமும், அதனுல் நாங்கள் அடைந்த பேரமைதியும் இனி எங்கு கிடைக்கும்" என மனம் வருந்தி நின்ருர்கள். அதற்கு அவர் "இதை விட பெரும் பாக்கியம் உங்களுக்குக் காத்திருக்கிறது. என்னை விட மிக மிக மேலான நிலையில் விளங்கும் பெரிய ஞானியின் தரிசனமும் அவருக்குத் தொண்டு செய்யும் நல்வாய்ப்பும் கிடைக்கும்" என்ருர். அந்த மகான் எங்கிருக்கிருர் எனக் கேட்டதற்கு, திருவண்ணுமலையில் "பிராமண ஸ்வாமி" என விளங்கி வரும் மகாசிரேஷ்டர்தான் எனக் கூறினுர். சிறிது நாளைக்குப் பின் அவர் விதேகமானுர். அப் பெரியவர் அடைந்த ஓரிரு மாதங்கள் சென்று சுப்பைய முதலியார் திருவண்ணுமலை வந்து "பிராமண ஸ்வாமி" என எல்லோராலும் அந்நாளில் கொண்டாடப் பட்ட நம் பகவானை தரிசித்தார். ஸ்ரீ பகவானை நமஸ் கரித்து எழுந்ததும் தாம் அது வரை அடைந்திராத ஆனந்தமும் அமைதியும் பெற்ருர். தங்கள் குடும்பத் திற்கு இப்படிப்பட்ட ஞான ஒளி இருக்கும் இடத்தை அறிவித்த காரைக்கால் பெரியவருக்கு தம் மனமார்ந்த வணக்கத்தை மானசிகமாகத் தெரிவித்துக் கொண்டார். பிறகு காரைக்கால் சென்று தம் நிலங்களை வேருெரு வரிடம் ஒப்படைத்து விட்டு தன் தாயாரையும், மனைவி யையும் அழைத்துக் கொண்டு திருவண்ணுமலை வந்து

வடக்குக் கோபுரத் தெருவில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்துக் கொண்டு 1909 லிருந்து குடும்பத்துடன் தங்கினுர். அதிலிருந்து ஸ்ரீ பகவானுக்கு போஜன கைங்கரியம் செய்து வந்தார்கள். தினமும் அண்ணுமலையார் கோயில் சென்று உச்சிகால பூஜை வரை இருந்து தரிசித்துவிட்டு வீடு திரும்பும் போது யாராவது சாதுக்கள் இரண்டு மூன்று பேர்களை சாப்பாட்டிற்கு அழைத்து வந்து ஆகாரம் செய்விப்பார் சுப்பைய முதலியார்.

அலங்காரத்தண்ணியும் அவர் மருமகள் காமாக்ஷியம்மாளும் ஸ்ரீ பகவானுக்கு அன்னம் எடுத்துக் கொண்டு மலைமேல் விருபாக்ஷி குகைக்கு வந்து ஸ்ரீ பகவானைத் தரிசித்து அன்னம் அளித்துச் செல்வார்கள். ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமம் வந்த பிறகு ஸ்ரீ பகவான் அமர்ந்திருக்கும் இடத்திற்கு பக்கத்தில் அவர்கள் திருவுருவப் படம் வைத்திருந்தது. அலங்காரத்தண்ணி ஸ்ரீ அண்ணுமலையார் கோயில் நந்தவனத்திலிருந்து தும்பைப் பூக்களைப் பறித்து மிக நுணுக்கமாக மாலையாகக் கோர்த்துக் குடலையில் வைத்து எடுத்து வந்து ஸ்ரீ பகவான் படத்திற்குச் சூட்டி, கற்பூரஆரத்தியும் செய்து நமஸ்கரிப்பார்கள். ஸ்ரீ பகவான் திருமேனிக்குச் செய்ய வேண்டுமெனும் ஆர்வத்தை அவர்கள் திருவுருவப்படத்திற்குச் செய்து திருப்தி அடைவார்கள். சில வருடங்கள் சென்றன. சுப்பைய முதலியாரின் காரைக்கால் நிலத்திலிருந்து வந்து கொண்டிருந்த வருமானம், முதலியாரின் நேரடிப்பார்வை இல்லாததாலும் அங்குள்ளவர்களின் பொறுப்பின்மையாலும் சிறுகச் சிறுக குறைந்து வந்ததால் இங்கே குடும்பம் நடத்துவதே சிரமமாக இருந்தது. இந்நிலையில் மேலும் திருவண்ணுமலையில் இருக்க விரும்பாத சுப்பைய முதலியார் திருப்பனந்தாள் மடத்திற்குப் போய் கட்டளைத் தம்பிரானுகச்சேர்ந்தார். அதிலிருந்து அவரைத்தம்பிரான்

ஸ்வாமி என்றும், அவர் தாயாராகிய அலங்காரத் தண்ணியை முதலியார்பாட்டி என்றும் நாங்கள் சொல்வது வழக்கம். மகன் திருப்பனந்தாள் சென்றதும் அவர் தாயாரும் மனேவியும் எள் வாங்கி சுத்தப்படுத்தி ஆட்டிய நல்லெண்ணெய், அப்பளம் முதலியவைகளைத் தயாரித்து விற்று அந்த வருமானத்தில் ஸ்ரீ பகவானுக்கு பிக்ஷை செய்வித்துத் தாங்களும் உண்டு வந்தார்கள். பிறகு சில வருடங்கள் கழித்து காமாக்ஷி அம்மாள் காலமானுர்கள். முதலியார் பாட்டி அப்பொழுதும் கைங்கரியத்தை நிறுத்த வில்லை. அவர்கள் தனிமையில் வறுமையில் சிரமப் படுவதைக் கண்ட ஸ்ரீ நிரஞ்சனுனந்த ஸ்வாமிகளும் நாங்களும் பாட்டியிடம் "நீங்கள் வயதான காலத்தில் தனிமையில் சிரமப்பட வேண்டாம். இனி நீங்கள் ஆச்ரமத்திலேயே சாப்பிட்டு பகவான் தரிசனம் செய்து ஓய்வாக இருக்கலாம் என்ருேம். அதற்குப் பாட்டி "இந்த சரீரம் இருக்கும் வரையில் ஸ்ரீ பகவானுக்குச் செய்யும் பிக்ஷை நிற்காது. நாலு இடத்தில் பிக்ஷை எடுத்தாவது என் மூச்சு உள்ளவரை இதை நிறைவேற்றி வருவேன்" எனத் தீர்மானமாகக் கூறினுர்கள். அவர்களுடைய அழுத்தமான பக்தியைக் கண்டு யாரும் வாய் திறக்கவில்லை. அச்சமயம் பொள்ளாச்சியிலிருந்து வந்திருந்த ரங்கஸ்வாமிக் கவுண்டர், பாட்டியின் திட வைராக்கியத்தையும் அவர்களின் ஆதரவற்ற நிலையையும் பார்த்து என்னிடம் தனிமையில், இங்குள்ள என் பெரிய கட்டிடத்தின் ஒரு பகுதியில் பாட்டி இருக்கட்டும். அவர்களுக்கு வேண்டிய மற்ற உதவிகளையும் நாமே செய்து விடலாம் என்று கூறி! அவ்விதமே செய்து விட்டார். பாட்டி, கவுண்டர் கட்டிடத்திற்கு வந்து சிலநாள் சென்று அவர் மகன் தம்பிரான்ஸ்வாமியும் திருப்பனந்தாள் மடத்திலிருந்து திருவண்ணுமலைக்கே வந்து விட்டார். அவர் பலாக்கொத்தில் தங்கிக் கொண்டு சிவபூஜை முதலிய

நியம நிஷ்டைகளுடன் இருந்து கொண்டு தன் தாயாரை யும் வந்து பார்த்துப் போய்க்கொண்டிருந்தார்.

44. நான் பார்க்காவிட்டாலும் பகவான் பார்ப்பதே போதும்

பாட்டிக்கு மிகத் தள்ளாமை ஏற்பட்டதும் ஸ்ரீ பகவான் பக்தராகிய யோகநாதரின் பெண் பார்வதி அம்மாள் பாட்டிக்கு உதவியாக இருந்து வந்தார். சில மாதங்கள் சென்று பார்வதி அம்மாள் ஊருக்குப் போக நேர்ந்ததால் கடலூரிலிருந்து ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு வந்திருந்த பட்டம்மாள், பார்வதி அம்மாள் எனும் பிராமண சகோதரிகள் பாட்டியுடனே தங்கி அவர்களுக்கு உதவியாக இருந்து வந்தார்கள். ஆச்ரமத்திற்கு சாதம் கொண்டு செல்பவர்களுடன் பாட்டி, தானும் சென்று ஸ்ரீ பகவானை தரிசனம் செய்து வருவார்கள். ஒரு நாள் சாப்பாட்டு ஹாலில் போட்டிருந்த இலையை கண் பார்வை சரியில்லாததால் பாட்டி மிதித்து விட்டார்கள். இதைக் கண்ட ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமிகளும், ராமகிருஷ்ண ஸ்வாமியும் பாட்டியிடம் "உங்களுக்குத்தான் பார்வை சரியில்லையே, பகவானைப் பார்க்க முடியாத நீங்கள் ஆகா ரத்தை அனுப்பிவிட்டு ஸ்ரீ பகவானை நினைத்துக் கொண்டு வீட்டிலேயே இருக்கலாமே" என்றார்கள். அதற்குப் பாட்டி உடனே "நான் பகவானைப் பார்க்காவிட்டால் என்ன ? பகவான் என்னைப் பார்க்கிறார்கள் அல்லவா, அதுவே போதுமே" என்றார்கள். ஸ்ரீ பகவான் சிரித்துக் கொண்டே "இதற்கென்ன சொல்கிறீர்கள்" என்றார்கள். பட்டம்மாள் சகோதரிகளுக்குப் பிறகு மலையாளியாகிய சிவதாஸ் ஸ்வாமியின் உதவியுடனும், பிறகு வேறு சிலரின் உதவியுடனும் முதலியார் பாட்டி கண் பார்வையிழந்து நடமாட்ட மில்லாத சமயத்திலும் ஸ்ரீ பகவானுக்கு அளித்து வந்த பிக்ஷை நடந்து வந்தது. 40 வருடங்

களாகத் தம் மூச்சு அடங்கும் நாள் வரை ஒப்புயர்வற்ற மெய்ஞ்ஞானியாம் ஸ்ரீ பகவானுக்கு இடையருது அன்னம் அளித்து வந்த உத்தமப் பிறவியாம் முதலியார் பாட்டி 1949 ல் ஸ்ரீ பகவான் திருவடியிற் கலந்தார்கள். ஆச்ரமம் விரிவடைந்து ராஜபோகமாக நடக்க ஆரம்பித்த பிறகும் எவ்வளவு பெரிய பந்தியானுலும் முதலியார் பாட்டியின் அன்னம் ஸ்ரீ பகவானுக்கும் மற்றவர்களுக்கும் பரிமாறும் வழக்கம் பாட்டி இருக்கும் வரையில் நடந்து வந்தது. பாட்டி மறைந்த சில வருடங்கள் கழித்து 1953 ல் தம்பிரான்ஸ்வாமியும் இறைவனடி சேர்ந்தார். தம் சொத்து, சுகம் யாவையும் துறந்து ஸ்ரீ பகவானேயே அடைக்கலமாகக் கொண்டு வாழ்ந்து மறைந்த ஒரு நல்ல குடும்பமல்லவா இது.

45. நாவிதனின் சாதுபக்தி

ஸ்ரீ பகவான் குருமூர்த்தத்தில் மௌனமாக இருந்த காலத்தில் வாழ்ந்திருந்தவன் நாவித சுப்பராயன். சாதுக்களுக்கு முடியெடுக்க வேண்டியிருந்தால் மிக சந்தோஷமாக, பக்தி பூர்வமாகச் செய்து சிலருக்கு காபி டிபன் வாங்கிக் கொடுத்து அவர்களுக்கு உதவிகளேச் செய்வதில் ஆர்வம் உள்ளவன். அவன் முதன் முதல் ஸ்ரீ பகவானேக் குருமூர்த்தத்தில் தரிசித்த போது ஸ்ரீ பகவானுக்கு தலே நிறைய முடி வளர்ந்திருப்பதைப் பார்த்து, "ஸ்வாமி! முடியெடுக்கலாமா?" என மிகப் பணிவுடன் கேட்டதற்கு ஸ்ரீ பகவான் மௌனமாகையால் பதில் ஏதும் சொல்லவில்லே. சுப்பராயனும் "ஸ்வாமிக்கு இஷ்டமில்லே போலும், நாம் தொந்தரவு செய்யக்கூடாது" என எண்ணி ஸ்ரீ பகவானே நமஸ்கரித்து விட்டுப் போய் விட்டான். சில காலம் கழித்து ஸ்ரீ பகவான் பச்சையம்மன் கோயிலில் இருந்த போது கடலூரிலிருந்து வந்திருந்த சில அன்பர்கள்

ஸ்ரீ பகவானைத் தரிசித்தவர்கள் ஸ்ரீ பகவான் தலையில் முடி காடாக அடர்ந்திருப்பதைப் பார்த்து தங்களில் ஒருவர் ஒரு நாவிதனை அழைத்துவர முடிவு செய்து, அவ்விதமே ஒரு அன்பர் ஊருக்குள் சென்ற சமயம் சுப்பராயன் அடப்பைப் பெட்டியுடன் எதிர்ப்பட்டான். அவனிடம் பிராமணஸ்வாமிக்கு முடியெடுக்க வேண்டும், வருகிருயா? என்றதும் சுப்பராயனும் மிக்க மகிழ்ச்சியுடன் சம்மதித்து அவருடன் சென்று ஸ்ரீ பகவானை நமஸ்கரித்து ஸ்ரீ பகவானுக்கு முடியெடுத்தான். ஸ்ரீ பகவானும் அவனைப் பார்த்ததும் முன்பு குருமூர்த்தத்தில் தனக்கு முடியெடுக்க கேட்ட அதே ஆள்தான் இது எனத் தெரிந்து கொண்டார்கள். இது அண்ணுமலையாரின் கட்டளை என நினைத்து முடியெடுத்துக் கொள்ள இசைந்தார்கள். அன்று பௌர்ணமி. பிறகு கடலூர் அன்பர்கள் சுப்பராயனிடம் ரூபாய் மூன்று கொடுத்து, பிராமணஸ்வாமி எங்கிருந்தாலும் மாதம் ஒரு முறை ஒவ்வொரு பௌர்ணமிக்கும் வந்து சுவாமிக்கு முடி எடுத்து விடு என்ருர்கள். அவ்வாறே அது முதல் முடியெடுக்கும் பாக்கியம் பெற்ற சுப்பராயன் ஸ்கந்தாச்ரமத்திலும் ஸ்ரீ பகவான் ஸ்ரீ அன்னையாரின் சமாதிக் கட்டிடத்திற்கு வந்து அது ஆச்ரமமாக வளரத் தொடங்கிய பிறகும் சுமார் எட்டு ஆண்டுகள் தொடர்ந்து தன் பணியை செய்து வந்தான். பிறகு வயதான காரணத்தால் கண் பார்வை சரியில்லாமல் தன் வேலையைச் சரிவர செய்ய முடியவில்லை. ஸ்ரீ சின்ன ஸ்வாமிகள், நீ செய்யும் வேலை சுத்தமாக இல்லை. ஆதலால், நீயே வேறு ஆள் பார்த்துக் கொண்டு வந்து விடு என்ருர். சுப்பராயனும் தன் சிற்றப்பா மகன் நடேசனை அழைத்து வருவதாகச் சொன்ஞன். இதையறிந்த ஸ்ரீ பகவான் "வெகு அழகாக இருக்கிறது" நீங்களெல்லாம் மைனர்கள். உங்களுக்கு வேண்டுமாஞல் வேறு ஆள் பார்த்துக் கொள்ளுங்கள். சுப்பராயன் எத்தனை

காலமாகச் செய்து வருகிறுன். பார்வை சரியில்லாமல் ஓரிரு முடி தங்கி விட்டாலும் பரவாயில்லே. எனக்கு அவனே செய்யட்டும்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்கள். என்னே ஸ்ரீ பகவானின் கருணே உள்ளம்! பிறகு சுப்பராயன் ஸ்ரீ பகவானுக்கு மட்டும் செய்து வந்தான். சில நாள் சென்று சுப்பராயனே ஸ்ரீ பகவானிடம் தள்ளாமையால் தன்ஞல் முடியவில்லே யென்றும் நடேசனே ஸ்ரீ பகவானுக்கும் செய்தால், தான் அருகில் இருப்பதாகவும் மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டான் ஸ்ரீ பகவானும் சுப்பராயனுடைய தள்ளாமையை அறிந்து சம்மதித்தார்கள். ஒவ்வொரு பௌர்ணமிக்கும் நடேசனுடன் சுப்பராயனும் வந்திருந்து அன்று ஆச்ரமத்திலேயே உணவருந்திச் செல்வது வழக்கமாகியது. ஸ்ரீ பகவானுக்கு முடியெடுப்பதற்கு முன் குளித்து, சுத்தமாக வந்து, கத்தி, கிண்ணம் முதலியவைகளேக் கழுவி துடைத்து வைத்திருக்க வேண்டும். ஸ்ரீ பகவான் முடியெடுத்துக் கொள்ள உட்காரும் இடத்தில் கோலமிட்டு மணேப்பலகை போட்டிருக்கும். காலே 10 மணிக்கு ஸ்ரீ பகவான் வந்தமர்வார்கள். முடியெடுத்து முடிந்ததும் ஸ்நானத்திற்கு போவார்கள். நடேசனும் சுப்பராயனேப் போலவே மிக பக்தியும் பணிவும் உள்ளவன். யாரிடமும் அதிர்ந்து பேசாத சாதுவான குணமுடையவன். பிறகு சுமார் ஆறு ஏழு வருடங்கள் கழித்து சுப்பராயன் தன்னுடைய 78 வது வயதில் ஸ்ரீ பகவான் திருவடியடைந்தான்.

46. நடேசன் செய்த நற்புண்ணியம்

ஆச்ரமவாசிகளும் வெளியூரிலிருந்து வரும் ஸ்ரீ பகவானது பக்தர்களும் நடேசனிடம் முடியெடுத்துக் கொள்ளப் பெரிதும் விரும்புவார்கள். ஸ்ரீ பகவானுடைய திருமேனியைத் தீண்டிய கைகளாலேயே தாங்களும்

செய்து கொள்ள வேண்டுமெனும் ஆவலே காரணமாகும். நடேசன் ஸ்ரீ பகவானிடம் ஏதாவது உபதேசம் பெற வேண்டுமென நினைத்தாலும் ஸ்ரீ பகவானுக்குத் தொந்திரவு கொடுக்கக் கூடாதெனும் எண்ணத்தால் அவர்களுக்கு அருகில் நெருங்கி, தொட்டுச் செய்யும்படி தனக்குக் கிடைத்த கைங்கரியம் யாருக்கும் கிடைக்காத பெரும் பாக்யமாகத் தான் பெற்றிருக்கும் போது வேறு தவம், உபதேசம் எல்லாம் எதற்கு? என எண்ணி அமைதி அடைவது வழக்கம். ஒரு முறை நடேசன் தன் பெரிய அண்ணன் போளூரில் உடல்நிலை மோசமாக இருப்ப வரைப் பார்க்கப் போனான். அன்று இரவே அவர் காலமானார். மறுநாள் பௌர்ணமி. ஸ்ரீ பகவானுக்கு முடியெடுக்க வேண்டிய நாளாகையால் தான் திரு வண்ணாமலை சென்று தன் பணியைச் செய்துவர தன் சின்ன அண்ணனிடம் நடேசன் கேட்ட போது, அவர், நம்முடைய தாய் தகப்பன் செய்த புண்ணியத்தால் உனக்கு இப்படிப்பட்ட பாக்கியம் கிடைத்திருக்கிறது. ஆகையால் நீ சென்று உன் வேலையை முடித்துவிட்டுப் பகல் ஒரு மணிக்குள் இங்கு வந்து விட்டால் மேற்கொண்டு ஆக வேண்டிய காரியங்களைப் பார்க்கலாம் என்றார். நடேசனும் உடனே புறப்பட்டு திருவண்ணாமலை வந்து ஸ்நானம் செய்து ஸ்ரீ பகவானுக்கு முடியெடுக்கும் பணி முடிந்ததும் போளூர் போகப் புறப்பட்டான். ஸ்ரீ சின்ன ஸ்வாமிகள் வழக்கம் போல் அவனை சாப்பிட்டு போகும் படி கூற நடேசன் தன் அண்ணன் போளூரில் இறந்து விட்டதால் தகனம் செய்யும் வரை ஒன்றும் சாப்பிடுவதற் கில்லை. ஸ்ரீ பகவானுக்குச் செய்ய வேண்டிய பணி நிற்கக் கூடாதே என்பதற்காகவே தான் வந்ததாகத் தெரிவித் ததும், அவனுடைய கடமை உணர்ச்சியையும் ஸ்ரீ பகவானிடம் உள்ள பக்தியையும் கண்டு எல்லோ ருக்கும் வியப்பாக இருந்தது. அவன் சாப்பிட மாட்டான்

எனத் தெரிந்ததும் ராமகிருஷ்ணஸ்வாமி, நிறைய காப்பி கொடுத்து குடிக்கச் சொன்னர். ஸ்ரீ சின்ன ஸ்வாமிகள் செலவுக்குப் பணம் கொடுத்து அனுப்பி வைத்தார். இவ்வாறு தன் பணியைத் தொடர்ந்து 23 வருடங்கள் ஒரு முறை கூடத் தவருமல் நிறைவேற்றி வந்த நடேசன் கடைசிமுறை ஸ்ரீ பகவானுக்கு முடியெடுத்து முடிந்ததும் ஸ்ரீ பகவான் உடல்நிலை காரணமாக, தான் செய்வது இதுதான் கடைசி. அடுத்த முறை, தான் பணி செய்யும் பாக்கியம் இனிக் கிடைக்காது என எண்ணி மனங் கலங்கி அங்கேயே சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து "பகவானே! நான் இதுவரை ஏதாவது பிழையாக நடந்திருந்தாலும் மன்னித்துக் காக்க வேண்டுமென உள்ளம் உருகி வேண்டி நின்ருன். ஸ்ரீ பகவானும் புன்சிரிப்புடன் கூர்ந்து பார்த்து "ஊம், ஊம்" என்று அனுக்ரகித்தார்கள். அதுவரை ஹாலில் ஸ்ரீ பகவானுக்கு நமஸ்கரிப்பது தவிர, தான் பணி செய்யும் இடத்தில் தனித்து நமஸ்காரம் செய்ததில்லே. அன்று அவ்விடத்தில் செய்த நமஸ்காரமே அவனுடைய பணிக்கும் சேர்த்து முதலும் கடைசியுமாக அமைந்தது. நாவிதத் தொழில் செய்பவர் பலர் இருந்தாலும் எல்லோருக்கும் சுப்பராய னுக்கும், நடேசனுக்கும் கிடைத்த பாக்கியம் கிடைத்து விடுமா? பூர்வ புண்ணியத்தால் கிடைத்த பாக்கிய மல்லவா இது? இவ்வாறு ஸ்ரீ பகவானுக்குச் செய்த பணியால் புண்ணியசாலியாகிய நடேசன் தன்னுடைய 72வது வயதிலும் ஆச்ரமவாசிகளுக்கு முடிவெட்டும் வேலேயை செய்து கொண்டு அமைதியாக வாழ்ந்து வருகிருன். நடேசனின் தகப்பனர் வையாபுரி ஸ்ரீ அண்ணுமலேயாரிடம் மிக பக்தி கொண்டு போளூரி லிருந்து ஒவ்வொரு தமிழ் மாதப் பிறப்பிற்கும் திரு வண்ணுமலே வந்து கிரிப்பிரதக்ஷணம் செய்து வந்தார். கடைசியாக அவர் உடல் நலம் குறைந்த சமயத்திலும் திருவண்ணுமலே வந்து கிரிப்பிரதக்ஷணம் செல்லும்

போதே அடியண்ணுமலே அருகில் மிக முடியாமல் பிறர் உதவியுடன் அருணையிலேயே குடியிருந்த தம் பிள்ளேயின் வீட்டிற்கு வந்து அண்ணுமலேயிலேயே அவர் ஆவி அடங்கிற்று. அவர் அருணுசலேச்வரர் மீது வைத்திருந்த நீங்காத பக்தியின் புண்ணியத்தாலேயே, நடேசனுக்கு இப்படிப்பட்ட ஒப்பற்ற ஞானியாம் ஸ்ரீ பகவானுக்கு சேவை செய்யும் பாக்கியம் கிடைத்ததென்பதை யாரால் மறுக்க முடியும்?

47. நாயடியார்

ஸ்ரீ பகவான் விருபாக்ஷி குகையில் இருந்தபோதே ஸ்ரீ பகவானே தரிசித்துச் செல்பவர் குமரகுரு. ஸ்ரீ பகவானிடம் பெரிதும் ஈடுபட்டவர். சிறந்த வைத்தியர். ஸ்கந்தாச்ரமத்திற்கு ஸ்ரீபகவானே தரிசிக்க வரும்போதெல்லாம் பழவர்க்கங்களும் காய்கறிகளும் கொண்டு வருவார். ஊருக்குள் குடும்பத்துடன் இருந்து வந்தார். தன்னே நாயடியானுகப் பாவித்துக் கொண்டு ஆச்ரம நாய்களாகிய சிவப்பன், கருப்பன், கமலா, ஜாக்கி முதலான நாய்களேக் குழந்தை போல் நேசித்து அவைகளேக் குளிப்பாட்டல், ஆகாரம் அளித்தல் முதலியவைகளே மிகப் பிரியமுடன் செய்வார். அவைகளுடன் சேர்ந்து படமும் எடுத்துக் கொண்டார். ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்திலிருந்து ஸ்ரீ அன்னேயாருடைய சமாதிக் கட்டிடத்திற்கு வந்த பிறகும் வந்து தரிசித்துச் சென்று கொண்டிருந்தவர் சில காலம் கழித்து இயற்கை எய்தினர். சிறு வயதிலிருந்தே தன் தகப்பனுருடன் வந்து ஸ்ரீ பகவானேத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற அவருடைய மகன் சுப்ரமண்யம் ஆச்ரமத் தொண்டு செய்து கொண்டிருந்து பிறகு சென்னேக்குச் சென்றுவிட்டார். சில வருடங்கள் கழித்து சுப்ரமண்யம் தம் இரு குழந்தைகள் மனேவியுடன் குடும்

பஸ்தராக மீண்டும் அருணை வந்து புதுப்பாளையம் ரங்க ஸ்வாமி கவுண்டருக்குச் சொந்தமான மனையில் சிறு வீடு கட்டிக் கொண்டு பல வருடங்கள் இருந்து வந்தார். அப்படி அவர் தங்கியிருந்த காலத்தில் நான் கவுண்டரின் பெரிய கட்டிடத்தில் தங்கிக் கொண்டு சுப்ரமண்யத்தின் வீட்டில் சாப்பிட்டு வந்தேன். பிறகு சுப்ரமண்யம் ஸ்ரீ ரமண நகரிலேயே சொந்த வீடு வாங்கிக் கொண்டு அங்கு சென்று விட்டார். அச்சமயம் கடலூரிலிருந்து குடும்பத்துடன் இங்கு வந்து நிரந்தரமாகத் தங்கி விட்ட ஸ்ரீ C. சோமசுந்தரம் பிள்ளையின் வீட்டில் அன்றிலிருந்து இன்று வரை சாப்பிட்டு வருகிறேன். சில வருடங்கள் கழித்து சுப்ரமண்யத்தின் மனைவி காலமானார். அவருடைய குழந்தைகளாகிய ரமணி, ரமணன் இருவருக்கும் திருமணம் செய்வித்து விட்டு மறுபடியும் சுப்ரமண்யம் ஆச்ரமத்தில் கைங்கரியம் செய்து கொண்டு இருந்து வருகிறார்.

48. கொத்தடிமைப் பட்ட குடும்பம்

கடலூர் C. சோமசுந்தரம் பிள்ளையும் அவர் மனைவி உமையம்மையும் மற்றும் குடும்பத்தினரும் ஸ்ரீ பகவான் பக்தர்கள். பல சாதுக்களை வைத்து ஆதரிக்கும் பேறு பெற்றவர்கள். பிள்ளையவர்களின் தாய்வழிப் பாட்டனார் தெய்வசிகாமணி அவர்கள் உமையம்மைக்கு நேர்வழிப் பாட்டனாராவார். அவர் தம் இளமையிலேயே பல மகான்களை அடுத்துத் தொண்டு செய்து தாம் உயர்ந்த உத்தியோகத்தில் இருந்த போதும், தாம் போகும் இடங்களிலிருந்த ஞானிகளைத் தரிசித்து ஆசி பெறுவார். கடைசியாக ஸ்ரீ பகவந்த ஸ்வாமிகள், ஸ்ரீ தயானந்த ஸ்வாமிகள் என்ற இரு மகான்களைத் தம் வீட்டிலேயே வைத்து ஆதரித்து அவர்கள் மகாநிர்வாணம் அடைந்ததும் சமாதி

வைத்து இரு மடங்கள் நிறுவி நித்திய பிராமண பூஜைக்கும் ஏற்பாடு செய்தார். அவை இப்பொழுதும் பிள்ளையவர்களின் குடும்பத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. உமையம்மை ஸ்ரீ பகவானிடம் ஈடுபடுவதற்கு முன்பிருந்தே பூர்வ புண்யத்தால், ஸ்ரீ பகவந்தர் தம் தலைவனெனும் நாயகபாவம் கொண்டு அந்தப் பரவச நிலையில் ஸ்ரீ பகவந்தர் பேரில் அக்ஷரமாலையெனும் அஷ்டோத்திரம், நவரத்தினமாலை முதலிய பல பக்திப்பாடல்களை எழுதியுள்ளார்கள். சோமசுந்தரம்பிள்ளை முதன் முறையாக 1932ல் தம் மனைவி உமையம்மையுடன் ஸ்ரீ அன்னையார் ஆராதனைக்கு முதல்நாள் மாலை ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானைத் தரிசித்து இரண்டு நாட்கள் தங்கியிருந்தார்கள். அவர்கள் வந்த அன்று இரவு ஸ்ரீ பகவான் சாப்பிட்டுக் கைகழுவிய உச்சிஷ்ட ஜலத்தை, ஆச்ரமவாசி ராமஸ்வாமிப்பிள்ளையவர்கள், அவர்களுக்குப் பிரசாதமாகக்கொடுத்தார். ஸ்ரீபகவான் உணவருந்தஅமரும் இடத்திற்கு அருகில் ஒரு டம்ளரில் ஜலம் வைத்து அதன் மேல் சிறிய தட்டு கவிழ்த்து வைக்கப் பட்டிருக்கும். ஸ்ரீ பகவான் சாப்பிட்டு முடிந்ததும் அந்தத் தட்டில் கை கழுவிக் கொள்வார்கள். பிறகு ஸ்ரீ பகவான் வெளியில் போனதும் அங்கு சமையற்கட்டில் கைங்கரியம் செய்பவர்களும், மற்றும் சில பழைய பக்தர்களும் அத் தீர்த்தத்தை பங்கிட்டுக் கொள்வார்கள். முதல் முறையாக வந்த போதே பிள்ளையவர்களுக்கும் அவர் மனைவிக்கும் அது கிடைத்ததே அதிசயம். பிறகு எப்பொழுதாவது ஒரு முறை வந்து போவார்கள். அப்படி ஒரு முறை இங்கு வந்த போது அவர்கள் மகன் ஆறு வயது நடராஜனையும் அழைத்து வந்திருந்தார்கள். அச் சிறுவன் ஆச்ரமம் நுழைவாயிலில் உள்ள "ரமணாச்ரமம்" எனும் வளைவைக் கண்டதும் "நான் இங்கு முன்பே வந்திருக்கிறேனே! இடதுபுறம் குளமும் அதற்குள் ஒரு சின்ன

குளமும் இருக்கிறது. ஆச்ரமத்துள்ளே பெரிய கிணறு இருக்கிறது. எதிரில் ஆபீஸ் உள்ள இடத்தில் அகத்தி மரம் இருந்ததே" என்ருன். ஸ்ரீ சின்னஸ்வாமிகளைக் கண்டதும் "இவரையும் முன்பே பார்த்திருக்கிறேனே" என்ருன். அச்சிறு பையன் பூர்வ ஜன்மத்தில் ஆச்ரம வாசியாக இருந்திருக்கலாமல்லவா ?

இங்கு அருணையிலிருந்து முருகனுர் ஸ்வாமிகள், விஸ்வனுத சுவாமிகள், ரமண பாதானந்தர் முதலியவர்கள் எப்பொழுதாவது கடலூரில் பிள்ளையவர்கள் வீட்டிற்குச் சென்று தங்கி வருவார்கள். சில வருடங்கள் கழித்து 1941 ல் பிள்ளையவர்களின் மூத்த மகள் அலமேலுவின் கணவர் காலமானுர். இளம் வயதிலேயே கைம்மைக் கோலம் கொண்ட தம் பெண்ணை எண்ணி உமையம்மைக்குச் சொல்லொணு அதிர்ச்சியும், ஆருத்துயரமும் ஏற்பட்டு மிகக் கலங்கி இருந்தார்கள். ஆனுல் ஸ்ரீ பகவான் அனுக்கிரகத்தால், தன் கணவர் தன்னிலேயே ஐக்கியப் பட்டு விட்டதாக அலமேலுவுக்கு ஓர் எண்ணம் தோன்றி, அதன் காரணமாக அவரது மனந்தளராமல் அமைதியாக இருந்து வந்தது. இந்நிலையில் அவ்வருஷம் கார்த்திகை மாதம் முதல்தேதியன்று, அருணையிலிருந்து ரமண பாதானந்தர், பிள்ளையவர்கள் வீட்டிற்குச் சென்ருர். முருகனுர் ஸ்வாமிகள் எழுதியுள்ள ரமணசந்நிதி முறையை அடிக்கடி வீட்டில் பாராயணம் செய்வது வழக்கம். அப்புத்தகம் வெளிவரக் காரணமானவராகிய பாதானந்தர் வந்ததும், அச் சந்நிதிமுறையைப் பண்ணுடன் பாராயணம் செய்ய எண்ணி அருணையிலிருந்து விஸ்வநாத சுவாமிகளையும் வரவழைத்துக் கடலூரிலேயே இருந்து வந்த மாத்தூர் ராஜகோபால்ஸ்வாமிகளும், பிள்ளையவர்களின் குடும்பத்தினரும் சேர்ந்து ஒரு மாதம் இரவு பகல் நேரங்கிடைத்த போதெல்லாம் சந்நிதி

முறையைப் பண்ணுடன் பாராயணம் செய்ய ஆரம்பித் தார்கள். பாராயணத்தின் மகத்துவமும், ஸ்ரீ பகவானின் பூரண கடாக்ஷமும் சேர்ந்து உமையம்மையின் வாழ்க் கையில் மகத்தான மாறுதல் ஏற்பட்டது. மார்கழியில் வர வேண்டிய ஸ்ரீ பகவான் ஜயந்தியைக் கார்த்திகைக் கடைசியிலேயே எல்லோரும் சேர்ந்து விமரிசையாகக் கொண்டாடினுர்கள். அன்றிரவு உமையம்மையின் சொப்பனத்தில் ஸ்ரீ பகவான் குழந்தையாகத் தொட்டிலில் காட்சி அளித்தார்கள். அன்றிலிருந்து ஸ்ரீ பகவான் தன் குழந்தை எனும் பாவத்தில் தாய்மையால் பொங்கிப் பூரித் தார்கள். மங்கையற்கரசியாருக்கு திருஞானசம்பந்தரை நினைத்ததும் பால் சுரந்த அநுபவமும் அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்களுடைய தீராத மனத்துயரைத் தீர்த்து இவ்விதம் ஸ்ரீ பகவான் ஆட்கொண்டார்கள். அதிலிருந்து ஒவ்வொரு வருஷமும் ஸ்ரீ பகவான் ஜயந்தியை, மிக சந்தோஷமாக பாலரமண ஜயந்தியாகக் கொண்டாடு வார்கள். நானும் ஒரு முறை அங்கு இருந்து கண்டு களித்திருக்கிறேன். உமையம்மையார் தம் ஞானப்பாலக னுக்கு வெள்ளிச் சங்கிலியில் இணைத்த சிறிய தொட்டில் செய்து அதில் ஸ்ரீ பகவான் சோபாவில் சாய்ந்திருக்கும் சிறு படத்தை வைத்து, ஆட்டித் தாலாட்டுப் பாடி மகிழ் வார்கள்.

பிறகு பிள்ளையவர்கள் 1942 ல் முதன் முறையாக ஸ்ரீ பகவான் சந்நிதியில் நீண்ட நாட்கள் தங்கும் ஆர்வத் துடன் ஆறு மாதம் விடுமுறை எடுத்துக் கொண்டு தம் குடும்பத்துடன் அருணையில் கவுண்டரின் சின்னக் கட்டி டத்தில் வந்து தங்கினுர். அவ்விதம் தங்கியிருந்த சமயம் தொட்டிலுடன் "உமா ரமணனை" எடுத்துச் சென்று ஸ்ரீ பகவானிடம் காட்டி ஆனந்தித்தார்கள். அவர் களது தாய்மையின் பேரன்பை ஸ்ரீ பகவானும் பார்த்துக்

கொண்டிருந்தார்கள். உமையம்மை தாமியற்றிய தாலாட்டு, அன்னம் உண்ண அழைத்தல், செல்வன் சிற்றடிச் சதங்கை முதலியவைகளை ஹாலில் உற்சாக மாகப் பாடினார்கள். பிறகு அவர்கள் வீட்டிற்குச் சென்றதும் ஸ்ரீ பகவான், அங்கிருந்தவர்களிடம் "உமாவுக்கு நான் அவள் பிள்ளையெனும் பாவம். அதனால்தான் நான் இங்கு உட்கார்ந்திருக்கும் போதே அவர்கள் தன்னுடைய குழந்தை ரமணனை அன்னம் ஊட்ட, தூங்க வைக்கவெல்லாம் பாடுப்பாடி அழைக் கிறார்கள்" என சிரித்துக் கொண்டே சொன்னார்கள். பிள்ளையவர்களுக்கு முன்பிருந்தே அடிக்கடி கடலூரி லிருந்து ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவானை தரிசித்துச் செல்லும் சோமசுந்தரம் பிள்ளையின் சகோதரர் போக நாதன்பிள்ளையும், அவர் மனைவி அன்னபூரணி அம்மாளும் அச்சமயம் ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு வந்திருந்தார்கள். அந்த நாளில் ஆச்ரமத்தில் பகல் 11½ மணி ஆகாரத்திற்குப் பிறகு நடுப்பகல் இரண்டுமணிக்குத்தான் பக்தர்கள் ஹாலுக்குள் செல்வார்கள். அப்பொழுது அன்பர்கள் கொண்டுவரும் பழம், பக்ஷணங்களை ஸ்ரீ பகவானுக்கு அளித்து விட்டு மற்றதை அந்த நேரத்தில் ஹாலில் இருக்கும் பக்தர்களுக்கும் வினியோகிப்பது வழக்கம். பிள்ளையவர்களின் மூத்தப் பெண் அலமேலுவும், அன்ன பூரணி அம்மாளும் பக்ஷணம் செய்து கொண்டு இரண்டு மணிக்கு ஹாலுக்கு எடுத்துச் சென்றார்கள். வழக்கம் போல் ஸ்ரீ பகவானுக்கு கொடுத்து விட்டு மற்றவர்களுக்கும் அளிக்கப்பட்டது. மறுநாளும் அப்படியே நடந்தது. மூன்றும் நாள் பக்ஷணம் வழங்கி முடிந்ததும் ஸ்ரீ பகவான் பிள்ளையவர்களிடம் "தினம் எதற்காக இப்படிக் கொண்டு வருவது? இனி வேண்டாம்," என்றார்கள். ஸ்ரீ பகவான் கட்டளைக்குப் பணிந்து நான்காம் நாள் ஒன்றும் எடுத்துச் செல்லவில்லை. பக்ஷணம் இல்லாத நாட்களில் ஸ்ரீ பகவா

னும் மற்ற அன்பர்களும் ஒரு டம்ளர் காபி மட்டும் அருந்துவார்கள். அதே போல் அன்றும் காபி மட்டும் பருகி ஸ்ரீ பகவான் அமர்ந்திருந்தார்கள். சுமார் கால் மணி சென்றிருக்கும். ஊருக்குள் இருந்து ஒரு வயதான அம்மாள் பக்ஷணத்துடன் வந்து தான் கொண்டு வந்ததை ஏற்றுக் கொள்ள வேண்டுமென மிக அன்புடன் வற்புறுத்தினர்கள். ஸ்ரீ பகவானும் வேறு வழியின்றி சாப்பிட்டார்கள். வழக்கம் போல் வினியோகித்து முடிந்ததும் ஸ்ரீ பகவான் பிள்ளையவர்களைப் பார்த்து "உங்கள் வீட்டிலிருந்து இரண்டு நாள் கொண்டு வந்தீர்கள், சரியென்று இருந்தேன். மூன்ரும் நாளும் கொண்டு வரவே, உங்களுக்கு சிரமமெதற்கு என நினைத்து இனி வேண்டாமெனச் சொன்னேன். நீங்களும் கொண்டு வரவில்லை, வேறு யாரும் கொண்டு வரவில்லை. இதில் நிம்மதியாக இருந்தது. அந்த நிம்மதி நிலைக்கவில்லை. இப்பொழுது இந்த அம்மாள் கொண்டு வந்து வற்புறுத்தி நிறையச் சாப்பிடும்படி செய்து விட்டார்கள். "இது ஒரு பழைய நிகழ்ச்சியை நினைவு படுத்துகிறது," என்றவர்கள் உற்சாகமாக, கீழ்கண்ட சம்பவத்தை சொல்ல ஆரம்பித்தார்கள்.

49. சப்த கன்னிகைகளின் உபசாரம்

விருபாக்ஷி குகையில் இருக்கும் போது ஒரு நாள் வழக்கமாக உள்ள காலை பலகாரத்துடன் இரண்டு மூன்று பக்தர்களும் கொண்டு வந்ததும் சேர்ந்து, அளவுக்கு மீறி அதிகம் சாப்பிடும்படி ஆயிற்று. அன்று அதற்கு மேலும் பகல் ஆகாரம் சாப்பிடாமல் வயிற்றுக்கு ஓய்வு கொடுக்க எண்ணி, காலை 7 மணிக்கு வழக்கமாக வெளியிற் போய் வருவதைப் போல் புறப்பட்டு, யாருக்கும் தெரியாமல் காட்டுப் பாதையில் பிரதக்ஷிணமாக காட்டுச் சோண

தீர்த்தத்திற்கு அருகில் போய்க் கொண்டிருந்தேன். (இப்பொழுது காட்டு சிவா ஆச்ரமம் உள்ள இடத்தில் இருக்கும் குளமே காட்டு சோணதீர்த்தம் எனப்படும்.) அங்கே சில பெண்கள் நின்று கொண்டு "சாமி இங்கு ஏதாவது குளமிருக்கிறதா? தண்ணீர் கிடைக்குமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு சோணதீர்த்தத்தைக் காட்டி விட்டுப் புறப்பட்டேன். அவர்கள் உடனே, சாமி! சாமி! உங்களை இந்த இடத்தில் பார்க்கக் கொடுத்து வைத்தது எங்கள் பாக்கியமே, நாங்கள் கொண்டு வந்திருக்கும் பலகாரத்தில் கொஞ்சம், கொஞ்சம் சாப்பிடத்தான் வேண்டும் என தாங்கள் கொண்டு வந்த பலகாரங்களிலிருந்து ஆளுக்குச் சிறிதாக ஓர் இலையில் வைத்தார்கள் பலவித பக்ஷணங்கள் இலையில் நிறைந்து விட்டது. அறிமுகமில்லாதவர்களானதால் தவிர்க்க முடியாமல் சாப்பிட்டேன். அவர்கள் சப்த கன்னிகைகள் போல் ஏழு பேர் இருந்தார்கள். யாவரும் ஒவ்வொரு சாக்கு வைத்திருந்தார்கள். தாங்கள் இலை பறிக்கக் காட்டிற்கு வந்திருப்பதாகக் கூறினார்கள். பிறகு நான் மேலும் காட்டிற்குள் போய் ஓரிடத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டு 12–1 மணி அளவில் அங்கிருக்கும் சோலைக் குளத்தில் ஜலம் குடிக்க வரவும், அந்த 7 பேரும் எதிர்ப்படவும் சரியாக இருந்தது. இப்பொழுதும் சுவாமி, குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா, எனக் கேட்டார்கள். நானும் சோலைக்குளத்தைக் காண்பித்து விட்டு புறப்பட்டேன். அவர்கள் அங்கேயும் விடாமல் சிறிதளவாவது சாதம் சாப்பிட்டு விட்டுப் போக வேண்டுமெனச் சொல்லி, என் பதிலையும் எதிர்பாராமல் விதவிதமான சித்ரான்னங்களை எடுத்து இலையில் பரிமாறினார்கள். போட்டி போட்டுக் கொண்டு அவர்கள் வைத்ததை, நமக்குச் சரியான தண்டனைதான் என எண்ணிக் கொண்டு சாப்பிட்டு முடித்தேன். காலையில் இலை பறிக்க வந்திருப்பதாகக்

கூறியவர்கள் சாக்குகளில், சாத மூட்டை தவிர வேறு இலைகளொன்றும் இல்லை. அத்துடன் அவர்களிடமிருந்து தப்பித்தால் போதுமென நினைத்து காட்டுப் பிரதக்ஷணப் பாதையிலேயே சென்று, குபேரலிங்கத்திற்கு மேற்குப் பக்கத்திலுள்ள எழுத்து மண்டபத்தில் போய் படுத்து விட்டேன். அப்பொழுதெல்லாம் அங்கு மரங்கள் அடர்ந்து இருந்ததால் நான் அங்கிருப்பதை யாரும் பார்க்க முடியாது. நடுப்பகல் நேரம் தாண்டியதும் மணி நாலரை, ஐந்து ஆகியிருந்தால் இருட்டுக்கு முன் விருபாக்ஷிக்குத் திரும்பும் எண்ணத்துடன் எழுந்து, மண்டபத்தை விட்டு வெளியில் வந்து எட்டிப் பார்த்தேன். நான் அப்படி பார்க்கவும் மனவாசி சரணுகதி ராமசாமி அய்யர் அங்கு எதிர்படவும் சரியாக இருந்தது. என்னைக் கண்டதும் அவருக்கு சந்தோஷம் தாங்கவில்லை. அச் சமயம் அவர் திருக்கோவிலூரில் வேலை பார்த்து வந்தார். அன்று, எனக்குப் பிடிக்குமென்று உயர்ந்த ஜாதி மாம் பழங்களை பருப்பு ரசத்தில் வேக வைத்ததை ஒரு பாத்திரத் தில் எடுத்துக் கொண்டு, திருக்கோவிலூரிலிருந்து இங்கு விருபாக்ஷிக்கு வந்தவர் காலையிலிருந்தே நான் அங்கில்லை என்பதறிந்து பிரதக்ஷணம் போயிருப்பேன் எனும் எண்ணத்தில், அப்பிரதக்ஷணமாக வந்தால் என்னை சீக்கிரம் சந்திக்கலாம் என வந்தவர் நான் தற்செயலாக எழுந்து வெளியில் வரவும் பார்த்து விட்டார். பிறகு என்ன செய்வது? இவ்வளவு ஆர்வத்துடன் மிக சிரமப் பட்டு கொண்டு வந்ததை நிராகரிக்க முடியாமல் இரண்டு பழங்களைச் சாப்பிட்டேன். எலியூருக்குப் பயந்து புலி யூருக்குப் போன கதையாயிற்று. அதன்பின் விருபாக்ஷி வந்து சேர்ந்தேன். அதிலிருந்து வேண்டும், வேண்டாம் எனும் எண்ணத்தை விட்டு அமையும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப இருந்து வருகிறேன் என மகிழ்வுடன் தன் பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து சொன்னுர்கள்.

இவ்வாறு பிள்ளையவர்கள் ஆறுமாத லீவில் இங்கிருக்கும் போது அவருடைய இரண்டாவது பெண் விஜயத்தின் கணவர் கந்தசாமிபிள்ளை, ஒரு மாதம் லீவில் இங்கு வந்து ஸ்ரீ பகவான் தரிசனத்திற்காகத் தங்கினர். அச்சமயம் அவருக்கு ஸ்ரீ பகவானிடம் நல்ல பிடிப்பு ஏற்பட்டு தியானம் முதலியவைகளில் ஈடுபட்டார். பிறகு ஊருக்குச் சென்று வேலை பார்த்து வந்தவருக்கு, சில வருடங்கள் கழித்து மயக்கமும் சதா தலை சுற்றலுமாக இருந்து வந்தது. அதன் காரணமாக தம் உத்தியோகத்தைத் தொடர்ந்து பார்க்க முடியாமல் இரண்டு வருட லீவில் தங்கி பலவித வைத்தியங்கள் செய்து கொண்டும், பூரண குணமேற்படாத நிலையில் இரண்டு வருட லீவும் முடிந்து அத்துடன் வேலை உயர்வும் கிடைத்தது. கோவாப்ரேட்டிவ் சப்ரிஜிஸ்ட்ரார் வேலை. வெளியில் பல கிராமங்களுக்கு நேரில் சென்று பார்க்கும்படியான வேலையானதால், தலை சுற்றல் காரணமாக பிறர் உதவியின்றி வெளியில் நடக்க முடியாத நிலையில் அவ்வேலையை எவ்வாறு ஏற்றுக் கொள்வது எனத் தயங்கி வருந்தினர். அன்றிரவு அவர் கனவில் ஸ்ரீ பகவான் "கவலையின்றி வேலையை ஏற்றுக் கொள்ளும் படி" உணர்த்தினர்கள். அதன் பிறகு ஸ்ரீ பகவான் பேரில் பாரத்தைப் போட்டுவிட்டு வேலையை ஒப்புக் கொண்டார். எல்லா இடங்களுக்கும் வண்டியில் சென்றுலும் சில வேளைகளில் நிலங்களைச் சுற்றிப் பார்க்க நடக்க நேரிடும் நேரங்களில், கருணாமூர்த்தியாம் ஸ்ரீ பகவான் கைத்தடியை ஊன்றிக் கொண்டு பக்கத்திலேயே உறுதுணையாக வருவதாக உணர்ந்தார். ஒற்றையடிப் பாதையில் நடக்க நேரிடும் போதெல்லாம் பாதையை விட்டு அவர் விலகி நடப்பதை அவருடன் செல்லும் சிப்பந்திகள் கண்டு, "நீங்கள், இந்தப் பாதையிலேயே நடந்து வரலாமே" என்பார்களாம். ஆனால் அவருக்குத் தன்னுடன் கூடவே வரும் ஸ்ரீ பகவானுக்காகவே அவ்வொற்றையடிப் பாதை

யை விட்டு விட்டு, தான் விலகி நடப்பதை அப்பொழுது தான் உணர்ந்து கொள்வார். இவ்விதம் ஸ்ரீ பகவானருளால் அவருக்கு நல்ல திடம் ஏற்படும் வரை சுமார் ஒரு மாதம் உற்ற துணையாக நின்று காத்த அதிசயத்தை என்னென்பது? பிறகு பல வருடங்கள் வேலை பார்த்து டெப்டி ரிஜிஸ்ட்ராராக வேலை உயர்வு பெற்று தற்சமயம் வேலையிலிருந்து ஓய்வு பெற்று இருந்து வருகிறார்.

50. உச்சிஷ்ட தீர்த்த பிரபாவம்

மற்றும் அந்த ஆறு மாத லீவில் நடந்த முக்கியமான ஒரு சம்பவமாகும் இது. பிள்ளையவர்களின் மூன்றாவது பெண் பங்கஜாக்ஷி தன் கணவருடன் கிராமத்தில் இருந்த போது உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் இங்கு தன் தகப்பனார் வீட்டிற்கு வந்திருந்தார். ஒரு நாள் ஆச்ரம ஹாலில் இருக்கும் போது மயக்க மேற்பட்டு நினைவு தப்பி, சிறு இழுப்பு மாதிரி உண்டாகி சற்று நேரத்தில் தெளிந்து விட்டது. இது போல் அடிக்கடி வருவதைக் கண்ட ஆச்ரம அன்பர்களில் சிலர், ஸ்ரீ பகவானின் உச்சிஷ்ட ஜலத்தைக் கொடுத்தால் சரியாகி விடும் என்றார்கள். அதன்படியே ஆச்ரமத்திலிருந்து பிள்ளையவர்கள் வாங்கி வந்து கொடுத்து வந்தார். சுமார் இரண்டு வாரம் சென்று பிள்ளையவர்கள் வெளியூர் செல்ல நேரிட்ட போது, தம் பேத்தி 7 வயது ரமண சுந்தரியை அனுப்பி, ஸ்ரீ பகவான் சாப்பிட்டு முடிந்து வெளியில் வந்ததும், பிறகு உள்ளே சென்று உச்சிஷ்ட தீர்த்தம் வாங்கிவர ஏற்பாடு செய்து விட்டுச் சென்றார். இரண்டு நாட்கள் சென்றன. மூன்றாம் நாள் தீர்த்தம் வாங்க அச்சிறுமி சென்ற சமயம் எல்லோரும் சாப்பாட்டுக்குச் செல்லும் நேரமாதலால், அச்சிறுபெண் மாத்திரம் போஜன சாலையின் வெளியில் தனிமையில் நின்றிருந்தாள். அவளைக் கண்ட ஓர் அன்பர்

உள்ளே வந்து உட்காரும்படிச் சொன்னதும் அதன் படியே உள்ளே போய் ஒரு பக்கமாய் உட்கார்ந்திருந்தாள். எல்லோரும் சாப்பிட ஆரம்பிக்கும் தருணம் ஸ்ரீ பகவான் அச்சிறுமியைப் பார்த்து விட்டு அவளுக்கும் ஓர்இலைபோட்டுப் பறிமாறும்படிச் சொன்னார்கள். உடனே ரமணசுந்தரி " நான் சாப்பிட வரவில்லை, தீர்த்தம் வாங்கிப் போக வந்தேன் " என்றாள்.

ஸ்ரீ பகவான் ஏதோ அபிஷேக தீர்த்தம் என நினைத்து " அப்படியானால் வாங்கிப் போவது தானே" என்றார்கள். அதற்கு அவள் "ஸ்ரீ பகவான் சாப்பிட்டு கைகழுவிய பிறகு தானே வாங்கிப் போக வேண்டும்" என்றதும் பிறகுதான் அவள் வாங்கிப் போக வந்தது, உச்சிஷ்டம் என ஸ்ரீபகவான் தெரிந்து கொண்டார்கள். பிறகு ஒன்றும் பேசவில்லை. அந்த நாளில் பக்தர்கள் சாப்பிட்டதும் அவரவர் இலையை அவர்களே எடுத்து வந்து வெளியில் போடுவது வழக்கம். ஸ்ரீ பகவான் மட்டும் தம் இலையை எடுப்பது வழக்கமில்லை. ஆனால் அன்று ஸ்ரீ பகவான் சாப்பிட்டு முடிந்ததும் வழக்கம்போல் பக்கத்தில் உள்ள தட்டில் கை கழுவாமல் எல்லோரையும் போல் தன் இலையை எடுத்துக் கொண்டு வந்து வெளியில் போட்டு விட்டு கை கழுவினார்கள். மற்ற அன்பர்கள் எவ்வளவு தடுத்தும் கேட்கவில்லை. இப்படி நேர்ந்ததற்குப் பிள்ளையவர்களின் குடும்பத்தாரே காரணமெனவும், ஸ்ரீ பகவானுக்குப் பெரிய அபசாரம் செய்துவிட்டதாகவும், அங்கிருந்த பக்தர்கள் சொன்னார்கள். அன்று மாலையே பிள்ளையவர்கள் ஊரிலிருந்து வந்தவர் விஷயமறிந்தார். அவர், எல்லோருக்கும் இப்படி அபசாரம் நேரும்படி நடந்து கொண்டு நீங்காப் பழிக்கு ஆளானதை எண்ணி எண்ணி நெஞ்சம் நொந்து வருந்தினர்.

மறுநாட்காலை சிற்றுண்டி முடிந்து, ஸ்ரீ பகவான் ஹாலில் எட்டு மணிக்கு சோபாவில் வந்தமர்ந்ததும் உமை யம்மை தாம் முதல் நாள் இரவே இயற்றிய கீழ்கண்ட பாடலை மூத்த பெண்ணுடனும் இச்சம்பவத்திற்குக்காரண மான மூன்றாவது பெண்ணுடனும் உள்ளம் உருகிப்பாடி, மற்றும் பலதோத்திரப் பாடல்களைச் சொல்லி அதன் மூல மாக தாங்கள் அறியாமல் செய்த பிழைகளைப் பொறுத்துக் காக்க வேண்டுமென வேண்டினார்கள். யாவற்றையும் சாக்ஷி மாத்திரமாகப் பார்த்துக் கொண்டு அமைதியாக ஸ்ரீ பகவான் அமர்ந்திருந்தார்கள். பின்னர் 9½ மணியள வில் கோசாலை பக்கம் ஸ்ரீ பகவான் சென்றுவிட்டு வரும் போது விஸ்வநாதஸ்வாமிகளிடம் "உமா இன்று வந்து தாங்கள் ஏதோ பெரிய தப்பிதம் செய்துவிட்டது போலவும், அதை நான் க்ஷமிக்க வேண்டுமென்றும் பல பாட்டுக்கள் மூலமாக வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் என்ன தப்பு செய்து விட்டார்கள் ? அவர்கள் மேல் எனக்கு ஒரு கோபமுமில்லை. நான் சாப்பிட்ட இலைக்காகவும், கை கழுவிய ஜலத்திற்காகவும் இங்கு சிலருக்குள் சச்சரவு ஏற் படுவது நீண்ட நாட்களாக எனக்குத் தெரியும். இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென சந்தர்ப்பம் எதிர்பார்த் திருந்தேன். இப்பொழுது இதை ஒரு காரணமாக வைத்து அதை நிறைவேற்றினேன், அவ்வளவுதான்" என்றார்கள். இது தெரிந்த பிறகு தான் பிள்ளையவர்களும் அவர் குடும்பத் தினரும் அமைதி அடைந்தனர். அன்று பகல் சாப்பாட் டிற்குப் பிறகு ஸ்ரீ பகவான் தன் இலையை தானே எடுப் பதைத் தடுத்து "பகவானே! இனி தாங்கள் இலையை எடுக்கக் கூடாது, நானே எடுக்கிறேன்" என தேவாஸ் ராணி பிரபாவதி வேண்டிக் கொண்டார்கள். அதற்கு ஸ்ரீ பகவான் "மற்றவர்கள் அவரவர் இலையை எடுக்கும் போது நான் மட்டும் ஏன் எடுக்கக் கூடாது ?" என்றார் கள். இவற்றை எல்லாம் கவலையுடன் பார்த்துக் கொண்

டிருந்த ஸ்ரீ சின்னஸ்வாமிகள் "இனி மற்றவர்களும் தம் தம் இலையை எடுக்க மாட்டார்கள், தயவு செய்து ஸ்ரீ பகவானும் எடுக்க வேண்டாமென வேண்டிக் கொண் டார். ஸ்ரீ பகவானும் அத்துடன் தம் நாடகத்தை முடித்துக் கொண்டார்கள். அன்றிலிருந்து அவரவர் இலையை அவர வர்களே எடுப்பதென்பதும் நின்றது.

ஸ்கந்தாச்ரமத்தில் நான் கைங்கரியம் செய்து கொண் டிருந்த போதிலிருந்தே ஸ்ரீ பகவான் சாப்பிட்ட இலையில் உச்சிஷ்ட விசேஷத்திற்காக சாப்பிடுவது வழக்கம். சில சமயம் முதலியார் பாட்டியும் சாப்பிடுவார்கள். முதல் பந்தியில் சாப்பிடாமல் காத்திருந்து இரண்டாவது பந்தி யில் அதை உபயோகித்துக் கொள்ளுவோம். ஸ்ரீ அன்னை யார் சமாதிக் கட்டிடத்திற்கு வந்த பிறகும் அப்படி நடந்து வந்தது. ஸ்ரீ பகவான் மதவேறுபாடின்றி எங்கள் எல்லோ ருடனும் சமபந்தி போஜனம் செய்வார்கள். பிராமணர் களெல்லாம் சமையற்கட்டில் சாப்பிடுவார்கள். காலை, இரவு ஆகிய இரண்டு வேளையும் சமையற்கட்டில் கைங்கரியம் செய்பவர்களும், மிகப்பழகிய சில பிராமண பக்தர்களும் ஆளுக்கொரு வேளையாக அதில் சாப்பிடுவார்கள். பகல் ஒரு வேளை பந்தியில் முதலியார்பாட்டியின் அன்னம் வைக்கப்படுவதால் அவர்கள் உபயோகிக்கமாட்டார்கள். இவ்விஷயம் மலையடி ஆச்ரமம் வந்த பிறகு ஸ்ரீ பகவா னுக்கும் தெரிந்தது. ஆயினும் ஒன்றும் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளாமல் மௌனமாக இருந்தார்கள். ஒரு முறை முருகனர் ஸ்வாமிகள் இங்கு ஆச்ரமம் வந்திருந்த சமயம் ஸ்ரீ பகவானின் உச்சிஷ்ட இலையில் சாப்பிட விரும்பினர். முதல் பந்தியில் சாப்பிடாமல் காத்திருந்து ஸ்ரீ பகவான் சாப்பிட்டு முடிந்து வெளியிற் சென்றதும் ஸ்வாமிகள் அந்த இலையில் சாப்பிட நினைத்தபோது, இந்த வேளை வேண்டாம், இரவு உபயோகித்துக் கொள்ளலாம்

என சமையற்கட்டு கைங்கரியத்தார் தடுத்து விட்டார்கள். முதலியார் பாட்டி அன்னம் விழுந்த இலையில் அவர் சாப்பிடக் கூடாது என்பதே காரணம். இதனால் மனம் வருந்திய முருகனார் ஸ்வாமிகள் அந்த வேளை ஆகாரம் ஏதும் சாப்பிடாமல் இருந்து விட்டார். பிறகு கீழ்கண்ட பாடலையும் எழுதினார். ஆனால் அப்பொழுது இப்பாடலை ஸ்ரீ பகவானிடம் காட்டவில்லை. அன்று இரவு உச்சிஷ்ட இலையில் உணவுண்டு தாபந்தீர்ந்து சமாதான மடைந்தார். இப்பாட்டு ஸ்ரீ ரமணசந்நிதிமுறையில் தனிப்பாடலாக உள்ளது.

தச்சறி யாத சதுர்மறைப் பார்ப்பான் சமைத்தவுடற்
றுச்சிலுட் கன்மத் தொடர்பாற் புகுந்த சுணங்கனிது
புக்கிலை வேட்டுப் புலம்பெய்து காலையிற் புண்ணியநின்
எச்சிலை வேட்டுன் னிருதா ளிறைஞ்சி யிரக்கின்றதே.
பின்னர் பிள்ளையவர்கள் உச்சிஷ்ட தீர்த்தம் எடுத்த

தன் விளைவாக எழுந்த பிரச்சனையை ஒரு காரணமாகக் காட்டி தாம் விரும்பாத ஒரு காரியத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள். இதற்கு யார் பொறுப்பாளியாக முடியும் ?

பல்லவி

அடித்தாலும் வைதாலும் நீயே துணையல்லாமல்
வார்துணை எங்கள் ரமணா !

அநு பல்லவி

அடியேங்கள் குற்றங்களை அண்ணலே நீ பொறுத்து
அணைத்தாளா விடிற்புக லிடமினி வேறெங்குண்டு (அடி)

சரணங்கள்

சின்னஞ் சிறுவர் செய்த சிறுபிழை பொறுப்பாயே
முன்னவ! நீ முனிந்தால் முற்றும ழிந்திடோமோ
அன்னே யொதுக்கிவிடில் பின்னேசேய் யாதாகிடும்
உன்னே யலதுபுக லிடமினி வேறெங்குண்டு (அடி)

கற்பனே கடந்தநீ குற்றம் பொறுப்பாயே
அற்பஉ லகிலெம்மை யார்காத்தருள் செய்குவார்
பொற்புற அருணேயில் அமர்ந்தநின் பொற்ருளின்றி
மற்றுமோர் துணேயுண்டோ புகலிடம் வேருென்றுண்டோ
(அடி)

கடலது கொதித்தாலெந் நீராற்கு ளிர்விப்பது
கருணேஸ்வ ரூபனேநீ கடிந்தால்யா மென்செய்வது
இடர்மிக்க உலகினில் எமக்கொரு துணேயுண்டோ
சுடரடித் துணேயன்றி புகலிடம் வேருென்றுண்டோ (அடி)

அடிக்கும்உன் ஒருகரம் அணேக்கும்உன் ஒருகரம்
அடித்தது போதுமினி அணேத்திடல் வேண்டும் ஆற்ருேம்
நெடியமால் அயன்காணு நின்மலா நின்தாளன்றி
அடியேமுக் குற்றபுக லிடமினி வேருென்றுண்டோ (அடி)

இது உமையம்மை தாங்கள் செய்த பிழை பொறுக்க வேண்டி பிரார்த்தித்துப் பாடியது. இவ்வாறு பிள்ளேயவர்கள் ஆறுமாதம் இங்கிருந்துவிட்டு லீவு முடிந்ததும் கடலூர் திரும்பித் தம் உத்தியோகத்தைப் பார்த்து வந்தார். அவர் வீட்டிலுள்ள கூடத்தில், இங்கு ஆச்ரமத்தில் பழைய ஹாலில் உள்ளது போல் ஒரு சோபாவில், விரிப்பு விரித்து திண்டுகள் போட்டு ஸ்ரீ பகவான் பெரிய படத்தை வைத்து புஷ்பாலங்காரம் செய்து, இரவு பகல் எரியும்படி குத்துவிளக்கும் வைத்திருப்பார்கள். அவ்விடத்தில் தினம் ஸ்ரீ ரமண நூற்றிரட்டு, ஸ்ரீ ரமணசந்நிதி முறை முதலிய

பாராயணங்கள் நடைபெறும். இவ்விதம் வீட்டையே ஆச்ரமமாக அமைத்துக் கொண்டு ஸ்ரீ பகவான் நினைவிலேயே இருந்து வந்தார்கள். இப்படியே இரண்டு வருடங்களுக்கு மேல் சென்றது. பிள்ளையவர்கள் உத்தியோகம் பார்க்க வேண்டிய காலம் இன்னும் ஐந்து வருடங்கள் இருக்கும் போதே, தனக்கும் வயது 48 ஆகிறது. இனியும் வீண் காலம் போக்கி விரயமாக்கக் கூடாதென்றும், தனக்கோ, ஸ்ரீபகவானுக்கோ இந்த ஐந்து வருடத்திற்குள் ஏதாவது நேர்ந்து விட்டால் அது ஈடு செய்ய முடியாத பெரிய நஷ்டமாகி விடுமே என்றும் பலவித எண்ணங்கள் தோன்றி வேலையிலும் நாட்டமின்றி மிகத் துயருற்ருர். பிறகு ஸ்ரீ பகவானுடைய அநுக்கிரகத்தால் மனதில் திட வைராக்யம் உண்டாகித் தாம் வேலையிலிருந்து விலகி ஸ்ரீ பகவானுடைய சந்நிதியே புகலாக அடைய எண்ணினுர். வேலையை விட்டு விலகியபின் வரும் சிறிய தொகையாகிய ஓய்வுகால ஊதியப் பணத்தை வைத்துக்கொண்டு குடும்பத்தை நடத்த முடியுமோ எனத் தயங்கிய போது உமையம்மையும், அலமேலுவும், எப்படி இருந்தாலும் கவலையில்லை, உள்ளதே போதுமெனத் தைரியம் கூறியதும் அவருக்கு அமைதி ஏற்பட்டது.

அவர் நீண்ட லீவில் இருந்து கொண்டு அப்படியே வேலையிலிருந்து விலக எண்ணித் தம் குடும்பத்துடன் அருணை வந்து ரங்கஸ்வாமிக்கவுண்டரின் சின்ன கட்டிடத்தில் தங்கினுர். தாம் மௌனத்துடன் இருந்து கொண்டு தம் உறவினரின் வீட்டில் நடக்கும் சுக துக்கங்களில் பங்கேற்பதில்லை என்று தீர்மானித்து அவ்விதமே இருந்து வந்தார். சில மாதங்கள் சென்று அவர் தங்கை இறந்து விட்டதாகக் கடிதம் வந்தது. தந்தி கொடுத்தாலும் அவர் வரமாட்டாரெனத் தெரிந்தே தகவல் அறிவிக்க வேண்டியதற்காக கடிதம் எழுதினுர்கள். அதற்கு அவர்

போகவில்லை. விஷயமறிந்து ஸ்ரீ பகவான் "ஏன் போக வில்லை" என்பது போல் பார்த்தார்கள். அதற்கு மனதைச் சலிக்கவிடாமல் தன் தீர்மானத்திலேயே இருந்தார். பின்னும் இரண்டு மாதங்கள் சென்றன. பிள்ளையவர்களின் சகோதரர் போகநாதன்பிள்ளையின் மனைவி, அன்னபூரணி அம்மாள் காலமானதாக ஆச்ரமத்திற்குத் தந்தி வந்தது. ஸ்ரீ பகவான் பார்த்துவிட்டு பிள்ளையவர்களிடம் கொடுக்கச் செய்தார்கள். அவர் அதைப் பார்த்து விட்டுத் திருப்பிக் கொடுத்தவர் எவ்வித சலனமுன்றி அங்கேயே உட்கார்ந்திருந்தார். "இம் முறையும் போகவில்லையா"? எனும் தோரணையில் ஸ்ரீ பகவான் பார்த்தார்கள். அதற்குள் தந்தி, ஆபீஸிற்கு போயிற்று. அவர் கடலூர் புறப்படவில்லை எனத் தெரிந்து ஸ்ரீ சின்ன ஸ்வாமிகள் கூப்பிட்டனுப்பினர். அவர் போனதும் "ஏன் போகவில்லை?" எனக் கேட்டுவிட்டு, "நீங்கள் அதற்குள், எல்லாம் கடந்த ஞானியாகிவிட முடியாது. சுற்றத்தாரைத் துறந்துவிடக் கூடிய மனப்பக்குவம் வந்து விட்டதா, என்ன?" என்றும் இன்னும் பல கடிந்து கூறினர். ஆறுமாத மௌனம் போதுமென்பது ஸ்ரீ பகவான் சித்தம் போலும் என மனதைத் திடப்படுத்திக் கொண்டு உடனே கடலூர் புறப்பட்டுச் சென்றார். இங்கு ஸ்திரமாக வந்தபிறகு கடலூரில் வைத்திருந்தது போலவே இங்கும் சோபாவில் ஸ்ரீ பகவான் படம் வைத்து அலங்கரித்துப் பாராயணமும், பூஜையும் நடந்து வந்தது.

ஸ்ரீ பகவானுடைய ஒவ்வொரு ஜயந்திக்கும் உமையம்மை ஸ்ரீ பகவான் பேரில் பாட்டுகள் இயற்றி சந்நிதியில் பாடி மகிழ்வார். ஒரு நாள் மாலை உமையம்மை, ஹாலில் உட்கார்ந்திருந்தவர்கள் எழுந்து ஸ்ரீ பகவான் சோபா அருகில் சென்று நமஸ்கரித்து "பகவானே! நானும் இல்லை, வேறு ஒன்றும் இல்லை. எல்லாம் ஒரே இருட்டாக

சூன்யமாக இருக்கிறதே!" என்றுகலவரத்துடன் கூறி னார்கள். இவைகளைக் கேட்டுக்கொண்டு பதிலேதும் சொல்லாமல் ஸ்ரீ பகவான் அமைதியாக அமர்ந்திருந்தார் கள். உமையம்மையும் ஸ்ரீ பகவானிடம் சொன்னதால் ஏற்பட்ட ஆறுதலுடன் தன் இடத்தில் போய் உட்கார்ந் தார்கள். மறுநாட் காலையில் அவர்கள் ஹாலுக்குள் வந்து நமஸ்கரித்து எழுந்ததும், ஸ்ரீ பகவான் அவர்களைப் பார்த்து "நான்" இல்லாமல் ஒரே சூன்யமாக இருக்கிறது என்று சொன்னீர்களே, அப்படி இருந்தது என்று உணர்ந்தவன் ஒருவன் உண்டல்லவா? அந்த சூன்யத் தைக் கண்டது யார் என்று பார்க்கவேண்டும், அதைக் கண்டவன்தான் "தான்" என்பதை தெரிந்துகொண்டால் கலக்கத்திற்கு இடமேது? எனச் சொல்லி கைவல்யத்தி லுள்ள கீழ்கண்ட பாடலையும் குறிப்பிட்டார்கள். உமை யம்மையும் மனம் தெளிந்து சாந்தியடைந்தார்கள்.

63 - கைவல்ய பாடல்

(தத்துவ விளக்கப் படலம்)

பஞ்சகோ சமும்விட் டப்பாற பார்க்கின்ற பொழுதுபாழே
விஞ்சிய ததுவல்லாமல் வேறொன்றுந் தெரியக்காணேன்
அஞ்சன விருளையோ நா னக மென வநுபவிப்பேன்
வஞ்சமில் குருவேயென்ற மகன்மதி தெளியச்சொல்வார்.

64 - தத்துவ விளக்கப் படலம்

முன்புகல் தசமன்புத்தி மோகத்தா லெண்ணி எண்ணி
ஒன்பது பேரைக்கண்ட வொருவனுந் தனைக்காணுத
பின்பவ னிடையிற்கண்ட பெரியடா ழவனேபாராய்
அன்புள மகனேகாண்ப தடங்கலுங் காண்பானீயே.

உமையம்மை தம் தெய்வீகத் தலைவனும் ஸ்ரீ பகவந்தர் பேரிலும், ஞானச்செல்வன் உமாரமணன் மீதும் இயற்றிய இனிய பக்திப் பாடல்களைத் தொகுத்து "ஸ்ரீ பகவத்கீதம்"

எனும் புத்தகமாக வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் அடிக்கடி பலாக்கொத்து வந்து "நாங்கள் இருக்கும் போது நீங்கள் ஏன் சிரமப்பட வேண்டும், இனி எங்கள் வீட்டிலேயே சாப்பிடலாம்" என வற்புறுத்துவார்கள். அந்த அன்புக் கட்டளையை மீற முடியாமல் அவர்கள் வீட்டிலும் சில நாள் சாப்பிடுவேன்.

ஒரு சமயம் ஸ்ரீ பகவான், ஹாலில் இருந்த பக்தர்களிடம் சோமசுந்தரம் பிள்ளையைக் காட்டி "இவர்கள் பகவந்தரை அடுத்த குடும்பம். சாதுக்களை ஆதரிப்பவர்கள். ஆகையால் தான் இங்கு வந்துள்ளார்கள் எனப் பகர்ந்தார்கள். மற்றொரு சமயம் தாம் முதன் முறையாக பிக்ஷைக்குப் போக நேர்ந்தது குறித்துக் குறிப்பிடும் போது, "நான் அண்ணாமலையார் பெரியகோவில் பிரகாரத்திலுள்ள இலுப்பை மரத்தடியில் தங்கியிருந்த போது கோவில் நந்தவன கைங்கரியத்தைச் சில சாதுக்கள் கவனித்து வந்தார்கள். அவர்கள் காவடி பிக்ஷையெடுத்துச் சாப்பிடுவது வழக்கம். சில நாட்களில் ஊசாம்பாடி ருக்மணியம்மாள் எனும் ரெட்டியார் வீட்டம்மாள் சமையலுக்கு வேண்டிய பொருட்களையெல்லாம் கொண்டு வந்து நந்தவனத்திலேயே சமைத்து அவர்களுக்கு விருந்து வைப்பார்கள். ஒரு சமயம் அச் சாதுக்களுக்குத் தலைவராக இருந்தவர் என்னையும் அவ்விருந்துக்கு சாப்பிட வர வேண்டுமென வற்புறுத்தினர். நான் மௌனமாக இருப்பது கண்டு அங்கு வந்து சாப்பிட வேண்டும், அல்லது பிக்ஷைக்குப் போகவேண்டுமெனச் சொல்லிவிட்டு நான் பிக்ஷைக்குப் போகாவிட்டால் விருந்துக்கு என்னை கைப்பிடியாகக் கொண்டுவரும்படி ஒரு சாதுவையும் நியமித்து விட்டுப்போய் விட்டார். நான் எழுந்து பிக்ஷைக்குப் போவது போல் போக்கு காட்டினேன். ஆனால் அந்த சாது நான் பிக்ஷைக்குப் போகிறேனா என்று பார்ப்பதற்கு

என்னை தொடர்ந்து வந்தார். அவர்களின் அன்புத் தொல்லையிலிருந்து தப்புவதற்கு வேறு வழியில்லாமல் சந்நிதித்தெருவில் ஒரு வீட்டுத் திண்ணையில் சிலர் சீட்டு விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு அந்த வீட்டிற்குமுன் நின்று கைதட்டினேன். அங்கிருந்தவர் களில் ஒருவர் என்னைப் பார்த்து எழுந்து உள்ளே போய் ஒரு இலையில் பிசைந்த சாதம் கொண்டுவந்து என் கையில் இட்டார். அவர் கம்பீரம் சேஷய்யர் எனப் பின்னால் தெரிந்தது. அவர் குடும்பமும் கடலூர் பகவந்த ஸ்வாமிகளை அடுத்த குடும்பம். அதனால்தான் சீட்டு ஆடிக்கொண்டிருந்த அத்தனை பேரிலும் அவருக்குமட்டும் பிக்ஷையிட வேண்டுமெனத் தோன்றிற்று" என ஸ்ரீ பகவான் சொன்னார்கள்.

இவ்வாறு அமைதியாக இருந்து வரும்போது 1949 செப்டம்பரில் பிள்ளையவர்களின் மூன்றாவது பெண் பங்க ஜாக்ஷியின் கணவர் தம் கிராமத்தில் காலமானார். அச் சமயம் உமையம்மையும், அலமேலுவும் உடல்நிலை சீர் கெட்டிருந்ததால் கிராமத்திற்குப் போக முடியாமல் பிள்ளை யவர்கள் மட்டும் சென்று எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு தம் பெண்ணுடன் இரு பேரப்பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு அருணை திரும்பினர். ஸ்ரீ பகவா னுக்கும் கையில் வந்த கட்டியின் அபாயம் அதிகரித்து வந்தது. எல்லாவித வேதனைகளும் சேர்ந்து உமையம்மை உடல்நிலை மேலும் மோசமாகி சிகிச்சைக்காக, பிள்ளை யவர்கள் சென்னைக்கு அழைத்துச் சென்றார். இந்த ஸ்ரீ பகவானுக்கு வைத்தியத்தையும் மீறியநிலை ஏற்பட்டு 14-4-1950 அன்று நம் ஞான தினகரனும் ஸ்ரீ பகவான் அருணேசனுடன் இரண்டறக் கலந்தார்கள். அச்சமயம் சென்னையிலிருந்து பிள்ளையவர்கள் மட்டும் வந்திருந்து ஸ்ரீ பகவான் மகா நிர்வாணம் அடைந்ததும் தம் குடும்

பத்தைத் கடலூர் அழைத்துச் சென்ருர். உமையம்மையும் உடல்நிலே தேருமல் கடலூரில் ஸ்ரீ பகவான் அடைந்த ஐந்தாம் மாதம் ஸ்ரீ பகவான் திருவடி யடைந்தார்கள். இங்கு நான் பலாக்கொத்தில் சமைத்துக்கொண்டு சிரமப் படுவது கண்ட ரங்கஸ்வாமிக் கவுண்டர், ஆச்ரமத்திற்கு அருகிலுள்ள தன் பெரிய கட்டிடத்தின் ஒரு பாகத்தில் நான் வந்து இருக்கும்படி செய்து அந்த மனேயிலேயே சிறுவீடு கட்டிக் கொண்டு குடும்பத்துடன் இருந்துவந்த சுப்ரமண்யத்தின் வீட்டில் சாப்பாட்டிற்கும் ஏற்பாடு செய்து விட்டார். சில வருடங்கள் சாப்பிட்டு வந்தேன், அதன் பின் அவர் வேறு இடத்தில் சொந்தவீடு வாங்கிக் கொண்டு அங்கு குடி போனுர். அச்சமயம் ஸ்ரீ பகவான் தரிசனத் திற்காகத் தெள்ளாரிலிருந்து வந்திருந்த அபூர்வத்தம்மாள் நான் தங்கியிருந்த கவுண்டர் கட்டிடத்திலேயே எனக்கு ஆகாரம் கொண்டுவந்து கொடுத்து வந்தார்கள். இந் நிலேயில் ஸ்ரீ பகவான் மகாசமாதிக்குப் பிறகு கடலூர் சென்றுவிட்ட சோமசுந்தரம் பிள்ளே சுமார் 2½ வருடம் கழித்து தன் மூன்ருவது புதல்வி பங்கஜாக்ஷியுடன் அதன் இரு பிள்ளேகளுடனும் 1953-ல் அருணே வந்து ஸ்ரீ ரமண நகரின் நிரந்தரவாசிகளாக அன்றிலிருந்து இன்று வரை இருந்து வருகிருர்கள். சில நாள் சென்று அபூர்வத்தம் மாள் தம் ஊருக்குச் சென்று விட்டதால் நான் மறுபடியும் குக்கரில் சமைக்க முயற்சித்த போது பிள்ளேயவர்கள் “ நீங்கள் இனியும் சமைத்து சிரமப்பட வேண்டாம், நம் வீட்டிலேயே சாப்பிடலாம்” என வற்புறுத்திச் சொன்ன தின் பேரில் அன்று முதல் இன்று வரை சுமார் 25 வருடங் களுக்கும் மேலாக அவர் வீட்டில் சாப்பிட்டு வருகிறேன். என் சகல செலவுகளேயும் ஏற்றுக்கொண்டிருந்த ரங்க ஸ்வாமிக் கவுண்டர் என் சாப்பாட்டிற்கான பணத்தை பிள்ளேயவர்களிடம் கொடுத்தார். அதற்குப் பிள்ளேயவர் கள் “ஒரு சாதுவிற்கு பிக்ஷை செய்து வைக்கும் பாக்கியம்

எனக்குக் கிடைத்துள்ளது. ஓரளவிற்கு வசதியையும் ஸ்ரீ பகவான் கொடுத்துள்ளார்கள். ஆகையால் நான் பணம் வாங்க மாட்டேன் ” என மறுத்துவிட்டார். அதி லிருந்து என் மற்றைய கைச் செலவுக்கு ரங்கஸ்வாமிக் க்வுண்டர் உதவி வந்தார். அவர் காலத்திற்குப் பிறகு அவர் குமாரராகிய பழனிசாமிக் கவுண்டர் உதவி வருகிறுர்.

பிள்ளையவர்கள், முகவைக்கண்ண முருகனுர் ஸ்வாமி களுக்கு நீண்ட வருடங்களாக மூன்று வேளை ஆகாரமும் அளித்து வந்தார். ஸ்வாமிகள் 8-8-73-ல் சமாதியாவதற்கு சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் கடுமையான நோய் வாய்பட்டதால் அவரை ஆச்ரமத்திலுள்ள தனிக் கட்டி டத்தில் வைத்து சிகிச்சை, பத்திய உணவு முதலியவை களை ஆச்சிரமத்தாரே கவனித்துக் கொண்டதால் பிள்ளை யவர்கள் வீட்டு ஆகாரத்தை நிறுத்த நேரிட்டது. இவ்வித மாக அடியார் தொண்டும் ஸ்ரீ பகவான் தியானமுமாக மிக அமைதியான உள்ளத்துடன் வாழ்ந்து வந்த சோம சுந்தரம் பிள்ளையவர்கள் தம்முடைய 82ம் வயதில் 2-11-75ல் ஸ்ரீ பகவான் திருவடியடைந்தார். அவர் காலத்திற்குப் பின்னும் அவர் வீட்டிலேயே நான் சாப்பிட்டு வருகி றேன். பிள்ளையவர்கள் வெகு சாந்தமும், நிதானமும் நிறைந்தவர். ஆச்ரம கைங்கரியமாக ஆச்ரம வரவு, செலவுக் கணக்குகளை மிக நேர்த்தியாகப் பதிந்து வந்தார். இன்றும் அவர் எழுத்துக்கள் ஆச்சிரமக் கணக்கு நோட்டுகளில் அவரை ஞாபகப்படுத்திக் கொண்டிருக் கிறது. பிள்ளையவர்களின் குடும்பம் முழுவதுமே ஞானி களை அடுத்து சாதுக்களை ஆதரிக்கும் பெறும் பாக்கியம் பெற்றவர்கள். அவர் கடைசி சகோதரர் C. பழமலைநாதப் பிள்ளையும் பல சாதுக்களை வைத்து ஆதரித்தவர். அவர் காலத்திற்குப் பிறகும் அவர் குடும்பத்தினர் சாதுக்கள்

தொண்டும், அன்னம் அளித்தலுமாக சுமார் 35 வருடங்களாக இங்கேயே இருந்து வருகிறார்கள். பிள்ளையவர்களின் சகோதரி அங்கயற்கண்ணி அம்மாளும் கடலூரில் தன் கணவருடன் இருந்தபோது, மாத்தூர் ராஜகோபால் ஸ்வாமிகளை வீட்டில் வைத்திருந்து கண்ணும் கருத்துமாகத் தொண்டு செய்து வந்தார். தம் கணவரின் காலத்திற்குப் பிறகு பிள்ளையவர்களின் அநுசரிப்புடன், தம் தள்ளாத வயதில் அருணை வந்து ஸ்ரீ ரமண நகர் வாசியானார் இங்கு வந்த பிறகும் ஸ்ரீ பகவானுக்கு முன்பு கைங்கரியம் செய்துவந்த கிருஷ்ணஸ்வாமிகளுக்கு ஆகார விஷயத்தில் தம்மால் முடிந்த உதவிகளை செய்து வந்தார். பிள்ளையவர்களின் வீட்டிலிருந்து முருகனார் ஸ்வாமிகளுக்கு வரும் பகல் உணவை. அங்கயற்கண்ணியம்மாள் தம் தள்ளாமையையும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் முருகனார் ஸ்வாமிகள் கட்டிடத்திற்குப் போய் தம் கைகளாற் பரிமாறி ஸ்வாமிகளைத் திருப்தியாக உண்ணச்செய்து தாமும் உள்ளம் திருப்தி அடைவார்கள். பிறகு உடல்நலக் குறைவால் தம் பிள்ளை வீட்டிற்குச் சென்றவர்கள் ஸ்ரீ பகவானடி சேர்ந்தார்கள். இவ்வாறு சாதுக்களின் சத்சங்கத்தின் மேன்மையை உணர்ந்த ஒரு நல்ல குடும்பத்தின் போஷணையில் இருக்கும்படி எனக்கு ஸ்ரீ பகவான் வழிகாட்டியுள்ளார்கள்.

51. நல்லதோர் குடும்பம்

புதுக்கோட்டை டாக்டர் நாராயணய்யர், ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்தில் இருக்கும் போதே வந்து தரிசித்துப் போவார். ஸ்ரீ பகவானிடம் ஆழ்ந்த பக்தி உடையவர். சமவயதினரும் கூட. அவரது குடும்பமும், அவர் சம்பந்திகள் குடும்பமும் ஸ்ரீ ரமண பக்தர்களே. ஸ்ரீ பகவானின் கருணையை உணர்ந்து உருகிய சம்பவங்கள் பல உண்டு.

ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்திலிருந்து ஸ்ரீ அன்னையார் சமாதிக் கட்டிடத்தில் நிரந்தரமாகத் தங்கிய புதிதில் தண்டபாணி ஸ்வாமிகள், புதுக்கோட்டைக்கு போய் நாராயணஅய்யரைப் பார்க்கச் சென்றார். ஐயரவர்கள் ஒரு பெரும் தொகையைத் தம் காணிக்கையாகக் கொடுத்து, மற்றும் வசதிபடைத்த சில பெரிய மனிதர்களுக்கும் கடிதம் எழுதி, தொகை திரட்டிக் கொடுத்தார். அந்தத் தொகையைக் கொண்டு, பலாக் கொத்திலிருந்து ஸ்ரீ தாயார் சமாதிக்கட்டிடத்திற்கு அருகில் ஓடிக் கொண்டிருந்த ஓடையை, மலையடிவாரம் பக்கமாக ஓடும்படி திருப்பிவிட்டு, தற்சமயம் உள்ள ஆச்ரமத்திற்கு வடக்குப் புறமிருக்கும் கருங்கற் சுவரையும், பழம்பெரும் பக்தர் ராமசாமிப்பிள்ளை அவர்களின் உதவியுடன் தண்டபாணிஸ்வாமிகள் எழுப்பினர். நாராயணய்யரின் பக்திக்கோர் எடுத்துக் காட்டாக அது இன்றும் இருந்து வருகிறது.

நாராயணய்யர் தம் டாக்டர்தொழிலை பண வருவாய்க்கு என்றுமட்டும் பயன்படுத்தாமல், தமக்குக் கிடைத்த சேவையாகவே கருதி நடத்திவந்தார். நோயினால் வருந்தித் தம்மிடம் வரும் ஏழை, பணக்காரர் யாவராயினும் இரவு பகல் என்று பாராமல் உடனே சிகிச்சை அளிப்பார். தாமாக தமக்குள்ள கட்டணத்தைக் கேட்கமாட்டார். அவர்களாக மனமுவந்து கொடுப்பதை வாங்கிக் கொள்வார். தம் வைத்தியசாலையில் வரும் பணத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்கென்று சேமித்து வைத்திருந்தார். ஏழை நோயாளிகளுக்கு நோய்க்கு மருந்து மட்டும் சாப்பிடுவதில் பிரயோசனமில்லை; புஷ்டியுள்ள ஆகாரமும் மனவமைதியும் தேவை எனக் கூறி, அந்த சேமிப்பிலிருந்து உதவுவார். ஸம்ஸ்கிருதத்திலும், சங்கீதத்திலும் நல்ல தேர்ச்சி உண்டு. சாதுக்களிடம் மிக ஈடுபாடுடையவர்.

பத்தமடை சுந்தர ஸ்வாமிகளின் சீடரான நாராயண சிவம், நாராயணய்யர் வீட்டில், தம் கடைசிக் காலத்தில் தங்கியிருந்து, அவர் வீட்டிலேயே சமாதி அடைந்தார். ஸ்ரீ காஞ்சிப் பெரியவருக்கு ஒருசமயம் காலில் கட்டி ஏற்பட்டு சிரமமாக இருந்த போது, டாக்டர் ஐயர் அவர்கள் ஸ்நானம் செய்து ஆசாரமாகப் பட்டுடுத்தி பய பக்தியுடன் ஆபரேஷன் செய்து குணப்படுத்தினுர். நாராயணய்யரின் பேரன் ராமையா, சில மாதங்களுக்கு முன் ஸ்ரீ பெரியவாளேத் தரிசிக்கச் சென்ற போது ஸ்ரீ ஸ்வாமிகள் பல வருடங்களுக்கு முன் நடந்த அந்த சம்பவத்தை நினைவு கூர்ந்து ராமையாவிடம் சொன்னுர் களாம்.

பக்தி மார்க்கத்தில் இருந்தாலும், வைத்திய முறை களில் வல்லவர் டாக்டர். தாடைபூட்டு கழண்டு போய் வாய் மூட முடியாமல் வெகு அவதியுடன் ஒரு நோயாளி இவரிடம் சிகிச்சைக்கு வந்தான். ஆபரேஷன் செய்து கொள்ள வேண்டிய நிலையில் இருந்தான். ஐயர் அவன் வியாதி குறித்து விசாரித்துக் கொண்டே, திடீரென நெருப்புக் குச்சியை கிழித்து அவன் வாயருகில் கொண்டு போக, அந்த அதிர்ச்சியில் சட்டென்று அவன் வாய் மூடிக் கொண்டது. டாக்டரின் சமயோசித புத்தியால் ஆபரேஷன் இன்றிக் குணமடைந்தான்!

நாராயணய்யரின் இரு பெண்கள் கௌரியம்மாள், தங்கம்மாள், இருவரும் ஸ்ரீ பகவான் பக்தைகள். இருவரும் ஸ்ரீ ரமண நகரில் வீடுகள் கட்டிக் கொண்டு பல வருடங்கள் இருந்து வந்தனர். வீணை, பாட்டு முதலிய இசை வழிபாடு களுடன், ஸ்ரீ பகவான் அருளிய நூல்களுக்குக் கை யெழுத்துப் பிரதி எடுப்பது முதலிய கைங்கரியங்கள் செய்து வந்தனர். டாக்டர் நாராயணய்யரின் காலத்

திற்குப் பிறகு அவர் மனைவி செல்லம்மாளும் தம் பெண்களுடன் தங்கி இருந்து ஸ்ரீ பகவான் தரிசனம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார்.

தங்கம்மாளின் கணவர் ராஜகோபாலய்யர் ஸ்ரீ பகவானுக்குப் பணிசெய்யும் பாக்கியம் பெற்றவர். அவர்கள் பெண் சாரதாவை ஸ்ரீ ரமண பக்தர், புதுக்கோட்டை கி. லக்ஷ்மண சர்மாவின் மகனுக்கு மணம் செய்வித்தார்கள். கௌரியம்மாளின் மகன் ராமையாவுக்கு ஸ்ரீ பகவான் பக்தரான மனவாசி-சரணுகதி-ராமசாமி ஐயரின் பேத்தியைத் திருமணம் செய்து கொண்டார்கள். இப்படி யாவரும் ஸ்ரீ ரமணன் அடிமையாக வாழ்ந்த குடும்பம் இது. கௌரியம்மாளும், தங்கம்மாளும் சமீப காலத்தில் ஸ்ரீ பகவான் திருவடி சேர்ந்தனர். ராஜகோபாலய்யர் தம் கடைசி மகன் ரமணனுடன் ஹைதராபாத்தில் ஸ்ரீ ரமண ஸ்மரணையுடன் வாழ்ந்து வருகிருர்.

கௌரியம்மாள் பெண் சரோஜா, தனக்குக் குழந்தை வரம் கேட்டு ஸ்ரீ பகவான் சந்நிதியில் "தண்டையணி வெண்டயம்" என்னும் திருப்புகழ் பாடி, ஸ்ரீ பகவானருளால் கிடைத்த சிசுவை வயிற்றில் சுமந்து, தினம் ஸ்ரீ பகவான் அமர்ந்திருக்கும் ஹாலைப் பிரதக்ஷிணம் செய்து வந்தனள். பிரஸவத்திற்கு வேலூர் சென்று தங்கியிருந்து, அந்த சமயத்திற்கு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு மூன்று நாள் சிரமத்திற்குப் பிறகும் ஒன்றும் சரிப்படாததால், ஆபரேஷன் செய்துதான் குழந்தையை எடுக்க வேண்டுமென்றும், அப்பொழுதும் குழந்தை உயிருடன் இருப்பது துர்லபம் என்றும் டாக்டர்கள் கூறிவிட்டனர். வேலூரிலிருந்து ஆச்ரமத்திற்குத் தந்தி கொடுக்கப்பட்டது.

அந்தத் தந்தி ஸ்ரீ பகவான் பார்வைக்கு சுமார் 12 மணிக்கு வந்ததும் ஸ்ரீ பகவான், "நம்ம சரோஜா வுக்கா?" என்று ஆதுரத்துடன் கேட்டார்கள். அங்கு ஆஸ்பத்திரியில் இருந்தவர்களும், ஸ்ரீ பகவானே சரணுகதி என பிரார்த்திக்க, ஸ்ரீ பகவான் கருணையால் யாதொரு சிரமமுமின்றி ஆண் குழந்தை சுகமாகப் பிறந்தது. தற் சமயம் சரோஜா சென்னையில் தம் மகன் ரமண குமார் குடும்பத்துடன் இருந்து வருகிறார். ஸ்ரீ பகவான் தரிசனத் துக்கு இங்கு வந்து அடிக்கடி தங்கிச் செல்வதுண்டு. சரோஜாவின் மாமனுர் சிலோன் நாராயணய்யரும், அவர் மனைவி ஆனந்தம்மாளும் ஸ்ரீபகவான் பக்தர்களே. ஸ்ரீ தாயார் சந்நிதிக்கு சரவிளக்கு வாங்கி வைத் துள்ளார்கள்.

டாக்டர் நாராயணய்யரின் மனைவி செல்லம்மாளின் தங்கைகள் அலமேலு அம்மாள், கமலம்மாள். பால்ய விதவையான அலமேலு அம்மாள் ஸம்ஸ்கிருதம், இங்கிலீஷ், ஹிந்தி, மலையாளம், தெலுங்கு மற்றும் பல பாஷைகளிலும் நல்ல தேர்ச்சி பெற்று பொதுத்தொண்டு களில் ஈடுபட்டு வந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் சில காலம் எழுத்துப் பணியும் செய்தார். பிறகு ஸர். சி. வி. ராமன் அனுதை ஆச்ரமத்தின் தலைவி பொறுப்பேற்று நடத்தி வந்தார். கடைசியில் ஸ்ரீ பகவானிடம் அடைக் கலமாக வந்து சேர்ந்தார். ஆச்ரமத்திலும் நிறைய எழுத்துப் பணிகள் செய்தார்.

ஸ்ரீ பகவான் அருளிய ஏகாத்ம பஞ்சகத்தை மலை யாள மொழியில், அதே வெண்பா வடிவில் மொழிபெயர்த் தார். அவர் தன்னலமற்ற உழைப்பாளி, நல்ல அறி வுடையவர். சர்வமும் ரமணனே என்னும் எண்ணத்தில் வாழ்ந்து வந்தார்.

முடிவில் ஒரு நாள் மார்கழி மாதத்தின் கடைசி நாளாகிய போகியன்று மாலே, ஆச்ரமத்தில் நிறைய மாக்கோலங்கள் போட்டு அலங்கரித்து விட்டு வீடு திரும்பினர். வீடு திரும்பியதும் சாப்பிட்டுப் படுத்தவர், சில மணி நேரத்தில் தனக்கு முடிவு நெருங்குவதை உணர்ந்தார். உடனே எழுந்து திருநீறு பூசிக் கொண்டு தரையில் படுத்துக் கண் மூடி "நாராயணு! ரமணு!" என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே மூச்சு அடங்கி விட்டது.

பூரணமான பக்திக்கோர் எடுத்துக் காட்டாக வாழ்ந்து மறைந்தார். அவர் தம் சிறுகுடிலேயும் ஆச்ரமத்திற்கே அர்ப்பணித்துள்ளார். அலமேலுஅம்மாளின் தங்கை கமலம்மாள் பரமசாது. சுமாரான படிப்பு. ஆச்ரமத்தில் தீபம் ஏற்றுவது, பூஜைப் பாத்திரங்களேத் துலக்கிச் சுத்தம் செய்வது முதலிய பணிகளேச் செய்து வந்தார். தற்சமயம் தம் 78ஆவது வயதில், தம் காரியங்களேத் தாமே செய்து கொண்டு ஸ்ரீ ரமண நகர் வாசியாக ஸ்ரீ பகவான் நினேவில் அமைதியாக வாழ்ந்து வருகிருர்.

52. அன்னமளித்த அன்னேயர்கள்

ஸ்ரீ பகவான் விருபாக்ஷியில் இருக்கும் போதே 1907 முதல் ஸ்ரீ பகவானுக்கு அன்னமளிக்கும் பாக்கியம் பெற்றவர், மண்டகுளத்தூர் லக்ஷ்மியம்மாள் என்னும் எச்சம்மாளாகும். ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்திலும், பிறகு தற்போதுள்ள ஆச்ரமத்திற்கு வந்த பிறகும் தொடர்ந்து அன்ன கைங்கரியம் செய்யும் பெரும் பேறு பெற்றவராகும். ஸ்கந்தாச்ரமத்தில் ஸ்ரீ அன்னேயாருக்கு ஆசாரமான வேலேகளில் உதவியாக இருப்பார். எச்சம்மாளின் தங்கை வேணு அம்மாளும் ஸ்கந்தாச்ரமத்திலிருந்தே தமது தமக்கையுடன் இருந்து கொண்டு ஸ்ரீ பகவானுக்கு

பிக்ஷை செய்விப்பதில் உறுதுணையாக இருந்து வந்தார். எச்சம்மாள் 38 ஆண்டுகள் அன்ன கைங்கரியம் செய்து, ஸ்ரீ பகவானே யாவும் எனும் சிந்தனையிலேயே வாழ்ந்து 1945 ம் ஆண்டு ஸ்ரீ பகவானடி சேர்ந்தார். அவர் தங்கை வேணு அம்மாள், ஸ்ரீ பகவான் மஹாசமாதிக்குப் பிறகு சில ஆண்டுகள் கழித்து காலமானார்.

காரைக்காலைச் சேர்ந்தவர் அலங்காரத்தண்ணி எனும் முதலியார் பாட்டியும், அவர் மகன் சுப்பிரமணிய தம்பிரானும், மருமகள் காமாக்ஷியம்மாளும் 1909ம் ஆண்டுமுதல் விருபாக்ஷியிலிருந்தே ஸ்ரீ பகவானுக்கு அன்ன கைங்கரியம் செய்த புண்ணியசாலிகளாகும். ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்திலிருந்த போதும், பிறகு ஸ்ரீ அன்னையார் சமாதி கட்டிடத்தில் நிரந்தரமாகத் தங்கிய பிறகும் தொடர்ந்து பிக்ஷை செய்வித்து வந்தார்கள். மத்தியில் காமாக்ஷியம்மாள் காலமான பிறகும், பாட்டி தன் தள்ளாத காலத்தில், கண் தெரியாத நிலையிலும், சிரமங்கள் பல ஏற்பட்டும் மனம் தளராமல், பிறர் உதவியைக் கொண்டு கருமமே கண்ணாக திட வைராக்கியத்துடன் தன் கைங்கரியத்தை தொடர்ந்து 40 ஆண்டுகள் செய்து வந்து 1949 ல் ஸ்ரீ பகவான்திருவடியடைந்தார்கள். சுப்பிரமணிய தம்பிரான் சில ஆண்டுகள் கழித்து 1953 ல் சமாதியடைந்தார்.

திருவண்ணாமலை டவுனில் செட்டித் தெருவில் இருந்தவர் கண்ணம்மாள். பண வசதியும், தாராள மனப்பான்மையும் படைத்தவர். தினம் இரண்டு பெரிய பாத்திரங்களில் ஒன்றில் நிறைய சாம்பார் சாதமும், மற்றதில் நிறைய தயிர் சாதமும் வைத்துக் கொண்டு பெரிய அன்னவெட்டியால், தம் கையாலேயே எடுத்து சாதுக்கள் பலருக்கும் போடுவார். இதை நித்திய கடமையாக நடத்தி வந்தார். ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்தில் இருந்த

காலம் வரை கண்ணம்மாளும் அன்ன தொண்டு செய்து வந்தார். தினம் பத்து பேர் சாப்பிடக் கூடிய அளவுக்கு நிறைய ஆகாரம் அனுப்பி வைப்பார். ஸ்ரீ துர்காம்பாள் கோயில் திருப்பணிக்கும், கும்பாபிஷேகத்திற்கும் நிறைய பொருளுதவி செய்துள்ளார். ஸ்ரீ பகவானுக்கு பல வருடங்கள் அன்னமளிக்கும் பாக்கியம் பெற்ற கண்ணம்மாள் நல்ல தர்ம சிந்தை நிறைந்தவர்.

53. தன்னலமற்ற சமையற் தொண்டு

இப்பொழுதுள்ள ஆச்ரம ஆரம்பக்காலத்தில் நிரந்தரமாகத் தங்கியிருந்தவர்கள் சில அன்பர்களே. அச்சமயம் ராமநாதபுரம் சாந்தம்மாளும், திருமங்கலம் தேனம்மாளும் சமையற்கட்டு கைங்கரியத்தை செய்து வந்தனர். அவர்களுக்கு உதவியாக திருச்சுழி லக்ஷ்மியம்மாள் சில சமயங்களில் கைங்கரியங்களில் கலந்து கொள்வார்கள். பிறகு பாட்டாக்குறிச்சி லோகம்மாளும், வத்ராயிருப்பு சம்பூரணத்தம்மாளும், கடைசியாக நெல்லூர் சுப்புலக்ஷ்மியம்மாளும், சிவகங்கை சங்கரம்மாளும் சமயற் கைங்கரியத்தை செய்து வந்தனர். விசேஷ நாட்களிலும், மற்ற சமயங்களிலும் சமையலிலும், பந்தி பரிமாறுவதிலும் இவர்களுக்கெல்லாம் உதவியாக இருந்தவர்கள் போளூர் சீனிவாசய்யர், கடலூர் மத்வராவ், நடேசய்யர், மற்றும் சில அன்பர்களாகும். பாகசாலை கட்டும் வரை மேற்கண்டவர்களே கைங்கரியம் செய்து வந்தனர். 1938ம் ஆண்டு பாகசாலையும், போஜனசாலையும் கட்டி, சமையல் விரிவடைந்த பிறகு முதன்முதலாக ரங்கராவ் மற்றவர்கள் உதவியுடன் சமையல் வேலை ஏற்று 1950 ஆம் வருடம் ஸ்ரீ பகவான் மஹா சமாதி அடையும் வரை தொண்டு செய்து வந்தார். மேற்படி யாவரும் பிரதி பலனாக சம்பளமோ, மற்றவைகளோ எதிர்பார்க்காமல் ஸ்ரீ பகவத்

கைங்கரியமாகவே செய்து வந்த, தன்னலமற்ற புண்ணிய சாலிகள். தற்சமயம் லோகம்மாள், சம்பூரணத்தம்மாள், நடேசய்யர் ஆகிய மூவரும் ஸ்ரீ பகவான் தரிசனம் செய்து கொண்டு இருந்து வருகிறார்கள்.

ஆச்ரமத்தில் 1938 ஆம் ஆண்டு போஸ்டாபீஸ் ஆரம்பித்தக் காலத்திலிருந்து போஸ்ட் மாஸ்டராகப் பணி புரிந்து வந்தவர், ராஜா சுப்ரமண்ய ஐயர் எனும் "ராஜா ஐயர்" ஆகும். இவர் சமயற் கட்டுத் தொண்டும் செய்து வந்தார். விடியற்காலை மூன்று மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்து, காலை டிபனாகிய இட்டிலியை 6 மணிக்குள்ளாக செய்து முடித்து விட்டு பிறகு தபாலாபீஸ் வேலையையும் கவனித்துக் கொள்வார். ஸ்ரீ ரமணாச்ரமம் போஸ்டாபீஸ் விரிவடைந்து தனிப்பட்ட முறையில் இயங்க ஆரம்பித்தது முதல் சுமார் 3 வருடங்களாக சமையற்கட்டு கைங்கரியம், தபாலாபீஸ் வேலை இரண்டிலிருந்தும் ஓய்வு பெற்று தம் 83 ஆம் வயதில் ஆச்ரமவாசியாக அமைதியாக இருந்து வருகிறார்.

ராமநாதபுரம் பிரகதாம்பாள் அம்மாள் பல வருடங்களுக்கு முன்பிருந்தே அடிக்கடி ஆச்ரமம் வந்து தங்கியிருந்து ஸ்ரீ பகவான் தரிசனம் செய்து வந்தவர். தற்போது ஆச்ரமக் கோயில் பூஜைக்கு உதவியாக தீபம் போடுதல் முதலிய பணிகள் செய்து கொண்டு, சமையற் கட்டிலும் உதவியாக சில கைங்கரியம் செய்து கொண்டு இருந்து வருகிறார். இவர் ஸ்ரீ முருகனாருக்கு கடைசி வரையில் தொண்டு செய்தவர். அன்னாரது பாக்கள் பலவும் இவருக்கு நன்கு பயிற்சி. சுமார் 30 வருடங்களாக ஆச்ரமவாசியாக இருந்து வந்தவர் கொங்கு நாட்டைச் சேர்ந்த குமாரஸ்வாமியாகும். இவர் புஷ்பமெடுத்து கட்டும் கைங்கரியமும், உக்கிராண அறை பொறுப்பும் பார்த்து

வந்தவர். மற்றும் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர்கள் வடிவுடையார் ஸ்வாமி, பழனிசாமி செட்டியார், ராமசாமி யாகும். இவர்களும் சுமார் 35 ஆண்டுகளாக ஆச்ரம பணி செய்து வருபவர்களாகும். வடிவுடையார்ஸ்வாமி நீண்ட வருடங்களாக ஆச்ரம நந்தவனத்தில் புஷ்பமெடுத்து மாலைகட்டும் கைங்கரியம் செய்து வந்தவர், தற்சமயம் அன்பர்கள் தங்கும் விடுதியை கவனித்துக் கொண்டு ஸ்ரீ பகவான் தரிசனம் செய்து கொண்டு அமைதியாக இருந்து வருகிறார். பழனிசாமி செட்டியார் பல ஆண்டு களாக ஆச்ரம வெளி காரியங்களை திறமையுடன் செய்து வந்தவர் தற்போது புஷ்பம் கட்டும் கைங்கரியம் செய்து வருகிறார். ராமஸ்வாமி, ஆச்ரமப் பொறுப்பில் உள்ள ஸ்கந்தாச்ரம காவல் பொறுப்பேற்று செவ்வனே கவனித்து வருகிறார். தெள்ளார் புஷ்பம்மாளும் சில வருடங்களாக புஷ்பம் கட்டும் பணி செய்து வருகிறார்.

54. பணிவிடை பாக்யசாலிகள்

பாலக்காடு அருகிலுள்ள வடவனூரைச் சேர்ந்தவர் பழனிஸ்வாமி. ஸ்ரீ பகவான் குருமூர்த்தத்திலிருந்த காலத்திலிருந்து, பிறகு விருபாக்ஷியில் இருந்தவரை பல ஆண்டுகள் ஸ்ரீ பகவானுக்கு பணிவிடை செய்யும் பாக்யம் பெற்றவர். முதன் முதலாக ஸ்ரீ பகவான் திருமேனியைத் தொட்டு, தாயினும் சாலப்பரிந்து, தந்தையின் பாசத்துடன் கண்ணெனக்காத்து கைங்கரியம் செய்து வந்த உத்தம ராகும். ஸ்ரீ பகவானைவிட 20 வயது மூத்தவராகும். இப்புத்தகத்தின் முதற்பகுதியில் "பழனிஸ்வாமியின் பரிவு" எனும் தொகுப்பில் இவரைக் குறித்து விரிவாக அறியலாம். கேரளாவைச் சேர்ந்த அய்யாஸ்வாமி மிக இளம் வயதில் மலேயாவில் ஓர் ஆங்கிலேயருக்கு உதவி யாக இருந்தவர், தம் 25 வயதிலேயே ஸ்ரீ பகவானை குறித்து

அறிந்து சரணுகதியாக இங்கு வந்து, பழனிஸ்வாமியின் அனுமதி பெற்று விருபாக்ஷியிலிருந்து, ஸ்கந்தாச்ரம ஆரம்பக்காலம் வரை சுமார் 5 வருடங்கள் ஸ்ரீ பகவானுக்கு பணிவிடை செய்யும் பேறு பெற்ருர். ஆங்கிலேயரிடத்தில் வேலே பார்த்தவராதலால் அவர் செய்யும் எந்த காரியமும் ஒழுங்காக, சுத்தமாக இருக்கும். நேரத்தை வீணுக்காமல் ஏதாவது காரியங்கள் செய்து கொண்டிருப்பார். ஸ்ரீ பகவான் உபயோகித்து வந்து, தற்சமயம் ஸ்ரீ பகவான் மஹா நிர்வாண அறையில் ஞாபகார்த்தமாக வைக்கப்பட்டிருக்கும் கமண்டலமும், திருவோடும் அய்யாஸ்வாமி செய்தவைகளாகும். மற்றும் பலருக்கும் கமண்டலம், திருவோடு, கைத்தடி முதலியவைகளும் தயாரித்துக் கொடுத்துள்ளார். கைத்தடி செய்ய கழிகளே அளவாகத் தரித்துக் கொண்டு, மேல் பட்டை போக கத்தியினுல் செதுக்கி, முள் அரத்தினுல் மேடு பள்ளங்களே தேய்த்து சமபடுத்தி பிறகு பேஞ கத்தியினுல் சீவி, மேலும் உப்புத் தாளினுல் தேய்த்து அதன் பின் மிக சொர சொரப்பான குட்டிபுரா எனும் இலேயினுல் தேய்த்த பிறகு சிறிது எண்ணே தடவி கம்பளித் துணியினுல் நன்கு தேய்க்க, முகம் தெரியும்படி மெருகேறி பளபளக்கும். சற்றும் சலிப்பின்றி இவ்வாறு கைத்தடி தயாரித்து ஸ்ரீ பகவானுக்கும், மற்றவர்களுக்கும் கொடுப்பார். பின்னுல் ஸ்ரீ பகவான் எங்களேயும் இதே முறையில் செய்யும்படி சொல்லிக் கொடுத்து நாங்களும் செய்திருக்கிருேம். வில்வப்பழங்களில் துளே செய்து உள்ளிருப்பவைகளே குடைந்தெடுத்து சுத்தம் செய்து, அதன் துளேகளே அடைக்க சிறு மரத் துண்டுகளே சீவி, அவ்வில்வக் குடுக்கைகளில் விபூதி, குங்குமம் போட்டு உபயோகிக்கக் கொடுப்பார். பெரிய தேங்காயின் ஓடுகளே ஊரவைத்து வழு வழுப்பாகத் தேய்த்து கிண்ணங்கள் போல் ரசம், மோர் அருந்த எல்லோருக்கும் தருவார். அவருடைய ஒவ்வொரு காரி

யத்தையும் மிக சிலாகித்து ஸ்ரீ பகவான் எங்களுக்கு சொல்வார்கள்.

அவருக்குப் பிறகு ஸ்கந்தாச்ரமத்தில் ஆரணி அண்ணுமலேஸ்வாமி ஸ்ரீ பகவானுக்கு இரண்டு வருடங்கள் கைங்கரியம் செய்தார். 1919 ஆம் ஆண்டு ஜனவரியில் அவர் பிளேக் நோயினுல் காலமான அன்றுதான் இவ் வெளியேன் ஸ்ரீ பகவானே முதன் முறையாக தரிசிக்கும் பாக்யமும், அண்ணுமலே ஸ்வாமி இருந்த இடத்தில் இருந்து, ஸ்ரீ பகவானுக்கு சுமார் 15 வருடங்கள் பணிவிடை செய்யும் தவப்பேறும் பெற்ற நன்னுளாகும். இவ்வடியேன் ஸ்ரீ பகவானுக்குத் தொண்டு செய்யும் காலத்தில் நான் இல்லாத சமயங்களில் ராமகிருஷ்ணஸ்வாமி, ஸ்ரீ பகவான் கைங்கரியத்தை செய்து வந்தார். மற்ற நேரங்களில் ஆச்ரம வெளிவிவகாரங்களே கவனித்துக் கொள்வார். நாங்கள் பணி செய்யும் காலத்தில் ஸ்ரீ பகவான் திடமாக, ஆரோக்கியமாக இருந்தார்கள். ஆகையால் யாரேனும் ஒருவரே போதுமானதாக இருந்தது. எங்களுக்குப் பிறகு மாதவ ஸ்வாமியும், பிற்காலத்தில் ஸ்ரீ பகவான் தேக நிலேயில் அசெளக்யமும், தளர்வும் ஏற்பட்டபோது மாதவஸ்வாமியுடன் கிருஷ்ணஸ்வாமி, ரங்கஸ்வாமி, சிவானந்தர் முதலியவர்கள் சேர்ந்து மாற்றி மாற்றி கைங் கரியம் செய்து வந்தனர். மாதவ ஸ்வாமிக்குப் பிறகு சத்தியானந்த ஸ்வாமியும் கைங்கரியம் செய்து வந்தார். கடைசி நாளில் ஸ்ரீ பகவான் கைங்கரியத்தில் பங்கேற்றவர் கள் டாக்டர் சீனிவாசராவ், டாக்டர் அனந்தநாராயண ராவ், T. P. ராமசந்திரஅய்யர், ஆந்திராவை சேர்ந்த வெங்கட்ரத்தினம் முதலியவர்கள் ஆகும். பழனிஸ்வாமி, அய்யாஸ்வாமி, அடியேனுகிய குஞ்சுஸ்வாமி, ராம கிருஷ்ணஸ்வாமி, மாதவஸ்வாமி, சத்தியானந்தஸ்வாமி ஆகிய ஆறு பேரும் மலேயாளிகள் என்பதை பெருமை யுடன் குறிப்பிடுகிறேன்.

55. புத்தகாலய கைங்கரியம்

சுமார் 1925ல் முதன் முதல் புத்தகாலயத்தில் தொண்டு செய்தவர் சோமசுந்தர ஸ்வாமிகளாகும். வேதாந்தம் படித்தவர். தேவார, திருவாசகத்தில் மிக ஈடுபாடு உண்டு. ஒருமுறை தம் நோட்டு புத்தகத்தில் ஸ்ரீ பகவான் கைபட ஏதாவது ஓரெழுத்தாவது எழுதித் தர வேண்டுமென ஸ்ரீ பகவானிடம் கேட்க, ஸ்ரீ பகவான் வழக்கம் போல் மௌனமாக இருந்தார்கள். அவர் தம் நோட்டு புத்தகத்தை ஸ்ரீ பகவான் அருகிலிருந்த புத்தக ஷெல்பில் வைத்துவிட்டு போய் விட்டார். சற்று நேரம் சென்று ஸ்ரீ பகவான் அதில் "ஓரெழுத்தென்றும் தானுய் உள்ளத்தொளிர்வதால், யார் எழுதவல்லார் அதை" என்று எழுதி வைத்தார்கள். சோமசுந்தர ஸ்வாமிகளும் அதைக் கண்டு மகிழ்ச்சியுற்ருர். அவருக்குப் பிறகு கல்யாண சுந்தரமய்யர் கவனித்து வந்தார். அடுத்து அச்சரபாக்கம் சிவராம ரெட்டியார் சுமார் 20 ஆண்டுகள் புத்தகாலய பணியை திறம்பட கவனித்து வந்தார். அவருடன் கல்கத்தா K. R. ராமநாதய்யரும் கைங்கரியம் செய்து வந்தார். அதன்பின் சிலகாலம் நரஸய்யாவும், சமீபத்தில் விஜய சைதன்யரும் பணி செய்தனர். தற் சமயம் பெங்களூர் S. தியாகராஜன் புத்தகாலய பணி யேற்று திறம்பட நடத்தி வருகிருர். அவருடன் ரிடையர்ட் போஸ்ட்மாஸ்டர் அக்ஷயலிங்கம்பிள்ளை அவர்களும் சகாய மாக இருந்து வருகிருர்.

56. காரியாலய கைங்கரியம்

ஸ்ரீ நிரஞ்சனுனந்த ஸ்வாமிகளின் ஆச்ரம நிர்வாகத் தில் உறுதுணையாக காரியாலயத்தில் கைங்கரியம் செய்த வர்கள் காக்கிநாடா சேஷுவய்யர், ஸ்ரீ வைகுண்டம்

வெங்கட்ராமய்யர், முக்கியமாக (நெல்லூர் வக்கீல்) மௌனி சீனிவாசராவ். மற்றும் T. K. சுந்தரேசய்யர், T. G. சாமி நாதய்யர், K. நீலகண்டய்யர், ராஜகோபாலய்யர், G. சந்தானமய்யங்கார், R. ஸ்ரீராமய்யர் முதலியவர் களாகும். ஆச்ரம கமிட்டி மெம்பர்களாக B. S சீனிவாச கோபாலய்யங்கார், பேராசிரியர் T. K. துரைசாமி ஐயர், டாக்டர் T. N. கிருஷ்ணஸ்வாமி, வெங்கடாசலபதி செட்டியார், N. அண்ணுமலை பிள்ளை, G. சாம்பசிவராவ் ஆகியவர்கள் செயல் புரிந்து வந்தனர். ஸ்ரீ பகவானின் பொன் விழா நல்ல முறையில் நடைபெறவும், பொன் விழா மலர் சிறப்பாக வெளிவரவும் உதவியவர் மௌனி சீனிவாசராவ் ஆகும்.

ஸ்ரீ நிரஞ்சனுனந்த ஸ்வாமிகளுக்குப் பிறகு 1953ல் ஆச்ரம தலைவர் பொறுப்பேற்று நடத்தி வரும் திரு. T. N. வெங்கட்ராமன் அவர்களுக்கு உதவியாக இருந்த வர்கள் நெல்லூர் வக்கீல் G. சாம்பசிவராவும், செல்லமய்யரு மாகும். ஆச்ரம வரவு, செலவு கணக்குகளை அவ்வப் பொழுது பதிந்து தொண்டு செய்து வந்தவர் கடலூர் C. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள். தற்போது காரி யாலயத்தில் பணி புரித்து வருபவர்கள் L. P. கோபிகர், K. நடேசய்யர், S. L. நரஸய்யா, M. S. நாகராஜய்யர் முதலியவர்களாகும். S. S. V. S. முத்தைய்ய செட்டியார், வக்கீல் P. தாண்டவராயன், P. S. வைகுந்தவாசர் ஆகியவர்கள் ஆச்ரம நிர்வாகக் குழுவின் உறுப்பினர் களாக பணியாற்றி வருகிறுர்கள்.

திரு. சகன்லால் யோகி அவர்கள் பெங்களூரில் அச்சுக் கூடம் ஒன்று அமைத்து, ஸ்ரீ பகவான் நூல்களை குஜராத்தி யிலும், வேறு மொழிகளிலும் அச்சிட்டு வெளியிடும் பணியை மேற்கொண்டிருந்தார்.

57. ஸ்ரீ பகவான் சரித்திர ஆசிரியர்கள்

ஆங்கிலம் :

முதன்முதலாக பல அன்பர்களிடமும், ஸ்ரீ பகவானை விவரங்கள் கேட்டும் ஆங்கிலத்தில் 1931 ல் சரித்திரம் எழுதியவர் (சேலம் வக்கீல்) B. V. நரசிம்ம ஸ்வாமி களாகும். இவர் புத்தகத்தை படித்த மேல்நாட்டு அன்பர் கள் பலர் அன்றும், இன்றும் ஸ்ரீ பகவானை நாடி வந்து ஆன்ம லாபம் பெறுகின்றனர். பால்பிரண்டனின், "சர்ச் இன் சீக்ரட் இந்தியா" எனும் ஆங்கில நூலில் மூன்று அத்தியாயங்களாக ஸ்ரீ பகவானைக் குறித்து வெளி வந்துள்ளது. அவர் எழுதிய இப்புத்தகம் ஸ்ரீ பகவானை உலகம் பூராவும் அறிய உதவியது. "சண்டே டைம்ஸ்" ஆசிரியர் M. S. காமத் என்பவர் 117 படங்களுடன் எழுதிய "ஸ்ரீ மஹரிஷி" என்ற சரித்திர சுருக்கம் மிகமிக ஆவலுடன் எல்லோராலும் வரவேற்கப்படவே, இதை தமிழ், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், குஜராத்தி ஆகிய மொழிகளிலும் வெளியிடப்பட்டது. மற்றும் ஆர்தர் ஆஸ்பர்ன் எழுதிய "ரமண மஹரிஷி அண்டு தி பாத் ஆப் செல்வ் நாலட்ச்" என்ற நூல் இங்கி லாந்தில் பிரசுரிக்கப்பட்டு, ஸ்ரீ பகவானின் பிரசித்தமான சரித்திரமாக இன்றும் விளங்குகிறது.

தமிழ் :

சுவாமி சுத்தானந்த பாரதியார் 1934 ல் ஸ்ரீ பகவான் சரித்திரத்தை ரஸமான உரைநடையில் தமிழில் விரிவாக "ஸ்ரீ ரமண விஜயம்" என உருவாக்கியுள்ளார். வக்கீல் M. G. ஷண்முகம் "ஸ்ரீ பகவான் சரித்திரமும், உபதேசங் களும்" என்ற பெயரில் எழுதினர்.

தெலுங்கு :

"ஸ்ரீ ரமணலீலா" எனும் பெயரில் கிருஷ்ணபிக்ஷு அவர்கள் தெலுங்கில் எழுதியுள்ளார்.

ஹிந்தி :

மேற்படி கிருஷ்ணபிஷுவின் சகோதரர், ஒருகண்டி வெங்கடேச சர்மா "ஸ்ரீ ரமண சரிதாமிருத்" என ஹிந்தியில் எழுதினர்.

மலையாளம் :

மலையாள சரிதம் "ஸ்ரீ ரமண மஹரிஷி" என்று எழுதியவர் எக்கணத்து அப்புண்ணி அவர்களாகும்.

கன்னடம் :

ஸ்வாமி பிரணவானந்தா "பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி" என்று எழுதியிருக்கிருர். ஸ்ரீ பகவானின் பல நூல்களையும் இவர் சிரத்தயுடன் கன்னடத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

குஜராத்தி :

ஸ்வாமி மாதவானந்த தீர்த்தா "ஸ்ரீ ரமண சரிதாம்ருத்" எனும் பெயரில் எழுதியுள்ளார்.

ஸ்ரீ பகவான் உபதேசங்கள் யாவையும் குஜராத்தி மொழியில் எழுதி, குஜராத்திலும், முக்கியமாக ஆப்ரிகா கண்டத்திலும் பரப்பியவர் ஸ்ரீ ரமணுனந்த ஸரஸ்வதி எனும், நன்கு கற்று தெளிந்த குஜராத்தி சந்நியாசியாகும்.

58. ஸ்ரீபகவான் நூல், மொழி பெயர்ப்பு, உரை, ஸ்தோத்திரங்கள்.

சத்தியமங்கலம் வெங்கட்ராமய்யர்

ஸ்ரீ பகவான் பேரில் முதன்முதலாக ஸ்தோத்திரமாக "ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம்" எனும் பெயரில் எழுதியிருக்கிறார்.

காவ்ய கண்ட கணபதி முனிவர்

கணபதி முனிவர் தானும், மற்றும் பல அன்பர்களும் அவ்வப்பொழுது கேட்ட சந்தேகங்களுக்கு ஸ்ரீ பகவான் அளித்த அமுத வாக்குகளை தொகுத்து ஸம்ஸ்கிருத ஸ்லோகங்களாக "ஸ்ரீ ரமண கீதை" எனும் பெயரில் எழுதினார். ஸ்ரீ பகவான் எழுதிய "உள்ளது நாற்பதை" "ஸத்தர்ஸனம்" என்னும் பெயரில் அவைகளையும் ஸம்ஸ்கிருத ஸ்லோகங்களாக எழுதியுள்ளார். ஸ்ரீ பகவான் சந்நிதியில் தினசரி நடக்கும் வேதபாராயணத்துடன், கணபதி முனிவர் எழுதிய "ஸ்ரீ ரமண சத்வாரிம்ஸத்" எனும் ஸ்தோத்திரம், அன்றிலிருந்து இன்றும் சொல்லப் பட்டு வருகிறது. இவர் எழுதிய "ஸ்ரீ ரமண கீதை" "ஸத்தர்ஸனம்" இரண்டிற்கும் ஸம்ஸ்கிருத மேதை T. V. கபாலி சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருதத்தில் விரிவுரை எழுதியிருக்கிறார். மேற்படி ஸம்ஸ்கிருத விரிவுரைகளை, 'ரமண பாத சேகரன்' விஸ்வநாத ஸ்வாமிகள் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

சிவப்பிரகாசம் பிள்ளை

ஸ்ரீ பகவானிடம் அவ்வப்பொழுது தாம் கேட்ட சந்தேக விளக்கங்களை, முதன் முதலாக "நானார்" எனும் நூலாக எழுதினார். அதன்றி ஸ்தோத்திரங்களாக,

ஸ்ரீ ரமண சற்குரு மாலை, ரமணதேவமாலை, விண்ணப்பம், ரமண சரித அகவல், ரமண பாதமாலை, ஆகியவைகளும் எழுதி யிருக்கிறார். தேவிகா லோத்ரம், சர்வஞானோத்ரம் எனும் ஸம்ஸ்கிருத நூல்களை, ஸ்ரீ பகவான் தமிழில் மொழி பெயர்த்து எழுதிய வெண்பாக்களுக்கு, பதவுரை எழுதி யுள்ளார்.

சாது நடனானந்தர்

ஸ்ரீ பகவான் அருளிய நூல்களாகிய உள்ளது நாற்பது, அருணாசல அக்ஷரமண மாலை, அருணாசல ஸ்துதி பஞ்சகம், ஆத்ம வித்தை, அப்பளப் பாட்டு, ஏகாத்ம பஞ்சகம் ஆகியவைகளுக்கு உரை எழுதியுள்ளார். மற்றும் ஸ்ரீ ரமண ஸ்துதிகள், ஸ்ரீ ரமண தர்சனம், 108 அதி கரணங்கள் கொண்ட உபதேச ரத்னாவளி முதலியவை களும் எழுதி இருக்கிறார்.

கி. லக்ஷ்மண சர்மா ("யார்")

ஸ்ரீ பகவான் நூல்களாகிய "உள்ளது நாற்பதுக்கு" விரிவுரையும், ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை, நவ மணிமாலை, அஷ்டகம் ஆகிய மூன்றுக்கும் பதவுரையும் எழுதியுள்ளார். ஸ்ரீ பகவான் உபதேசங்களை "மஹா யோகா" எனும் பெயரில் ஆங்கிலத்திலும், முருகனார் ஸ்வாமிகளின் குருவாசகக் கோவையிலிருந்து 100 பாட்டு களை "குரு வசன மாலை" என வசன நடையிலும் எழுதி யுள்ளார்.

ஸ்வாமி ரமணானந்த ஸரஸ்வதி

முனகால வெங்கட்ராமய்யர் எனும் ரமணானந்த ஸரஸ்வதி, அந்த நாளில் பல பக்தர்கள் ஸ்ரீ பகவானிடம் ஆன்மீகமாகக் கேட்ட கேள்விகளையும், அதற்கு

ஸ்ரீ பகவான் அளித்த விடைகளையும் தொகுத்து, ஆங்கிலத்தில் "டாக்ஸ்" என்ற பேரில் 644 பக்கங்கள் கொண்ட புத்தகமாக எழுதியிருக்கிறார். மேற்படி ஆங்கில நூலை "ஸ்ரீ ரமண வசனாம்ருதம்" என்று இரண்டு பாகங்களாக விஸ்வநாத ஸ்வாமிகள் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். மற்றும் ரமணானந்த ஸரஸ்வதி, கைவல்ய நவநீதம், வேதாந்த சூடாமணி, திரிபுரா ரகஸ்யம் ஆகிய தமிழ் வேதாந்த நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதியிருக்கிறார். மற்றும் அருணாசல மகாத்மியம், ஒழிவிலொடுக்கம், எல்லாம் ஒன்றே முதலிய தமிழ் நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

A. தேவராஜ முதலியார்

"ரமண சேய்" எனும் இவர் ஸ்ரீ பகவான் அருள் மொழிகளைத் தொகுத்து ஆங்கிலத்தில் "டே பை டே" என்ற போற்றத்தகு புத்தகம் எழுதியுள்ளார்.

முகவை கண்ண முருகனார்

ஸ்ரீ பகவான் பேரில் 1851 தோத்திர பாடல்கள் கொண்ட "ஸ்ரீ ரமண சந்நிதி முறை" எழுதியுள்ளார். ஸ்ரீ பகவான் உபதேசங்களைத் திரட்டி 1254 பாடல்களாக "குருவாசகக்கோவை"யும், ஸ்ரீ ரமண தேவமாலை முதலியவைகளும், ஸ்ரீ ரமணானுபூதி இரண்டு பாகங்களும் எழுதி இருக்கிறார். மேலும் அவர் எழுதிய "ஸ்ரீரமண ஞான போதம்" எனும் நூல் அச்சிடப்பட்டு வருகிறது.

சூரி நாகம்மாள்

பெஜவாடா சூரி நாகம்மாள் 1945 முதல் 1950 வரை ஸ்ரீ பகவான் சந்நிதியில் நிகழ்ந்தவைகளையும், அன்பர்களின் சந்தேகங்களுக்கு அவ்வப்பொழுது ஸ்ரீ பகவான்

அருளிய மொழிகளையும் எளிய முறையில் தொகுத்து தெலுங்கில் "லேகலு" எனும் 725 பக்கங்கள் கொண்ட புத்தகமாக எழுதியுள்ளார். அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆச்ரம பிரசுரமாக வெளி வந்துள்ளது.

59. வேத பாராயணமும், பாடசாலையும்

சுமார் 1935 லிருந்து ஸ்ரீ பகவான் சந்நிதியில் வேத பாராயணம் நடந்து வருகிறது. ஊருக்குள்ளிருந்து, வைதீகர்களான ராஜு சாஸ்த்ரிகள், வைத்திநாத சாஸ்த்ரிகள், பஞ்சு சாஸ்த்திரிகள் மற்றும் சிலரும், ஆச்ரமம் வந்து விடியற் காலை 5 மணிக்கு ஸ்ரீ பகவான் சந்நிதியில் உபநிஷத் பாராயணமும், மாலை 5 மணிக்கு ருத்ர சமகம், புருஷஸூக்த பாராயணமும், ஸ்ரீ பகவான் அருளிய ஸம்ஸ்கிருத உபதேசசாரமும் பாராயணம் செய்வார்கள். பிறகு ஆச்ரமத்தில் 1938ல் ஸ்ரீ யஜுர் வேத பாடசாலை ஆரம்பித்த பிறகு, அதன் ஆசிரியராகிய கிருஷ்ண சாஸ்த்ரிகளுடன், வேத பாடசாலை மாணவர் களும் சேர்ந்து நித்ய வேதபாராயணம் செய்வது வழக்க மாகியது. அது இன்றும் தொடர்ந்து நடந்து வருகிறது. வேத பாடசாலை ஆரம்ப காலத்திலிருந்து, அதன் ஆசிரிய ராக 1978ம் ஆண்டு வரை பணிபுரிந்து வந்த கிருஷ்ண சாஸ்த்ரிகள் தற்சமயம் தம் பிள்ளைகளுடன் பெங்களூரில் இருந்து வருகிறார். ஆச்ரம முக்ய விசேஷங்களுக்கு வந்து கலந்து கொள்கிறார். தற்போது வேத பாடசாலை ஆசிரிய ராக, கும்பகோணம் வைத்தியநாத சாஸ்த்ரிகள் இருந்து வருகிறார். தற்சமயம் ஆறு பிள்ளைகள் வேதம் பயின்று வருகிறார்கள்.

மேஜர் A. W. சாட்விக்

இவர் 1935 முதல் ஆச்ரமத்திலேயே தனியாக அறை கட்டிக் கொண்டு, காலை, மாலை இருவேளையும் வேத பாரா

யணங்களுக்குத் தவருமல் வருவார். நல்ல தியான புருஷர். வேத பாடசாலே பிள்ளேகளிடம் மிகுந்த அன்பு கொண் டிருந்த அவர் தீபாவளிக்கு புது வஸ்திரங்கள், அன்பளிப்பு கள் வழங்குவார். ஸ்ரீ சக்ரத்திற்கு விசேஷ பூஜை செய்தால், ஆச்ரம அபிவிருத்திக்கு நல்லது என்பதை அறிந்து, அதை ஆச்ரம சார்பாக தாமே நிர்வகித்து மிக்க சிரத்தை யுடன், பூஜை நடக்கும் வெள்ளிக் கிழமைகள், பௌர்ணமி, தமிழ் மாதப் பிறப்பு ஆகிய தினங்களில், ஆரம்பம் முதல் கடைசி வரை இருந்து நடத்துவார். வருஷந் தோறும் ஸ்ரீ வித்யா ஹோமம் மிக ஊக்கமுடன் நடத்தி வந்தார். வேத பாடசாலே பொறுப்பையும் ஏற்று, 8 பிள்ளேகள் வரை சேர்த்து, அதற்கு நன்கொடைகளே வசூல் செய்து வேதம், ஸம்ஸ்கிருதம், தமிழ் முதலியவைகளுக்குத் தனித் தனியே உபாத்தியாயர்களே நியமித்து அக்கரையுடன் கவனித்து சிறப்பாக நடத்தி வந்தார். ஆச்ரம சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் ஒத்துழைத்து வந்தார். பூஜை, வேதபாராயணங்களில் ஈடுபாடு கொண்ட அவர் தன் அறையிலே ஸ்ரீ தக்ஷிணுமூர்த்திக்கு தினசரி பூஜை செய்து, தியானமும் செய்து வந்தார். ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியன்று ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்திலுள்ள ஸ்ரீ தக்ஷிணுமூர்த்திக்கு விசேஷ அபிஷேக, பூஜைகள் செய்விப்பார். அவர் 1962 ம் ஆண்டு மறைவுக்குப் பிறகும் அப்பூஜை மாதந்தவராமல் நடந்து வருகிறது.

60. ஆச்ரம பூஜை முறைகள்

1922ம் வருடம், மே மாதம் ஸ்ரீ பகவான் தாயார் சமாதியடைந்த தினத்திலிருந்து பூஜை கைங்கரியம் ஸ்ரீ நிரஞ்சனுனந்த ஸ்வாமிகள் ஸ்ரீ பகவான் பக்தராகிய, யோகநாதரின் பிள்ளே சின்ன ராமநாதனின் சகாயத் துடன் செய்து வந்தார். ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்தி

லிருந்து ஸ்ரீ அன்னையார் சமாதிக் கட்டிடத்திற்கு வந்த பிறகு, திருச்சுழி ராமானந்த ஸ்வாமிகள், விஸ்வநாத பிரம்மச்சாரி, மாத்தூர் ராஜகோபால பிரம்மச்சாரி, சுந்தரம் (எவரஸ்ட்) M. S. நாகராஜய்யர் முதலியவர்கள் பூஜை செய்து வந்தனர். ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமிகள், கிருஷ்ணபிக்ஷு, முருகனார் ஸ்வாமிகளும் சிற்சில சமயங்களில் பூஜை செய்வதுண்டு. பிறகு 1938ல் ஆச்ரமத்தில் வேதபாடசாலை ஆரம்பமானதிலிருந்து அதில் அத்யயனம் கற்று வந்த பிள்ளைகள் பூஜை செய்து வந்தனர். அதன் பின் மேற்படி வேதபாடசாலையில் அத்யயனம் கற்று முடித்த, கிட்டு எனும், திருக்கோயிலூர் K. கிருஷ்ணமூர்த்தி 1938ம் ஆண்டு முதலும், அதே வேதபாடசாலையில் படித்து முடித்த "அப்பிச்சி" என்ற N. சுப்பிரமண்யம் 1942ம் ஆண்டு முதலும் தொடர்ந்து நாளது வரை பூஜை செய்து வருகிறார்கள்.

ஸ்ரீ பகவத் சந்நிதியில் தினசரி காலை 6½ மணிக்கு பால் நிவேதனம் செய்து பக்தர்களுக்கு ஞானப்பால் வழங்கப்படுகிறது. காலை 8 மணிக்கு உபநிஷத் வேத பாராயணமும், 9 மணிக்கு பூஜையும் நடக்கிறது. மாலை 5 மணிக்கு ருத்ரசமகம், புருஷஸூக்த வேதபாராயணமும், ஸ்ரீ பகவான் அருளிய ஸம்ஸ்கிருத உபதேச ஸாரம் பாராயணமும் செய்து முடித்து பூஜை நிறைவுறுகிறது. சாதாரண நாட்களில் தைலம், அபிஷேகத்தூள், பால், தயிர் அபிஷேகம் செய்வித்து, ஸ்ரீ அருணாசலேஸ்வர ஷண்ணவதி, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டோத்திரம், ஸ்ரீ ருத்ர திரிசதி, பிரம்ம நாமாவளியாகிய அர்ச்சனைகள் செய்து, தயிர்சாதம் அல்லது சுத்தான்னம் நைவேதியத்துடன் தூப, கற்பூரஹாரத்தி, மந்த்ரபுஷ்பம், தமிழ் பாடலுடன் ஆரத்தி செய்து காலை பூஜை முடிவுறுகிறது. மாலை 5 மணிக்கு வேத பாராயணம் முடித்து, ஸ்ரீ ரமண

அஷ்டோத்திரம், பிரம்மநாமாவளி அர்ச்சனையுடன் பூஜை நிறைவு பெறுகிறது. சோமவாரங்கள், கிருத்திகை, புனர்வசு தினங்களில் ஸ்ரீ பகவானுக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும், மற்றும் விசேஷ தினங்களில் மஹான்யாஸ ஜபங்களுடன் கலச அபிஷேகங்களும் நடக்கிறது. பிரதோஷ பூஜை சிறப்பாக, விசேஷ ருத்ர, க்ரமபாராயணத்துடன் செய்யப்படுகிறது. ஸ்ரீ சக்ர பூஜை வெள்ளிக் கிழமைகள், பௌர்ணமி, தமிழ் மாதப்பிறப்பு தினங்களில் மாலை 5½ மணிக்கு ஆரம்பித்து இரவு 8½ மணிக்கு பூர்த்தியாகிறது. ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம், அஷ்டோத்திரம், திரிசதி முதலியவைகளை பீஜாக்ஷரத்துடன் சொல்லி அர்ச்சனை செய்து, விசேஷ மந்த்ர புஷ்பங்களுடன் தீபாராதனை நடத்தி பக்தர்களுக்கு பிரஸாதம் வழங்கப் படுகிறது.

1953ல் ஸ்ரீ வித்யாஹோமம் ஆரம்பித்ததிலிருந்து, ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் முதல் வெள்ளிக் கிழமையன்று ஸ்ரீ வித்யாஹோமம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அச்சமயம் இரு கன்னிப்பெண் களுக்கு புது பாவாடை சட்டையும், ஒரு சுமங்கலிக்கு புடவை, ரவிக்கைத் துண்டும் அளித்து, அவர்களை அம்பிகையாக பாவித்து மணையில் அமர்த்தி பாதத்திற்கு சந்தன, குங்குமம் இட்டு, பூச்சூட்டி கற்பூர ஹாரத்தி செய்து நமஸ்காரம் செய்யப்படுகிறது. இந்த கன்னி, சுமங்கலி பூஜையை, ஆச்ரம நிர்வாகி T. N. வெங்கட்ராமன் அவர்களின் துணைவியார் திருமதி நாகலக்ஷ்மியம்மாள் மிக பக்தி சிரத்தையாகச் செய்கிறார்கள். மேற்படி மூவரையும் அவர் அம்பிகையாகவே பாவித்து பூஜை செய்து, நமஸ் கரிப்பதை பார்க்கும் போது அவர்களுடைய பெருந் தன்மையை உணர முடிகிறது. புடவை, ரவிக்கைத் துண்டு, ஸ்வர்ணதாலிப் பொட்டு, வளையல், கண்ணாடி,

மஞ்சள், குங்கும, தாம்பூல, பழவர்க்கங்கள் முதலியவைகள் ஹோம குண்டத்தில் ஸ்ரீ அம்பாளுக்கு பூர்ணுகுதியாக சமர்ப்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதத்திலும் குறைந்தது, ஆறு ஸ்ரீ சக்ர பூஜைகள் நடைபெறுகின்றன. இதை மிகச் சிறப்பாக, சிரத்தையாக வைதீக முறைப்படி நடத்தி வருவது மிகப் போற்றத்தக்கதாகும். ஸ்ரீசக்ர பூஜை செய்விக்க விரும்பும் அன்பர்கள், அதற்குள்ள கட்டணத்தை செலுத்தினுல் அவர்கள் சொல்லும் நக்ஷத்திரத்தில் மேற்படி பூஜை நடத்தி வைக்கப்படுகிறது.

பிரதி வருடமும் வரும் மார்கழி மாதத்தில், ஸ்ரீ பகவான் அவதரித்த புண்ணிய பெருநாளாம் புனர்வசு நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ பகவான் ஜயந்தி மிக விமரிசையாக, கோலாகலமாகக் கொண்டாடப் படுகிறது. வெளியூர்களிலிருந்தெல்லாம் அன்பர்கள் திரண்டு வந்து ஜயந்தி விழாவில் கலந்து கொள்வார்கள். விசேஷ அபிஷேக, அலங்கார, ஆராதனை நடைபெறும். விரிவான அன்னதானமும் நடக்கும். முருகனுர்ஸ்வாமிகளின் "புனர்வசு வண்ணம்" பாடல்களே ஸ்ரீ ரமண ஜயந்தியின் சிறப்புக்கோர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளன.

கண்ணு லுனது கதிர்முக நாங்கள் காணப்பெற்
றண்ணுல் கண்ணு லாம்பய னுர்ந்தன மென்பாரால்
எண்ணு நின்று ரிதயத் தொளிரும் ரமணப்பே
ரண்ணு மலையான் புனர்வசு நன்னு ளதுவண்ணம்.

குலவுந் தொண்டர் கூடித் தம்மிற் கொண்டாடும்
தலைவன் பேச்சே தம்முண வாகத் தழைப்பாரால்
இலகும் புகழா லெண்டிசை போர்த்த ரமணன்பேச்
சலகில் களிப்பாம் புனர்வசு நன்னு ளதுவண்ணம்.

தேர்கலை யெல்லாந் தேரினுஞ் சிந்தை தெளியாது
நீர்கன ஞான நிலைபெற வேட்ட நெஞ்சத்தீர்

சார்கதி காட்டுஞ் சதாசிவ மூர்த்தி ஜயந்திச்சீர்
மார்கழி மாதப் புனர்வசு நன்னு ளதுவண்ணம்,

விதானங் கட்டித் தொங்கல் விட்டு விநோதஞ்சேர்
பதாகை தூக்கிப் பற்பல் சிறப்புப் பாரிப்பார்
எதாகிலு மோர்குற் றேவலி யற்றப் பெருமோவென்
றதேநினை வாவர் புனர்வசு நன்னு ளதுவண்ணம்.

மாதவர் வேதியர் மந்திர மோதி வழுத்துவார்
கோதையர் தாம்தங் கொழுந ரோடும்பின் குறுகுவார்
பேதைய ராஞேர் மேதைய ராகப் பிறங்குவார்
ஆதர நாஞ்செய் புனர்வசு நன்னுளது வண்ணம்.

தாழிசை வண்ணஞ் சந்த விருத்தஞ் சாற்றுவார்
ஏழிசை வாணர் யாழொடு வீணையி லேற்றுவார்
தோழந் தோகையர் பூப்பலி பொற்சுணம் தூவுவார்
வாழி ரமணன் புனர்வசு நன்னு ளதுவண்ணம்.

மற்றும் ஸ்ரீ பகவான் மஹாநிர்வாணம் அடைந்த புனித நாளை ஒவ்வொரு சித்திரை மாதமும், ஸ்ரீ பகவான் ஆராதனையாக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. ஸ்ரீ அன்னையார் மஹாசமாதியடைந்த தினத்தை பிரதி வருடமும், வைகாசி மாதத்தில் மஹாபூஜை எனக் கொண்டாடப்படுகிறது. அதே போல் ஸ்ரீ நிரஞ்சனுனந்த ஸ்வாமிகளின் கைவல்ய தினத்தை ஒவ்வொரு தைமாத பௌர்ணமியன்றும் குரு பூஜையாகச் செய்து வருகிருர்கள்.

அடிஅண்ணுமலை சாஸ்திரிகள் எனும் வேத விற்பன்னர் திரு. வெங்கடேசசர்மாவும், அவர் துணைவியார் விசாலாக்ஷி அம்மாளும் 1948லிருந்து ஸ்ரீ ரமணநகர் வாசிகளாக இருந்து வருகிருர்கள். சர்மா அவர்கள், ஆச்ரம ஸ்ரீ சக்ர பூஜை, ஹோமம் முதலிய வைதீக பூஜை

முறைகளை வகுத்துக் கொடுத்தும், நித்ய பூஜைகளில் உறுதுணையாகவும் இருந்துக் கொண்டு தம் 83ம் வயதில் அமைதியாக இருந்து வருகிறார். ஸ்ரீ பகவான் பேரில் ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் ஸ்தோத்திரங்கள் எழுதியுள்ளார்.

61. பக்தர்களின் பாராயணத் தவமுறை*

ஸ்கந்தாச்ரமத்தில் காலை 4 மணிக்கு ஸ்ரீ பகவானின் அன்னையார், அவர்கள் இருக்கும் அறையில் இருந்தபடியே தாம் இளமை முதல் கேட்டறிந்த பக்திபரமான பல்வேறு தோத்திரப் பாடல்கள் சொல்ல ஆரம்பிப்பார்கள். வெளித் தாழ்வாரத்தில் ஸ்ரீ பகவான் அமர்ந்திருப்பார்கள். நாங்களும் அருகில் உட்கார்ந்து தியானத்தில் ஆழ்வோம். சுமார் 5 மணிக்கு ஸ்ரீ அன்னையார் தோத்திரப்பாடல்களை முடித்ததும் ஸ்ரீ பகவான் எங்களை குறிப்பாகப் பார்ப்பார்கள். நாங்களும் எங்கள் பாராயணத்தை ஆரம்பிப்போம். ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை, அப்பளப் பாட்டு ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தித் தோத்திரம் முதலியவைகளைப் பாராயணம் செய்வோம்.

பிற்காலத்தில் ஸ்ரீ அன்னையார் சமாதிக் கட்டிடத்தை யொட்டி அமைந்துள்ள ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு ஸ்ரீ பகவான் நிர்ந்தரமாக வந்து தங்கிய பிறகு நடந்த பாராயணமுறை கீழ்வருமாறு :—

படிக்க வரும் பக்தர் இராமசாமிப்பிள்ளை, **C.** சோமசுந்தரம்பிள்ளை, ரங்கஸ்வாமி, அண்ணாமலை ஸ்வாமி, **A.** தேவராஜ முதலியார் முதலியவர்கள் ஒரு பிரிவினராகவும், மாதவஸ்வாமி, வடிவுடையார் சிவாநந்தம்

---

* பாராயணத் தவமுறையின் முழுவிபரமும் அநுபந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

முதலிய நாங்கள் மற்ெருரு பிரிவினராகவும் அமர்ந்து ஒவ்வொரு பாவின் முற்பகுதியை முற்பிரிவினரும் பிற்பகுதியைப் பிற்பிரிவினருமாக மாற்றி, மாற்றிச் சொல்லி பாராயணம் செய்வோம். அவ்வாறு சங்கிலித் தொடராகப் பாராயணம் செய்வதற்கு சௌகரியமாக ஸ்ரீ ரமண நூற்றிரட்டிலுள்ள வெண்பாக்களைக் கலிவெண்பாவாக ஸ்ரீ பகவானே அமைத்துத் தந்தார்கள் ஆசிரியர் T. K. சுந்தரேசய்யர், K. நடேசய்யர், தொப்பைய முதலியார், T. P. இராமச்சந்திரய்யர், M. S. நாகராஜய்யர், முதலான அன்பர்களும் ஆர்வமுடன் இடை இடையே பாராயணத்தில் கலந்து கொள்வதுண்டு.

62. ஸ்ரீ பகவான் தினசரி முறைகள்.

ஸ்ரீ பகவான் தினம் விடியற்காலை 3-30க்கு எழுந்து வெளியில் சென்று 4 மணிக்கு திரும்பி வந்து சோபாவில் அமர்வார்கள். அதற்குள் பக்தர்களும் காலை கடன்கள் முடித்து ஸ்ரீ பகவான் சந்நிதியில் தியானம் செய்வார்கள். பிறகு 5-30 க்கு ஸ்ரீ பகவான் ஸ்நானத்திற்குச் சென்று 6-15க்கு ஹாலுக்குத் திரும்புவார்கள். காலை ஆகாரத்திற்கு 6-30க்கு மணியடிக்கும். ஸ்ரீ பகவானும், பக்தர்களும் டிபன் முடித்து வருவார்கள். ஸ்ரீ பகவான் மலைமீது சிறிது தூரம் சென்று விட்டு 7-30க்கு ஹாலில் வந்தமர்வார்கள். அன்பர்களும் வந்து அமைதியாக உட்கார்ந்திருப்பார்கள். இதற்கிடையில் பக்தர்களின் ஆன்மீக கேள்விகளுக்கு ஸ்ரீ பகவான் பதிலளிப்பார்கள். 8-30க்கு ஆச்ரமத்திற்கு வரும் தபால்கள் ஸ்ரீ பகவான் பார்வைக்கு வரும். பிறகு 9-45க்கு கோசாலை பக்கம் சென்று விட்டு 10 மணிக்கு ஹாலுக்குத் திரும்பி வருவார்கள், 11-30க்கு பகல் உணவுக்கு மணியடிக்கும். சுமார் 12 மணிக்கு சாப்பாடு முடிந்தவுடன், ஸ்ரீ பகவான் பலாக்கொத்து வரை நடந்து

விட்டு ஒரு மணிக்கு ஆச்ரமம் திரும்புவார்கள். பக்தர்களும் ஆகாரம் முடிந்து அவரவர்கள் இடத்தில் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு 2 மணிக்கு ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு ஹாலுக்கு வந்து விடுவார்கள். 2-30 க்கு எல்லோருக்கும் காபி கொடுக்கப்படும். முதலில் ஸ்ரீ பகவானுக்குக் கொடுத்த பிறகு சுமார் 40, 50 பேர்களுக்கும் கொடுக்கப்படும். ஹாலில் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்ததும், கடைசியில் சில அன்பர்களுக்குக் காபி இருக்காது. அதற்காக ஸ்ரீ பகவான், எல்லோருக்கும் முதலில் கொடுத்துவிட்டு, பிறகு தனக்குக் கடைசியாகக் கொடுக்கும்படி பணிக்கவிட்டார்கள். கடைசியில்

பக்கம் 224ன் தொடர்ச்சி பக்கம் 257ல் அச்சிடப்பட்டுள்ளது. பக்க எண்கள் 225 முதல் 256 வரை விடப்பட்டுள்ளன. ஆனுல் விஷயம் தொடர்ந்து அச்சிடப்பட்டுள்ளது.

வெளியில் ஏழைகளுக்கு பிக்ஷையிடும் வழக்கமில்லை. ஆனுல் தயாமூர்த்தியாம் ஸ்ரீ பகவானின் கருணைக்கோர் எடுத்துக் காட்டாக, தினசரி பகல் 11 மணிக்கு சுமார் 50 ஏழைகளுக்குக் கதம்பசாம்பார் சாதம் கொடுத்து, பிறகே 11-30 க்கு ஸ்ரீ பகவான் உட்பட ஆச்ரமவாசிகள் அனைவரும் சாப்பிடுவதென்பது பெருமைக்குரிய விஷயமாகும். ஸ்ரீ ரமணஜயந்தி மஹோற்சவ நாளிலும், கூடுதலாகவே மற்ற சாதாரண நாட்களைப் போலவே இந்த அன்னதானம் 11 மணிக்குத் தவருமல் நடைபெறும். ஆனுல் அளவில் பெரிதாக இருக்கும். ஸ்ரீ பகவான் காலத்தில் நடந்தது போலவே இன்றும் சிறு குறையும் இல்லாமல் மேற்படி அன்னதானம் நடத்திவருவது, ஆச்ரம நிர்வாகத்தின்

திறமையை புலப்படுத்துகிறது. இதன்றி மற்ற எல்லா காரியங்களுமே ஸ்ரீ பகவான் காலத்தில் நடந்தேறியது போலவே, இப்பொழுதும் ஸ்ரீ பகவான் சக்தியை முன்னிலே யாக வைத்து மிகச் சிறப்பாக நல்ல முறையில் நடந்து வருவது எல்லோராலும் பாராட்டப்படுவது பிரசித்தம்.

ஆச்ரமத்திற்கு வரும் தபால்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதுவதெனும் நல்ல பழக்கம் அன்றிலிருந்து இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. மாலை சுமார் 4 மணிக்கு வெளியூர் போக வேண்டிய தபால்களை ஸ்ரீ பகவான் பார்வைக்கு எடுத்து வருவார்கள். ஸ்ரீ பகவான் அந்த கடிதங்களில் எழுத்துப் பிழையோ, எழுத்து விட்டுப் போயிருந்தாலோ அதை மட்டும் திருத்தச் சொல்வார்கள். பிறகு மலைபக்கம் 4-30 க்கு சிறிது தூரம் சென்று விட்டு 5 மணிக்குத் திரும்பி வருவார்கள். உடனே ஸ்ரீ பகவான் சந் நிதியில் வேதபாராயணம் நடைபெறும். 6-45 க்கு தமிழ் பாராயணம் ஆரம்பித்து 7-30 க்கு முடியவும், இரவு சாப் பாட்டிற்கான மணி அடிக்கவும் சரியாக இருக்கும். சாப் பாடு முடிந்ததும் ஸ்ரீ பகவான் கோசாலை பக்கம் சென்று விட்டு 8 மணிக்கு இருக்கையில் வந்தமர்வார்கள். அச்சமயம் அங்கிருக்கும் சில அன்பர்கள் தங்கள் சந்தே கங்களை ஸ்ரீ பகவானிடம் கேட்டு விளக்கம் பெறுவார்கள். சிலர் தியானத்தில் ஆழ்ந்திருப்பார்கள். 8-45 க்கு அன் பர்கள் யாவரும் தம் இருப்பிடத்திற்கு உறங்கச் செல்வார் கள். ஸ்ரீ பகவான் அமைதியாக கண்மூடி திண்டில் சாய்ந் திருப்பார்கள். ஸ்ரீ பகவானுக்குக் கைங்காரியம் செய் யும் அன்பர்களும் ஹாலிலேயே படுத்துக் கொள்வோம். விடியற்காலை 3 மணிக்கு ஸ்ரீ பகவான் எழுந்து, அவர்கள் பார்வை நம்மீது படும்போது, உறக்கத்திலிருக்கும் நமக்கு முகத்தில் சக்தி மிகுந்த ஒளி பாய்வது போன்ற உணர்வு ஏற்பட்டு நம்மை எழுப்பி விடும். இது ஸ்ரீ பகவானுக்கு

கைங்காரியம் செய்யும் பாக்யம் பெற்ற காலத்தில் எளியேனுக்கு ஏற்பட்ட மறக்கமுடியாத ஓர் அநுபவமாகும். மேற்கூறியவைகள் கடிகாரத்தைப் பார்க்காமலேயும், காலவழி முறைகள் வகுக்காமலேயும், தன்னியல்பாகவே ஸ்ரீ பகவானுல் நடத்தப்பட்டவைகளாகும்.

63. சர்வாதிகாரி ஸ்ரீ நிரஞ்சனனந்த ஸ்வாமிகளின் நிர்வாகத் திறன்

ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்தில் இருந்த சமயம் 1919 ல் திருவண்ணமலையில் பிளேக் காரணமாக அநேகமாக ஊர் காலியாகியிருந்தது. அதனுல் ஆச்ரம அன்பர்கள் முன் போல் பிக்ஷைக்குப் போவதும் நின்றுவிட்டது. ஆச்ரமத்திலும் மிகச் சிலரே இருந்தனர். பிக்ஷைக்குப் போவது நின்று சில மாதங்களாகி இருந்தது. நான் அச்சமயம் தான், ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கென்று முதன்முதல் திருவருணை வந்து சேர்ந்தேன். பிறகு பிளேக்கின் பயம் நீங்கி நிலைமை சீர்பட்டதும், மறுபடியும் பிக்ஷைக்குப் போகயோசித்த சமயம், தினசரி, எச்சம்மாள், முதலியார் பாட்டி, கண்ணம்மாள் முதலியவர்கள் வீட்டிலிருந்து வரும் ஆகாரத்துடன், சில அன்பர்களும், கல்கத்தா K. R. வேங்கடசுப்ரமண்ய ஐயரும் காணிக்கையாகத் தரும் தொகையைக் கொண்டு இனி ஆச்ரமத்திலேயே உணவு தயாரித்துக் கொள்வதென்று ஏற்பாடு ஆகியது. மேற்படி பணத்தைக் கொண்டு சமையலுக்கு வேண்டிய பொருட்களை அன்றன்று அனுப்பும் பொறுப்பை, கம்பீரம் சேஷய்யர் ஏற்று நடத்தி வந்தார். அவருக்கு அடுத்தபடியாக வாசுதேவசாஸ்த்ரிகள் பொறுப்பேற்று ஸ்கந்தாச்ரமத்தில் இருக்கும் வரை நடத்தி வந்தார். அதன்பின் ஸ்ரீ அன்னையார் சமாதிக் கட்டிடத்திற்கு ஸ்ரீ பகவான் நிரந்தரமாக வந்த பிறகு தண்டபாணி

ஸ்வாமிகள் நடத்தி வந்தார். அவர் காலத்தில், பலாக் கொத்திலிருந்து ஸ்ரீ தாயார் சமாதிக் கட்டிடத்திற்கு அருகில் ஓடிக்கொண்டிருந்த ஓடையை மலேப்பக்கம் திருப்பி விட்டு, ஆச்ரமத்திற்கு வடக்குப்புறத்தில் கருங்கற் சுவர் எழுப்பியும், மற்றும் சில சீர்திருத்தங்களும் செய்தார். அதன்பிறகு கோபால்ராவ் பொறுப்பேற்று கவனித்துக் கொண்டார். ஸ்ரீ பகவான் சுமார் 24 ஆண்டுகள் அமர்ந்து, அன்பர்களுக்கு அருள் பொழிந்த பழைய தியானஹால் கோபால்ராவ் முயற்சியால் கட்டப்பட்டதாகும்.

1930 ஆம் ஆண்டு, ஸ்ரீ நிரஞ்சனனந்தஸ்வாமிகள் ஆச்ரம நிர்வாகப் பொறுப்பேற்ருர். ஸ்ரீ அன்னேயார் சமாதிக்கட்டிடத்தை, ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர் ஆலயமாக 1939 ல் ஆரம்பித்து, விடாமுயற்சியால் 1949 ல் இரண்டு லட்ச ரூபாய் செலவில் கட்டி முடித்து மிகச் சீரும், சிறப்பு மாக கும்பாபிஷேகம் நடத்திஞர். மேற்படி கும்பாபிஷே கத்திற்கு பல சமுத்திர ஜலங்கள், கங்கை, யமுனே, கோதாவரி, சரஸ்வதி, காவேரி முதலான புண்ணிய நதி களின் தீர்த்தங்கள், நேபாளத்திலிருந்து உருத்திராட்ச மாலேகள், காட்டு யானேகளின் தந்தங்களில் படிந்துள்ள மண், காண்டாமிருகத்தின் கொம்பு, வெண்சாமரம் செய்ய கவரிமான்முடி போன்ற பல அபூர்வ சாமான்களே வரவழைத்து சாஸ்த்ரவிதிப்படி சிறப்பாக, சிரத்தையாக வெகு விமரிசையாக செய்து முடித்தார். ஸ்ரீ மாத்ரு பூதேஸ்வர ஆலயத்திருப்பணியை ஆரம்பித்து தம்பொறுப் பில் மேற்பார்த்து சீரிய முறையில் பூர்த்தி செய்தவர் காரைக்குடி வைத்தியநாதஸ்தபதி அவர்கள். ஆச்ரமத் திற்குள் பக்தர்கள் தங்குவதற்கு சில தனி அறைகளும் மோர்வி கெஸ்டு ஹவுஸில் 1942ல் இரண்டு பெரிய விடுதி களும் கட்டிஞர். ஆச்ரமத்தில் வேதபாடசாலே, பாகசாலே, உணவுவிடுதி, ஸ்டோர்ரூம், கோசாலே, தர்மவைத்திய

சாலை முதலியனவும் இவர் நிர்வாகத்தில் கட்டப்பட்டவை களாகும். அதன்றி ஸ்ரீ பகவான் அவதரித்த புண்ணிய ஸ்தலமாகிய திருச்சுழியில் உள்ள புனித இல்லத்தை, ஸ்ரீ பகவானின் தந்தையாகிய சுந்தரமய்யரின் பெயரால் "ஸ்ரீ சுந்தர மந்திரம்" எனவும், ஸ்ரீ பகவான் மதுரையில் பள்ளி மாணவனுகப் படித்த காலத்தில் வசித்து ஞானநுபவம்பெற்ற புனித இல்லத்தை "ஸ்ரீ ரமண மந்திரம்" என்றும், ஆச்ரம நினைவாலயமாக்கப் பட்டிருக்கிறது. மேற்படி இல்லங்கள் இரண்டும், பல கைமாறி போயிருந்தவைகளை பெருமுயற்சியால் வாங்கி, இன்று ஸ்ரீ பகவான் பக்தர்களுக்குப் புண்ணிய யாத்திரை ஸ்தலங்களாக ஆக்கிய பெருமை ஸ்ரீ நிரஞ்சனனந்தஸ்வாமிகளையே சாரும். இவ்விரு மந்திரங்களிலும் ஸ்ரீ பகவான் திருவுருவப் படம் வைத்து தினசரி பூஜைகள் நடைபெற்று வருகிறது. இவருக்கு ஆச்ரம காரியங்கள் யாவும் நிறைவாக இருக்க வேண்டும். சிரமத்தையோ, பணச் செலவுகளையோ பொருட்படுத்தாமல், ஸ்ரீ பகவானுக்கும், பக்தர்களுக்கும், நல்ல முறையில் ஆகாரம் அளிக்கப்பட வேண்டும் எனும் பரந்த மனப்பான்மையினுல் கடப்பையிலிருந்து வெண்ணை, கள்ளிக்கோட்டை மிளகு, விருதுப்பட்டி பருப்பு, நெல்லூரிலிருந்து அரிசி போன்ற தரமானப் பண்டங்களைத் தருவிப்பார்!

பள்ளி மாணவனுக இருந்த வெங்கட்ராமன் மதுரையினின்றும் புறப்பட்டு தம் ஞானத்தந்தையாம் ஸ்ரீ அருணுசலேசனை நாடி ஆர்வமுடன் அருணை வந்தடைந்த 1-9-1896 ஆம் ஆண்டு முதல், 14-4-1950 ல் ஜோதிமலையுடன் இரண்டறக் கலக்கும் நாள்வரை 54 ஆண்டுகள் ஸ்ரீ அண்ணுமலை எல்லையைத் தாண்டாமல், அரைவினுடி கூட அகலாமல் "நீயும் நானுமாய் ஏகபோகமாய்" என்று ஞானத்தவச் சோலையில் ரமித்து இறுமாந்திருந்து, தாய்

தம் மக்களின் உடல் நிலைக்கேற்ப அன்ன ஆகார ஔட தங்கள் அளித்துக் காப்பதுபோல், ஞானப்பசியால் தம்மை நாடி வந்தடைந்த பக்தர் குழாத்தின் உளப்பாங்கிற்கேற்ப ஞானவமுதூட்டி, மேன்மையான வழிக்கு நற்றுணையா யிருந்து ஆதரவுடன் அரவணைத்துக் காக்கும், தன்னி கரற்ற மெய்ஞான குருவாம் நம் ஸ்ரீ பகவானின் பொன் விழா 1946 ஆம் ஆண்டு நடை பெற்றது. ஸ்ரீ பகவான் அண்ணுமலை வந்தமர்ந்த 50 ஆண்டு பூர்த்தியே பொன்விழாவாகும். இதை மிக விமரிசையாக, பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கண்டு களிகூறும் வண்ணம் பழைய தியான ஹாலுக்கு வடக்குப் புறத்தில் வெகு சிறப்பாக அழகுறு கீற்றுப்பந்தல் "பொன் விழா" பந்தலாக அமைக்கப்பட்டு மிக கோலாகல விழாவாக, ஸ்ரீ நிரஞ்சனு னந்த ஸ்வாமிகளின் விசாலமான உள்ளத்தின் பிரதி பலிப்பாக நடந்தேறியது. ஆச்ரம அபிவிருத்தியே தம் முழு மூச்செனவாழ்ந்து வந்தார். 14-4-1950 ஆம் ஆண்டு ஸ்ரீ பகவான் மஹா நிர்வாணம் அடைந்த பிறகு 30-9-1950ல் ஸ்ரீ நிரஞ்சனுனந்தஸ்வாமிகளின் தலைமையில் 17 பேர்கள் கொண்ட நிர்வாகக் குழு ஒன்று அமைத்து செயல்பட்டு வந்தது. யாவைக்கும் மூலப் பொருளாய் இருந்து இயக்கிய ஸ்ரீ பகவானிடம் உள்ளத்தை ஒப்படைத்து, தம் பெயருக் கேற்ப (நிரஞ்சனம் - குற்றமற்றது) குற்றமற்ற குணத்தால் எல்லோராலும் "ஸ்ரீ சின்னஸ்வாமிகள்" என மரியாதை யுடனும், அன்புடனும் குறிப்பிடப்பட்டு வந்த ஸ்ரீ நிரஞ்ச னுனந்தஸ்வாமிகள், தாம் வந்தவேலை, தமக்களிக்கப்பட்ட பணிகள் முடிவுற்றதால், 29-1-1953, குருவாரம், தைபூசம் நிறைமதி நாளில் தம் 68 ஆம் வயதில் ஸ்ரீ பகவான் திரு வடிகளில் இரண்டறக்கலந்தார். அவர் திருமேனியை ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர் சந்நிதிக்கு நேர் கிழக்கில் சமாதி வைக்கப்பட்டு, தினசரி பூஜையும் நடைபெற்று வருகிறது.

அடி அண்ணுமலை சாஸ்த்ரிகள் என்னும் திரு. வெங்கடேச சர்மா பல வருடங்களுக்கு முன் ஸ்ரீ நிரஞ்சனுனந்த ஸ்வாமிகள் பேரில் எழுதிய பாடல்கள் கீழ்வருமாறு.

நிரஞ்சன பஞ்சகம்

மக்களான் மேன்மையை மாதா வடைவளெனு
மிக்கதோர் வார்த்தையை மெய்ப்பித்த—தக்ககுண
தீர நிரஞ்சனநின் சேவைத் திரமேவு
பாருள் ளளவுமே பார்.

மற்றேதும் பற்ரு மனத்தால் ரமணனையே
பற்றும் பரம தபோதனநீ—குற்றமில்
பெற்றதா யன்பின் பெருமையாற் கோயிலை
யுற்றவா செய்தா யுவந்து.

பணிந்தவர் பாபம் பறிக்கும் பரனைப்
பணியும் நிரஞ்ஜனநீ பாரிற்—பணித்துள்ள
பொற்பணியாற் ருயாரைப் போற்றிடு நற்புகழ்
கற்பத்தும் போகாது காண்.

தன்கையா லன்னைக்குத் தன்மய நந் தந்திட்ட
பொன்கை ரமணனுடன் போந்தநீ—யுன்கையால்
வைரக்கற் கோயில் வகுத்ததா லின்றுமுதல்
வைரக்கை யானுகு வை.

மாவழகி யன்னையின் மாதவ நற்சுதனே
தேவரு மெச்சுந் திருப்பணியால் — மேவரு
மூவர்க்கு மேலுள மூர்த்தியா மிவ்வம்மை
யேவர்க்கு நன்மை தரவே.

64. திரு "வெங்கிட்டு" அவர்கள்

இருபத்து மூன்று ஆண்டுகள் ஆச்ரம நிர்வாகத்தை நேர்மையாம் வழி நின்று நடத்திய **ஸ்ரீ நிரஞ்சனனந்த ஸ்வாமிகள்** 29-1-1953 ஆம் நாள் கைவல்யமடைந்த பிறகு, 1-2-1953 முதலே ஆச்ரம நிர்வாகத்தை ஏற்று நடத்தி வருபவர், ஸ்ரீ நிரஞ்சனனந்த ஸ்வாமிகளின் பூர்வாச்ரம குமாரராகிய திரு. T. N. வெங்கட்ராமன் அவர்களாகும். இவரது தலைமைப் பொறுப்பில் ஆச்ரமம் பல வகையிலும் மேலும் அபிவிருத்தி யடைந்து வருகிறது. ஆச்ரம எல்லைக்குள் தங்குவதற்கேற்ப, சகல வசதிகளுடன் கூடிய 35 தனி அறைகள் கட்டப்பட்டுள்ளன. அதன்றி, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, கான்பூர், பம்பாய், வாரணசி, பெங்களூர், டெல்லி, சென்னை முதலிய இடங்களில் இருக்கும் வெளிநாட்டு பக்தர்களும், நம் நாட்டு பக்தர் களும் ஸ்ரீ பகவான் தரிசனத்தை முன்னிட்டு தங்கள் சொந்த செலவில் அவரவர்களும் பல ஆயிரம் ரூபாய்கள் போட்டு ஆச்ரமம் சார்பில் கட்டிய தனித்தனி கட்டிடங்கள் பல உள்ளன. இவைகளில், இக்கட்டிடத்தின் உரிமை யாளர்கள் ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு இங்கு வரும் சமயங் களில் தங்கியிருந்து செல்வார்கள். மற்ற நேரங்களில் ஆச்ரமத்தின் பொறுப்பில் உள்ள இக் கட்டிடங்கள், மற்ற வெளியூர் பக்தர்கள் வந்தால் தங்குவதற்கு உபயோகப் படுகிறது. இதில் உள்ள மிக முக்கியமான, பெருமைப் படக்கூடியது என்னவென்றால், ஆச்ரமத்திற்குள் இருக்கும் விடுதிகளுக்கோ, மோர்வி காம்பவுண்டில் உள்ளவைகளுக்கோ, மற்ற தனிக் கட்டிடங்களுக்கோ வாடகை கிடையாதென்பதே ஆகும். யாவும் ஸ்ரீ பகவான் அருள் நாடிவரும் அன்பர்களின் சௌகர்யத்தை உத் தேசித்தே செயல்பட்டு வருகிறது. ஸ்ரீ பகவான் மஹா **சமாதிமீது**, முகம் பார்க்கும் வண்ணம் கருங்கற்களை

இழைத்து கட்டிய அழகுமிகு மணிமண்டபம் 1967 ஆம் ஆண்டிலும், அதைச் சார்ந்து அன்பர்கள் அமர்ந்து ஸ்ரீ பகவானின் அபிஷேக, ஆராதனைகளைக் கண்டு களிக்கும் வண்ணம் மிகப் பெரிய "ரமணு ஆடிடோரியம்" எனும் தரிசனஹால் 1970 ஆம் வருடத்திலும், திரு. வெங்கட்ராமன் அவர்களின் பெருமுயற்சியால் கட்டப் பட்டன. மற்றும், ஆச்ரம முன்புறம் புதிதாகக் காரியா லயமும், அதை அடுத்து புத்தகாலயமும் கட்டப் பட்டுள்ளது. இன்னும் புதிய கட்டிடங்களும் உருவாகி வருகிறன. ஆச்ரமத்திற்குள் விசாலமான அழகிய தரிசன ஹாலும், பல தனி அறைகளும், ஆச்ரமம் சார்பாக வெளியில் கட்டப்பட்டுள்ள வசதிகள் நிறைந்த பல கட்டிடங்களும் உருவாக, உறுதுணையாகத் திட்டங்கள் தீட்டி மேற்பார்த்து சலியாது தொண்டு புரிந்து வருபவர் ஓய்வுபெற்ற இஞ்சினியர், பெங்களூர் திரு. பத்மநாபன் அவர்களாகும். உண்மையான தன்னலமற்ற கைங்கர்யத் திற்கு ஓர் எடுத்துக் காட்டாக இருப்பவர் இவர். ஸ்ரீ பகவானிடம் மிக ஈடுபாடு கொண்டு, தம் பேச்சிலோ, செயல்களிலோ ஆடம்பரமற்று அடக்கமும், சாந்தமும் நிறைந்து, தன்னை அதிகம் வெளியில் புலப்படுத்திக் கொள்ளாத உத்தம பக்தர். நிஷ்காம கர்ம யோகிக்கு ஆதர்ச புருஷராக விளங்குகிருர்.

"வெங்கிட்டு" என எல்லோராலும் அன்புடனும், உரிமையுடனும் குறிப்பிடப்படும் திரு. வெங்கட்ராமன் அவர்கள், சாதுத் தன்மையுடன் எல்லோரிடமும் சிரித்த முகத்துடன், அன்புடன் பேசும் நல்ல உள்ளம் படைத்த வர். ஸ்ரீ ரமண நகரில் வசிக்கும் யாருக்காவது துன்பமென அறிந்தால், கேளாமலே தானே முன்னின்று அதை நீக்கு வதற் கேற்ற எல்லா உதவிகளையும் உடனே செய்வார். முக்கியமாக யாரேனும் வாழ்வின் கடைசி பயணத்தில்

இருந்தால், கண்டிப்பாக அங்கு "வெங்கிட்டு" இருப்பார்! ஸ்ரீ பகவானுக்கு அன்ன கைங்கரியம் செய்து வந்த முதலியார் பாட்டியின் மருமகள் காமாக்ஷியம்மாள் சுமார் 1939 ல் ஊருக்குள் காலமானதும் திரு "வெங்கிட்டு" அவர்கள், அதற்கான செலவுக்குப் பணத்துடன் உடனே விரைந்து வந்து எல்லா காரியங்களையும் உடனிருந்து முடித்து வைத்தார். அப்பொழுது ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமிகளின் நிர்வாகக் காலம். சுமார் 25 வயது இளைஞ ரான இவர் அப்பொழுதே இது போன்ற காரியங்களில், ஜாதி பேதமற்ற சமநோக்குடன் கலந்து கொண்டார். 1949 ல், ஸ்ரீ ரமண நகரில் முதலியார் பாட்டி சமாதி யடைந்த சமயம், உடனே ஸ்ரீ ரமண நகரில் அப்பொழுது வசித்து வந்த ஸ்ரீ பகவான் பக்தர்களாகிய டாக்டர் சையத், டாக்டர் அனந்தநாராயண ராவ், ஆர்தர் ஆஸ்பர்ன் முதலிய பல அன்பர்களிடம் சென்று தம் மேல் துண்டிலேயே அரைமணி நேரத்தில் பணம் திரட்டி, நோட்டும் சில்லரைகளுமாக ரூ. 90 வசூலித்து தானே முன் நின்று நடத்தி வைத்தார். ஆச்ரமத்தையோ, தன்னையோ தூஷணமாகப் பேசுபவர்களாக இருந்தாலும், இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அன்றிலிருந்து இன்று வரை, விட்டுக் கொடுக்காமல் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளும் நல்ல பண்பாளர். சமாதி வைக்க வேண்டிய முறைகள் ஓரளவு தெரிந்த நானும், அநேகமாகப் போய் கலந்துக் கொள்வேன். திரு. வெங்கிட்டு அவர்கள், என்னிடம் "என்ன அடிகளே! நானும் நீங்களும் இந்த இடத்திற்கு வருவது இது எத்தனையாவது முறை" என வேடிக்கையாக கேட்பார்! ஆச்ரமத் தலைமைப் பொறுப்பு ஏற்ற பிறகும் "தான்" என்னும் அபிமானமற்று எல்லோருடனும் சம மாக, சகஜமாக பழகுவதை எல்லா அன்பர்களும் அறிவார்கள். நான் அறிந்தவரை ஒரு ஸ்தாபனத் தின் நிர்வாக பொறுப்பில் இருப்பவர்கள் இவரை போல

இவ்வளவு எளிமையாக, விகல்பமின்றி யாவற்றிலும் கலந்து கொள்பவர்களாக இருப்பவரைக் காண்பது அரிது

திரு. வெங்கட்ராமன் அவர்கள் தம் வாழ்வில் மூன்று கும்பாபிஷேகங்களுக்கு, தம்பதி சமேதராய் இருந்து பங்கேற்கும் பாங்கியம் பெற்றவர். 17-3-1949 ஆம் ஆண்டு, ஸ்ரீ பகவானது அன்னையார் சமாதியாகிய ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரர் ஆலய மஹாகும்பாபிஷேகம், அப்பொழுது ஆச்ரம நிர்வாகத் தலைவராய் இருந்த ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமிகளால் நடத்தப்பெற்ற சமயம் தம் துணைவியாருடன், யாகக்கர்த்தாவாக நின்று நிறைவேற்றினார். பிறகு தம் நிர்வாகக் காலத்தில் ஸ்ரீ பகவான் மஹாசமாதி மீது ஆலய விமானம் அழகுற எடுத்து 18-6-1967 ஆம் ஆண்டு, ஸ்ரீ ரமணேச்வர மஹாலிங்கத்திற்கு மஹாகும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடத்திய போதும், தம்பதிகளாய் யாகக்கர்த்தாவாக இருந்து நடத்தும் பேறு பெற்றார். இப்பொழுது ஸ்ரீ பகவானின் நூற்றாண்டு விழாவின் ஆரம்ப விழாவாக ஸ்ரீயோகாம்பிகை சமேத ஸ்ரீ மாத்ருபூதேஸ்வரருக்கும், ஸ்ரீ ரமணேச்வர மஹாலிங்கத்திற்கும் 22-11-1979ல் நடத்திய கும்பாபிஷேகத்திலும் தம் துணைவியார் திருமதி. நாகலக்ஷ்மியம்மாளுடன் சேர்ந்து யாக பூஜைக்கும் மற்றவைகளுக்கும் கர்த்தாவாக இருந்து சிறப்புற நடத்தினார். உலகத்தில் ஒருவர், தம் ஆயுட்காலத்தில், ஒரு கும்பாபிஷேகம் செய்ய கர்த்தாவாக இருந்து ரக்ஷைகட்டிக் கொண்டு யாத்ரா தானம் செய்வதென்பது எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. ஆனால் ஆச்ரம தலைமைப் பொறுப்பேற்ற 1953 லிருந்து ஆச்ரம அபிவிருத்தியே தம் கடமையாகக் கொண்டு அதே சிந்தனையில் வாழ்ந்து வரும் திரு. வெங்கட்ராமன் தம்பதியருக்கு, மூன்று கும்பாபிஷேகங்களுக்கு கர்த்தாவாக இருந்து ரக்ஷைகட்டிக் கொண்டு

யாத்ராதானம் முதலிய வைதீகச் சடங்குகளில் முன் னின்று நடத்த, கிடைத்தற்கரிய பெரும் பேறு கிடைத்தது பூர்வ புண்ணியமும், ஸ்ரீ பகவானின் பூரண அருளாசியுமே ஆகும்.

மற்றும் 1953 ல் ஆரம்பித்து, வெள்ளி விழா காண விருக்கும் ஸ்ரீ சக்ர ஸ்ரீ வித்யா ஹோமத்திற்கும் 25 வருடங் களாக இருவரும் கர்த்தாவாக இருந்து பங்கேற்கும் பாக்கியமும் பெற்றிருக்கின்றனர். திரு. T.N.V. அவர்கள் தம் 65 வயதிலும் இது போன்ற தெய்வீக காரியங்களில் மிக உற்சாகமாக ஈடுபாடு உள்ளவர். 1979 ஆம் வருடம் நடந்த, ஸ்ரீ மாத்ருபூதேஸ்வர ஸ்ரீ ரமணேச்வர மஹாலிங்க மஹா கும்பாபிஷேகத்தின் குறிப்பிடதக்க சிறப்பு அம்சம் ஸ்ரீ பகவான் ஆலய விமானத்திற்கு மேலுள்ள பழைய செப்புக் கலசத்திற்கு பல ஆயிரக்கணக்காண ரூபாய் செலவில் தங்கப் பூச்சு செய்யப்பட்டதாகும். இந்தப் பணியிலும், மற்றும், வரும் நூற்றுண்டு விழாப் பணி யிலும் இடையருது அல்லும் பகலும் பெருமுயற்சியுடன் உழைத்து வரும் "மவுண்டன் பாத்" ஆச்ரம ஆங்கில பத்திரிகையின் நிர்வாக ஆசிரியரும், திரு. T.N.V. அவர் களின் இரண்டாவது புதல்வருமாகிய V. கணேசன், M.A., பண்பும், பணிவும் கொண்டு ஆச்ரமப்பணியே தம் பணி யாக வாழ்ந்து வரும், நைஷ்டிகப் பிரம்மச்சாரியாகும்.

திரு. வெங்கிட்டு அவர்களின் மூத்த புதல்வர் V. சுந்தரரமணனும், மூன்ருவது குமாரர் V. சுப்ரமண்ய மும் தம் பெற்ருரைப் போன்றே அன்பும், அடக்கமும் நிறைந்த உள்ளத்தினர். சுந்தரரமணன் தற்சமயம் பரோடாவில் இஞ்சினீயராக வேலை பார்த்து வருகிருர். 'மணி' என்றழைக்கப்படும் சுப்ரமணியம், பம்பாயில் இஞ்சினீயராக பணியாற்றி வருகிருர். இருவரும் ஸ்ரீ பகவானிடம் நிறைந்த பக்தியும் ஆச்ரமத்தில் மிக ஈடு

பாடும் கொண்டு, சாதுக்களிடம் மரியாதையும், பிரியமும் உள்ளவர்கள். இவர்களிருவருக்கும் வாய்த்த வாழ்க்கைத் துணைவியர் இருவரும், இவர்களுக்கேற்ற பண்பும், பணிவும் மிக்க நல்ல பெண்மணிகளாகும். மற்றும் திரு. T.N.V. அவர்களின் புதல்விகளான சௌ. லக்ஷ்மி வெங்கட்ராமன், சௌ. அழகம்மாள் சுந்தரரமணன், சௌ. மங்களம் கல்யாணம், சௌ. சரஸ்வதி ரங்க நாதன் ஆகிய நால்வரும் பெருமைக்குரிய சிறந்த பெண்களாகும். சௌ. லக்ஷ்மி அன்பும் ஆழ்ந்த பக்தியும் கொண்ட பொறுமைசாலி. சௌ. அழகம்மாள் உற்சாக மும் அன்பான பேச்சும் கொண்ட அடக்கமான சுபாவம் கொண்டவர். சௌ. மங்களம், சௌ. சரஸ்வதி இருவரும் சற்றுத் துடிப்பான குழந்தைகள். சுமார் பத்து வருடங் களுக்கு முன்பே சௌ. மங்களம் "ஸ்ரீ பகவானின் இனிய மொழிகளை ஒலிப்பதிவு செய்யத் தவறி விட்டது, இப்போது ஸ்ரீ பகவானின் பழைய பக்தர்களின் குரல்களையாவது டேப் ரிகார்டரில் ஒலிப்பதிவு செய்து வைக்க வேண்டும்" எனும் உயர்ந்த எண்ணத்தில் மிக முயற்சியும், உற்சாகமும் கொண்டு, பல அன்பர்களின் பாராயணம், பேச்சு முதலியவைகளை ஒலிப்பதிவு செய்து வைத்தது நல்ல தொரு செயலாகும். அவ்வொலிப்பதிவில் குரல் கொடுத்த சில அன்பர்கள் இன்று நம்முடன் இல்லை. ஸ்ரீ பகவான் திருவடியடைந்து விட்டனர். திருமணத்திற்கு முன்பே, சிறு பெண்ணாக இருந்தும் இத்தகைய நல்ல காரியங்களில் ஆர்வமுடன் ஈடுபட்டது பெருமைப் படக்கூடிய விஷய மாகும். அன்று போலவே இன்றும், கலகலப்பும் அன்பும் மாறாமல் பழைய மங்களமாகவே இருந்து வருகிறார். சௌ. சரஸ்வதியும் தன் சகோதரிக்குச் சமமான எண்ணங்கள் கொண்டவர். சில வருடங்களுக்கு முன் பெரு முயற்சி எடுத்து தற்போதுள்ள அன்பர்கள் பலரின், ஸ்ரீ பகவானால் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை அவ

ரவர்கள் வாய்மொழி மூலமாகவே சொல்லவைத்து ஒலிப் பதிவு செய்து வைத்துள்ளார். இந்த ஆறு பேரும் அருட் செல்வத்துடன் பொருட்செல்வமும், மக்கட்செல்வமும் பெற்று, காலத்தால் மாருத அன்பும், பண்பும் நிறைந்த உயர்ந்த உள்ளங்களை பெற்ற பாக்கியசாலிகளாகும். ஸ்ரீ பகவானின் அருள் விருக்ஷத்தில் மலர்ந்த மலர்களின் மணத்திற்கு மாற்று ஏது ?

65. பலாக்கொத்து எனும் ஓர் தபோவனம்

அண்ணுமலை எனும் எண்ணம் எழும் பொழுதே அதனுடன் இரண்டறக்கலந்து இயங்கிவரும், ஸ்ரீ ரமணுச்ரமமும் எல்லோர் உள்ளத்திலும் நினைவுவரும் என்பதில் ஐயமில்லை. இன்று பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் இருக்கக்கூடிய விசாலமான ஆச்ரமமும், பகவான் பக்தர்கள் பலர் குடும்பத்துடன் தங்கி ஸ்ரீ பகவானருள் பெற்றுய்ய இடம் கொடுத்த ஸ்ரீ ரமண நகரும், தற்போது இருக்கும் இடம் 19-5-1922 வரை, பல சமாதிகளும், சப்பாத்திப் புதர்களுமாக மண்டிக் கிடந்த, மனித நடமாட்டமற்ற இடமாக இருந்தது. 20-5-1922 ல் ஸ்ரீ பகவானின் தாயார் சமாதிக்காக, வேண்டிய அளவு சீர்செய்யப்பட்டு சமாதி வைக்கும் வைபவமும் முடிந்து, சிறு கீற்றுக் குடிலும் எழுந்தது. பின்னும் சில மாதங்களில் ஸ்ரீ பகவான் ஸ்கந்தாச்ரமத்திலிருந்து இங்கேயே வந்து நிரந்தரமாகத் தங்கியதும் அதுவே ஆச்ரமமாக திகழ்ந்தது. அச்சமயம் இவ்விடத்தில் ஆச்ரமகுடிலும், பக்கத்தில் உள்ள பலாக்கொத்தில் ஒரு சிறு பிள்ளையார் கோயிலும் தவிர யாரும் தங்கியிருக்கக் கூடிய இடம் வேறு ஒன்றும் இல்லை. தினம் ஊருக்குள்ளிருந்து சபாபதிபிள்ளை என்பவர் பலாக்கொத்திற்கு வந்து, ஸ்ரீ விஞயகருக்கு நைவேத்தியம் வைத்து பூஜை முடித்து திரும்புவார். அக்கோயிலுக்கு எதிர்புறம் இரு அறைகள் உண்டு. ஒன்றை சபாபதிப்பிள்ளை உப

யோகித்து வந்தார். சிறு குடிலாகிய ஆச்ரமத்தில் மிகச் சிலரே தங்கியிருந்தோம். மற்ற அன்பர்கள் ஊருக் குள்ளிருந்து. ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு வந்து செல்வது சிரமமாக இருந்தது. காவ்யகண்ட கணபதி முனிவர் போன்ற நல்ல திடபக்திக் கொண்ட சில பெரியவர்களுக்கு தினம் ஆச்ரமத்தை விட்டு ஊருக்குள் செல்வ தென்பது மிக சிரமமாகவும், மனதிற்கும் பிடிக்காத விஷயமாகவும் இருந்தது. ஆகையால் பலாக்கொத்தின் பிள்ளையார் கோயி லுக்கு எதிரிலிருந்த இரு அறைகளில் மற்றொன்றை சுத்தப்படுத்தி அதை ஓய்விற்கும், உறங்குவதற்கும் பயன் படுத்திக் கொண்டு, மற்ற நேரங்களை எல்லாம் ஸ்ரீ பகவான் சந்நிதியில் தங்கி அநுபவிப்பார். இவ்வாறு முதன் முதலாக ஆச்ரமத்திற்கு அருகில் தங்கிக் கொண்டு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்தி வந்தவர் காவ்ய கண்ட கணபதி முனிவராகும். அவருக்குப் பிறகு ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் சிலகாலம் அந்த அறை யில் தங்கியிருந்து ஸ்ரீ பகவான் தரிசனம் செய்து வந்தார்.

ஆச்ரமம் சற்று விரிவடைந்த சமயம், சேலம் **B. V.** நரஸிம்மஸ்வாமிகள் ஆச்ரமத்தில் வந்து தங்கி யிருந்தவர், ஆச்ரமத்திலேயே ஆகாரம், தங்குதல் எல்லாம் வைத்துக் கொள்வது தனக்கும், பிறருக்கும் சிரமமாக இருக்குமென எண்ணி, பலாக்கொத்தில் பிள்ளையார் கோயிலுக்கு கிழக்குப்பக்கம் தென்மூலையில் இருந்த சிறு கற்குகையை தங்குவதற்கேற்ப சீர் செய்து, பக்கத்தில் ஓடு வேய்ந்த சிறு கட்டிடமும் கட்டி அதில் தனக்கு வேண்டிய ஆகாரங்களை குக்கரில் தயாரித்துக் கொண்டு, ஏகாந்த மாக இருந்து ஆச்ரமம் வந்து ஸ்ரீ பகவான் தரிசனம் செய்து வந்தார்.

அச்சமயம் அவர் "செல்ஃவ் ரியலிசேஷன்" என்னும் ஆங்கில நூலாக ஸ்ரீ பகவான் சரித்திரத்தை எழுதினர்.

அதை படித்த பல மேல் நாட்டு அன்பர்களில், முதன் முதலாக இங்கு வந்த பால்பிரண்டன், பிக்ஷு பிரக்ஞானந்தா என்ற அறிஞர்கள் இருவரும் இங்கேயே தங்கியிருக்க விரும்பினுர்கள். பலாக்கொத்தில் உள்ள குளத்திற்கு வடக்குப்புறம் தங்களுக்கு இரு அறைகள் கொண்ட ஓட்டுக் கட்டிடம் கட்டிக்கொண்டு தங்கி, ஸ்ரீ பகவத் தரிசனம் செய்து வந்தனர். அடுத்து முசிரி கிருஷ்ணனந்தர் எனும் பக்தர், B. V. N. ஸ்வாமிகளின் கட்டிடத்திற்கு வடபுறத்தில் புல்வேய்ந்த குடில் எழுப்பி இருந்து வந்தார். ஆந்திராவைச் சேர்ந்த திம்மா ரெட்டியாரும், கேரளா சச்சிதானந்தஸ்வாமிகளும் கிருஷ்ணனந்தர் குடிலையடுத்து தனித்தனியாக குடிலமைத்து தங்கியிருந்தார்கள். பலாக்கொத்தின் குளத்திற்கு தென் கரையில், முதலியார் பாட்டியின் மகன் தம்பிரான் ஸ்வாமி ஓட்டுக்கட்டிடம் கட்டி இருந்து வந்தார். அன்னை ஆனந்தமாயியின் சிஷ்யர்களான பிரபுத்தானந்தாவும், பூமாநந்தாவும், ஆச்ரம பக்தரான மேஜர் சாட்விக் துரையின் உதவியால், தம்பிரான் ஸ்வாமியின் கட்டிடத்தை அடுத்து ஓட்டுக்கட்டிடம் எழுப்பி தங்கிக் கொண்டு, ஸ்ரீ பகவான் தரிசனம் செய்து வந்தனர். அதன் பக்கத்தில் ஆச்ரம புத்தகாலயப்பணி செய்து வந்த சோமசுந்தரஸ்வாமிகள் சிறு குடிலமைத்து இருந்து வந்தார்.

B.V.N. ஸ்வாமிகளுக்குப் பிறகு அவரிருந்த குகை கட்டிடத்தில் யோகி ராமையாவும், அவருக்குப் பிறகு, ஆச்ரமத்தில் காரியாலய கைங்கரியம் செய்து வந்த மௌனி சீனிவாசராவ் ஓய்வு நேரத்தில் தங்குவதற்கு பல காலம் பயன்படுத்திவந்தார். அவர்களை அடுத்து தற்போது, ஸ்ரீ பகவானுக்குக் கைங்கரியம் செய்து வந்த கிருஷ்ண ஸ்வாமி இருந்து வருகிறுர். B.V.N. ஸ்வாமிகளின் மற்ருெரு

ஒட்டுக்கட்டிடத்தில் விஸ்வநாதஸ்வாமிகளும், முசிரி கிருஷ்ணனந்தர் குடிலில் முருகனர் ஸ்வாமிகளும், திம்மா ரெட்டியாரின் குடிலில், முனகால வெங்கட்ராமய்யரும் நீண்ட வருடங்கள் தங்கியிருந்தனர். வெங்கட்ராமய்ய ருக்குப் பிறகு மலேயாளி பாலகிருஷ்ணஸ்வாமி அக்குடிலில் பல வருடங்கள் இருந்து வந்தார். அவருக்குப் பிறகு அந்த இடத்தில், முன்பு ஸ்ரீ பகவானுக்குக் கைங்கரியம் செய்து வந்த சத்யானந்த ஸ்வாமி இருந்து வருகிருர். என் நெடு நாளைய நண்பராகிய சச்சிதானந்த ஸ்வாமிகளின் குடிலே தன் ஞாபகார்த்தமாக என்னிடம் ஒப்படைத்தார். அதில் நான் பலவருடங்கள் இருந்து வந்து தற்போது ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு உபயோகப் பட்டு வருகிறது. பால்பிரண்டன், பிரக்ஞானந்தா ஒட்டுக் கட்டிடத்தில், யாழ்ப்பாணம் தம்பிதுரை சில காலமும் பிறகு பல அன்பர்கள் அவ்வப்பொழுது தங்குவதற்கும் பயன்பட்டது. தற்போது ஜெர்மனி லேடி ஹெல்கா அக்கட்டிடத்தை நல்ல முறையில் சீர்செய்து இருந்து வருகிருர்.* தம்பிரான்ஸ்வாமி, பிரபுத்தானந்தா ஆகிய இருவருடைய ஒட்டுக் கட்டிடங்களேயும் தளம் போட்டுக் கட்டியும் மற்றும் ஓர் பெரியக் கட்டிடமும், கிணறு முதலிய வசதிகளும் தெள்ளார் ஜெயராம் முதலியாரும் அவர் சகோதரர் வெங்கடேச முதலியாரும் மற்றும் சில அன்பர்களும் சேர்ந்து நல்ல முறையில் செய்தார்கள். அதில் அண்ணுமலே ஸ்வாமிகள் இருந்து வருகிருர்.

முருகனர் ஸ்வாமிகள், விஸ்வநாத ஸ்வாமிகள், முன கால வெங்கட்ராமய்யர், சச்சிதானந்த ஸ்வாமிகள்,

---

*ஹெல்காவின் நன் முயற்சியால் பலாக்கொத்தில் இடிந்த நிலேயில் இருந்த விநாயகர் கோயிலுக்கு, திருப்பணியும் கும்பாபிஷேகமும் வெகு விமரிசையாக நடந்து, தினப்படி பூஜையும் நடந்து வருகிறது.

அடியேன் முதலிய நாங்களெல்லோரும் பலாக்கொத்தில் இருந்த காலத்தில் எங்களுடன் இருந்து வந்தவர் ராமநாத பிரம்மச்சாரி. அவர் சிறு வயதிலேயே இங்கு ஊருக்குள் இருக்கும் வேதபாடசாலையில் வேதம் பயின்று, பிறகு ஸ்ரீ பகவானையே சரணாகதியாக அடைந்தவர். மிக சாதுத் தன்மையுடைய அவர் எப்பொழுதும் ஆண்டவரே! எனச் சொல்லிக் கொண்டிருந்ததால் நாங்கள் யாவரும் அவரை, ஆண்டவர் என்றுச் சொல்வோம். எல்லோருக்கும் உதவி செய்வதில் மிகப் பிரியம் உள்ளவர். டவுனிலிருந்து காய் மற்றும் சாமான்கள் வாங்கிவருவது, ஊருக்குள் ஓர் அன்பர் அன்பளிப்பாகத் தரும் கிரஸனாயிலை கொண்டு வந்து எங்கள் எல்லோருடைய அறைகளிலும் உள்ள பெட்ரூம்லைட்டுகளில் எண்ணெவிட்டு, துடைத்து வைப்பது, அறைகள் குப்பையாக இருந்தால் பெருக்கி சுத்தம் செய்வது போன்ற காரியங்களை சிறிதும் வித்தியாசம் இல்லாமல் செய்வார். அவருடைய தன்னலமற்ற அன்பைக் கண்ட நாங்களெல்லாம் அவரை "பலாக்கொத்து சர்வாதிகாரி" என்று அழைப்போம். நாங்களெல்லோரும் ஆச்ரமத்தில் ஸ்ரீ பகவான் சந்நிதியில் இருந்துவிட்டு, இரவு $7\frac{1}{2}$ மணிக்கு பலாக்கொத்து செல்லும் போது, அவர் எங்களுக்கு உதவியாக கையில் அரிக்கன் லைட்டுடன் முன்னால் சென்று வழி காட்டுவார். ஒரு முறை ஸ்ரீ பகவான் சந்நிதியில் எல்லோரும் அமர்ந்திருந்த சமயம், ஸ்ரீ பகவான் பக்தரான ஏகநாதராவ் சென்னையிலிருந்து ஆச்ரமத்திற்கு எழுதியிருந்த கடிதத்தில், "பலாக்கொத்து சர்வாதிகாரி" யின் நலத்தைக் குறித்தும் விசாரித்து எழுதியிருந்தார். அதை படித்த ஸ்ரீ பகவான் என்னைப் பார்த்து "என்ன ஓய்! இந்த பலாக்கொத்து சர்வாதிகாரி யார்? இதுவரை எனக்குத் தெரியாதே" எனச் சிரித்துக் கொண்டே கேட்டதும், நான் எழுந்து அங்கு உட்கார்ந்திருந்த ராமநாத பிரம்மச்சாரியைக் காட்டி "இவரைத்தான்

பலாக்கொத்து சர்வாதிகாரியெனக் கூப்பிடுகிறோம் பகவானே! எங்களுக்கெல்லாம் சாமான் வாங்கி வருவது, விளக்கிற்கு எண்ணெ விட்டுத் துடைத்து வைப்பது, எங்கள் அறைகளை பெருக்கிச் சுத்தம் செய்வது போன்ற பல காரியங்களை எல்லாம் எங்களுக்கு செய்து தருகிறார். அதனால் அவரை அப்படி மரியாதையாகக் கூப்பிடுகிறோம்" என்றதும் ஸ்ரீ பகவான் அங்கிருந்த ராமநாத பிரம்மச் சாரியைப் பார்த்து "சர்வாதிகாரி என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும், இத்தனை நாளாக என்னிடம் சொல்ல வில்லையே! இப்படியொரு சர்வாதிகாரி கிடைத்தால் எல்லோருக்கும் சௌகரியமாகத்தான் இருக்கும்" எனச் சந்தோஷமாகச் சொன்னதும், அவர் மிக சங்கோசத் துடன் எழுந்து "இல்லை பகவானே! இவர்களெல்லாம் வேடிக்கையாக என்னை அப்படிக் கூப்பிடுகிறார்கள், எனக் கொன்றும் தெரியாது பகவானே!" என்று சொன்னதும், ஸ்ரீ பகவான் சிரித்துக் கொண்டே "அதனால் என்ன! நல்லதுதானே" என்றார்கள்.

ஆச்ரம வைத்தியசாலையில் டாக்டராக முதன் முதலாக பணி செய்து வந்து, கடைசியாக தம்மிடமிருந்த தொகையை வைத்தியசாலைக்கு வேண்டிய சேமிப்பு நிதியாக உதவிய டாக்டர் ஷிவராவ், ஆந்திரா வக்கீல் சுப்பராமையா, பிரஸாதராவ், கன்னட தேச கோவிந்தபட், ராமசுப்பையர், ரமணபாதானந்தர் முதலிய அன்பர்களும் பலாக்கொத்தில் எங்களுடன் இருந்த அன்பர்களாகும். அந்த நாளில் பல சாதுக்களாகிய நாங்கள் எல்லோரும் ஒரே இடத்தில் இருந்து கொண்டு ஆகாரம், ஓய்வு, உறக்கம் இதற்கான நேரம் போக, மற்ற சமயங்களி லெல்லாம் ஸ்ரீ பகவான் தரிசனம், சத்சம்பாஷணை, போன்றவைகளில் ஈடுபட்டு, யாவரும் ஸ்ரீ பகவானெனும் ஞான விருக்ஷத்தின் மோன நிழலில் நிச்சிந்தையாக,

வேறு எண்ணமற்று, ஆத்ம சகோதரர்களாக ஒன்று சேர்ந்திருந்த அந்த நாளை மறக்கவே முடியாது.

66. ஸ்ரீ ரமண நகர்

பலாக்கொத்தில் பல சாதுக்கள் தங்கியிருந்து ஸ்ரீ பகவத் தரிசனம் செய்து வந்தது போல் குடும்பத்தி லுள்ள பக்தர்களும் ஆச்ரமத்திற்கு அருகில் இருந்து ஆத்மலாபம் பெற விழைந்தவர்களுக்கு அநுசரணையாக, வசதிபடைத்த கல்கத்தா அரவிந்தபோஸ், பொள்ளாச்சி புதுப்பாளையம் ரங்கஸ்வாமி கவுண்டர், ஸ்ரீ பகவானின் சகோதரி அலமேலம்மாளின் கணவர் பிச்சுவையர் ஆகிய மூவரும் ஆச்ரமத்திற்கு சமீபமுள்ள இடங்களை வாங்கி னார்கள். அரவிந்தபோஸ், ஆச்ரமத்திற்கு மேற்கே பலாக் கொத்திற்கு எதிர்புறம் பெரிய மனையாக வாங்கி, சுற்றி மதிற்சுவரும் எடுத்து பல கட்டிடங்களை எழுப்பினார். அக்கட்டிடங்களை தேவாஸ் பிரபாவதிராணி, முஜூம்தார் ராணி, மிஸ். மெர்ஸ்டன், "சலம்" என்றழைக்கும் ஆந்திரா வெங்கடாசலம் ஆகியவர்கள் ஆளுக்கொரு கட்டிடங்களை வாங்கிக்கொண்டு இருந்து வந்தார்கள். ஆச்ரமத்திற்கு தென்கிழக்கில் ரங்கஸ்வாமி கவுண்டர் வாங்கிய மனைகளில் ஒன்றை முதன்முதலாக வாங்கி வீடு கட்டி இருந்தவர் கல்கத்தா **K. R.** ராமநாதய்யர். அடுத்து மற்ற மனைகளில் இரண்டை தலையார்கானும், கோஹனும் வாங்கினார்கள். பிறகு சேலம் ராஜகோபாலய்யர், கௌரி யம்மாள், மனவாசி-சரணாகதி ராமசாமி ஐயர், டாக்டர் சையத் ஆகியவர்கள் வாங்கியது போக மீதி மனையின் ஒரு பாகத்தில் ரங்கஸ்வாமி கவுண்டர் இரு கட்டிடங்கள் கட்டினார். ரங்கஸ்வாமி கவுண்டர் மனைக்குத் தெற்கே யுள்ள இடத்தை பிச்சுவையர் வாங்கி பல மனைகளாகப்

பிரித்து மற்றவர்களுக்குக் கொடுத்தார். அதில் ஸர் C. V. ராமனின் சகலை சீதாராமய்யர் வீடு கட்டி பல வருடங்கள் இருந்து வந்தார். அவருக்குப் பிறகு அந்த வீட்டை, ஆச்ரம பிரஸிடெண்டின் சகலைகளாகிய ஸ்ரீ ராமய்யர், எருக்கூர் ராஜுவையர் இருவரும் வாங்கி, அவர்கள் குடும்பத்தினர் இன்றும் இருந்து வருகிறார்கள். பிச்சு வையரின் பெரிய கட்டிடத்தில் அவர் அபிமான புத்திரர், ஆச்ரம நிர்வாகி திரு. T. N. வெங்கட்ராமன் அவர்கள் குடும்பத்துடன் இருந்து வருகிறார். டாக்டர் சையத்தின் பெரியக் கட்டிடத்திற்கு தெற்குபுறம், மனையில் டாக்டர் அனந்தநாராயணராவ் வசதியாக கட்டிடம் கட்டி இருந்து வந்தார். மேற்படி டாக்டர்கள் இருவருக்குப் பிறகு அவ்விரு பங்களாக்களையும், அவை சுற்றியுள்ள விசால மான இடத்தையும் அரசாங்கத்தில் வாங்கி, தற்போது சாத்தனூர் திட்ட விடுதியாக இருந்து வருகிறது. ரங்க ஸ்வாமி கவுண்டரின் சிறிய வீட்டை N. கிருஷ்ணமூர்த்தி ஐயரும், பெரிய கட்டிடத்தை கடலூர் C. சோமசுந்தரம் பிள்ளையும் வாங்கி, அவர்கள் குடும்பங்கள் இன்றும் இருந்து வருகிறது. கவுண்டரின் மனையில் ஓர் இடம் வாங்கி வீடு கட்டிக்கொண்டு ஓய்வு பெற்ற ஸ்டேஷன் மாஸ்டர் சீனிவாசய்யர் குடும்பத்துடன் இருக்கிறார்.

ஆச்ரமத்திற்கு கிழக்கே ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் ஆச்ரமத்திற்கு வடக்குப்புறத்தில் முகர்ஜி கட்டிடம் கட்டி இருந்து வந்தார். மேற்படி ஆச்ரமத்திற்கு தென்கிழக்கில் பெரிய மனை வாங்கி பல கட்டிடங்கள் கட்டிக் கொண்டு ராஜு செட்டியார் குடும்பத்துடன் இருந்து வருகிறார். போஸ் காம்பவுண்டிற்கு கிழக்கே மனை வாங்கி ரோடா மெக்யூவர் இருந்து வருகிறார். அதற்கும் பக்கத்தில் சென்னை டாக்டர் T. N. கிருஷ்ணசாமி ஐயரின் பெரிய கட்டிடத்தின் ஒரு பகுதியில் முருகனார்ஸ்வாமிகளும்,

மற்றொரு பகுதியில் சென்னை கனகம்மாள், பத்மா அம்மாள் ஆகிய இருவரும் பல வருடங்கள் இருந்து வந்தார்கள். தற்போது அக்கட்டிடம் ஆச்ரமம் V. கணேசன் பொறுப்பில் உள்ளதில் இப்பொழுதும் கனகம்மாள் இருக்கிறார்கள். மற்றும் பார்ஸி அம்மாள் ரோஷன், தாதாபாய் மற்றும் சில அன்பர்களும் இருந்து வருகிறார்கள். அதற்கும் கீழண்டைப்பக்கம் ஸ்ரீ மணக்குள விநாயகர் கோவில் தெருவில் ஆச்ரமத்தில் பூஜை செய்து வரும் N. சுப்ரமண்ய ஐயரும், அடுத்து K. கிருஷ்ணமூர்த்தி ஐயரும் வீடுகள் கட்டிக் கொண்டு குடும்பத்துடன் இருந்து வருகிறார்கள். இவர்களுக்கு தென்புறம் மனை வாங்கி ராஜபாளையம் ராமம்மாள் இருக்கிறார். அதற்கும் தெற்கே, ஸ்டேஷன் மாஸ்டர் கல்யாணசுந்தரமய்யரும், அதற்கு எதிர்புறம் V. K. S. ஐயரும் மனை வாங்கி இருந்து வந்தனர். தற்போது கல்யாணசுந்தரமய்யரின் வீட்டை, பேராசிரியர் விஸ்வநாதய்யரும், V. K. S. ஐயர் வீட்டை, ஆச்ரம கைங்கரியம் செய்து வரும் சுப்ரமண்யமும் வாங்கியிருக்கிறார்கள். இந்த இரு கட்டிடங்களுக்கும் தென் பாகம் கடைசியில் C. பழமலைநாதன் பிள்ளை பெரிய மனை வாங்கி வீடுகள் கட்டி அவர் குடும்பத்தினர் இருந்து வருகிறார்கள். சுப்ரமண்யத்தின் வீட்டிற்கு வடபுறம் ஆங்கிலேய அன்பர் டாக்டர் மீஸ் சாஸ்திரிகளின் சீடரான ரீட் என்னும் ஹம்ஸா, தக்ஷிணா மூர்த்திக்கு கோவில் கட்டி இருந்து வருகிறார்.

ஆச்ரமத்திற்கு கிழக்கேயுள்ள ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி கோவிலுக்கு நேர் தெற்கில் உள்ள தெருவில் கீழண்டை பக்கத்தில் சேலம் ஆனந்தம்மாள் நாராயணய்யர் கட்டி இருந்து வந்த கட்டிடத்தை தற்சமயம் ஆங்கிலேய பக்தர் ஒருவர் வாங்கி தங்கியிருக்கிறார். அதற்கு தெற்கே முனகால வெங்கட்ராமய்யர் கட்டிடத்தில் தற்போது அவர்

மாப்பிள்ளையும், காமாக்ஷியம்மாள் கணவருமாகிய ஒருகண்டி, பேராசிரியர் ராமசந்திரய்யர் இருக்கிறார். அக்கட்டிடத்தின் மற்றொரு பகுதியில் ஆச்ரம நெடுநாளைய பக்தர் நரஸிம்மய்யர் குடும்பத்துடன் இருந்து வருகிறார். அதற்கு தெற்கில் ஆர்தர் ஆஸ்பர்ன், பங்களா எழுப்பி பல வருடங்களாக இருக்கிறார். அதற்கு அடுத்து பேராசிரியர் D. K. துரைசாமி ஐயர் வீடு கட்டி குடும்பத்துடன் இருந்து வந்தார். பிறகு அதை, சென்னை வெல்லிங்டன் சினிமா தியேட்டர் உரிமையாளர் பிரேம்ஜி வாங்கி விஸ்தாரமாகக் கட்டி, அவர் குடும்பத்தினர் ஸ்ரீ பகவான் தரிசனத்திற்கு இங்கு வரும் சமயங்களில் தங்கியிருந்து செல்கிறார்கள். அந்த கட்டிடத்தின் ஒரு பகுதியில் சாது நடனானந்தர் இருக்கிறார். பிரேம்ஜி கட்டிடத்திற்கு எதிர்வரிசையில் சப்ரிஜிஸ்டார் நாராயணய்யர் கட்டிடம் கட்டி குடும்பத்துடன் நீண்ட வருடங்கள் இருந்தார். பிறகு அதை "பெல்" ஸ்டுடியோ உரிமையாளர் அய்யாசாமி வாங்கியுள்ளார். அதில் ஸ்ரீ பகவத் தரிசனத்திற்கு வரும் அன்பர்கள் தங்குகிறார்கள். அதற்கு அடுத்து கிருஷ்ணசாமி முதலியாரின் கட்டிடத்தில் அவர் மனைவி ருக்மணியம்மாள் இருந்து வருகிறார். அதற்கு பக்கத்தில் குஜராத்தி தம்பதியராகிய C. V. பரேக் கட்டிடம் எழுப்பி தங்கியிருக்கிறார்கள். இக்கட்டிடத்திற்குப் பக்கத்தில் ஆந்திர அன்பர் வெங்கட்ரத்தினமும், ஆங்கிலேய பக்தர் நீலுவும் கட்டிடம் கட்டி இருந்து வந்தார்கள். வெங்கட்ரத்தினம் காலத்திற்குப் பிறகு நீலு மட்டும் இருக்கிறார். இதற்கு வடக்கு புறத்தில், ஸம்ஸ்கிருத மகா பண்டிதர் இஞ்சிக்கொல்லை ஜகதீச சாஸ்த்ரிகளின் வீட்டை தற்சமயம் V. தான்மல் சௌக்கார் வாங்கியுள்ளார். ஸ்ரீ ரமண நகரில் இதுவன்றி மற்றும் பல குடும்பங்கள் இருந்தாலும், மேற்குறிப்பிட்டுள்ளவர்கள் அனைவரும், தங்கள் சொந்த

ஊர் வேருக இருந்தும், வியாபார நோக்கத்திற்காகவோ, அல்லது வேறு காரணங்களுக்காகவோ அன்றி ஸ்ரீ பகவானின் அருட்சக்தியின் ஈர்ப்பால், சந்நிதியின் மகத்துவம் உணர்ந்து, அதை அநுபவிக்கும் பாக்கியமே பெரும் பாக்கியமாகக் கருதி, மனமுவந்து ஸ்ரீ ரமண நகர் வாசிகளானுர்கள் என்பது போற்றத்தக்க விஷயமாகும்.

67. ஸ்ரீ பகவான் ஜயந்தி நூற்ருண்டு விழாவின் ஆரம்ப விழா

மஹா கும்பாபிஷேகம்

ஸ்ரீ பகவான் நூற்ருண்டு ஜயந்தி விழாவின் ஆரம்ப விழாவாக, சித்தார்த்தி வருடம், கார்த்திகை மாதம் 6-ஆம் தேதி (22-11-1979) வியாழக்கிழமை காலே, 8 மணிக்கு மேல் 9 க்குள், ஸ்ரீ பகவான் பொன்னுர் திருமேனி சமாதி கொண்டிலங்கும் அருணுசல ஸ்ரீ ரமணேச்வர மஹா லிங்கத்திற்கும், ஸபரிவார ஸ்ரீ யோகாம்பிகா ஸமேத ஸ்ரீ மாத்ருபூதேச்வரருக்கும் ஜீர்ணுேத்தாரண, அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்புற நடை பெற்றது. ஆகம விதி முறைப்படியோ அல்லது வைதீக தர்மத்தின்படியோ கட்டப்பட்ட கோயில் போன்ற ஸ்தாபனங்களில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பா பிஷேகம் நடத்த வேண்டியது கடமையாகும். 1967-ஆம் ஆண்டு, ஸ்ரீ பகவான் சமாதி மண்டப வேலே பூர்த்தியாகி, ஸ்ரீ பகவான், ஸ்ரீ மாத்ருபூதேச்வரர் ஆலயங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் விமரிசையாக நடந்தேறியது. மேற்படி கும்பாபிஷேகம் நடந்து 12 வருடங்கள் ஆகிறது. இச் சமயம் ஸ்ரீ பகவான் நூற்ருண்டு விழா வைபவம் நிகழ இருப்பது, மிகப் பொருத்தமாக அமைந்தது ஸ்ரீ பகவான் திருவருட் செயலேயாகும்.

நூற்ருண்டு விழாவின் ஆரம்பமாக, மஹாகும்பா பிஷேகம் நடத்தத் தீர்மானித்து அவ்வாறே நடைபெற்றது. இக் கும்பாபிஷேகத்தின் முக்கியதோர் அம்சமாக, ஸ்ரீ பகவான் ஆலய விமானத்தின் மேலிருந்த பழைய செப்புக் கலசத்திற்கு தங்க முலாம் பூசப்பட்டு, 19-11-79 காலே அக் கலசம், மங்கல வாத்தியம் முழங்க, வைதீக முறைப்படி எடுத்துச் சென்று விமானத்தில் பொருத்தப் பட்டது. அடுத்து அன்று காலே, சம்ப்ரதாயப்படி அமைக்கப்பட்டிருந்த யாகசாலேயில், தக்க பல வேதவிற் பனர்களால் அனுக்ஞை, விக்னேச்வர பூஜை, தனபூஜை, ரக்ஷோக்ன ஹோமம், வாஸ்து சாந்தி, முதலியவைகள் நடத்தி, மாலேயில் சாஸ்த்ர சம்ப்ரதாயப்படி மந்திரப்பூர்வ மாக பிரதான மூர்த்திகளே கடஸ்தாபனம் செய்து, அந்த கலசங்களே மந்திர கோஷங்களுடன் யாகசாலேக்கு எடுத்துச் சென்று ஸ்தாபிக்கப்பட்டு யாகபூஜை, பூர்ணுகுதி யுடன் முதற்கால பூஜை முடிவு பெற்றது. 22-11-79 குரு வாரம் காலேயுடன் ஆறுகால யாகசாலே ஹோமம் பூர்த்தி யாகி, கலசங்களே தெய்வமரியாதையுடன் கோயிலேச் சுற்றி வலமாகக் கொண்டுவந்து, கோபுரத்தின் உச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டு 8 மணிக்கு மேல் 9 மணிக்குள், கோபுர, விமானங்களுக்கும் ஒரே சமயத்தில் மஹாகும்பா பிஷேக புனித நீராட்டி, கற்பூர ஹாரத்தியுடன் விதி முறைப்படி வெகு விமரிசையாக நடந்தேறியது, கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மேற்படி குடமுழுக்கு விழாவிற்கான ஆறுகால யாக பூஜையிலும் பூர்ணுகுதியாக, பட்டுப் புடவை, பட்டு ரவிக்கைத்துண்டு, தாம்பூல, பழவர்கங்கள் முதலானவை ஹோமகுண்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. வெளியூர்களி லிருந்தும், உள்ளூரிலிருந்தும் வந்து கலந்து கொண்ட பல வைதீகர்களுக்கும், புது வஸ்திரங்களும், தாராளமாக

தக்ஷிணைகளும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு கால ஹோம பூஜைக்கும், பிராமண சுமங்கலிகளுக்கு புடவை, ரவிக்கைத்துண்டு, தாம்பூலம் அளிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டது. பூஜையில் கலந்து கொண்ட வைதீக பிராமணர்களுக்கெல்லாம் தினப்படி வடை, பாயஸத் துடன் தனிப்பட்ட கவனத்துடன் ஆகாரம் செய்விக்கப் பட்டது. பூர்ணுகுதி முதல் மற்ற செலவுகள் யாவும் சேர்ந்து, ஒருகால யாக பூஜைக்கு ரூ. 2,500 வரை ஆயிற்று. இவ்வாறே ஆறுகால பூஜையும் நிறைவு பெற்றது. யாக பூஜைகளேயும், மஹா கும்பாபிஷேகத்தையும் திரளான பக்தகோடிகள் கண்டுகளிக்கும் புண்ணியம் பெற்றனர். கும்பாபிஷேகத்தன்று மாலே 7 மணிக்கு ஸ்ரீ தாயார் சமாதி ஸ்தலமாகிய ஸ்ரீ யோகாம்பிகா ஸமேத ஸ்ரீ மாத்ருபூதேச்வர ருக்கும், ஸ்ரீ பகவான் அருவுருவாய் நிறைந்திலங்கும் ஸ்ரீ ரமணேச்வர மஹாலிங்கத்திற்கும் மஹாபிஷேகமும், விசேஷ அலங்கார ஆராதனேகளும் நடந்து, மஹாகும்பா பிஷேகம் இனிது பூர்த்தி பெற்றது.

இப்புனித குடமுழுக்கு நீராட்டு விழாவிற்கு ஆச்ரம நிர்வாகியான திரு. T. N. வெங்கட்ராமன் அவர்கள், தம் தர்மபத்தினியாகிய திருமதி நாகலக்ஷ்மியம்மாள் சகிதம், கர்த்தாவாக இருந்து நடத்தி வைத்தார். மற்றும் மூன்று கோபுரங்களுக்கும் பழுது பார்க்கும் பணிகளேயும், கும்பாபிஷேக சகல ஏற்பாடுகளுக்கும் முழு பொறுப்பேற்று நல்ல முறையில் திருப்பணி வேலேகளே உரிய காலத்தில் முடிக்கவும், கும்பாபிஷேகம் இனிதுநடந்தேறவும் அயராது உற்சாகத்துடன் உழைத்து, ஒரு புண்ணிய நற் காரியத்தை முடித்துக் கொடுத்த பெருமை, திருவாரூர் மாங்குடி கிருஷ்ணுனந்த ஸ்வாமி அவர்களுக்கு உரிய தாகும். இவர் பல தேவஸ்தான நிர்வாகியாக இருந்து,

பல திருப்பணிகள், கும்பாபிஷேகங்கள் நடத்தி அநுபவப் பட்ட பரம ஆஸ்தீகர். மற்றும் சுதந்திரப் போராட்ட வீரரும் ஆவார்.

ஆலய பிரதிஷ்டைகள் இரண்டு வகைப்படும். அவை ஆகம பிரதிஷ்டை, வைதீக பிரதிஷ்டை எனப்படும். ஸ்ரீ அருணுசலேச்வரர் ஆலயங்களைப் போன்றவைகள் ஆகம பிரதிஷ்டையாகும். அங்கு பூஜை செய்பவர்கள் சிவாச்சாரியார் அல்லது குருக்கள் என்றழைக்கப்படுவார் கள். இவர்கள் செய்வது ஆகம பூஜையாகும். ஆச்ரமத்தி லுள்ள ஸ்ரீ மாத்ருபூதேச்வரர், ஸ்ரீ ரமணேச்வர மஹாலிங்க ஆலயம் போன்றவைகள் வைதீக பிரதிஷ்டையாகும். இங்கு வைதீக அநுஷ்டானப்படி, வேதம் படித்த வைதீகர் களைக் கொண்டு பூஜைகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. ஆகம பிரதிஷ்டைக்கும், வைதீக பிரதிஷ்டைக்கும் அதிக வித்யாசங்கள் கிடையாது. ஆனுல் ஆகம விதிப்படியும், வைதீக விதிப்படியும் சில மந்திர, தந்திரங்கள் மாறுபடும். ஆகமம் படித்தவர்கள் வைதீக பூஜை செய்யமாட்டார்கள். அவ்வாறே வைதீகம் படித்தவர் களும் ஆகம பூஜை செய்யமாட்டார்கள். அஷ்டபந்தன கும்பாபிஷேகம் என்பது, எட்டு வகை சரக்குகள் சேர்த் திடித்த மருந்துக் கலவையினுல் லிங்கத்தையும், ஆவடை யாரையும் இணைத்து வைத்து விதிமுறைப்படி செய்விக்கும் கும்பாபிஷேகம் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் எனப்படும். கும்பாபிஷேகத்திற்காக நடத்தப்படும் யாக சாலையில் ஹோமம் நடத்த கட்டப்படும் குண்டங்கள் மூன்று வகைப்படும். அவை நவகுண்டபக்ஷம், பஞ்ச குண்டபக்ஷம், ஏககுண்டபக்ஷம் என்பனவாகும். மேலும் யாகசாலை பூஜைகளிலும் ஒன்பது காலம், ஆறு காலம், மூன்று காலம் என மூன்று வகைகள் உண்டு.

22-11-79 வியாழக்கிழமை கும்பாபிஷேகம் நிறைவு பெற்றது. மறுநாள் 23-11-79 வெள்ளிக்கிழமையிலிருந்து நித்தியப்படி மஹான்யாச அபிஷேக ஆராதனைகள் ஸ்ரீ பகவான், ஸ்ரீ மாத்ருபூதேச்வரர், ஸ்ரீ சக்ரமேரு முதலியவைகளுக்கு சம்ப்ரதாயப்படி செய்வித்து 9-1-80 புதன் கிழமை 1008 சங்காபிஷேகத்துடன் மண்டலாபிஷேகம் மிக விமரிசையாக பூர்த்தி பெற்றது.

68. ஸ்ரீ பகவான் ஜயந்தி நூற்றூண்டு விழாவின் இரண்டாவது சிறப்பு நிகழ்ச்சி.

I

கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா.

அகில இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்தும், ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள், ஸ்ரீ பகவானின் வாழ்க்கை வரலாறுகளையும், உபதேசங்களையும் படித்துத் தெரிந்து கொண்டு, பல இடங்களில் நடந்த போட்டிகளில் கலந்து கொண்டனர். ஸ்ரீ பகவான் பிறந்த நூற்றூண்டு வைபவத்தில், வருங்கால இளம் சந்ததியினர் ஸ்ரீ பகவான் அருளிய பாட்டுகளையும், உபதேசங்களையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பாக இச் சந்தர்பத்தை ஏற்பாடு செய்தனர். சிறப்பு மிகு இக் கருத்து நிறைவேற, நூற்றூண்டு விழா குழுவினர் பல்வேறு மாகாணங்களிலுள்ள கல்வி ஸ்தாபனங்களின் மாணவர்களுக்கு அவரவர் இடங்களிலேயே முதலில் போட்டிகளை நடத்த விரும்பி பற்பல கல்லூரி, உயர்நிலை பள்ளி ஸ்தாபகர்களுடன் தொடர்பு கொண்டு மாணவரிடையே போட்டிக்கு ஏற்பாடு செய்த, ஸ்ரீ பகவான் பக்தர்களுக்கு நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

ஆரம்பக் கல்வி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி முதலிய இருநூறு கல்வி ஸ்தாபனங்களிலிருந்து எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் போட்டிகளில் பங்கேற்றனர். தில்லி, ஆந்திரப்பிரதேசம், கர்னாடகம், தமிழ் நாடு முதலியவை போட்டிகளில் கலந்து கொண்டு, ஹிந்தி, கர்னாடக சங்கீதத்திலும், ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கில் ஒப்பித்தல் போட்டியிலும், வியாசம் எழுதுவதில் ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு பாஷைகளிலும் நடைபெற்றன. ஆரம்பத்தில் இந்த போட்டிகளை ஒவ்வொரு கல்வி கூடங்களிலும் தனித் தனியே நடத்தி, அதில் வெற்றி பெற்றவர்கள், அடுத்து பல பள்ளி மாணவர்களுடன் போட்டியில் வென்று சென்னை போன்ற நகர மட்டத்திலும், அடுத்து மாகாண மட்டத்திலும் வெற்றி பெற்று கடைசியாக, அகில இந்திய போட்டியாக ஆச்ரமத்தில் நடைபெற்றன. ஆச்ரமத்தில் 1979 டிசம்பர் 5, 6 தேதிகளில் பல மாணவ மாணவியரின் போட்டிகள், சில முக்கியமானவர்களின் தலைமையில் அன்பர் பலரின் பார்வையில் அமைதியாக, சிறப்பாக நடந்தேறியது. 7-2-1979 ஸ்ரீ பகவான் சந்நிதி முன் உள்ள ரமண ஆடிட்டோரியத்தில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

ஆச்ரம நிர்வாகி திரு. T. N. வெங்கட்ராமன் அவர்கள், அகில இந்திய ரீதியில் முதற் பரிசு பெற்ற மாணவ, மாணவிகளுக்கு, நூக்கமர பிரேமில், வெள்ளியினாலான அண்ணாமலையின் வடிவமும், ஸ்ரீ ரமணாச்ரமம், சோபாவில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ பகவான் திருவுருவமும் பதித்த கேடயங்களை மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் வழங்கினார். சென்னை "ரமண கேந்திரா" தலைவர் திரு. **K. K.** நம்பியார் அவர்கள் மாகாணமட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு அழகிய வெள்ளிக் கோப்பைகள்

பரிசளித்தார். இப்போட்டியில் கலந்து கொண்ட மற்ற மாணவ மாணவிகளுக்கு பிரத்தியேக பரிசுகளும், ஊக்கு வித்தல் பரிசுகளும் கொடுக்கப்பட்டன. இதில் ஒரு அதிசய சம்பவம், தன் 8 வயது சகோதரி இப்போட்டியில் கலந்து கொள்ள மனப்பாடம் செய்ததை, கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த அவள் தங்கை 6 வயது சிறுமி, மிக உற்சாகத்துடன் தன் சொந்த முயற்சியால் வரபடுத்தி போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்றது எல்லோரா லும் பாராட்டப்பட்டது. இது போன்ற நல்ல விஷயங்கள் வளரும் உள்ளங்களில் ஆழமாகப் பதிய, ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு இடங்களில் ஸ்ரீ பகவானின் வரலாறு, உபதேசங்களை படித்து இது போன்ற போட்டிகள் நடை பெற வேண்டுமென பல பெற்றோர்களும், பக்தர்களும் விருப்பம் தெரிவித்தனர். ஆச்ரமமும் இதையே பெரிதும் விரும்புகிறது. ஆண்டு தோறும் இவ்வாறு இனியும் நடைபெற ஸ்ரீ பகவானை பிரார்த்திப்போமாக. இப் பரிசளிப்பு விழா வெற்றிகரமாக நிறைவு பெற உதவியவர் களுக்கு நூற்றாண்டு விழா கமிட்டியின் செயலாளர் திரு. **A. R.** நடராஜன் அவர்கள், ஸ்ரீ பகவானின் மூவண்ண திருவுருவம் பொறிக்கப்பட்ட பெரிய அழகிய தகரப் பெட்டியுள், ஸ்ரீ பகவான் திருவுருவப்படம் மரப்பலகையில் பதித்த சிறு கேடயங்களை வைத்து, நன்றிக்கோர் பரிசாக வழங்கினார். நியூயார்க் நகரிலுள்ள அருணாசல ஆச்ரமத் திற்கு ஒரு பிரத்யேக அன்பளிப்பு, அங்கிருந்து வந்துள்ள திரு. & திருமதி கிரீன் பிளாட்டிடம் நூற்றாண்டு விழா பரிசாக வழங்கப்பட்டது. இதில் பங்கு கொண்ட அனைவரும் பல ஆண்டுகள் மறக்கமுடியாத இந்த இனிய வைபவத்தை நினைவில் கொள்வார்கள். மற்றும் பிற நாட்ட வர்களும், ஆச்ரமவாசிகளும் இந்தியாவின் பல பாகங்களி லிருந்து வந்திருந்த ஸ்ரீ பகவான் பக்தரகளும் கூட இந்த மகிழ்ச்சியான விழாவையும், அதில் கலந்து கொண்ட

உற்சாகமிகு சின்னஞ்சிறுர்களையும் மறக்க முடியாது. இச் சிறப்புமிகு நிகழ்ச்சி நடந்தேற ஊக்கமுடன் ஒத்துழைத்த அன்பர்களுக்கு, V. கணேசன் நன்றியுரை யுடன் விழா இனிது நிறைவு பெற்றது.

மேற்படி போட்டிக்கு, படித்துத் தெரிந்து கொள்ள உதவியாக ஸ்ரீ பகவான் வரலாறும், உபதேசங்களும் பல பாஷைகளில் ஆச்ரம வெளியீடுகள் பல்வேறு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக அனுப் பப்பட்டன. இவ்வாறு இனமாகக் கொடுத்த புத்தகங் களின் மதிப்பு ஒரு இலட்ச ரூபாயாகும். இப் போட்டி களில் கலந்து கொண்ட மாணவ, மாணவியருக்கும், அவர்களை அழைத்து வந்த 400க்கும் மேற்பட்டவர் களுக்கும் இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்து ஆச்ரமம் வந்து, அவரவர் இருப்பிடங்களுக்குத் திரும்பு வதற்கான பஸ், அல்லது ரயில் கட்டணம் ஆச்ரமத்தி லிருந்து வழங்கப்பட்டதுடன் அவர்களெல்லாம் மூன்று தினங்கள் இங்கு தங்க இடவசதி, ஆகார வசதி யுடன் மற்ற சௌகர்யங்களுக்கும் ஆச்ரமத்திலேயே ஏற்பாடு செய்திருந்தது பாராட்டுக்குரிய மிக பெரிய விஷயமாகும் இம்மூன்று நாட்களும் ஆச்ரமம், சிறுவர் சிறுமியர்களின் குதூகல விழாவாகக் காட்சியளித்தது. இவர்களுடன் வந்த மற்ற அன்பர்களுக்கும், இந் நிகழ்ச்சி யின் பயனாக ஸ்ரீ பகவான் தரிசன வாய்ப்பு கிடைத்தது.

ஸ்ரீ பகவானின் பழைய அடியாரில் மிக முதியவரும் மூதறிஞருமாகிய திரு. சாது நடனானந்தர் அவர்கள் இப்பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கதோர் அம்சமாகும். இந்த நூற்றாண்டு விழா கமிட்டியினராகிய பெங்களூர் திரு. A. R. நடராஜன், திருமதி. சுலோசனா நடராஜன் ஆகியோர்களின் மாதக்

கணக்கான ஊக்கமிகு விடாமுயற்சியை பெரிதும் பாராட்ட வேண்டும். நூற்றுண்டு விழா கமிட்டியின் பொக்கிஷதாரர்களில் ஒருவரான திரு. K. வெங்கட் ராமனின் (எச்சம்மாள் பேரன்) அடக்கமான உழைப்பு போற்றத்தக்கதாகும். இவையாவைக்கும் மூலகர்த்தா வாகிய ஸ்ரீ பகவானின் அருளாசியால் இவ்வைபவம் யாவரும் மகிழும் வண்ணம் சிறப்புற நிறைவு பெற்றது.

II

1980 ஜனவரி 3, 4, 5, தேதிகளில் ஸ்ரீ பகவான் நூற்றுண்டு ஜயந்தி விழா வைபவத்திற்குப் பிறகு 1980 மார்ச்சு மாதம் 14, 15, 16 தேதிகளில் நூற்றுண்டு விழா வின் தொடர்பாக பெங்களூரில் ஸ்ரீ பகவான் சிறப்பு நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. இதை முன்னின்று, முழுபொறுப்பேற்று சிறந்த முறையில் நடத்திய பெருமை பெங்களூர் திரு. A. R. நடராஜன் அவர்களையும், அவர் துணைவியார் திருமதி. சுலோசனு நடராஜனையும் சாரும். உண்மையான பக்திவழியிற் செல்பவர்களுக்கு பட்டம், பதவி, பணம் ஏதும் தடைக்கல்லாக இருக்க முடியாது என்பதற்கு ஓர் சான்றுக இவர் தம் குடும்பம் அமைந் துள்ளது ஸ்ரீ பகவானருளாசியே ஆகும். திரு. A. R. நடராஜன் தம்பதியரின் குமாரிகளான சௌ. அம்பிகா, சௌ. சாரதா இருவரும் பெற்றோர்களுக்கேற்ற சிறந்த குழந்தையுள்ளம் படைத்த செல்விகளாகும். மேற் படி கலா நிகழ்ச்சிகள் நடந்த மூன்று தினங்களும் இவர்கள் மெய்வருத்தம் பாராமல், பசி, தூக்கம் மறந்து, கருமமே கண்ணுக செயல்பட்டதை எவ்வளவு புகழ்ந் தாலும் தகும். திரு A. R. N. அவர்கள், நிகழ்ச்சிகள் நடைபெற்றபோது அங்கங்கே தாமே நின்று, சற்றும் தற் பெருமையின்றி யாவற்றையும் உற்சாகமும் சுறு சுறுப்

புதமாக கவனித்தது, அங்கிருந்த யாவரையும் கவர்ந்தது என்பது மிகையல்ல. இனிமையான இல்லறமும், செல்வமும், ஏற்றமிகு பதவியும் பெற்றாலும், அவற்றை நல்வழியில் பயனுற செய்வதென்பது எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. எளிமையும், இனிய மென்மையான சுபாவமும் கொண்ட திரு. A. R. N. அவர்களைப் போன்ற மிகச் சிலருக்கே கிடைத்த நற்றவ வாய்ப்பாகும்.

எல்லோர்க்கும் நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

எனும் வள்ளுவர் வாக்கின்படி அடக்கமொடு நடந்து கொள்வது எல்லோர்க்கும் நல்லதேயானாலும், செல்வர்களுக்கு அதுவே மற்றொரு செல்வமாக அமைந்து விடுகிறது. திரு. A. R. N. அவர்கள் ஒருமுறை மேடையில் பேசுகையில், பக்திவயப்பட்டு தம்மை மீறி விம்மியதைக் கண்டவர் உள்ளம் சிலிர்த்து விட்டது. பூர்வ புண்ணியத்தின் பயனாய், பல பாக்கியங்களை பெற்று, அவைகளை ஸ்ரீ பகவானுடைய நற்பணிகளுக்கே அர்ப்பணம் செய்து வரும் திரு. நடராஜன் அவர்களையும், அவர் குடும்பத்தினரையும் ஸ்ரீ பகவானருள் என்றென்றும் காப்பதாக.

பெங்களூரில் நடந்த சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஆச்ரம சார்பில் இங்கிருந்து 45 பேர் சென்று கலந்து கொண்டோம். சென்னையிலிருந்தும் 55 பக்தர்கள் வந்திருந்தனர். மற்றும் பம்பாய், தில்லி, ஸ்ரீ லங்கா முதலிய இடங்களிலிருந்து பல பக்த அன்பர்கள் வந்து பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் நன்கு படித்த பலரும் "ஸ்ரீ பகவானும், ஸ்ரீ ஆதிசங்கரரும்," என்னும் தலைப்பில் பேசினார்கள். ஸ்ரீ பகவானது உபதேசங்களையும், சீர்த்திமையையும் சிலர் திறம்பட எடுத்துக் கூறினார்கள். மூன்று

நாள் நிகழ்ச்சியிலும் ஒரு நாள், திருமதி. சுலோசனு நடராஜன் தலைமையில், ''ஸ்ரீ ரமணஞ்சலி'' குழுவினரின் பன்மொழி பாடல் நிகழ்ச்சியும், இரண்டு நாள் நாட்டிய இன்னிசையும் நடந்தது. இவ்வைபவத்தின் ஞாபகார்த்த மாக இதில் கலந்து கொண்ட பக்தர்களனைவருக்கும், ஸ்ரீ பகவான் திருவுருவம் 6 வண்ணத்தில் பொறித்திருந்த காலண்டர் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அன்பர் களுக்கு கண்ணுக்கும், காதிற்கும், மனத்திற்கும் அளித்த பல்சுவை விருந்துடன் வயிற்றிற்கும் அறுசுவை உணவு வேளை தவருமல் கிடைக்கச் செய்ததுடன், இரவு நல்ல முறையில் உறங்கினுல்தான், மறுநாள் நிகழ்ச்சிகளை களைப்பு இன்றி யாவரும் கண்டு, கேட்டு களிக்க முடியு மென்பதை நன்குணர்ந்த திரு. நடராஜனவர்கள், அன்பர்கள் அமைதியாக உறங்கவும், காலையில் ஸ்நானம் செய்து புத்துணர்ச்சி பெறவும், செய்திருந்த ஏற்பாடுகள் எல்லோராலும் பாராட்டப்பட்டது. இவ்வாறு எந்த விஷயத்திலும் சற்றும் குறையில்லாமல் செய்திருந்தது போற்றத்தக்க செயலாகும். இதில் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும், இது போல் இன்னெரு சந்தர்ப்பம் கிடைக்காதா ? என எண்ணும்படி செய்தது, திரு. A. R. நடராஜன் தம்பதிகளின் தன்னலமற்ற சீரிய திறமைக்குச் சிறந்த எடுத்து காட்டாகும்.

69. ஸ்ரீ பகவான் நூற்ருண்டு விழா ஜயந்தி மஹோற்சவம்

1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2, 3, 4, தேதிகளில் ஸ்ரீ பகவான் நூற்ருண்டு விழாவாக ஸ்ரீ ரமணஜயந்தி, ஆச்ரமத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இவ் வைபவத்தில் பங்கு கொண்ட பக்த கோடிகளின் உள்ளங்களில் இம்மூன்று தினங்களிலும் கண்டு, கேட்டு, உண்டு அனுபவித்த இன்ப நினைவுகள் என்றென்றும்

நிலேத்து இருப்பன. இப் பெருவிழாவில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான அன்பர்களும், ஸ்ரீ பகவானின் திருவருளுக்குப் பாத்திரமான புண்ணிய சீலர்களாகும். இந்த பொன்னுன வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பாக்கியமல்ல. மூன்று நாட்களும் அதிகாலே 4½ மணிக்கு ஸ்ரீ ரமண நாம சங்கீதத்துடன் ஆரம்பித்து, இரவு 11 மணி வரை இடைவிடாது பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

2-1-80 புதன் கிழமை காலே ஸ்ரீ பகவான் அபிஷேக, பூஜை தீபாராதனேக்குப் பிறகு, இதன் ஆரம்ப விழாவை, புதுக்கோட்டை புவனேஸ்வரி அதிஷ்ட்டானத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள், மங்கள வாத்தியம் முழங்க, தொடங்கிவைத்துப் பேசும் போது "ஸ்ரீ ரமண மஹரிஷிகள் யாதொரு சந்தேகத்திற்கும் இட மின்றி அகிலபுவன இறைவனே! ஆதலால் பதினெண் புராணங்களும் ஸ்ரீ பகவானின் பெருமைகளேயே புகழ் கின்றன" என உணர்ச்சி ததும்பப் பேசினுர். அடுத்து புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிக்குப் பிறகு பேசிய ஸ்ரீ குமார ஸ்வாமி தீக்ஷிதர் "அருணுசல மஹாத்மியம்" எனும் தலேப்பில், உபநிஷதங்களில் கூறியுள்ளவைகள் யாவும், ஸ்ரீ பகவானேயே குறிப்பிடுகின்றன. அதாவது சுருங்கக் கூறின் உபநிடதப் பொருளாகவே ஸ்ரீ பகவான் விளங்கு வதாகவும், காவ்யகண்ட கணபதி முனிவர் எழுதிய ஞானியரின் லக்ஷணங்களேக் குறிக்கும் ஸ்லோகங்களேயும் மேற்கோளாக எடுத்துக் கூறி, ஆதாரத்துடன் ஆணித்தரமாகப் பேசியது எல்லோர் உள்ளத் தையும் கவர்ந்தது. இவருக்குப் பிறகு பம்பாய் ஸ்ரீமதி மணிஸாஹூகரின் ஆங்கில சொற்பொழிவை அடுத்து, டில்லி தண்டபாணி ஓதுவார் அவர்களால், ஸ்ரீ முருகனுர் ஸ்வாமிகளின் ஸ்ரீ ரமணசந்நிதிமுறை

பாடல்களும் பாடப்பட்டன. பிறகு பிரபஞ்சம் சீதாராமன், ஸ்ரீ பகவான் பற்றிய தோத்திரப்பாக்களை புல்லாங் குழலில் இசைத்தது காதுக்கு இனிமையாக இருந்தது. அடுத்து மைசூர் பேராசிரியர் K. B. ராம கிருஷ்ணராவ் அவர்களின் "ஸ்ரீ ரமணரும், அத்வைத பாரம்பரியமும்" என்ற தலைப்பில், ஆற்றிய ஆங்கில சொற்பொழிவு மிகச்சிறப்பாக அமைந்தது. அதை அடுத்து இசை விருந்தாக மஹாராஜபுரம் சந்தானம் அவர்களின் இன்னிசைக்கு, M. S. கோபாலகிருஷ்ணன் வயலின், வேலூர் ராமபத்ரன் மிருதங்கம், H. P. ராமாச்சார் கஞ்சிரா முதலிய பக்கவாத்தியங்களுடன் இனிது நடை பெற்றது. இரவு ப்ரம்மஸ்ரீ பாலகிருஷ்ன சாஸ்த்திரிகளின் "ஸ்ரீ ரமண விஜயம்" எனும் சங்கீத உபன்யாசத்துடன் முதல்நாள் வைபவம் நிறைவுபெற்றது.

3-1-80 ஸ்ரீ ரமண ஜயந்தி விழாதினமாகிய குரு வாரத்தன்று காலை வேதபாராயண கோஷத்துடன், ஸ்ரீ பகவானுக்கு அபிஷேக ஆராதனைகள், நாதஸ்வர வித்வான், திரு P. K. மதுரை குழுவினரின் மங்கள வாத் தியத்துடன் பல பக்தர்கள் கண்டு களிக்க விமரிசையாக நடந்தேறின. ஸ்ரீ பகவான் சமாதிக்கு முன்புள்ள "ரமண ஆடிட்டோரியம்" எனும் தரிசன்ஹால் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு புஷ்பப்பந்தலாகக் காக்ஷியளித்தது. (இது பெங்களூர் திரு. ராமசந்திர கோடேயின் பக்தி பூர்வ மான காணிக்கையாக எழுந்தது). பிறகு 10மணி அளவில் ஆச்ரம கைங்கரியங்களில் அயராது ஒத்துழைத்துவரும் பல அன்பர்களுக்கு, ஸ்ரீ பகவான் திருவுரு அமைந்த கை கெடிகாரங்களும், சால்வைகளும் ஆச்ரமநிர்வாகி திரு. T.N. வேங்கட்ராமன் அவர்களால் பரிசாக அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. மற்றும் ஸ்ரீ பகவான் நூல்களாகிய 'மணிமொழிகள்', 'ஸ்ரீ அருணாசலஸ்துதி பஞ்சகம்' ஆகிய

புத்தக வெளியீட்டிற்குப் பிறகு ஹுப்ளி C. N. சாஸ்த்ரி குழுவினர், சென்னை M. R. சீனுவாசன் குழுவினர், திருவண்ணுமலை ஸ்ரீ சாது ஓம் குழுவினர் ஆகியோர்களின் ஸ்ரீ ரமண புகழ் கீதங்கள் பாடப்பட்டன. மதியம் "ஸ்ரீ ரமண அனுபவம்" என்னும் தலைப்பில் திரு. K. K. நம்பியார் அவர்களும், "ஸ்ரீ ரமணரின் மகத்துவம்" என்ற தலைப்பில் பெங்களூர் திரு. A. R. நடராஜன் அவர்களும் விரிவுரையாற்றினுர்கள். மாலை ஸ்ரீ பகவான் நூற்றுண்டு விழா கமிட்டியின் போஷகரும், செகந்தராபாத் ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தின் தலைவருமாகிய ஸ்வாமி ஸ்ரீ ரங்கநா தாநந்தா அவர்களால் "பகவான் ஸ்ரீ ரமணரின் நிரந்தர உபதேசம்" என்ற தலைப்பில் வேதம், உபநிஷத்தில் சொல்லியுள்ள உண்மையை நிரூபிக்கும் வண்ணம் நிதர்சனமாக ஸ்ரீ பகவான் வாழ்ந்து காட்டினுர்கள். ஸ்ரீ பகவான் மனிதவடிவில் தோன்றிய ஒப்பற்ற முடிவற்ற பரம்பொருளே என்றும், அவரை வழிபட்டால் விடுதலைக்கு மார்க்கமாகுமென்றும் கேட்பவர் மெய்மறக்க ஆங்கிலத்தில் உரையாற்றினுர்.

அன்று இரவு பெங்களூர் திருமதி. சுலோசனு நடராஜன் தலைமையில் ஸ்ரீ பகவான் அருளிய பாடல்களும், ஸ்ரீ பகவானின் புகழ் மாலைகளும் பன்மொழித் தொகுப்பு நிகழ்ச்சியாக, 21 உறுப்பினர் கொண்ட "ஸ்ரீ ரமணுஞ்சலி" குழுவினரால் "ஸ்ரீ ரமண வைபவம்" எனும் தலைப்பில் இன்னிசை நிகழ்ச்சி பல வாத்தியங்களுடன் மிகச்சிறப்பாக நிகழ்த்தப் பட்டது. இதை நடத்திய குழுவினர், தாங்களும் மெய் மறந்து உணர்ச்சி வசப்பட்டு, இதை கண்டு, கேட்டு களித்த பக்த பெருமக்களையும், உணவையும் மறந்து, தம்மையும் மறந்து இருக்கும்படி செய்தனர். இக் கலை நிகழ்ச்சி இரவு 11 மணிக்கு முடிவு பெற்றதும், ஸ்ரீ பகவான்

திருவுருவப்படம், நிறைய புஷ்பமாலைகளால் அலங்கரிக்கப் பட்டு, கிரிபிரதக்ஷண ஊர்வல விழா மிக கண்கொள்ளா காக்ஷியாக அமைந்தது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் சூழ்ந்து வர, பல வண்ண வாண வேடிக்கைகளுடன், நாதஸ்வர இன்னிசை முழங்க ஸ்ரீ பகவான் திரு உலா புறப்பட்ட வைபவம் என்றும் காணாத அற்புத காக்ஷியாகத் திகழ்ந்தது. நாமாவளி பஜனைகளையும், ஸ்ரீ பகவா னருளிய பாடல்களையும், மற்றும் பல பக்தி பாடல்களையும் அன்பர்கள் பிரதக்ஷணபாதை முழுமையும் பாடி பரவச மாயினர். ஸ்ரீ பகவான் திருவுருவப்படத்துடன், திரளான பக்தர்கள் கிரிபிரதக்ஷணம் நடைபெற்றது இதுவே முதல் முறையாகும். இவ்வூர்வலம் ஆச்ரமம் வந்து சேர விடியற் காலை 4½ மணி ஆயிற்று.

4-1-80 வெள்ளிக்கிழமை மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் மங்கள வாத்திய முழக்கத்துடன் ஸ்ரீ பகவான் அபிஷேக ஆராதனையுடன் தொடங்கியது. பத்து மணியளவில் 'பகவான் ஸ்ரீ ரமணரும் தாயுமானவரும்' எனும் தலைப்பில் புரிசை முருகேச முதலியார் பேசினார். அடுத்து ஆச்ரம பத்திரிகையாகிய "மவுண்டன் பாத்" நிர்வாக ஆசிரியர் V. கணேசன், M.A., "ரமணரும் என் வாழ்வும்" எனும் ஆங்கில சொற்பொழிவும், கானடா அருணாசல ஆச்ரம ஸ்ரீ பகவான் பக்தை ஸ்ரீமதி ஜோன் கிரீன் பிளாட் அவர் களின் "ஸ்ரீ ரமணர் காட்டிய ஆன்மிக வாழ்க்கை வழி" என்ற உரையும், கேட்பவர்கள் உள்ளத்தைத் தொடக்கூடியவைகளாக அமைந்தன. பேராசிரியர் Dr. O. ராமச்சந்ரய்யா "பகவான் ஸ்ரீ ரமணா" எனும் தலைப்பில் சிறப்பு தெலுங்கு உரையாற்றினார். அடுத்து சிதம்பரம் சுவாமிநாதன் "அருணாசல ரமண மஹரிஷி" எனும் பொருளில் அழகான விளக்கங்களுடன் பேசினார். பிறகு பெங்களூர் S.கிருஷ்ணஸ்வாமியின் "சத்குரு ரமணா"

எனும் பேச்சும், ஸ்வாமி பிரணவானந்தாவின் "ரமண வசன வேத" என்ற கன்னட சொற்பொழிவும் நிறைவாக இருந்தன. இதன் பிறகு பெங்களூர் **H. K.** நாராயணு குழுவினரின் ரமண இசை, இனிமை நிறைந்ததாக இருந்தது. அடுத்து ஸ்ரீமதி பிரபாவதி ராஜே ஆற்றிய ஆங்கில சொற்பொழிவில் "நான் பகவானுடன் இருந்த நாட்கள்" எனும் தலைப்பில் தமது ஆழ்ந்த அனுபவத்தை விளக்கிக் கூறியது பாராட்டிற்குறியதாக இருந்தது. உதகமண்டலம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரம தலைவர் ஸ்வாமி ஸ்ரீ ஏகாத்மானந்தா "ஸ்ரீ ரமணர் அகில உலக சத்குரு" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினர். இரவு சங்கீத கலாநிதி **D. K.** ஜெயராமன், குமாரி **A.** கன்யாகுமாரி வயலின், **T. K.** மூர்த்தி மிருதங்கம் ஆகிய பக்கவாத்தியங்களுடன் மிக உற்சாகமாக இன்னிசை விருந்தளித்தார்.

மஹராஜபுரம் சந்தானம் அவர்களும் D. K. ஜெயராமன் அவர்களும் கச்சேரியில் பாடிய பாட்டுகள் யாவும் ஸ்ரீ பகவான் அருளிய நூற்றிரட்டிலிருந்தும், ஸ்ரீ ரமண சந்நிதிமுறையிலிருந்தும்; மற்றும் பல பாடல்கள் ஸ்ரீ பகவானை குறித்ததாகவும் இருந்தது குறிப்பிட வேண்டிய அம்சமாகும். இவ் இன்னிசைக்குப் பிறகு, சுந்தர் குமாரின் "ஸ்ரீ ரமண அவதாரம்" எனும் கதாகாலக்ஷேபம் நடந்தேறியது.

மேற்படி மூன்று நாள் வைபவத்திலும் ஸ்வாமி ஸ்ரீ சாதுராம் அவர்களின் "ஸ்ரீ ரமண சரித்திரம்" என்னும் சங்கீத உபன்யாசம் சிறப்பான ஓர் இடத்தை வகித்தது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இம்மூன்று தினங்களிலும் பல மொழிகளில் நடந்த சொற்பொழிவுகள், இன்னிசைகள், சங்கீத உபன்யாசங்கள் முதலிய யாவும், வேறு எந்த விஷயங்களுக்கும் சிறிதும் இடமின்றி

எல்லாவற்றிலும் ஸ்ரீ பகவான் திருநாமங்களும், பிரபாவங்களுமே இடம்பெற்றதாய் அமைந்தது, ஆயிரக்கணக்கான அன்பர்களை பேரானந்தப் பெருங் கடலில் மூழ்கி திளைக்க வைத்தது. பெங்களூர் ஸ்ரீ ராமச்சந்திர கோடே, தன் கைங்காரியமாக மிக அழகிய, பெரிய அளவில் உள்ள (20''x25'') ஸ்ரீ பகவான் திருவுருவக் கலர் படம் அச்சிட்டு பக்தர்களுக்கு தாராளமாக இனமாக வினியோகிக்கச் செய்தது போற்றத்தக்க செயலாகும். மேற்படி திருவுருவப் படம் இனமாகக் கிடைத்து வாங்கிச் சென்றது பெரிய காரியமல்ல, அதனுடைய உயர்வும் மதிப்பும் தெரிந்து யாவரும் கண்ணடி (பிரேம்) போட்டு தங்கள் வீடுகளில் வைத்து வணங்கவேண்டுமென்பதே இப்பட வினியோகத்தின் முக்கிய நோக்கமாகும். இதை எல்லோரும் செயல் படுத்துவது நல்ல புனித காரியமாகும். மற்றும் பெங்களூரில் அமைந்துள்ள "ஸ்ரீ ரமண மஹரிஷி போதன நிலையத்தின்" ஒத்துழைப்புடன், பெரிய அளவிலான அழகிய, 1980ஆம் வருடத்திய "நாட்குறிப்பு" (டைரி) ஸ்ரீ பகவானின் 12 திருவுருவங்களை பல வண்ணப் படங்களாகத் தாங்கி ஸ்ரீ பகவான் நூற்றுண்டு விழா சிறப்புக்கோர் நினைவாக வெளியிடப்பட்டுள்ளது. இந் நாட்குறிப்பின் ஒவ்வொரு பக்கத்திலும் ஸ்ரீ பகவானது உபதேச மொழிகளை பொறித்திருப்பது மிக உயர்வாகத் திகழ்கிறது. அசாதாரணமான, ஸ்ரீபகவானின் அருட்சக்தியின் எதிரொலியான இவ்வெற்றி முழக்கம் எதை பிரதிபலிக்கிறதென்றுல், ஸ்ரீ பகவான் "நான் எங்கு போக முடியும் ? எப்படிப் போக முடியும்" என்ற சத்திய வாக்கை நிரூபிப்பதாக இருக்கிறது. ஸ்ரீ பகவானது அருள் மழையை ஒவ்வொருவரும் உணர்ந்து பரவசமடைந்தது முக்காலும் உண்மையாகும்.

70. நிறைவுரை

முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர்கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானுள்
அன்னையையு மத்தனையு மன்றேநீத்தாள்
அகன்றுள் அகலிடத்தா ராசாரத்தை
தன்னை மறந்தாள்தன் னுமங்கெட்டாள்
தலைப்பட் டாள்நங்கை தலைவன்தாளே,

என்ற திருநாவுக்கரசரின் திருவாக்கின்படி, முதன்முதல் எனக்கு வேதாந்தபாடம் சொல்லிக்கொடுத்த ஆசிரியரின் வாய்மொழி மூலம் ஸ்ரீ பகவானின் திருநாமத்தையும், வண்ணத்தையும், அருணுசலத்தையும் கேட்ட மாத்திரத்தில் ஆனந்த மேலீட்டால் மெய்சிலிர்த்து, அன்னையையும் அச்சனையும் அன்றே நீத்து, அந்நிமிடமே அண்ணுமலைக்கு விரைய விரும்பியும், எனக்கு ஸ்ரீ பகவான் திருநாமத்தை உரைத்த ஆசிரியரின் ஆணைக்கிணங்க, சில மாதங்கள் தவிக்கும் உள்ளத்துடன் கேரளாவிலேயே இருக்கும்படியான நிர்பந்தம் நேர்ந்தது. பிறகு அதனின்றும் விடுபட்டு அருணுசலத்தை நாடி விரைந்தோடி வந்து "கொள்ளினும் நல்ல குருவினை கொள்ளுக, உள்ள உடற்பொருள் ஆவியுடன் ஈக", எனும் திருமந்திரத்திற்கேற்ப ஸ்ரீ பகவானை தரிசித்த மாத்திரத்திலேயே,

என்னுடை மனது புந்தி இந்திரிய சரீர மெல்லாம்
என்னுடை யறிவி னுலே இரவிமுன் னிமமே யாக்கி
என்னுடை நீயு நானு மேகமென் றைக்யஞ் செய்ய
என்னுடை குருவாய்த் தோன் றும் ஈசனை இறைஞ்சி
னேனே

(கைவல்யம்)

என்பதின் விளக்கமாக ஸ்ரீ பகவான் திருவடிபணிந்து நின்றேன். "குலவுசற் குருவின்பாதக் குளிர்புனற் றலே மேற்கொண்டால், உலகினிற் றீர்த்த மெல்லாம் உற்றபே ரடைவார் போல", என்ற கைவல்ய பாடலுக்கு இலக்கண மாக, சற்குருவாம் ஸ்ரீ ரமணவாரிதியில் மூழ்கி பெறற் கரும் பேறுபெற்றேன்.

அன்னையாய், தந்தையாய், சற்குருவாய், தெய்வமாய், உலகில் எனக்குஅனைத்துமாய் எனையேன்று எடுத்தாண்ட எந்தை, வள்ளல் ரமணனே,

பத்தனே என்கோ பரமனே என்கோ,
பரிவுடை கிருத்துவே என்கோ
முத்தனே என்கோ முனிவனே என்கோ.
முகமது நபியென மொழிகோ
வித்தனே என்கோ விமலனே என்கோ,
வீரகோ தமமுனி யென்கோ
அத்தனே என்கோ குமரனே என்கோ,
அண்ணலே ரமணமா தேவே,

(ஸ்ரீ ரமணசந்நிதி முறை)

என்று போற்றிப் புகழ்வதல்லாமல் மற்றென்றும் அறியா இவ்வெளியேனை, தம் திருமேனிக்குக் குற்றேவல் செய்யவும் குறிப்பாகக் கொண்ட குணக்குன்றும் ஸ்ரீ பகவானது எல்லையற்றக் கருணையை நினைக்குந்தோறும், "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என தலைநிமிர்ந்து,

ஆராலு மென்னை அமட்டவொண் ணுதினி
சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி யங்கே திரிவதல் லாவினி
ஆர்பாடுஞ் சாரா அறிவறிந் தேனே.

(திருமந்திரம்)

என எண்ணி எண்ணி இரும்பூதெய்தச் செய்கிறது. இனியும் எத்துணைப் பிறவி எடுத்தாலும்,

பருநா டரையாளும் பாக்கியமும் யான்வேண்டேன்
வருவா தனையகற்றி வாழ்வளிக்கும் பெம்மான்முன்
விருபாட்சி வீற்றிருந்த வேள்வேங் கடரமண
குருபாத சேவைசெயும் கொற்றத்தே ணுவேனே

(ஸ்ரீ ரமண சந்நிதி முறை)

எனப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

மற்றும் "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" என்பது முதுமொழியாகும். ஆனல் அருளமிழ்தம் உண்டவர், அதன் ருசியை, மணத்தை, மாண்பை எண்ணி எண்ணி உள்ளத்தே ருசித்து ஆனந்திப்பது போல் நான் உண்ட ரமணமிர்தத்தின் ருசியை நினைந்து நினைந்து, வியந்து வியந்து, புளியைக் கண்டவர்க்குப் புனலூறுமாப்போல, அண்ணமலை அண்ணல் ஸ்ரீ பகவானை நினையுந்தோறும் துளிக்கும் அருட்கண்ணீர், ஆட்பட்ட நெஞ்சம் ஆனந்த வெள்ளத்தழுந்தும். ஞானப் பரஞ்சுடராம் தேசிக ரமணனருட் திறத்தையும், அவரடியார்களின் சீரிய வாழ்வையும் எழுதத் துவங்கியது சிறுபிள்ளை விளையாட்டை யொக்கும்.

ஆரறி வாரெங்கள் அண்ணல் பெருமையை
யாரறி வாரிந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

(திருமந்திரம்)

ஐயனே எனதுள் ளேநின் றனந்தசன் மங்க ளாண்ட
மெய்யனே உபதே சிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்தி நல்கு முதவிக்கோ ருதவி நாயேன்
செய்யுமா றென்றுங் காணேன் திருவடி போற்றி போற்றி.

(கைவல்யம்)

என்பால தாகத்தா னீன்றதன் னூற்சிசுவைத்
துன்பாலா ரிஷ்டமுறு தோடமறத் — தன்பால
தாயவருட் கண்ணோக்கா லார்வமுறக் காத்தளித்த
நேயரம ணன்வாழ்க நீடு.

வாழி ரமணேசன் வாழியவன் வாரிசத்தாள்
வாழிரம ணீயகுண மாணடியார் — ஊழிபல
வாழி பராசக்தி வாழி சதாமுத்தி
வாழிசிவா னந்த வளம்.

(ஸ்ரீ ரமண சந்நிதி முறை)

நூல் நிறைவு மங்கள உரை

அநுபந்தம்

(1)

ஸ்ரீ பகவத் ஸந்நிதியில் பாராயாண முறை

நாள்	விஷயம்	நூல்
1.	திருவண்ணுமலை தேவாரம்	மூவர்தேவாரம்
2.	ஸ்ரீ அருணுசல மாகாத்மியம்	ஸ்ரீ பகவான் அருளிய
	ஸ்ரீ அருணுசல அக்ஷரமண மாலை	ஸ்ரீ ரமண நூற்றிரட்டு
	ஸ்ரீ அருணுசல பஞ்சரத்னம்	,,
3.	ஸ்ரீ அருணுசல நவமணிமாலை	,,
	ஸ்ரீ அருணுசல பதிகம்	,,
	ஸ்ரீ அருணுசல அஷ்டகம்	,,
	அப்பளப் பாட்டு	,,
	ஆன்மவித்தை	,,
	ஸ்ரீ அருணுசல பஞ்சரத்னம்	,,
4.	உபதேச வுந்தியார்	,,
	உபதேச ஸாரம் (மலையாளம்)	தனி
	உபதேச ஸாரமு (தெலுங்கு)	,,
	உபதேச ஸாரம் (ஸம்ஸ்க்ருதம்)	,,
	ஸ்ரீ அருணுசல பஞ்சரத்னம்	
5.	உள்ளது நாற்பது	ஸ்ரீ ரமண
	ஷை அநுபந்தம்	நூற்றிரட்டு
	ஸ்ரீ அருணுசல பஞ்சரத்னம்	

நாள்	விஷயம்	நூல்
6.	ஸத்தர்சனம் (மலேயாளம்)	தனி
	,, அநுபந்தம் (,,)	,,
	ஸ்ரீ அருணுசல பஞ்சரத்னம்	
7.	தேவிகாலோத்தரம்–ஞாஞசார விசாரபடலம்	அநுவாதநூன்மாலே
	ஸ்ரீ அருணுசல பஞ்சரத்னம்	
8.	சர்வ ஞானேத்தரம்–ஆன்ம சாட்சாத்காரப் பிரகரணம்	அநுவாதநூன்மாலே
	குரு ஸ்துதி	,,
	அத்தாமலகம்	,,
	ஸ்ரீ அருணுசல பஞ்சரத்னம்	
9.	பகவத்கீதாசாரம்	அநுவாதநூன்மாலே
	,, (மலேயாளம்)	தனி
	,, (ஸம்ஸ்க்ருதம்)	தனி
	ஸ்ரீ அருணுசல பஞ்சரத்னம்	
10.	ஆன்ம போதம்	அநுவாதநூன்மாலே
	ஏகான்ம பஞ்சகம்	ஸ்ரீ ரமண
	ஸ்ரீ அருணுசல பஞ்சரத்னம்	நூற்றிரட்டு
11.	விவேக சூடாமணி (ஸம்ஸ்க்ருதம்)	அநு. ப.
	,, தமிழ்	,, ப.
	சிவானந்தலஹரீ (ஸம்ஸ்க்ருதம்)	,, ப.
	,, தமிழ்	,, ப.
	தாயுமானவர் பாடல்	,, ப.
	தக்ஷிணுமூர்த்தி தோத்திரம் (ஸ்ம்ஸ்க்ருதம்)	தனி
	,, தமிழ்	அநுவாதநூன்மாலே
	ஸ்ரீ அருணுசல பஞ்சரத்னம்	

நாள்	விஷயம்	நூல்
12.	ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம்	ஸ்ரீ ரமணஸ்துதி பஞ்சகம்
	ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம்	
13.	ஸ்ரீ ரமண சற்குரு மாலை	சிவப்பிரகாசம் பிள்ளை ஸ்ரீ ரமண சற்குரு மாலை
	ஸ்ரீ ரமண தேவ மாலை	,,
	ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம்	
14.	ஸ்ரீ ரமண தேவ மாலை விண்ணப்பம்	ஸ்ரீ ரமண சற்குரு மாலை
	ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம்	
15.	ஸ்ரீ ரமண பாத மாலை	ஸ்ரீ ரமண சரித அகவல்
	திருச்சுழியல் – திருக் கோவையார்	மாணிக்கவாசகர்
	திருச்சுழியல் தேவாரம்	சுந்தரமூர்த்தி நாயனர்
	ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம்	

இம் முறையில் ஒரு தரம் பாராயணம் செய்ய 15 நாட்களாகும். இதே முறையில் தொடர்ந்து பகவத் ஸந்நிதியில் பாராயணம் செய்வது வழக்கம்.

(2)

தேவாரம்—திருவண்ணுமலை

(திருஞானசம்பந்தர்)

(1. பண் - நட்ட பாடை)

1. உண்ணுமுலை யுமையாளொடு முடனுகிய வொருவன்
பெண்ணுகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணுர்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண்ண
மறுமே.

2. தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணுமலை
யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே.

3. பீலிம்மயில் பெடையோடுறை பொழில்சூழ்கழை
முத்தஞ்
சூலிம்மணி தரைமேனிறை சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழி லண்ணுமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி தொழுவாரன புகழே.

4. உதிரும்மயி ரிடுவெண்டலை கலனுவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவு மெருதேருவ தல்லால்
முதிருஞ்சடை யிளவெண்பிறை முடிமேல்கொள
வடிமேல்
அதிருங்கழ லடிகட்கிட மண்ணுமலை யதுவே.

5. மரவஞ்சிலே தரளம்மிகு மணியுந்துவெள் ளருவி
யரவஞ்செய முரவம்படு மண்ணுமலே யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புன லுடனுவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழ லுமைபுல்குதல் குணமே

6. பெருகும்புன லண்ணுமலே பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி யணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பரவி
யுருகும்மன முடையார்தமக் குறுநோயடை யாவே.

7. கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலே யுதையுண்டவை யுருள
எரியாடிய இறைவர்க்கிட மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணுளொடு மண்ணுமலே யதுவே.

8. ஒளிறூபுலி யதளாடைய னுமையஞ்சுதல் பொருட்
பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித் துரித்து [டாற்
வெளிறூபட விளையாடிய விகிர்தன்னிரா வணனை
அளறூபட அடர்த்தானிட மண்ணுமலே யதுவே.

9. விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவாவண மழலாகிய அண்ணுமலே யண்ணல்
தளராமுலே முறுவல்லுமை தலேவன்னடி சரணே.

10. வேர்வந்துற மாசூர்தர வெயினின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவரம் மறையாவரு வாரும்
ஆரம்பர்த முரைகொள்ளன்மி னண்ணுமலே யண்ணல்
கூர்வெண்மழுப் படையான்நல்ல கழல்சேர்வது குணமே.

11. வேம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவ னண்ணுமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே.

(2. பண் – தக்கேசி)

1. பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்த வன்று மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித் தொருவின் னிரை யோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ் சார லண்ணு மலையாரே.

2. மஞ்சைப் போழ்ந்த மதியஞ் சூடும் வானோர் பெருமானார்
நஞ்சைக் கண்டத் தடக்கு மதுவும் நன்மைப் பொருள் போலும்
வெஞ்சொற் பேசும் வேடர் மடவா ரிதண மதுவேறி
அஞ்சொற் கிளிக ளாயோ வென்னு மண்ணு மலையாரே.

3. ஞானத் திரளாய் நின்ற பெருமா னல்ல வடியார்மேல்
ஊனத் திரளை நீக்கு மதுவு முண்மைப் பொருள் போலும்
ஏனத் திரளோ டினமான் கரடி யிழியு மிரவின்கண்
ஆனைத் திரள்வந் தணையுஞ் சார லண்ணு மலையாரே.

4. இழைத்த இடையா ளுமையாள் பங்க ரிமையோர் பெருமானார்
தழைத்த சடையார் விடையொன் றேறித் தரியார் புரமெய்தார்

பிழைத்த பிடியைக் காணு தோடிப் பெருங்கை
மதவேழம்
அழைத்துத் திரிந்தங் குறங்குஞ் சார லண்ணு
மலையாரே.

5. உருவிற் றிகழு முமையாள் பங்க ரிமையோர் பெரு
மானுர்
செருவில் லொருகால் வளைய வூன்றிச் செந்தீ
யெழுவித்தார்
பருவிக் குறவர் புனத்திற் குவித்த பருமா மணி
முத்தம்
அருவித் திரளோ டிழியுஞ் சார லண்ணு மலையாரே.

6. எனைத்தோ ரூழி யடியா ரேத்த இமையோர் பெருமா
னுர்
நினைத்துத் தொழுவார் பாவந் தீர்க்கும் நிமல ருறை
கோயில்
கனைத்த மேதி காணு தாயன் கைமேற் குழலூத
அனைத்துஞ் சென்று திரளுஞ் சார லண்ணு
மலையாரே.

7. வந்தித் திருக்கு மடியார் தங்கள் வருமேல் வினையோடு
பந்தித் திருந்த பாவந் தீர்க்கும் பரம னுறைகோயில்
முந்தி யெழுந்த முழவி னேசை முதுகல் வரை
கண்மேல்
அந்திப் பிறைவந் தணையுஞ் சார லண்ணு மலையாரே.

8. மறந்தான் கருதி வலியை நினைந்து மாறு யெடுத்
தான்ருேள்
நிறந்தான் முரிய நெரிய வூன்றி நிறைய வருள்
செய்தார்
திறந்தான் காட்டி யருளா யென்று தேவ ரவர்வேண்ட
அறந்தான் காட்டி யருளிச் செய்தா ரண்ணு மலை
யரோ

9. தேடிக் காணார் திருமால் பிரமன் தேவர் பெருமானை
மூடி யோங்கி முதுவே யுகுத்த முத்தம் பலகொண்டு
கூடிக் குறவர் மடவார் குவித்துக் கொள்ள வம்மி
னென்
றுடிப் பாடி யளக்குஞ் சார லண்ணு மலையாரே.

10. தட்டை யிடுக்கித் தலையைப் பறித்துச் சமணே
நின்றுண்ணும்
பிட்டர் சொல்லுக் கொள்ள வேண்டா பேணித்
தொழுமின்கள்
வட்ட முலையா ளுமையாள் பங்கர் மன்னி யுறை
கோயில்
அட்ட மாளித் திரள்வந் தணையு மண்ணு ம்லையாரே.

11. அல்லா டரவ மியங்குஞ் சார லண்ணு மலையாரை
நல்லார் பரவப் படுவான் காழி ஞான சம்பந்தன்
சொல்லான் மலிந்த பாட லான பத்து மிவைகற்று
வல்லா ரெல்லாம் வானோர் வணங்க மன்னி
வாழ்வாரே.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

(1. பண் - திரு நேரிசை)

1. ஓதிமா மலர்கள் தூவி யுமையவள் பங்கா மிக்க
சோதியே துலங்கு மெண்டோள் சுடர்மழுப் படையி
னானே
ஆதியே யமரர் கோவே அணியணு மலையு ளானே
நீதியா னின்னை யல்லா னினையுமா நினைவி லேனே.

2. பண்டனை வென்ற வின்சொற் பாவையோர் பங்கா நீல
கண்டனே கார்கொள் கொன்றைக் கடவுளே கமல
பாதா

அண்டனே யமரர் கோவே யணியஞ் மலையு ளானே
தொண்டனே னுன்னை யல்லாற் சொல்லுமா சொல்லி
லேனே.

3. உருவமு முயிரு மாகி ஓதிய வுலகுக் கெல்லாம்
பெருவினைப் பிறப்பு வீடாய் நின்றவென் பெருமான் மிக்க
அருவிபொன் சொரியு மண்ணு மலையுளா யண்டர் கோவே
மருவிநின் பாத மல்லான் மற்றொரு மாடி லேனே.

4. பைம்பொனே பவளக் குன்றே பரமனே பால்வெண் ணீற்றாய்
செம்பொனே மலர்செய் பாதா சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும் அணியஞ மலையு ளானே
யென்பொனே நின்னை யல்லால் யாதுநா னினைவி லேனே.

5. பிறையணி முடியி னானே பிஞ்ஞகா பெண்ணோர் பாகா
மறைவலா இறைவா வண்டார் கொன்றையாய் வாம தேவா
அறைகழ லமர ரேத்து மணியஞ மலையு ளானே
இறைவனே யுன்னை யல்லால் யாதுநா னினைவி லேனே.

6. புரிசடை முடியின் மேலோர் பொருபுனற் கங்கை [வைத்து
கரியுரி போர்வை யாகக் கருதிய கால காலா
அரிகுலம் மலிந்த அண்ணு மலையுளா யலரின் மிக்க
வரிமிகு வண்டு பண்செய் பாதநான் மறப்பி லேனே.

7. இரவியும் மதியும் விண்ணும் இருநிலம் புனலுங்
காற்றும்
உரகமார் பவன மெட்டுத் திசையொளி யுருவ மானுய்
அரவுமிழ் மணிகொள் சோதி யணியணு மலையு
ளானே
பரவுநின் பாத மல்லாற் பரமநான் பற்றி லேனே.

8. பார்த்தனுக் கன்று நல்கிப் பாசுப தத்தை யீந்தாய்
நீர்த்ததும் புலாவு கங்கைநெடுமுடி நிலாவ வைத்தாய்
ஆர்த்துவந் தீண்டு கொண்டல் அணியணு மலையு
ளானே
தீர்த்தனே நின்றன் பாதத் திறமலாற் றிறமி லேனே.

9. பாலுநெய் முதலாய் மிக்க பசுவிலைந் தாடு வானே
மாலுநான் முகனுங் கூடிக் காண்கிலா வகையுள்
நின்ருய்
ஆலுநீர் கொண்டல் பூக மணியணு மலையு ளானே
வாலுடை விடையா யுன்றன் மலரடி மறப்பி லேனே.

10. இரக்கமொன் றியாது மில்லாக் காலனைக் கடிந்த
வெம்மான்
உரத்தினல் வரையை யூக்க வொருவிரல் நுதியி னலே
அரக்கனை நெரித்த வண்ணு மலையுளா யமர ரேறே
சிரத்தினல் வணங்கி யேத்தித் திருவடி மறப்பி
லேனே.

(2. பண் - திருக்குறுந்தொகை)

1. வட்ட னைமதி சூடியை வானவர்
சிட்ட னைத்திரு வண்ணு மலையனை
யிட்ட னையிகழ்ந் தார்புர மூன்றையும்
அட்ட னையடி யேன்மறந் துய்வனே.

2. வான னைநதி சூடிய மைந்தனை
தேன னைத்திரு வண்ணா மலையனை
ஏன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
ஆன னையடி யேன்மறந் துய்வனே.

3. மத்த னைமத யானையு ரித்தவெஞ்
சித்த னைத்திரு வண்ணா மலையனை
முத்த னைமுனிந் தார்புர மூன்றெய்த
அத்த னையடி யேன்மறந் துய்வனே.

4. காற்ற னைக்கலக் கும்வினை போயறத்
தேற்ற னைத்திரு வண்ணா மலையனை
கூற்ற னைக்கொடி யார்புர மூன்றெய்த
ஆற்ற னையடி யேன்மறந் துய்வனே.

5. மின்ன னைவினை தீர்த்தெனை யாட்கொண்ட
தென்ன னைத்திரு வண்ணா மலையனை
யென்ன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
அன்ன னையடி யேன்மறந் துய்வனே.

6. மன்ற னைமதி யாதவன் வேள்விமேற்
சென்ற னைத்திரு வண்ணா மலையனை
வென்ற னைவெகுண் டார்புர மூன்றையுங்
கொன்ற னைக்கொடி யேன்மறந் துய்வனே.

7. வீர னைவிட முண்டனை விண்ணவர்
தீர னைத்திரு வண்ணா மலையனை
யூர னையுண ரார்புர மூன்றெய்த
ஆர னையடி யேன்மறந் துய்வனே.

8. கருவி னைக்கடல் வாய்விடம் உண்ட யெம்
திருவி னைத்திரு வண்ணா மலையனை

உருவி னையுண ரார்புர மூன்றெய்த
அருவி னையடி யேன்மறந் துய்வனே.

9. அருத்த னையர வைந்தலை நாகத்தைத்
திருத்த னைத்திரு வண்ணா மலையனை
கருத்த னைக்கடி யார்புர மூன்றெய்த
அருத்த னையடி யேன்மறந் துய்வனே.

10. அரக்க னையல றவ்விர லூன்றிய
திருத்த னைத்திரு வண்ணா மலையனை
இரக்க மாயென் னுடலுறு நோய்களைத்
துரக்க னைத்தொண்ட னேன்மறந் துய்வனே.

3. (பண் – திருக்குறுந்தொகை)

1. பட்டி யேறுகந் தேறிப் பலஇலம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்தியண் ணாமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை கேடில்லை காண்மினே.

2. பெற்ற மேறுவர் பெய்பலிக் கென்றவர்
சுற்ற மாமிகு தொல்புக ழாளொடு
அற்றந் தீர்க்குமண் ணாமலை கைதொழ
நற்ற வத்தொடு ஞானத் திருப்பரே.

3. பல்லி லோடுகை யேந்திப் பலவிலம்
ஒல்லை சென்றுணங் கல்கவர் வாரவர்
அல்லல் தீர்க்குமண் ணாமலை கைதொழ
நல்ல வாயின நம்மை யடையுமே.

4. பாடிச் சென்றுப லிக்கென்று நின்றவர்
ஓடிப் போயினர் செய்வதொன் றென்கொலோ

ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ
ஓடிப் போகுநம் மேலைவி னைகளே.

5. தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்
ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ளவி னைகளே.

6. கட்டி யொக்குங் கரும்பி னிடைத்துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனர்
அட்ட மூர்த்தியண் ணாமலை மேவிய
நட்ட மாடியை நண்ண நன் காகுமே.

7. கோணிக் கொண்டையர் வேடமுன் கொண்டவர்
பாணி நட்டங்க ளாடும் பரமனர்
ஆணிப் பொன்னினண் ணாமலை கைதொழ
பேணி நின்ற பெருவினை போகுமே.

8. கண்டந் தான்கருத் தான்கால னுருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனர்
அண்டத் தோங்குமண் ணாமலை கைதொழ
விண்டு போகுநம் மேலைவி னைகளே.

9. முந்திச் சென்றுமுப் போதும் வணங்குமின்
அந்தி வாயொளி யான்றனண் ணாமலை
சிந்தி யாவெழு வார்வினை தீர்த்திடுங்
கந்த மாமலர் சூடுங்க ருத்தனே.

10. மறையி னானொடு மாலவன் காண்கிலா
நிறையு நீர்மையு னின்றருள் செய்தவன்
உறையு மாண்பினண் ணாமலை கைதொழப்
பறையு நாஞ்செய்த பாவங்க ளானவே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் — ஊர்த்தொகை

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச்
செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்று ரறியா நெறியானே
ஆனைக் காவில் அரனே பரனே யண்ணு மலையானே
ஊனைக்காவல் கைவிட் டுன்னை யுகப்பா ருணர்வாரே

திருச்சிற்றம்பலம்

உபதேச ஸாரம் — (மலையாளம்)

1. கர்மம்ப லத்தினெத் தன்னுவ ருந்நதும்
கர்த்தாவு தன்னுடெ யாஜ்ஞ தன்னல்
கர்மமா தைவமா குன்னது மெங்ஙினே
கர்மம சேதன மாக கொண்டு.

2. கர்மப லங்ஙளோ நஸ்வரம் வாஸனு
காரவித் தாயது கூடக் கூடே
கர்மஸ முத்ரத்தில் சாடிக்கு மல்லாதெ
கதியினெ யென்னுமெ காணிக் கில்ல.

3. ஈச்வர ப்ரீதியி னுய்ப்பல மேல்பிச்சொ
ரிச்சயென் னிச்செய்நிஷ் காம்ய கர்மம்
ஆசய சுத்திவ ருத்தியா முக்தியி
னுயுள்ள மார்க்கத்தில் சேர்க்கு மோர்க்க.

4. காயிகம் வாசிகம் மானஸி கம்மென்னு
கர்மங்ஙள் மூன்னு தரத்தி லத்ரெ
ஆயவ பூஜாஜ பம்த்யான மீக்ரமத்
தாமூன்னு மொன்னிலொன் னேற்ற மோர்த்தால்.

5. அஷ்டமூர்த் தங்களாய்க் காணுன்ன லோகமி
தாகவெ யீச்வரா கார மாக
த்ருஷ்டியில் கொண்டுஸே விக்குக தக்கபோல்
தேவன்னு செய்யும்வி சேஷ பூஜ.

6. உத்தம ஸ்தோத்ரத்தெக் காள்ஜப மாஜபத்
துச்சத்தெக் காளுமு பாம்சு வெக்காள்
சித்தஜ பம்தன்னெ ச்ரேஷ்டமா குன்னதா
சித்தஜ பத்தன்ய மல்ல த்யானம்.

7. விட்டுச்செய் விச்சின்ன த்யானத்தி னெக்காளும்
விடாதநெய் தாரபோ லாறு போலே
ஒட்டுமெ விட்டிடா ஸந்தத த்யானமெ
யுத்தம மெத்ரயும் சக்தி கூடும்.

8. பின்னன்ஞா னீச்வரன் தன்னெக்கா ளென்னுள்ள
பேதபா வத்தெக்காள் ஸோஹ மென்னும்
அன்யனல் லென்னவ பேதபா வம்தன்னெ
யத்யந்த முத்க்ருஷ்ட மாய பாவம்.

9. பாவப லம்கொண்டு பாவம்க டன்னஸத்
பாவத்திங் கல்நில நில்க்க தன்னெ
பாவனு பக்தியெக் காளதி பாவன
பக்திப ராபக்தி முக்தி நல்கும்.

10. மர்மமா யுள்ளதன் ஜன்மஸ்த லத்தெத்தி
மானஸம் ஸ்வஸ்தமா யுள்ள தல்லோ
கர்மவும் பக்தியும் யோகவும் ஜ்ஞான்வும்
காணுகெல் லாவற்றில் கண்ட ஸாரம்.

11. வாயுவி னேயுள்ப துக்கம றிக்குகில்
வலயகம் பெட்டுள்ள பக்ஷி போலே
பாயுமா மானஸம் பெட்டிடும் கெட்டிங்கல்
ப்ராணனெப் பற்றலு பாய மாண.

12. மானஸம் ஜ்ஞானசக் திப்ராண ேனேக்ரியா
மாத்ரமாம் சக்திக லர்ந்ந தாகும்
மானஸம் ப்ராணனீ ரண்டுமே சாககள்
பற்றவற் றின்மூல சக்தி யொன்னு.

13. லயவும்வி நாசவும் ரண்டா ணெடுக்கவும்
லயவுமப் போழத்த தாக யாலே
லயிச்சுள்ள தோவீண்டும் பொந்திவ ரும்ரூபம்
நசிச்சதென் னென்னும்ம டங்ஙு கில்ல.

14. கெட்டிப்பி டிச்சகம் வெச்சதால் ப்ராணனெக்
கெட்டில்பெட் டுள்ளவச் சித்தம் தன்னெ
விட்டயச் சோர்வழி காட்டித்தன் னீடுக
நஷ்டமாம் மானஸம் தானே தன்னெ.

15. மனஸ்ஸிண்டெ ரூபம்ம ரிச்சுவே ஷத்தாலெ
மனுஷ்யனுய்க் காணும்ம ஹாத்ம யோகி
தனிக்கொரு கார்யவும் செய்யேண்ட தாயில்ல
தன்னிஜ ரூபம்ப்ரா பிச்ச தாலே.

16. புறவிஷ யங்ஙளில் போகாதே சித்தத்தின்
போக்கினெ யுண்முக மாக்கித் தன்டெ
அறிவாய ரூபத்தைத் தானறி யுன்னதெ
யறிவாகும் ஸத்யம கத்தில் கொள்க.

17. மனஸ்ஸின்னு ரூபமே தாணென்னெல் லாய்ப்போழும்
மறவாத கத்தில்தி ரஞ்ஞு வென்னல்
மனஸ்ஸென்னெங் ஙொன்னுமெ காணுமா றில்லஹே
மார்க்கமி தார்க்கும்நே ராய மார்க்கம்.

18. எண்ணங்ங ளெக்கூடா தேமன மேயில்ல
எண்ணங்க ளேமன மென்னு சொல்லும்
எண்ணங்ஙள்க் கெல்லாமே மூலம்ஞா னென்னுள்ள
எண்ணமா கும்மன மென்னல் ஞானே.

19. ஞானென்ன தெங்ஙுன்னு தோன்னுன்னு வென்னும
னஸ்ஸுள்ளில் மூழ்கியன் வேஷிச் சீடில்
ஞான்தல குத்திப்ப திக்குமி தல்லயொ
ஜ்ஞானவி சாரம்வே றென்னு மல்ல.

20. ஞானெடுங் ஙுன்னஸ்வஸ் தானமா ஹ்ருத்திங்கல்
ஞான்ஞானென் னென்னது தாணய்த் தோன்னும்
தாணகத் தோன்னுன்ன தின்னெல்ல யில்லல்லோ
தாணய தும்பரி பூர்ணம் தன்னே.

21. ஞானென்ன தின்னர்த்த மாணிது நித்யவும்
ஞான்லயிச் சுள்ளவு றக்கத் திங்கல்
தானில்லா தாயென்ன தில்லாதெல் லாவர்க்கும்
தானுண்டென் னுள்ளவு ணர்ச்ச தன்னல்.

22. தேஹவும் ஜ்ஞானகர் மேந்த்ரியம் ப்ராணனும்
தீயிருட்டு ம்த்ருச்ய லோக மெல்லாம்
மோஹம ஸஜ்ஜட மாகயால் ஞானல்ல
முக்காலத் துள்ளஸத் தல்லயோ ஞான்.

23. உள்ளது ணர்த்துவான் தன்னெக்கா ளன்யமா
யுள்ளவு ணர்வொன்னும் காணுன் னில்ல
உள்ளது தன்னெயு ணர்வுமா குன்னது
முள்ளஞான் தன்னெயு ணர்வு மல்லே.

24. இரிக்கும்ஸ்வ பாவத்தா லீச்வர ஜீவர்க
ளிருவரு மேகாத்ம வஸ்து தன்னே
ஒரிக்கலும் பேதமு ரைக்கரு தாயவ
ருபாதியும் போதவும் தன்னே பின்னம்.

25. தன்னுடெ பேதவு பாதிக ளெவிட்டுத்
தன்னெத்தான் காணுக தன்னெ யீசன்
தன்னுடெ வாஸ்தவ தர்சன மீச்வரன்
தானுய்ப்ர காஸிசிக்க கொண்டு தன்னெ.

26. தானுயி ரிக்குமி ரிப்பினெத் தன்னெமுன்
தன்னெத்தான் காணுக யென்னு சொல்வி
தானென்னு மொன்னுதன் னேயல்லா தேரண்டோ
தன்மய நிஷ்டயி தென்னு காண்க.

27. அறிவறி யாமையு மில்லாதெ யுள்ளநல்
லறிவிது தன்னெய தார்த்த ஜ்ஞானம்
அறிவானி தின்மீதே யுள்ளதொன் னேதாண
அறிவதி னன்யமா யொன்னு மில்ல.

28. எந்தாண தன்னுடெ ரூபமென் னீவழி
தன்னெத்தன் னேதானு மொன்னு கண்டால்
அந்தவு மாதியு மில்லாதெ தோன்னிடு
மகண்டசி தானந்த வஸ்து வொன்னே.

29. பந்தவும் முக்தியும் ரண்டும்க டந்துள்ள
ப்ரஹ்ம மஹானந்த மெந்து சொல்லாம்
ஸ்வந்தமா யங்ஙனே ஸந்ததம் நில்ப்பவர்
ஸுசத்தரா தைவிக ஸச்சு ரித்ரர்.

30. ஞானற்றுத் தோன்னுன்ன தேதொன்ன னென்னுதன்
ஜ்ஞானத்தி னுலது தன்னெப் பற்றித்
தானிரிக் குன்னது தன்னெயல் லோ நல்ல
தபஸென்னு மாரம ணன்ப றஞ்ஞு.

31. ஸந்தோஷ மோடுப தேசஸா ரம்கொண்டு
ஸந்நிஷ்ட னுய்க்கும்மி கொட்டு கொட்டு
ஸந்தாப சாந்தியும் ஸந்ததா னந்தவும்
ஸந்திக்கு மில்லிதில் சங்க யொட்டும்.

32. ஒட்டுமெ கஷ்டங்ங ளொட்டாதெ விட்டிடா
னுபதேச ஸாரத்தைக் கொண்டு கூடி
கொட்டுவி னன்பர்க ளெல்லாவ ரும்கும்மி
கொட்டுவி னுனந்தம் கிட்டு வானுய்.

உபதேசஸாரமு — (தெலுங்கு)

1. கர்மமு பலமிச்சு கர்த்ராஜ்ஞவலன ।
கர்மமு தைவமா கர்மமு ஜடமெ॥

2. கர்மப லமுசெடி காரணம் பகுசு ।
கர்மாப்தி படத்ரோயு கதினீய தய்ய ॥

3. கர்த்ரர்ப்பித பலனிஷ் காம்ய கர்மம்பு ।
சித்தசுத்தி நொஸகி சேர்சுனு தாரி ॥

4. காயவாங் மானஸ கரண க்ரமமுன ।
சேயுபூ ஜாஜப சிந்தலு மேலு ॥

5. அஷ்டமூர்த் துலுஸர்வ மாயீச்வ ருடனு ।
த்ருஷ்டிதோ க்ருதஸே வதேவ தாபூஜ ॥

6. உத்தம ஸ்தோத்ரமு லுச்சமு பாம்சு ।
சித்தஜ பமுலலோ ஜிந்தயுத் தமமு ॥

7. ஸரிதாஜ்ய தாரபோல் ஸரளசிந்தனமு ।
விரளசிந் தனகன்ன வீர்யவத்தௌனு ॥

8. பாவபே தமுகண்டெ பருடுநே நனெடு ।
பாவனு பேதமே பரமோத் தமமகு ॥

9. பாவப லம்புசே பாவனு தீத ॥
பாவஸ்தி திமுனுலு பரவக்தி யனிரி ।

10. கர்மமு பக்தியோ கஜ்ஞான முலிதே ।
மர்மான ஸவஸ்தமை மனமுண்டு மஹிம ॥

11. வாயுலோ னட்டின வலபட்ட பக்ஷி ।
ந்யாயமொந் துமன முபாயமௌ னிதியு ॥

12. சித்தமு ப்ராணமு சித்க்ரியா சக்தி ।
யுக்தசா கலுமூல சக்தியே கம்பு ॥

13. லயமுநா சமனியு பயமுரோ தமகு ।
லயமந்தி நதிலேசு பயிராது ம்ருதமு ॥

14. ப்ராணரோ தமுசேத பத்தமனமுனு ।
போனீயு மொகதாரி ஹானிசெந் துநதி ॥

15. மனஸூரு புனுமாபு மஹனீயயோகி ।
தனரூப மந்தின பனிலேனிவாடு ॥

16. சித்தமு த்ருஸ்யமுல் சேரகதனதி ।
சித்த்வ மெருகுடயெ தத்த்வமெறுகுட ॥

17. மனஸூ ஸ்வரூபமு மறவகயெறுக ।
மனமனு னதிலேது மார்கமுஸூடி ॥

18. தலபுலே மனமெல்ல தானனேனனின ।
தலபாதி மனமுனு தானனேனேனு ॥

19. நேனிதி புட்டுனு ஸ்தானமுவெதக ।
நேனதி படுனிதி ஜ்ஞானபத்ததிர ॥

20. நேனடங் கினசோட நேனுநேனனுசு ।
தானுகா தோசுனு தானுபூர்ணம்பு ॥

21. நேனர்த்த மிதிநேனு லேனட்டிநித்ர ।
தானுலே னனிலேக தானுன்னதான ॥

22. தேஹமிந் த்ரியவாயு தீதமம் பெல்ல ।
நாஹம ஸதசித்து ஸோஹமுஸத்து ॥

23. உன்னதி தெலியவே ரெுகசித்துலேது ।
உன்னதே ஜ்ஞானமௌ னுன்ன சித்தேனு ॥

24. உன்னஜீ வேஸ்வரு லொகவஸ்து வாத்ம ।
பின்னமு பாதிசித் தன்னசின்னமுலே ॥

25. தானுபா திவதலி தன்னெறுங்குடயெ ।
தானுகா வெலுகீஸ தத்த்வதர்ஸனமு ॥

26. தானுகா நுனுகியே தன்னெறுங்குடர ।
தானுரெண் டெக்கட தன்மயநிஷ்ட ॥

27. ஜ்ஞானமஞ் ஞானம்பு லேனிபோ தம்பெ ।
ஜ்ஞானமெ றுகுடகே தேனியுலேது ॥

28. தனரூப மேதனி தானுதர்ஸிம்ப ॥
கனசித் தனந்தாத்ய கண்டஸுகமகு ॥

29. பந்தமுக் துலுலேனி பரஸுகஸித்தி ।
பொந்துனு தைவிக புண்யசரிதுடு ॥

30. அஹமுலே னிஸ்வய மனுபூதிநிஷ்ட ।
மஹதுக்ர தபமனெ மஹிரமணரிஷி ॥

ஸ்ரீ பகவத்கீதாசாரம் (மலேயாளம்)

(மங்கலம்)

பார்த்தஸா ரதியாய் ஸார
வார்த்த கள்செவி வார்த்தவன்
ஆர்த்தி தீர்த்தொரு காருண்ய
மூர்த்தி காத்தரு ளேணமே

(நூல்)

1. கருணயும் ஸோகவும் கலர்ந்நுகண் ணீரார்ந்நு
கஷ்டப்பெடும் பார்த்தன் தன்னெ நோக்கி
கருணயா லோதினுன் இதுமது ஸூதனன்
கஷ்டங்ங ளொக்கயும் நஷ்ட மாகான்.

2. ஈதேஹம் க்ஷேத்ரமென் னுதப்பெ டும்பார்த்த
எவனிதி னேயறி யுன்னவன் தான்

ആദേഹി ക്ഷേത്രജ്ഞ നാകുമെന്‍ നാതത്വ
മറിഞ്ഞവ രിങ്ങിനെ പറഞ്ഞിടുന്നു.

3. ക്ഷേത്രങ്ങ ളൊക്കയും ചേര്‍ന്നിരിക് കുന്നതത്
ക്ഷേത്രജ്ഞ നേയെന്ന യറിക പാര്‍ത്ത
ക്ഷേത്ര ക്ഷേത്രജ്ഞ രെത്തെരി യുന്നതേ തതെന്‍
തീര്‍ച്ചയാം ജ്ഞാനമി തോര്‍ത്തു കൊള്‍ക.

4. അഖിലജന്‍ തുക്കളി നന്തരങ് കത്തുള്ള
ആത്മാവു ഞാന്‍തന്നെ യര്‍ജ്ജു നാകേള്‍
അഖിലജീ വര്‍കള്‍ക്കു മാതിയും മത്യവും
അവസാന മതുവുമേ യാകുന്‍ നേന്‍ഞാന്‍.

5. പിറന്നവന്‍ മരിക്കുക യെന്നതും നിശ്ചയം
പിറക്കുക നിശ്ചയം മരിച്ച വന്നും
ചെറുതുമേ യാര്‍ക്കുമേ നീക്കരു താത്തതില്‍
ചിന്തയില്‍ സന്തപിക് കൊല്ല നീയും.

6. പിറപ്പിറപ് പില്ലിവന്‍ നെന്നുമേ പിന്നെയും
പിറന്നൊഴി യുന്നവ നില്ല താനും
പിറക്കാത്ത വന്‍നിത്യന്‍ പുരാതനന്‍ ശാശ്വതന്‍
പിന്നനു വില്ലുടല്‍ കൊന്നപ് പോഴും.

7. മുറിക്കാ നെരിക്കുവാന നനക്കാ നുണക്കുവാന്‍
മുഴുതുംക ലര്‍ന്നവന്‍ കഴിയാ തോനും
അറികവന്‍ നിത്യന്‍ സനാതനന്‍ സ്താണുവും
അചലനു മാകുമെന്‍ നമല നേനീ.

8. ഈതെല്ലാ മേതൊന്നാല്‍ വ്യാപക മായതു
മെന്നുമേ നാസമില്‍ ലാത്ത താകും
ഏതിലും നാസമാ കാത്തതാ മതിനെയും
എവനുമേ കഴിവില്ല നാസ മാക്കാന്‍.

9. இல்லாத்த தின்னிரிப் பில்லென்னு முள்ளதின்
னில்லாய்ம யென்னுமே யில்ல தானும்
இல்லாத்த துள்ளதாம் ரண்டின்டெ தத்வவு
மித்தரம் தத்வவித் துக்கள் கண்டு.

10. எங்கும்நி றஞ்ஞுதா மாகாஸம் ஸூக்ஷ்மத்தா
லெவற்றிலும் பற்ருதி ரிக்கும் போலே
எங்ஙுமே தேஹத்தி லிரிக்கிலு மாத்மாவு
மென்னுமே தேஹத்தோ டொட்டு கில்ல.

11. அதினெப்ர பாகரன் சந்த்ரனு மக்னியு
மாயவர் த்யோதகம் செய்க யில்ல
எதினெய டஞ்ஞும டங்ஙுக யில்லயோ
என்பரம் பதமது தன்னெ யாகும்.

12. உதியாதொ டுங்ஙாதென் னேதிடப் பெடுமதே
உத்தம ஸ்தானமென் னேதி டுன்னு
பதமெது கிட்டிவிட் டிடுகயில் லாயது
பரமமா மென்னிரிப் பிடம தாகும்.

13. அபிமான மோஹங்ங ளற்றவர் ஸங்கவு
மாஸயும் விட்டநித் யாத்ம நிஷ்டர்
விபின்னித ஸூகதுக்க த்வந்த்வராம் ஜ்ஞானிகள்
விஸிஷ்டமா மாநித்ய பதத்தி லெத்தும்.

14. எவன்ஸாஸ்த்ர விதிகளெ விட்டவ ஞுய்த்தன்டெ
யிச்சானு ஸாரமே வர்த்திச் சீடும்
அவன்ஸித்தி தன்னெயு மானந்தம் தன்னெயு
மாநித்ய பதத்தெயு மெத்து கில்ல.

15. ஸர்வபூ தங்ஙளில் ஸமனுமாய் நஸிக்குமா
ஸர்வத்தி லும்நாஸ ரகித ஞுயும்

ஸர்வதா வர்த்திக்கும் பரமேஸ்வ ரன்தன்னெ
ஸாக்ஷாத்தெ வன்கண்டோ அவனே கண்டு.

16. அனன்யமா யென்னெயோர்க் குன்னஸத் பக்தியா
லர்ஜுனு யீவித முண்ம யாயி
ஜனங்ங ளறிஞ்ஞிடான் காணுனும் கூடானும்
ஸக்யனு குன்னுஞான் ஸத்யம் தன்ன.

17. அவரவர் ப்ரகிருதியி னனுகுண மாய்த்தன்னே
யகிலர்க்கும் ஸ்ரத்தயுண் டாகும் நூனம்
அவனியில் ஸ்ரத்தாம யன்புமா னுகயா
லார்க்கேது ஸ்ரத்தயுடண் டவன தாகும்.

18. ஸ்ரத்தயுள் ளோன்தன்னெ யிந்த்ரிய நிக்ரஹம்
செய்தென்னும் தத்பர சித்த னுயி
ஸித்தியாம் ஜ்ஞானவும் சேர்ந்நிடும் சேர்ந்நபின்
சேருமுத் தமஸா ந்தி ஸீக்ரம் தன்னே.

19. என்னெயுள் ளன்போடு மேகாக்ர சித்தரா
யெப்போழும் பக்திசெய் யுத்த மர்க்கு
என்னெயு மாயவ ரேதினு லெத்திடு
மேகுமா புத்தியோ கத்தெ ஞானும்.

20. அவர்க்கனு க்ரஹிச்சீடா னுத்மஸ்த னுயஞா
னுஜ்ஞான தீபப்ர காஸம் தன்னுல்
அவித்யயால் பவிச்சதா மந்தகா ரத்தினெ
யத்யந்த மில்லாத்த தாக்கி டுன்னு.

21. எவருடெ யாத்மஜ்ஞா னத்தால ஜ்ஞானவு
மித்திரி தானுமில் லாத்தத் தாயி
அவருடெ ஜ்ஞானவு மாதித்ய னென்னபோ
லாபர வஸ்துவெ பாஸிப் பிக்கும்.

22. பரங்ஙளிந்த் ரியங்ஙளாய்ப் பறயப்பெ டுன்னிது
பரமிந்த்ரி யங்ஙள்க்கு மனம்ம் னஸ்ஸின்
பரம்புத்தி புத்திக்குப் பரமெவ ஞணவன்
பரமாத்மா வென்னுநீ யோர்க்க பார்த்த.

23. புத்திக்குப் பரமாத்ம னென்னறிஞ் ஞிங்ஙனே
புத்தியால் மனஸ்ஸினெ நிர்த்தி நீயும்
வ்ருத்தியா கும்காம துர்ஜ்ஜய வைரியெ
விஜயனெ ஜயிச்சுநீ ஸுகிச்சி ரிக்க.

24. எங்ஙின கத்துன்ன வஹ்நியும் கட்டக
ளெல்லாமெ ரிச்சுபஸ் மீக ரிக்கும்
அங்ஙினெ ஜ்ஞானமா மக்னியும் கர்மங்ங
ளகிலவும் தஹிச்சுபஸ் மீக ரிக்கும்.

25. எவனுடெ ஸர்வகர் மங்ஙளும் காமவு
மெண்ணவுங் கூடாதெ யாகுன் னுண்டோ
அவன்ஜ்ஞான வஹ்னியா லெரிச்சவன் கர்மத்தெ
யவனெப்பண் டிதனென்னு ரச்சு விஜ்ஞர்.

26. ஆஸயும் கோபவு மற்றவ ராய்மன
மடக்கியே யாத்மவித் துக்க ளாகும்
பாஸமில் யதிகள்க்கெல் லாடவு மெப்பொழும்
பரமநிர் வாணனு பவவு முண்டாம்.

27. பதுக்கப் பதுக்கவெ மனஸ்ஸினெ யும்சாந்தப்
படுத்தவே ணம்தைர்ய புத்தி தன்ஞல்
ஒதுக்கியா மனஸ்ஸினெ யாத்மாவு தங்கலே
யொன்னெயும் பின்னெநீ சிந்திக் கேண்ட.

28. எதுவுமோர் நிலயென்னி யென்னுஞ்சஞ் சலமனஸ்
ஸேதேது பற்றிசஞ் சரிச்சீ டுன்னு

அததிங்க லேநின்னு திரிச்சாம னஸ்ஸினெ
ஆத்மவ ஸத்தில மர்த்திக் கொள்க.

29. இந்த்ரியம் மனம்புத்தி யிவகள டக்கியெ
யிச்சப யம்க்ரோத மிவற்றை விட்டு
ஸந்தத வும்முத்தி சிந்தன முனியெவன்
ஸந்தத மாமுனி முக்தன் தன்னே.

30. என்னுமே தங்கல்யோ ஜிச்சம னஸ்ஸொடு
மெங்குமே ஸமமாய த்ருஷ்டி யுள்ளோன்
தன்னெயா ஸர்வபூ தங்ஙளி லும்தங்கல்
தான்காணும் ஸர்வபூ தங்ங ளெயும்.

31. அன்யசிந் தனமென்யெ யென்னெத்தன் னேயென்னு
மாரவ ருபாஸன மாச ரிக்கும்
என்னிலெ யென்னுமெ யொன்னிநில்க் குன்னவர்
யோகக்ஷே மங்ஙளெ ஞான்வ ஹிக்கும்.

32. அவர்களில் ஜ்ஞானியெ யகலாத்த யோகியா
மவனேக பக்தனு மாம்வி ஸிஷ்டன்
அவன்னுஞான் ப்ரியனுகு மெத்ரயு மெப்பொழு
மத்யந்த ப்ரியனுகு மவனெ னிக்கும்

33. அனந்தஜன் மங்ஙளி னந்தம தில்ஜ்ஞானி
யாமவ னகிலவும் வாஸு தேவன்
அனந்த னனுதியென் னறிஞ்ஞுவ னென்னெயு
மணஞ்ஞிடும் துர்லப னும ஹாத்மா.

34. எப்போள கதுள்ள எல்லாக்கா மங்ஙளு
மித்ரயு மில்லாதெ நஷ்ட மாயி
எப்போள்தன் னுல்தங்கல்த் தன்னேதுஷ் டன்பார்த்த
இவன்ஸ்தித ப்ரஜ்ஞனெனென் னுக்த னப்போள்.

35. அகலெக்க ளஞ்ஞெவ னகிலகா மங்ஙளு
ம்கப்பற்றற் றுப்பரு மாறுன் னுண்டோ
அகந்தயும் மமதையு மில்லாதெ யுள்ளவ
னவனென்னு மார்ந்நிடும் ஸாந்தி தன்னெ.

36. எவனெலோ கம்கண்டு பேடிக்குன் னில்லயோ
எவன்லோ கத்தெக்கண் டுபேடிக் கில்ல
எவன்தோஷ ரோஷப யக்ஷோபங் ஙள்விட்டோ
எனிக்கவ னெத்ரயும் ப்ரீத னுகும்.

37. எவன்ஸமன் மானுவ மானங்ஙள் ரண்டிலு
எவன் மித்ர ஸத்ருக்கள் பக்ஷ துல்யன்
எவன்பரித் யஜிச்சவன் யத்னங்ங ளொக்கயு
மிவனெகு ணாதீத னென்னு சொல்லும்.

38. தங்கல்தன் னெயெவன் ரமிச்சிரிக் குன்னுவோ
தங்கல்தன் னெயெவன் த்ருப்த னுகும்
தங்கல்தன் னெயெவன் ஸந்துஷ்ட னுமவன்
தனிக்கொரு கார்யவும் செய்வா னில்ல.

39. அவன் செய்த தின்னொரு பலவுமே யவன்னில்ல
அவன் செய்தில் லெங்கிலும் தோஷ மில்ல
அவன்னுஸ மஸ்தபூ தங்ஙளெ யாஸ்ரயிச்
சாகேண்ட கார்யவு மொன்னு மில்ல.

40. கிட்டிய தில்துஷ்டன் த்வந்த்வம் கடந்நவன்
கெட்டவன் மத்ஸரம் கிட்டி யாலும்
கிட்டியில் லெங்கிலும் ஸமத்ருஷ்டி யுற்றவன்
க்ருத்யம்செய் தென்னுலும் பத்த னல்ல.

41. ஈஸ்வர னும்ஸர்வ ஜீவர்கள் ஹ்ருதயப்ர
தேஸத்தி ருன்னென்னும் ப்ரகா ஸிக்குன்னு

பாஸமாம் மாயயால் யந்த்ரத்தில் கேறிய
ப்ராணிகள் ஒக்கத்தி ரிச்சுக் கொண்டு.

42. அவனெத்தன் னேஸர்வ விதத்திலும் ஸரணமா
யாஸ்ரயிச் சீடெடோ அர்ஜ்ஜுனநீ
அவனருளால்பர ஸாந்தியும் ஸாஸ்வத
மாகும்ப தத்தெயும் ப்ராபிச் சீடும்.

43. இத்தரம் பகவத்கீ தாஸாஸ்த்ர ஸாரமா
யெடுத்தபத் யங்ஙள் நால்ப் பத்தி ரெண்டும்
ஒத்தபோல் பக்தர்க்குத் தொடுத்துக்கொ டுத்ததெ
யோதிஞன் ரமணனும் கேர ளத்தில்.

44. ஆரிது நித்யவும் படனம்செய் தீடுன்னு
ஆரிது நித்யவும் மனனம் செய்யும்
ஆரிது பக்தியொ டாசரிச் சீடுன்னு
ஆயவன் ப்ராபிக்கும் நித்ய சாந்தி.

விவேகசூடாமணி — (சமஸ்கிருதம்+தமிழ்)

1. மோக்ஷகாரண ஸாமக்ர்யாம் பக்திரேவ கரீயஸீ ।
ஸ்வஸ்வரூபானு ஸந்தானம் பக்திரித்யபி தீயதே ।

முத்தியி னேது வாக மொழியுபா யங்க ளுக்குட்
பத்தியே மிகவு மேலாய்ப் பகரலா மஃதே தென்னில்
நித்தமு ஞ் சுவசொ ரூப நிகழ்த்திய வனுசந் தானம்
பத்திதா னுகு மென்றே பகருவர் பரமு ணர்ந்தோர்.

2. நித்யாத்வயாகண்ட சிதேகரூபோ புத்த்யாதிஸாக்ஷீ
ஸதஸத்விலக்ஷண : ।
அஹம்பத ப்ரத்யய லக்ஷிதார்த்த : ப்ர்த்யக்
ஸதானந் தகன : பராத்மா ।

சத்தசத் துக்கு வேறாய் சாக்ஷியாய் புத்தி யாதிக்
கித்திற மகம்ப தத்தி னிலக்கியப் பொருளு மாகி

நித்தவத் துவிதா கண்ட நிமலசித் துருவே யான
சுத்தமாம் பிரத்ய கான்மா சுககன பரமான் மாவே.

3. ப்ரக்ருதி விக்ருதி பின்ன : ஸுத்த போதஸ் ஸ்வபாவ:
ஸதஸதிதமஸேஷம் பாஸயந்நிர் விஸேஷ : ।
விலஸதி பரமாத்மா ஜாக்ரதாதிஷ்வ வஸ்தா ஸ்வஹ
மஹமிதி ஸாக்ஷாத் ஸாக்ஷி ரூபேண புத்தே : ॥

பத்தனே பகுதியாதி பகுப்பினுக் கெல்லாம் வேருய்
சுத்தசிற் சொருப மாகிச் சுழல்வுறுஞ் சதசத்
தெல்லாம்
நித்தமும் விளக்கி வைத்து நிருவிசே ஷம்பொ
ருந்தும்
சத்தியப் பரமான் மாவே சாக்கிரா தியிலி லங்கும்.

4. ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்திஷு ஸ்புடதரம்யோऽஸௌ
ஸமுஜ்ஜரும்பதே
ப்ரத்யக் ரூபதயா ஸதாஹமஹ மித்யந்த :
ஸ்புரன் னேகதா ।
நானகார விகார பாகின இமான் பஸ்யன்னஹம்
தீமுகான்
நித்யானந்த சிதாத்மனு ஸ்புரதிதம் வித்திஸ்வமேதம்
ஹ்ருதி ॥

சாதுவே யெந்த வான்மா சாக்கிர மாதி யின்க
ணோதிய பிரத்ய கான்ம வுருவமாய் நானு னென்று
சோதியா யுளத்தி லென்றுஞ் சொலித்திடு மேக மாக
வாதியா மவ்வான் மாவை யகமென வறிநீ யென்றும்.

வித்தர விகார முற்று விவிதமாய்த் தோன்ரு நின்ற
வத்திர வகங்கா ராதி யகிலமு நேரே கண்டு
நித்தியா னந்த சித்தாய் நிகழ்ந்திடு நின்னுன்
மாவை
புத்திர சூக்ஷ்ம மான புத்தியா லுணருள் ளத்தே.

5. நியமித மனஸாமும் த்வம்ஸ்வ மாத்மான மாத்மன்
யய மஹமிதி ஸாக்ஷாத் வித்தி புத்தி ப்ரஸாதாத் ।

ஜனிமரண தரங்காபார ஸம்ஸார ஸிந்தும்ப்ரதர
பவக்ருதார்த்தோ ப்ரஹ்ம ரூபேண ஸமஸ்த:।

நித்தமு நானு னென்றே நிலைமையாய் நிகழா
நின்று
புத்தியின் சாக்ஷி யாகப் பொருந்திய பரமான் மாவை
சித்தவே காக்கி ரத்தைச் செறிந்துநான் பிரம
மென்றே
புத்தியின் றெளிவி னுலே புலமுற வுணர்தி மைந்தா.

நித்தமு நின்னுன் மாவை நின்னிடை நீயுணர்ந்து
தத்திய சனன மாதி தரங்கமாய்ப் பார மற்ற
கத்துசம் சார மாகுங் கடலினைக் கடந்து நன்ருய்
சத்தியப் பிரம மாகிச் சார்பயன் சார்ந்து நிற்பாய்.

6. ஏஷஸ்வயம் ஜ்யோதி ரஸேஷஸாக்ஷீ விஞ்ஞான
கோஸே விலஸத் யஜஸ்ரம்।
லக்ஷ்யம் விதாயைன மஸத் விலக்ஷணம் அகண்ட
வ்ருத்த்யாத்ம தயானுபாவய।

நிகழ்சுயஞ் சோதி யாகி நிகிலசாட் சியுமா மான்மா
புகலும்விஞ் ஞான கோசம் பொருந்தியே விளங்கு
மென்று
மிகழ்விலா விவ்வான் மாவை யிலக்கிய மாகப் பற்றி
யகஃமன வனுப விப்பா யகண்டமாம் விருத்தி
யாலே.

7. அதீவஸூக்ஷ்மம் பரமாத்மத்த்வம் நஸ்தூல த்ருஷ்ட்யா
ப்ரதிபத்து மர்ஹதி।
ஸமாதினுத்யந்த ஸூஸூக்ஷ்ம வ்ருத்த்யாஜ் ஞாதவ்ய
மார்யைரதி ஸூத்தபுத்திபி:।

மிகவுமே நுண்மை யான மெய்ப்பரப் பிரமந் தன்னை
தகவிலா தூல திட்டி தன்னினு லாருங் காணுர்
நிகழ்மதி நுண்மை யுள்ள நிமலரே சமாதி யாலே
மிகவுமே சூக்ஷ்ம மான விருத்தியாங் கண்ணுற்
காண்பர்.

8. நிரந்த ராப் யாஸ வசாத்த தித்தம் பக்வம் மனேப்ரு
ஹ்மணி லீயதே யதா ।
ததாஸமாதி : ஸவிகல்பவர்ஜித : ஸ்வதோ ऽத்வயா
னந்த ரஸானு பாவக :॥

இடைவிடாத் தியானத் தாலே யிருதயஞ் சுத்தமாகி
திடமுறப் பிரமத் தின்கண் தியங்கிடா தடங்கு மெப்போ
தடர்மிகு மகண்டா னந்த வனுபவ வேது வான
சடமிலா நிருவி கற்ப சமாதியப் பொழுதே யுண்டாம்.

9. ஸமாதினனேன ஸமஸ்த வாஸனக்ர ந்தேர்வினஸோ ऽகிலகர்மநாஸ :।
அந்தர் பஹி : ஸர்வத ஏவஸர்வதா ஸ்வரூப விஸ்
பூர்த்தி ரயத்ன தஸ்ஸ்யாத் ॥

ஆனவச் சமாதி யாலே யகிலவா சனைமு டிச்சும்
போனதாம் விவித மாகப் பொருந்திய கன்மம் பொன்றும்
ஏனையுள் வெளியி லெங்கு மென்றுமோர் முயற்சி யின்றி
யூனமில் சொரூபத் தோற்ற மொருமையா யொளிரா நிற்கும்

10. புத்தௌ குஹாயாம் ஸதஸத்வி லக்ஷணம்ப்ரஹ்மாஸ்தி
ஸத்யம் பரமத்விதீயம் ।
ததாத்மனயோ ऽத்ரவஸேத் குஹாயாம் புனர்னதஸ்
யாங்க குஹாப்ரவேஸ :॥

சத்தசத் துக்கு வேருஞ் சத்திய வேக வஸ்து
புத்தியாங் குகையின் கண்ணே பொருந்துமவ் வஸ்துவாக
நித்தமிக் குகையின் கண்ணே நிலைமையா யாவ னிற்பன்
புத்திர வன்னேன் மீண்டிப் புரையுடற் குகைபு கானே.

ஸ்ரீ சிவானந்தலஹரி (சமஸ்கிருதம்+தமிழ்)

1. அங்கோலம் நிஜபீஜஸந்த திரயஸ் காந்தோ பலம் ஸூசிகா
ஸாத்வீனே ஜவிபும் லதாக்ஷி திருஹம் ஸிந்து: ஸரித் வல்லபம் ।
ப்ராப்னோ தீஹ யதாததா பஸுபதே: பாதார விந்தத் வயம்
சேதோவ்ருத்திருபேத்ய திஷ்டதி ஸதா ஸாபக்திரித் யுச்யதே ।

தருவையங் கோல விதைகளுங் காந்தந் தனையிரும் பூசியும் பதியைத்
தெரிவையும் மரத்தைக் கொடிகளுங் கடலைத் தெள்ளிய நதிகளுஞ் சேரு
மொருமுறைப் படியே மனநினைவதுவு மொருசிவன் மரையடி யிணையை
மருவியெந் நாளு மன்னிநிற் பதுவே வரமிகு பக்தி யன் பென்பர்.

2. பக்திர் மஹேஸ பதபுஷ்கர மாவஸந்தீ காதம்பி
நீவகுருதே பரிதோஷ வர்ஷம் ।
ஸம்பூரிதோபவதி யஸ்ய மனஸ்தடாகஸ்தஜ் ஜன்ம
ஸஸ்யமகிலம் ஸபலம் சநான்யத் ।

அன்பது சாம்பன் பாதபுட் கரமே யடைந்துகா ரெனக்களி மழையை
யின்புறப் பெய்யு மப்புன லாலே யெவன்மன மடு நிறைந் திடுமோ
மன்புவி யவன்றன் பிறப்பெனும் பைங்கூழ் மாண்புறு மேனைய பிறவி
துன்படைந் தனவா னவைகொளும் பலனுந் துலங்கிடா தழிவடைந் திடுமே.

3. ஜனனம்ருதியுதானும் ஸேவயாதே வதானும்
நபவதிஸுகலேச : ஸம்ஸயோநாஸ்தி தத்ர ।
அஜனிமம் ருதரூபம் ஸாம்ப மீஸம் பஜந்தே
யஇஹ பரம ஸௌக்யம் தேஹிதன் யாலபந்தே ।

பிறப்பிறப் புடைய தேவரைப் பேணிப் பெறுசுகஞ்
சிறிதுமே யிலையாஞ்
சிறப்பில யிதனி லையமே யில்லை தேர்ந்தெவர் பிறப்
பிறப் பின்றி
யறப்பெருந் தேவி யுடனுறை சிவனை யன்புட
னிறைஞ்சுவ ரவரே
யுறப்பெருஞ் சுகமே பிறப்பினுற் பெறுதற் குற்றநற்
பேறுபெற் றவரே.

4. கடோவாம்ருத் பிண்டோ ப்யணுரபிச தூமோடக்னி
ரசல : படோவாதந்துர்வாபரிஹரதிகிம்
கோரஸமனம் ।
வ்ருதாகண்ட க்ஷோபம் வஹஸிதரஸா தர்க்கவசஸா
பதாம் போஜம் ஸம்போர்பஜ பரமஸௌக்யம்
வ்ரஜசுதீ : ।

புத்தியிற் றேர்ந்தாய் மண்குட மணுக்கள் புகையன
லாடைநூன் மலைக
ளித்தகைத் தருக்கப் பொருள்களும் யமனை யெற்று
மோ தருக்கநூல் கொண்டு
கத்திநற் கண்ட வரட்சிகொள் கின்றாய் கண்ணுதல்
பதமலர் கடிதே
பத்தியிற் பரவிப் பரசுக மருவப் பார்த்திடு கூர்த்தறி
வோயே.

5. வக்ஷஸ்தாடன ஸங்கயாவிசலி தோவை வஸ்வதோ
நிர்ஜரா :
கோடீரோஜ்ஜ்வல ரத்னதீப கலிகா நீராஜனம்
குர்வதே ।

த்ருஷ்ட்வா முக்திவ தூஸ்தனோதி நிப்ருதாஸ்லேஷம்
பவானீபதே
பச்சேத ஸ்தவபாதபத்ம பஜனம் தஸ்யேஹகிம்
துர்லபம் ।

ஈச நின் பதும பதம்பதி யிதய மெவற்குறு மவன்ற
னைக் கண்டே
பாசமா ரியமன் மார்பிலே யுதையும் படுமென
வஞ்சியோ டுவனுற்
றேசமா ரமரர் முடிமணி விளக்காற் சிறக்கநீ ராஞ்
சனம் புரிவார்
பேசரு முத்தி மாதுமே யணைவாள் பின்னவற் கிங்
கரி தெதுவே.

6. நரத்வம் தேவத்வம் நகவனம் ருகத்வம் மஸகதா
பஸூத்வம் கீடத்வம் பவது விஹகத்வாதி ஜனனம் ।
ஸதாத்வத் பாதாப் ஜஸ்மரண பரமானந்த லஹரீ
விஹாரா ஸக்தம் சேத்ருதய மிஹகிம் தேனவபுஷா ॥

புரகர வினையான் மனிதனோ சுரனோ பொருப்பதோ
வடவியோ நாற்கான்
மிருகமோ பறவையோ பசுத் தானோ மெல்லிய கொசு
கதோ புழுவோ
யுரியவெப் பிறவி யுற்றுள தேனு முன்னடி மலர்களை
யுன்னி
வருகளி வெள்ளந் திளைத்திடப் பெறினவ் வடிவுட
லாற்குறை யென்னே.

7. குஹாயாம் கேஹேவா பஹிரபி வனேவாத்ரி ஸிகரே
ஜலேவா வஹ்நௌவா வஸது வஸதே : கிம்வத பலம் ।
ஸதா யஸ்யைவா ந்த : கரணமபி ஸம்போத வபதே
ஸ்திதம் சேத்யோ கோஸௌஸச பரமயோகீ
ஸசஸூகீ ॥

வரமுழை யில்லம் வெளியிடங் கான மலைகளி னுச்சி
நீரங்கி
யுரைசெயு மிந்த விடங்களி லொருவ னுறைதலா
லுறுபயன் யாதோ
கரையிலா வின்ப காரண வெவனுட் கரணமெப்
போதுமுன் பாத
மரையிலே ம்ன்னல் யோக மன்னவனே மாபெரும்
யோகிமா சுகியே.

8. கபீஸரே காஸாரே விஸதி விஜனே கோரவிபினே
விஸாலே ஸைலேச ப்ரமதிகுஸு மார்த்தம் ஜடமதி: ।
ஸமர்ப்பை கம்சே தஸ்ஸ ரஸிஜ முமானுத பவதே
ஸுகேன வஸ்தாதும் ஜனஇஹன ஜானுதிகிமஹோ ॥

ஆழிய மடுவை மனிதசஞ் சார மற்றெவ் வனத்தை
நீண்மலையைச்
சூழுவர் மலர்க டுருவியே யொன்றுய்த் துலங்குதம்
மிதயதா மரையை
யூழதை யொழிக்கு முமையவ ணுத வுனக்களித்
தொருகவ வின்றி
வாழிதிற் சுகமாய் வாழ்ந்திடு வழியை மாந்தரேன்
ஓர்ந்தில ரந்தோ.

9. வடுர்வா கேஹீவா யதிரபி ஜடீவா ததிதரோ
நரோவா ய : கஸ்ச்சித்பவது பவகிம் தேனபவதி ।
யதீயம் ஹ்ருத்பத்மம் யதிபவததீனம் பஸுபதே
ததீயஸ்த்வம் ஸம்போ பவஸிபவ பாரம்ச வஹஸி ॥

மாணியோ வில்லம் வாழ்வ ேேதுறவு வாய்ந்தவ
ேேசடா தரேே
பேணிய பிறிதோர் நரனெவ னேயாய்ப் பிறங்குக
பெறுவதென் னதனுல்
வேணியெம் பெருமா னெவன்றன திதய மென்மல
ரதுநினக் குரித்தாய்ப்
பூணிய லுளதோ வவன்வய னுய்நீ பொறுப்பையன்
னவன்பவச் சுமையே.

10. ஆத்யா வித்யா ஹ்ருத் கதா நிர்கதாஸீத்
வித்யா ஹ்ருத்யா ஹ்ருத்கதா த்வத்ப்ரஸாதாத் ।
ஸேவே நித்யம் ஸ்ரீகரம்த்வத் பதாப்ஜம் பாவே முக்தேர்
பாஜனம் ராஜமௌலே ।

தண்ணிலா மௌலீ நின்னரு ளதனுற் றடித்தவஞ்
ஞானமென் னுள்ளம்
நண்ணிடா தொழிந்து போயதுஞான நலம்பெற
விதயமெய் தியதா
லெண்ணிலாச் செல்வ மளிப்பதும் வீட்டிற் கிருப்
பிட மாவது மாமுன்
புண்ணிய பாத தாமரை யதனைப் போற்றுவேன்
மனத்திலெப் போழ்தும்.

ஸ்ரீ தாயுமான சுவாமிகள்
பாடல்களில் ஸ்ரீ ரமண பகவான் தொகுத்து
அருளிய சில பாடல்கள்

1. நானென்னு மோரகந்தை யெவர்க்கும் வந்து
நலிந்தவுடன் சகமாயை நானு வாகித்
தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்ப
சாகரத்தின் பெருமையெவர் சாற்ற வல்லார்
ஊனென்று முடலென்றுங் கரண மென்றும்
உள்ளென்றும் புறமென்று மொழியா நின்ற
வானென்றுங் காலென்றுந் தீநீ ரென்றும்
மண்ணென்றும் மலையென்றும் வனம
தென்றும்.

2. மலைமலையாங் காட்சிகண்கா ணுமை யாதி
மறப்பென்றும் நினைப்பென்றும் மாயா வாரி
அலையலையா யடிக்குமின்ப துன்ப மென்று
மதைவிளைக்கும் வினைகளென்று மதனைத் தீர்க்க

தலைபலவாஞ் சமயமென்றுந் தெய்வ மென்றுஞ்
சாதகரென் றும்மதற்குச் சாட்சி யாகக்
கலைபலவா நெறியென்ற ந் தர்க்க மென்றுங்
கடலுறுநுண் மணலெண்ணிக் காணும்
போதும்.

3. காணரிய வல்லலெல்லாந் தானே கட்டுக்
கட்டாக விளையுமதைக் கட்டோ டேதான்
வீணினிற்கர்ப் பூரமலை படுதீப் பட்ட
விந்தையெனக் காணவொரு விவேகங் காட்ட
ஊணுறக்க மின்பதுன்பம் பேரு ராதி
யொவ்விடவு மெனைப்போல வுருவங் காட்டிக்
கோண றவோர் மான்காட்டி மானே யீர்க்குங்
கொள்கையென வருண்மௌன குருவாய் வந்து.

4. வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே யத்துவா மார்க்க நோக்கி
யைந்துபுல னைம்பூதம் கரண மாதி
யடுத்தகுண மத்தனையு மல்லை யல்லை
இந்தவுட லறிவறியா மையுநீ யல்லை
யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யேம்யாம்.

5. அறிவாகி யானந்த மயமா யென்றும்
அழியாத நிலையாகி யாதின் பாலும்
பிரியாமற் றண்ணருளே கோயி லான
பெரியபரம் பதியதனைப் பெறவே வேண்டின்
நெறியாகக் கூறுவன்கே ளெந்த நாளும்
நிற்குணநிற் குளம்வாய்த்து நீடு வாழ்க
செறிவான வறியாமை யெல்லாம் நீங்க
சிற்சுகம்பெற் றிடுகபந்தம் தீர்க வென்றே.

6. பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை யருளியந்தப் பண்புக் கேதான்
சிந்தையில்லை நானென்னும் பான்மை யில்லை
தேசமில்லை காலமில்லை திக்கு மில்லை
தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவு மில்லை
சொல்லுமில்லை யிராப்பகலாந் தோற்ற மில்லை
அந்தமில்லை யாதியில்லை நடுவு மில்லை
அகமுமில்லை புறமுமில்லை யனைத்து மில்லை.

7. இல்லையில்லை யென்னினுன்று மில்லா தல்ல
வியல்பாகி யென்றுமுள்ள விபற்கை யாகிச்
சொல்லரிய தன்மையதா யான்ரு னென்னத்
தோன்ருதெல் லாம்விழுங்குஞ் சொரூப மாகி
அல்லையுண்ட பகல்போல வவித்தை யெல்லா
மடையவுண்டு தடையறவுன் னறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னுகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளக்குந் தானே.

8. தானுன தன்மயமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனுலுங் கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வே றின்ரும்
ஞானுகா ரத்தினெடு னேய மற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்
ஆனுலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வா
ரதுவானு லதுவாவ ரதுவே சொல்லும்.

9. அதுவென்ரு லெதுவெனவொன் றடுக்குஞ் சங்கை
யாதலினு லதுவெனலுமறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனக ணுதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்

பதியிந்த நிலையெனவு மென்னை யாண்ட
படிக்குநிரு விகற்பத்தாற் பரமா னந்த
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூ ரிந்தக்
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன்.

வேறு

10. நானென் றெருமுத லுண்டென்ற நான்றலை
நாண வென்னுட்
டானென் றெருமுதல் பூரணமாகத்
தலைப்பட் டொப்பில்
ஆனந்தந் தந்தென் னறிவையெல் லாமுண்
டவச நல்கி
மோனந் தனைவிளைத் தாலினி யாது
மொழிகுவதே.

தக்ஷிணாமூர்த்தி தோத்திரம் (ஸம்ஸ்கிருதம் தமிழ்)

யோதக்ஷிணாஸ்யோ நிஜமௌன பாவம்
ப்ரகாச்ய சாSந்த்யை முனிஸத்தமானாம் ।
ஆஹஸ்தவேஸ்மின் னகிலாத்மதாம்ச
ஸசம்கரோபாதி மதந்தரங்கே ॥

மன்னுமா முனிவரர் சாந்தி மன்னவே
தென்முக மூர்த்தியாய்த் திகழ்ந்து மோனமாந்
தன்னிலை திகழ்த்தியித் துதியிற் றன்மயஞ்
சொன்னவச் சங்கரன் றுன்னு மென்னுளே.

1. மௌன·வ்யாக்யாப்ரகடித பரப்ரஹ்மதத்வம் யுவானம்
வர்ஷிஷ்டாந்தே வஸத்ருஷிகணை ராவ்ருதம்
ப்ருஹ்ம நிஷ்டை:।

ஆசார்யேந்த்ரம் கரகலித சின்முத்ர மானந்த
மூர்த்திம்
ஸ்வாத்மாராமம் முதிதவதனம் தக்ஷிணாமூர்த்தி
மீடே॥

மவுனமா முரையாற் காட்டு மாப்பிரம வத்து வாலன்
சிவநிலைத் தவர்சற் சீடர் செறிகுரு வரன்சிற் கைய
னுவகையோ ருருவன் றன்னு ளுவப்பவன் களிமு
கத்த
னவனையாந் தென்பால் மூர்த்தி யப்பனை யேத்து
வோமே.

2. விச்வம் தர்ப்பணத்ருச்யமான நகரீதுல்யம் நிஜாந்தர்
கதம்
பச்யன் னாத்மனி மாயயாபஹிரிவோத்பூதம் யதா
நித்ரயா।
யஸ்ஸாக்ஷாத் குருதே ப்ரபோத ஸமயேஸ்வாத்
மானமேவாத்வயம்
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம் ஸ்ரீ தக்ஷிணா
மூர்த்தயே ॥

உலகுகண் ணாடி யூர்நே ருறத்தனு ளஞ்ஞா னத்தால்
வெளியினிற் றுயிற்க னாப்போல் விளங்கிடக் கண்டு
ஞான
நிலையுறு நேரந் தன்னை யொருவனா யெவனேர்
காண்பன்
றலையுறு குருவா மந்த தக்ஷிணா மூர்த்தி போற்றி.

3. பீஜஸ்யாந்த ரிவாங்குரோ ஜகதிதம் ப்ராங்நிர்விகல்பம்
புன।
மாயாகல்பித தேசகாலகலனா வைசித்ர்ய சித்ரீ
க்ருதம்:

மாயாவீவ விஜ்ரும்பயத்யபி மஹாயோகீவ யஸ்ஸ்
வேச்சயா
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நமஇதம் ஸ்ரீ தக்ஷிணு
மூர்த்தயே ॥

வித்துளே முளைபோல் முன்னம் விகற்ப மிலிச்ச
கம்பின்
கற்பித மாயா தேய காலகர் மத்தாற் பற்பல்
சித்திரம் விரிப்பன் யாவன் சித்தனு மாயி கன்போற்
சத்தியாற் குருவா மந்த தக்ஷிணு மூர்த்தி போற்றி.

4. யஸ்யைவ ஸ்புரணம் ஸதாத்மகம் அஸத்கல்பார்த்
தகம் பாஸதே
ஸாக்ஷாத்தத் த்வமஸீதி வேதவசஸா யோபோதயத்
யாச்ரி தான்
யத்ஸாக்ஷாத் கரணுத்பவேன்ன புனராவ்ருத்திர் பவாம்
போநிதௌ
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நமஇதம் ஸ்ரீதக்ஷிணு
மூர்த்தயே ॥

எவனொளி யுண்மை யின்மை யியைபொரு ளிலங்கு
நேரே
யெவனது நீயா ஞயென் றிசைத்துணர்த் துவன்
சேர்ந் தோரை
யெவனைநேர் காணின் மீண்டு மிப்பவக் கடல்வீழ்
வில்லை
தவருறு குருவா மந்த தக்ஷிணு மூர்த்தி போற்றி.

5. நானுசித்ர கடோதரஸ்தித மஹாதீபப்ரபா பாஸ்வரம்
ஜ்ஞானம் யஸ்யது சக்ஷுராதி கரணத்வாரா பஹி:
ஸ்பந்ததே ।
ஜானமீதி தமேவபாந்த மனுபாத்யேதத் ஸமஸ்தம்
ஜகத்

தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம் ஸ்ரீதக்ஷிணு
மூர்த்தயே ।

பலதுளைக் குடத்துட் டீபப் பாய்கதிர் போல்யார்
ஞானம்
விழிமுதற் பொறிவாய்ப் பாய்ந்து வெளிசரித் தறிந்தே
னென்ன
விளங்கிடு மெவனைச் சார்ந்து விளங்குமிவ் வவனி
யாவுஞ்
சலமறு குருவா மந்த தக்ஷிணு மூர்த்தி போற்றி.

6. தேஹம் ப்ராண மபீந்த்ரியாண்யபிசலாம் புத்திம்
ச சூன்யம்விது:
ஸ்த்ரீபாலாந்த ஜடோபமா ஸ்த்வஹமிதி ப்ராந்தா
ப்ருசம்வாதின: ।
மாயாசக்தி விலாஸகல்பித மஹாவ்யாமோஹ ஸம்
ஹாரிணே
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம் ஸ்ரீதக்ஷிணு
மூர்த்தயே ॥

உடலுயிர் பொறிகள் புந்தி யொன்றுபா ழகமாத்
தேர்வர்
மடந்தையர் பால ரந்தர் மடையரேய் மூட வாதி
மடமையால் விளையு மம்மா மயக்கமே மாய்க்கு
ஞானத்
தடையறு குருவா மந்த தக்ஷிணு மூர்த்தி போற்றி.

7. ராஹுக்ரஸ்த திவாகரேந்து ஸத்ருசோ மாயாஸமாச்
சாதனாத்
ஸன்மாத்ர: கரணோபஸம் ஹரணதோ யோ பூத்ஸு
ஷுப்த: புமான்

ப்ராகஸ்வாப்ஸமிதி ப்ரபோதஸமயே ய : ப்ரத்ய
பிஞ்ஞாயதே
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நமஇதம் ஸ்ரீதக்ஷிண
மூர்த்தயே ॥

இராகுபற் றிரவி திங்க ளெனவுளன் மாயை மூடப்
பராவுள மொடுங்கத் தூங்கிப் பரவிட வுணருங்
காலம்
புராவுறங் கினனு னென்று போதனு மெவன்பு
மானுய்ச்
சராசர குருவா மந்த தக்ஷிண மூர்த்தி போற்றி.

8. பால்யாதிஷ்வபி ஜாக்ரதாதிஷு ததாஸர்வாஸ்
வவஸ்தாஸ்வபி
வ்யாவ்ருத்தா ஸ்வனுவர்த்த மானமஹமித்யந்த :
ஸ்புரந்தம் ஸதா ।
ஸ்வாத்மானம் ப்ரகடீகரோதி பஜதாம் யோமுத்ரயா
பத்ரயா
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம் ஸ்ரீ தக்ஷிண
மூர்த்தயே ॥

குழவிமுன் னனவு முன்னுக் கூறுபல் லவத்தை
யெல்லாஞ்
சுழலினுங் கலந்தி ருந்தே சொலிக்குமுள் ளகமா
நாளுங்
கழல்விழு வோர்க்கார் தன்னைக் காட்டுவன் சிற்கு
றிப்பாற்
றழல்விழிக்குருவா மந்த தக்ஷிண மூர்த்தி போற்றி.

9. விச்வம் பச்யதிகார்ய காரணதயா ஸ்வஸ்வாமி
ஸம்பந்த்த :
சிஷ்யாசார்ய தயாததைவ பித்ருபுத்ராத்மனு பே
தத :।

ஸ்வப்னே ஜாக்ரதிவா யஏஷ புருஷோ மாயா பரிப்ரா
மித :
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம் ஸ்ரீதக்ஷிண
மூர்த்தயே ॥

உலகையா ரிப்பு மானேக் குறும்பல நனக் கனவிற்
கலங்கியே மாயை யாலே காரிய கார ணம்பின்
றலைவனுந் தாசன் சீடன் குருமகன் றந்தை யாதி
தலமுறு குருவா மந்த தக்ஷிண மூர்த்தி போற்றி.

10. பூரம்பாம்ஸ்யனலோs னிலோs ம்பரமஹர் ஞதோஹி
மாம்சு:புமான்
இத்யாபாதி சராசராத்மகமிதம் யஸ்யைவ மூர்த்
யஷ்டகம் ।
நான்யத்கிம்சந வித்யதே விம்ருசதாம் யஸ்மாத்
பரஸ்மாத்விபோ :
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நமஇதம் ஸ்ரீதக்ஷிண
மூர்த்தயே ॥

மண்புன லனல்கால் வான மதிகதி ரோன்பு மானு
மென்றுளிர் சராச ரஞ்சே ரிதுவெவ னெட்டு
மூர்த்த
வெண்ணுவார்க் கிறைநி றைந்தோ னெவனினன்
னியஞ்சற் றின்றாந்
தண்ணருட் குருவா மந்த தக்ஷிண மூர்த்தி போற்றி.

11. ஸர்வாத்மத்வ மிதி ஸ்புடீக்ருத மிதம் யஸ்மாதமுஷ்
மிம்ஸ்தவே
தேனஸ்யம்ச்ரவணத் ததார்த்த மன்னத் த்யா
னச்ச ஸங்கீர்த்தனத் ।

ஸர்வாத்மத்வ ம்மஹாவிபூதி ஸஹிதம் ஸ்யாதீ
ச்வரத்வம் ஸ்வத:
ஸித்த்யேத் தத்புன ரஷ்டதா பரிணதம் சைச்வர்ய
மவ்யாஹதம் ॥

சருவமுந் தானு நன்ருய்ச் சாற்றுமித் தோத்தி
ரத்தின்
சிரவணந் தன்னு லர்த்த சிந்தனந் தியானங் கானம்
புரிவதா லெல்லாந் தானும் பூதிசே ரீசன றன்மை
மருவிடு மற்று மெட்டா மடிவறு செல்வந் தானே

திருச்சுழியல் தேவாரம்

மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையார்

அன்புடை நெஞ்சத் திவள்பே துறவம் பலத்தடியார்
என்பிடை வந்தமிழ் தூறநின் ருடி யிருஞ் சுழியல்
தன்பெடை நையத் தகவழிந் தன்னஞ் சலஞ்சலத்தின்
வன்பெடை மேற்றுயி லும்வய லூரன் வரம்பி லனே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

1. ஊனுயுயிர் புகலாயக லிடமாய்முகில் பொழியும்
வானுய்வரு மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
தேனுதரித் திசைவண்டின மிழற்றுந்திருச் சுழியல்
நானுவித நினைவார்தமை நலியார்நமன் தமரே.

2. தண்டேர்மழுப் படையான்மழ விடையானெழு
கடல் நஞ்
சுண்டேபுர மெரியச்சிலை வளைத்தானிமையவர்க்காய்
திண்டேர்மிசை நின்ருனவ னுறையுந்திருச் சுழியல்
தொண்டேசெய வல்லாரவர் நல்லார்துய ரிலரே.

3. கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்ற
கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியல்
தெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவார்
அவ்வத்திசைக் கரசாகுவ ரலராள்பிரி யாளே.

4. மலையான்மகள் மடமாதிட மாகத்தவண் மற்றுக்
கொலையானையி னுரிபோர்த்தவெம் பெருமான்திருச்
சுழியல்
அலையார்சடை யுடையானடி தொழுவார்பழு துள்ளம்
நிலையார்திகழ் புகழால்நெடு வானத்துயர் வாரே.

5. உற்றான்நமக் குயரும்மதிச் சடையான்புல னைந்தும்
செற்றார்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல்
பெற்றானினி துறையத்திறம் பாமைத்திரு நாமம்
கற்றாரவர் கதியுட்செல்வ ரேத்தும்மது கடனே.

6. மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியானமர்ந் திடமாந்திருச் சுழியல்
நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையால்நினைந்
தேத்தும்
தலந்தாங்கிய புகழான்மிகு தவமாஞ்சது ராமே.

7. சைவத்தசெவ் வுருவன்திரு நீற்றன்னுரு மேற்றன்
கைவைத்தொரு சிலையாலரண் மூன்றுமெரி
செய்தான்
தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்திருச் சுழியல்
மெய்வைத்தடி நினைவார்வினை தீர்தல்லெளி தன்றே.

8. பூவேந்திய பீடத்தவன் றானுமட லரியுங்
கோவேந்திய வினயத்தொடு குறுகப்புக லறியார்

சேவேந்திய கொடியானவ னுறையுந்திருச் சுழியல்
மாவேந்திய கரத்தானெம சிரத்தான்றன தடியே.

9. கொண்டாடுதல் புரியா வருதக்கன்பெரு வேள்வி
செண்டாடுதல் புரிந்தான்றிருச் சுழியற்பெரு மானைக்
குண்டாடிய சமணாதர்கள் குடைச்சாக்கிய ரறியா
மிண்டாடிய வதுசெய்தது வானால்வரு விதியே.

10. நீரூர்தரு நிமலன்திரு மலையார்க்கய லருகே
தேரூர்தரு மரக்கன்சிர நெரித்தான் திருச் சுழியல்
பேரூரென வுறைவானடி பெயர்நாவலர் கோமான்
ஆரூரன தமிழ்மாலைபத் தறிவார்துய ரிலரே.

ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம்
(ஸம்ஸ்கிருதம் + தமிழ்)

1. கருணாபூர்ண ஸுதாப்தே, கபலிதகந
விச்வரூப கிரணா வல்யா ।
அருணாசல பரமாத்மன், அருணோபவ
சித்தகம்ஜ ஸுவிகாஸாய ॥

அருணிறை வான வமுதக் கடலே
விரிகதிரால் யாவும் விழுங்கு — மருண
கிரிபரமான் மாவே கிளருளப்பூ நன்றாய்
விரிபரிதி யாக விளங்கு.

2. த்வய்யருணாசல ஸர்வம், பூத்வா ஸ்தித்வா
ப்ரலீன மேதச் சித்ரம் ।
ஹ்ருத்யஹ மித்யாத்மதயா, ந்ருத்யஸி போஸ்தே
வதந்தி ஹ்ருதயம் நாம ॥

சித்திரமா மிஃதெல்லாஞ் செம்மலேயே நின்பாலே
யுத்திதமாய் நின்றே யொருங்கிடுமா — னித்தியமு
நானென் றிதய நடித்திடுவை யாலுன்பேர்
தானிதய மென்றிடுவர் தாம்.

3. அஹமிதி குத ஆயாதீ, த்யன்விஷ்யாந்த :
ப்ரவிஷ்டயா஽த்யமலதியா ।
அவகம்ய ஸ்வம்ரூபம், சாம்யத்யருணாசல
த்வயி நதீவாப்தௌ ॥

அகமுகமா ரந்த வமலமதி தன்னு
லகமிதுதா னெங்கெழுமென் றாய்ந்தே — யகவுருவை
நன்கறிந்து முந்நீர் நதிபோலு மோயுமே
யுன்கணரு ணாசலனே யோர்.

4. த்யக்த்வா விஷயம் பாஹ்யம், ருத்தப்ராணேன
ருத்த மனஸா஽ந்தஸ்த்வாம் ।
த்யாயன் பச்யதியோகீ, தீதிதி மருணாசல
த்வயி மஹீயந்தே ॥

வெளிவிடயம் விட்டு விளங்கு மருணேசா
வளியடக்க நிற்கு மனத்தா — லுளமதனி
லுன்னைத் தியானித்து யோகி யொளிகாணு
முன்னி லுயர்வுறுமீ துன்.

5. த்வய்யர்ப்பித மனஸாத்வாம், பச்யன் ஸர்வம்
தவாக்ருதி தயாஸததம் ।
பஜதே஽னன்ய ப்ரீத்யா, ஸஜயத்யருணாசல
த்வயிஸுகே மக்ன : ॥

உன்னிடத்தி லொப்புவித்த வுள்ளத்தா லெப்
பொழுது
முன்னைக்கண் டெல்லாமு முன்னுருவா—யன்னியமி

லன்புசெயு மன்னே னருணாசல லாவெல்கு
மின்புருவா முன்னிவாழ்ந்தே.

6. ஸ்ரீமத்ரமண மஹர்ஷே : தர்சன மருணாசல
ஸ்ய தேவகிரா ।
பஞ்சகமார்யா கீதௌ ரத்னம் த்வித மௌபனி
ஷதம்ஹி ॥

அருணகிரி ரமண னரியத்திற் கண்ட
வருமறையந் தக்கருத்தே யாகு — மருணா
சலபஞ் சகமணியைத் தண்டமிழ்வெண் பாவா
லுலகுக் களித்தா னுவந்து

(தனி)

அரியாதியி தராஜீவர தகவாரிச குகையில்
லறிவாய்ரமி பரமாத்தும னருணாசல ரமணன்
பரிவாலுள முருகாநல பரனூர்ந்திடு குகையார்ந்
தறிவாம்விழி திறவாநிச மறிவாயது வெளியாம்.

வாழ்த்து

வாழ்க வானரு ணாசல வண்பெயர்
வாழ்க வப்பெயர் வாய்துதி பஞ்சகம்
வாழ்க வாய்மலர் மாரம ணன்பதம்
வாழ்க வப்பத மன்னுநல் லன்பரே.

அநுபந்தம் 2

(1)

கடலூர் C. சோமசுந்தரம்பிள்ளை அநுசரித்த முறைகள்

சோமசுந்தரம் பிள்ளை ஸ்ரீ பகவான் காட்டிய வழியில் நின்று தாம் அநுசரித்த முறைகளை, அவர் எழுதி வைத்திருந்த குறிப்புகளிலிருந்து சிலவற்றை அநுபந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆன்ம ஞானமடைய ஸ்ரீ பகவானுல் காட்டப்பட்ட பல வழிகளில் நான் அநுசரிக்கும் வழியை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். இவ்விதம் தெரிவிப்பது பிறருக்கு உபதேசிக்கும் உத்தேசத்துடன் அல்ல. இங்குள்ள பக்தர்களில், நான் அநுசரிக்கும் வழியில் ஸ்ரீ பகவான் சொன்னதை நான் தவருகப் புரிந்து கொண்டிருந்தால் அவர்கள் என்னை திருத்துவதற்கே. ஆன்ம ஞானம் அடையும் வழியைப் பற்றி வினவும் பல பக்தர்களுக்கும் ஸ்ரீ பகவான், அவரவர் பக்குவத்திற்குத் தக்கபடி பல வழிகளைக் காட்டியுள்ளார்கள். அவ்வழிகளில் "நான் யார் ?" என்றும் "எண்ணங்கள் யாருக்கு" என்றும் எண்ணங்கள் "எங்கிருந்து எழுகின்றன" என்றும் "மனம் எந்த இடத்தில் ஒடுங்குகின்றது" என்றும் உள்ளாழ்ந்து தேடும் வழிகளும் உண்டு. இப்படி நாமே தேடிக் கண்டுபிடிக்கும் வழி பலருக்கு அவ்வளவுச் சுலபமாக இல்லை. பலர் பல வருஷங்கள் தேடியும் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கிருர்கள். உதாரணமாக, மிஸ். மெர்ஸ்டன் ஸ்ரீ பகவானிடம் வந்து சில வருடங்களுக்குப் பின், அவர்களை ஒரு முறை சென்னையில் அடையாற்றில் சந்தித்தபோது, ஸ்ரீ பகவானின் மார்க்கத்தைப் பற்றிய

பேச்சுகளுக்கிடையில், தான் "எண்ணங்கள் எங்கிருந்து எழுகின்றன" என்பதைத் தேடிக்கொண்டிருப்பதாகவும், சிரசின் பின்பாகத்தில் பிடரியைத் தொட்டுக்காட்டி அங்கிருந்து எண்ணங்கள் எழுவதாகத் தான் உணர்வதாகவும் சொன்னார்கள். ஸ்ரீ பகவான், "எண்ணங்கள் இதயத்திலிருந்து எழுகின்றன, இதயத்திலேயே ஒடுங்குகின்றன. இதயம் இன்ன இடத்தில் இருக்கிறது" என்று சொல்லி இருக்கிறார்கள் எனக் கூறி, பிடரியில் மனதை ஒருமைபடுத்தாமல் அந்த இதயத்தில் உள்ளாழ்ந்து மனதை ஒருமைப்படுத்தும்படி சொன்னேன்.

ஸ்ரீ பகவான், நம்மையே தேடிக் கண்டுபிடிக்கச் சொல்லாமல் "ஆன்மா உணர்வுருவாம்" என்றும் "உணர்வே நாமாயுளம்" என்றும் "ஆன்மாவின் இருப்பிடம் இதயம்" என்றும் அவ்விதயம் மார்பின் வலதுபுறம் இருவிரல் தள்ளி இருக்கிறது என்றும் "அங்குள்ள ஆன்மாவில் மனதை ஒடுங்கச் செய்க" என்றும் "இவ்விதம் ஆன்மத் தியானம் செய்தால் குரு உள்ளிருந்து முடித்து வைப்பார்" என்றும் ஸ்ரீ பகவான் பக்தர்களுக்கு வெளிப்படையாகச் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். ஆன்மாவின் இருப்பிடம் இன்னது எனவும், ஆன்மா உணர்வு உருவாய் உள்ளது எனவும், குரு வாக்கியத்தால் தெரிந்தபின் அதில் நம்பிக்கை வைத்து, மார்பின் வலதுபுறம் மனதை உட்செலுத்தி நிதானித்துப் பார்த்தால் அங்கு உணர்வு தென்படுகிறது, அந்த இடமே இதயம். அந்த உணர்வே ஆன்மா. அவ் வுணர்வை, வேறென்றும் நினையாமல் கவனித்துக் கொண்டிருப்பதே ஆன்ம தியானம். இதுவே ஆன்ம விசாரம், இப்படி பழகினல் உணர்வு வேறு, அதை மனதால் நினைக்கும் செயல் வேறு என்பது அற்று அந்த உணர்வாகவே நாம் நின்று விடுவோம். பின்னர் மேற்கொண்டு நடத்திப் போவது குருவின்

(ஸ்ரீ பகவானின்) பொறுப்பு. உன்னைக் காண ஓர்நூல் ஏன்? என்று ஸ்ரீ பகவான் சொல்லி இருக்கும்போது "தன்னில் தன்னை உணர, மின்னும் தன்னுள் ஆன்ம பிரகாசமே" என்பதற் கிணங்க நம்மில் நம்மை உணராமல், வீட்டில் வைத்த பொருளை ஆரண்யத்தில் தேடுவது போல், சாஸ்திரங்களைக் காலமெல்லாம் ஆராய்ந்து கொண்டிருப்பதால் என்ன பயன்? இதுவே நான் அநுசரித்து வரும் வழியாகும்.

(2)

சாத்தானை முறியடித்த சைதன்ய சக்தி

ஆச்ரம சொத்துக்கு உரிமை கொண்டாடி ஏழை யடியாரொருவர் நீதி மன்றஞ் சென்றூர். இவ்வழக்கில் ஸ்ரீ பகவானையே பிரதிவாதியாக்கி எப்படியும் ஸ்ரீ பகவானைக்கோர்ட்டுக் கிழுப்பதென்னும் துர்நோக்கத் துடன் அரும்பாடு பட்டார். சட்டப்படி விசாரணை தேதி குறிப்பிட்டு ஸ்ரீ பகவானுக்குச் சம்மனும் வந்தது. இந்த அடாத செயலைக் கண்டு பக்தர்கள் மனம் பதறினர்.

இந்த நெருக்கடி நேரத்தில் ஈழை நாட்டில் ஆங்கில அரசின் தூதராக இருந்தவரும் ஸ்ரீ பகவானது மெய்யடி யாருமான கிராண்ட் டப் (Grand Duff) என்னும் ஆங்கில கனவான் மூலம் தெய்வ சக்தி வேலை செய்யத் தொடங்கி யது. அதாவது :—

இச் செய்தியைக் கேள்வியுற்ற அவ்வன்பர் அதிர்ச்சி யுற்றவராய், "பகவானைக் கோர்ட்டுக்கு இழுப்பதா! இது சாத்தான் சதியோ? எப்படியும் இதை முறியடித்தே தீர வேண்டும்", என்னும் திட சங்கல்பத்துடன், அந்த நாள் சென்னையின் ஆளுநராயிருந்த எர்ஸ்கின் பிரபு என்னும்

பிரிட்டிஷ் பிரமுகருடன் கலந்தாலோசித்து, "**பகவானைக் கோர்ட்டுக்கு அழைக்க வேண்டாம். தேவையானால் கமிஷன் மூலம் பகவான் ஸந்நிதியிலேயே பரிசீலிக்கலாம்**" என்று விசாரணைக் கோர்ட்டுக்கு ஆணை பிறப்பித்து அதன் நகலை ஆச்ரமத்துக்கும் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தார்.

அதன்படி விசாரணைத்தேதிக்கு முன் தினமே அந்தத் தபால் திருவண்ணுமலை அஞ்சல் நிலையத்திற்கு வந்தது.

அக்காலத்தில் தினசரி அஞ்சல் நிலையஞ் சென்று ஆச்ரமத் தபால்களை வாங்கிவரும் பொறுப்பிலிருந்த திரு. இராமசாமிப் பிள்ளையவர்கள் அன்றும் வழக்கம்போல் சென்று வந்து தோல் பெட்டியிலிருந்த தபால்களைக் கீழே கொட்டும் போது நீளமாயிருந்த அந்தத் தபால், பெட்டியிலேயே தங்கிவிட்டது.

அன்றிரவு ஸ்ரீ பகவான் ஸந்நிதியிற் குழுமியிருந்த பக்தர்கள் "விடிந்தால் விசாரணை. ஏதேனும் அற்புதம் நிகழ்ந்தாலன்றி இதைத் தவிர்க்க முடியாது போலிருக்கிறதே" என்று விசாரப்பட்டுக் கொண்டிருந்தனர். அவ் வேளையில் திரு. இராமசாமிப்பிள்ளை அவர்கள் தம்மையுமறியாது திடீரென்று தபாற் பெட்டிக்குள் கையை நுழைத்தார். என்ன ஆச்சரியம்! அதுவரையில் அப்பெட்டிக்குள் மறைந்திருந்த அந்த நீளத் தபால் அவர் கையிற் பட்டது. வெளியே எடுத்தார். பிரித்துப் பார்த்து அனைவரும் ஆச்சரியக் கடலில் மூழ்கினர். திருவருளின் அதிசய சக்தியை வியந்தனர். பின்னர் சம்பிரதாயப்படி நடந்த விசாரணை பிசுபிசுத்துப் போனதையும், அதனால் மனமுடைந்த அந்த துர்பாக்கியத் தொண்டர் வாழ்நாள் முழுவதும் நரகவேதனை யனுபவித்து இறுதியில் திக்கற்ற பிணமானதையும் நாடு நன்கறியும்.

குருத் துரோகம் செய்பவரைக் குரு மன்னித்தாலும் தெய்வம் மன்னிக்கா தென்பதற்கு இது சான்ருகுமன்ரூே? எதிர்காலத்தில் இவ்வித இடையூறுகளின்றி ஆச்ரம நிர் வாகம் ஒழுங்காக நடைபெறும் பொருட்டு ஸ்ரீபகவான் பேரால் உயில் (WILL) எழுதிப் பாதுகாக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்கு இதுவே காரணம். இத்தகைய பாதுகாப்பு செய்யப்படாதிருந்தால் இன்று ஆச்ரம நிலை எப்படியிருக்கு மென்பது ஸ்ரீ பகவானுக்குத்தான் வெளிச் சம். உலகம் பலவிதம். ஸ்ரீபகவான் வாழ்க்கையில் நிகழ்ந் தவற்றையெல்லாம் சொல்ல வேண்டுமென்ருல் இதிற் கண்ட நிகழ்ச்சியையும் சொன்னுல்தான் பூரண சரிதமாகும்.

3

வள்ளிமலைத் திருப்புகழ்ஸச்சிதானந்தஸ்வாமிகள்

ஸ்ரீ ரமணபகவான் பொதுவாக எல்லார்க்கும் ஞான விசார மார்க்கத்தையே உபதேசித்தாலும், தரிசிக்க வரு கின்ற பக்தர்களின் மனப்பாங்கை உணர்ந்து, அவரவர் களின் இயல்பான தன்மைகளுக்கு ஏற்றபடியே உபதேசம் செய்வது வழக்கம். ஸ்ரீ பழநி ஆண்டவரிடம் பக்திபூண்டு உலகு எங்கும் திருப்புகழ்ப்பாக்களைப் பரவச் செய்த **வள்ளிமலை திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகள்** ஸ்ரீ ரமண பகவானை நாடி அருள்பெற்ற விவரத்தைக் கீழே காண் போம்.

ஸ்ரீ ஸச்சிதாநந்தஸ்வாமிகள், பூர்வாச்ரமத்தில் **அர்த்த நாரி** என்ற திருநாமத்துடன் மைஸூர் அரண் மனையில் சமையற்காரராக வேலை பார்த்து வரும் காலத் தில் ஒரு சமயம் கொடிய குன்மநோய் ஆகிய வயிற்று வலிக்கு உட்பட்டிருந்தார். அரண்மனை வைத்தியர்கள்

எவ்வளவு சிகித்ஸைகள் செய்தும் நோயின் கொடுமை சிறிதும் தணியவே இல்லை. பிறகு, 'நல்லாக் கொத்தன்' என்ற அன்பர் ஒருவரின் தூண்டுதலின் பேரில் தமது 38 ஆவது வயதில் 1908 ஆம் வருஷம் பழநி சென்று ஆண்டவரிடம் ப்ரார்த்தித்து அவரது அபிஷேகப் பாலை அருந்தத் தீராத குன்மநோய் குணமாயிற்று. இந் நிகழ்ச்சியினால் பக்தி வேர் அவர் உள்ளத்தில் ஆழமாக ஊன்றி விட்டது. பிறகு ச்ருங்ககிரி நரஸிம்ஹ பாரதி ஸ்வாமிகளிடம் வாநப்ரஸ்த்த ஆச்ரமம் பெற்று 1908 ஆம் ஆண்டு முதல் 1912 ஆம் ஆண்டு வரை ஸ்ரீ பழநி ஆண்டவரின் ஸேவையிலேயே ஈடுபட்டிருந்தார். பழநியில் அர்த்த நாரி "மைஸூர் ஸ்வாமிகள்" என அழைக்கப்பட்டார்.

உத்ஸவத்தின் போது ஒருநாள் இரவு அர்த்த ஜாமத்தில் ஆண்டவர் ஸந்நிதியில் மதுரை தேவதாஸி ஒருத்தி "வங்கார மார்பில் அணி" என்ற திருச்செங் காட்டாங்குடித் திருப்புகழை இனிமையாகப் பாடக் கேட்ட மைஸூர் ஸ்வாமிகள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி லயித்துக் கந்தக் கடவுளாம் ஸொந்தக் கடவுளைக் காட்சியிலும் கண்டு களித்தார். எழுத்து வாஸனை அற்ற ஸ்வாமிகள் திருப்புகழைப் பாடி ஓத முயன்று வந்தார்.

பிறகு யாத்திரையாகச் சென்றவர் 2-12-1912 அன்று மார்கழித் திருவாதிரைத்திருநாளில் திருவருணையை அடைந்து ஸ்ரீ ரமண மஹர்ஷிகளைத் தரிசிக்கச் சென்றார். மேலே நடந்தவற்றை அவருடைய ஸொந்த வார்த்தைகளில் கூறுவதே நலம்.

"மஹர்ஷியைத் தரிசிக்கக் காத்துக் கொண்டிருந்த சிறு கூட்டத்தோடு நானும் ஆச்ரமத்தின் வாசலில் சேர்ந்து கொண்டேன். சிறிது நேரங்கழித்து மகர்ஷிகள்

ஆச்ரமத்தின் உள்ளே இருந்து வெளியே வந்தார். சில நிமிஷங்கள் கோவணுண்டியாய், ஒரு கையில் தடியை ஊன்றிக் கொண்டு நின்ருர். நான் அவரைப் பார்த்தேன். அவரும் என்னைப் பார்த்தார். திடீரென்று ஸாக்ஷாத் பழநிஆண்டவர்ரூபமாய் என் கண்களுக்கு அவர் தோன்றினர். எனக்குத் தேஹத்தில் மயிர்க்கூச்செறிதல் ஏற்பட்டது. ஆநந்தம் பொறுக்க முடியாமல் ஆநந்தக் கண்ணீர் வார்த்தேன். வார்த்தை ஒன்றும் எழும்பவில்லை. நான் மெய்மறந்து உட்கார்ந்து கொண்டேன்.”

இப்படிப் பழநித் தண்டபாணியாகக் காட்சி தந்த ஸ்ரீ ரமண பகவானிடம் இரண்டு மாதங்கள் தங்கித் திருப்புகழில் உள்ள சீர்களைக் கற்று, எழுத்து, உச்சரிப்பு, இலக்கணப் பிழைகளையும் அறிந்து திருத்திக் கொண்டு பதங்களைச் சேர்க்க, பிரிக்க வேண்டிய விதங்களையும் நன்கு அறிந்து கொண்டார் மைஸூர் ஸ்வாமிகள். ஸ்ரீ ரமண பகவான் அவரை அப்போதெல்லாம் **‘திருப்புகழ் முருகன்’** என்று பிரியமாக அழைப்பது வழக்கம்.

ஸ்ரீ ரமணபகவான், மற்றும் அடியார்களுடன் கிரிவலம் வரும் ஸமயத்தில், ‘திருப்புகழ் முருகன்’ வேடிச்சி காவலன் வகுப்பைப் பாடிக் கொண்டு வந்தார். அத்திரு வகுப்பின் ஒவ்வோர் அடியின் ஈற்றிலும், ‘காவலனே காவலனே வேடிச்சி காவலனே’ என்ற மகுடத்தை அனைவரும் கூற, ஸ்ரீ பகவான் வேடிக்கையாக, “ஏமேமி காவலனே ? எந்தெந்த காவலனே ? ” என்று தெலுங்கில் கேட்டார். உடன் வந்த ஸாது ஒருவர் வேடிக்கையாகவே “இட்லி காவலனே, காபி காவலனே” எனக் கூறவும், மிக ஆச்சர்யகரமாக, ஒருவர் அந் நடுக்காட்டில் ஒரு கூடை நிரம்ப இட்லியும் சூடான காபியும் கொண்டு வந்து அடியார்கள் எல்லோர்க்கும் விநியோகித்து ஸந்தோஷம் அடைந்தார்!

பிறகு அருணுசலத்திலிருந்து யாத்திரையாகப் புறப் பட்டுக் கங்கோத்ரி, யமுநோத்ரி, பத்ரிநாத், கேதார்நாத், அமர்நாத், ஹரித்வார், ரிஷீகேஷ், அயோத்தி போன்ற பல புண்ய ஸ்தலங்களைத் தரிசித்துப் பிறகு ஹிமாலயத்தில் தவம்புரிந்த ஒரு மஹானிடம் முறையாக ஸந்யாஸம் பெற்றுக் கொண்டு **ஸச்சிதானந்த சுவாமிகள் ஆனர்.** தமது வடநாட்டு யாத்திரையை முடித்துக் கொண்டு அருணைக்குத் திரும்பி ஸ்ரீ பகவானுக்குப் பணிவிடை செய்துவரும் காலத்தில் ஒரு நாள், ஸ்ரீ பகவான் ஸ்வாமிகளைப் பார்த்து "கீழே போங்கள்!" என்று கூற ஸ்வாமிகளும் ஸ்ரீ பகவான் சொற்படி (ஸ்கந்தாச்ரமத் திலிருந்து) மலையை விட்டுக் கீழே இறங்கினர்.

ஸ்ரீ ரமண பகவான் தம்மை கீழே இறங்கிப் போகச் சொல்லி விட்டாரே என்ற மனத் தளர்ச்சியுடன் கீழே இறங்கி வந்த ஸ்வாமிகளை, மலை அடிவாரத்தில் இருந்த ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் பார்த்து ஓடிச் சென்று கட்டித் தழுவி அணைத்துக் கொண்டு அருள்பாலித்தார். ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்கள் அருளிய **சிவமானஸபூஜா பஞ்சகம்** என்னும் ஐந்து ச்லோகங்களுக்குள் நான்காவது ச்லோக மாகிய **ஆத்மாத்வம் கிரிஜா மதி:** என்ற ச்லோகத்தைக் கூறி அதன் பொருளையும் விளக்கி விட்டு அதே கருத்துக் கொண்ட பாட்டுகள் திருப்புகழிலும் இருக்கின்றனவா என்று ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஸ்ரீ ஸச்சிதானந்த ஸ்வாமிகளைக் கேட்கப் பின்னவரும் உடனே "**எனது யானும் வேருகி எவரும் யாதும் யான் ஆகும் இதயபாவனு தீதம் அருள்வாயே !**" என்ற திருப்புகழ் அடிகளைச் சொல்லிப் பொருளையும் பயபக்தியுடன் விளக்கினர்.

உடனே ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள், "திருப்புகழே மஹாமந்த்ரம் ; திருப்புகழிலேயே எல்லாம் இருக்கிறது. திருப்புகழில் இல்லாதது வேறெதிலும் இல்லை. திருப்

புகழையே பாடிப்பரப்புங்கள் ! வள்ளிமலைக்குப் போங்கள் நானும் வருகிறேன்'' என்று கூறி உடன் அகன்றார். ஸ்வாமிகட்கு அப்போதுதான் ஸ்ரீ ரமண பகவான் அவரை அவ்வளவு அவஸரமாகக் கீழே இறங்கிப் போகச் சொன்னதன் மர்மம் புரிந்தது ; மனமும் மகிழ்ந்தது.

ஸ்ரீ ஸச்சிதாநந்தர் 1916 ஆம் ஆண்டு வள்ளி மலைக்குச் சென்று திருப்புகழ் ஆச்ரமத்தை நிறுவித் திருப்புகழ் அம்ருதத்தை அது முதல் அனைவருக்கும் வாரி வழங்கினார். வள்ளிமலையினின்று அடிக்கடி சென்னைக்கு வந்து போன ஸ்வாமிகள் சென்னையில் பல திருப்புகழ் ஸபைகளை நிறுவினார். தென்னாடு முதல் வடநாடு வரை பலஇடங்களுக்கும் யாத்திரையாகச்சென்று திருப்புகழைப் பாடியும், ப்ரஸங்கம் செய்தும், பயிற்றுவித்தும் பரப்பினார்.

ஸ்ரீ ரமண பகவானின் தாயார் ஸ்ரீ அழகம்மையார் கங்காஸ்நாநம் செய்ய விரும்பினார்கள். அவ் விருப் பத்தைக் கருத்தில் இருத்திக்கொண்டு, நினைவாக ஸ்வாமிகள் கங்காதீர்த்தத்தை எடுத்து வந்து 1942 இல் ஸ்ரீ மஹர்ஷிகளுடைய தாயார்மஹாஸமாதிக்கு அபி ஷேகம் செய்வித்தார்.

1950 ஆம் ஆண்டு ஸ்ரீ ரமண பகவானின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதை அறிந்த **வள்ளிமலை வள்ளல் (திருப்புகழ் ஸ்வாமிகள்)** ஸ்ரீ ரமண பகவானின் உடல் நலம் அடைய வேண்டி விசேஷ பூஜைகளுக்கு ஏற்பாடுசெய்தார். பின் ஓர் அன்பரை அழைத்து, "நீங்கள் அருணைக்குச் சென்று ஸ்ரீ ரமண பகவானிடம், 'பகவானே நீங்கள் இன்னும் சிலகாலம் இச் சரீரத்துடன் வாழ வேண்டும் ! 'அதனால் பலர் ஆத்மவிழிப்புணர்வு எய்த வாய்ப்பிருக்கும்'' என்று விண்ணப்பிக்குமாறு பணித்தார்.

அன்பரின் விண்ணப்பத்தை அதன்படிக் கேட்ட ஸ்ரீபகவான்கருணையுடன், "சாப்பிட்ட இலையை யாராவது அலம்பிவைத்துக் கொண்டு மீண்டும் உபயோகப் படுத்துவார்களா ?" என்று கேட்டு, மௌனமானார்.

14-4-1950 இரவு ஸ்வாமிகள் சீடர்களுடன் ஸ்ரீ ரமண பகவானைத் தர்சிக்கவேண்டி அருணைக்குப் புறப்பட்டனர். இரவு 8-45 மணிக்குத் தண்டவாளத்தைத் தாண்டிச் செல்லும் போது வள்ளிமலை ஸ்வாமிகள் திடீர் என ஸ்தம்பித்து நின்று விட்டார். தனியாகத் தள்ளப் பட்ட ஒரு இரயில் பெட்டி ஸ்வாமிகளை நெருங்கி வந்து கீழே தள்ள இருந்த ஸமயம் உடன் வந்த அன்பர்கள் ஸ்வாமிகளைப் பற்றி இழுத்துப் பேராபத்தினின்றும் காப்பாற்றினர். ஸ்ரீ ரமண பகவான் அன்றே இரவு 8-47 மணிக்கு ஸமாதி அடைந்த விவரத்தை உள்ளுணர்வால் அறிந்ததாலேயே வள்ளிமலை ஸ்வாமிகள் ஸ்தம்பித்துப் போனார். பிறகு, உடனே ஸ்ரீ ரமணாச்ரமத்துக்கு விரைந்து வந்து சேர்ந்தார். மஹாஸமாதிக் க்ரியைகள் நடக்கும் போது "சுருதிமுடி மோநம்சொல் சிற்பரம ஞாநசிவ"* என்ற பழநித் திருப்புகழைப் பாடிக் கதறி உள்ளுருகிப் போனார். உடன் வந்த அன்பருள் ஒருவர் அருள் இசைமணி-ஸு. வே. ஸுப்ரம்மண்யம் என்பவர் 'என்ன ஸ்வாமீ ! முதன் முதலாகப் பகவானைத் தரிசிக்க அழைத்து வந்த நீங்கள் அவரது உடலைத் தானே எனக்கு காட்டினீர்கள் !' எனச்சொல்லி அங்கலாய்த்துக் கொள்ள வள்ளிமலை வள்ளல், உடனே, 'போடா ! பைத்யம் ! அவர் எங்குப் போய் விட்டார் ? இங்கேயே தான் இருக்கிறார், உடம்பைத்தான் உதறி நம் ஒவ்வொருவர் உணர்விலும் கலந்து திகழ்கிறார். அவரை உடம்போடு பார்த்துத் தெரிந்து கொள்வதை, நீ என்னை இந்த உடலோடு பார்ப்

பதில் தெரிந்து கொள்வாய்!" என ஆதரவான வார்த்தைகள் கூறினர்.

பிறகு, சென்னை திரும்பியதும், ஸ்ரீ ரமண பகவானை முன்னிட்டுச் சென்னைக் கச்சாலேச்வரர் ஆலயத்தில் 1 மண்டலம் மோக்ஷதீபம் வைத்து, (ஸ்ரீ ரமண-செங்கல்வ ராய) முருகனுக்கு மண்டலாபிஷேகம், திருப்புகழ்ப் பாராயணம், அன்னதானம் முதலியன வெகு விமரிசையாக நடத்தினர். அவர் வழியே, வடதிருமுல்லைவாயில் ஸ்ரீ வைஷ்ணவி ஆலயத்தில் (அம்பாபுரியில்) ஸ்ரீ ரமண ஜயந்தி, குருபூஜை ஆராதனை முதலியன ஆண்டுதோறும் சிறப்புற நடைபெறுகின்றன.

*ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் ஸமாதியின் போது ஸ்ரீ வள்ளிமலை ஸ்வாமிகள் கதறி, உருகிப் பாடிய பழநித் திருப்புகழ்

காம்போதி] ஆண்டருள [ஜம்பை

தனதனன தானந்த தத்ததன தானதன
தனதனன தானந்த தத்ததன தானதன
தனதனன தானந்த தத்ததன தானதன தனதான

சுருதிமுடி மோநம்சொல் சிற்பரம ஞானசிவ
ஸமயவடி வாய்வந்த அத்துவிதம் ஆனபர
சுடர்ஒளிய தாய்நின்ற நிஷ்களஸொ ரூபமுதல்
ஒருவாழ்வே—
துரியநிலை யேகண்ட முக்தர்இத யாகமலம்
அதனில்விளை யாநின்ற அற்புதஸு போதஸுக
ஸுயபடிக மாஇன்ப பத்மபதமே அடைய
உணராதே

கருவில்உரு வேதங்கு சுக்கிலநி தாநவளி
பொருமஅதி லேகொண்ட முக்குணவி பாகநிலை
கருதஅரி யாவஞ்ச கக்கபட மூடிஉடல் வினைதானே-
கலகம்இட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிஜம்
எனஉழலு மாயம்ஜெ நித்தகுஹை யேஉறுதி
கருதசுழ மாம்இந்த மட்டைதனை ஆளஉன
தருள்தாராய்.

ஒருநியம மேவிண்ட ஷட்ஸமய வேதஅடி
முடிநடுவு மாய்அண்ட முட்டைவெளி ஆகிஉயிர்
உடல்உணர்வ தாய்எங்கும் உற்பநம் அதாகஅமர்
உளவோனே—
உததரிச மாம்இன்ப புத்தமிர்த போகஸுகம்
உதவும்அம லாநந்த சக்திகர மேஉணர
உருபிரண வாமந்த்ர கர்த்தவியம் ஆகவரு
குருநாதா.

பருதிகதி ரேகொஞ்சும் நற்கரணம் தூபுரம்அ
தசையநிறை பேர்அண்டம் ஒக்கநடம் ஆடுகந

பதகெருவி தா ! துங்க வெற்றிமயில் ஏறும்ஒரு
திறலோனே—
பணியும்அடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில்
சரவணப வா ! ஒன்று வற்கரமும் ஆகிவளர்
பழநிமலைமேல் நின்ற ஸுப்ரமணி யா ! அமரர்
பெருமானே

4

சாது நடனானந்தரின் சற்குரு தரிசனம்

சாது நடனானந்தர் தமது 18ஆவது வயதாகிய 1917-ல் ஆரம்பப்பள்ளி ஆசிரியராக இருந்தபோது ஸ்வாமி விவேகானந்தரின் ஞானயோகத்தில் மிகவும் ஈடுபாடுடையவரா யிருந்தமையால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் அன்னாரை ஆட்கொண்டது போல் தம்மை ஆட்கொள்ள

வல்ல ஓர் உண்மையான சற்குருவைத் தேடலானுர். அந் நாளில் இந்தியாவிலிருந்த பிரசித்திபெற்ற ஞானதேசிகர் யாவரிலும் திருவண்ணுமலை ஸ்ரீ ரமண மஹர்ஷியே மிக மிக மேலானவரென்பதை மேல்ஓலக்கூர் சுரோத்திரியம் ஸ்ரீ குப்பண்ணு சோமயாஜி என்னும் மெய் யறிஞர் மூலம் கேள்வியுற்று 1918-ல் மஹர்ஷிகள் வீற்றிருந்த ஸ்கந்தா ச்ரமம் வந்து ஸ்ரீ ஈஸ்வரஸ்வாமிகள், ஸ்ரீ காவிய கண்டர் முதலிய பல சான்ருேர்களுக்கிடையில் உத்தராயண மூர்த்தியாய் அமர்ந்து ஞானசூரியனுய் மிளிர்ந்து கொண் டிருந்த பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளைத் தரிசித்து அவர் திருமுன் சில கணங்கள் நின்ருர். வந்த நோக்கத்தை வெளியிடும் எண்ணங்கள் அவர் மனதில் எழவில்லை. ஸ்ரீ பகவான் ஸஹஜ சமாதியில் அமர்ந்து சார்ந்தோர்க் கெல்லாம் இடையருது ஸக்ஷு தீக்ஷை செய்து கொண் டிருந்த காலம் அது.

இமையாவிழியுடன் உண்ணுட்டத்திருந்து உணர்த்தும் மேலான முத்திரையே ஸ்ரீ பகவானது உபதேசமுறை யென்பதை உணராதவராய் ஊர்திரும்பிய இவ்வன்பர் முதன்முறை தரிசனத்திலேயே சற்குருவின் அருள்வலையிற் சிக்கிவிட்டமையால் அடிக்கடி மஹர்ஷி களின் ஞாபகத்தால் தூண்டப் பெற்று மீண்டும் மீண்டும் பன்முறை ஸ்ரீ பகவான் சந்நிதிக்குவந்தும் ஸ்ரீ பகவானது உபதேச முறையில் மாற்றம் காணுமையால் நம்பிக்கை யற்றுப் புராணக் கூற்றின்படி, கங்கையாடியேனும் கதி பெறலாமெனத் துணிந்து கால்நடையாகவே காசி யாத்திரை செய்யத் தொடங்கி ஸ்ரீ பெரும்புதூரை அணுகிய தும், ஆங்கொரு வைணவ முனிவர் தோன்றி, "என்ன முட்டாள்தனமான தீர்மானம் இது : உன்னை ஈடேற்ற வல்லவர் ஸ்ரீ ரமண மஹர்ஷியே; ஆகையால் மீண்டும் நீ அவரிடம்தான் செல்லவேண்டும்; இவ்வூரினின்று காசியை

நோக்கி ஒரு அடிகூட எடுத்து வைக்க உன்னை அனுமதிக்க மாட்டேன்" என்று கடுங்கோபத்துடன் வெறி பிடித்தவர் போல் காரசாரமாய்ப் பேசி இவ்வன்பரை அருணைக்கே திருப்பி விட்டார்.

அருட்குருவின் அனுக்கிரகம் கிடைக்குமென்று தோன்றவில்லை ; காசிக்குச் செல்லும் திட்டத்திற்கும் தடையேற்பட்டு விட்டது ; இனி என்ன செய்வதென்று தீவிரமாய் யோசித்துக் கொண்டிருந்த இவ்வன்பருக்கு முடிவாக ஒரு எண்ணம் தோன்றிற்று. அதாவது தமது தீவிர ஞான வேட்கையை எழுத்து மூலம் மஹர்ஷிகளுக்கு விண்ணப்பிப்ப தென்பது அது. அதன்படி மஹர்ஷிகளின் முகவரிக்குத் தபால்மூலம் ஒரு கடிதம் எழுதினர். ஒரு மாதம் வரையில் அதற்குப் பதில் கிடைக்காமையால் மனமுடைந்தவராய் மீண்டும் மற்றொரு கடிதம் தீட்டி அதைப் பதிவுத் தபாலில் அனுப்பினர். அதில்

"பாபம் மலிந்த இக்கலியுகத்தில் நல்லதை
நாடுவோர் கோடிக்கொருவரிருத்தல் அரிது."

"பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சிக்கின்
நல்லறிவு சற்றே நகும்"*

என்னும் முன்னோர் முடிவின்படி யாருக்கேனும் சிறிது நல்லறிவு தோன்றின், அத்தகையரைத் தங்கள் போன்ற தயாபரசிரோமணிகள் அன்னைபோல் அரவணைத்து அருட்பாலூட்டி அமரராக்குவரென்பதற்குப் பல சான்றுகள் உள. சமீப காலத்தில் வாழ்ந்து மறைந்த ஸ்ரீ தாயுமான சுவாமிகளும்,

---

*ஔவையார்

"காக முறவு கலந்துண்ணக்
கண்ட ரகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்கு தய்யோ
இன்புற் றிடவே நாமெடுத்த
தேக நழுவு முனம் புசிக்கச்
சேர வாரும் சகத்தீரே !"

என்று தாம்பெறும் பேரின்பத்தைச் சகலரும் பெறுமாறு அன்பர்களை வலிந்தழைத்த வரலாறு பிரசித்தம். தாங்கள் என்னை அபக்குவியாய்க் கருதலாம். அஃது உண்மை யாகவே இருப்பினும், பெருநெருப்புக்கு ஈரம் ஏது? ஸ்ரீ சம்பந்தப் பெருமான் தம் திருமணத்தின் போது தோன்றிய அருட்சோதிக்குட் புகுந்து அமரராகுமாறு பக்குவாபக்குவம் பாராமல் அனைவரையும் வலிந்து அழைக்கவில்லையா ! அஃதெங்ஙனமாயினும் :

"எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

என்னும் தமிழ்த் திருமறைப்படி, அடியேன் எத்துணைப் பிறவிகளெடுக்க நேரினும் தங்களைத் தவிர வேறெவரையும் குருவாய்க் கொள்வதில்லை என்னும் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டுள்ளமையால், எனக்குப் பக்குவம் வாய்க்கும் பிறவியில், என் பொருட்டுத் தாங்களும் பிறப்பது முக்காலும் சத்தியம்". எனக் கூறியிருந்தார்.

இது நிகழ்ந்த சில நாட்களுக்குப்பின் ஸ்ரீ பகவான் ஓர்நாள் இவ்வன்பரின் கனவில் தோன்றி,

"ஏன் சதா என்னையே நினைத்து நினைத்துக்கவலைப்படு கிறாய்? முதலில் மஹேசனின் அருளை நாடு, என தருள் தானே கிடைக்கும்"

எனக் கூறியருளினுர். அதன்படி, இவ்வன்பர் சிலகாலம் சிவோபாசனே செய்துவரும்போது, அருணுசலேஸ்வரர் ஆலயத்தில் அது சமயம் வேதபாடசாலேயின் போதகரா யிருந்து வந்த ஸ்ரீ வாசுதேவ சாஸ்திரிகளிடமிருந்து ஒரு நிருபம் கிடைத்தது. அதில்,

> "நீங்கள் எழுதிய இரு கடிதங்களேயும் பகவான் பார்வை யிட்டனர். நீங்கள் பகவான் தரிசனத்திற்கு வரலாம்"

என அவர் வரைந்திருந்தார்.

அதன்படி, உடனே புறப்பட்டு அருணேயடைந்து, ஆலயஞ் சென்று, "முதலில் மஹேசனின் அருளே நாடு" என்று ஸ்ரீபகவான் ஏற்கனவே அறிவித்திருந்தமை யால், அன்றிரவு அருணுசலேசன் சந்நிதியில் தங்கி யிருந்து அருணேசன் அருளேப்பெற்று மறுநாள் ஸ்ரீ பகவானே தரிசிப்பது என்னும் முடிவுடன், கோயிலில் ஓர்பால் அமர்ந்திருந்த போது ஆங்குற்ற ஓர் அர்ச்சகர் இவ்வன்பரின் உள்ளக்கிடக்கையைத் துருவிக் கேட்டுத் தெரிந்து கொண்டதும் பின்வருமாறு கூறலாயினர். அதாவது :

> "நான் மஹர்ஷிகளேப் பல ஆண்டுகளாக அறிவேன். அவர் தரிசனத்திற்காக அடிக்கடி அவரது இருப்பிடத் திற்கு நான் செல்வதுண்டு. அவர் மிக நெஞ்சழுத்தக் காரர். அவர் முன், மண்டையை உடைத்துக் கொண் டாலும் ஏனென்று கேட்க மாட்டார். பார்த்தும் பாராத வராயிருப்பார். அவ்வளவு கடினசித்தம் உடையவர் அவர். யானறிந்தமட்டில் அவர் இதுவரையில் யாருக்கும் எவ் வுபதேசமும் செய்ததில்லே. அப்படிப்பட்டவர் உங்க ளுக்கு மட்டில் என்ன சாதித்துவிடப் போகிருர் ?"

என்ற அமங்கல வார்த்தைகளால் இவ்வன்பரின் மதியை மயக்கமுயன்ருர். இது மாயையின் சதிவேலே யென்பது

ஸ்ரீ பகவான் கிருபையால் இவருக்குப் புரிந்து விட்டமை யால்போதும்; போதும்; உங்கள் அறிவுரைகளை நிறுத்துங் கள் என்று கூறி, ஸ்ரீ வாசுதேவ சாஸ்திரிகளின் கடிதத்தை அவருக்குக் காட்டி ஏற்கெனவே மஹர்ஷிகளின் அனுக் கிரகம் தமக்குக் கிடைத்து விட்டதால் இனி எவருடைய ஹிதோபதேசங்களுக்காகவும் தாம் காத்திருக்கப் போவ தில்லையென்ற தமது முடிவை இவ்வன்பர் வெளியிடவே அந்த அர்ச்சகர் சற்று அசந்தவராய், அப்படியானால், உங்கள் நம்பிக்கை நிறைவேறுமா, நிறைவேறாதா என்பதை ஒரு சோதனை மூலம் நாளைக்கே நீங்கள் தெரிந்து கொள்ளலாம் என்று கூறத் தொடங்கி :

> "இங்கு ஸ்ரீ சேஷாத்திரி ஸ்வாமிகளென்ற சித்த புருஷ ரொருவர் இருக்கிறார், அவர் தரிசனம் எளிதில் கிடைக் காது. கிடைக்கினும் நமது முகத்தை அவர் நேருக்கு நேர் பார்த்து எதுவும் கூற மாட்டார். சித்த பிரமை பிடித்தவர் போல மேலும் கீழும் பார்த்துக்கொண்டு தமக்குத் தாமே ஏதேதோ பேசிக்கொள்வார். அவரது தரிசனம் பெற்று அவரிடமிருந்து ஏதேனுமொரு நல் வாக்கை நீங்கள் பெறமுடியுமானால் அதையே உங்கள் நம்பிக்கை நிறைவேறுவதற்கான அறிகுறியாய்க் கொள்ளலாம்."

என்று தம் போதனையை முடித்து விட்டு வெளியேறினார். இக்கூற்றில் சிறிது சாரமிருப்பதாக இவ்வன்பருக்குத் தோன்றியதால் அதன்படி மறுநாள் காலை 6 மணி முதல் முற்பகல் 10 மணிவரையில் நகர் முழுவதும் சுற்றித் திரிந்தும் பலரை விசாரித்தும் ஸ்ரீ சுவாமிகளின் இருப்பிடம் தெரியாமையால் கவலையுடன், இரட்டைப் பிள்ளையார் கோயிலை அடுத்துள்ள சேணியர் மடத்துத் திண்ணையில் அயர்ந்து அமர்ந்திருக்கும்போது, அண்மையிலுள்ள பால் மடத்திலிருந்து ஸ்ரீ சுவாமிகள், இவ்வன்பரை நோக்கி விரைவாக வந்து கொண்டிருந்ததைக் கண்ட ஒரு நபர்

"நீங்கள் தேடிக் கொண்டிருந்த ஸ்ரீ சேஷத்திரி சுவாமிகள் இதோ வந்துகொண்டிருக்கிறூரே!" என்று இவ்வன்பரிடம் கூறிமுடிக்குமுன், ஸ்ரீ சுவாமிகள் மடத்துவாயிலே நெருங்கிவிட்டார்கள். உடனே இவ்வன்பர் அடியற்ற மரம்போல் ஸ்ரீ சுவாமிகளின் திருவடியில் வீழ்ந்து வணங்கினூர். சுவாமிகளும் தமது திருக்கரங்களால் இவரைத் தூக்கி நிறுத்தி,

*"குழந்தாய்! உனக்கு என்ன வேண்டும்? ஞானந்தானே; ஞானமென்பது அனித்தியப் பொருள்களை ஒவ்வொன்ருக விவேகத்தால் விலக்கியபின் எது தள்ள முடியாமல் மிஞ்சி இருக்கின்றதோ அதுதான் ஞானம், அதுதான் வஸ்து. இந்நுட்ப முணராமல் வீணே அங்கும் இங்கும் அலைவது பைத்தியந்தான்".

என்று கூறிவிட்டு வந்த வழியே திரும்பி விட்டார்.

இவ்வாறு ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகளின் அருள் வாக்கைப் பெற்றவுடன் இவ்வன்பர் உள்ளங் குளிர்ந்தவராய் மறுகணமே ஸ்கந்தாச்ரமம் விரைந்து ஸ்ரீ பகவானை நமஸ்கரித்து எழுந்தார். அது பகலுணவருந்தும் நேரமாதலால் ஸ்ரீபகவான் இருக்கையினின்று எழுந்தார். அது சமயம் இவ்வன்பருடனிருந்த ஸ்ரீ சுப்பரமணிய ஐயரென்னும் தெலுங்கர், "இவர்தான் தேவரீருக்கு இரு கடிதங்கள் வரைந்தவர்" என்று இவ்வன்பரைச் சுட்டிக் காட்டித் தெலுங்கிலேயே ஸ்ரீ பகவானுக்கு அறிவித்தார். உடனே

---

*பிற்காலத்தில் திரு. B. V. நரசிம்ம ஸ்வாமிகள் எழுதிய "SELF REALISATION" என்னும் ஆங்கில நூலில் இவ்விஷயம் வெளியாகி இருந்ததைக் கண்ட ஸ்ரீ பகவான், "ஆஹா! பிரம்மஞானத்தை சேஷாத்திரி சுவாமிகள் எவ்வளவு தெளிவாக விளக்கியுள்ளார். இவரைப் பைத்தியம் என்கிறது உலகு. இதிலும் விசித்திரம் வேறென்ன உளது!" என்று இவ்வன்பரிடம் கூறி ஸ்ரீ சேஷாத்திரிசுவாமிகளை உவகையுடன் பாராட்டினர்.

ஸ்ரீ பகவான் குறுமுறுவலுடன் இவ்வன்பரை இமைப் போது ஏற இறங்கப் பார்த்துவிட்டு உணவருந்தப் புறப் பட்டார்.

அது முதல் 1929ஆம் ஆண்டு வரை இவ்வன்பர் எங்கும் நிலைத்திராமல் வெவ்வேறிடங்களில் வசிப்பவரா யிருந்தாலும் அடிக்கடி வந்து ஸ்ரீ பகவானை தரிசித்துப் போவதுண்டு. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஓர்போது ஸ்ரீ பகவானது அனுக்கிரகத்தை வேண்டி நின்றார்.

"அனுக்கிரகம் சதா நிகழ்ந்து கொண்டுதானிருக்கிறது. அனுக்ரகிப்ப தென்பது ஒரு தொழிலல்ல. அது நிரேது கமாயும் இயல்பாயும் இடையறாது நிகழ்வது. அகமுக மாய் சிரத்தையோடு செய்யும் நிரந்தரத் தியானத்தால் அனுபவமாவது. மற்றைப்படி இப்படியென்றும் அப்படி யென்றும் இது விவரிக்கக் கூடியதன்று,"

என்று தேற்றியருளினார் ஸ்ரீ பகவான்.

இந்நிலை, கைவல்யமாதற் பொருட்டுச் சமயம் வாய்த்த போதெல்லாம் ஸ்ரீபகவானிடம் கேட்டுத் தெளிந்த சுவானுபூதி விளக்கங்களே பிற்காலத்தில் "உபதேச மஞ்சரி" என்னும் நூலாயிற்று.

1957-ல் சாது நடனானந்தரால் எழுதப்பட்டு வெளி யான "ஸ்ரீ ரமண தரிசனம்" என்னும் நூல் ஸ்ரீ பகவா னது உபதேசங்கள் பலவற்றின் நுட்பங்களை செவ்வனே விளக்கினும் ;

1950-ல் ஸ்ரீ பகவானது மஹாசமாதிக்குப்பின், ஏற் கெனவே அவர்பேரில் சிருட்டிக்கப்பட்டிருந்த Will சாஸ னம் பற்றியும்; ஸ்ரீ பகவான் அருளியுள்ள "உள்ளது நாற்பது" அனுபந்தத்தின் 33-வது செய்யுளின் உட்

பொருளைப் பற்றியும் ; ஸ்ரீ பகவானது நிர்வாண நேரத்தில் வானத்தில் மிளிர்ந்ததோர் ஜோதிக்கும் ஸ்ரீபகவானது பரமார்த்த நிலைக்குமுள்ள சம்பந்தம் பற்றியும்; ஆங்காங்கு நிகழ்ந்து வந்த பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதே அதன் நோக்கமாகும்.

குறிப்பு :— சாது நடனானந்தர் 1918 முதல் 1950ல் ஸ்ரீ பகவான் சித்தியடையும் வரையில் 32 ஆண்டுகள் ஸ்ரீ பகவானோடு பூண்ட பரமார்த்த சம்பந்தத்தில் நிகழ்ந்த பல தெய்வீக சம்பவங்களில் மறக்க முடியாததோர் அரிய சம்பவம்பற்றிப் பின்வருமாறு விவரிக்கிறார். அதாவது :—

தாம் பரிபூரண சித்தோபசாந்தம் பெறுமுன் ஏதோவொரு வியாஸபௌர்ணமியன்றிரவு கிரிப்பிரதக்ஷணம் செய்தற்பொருட்டு ஸ்ரீ காவியகண்ட கணபதி முனிவர், ஸ்ரீ கபாலி சாஸ்திரி முதலிய பல வடமொழிப் பண்டிதர்கள் புடைசூழ ஊருக்குள்ளிருந்து புறப்பட்டு, மஹர்ஷிகளின் சந்நிதியை அடைந்து, ஆங்குச் சிறிது நேரம் பரமார்த்த தத்துவ ரகசியங்களைப் பற்றி உரையாடினர். அவர்களது பேச்சுக்கள் பெரும்பாலும் வடமொழியிலேயே நிகழ்ந்தன. அவை தத்துவ விமர்சனங்களென்று தெரிந்திருந்தும் அவற்றின் பொருள் புரியாமையால்; 'அவர்களைப் போல் நாமும் ஆன்மானுபூதி பெற்று மகிழும் நாள் என்றோ ?' என்று எண்ணத் தொடங்கி ஏக்கமுற்று, இறுதியில் மெய்மறந்த நிலையில் பின்புறச் சுவரில் சாய்ந்து உடலுணர்வற்றவனானேன். இம் மயக்க நிலையில் எவ்வளவு நேரமிருந்தேனென்பது தெரியாது. திடீரென்று ஓர் அதட்டல் சப்தம் கேட்டு மயக்கந் தெளிந்து சுற்றுமுற்றும் பார்த்தபோது எதிரில் அமர்ந்திருந்த ஸ்ரீ பகவானைத் தவிர அங்கு வேறுயாரும் காணவில்லை."

"எதற்காக இவ்வளவு கவலை. ஆன்மானுபூதி பெறும் பேறு உனக்கு இப்பிறவியில் கிடைக்காதெனின் நீ இங்கு வந்திருக்க முடியாதே! எந்த சக்தி உன்னை ஈண்டு ஈர்த்து வந்ததோ அதுவே உன்னை ஆன்மானுபூதி பெறச் செய்யும். இன்று இன்றேனும் என்றேனும் அது தன் வேலையைச் செய்தே தீரும். கவலைப்படக் காரணமே இல்லை."

என்னும் கருணை நிறைந்த ஸ்ரீ பகவானது ஆப்த வசனங்களே என்னைத் தெளிவித்த அதட்டல் சப்தம்

இதில் மறக்கவொண்ணாத அருள்வாக்கு,

"இப்பிறவியில் உனக்கு ஆன்மானுபூதி கிடைக்கா
தெனில் நீ இங்கு வந்திருக்க முடியாதே"

என்பதுதான். அதிலுள்ள விசேடமென்னவெனின் ஆன்மா யாரை வரிக்கிறதோ அவர்தான் ஆன்மாவைத் தரிசிக்கக்கூடும் என்னும் உபநிடத வாக்குக்கு மேற் கூறிய, ஸ்ரீ பகவான் வாக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது தான், அதாவது :—

முமுக்ஷுக்களைப் பிறவிக் கடலினின்று கரையேற்றுவதே தமது திரு அவதார நோக்கமென்பதையும், அக்காரணத்தால் வந்தாரை வாழ்விப்பது தமது அருட் சந்நிதியின் பெருமையென்பதையும், தமது அநுக்ரக சக்தி, பக்குவிகளையே (இறுதிப் பிறப்பினரையே) இச் சந்நிதியைச் சார்விக்குமென்பதையும், அத்தகைய பாக்கியசாலிகள் வீடுபெறல் திண்ணமென்பதையும், தீர்க்கதரிசனத்துடன் முன்கூட்டியே தெரிவித்து சாதனத்தில் சிரத்தையும், ஊக்கமும் ஊட்டியதே இவ்வருண்மொழிகளின் மகிமையாகும். இவ்வாப்த வாக்கியங்களை, இதே பகவான்* வேறோரிடத்தில் கூறியுள்ள :

* "நான் யார்?" என்னும் சிறு நூல்

"புலியின் வாயிற்பட்டது மீளாதுபோல் குருவின் அருட்பார்வையிற் பட்டவர் மீளார்."

என்னும் சத்திய வாக்குகளோடு சேர்த்துப் பார்ப்போருக்கு மேற்கண்ட உண்மை தெளிவாதல் திண்ணம். இவ்வன்பர் ஆசிரமத்திற்கருகில் வசித்து வருகிறார்.

5

ஸ்ரீ ராமசுவாமிப் பிள்ளை

ஸ்ரீ ரமணபகவானைத் தஞ்சமென வந்தடைந்து ஸ்ரீ பகவானுக்கும் பக்தர்களுக்கும் தொண்டு செய்வதையே சாதனமாகக் கொண்டு ஆத்ம சமர்ப்பணத்துடன் கர்ம யோகம் அப்யஸிக்கும் பக்தர்களில் ஸ்ரீ ராமசுவாமிப் பிள்ளையும் ஒருவர். சிதம்பரத்தில் ஆசிரியர் வேலைபார்த்து வந்த ஒரு ரமணபக்தர் மூலம் அவரது மாணக்கரான ராமசாமிப்பிள்ளைக்கு ஸ்ரீ ரமண பகவானது திருவுருவப் படம் கிடைத்தது. ஸ்ரீ ரமண பகவானைப் பற்றித் தன் ஆசிரியரிடமிருந்து தெரிந்து கொண்டபின், திருவண்ணாமலை வந்து ஸ்ரீ பகவானைத் தரிசிக்க வேண்டி ஸ்ரீ பகவான் சந்நிதானமுற்றார்.

அப்பொழுது ஸ்ரீ பகவான் காலை நீட்டிக் கம்பீரமாகச் சாய்ந்து கொண்டிருந்தார். "காட்டில் வாழும் துஷ்ட மிருகங்களை வேட்டையாடும் பொருட்டு வந்து தங்கும் மஹாராஜாவைப் போல நம் போன்றவர்களின் விலங்கு மனத்தை நாசம் செய்யும் பொருட்டு ஞானத் தபோதனரை வாவென்று அழைக்கும் அண்ணாமலையில் ஞானயோகியாய்க் கம்பீரமாக வீற்றிருந்தார் ஸ்ரீ பகவான்" என்று தனது முதல் தரிசனத்தை விவரிக்கிறார் ஸ்ரீ ராமசாமிப் பிள்ளை.

திருவண்ணுமலைக்கு வரும் சமயம் ஊரில் தங்கி ஸ்ரீ பகவானைச் தரிசித்துச் செல்வது வழக்கம். ஒரு சமயம் ஸ்ரீ பகவானுடன் ஸ்கந்தாஸ்ரமத்தில் இரவு தங்கும் பாக்கியம் கிடைத்தது. "ஸ்ரீ பகவான் மதிய உணவு மட்டும் உட்கொள்வதால் இரவில் ஆச்ரமத்தில் ஆகார வசதிக்குச் சௌகரியமில்லை" என்று அருகிலிருந்த அன்பர் ராமசாமிப்பிள்ளையிடம் தெரிவித்தார். ஸ்ரீ பகவானுடன் இரவு தங்குவது என்று தீர்மானமாக முடிவு செய்திருந்த படியால் உணவைப் பற்றிய எண்ணத்தை விட்டு இரவு ஸ்கந்தாச்ரமத்திலேயே தங்கினர்.

அன்று இரவு 8–30 மணி இருக்கும். ஸ்ரீ ராமநாத பிரம்மச்சாரி என்ற ரமணபக்தர் ஒரு தேங்காய் மூடியும், சிறிது சர்க்கரைப் பொங்கலும் கொண்டுவந்தார். "இன்று வேறு ஆகாரம் இல்லாததால் சர்க்கரைப் பொங்கலையும் தேங்காய்த் துருவலையும் கலந்து பிசைந்து, நீர் விட்டுக் கூழ் போல் காய்ச்சி அதை எல்லோரும் உட்கொள்ளுங்கள்" என்று கூறினர் ஸ்ரீ பகவான்.

கஞ்சி தயாரானதும், "சர்க்கரையோ, கல்கண்டோ இருக்கிறதா?" என்று வினவினர் ஸ்ரீ பகவான். அந்தக் காலத்தில் ஸ்ரீ பகவானுக்கு அன்பர்கள் அன்புடன் அளிக்கும் தின்பண்டங்களை அப்பொழுதே எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து விடுவதால் ஒன்றும் மீதமில்லை. "சர்க்கரைக்குப் பதில் உப்புத்தூளைச் சேர்க்கலாம்" என்று ஸ்ரீ பகவான் கூறினர். ஆனுல் அதுவும் இருக்கவில்லை.

இரவு சுமார் 9 மணிக்கு கதவைத் தட்டும் சப்தம் கேட்கவே கதவு திறக்கப்பட்டது. என்ன ஆச்சரியம்! அந்த நேரத்தில் மழையில் நனைந்த வண்ணம் இரு இளைஞர்கள் கையில் கல்கண்டு பொட்டலம், மற்றும் வாழைப்பழங்களுடன் ஸ்ரீ பகவானைத் தரிசிக்க வந்திருந்தனர். ஸ்ரீ பகவான் விளையாட்டாக, "அட, கற்கண்டுடன்

தொட்டுக் கொள்ள வாழைப்பழமும் வந்திருக்கின்றதே!" என்று மகிழ்ச்சி ஊட்டினார்கள். கற்கண்டைப் பொடியாக்கிக் கஞ்சியில் கலந்தோம்.

'இந்தக் கஞ்சியை உங்களுடன் பகிர்ந்து சாப்பிடுவதன் மூலம் என்னுடைய 365 நாளைய உபவாசத்தை இன்று முடிக்கிறேன்" என்று கூறினார் ஸ்ரீ பகவான் இதைக் கேட்டதும் பக்தர்கள் ஸ்ரீ பகவானின் அன்பையும், கருணையையும் நினைந்து வியந்து ஆனந்தமுற்றனர். இவ்வாறு அன்றைய இரவு இன்பகரமாகக் கழிந்தது.

சில வருடங்கள் கழித்து ஸ்ரீ பகவானிடம் ஆச்ரமத்திலேயே நிரந்தரமாகத் தங்கித் தொண்டுசெய்யலானார். வருடந்தோறும் எங்கிருந்தாலும் கார்த்திகைத் தீபத்திற்கு திருவண்ணாமலையை வந்தடைந்து தீப தரிசனம் செய்து வந்தார். ஒரு சமயம் சிதம்பரத்திலிருந்து கார்த்திகைத் தீபதரிசனத்திற்காகத் திருவண்ணாமலைக்குப் புறப்பட்டார் ஸ்ரீ ராமசுவாமிப் பிள்ளை. மழையின் காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் ரயில், பஸ் போக்குவரத்து வசதிகள் தடைப்பட்டன.

எப்படியும் திருவருணை சென்று தீப தரிசனம் காண வேண்டும் என்ற தீவிர ஆவலின் காரணமாக சிதம்பரத்திலிருந்து திருவண்ணாமலைக்குக் கால்நடையாகவே புறப்பட்டார் ராமசாமிப் பிள்ளை. ஆனால் வரும் வழியில் வெள்ளத்தால் பாலம் அடித்துச் செல்லப்பட்டதால் ஆற்றைக் கடக்க முடியாமல் வருத்தத்துடன் திரும்பினார். தீப தரிசனத்தைக் காணக் கொடுத்து வைக்கவில்லையே என்று அழுது கொண்டிருந்தார். தூக்கமும் வரவில்லை. அப்பொழுது அருணாசலமும், அதன் உச்சியில் கார்த்திகைத் தீபமும் தோன்றி அன்பருக்குக் காட்சி அளித்தன. பக்தனின் மனநிலைக்கிரங்கி அருணாசல

ரமணன் செய்த அனுக்கிரகமே இது எனத் தெளிந்தார் ராமசுவாமிப் பிள்ளை !

அன்பர்களின் துணைகொண்டு ஸ்ரீ ராமசுவாமிப் பிள்ளை ஸ்கந்தாச்ரமத்திற்குச் செல்லும் வழியைச் செப்பனிட்டுப் பாதை அமைத்தார். அன்பரின் முயற்சியாலும் உடல் உழைப்பாலும் மலைச்சாரலில் உள்ள நீரோடையை ஒட்டியவாறு கரை அமைத்தார். ஆச்ரம காரியங்கள் மற்றும் பக்தர்களின் தேவைகளுக்காக வேண்டி ஒரு நாளைக்குப் பலமுறை சைக்கிளில் சென்று வருவார். ஆகையால் இவரை "சைக்கிள் ஸ்வாமி" என்றே அன்பர்கள் அன்புடன் அழைப்பார்கள்.

ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நந்தவனம், தோட்டம் முதலியன அமைத்து, பல இடங்களில் குளிர் தரும் மரங்களை நட்டு அவற்றைப் பாதுகாத்து வருகிறார்.

இன்றும் ஸ்ரீ ரமண பகவான் சந்நிதியில் விடியற் காலையில் பாராயணம் செய்து வரும் ஸ்ரீ ராமசுவாமிப் பிள்ளை அவர்கள் ஸ்ரீ ரமண பகவான் கூறிய 'நான் யார்?' என்னும் மேலான ஞான விசார மார்க்கத்தை, நாடிவரும் அன்பர்களுக்கு விளக்கி வருகிறார்.

6

யோகி ராமையா

ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் யோகி ராமையா. இவர் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்து செல்லமாக வளர்க்கப் பெற்றவர். இவரது பெற்றோருக்கு இவர் ஏகபுத்திரராக இருந்தமையால் குடும்பத்தின் குபேர சொத்துக்களுக்கு இவரே அதிபதியானார். அக்காரணத்தால் படிப்பைப் புறக்கணித்து

இளமைப் பருவத்தில் இம்மை இன்பம் துய்ப்பதிலேயே பொழுதைப் போக்கி வரலானுர்.

"தவமும் தவமுடையார்க்கு ஆகும்" என்னும் முன்ஞேர் மொழிப்படி, ஜன்மாந்தரத் தவக்குறையைப் பூர்த்தி செய்யப் பிறந்த சில நல்லோர் வாழ்க்கையில் ஏதேனுமோர் வியாஜம் காரணமாகத் திடீர் திருப்பம் ஏற்படுவதுபோல, அதாவது: அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்ததே காந்தியின் வாழ்க்கை மாற்றத்திற்குக் காரண மாய் அமைந்தது போலவும் "காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே" என்னும் மந்திரச் சொற்களே கப்பல் வியாபாரத்தால் கனவானுய் வாழ்ந்த ஸ்ரீ பட்டினத் தடிகளுக்கு இம்மைச் சுகத்தில் விரக்தி ஏற்படுத்தினது போலவும், 18வது வயதில், கபீர்தாஸரின் வாழ்க்கைச் சரிதத்தை ஓர் முறை படிக்க நேர்ந்ததே யோகி ராமையா வுக்கு உல்லாச வாழ்க்கையில் உவர்ப்பு தோன்றவும், சமய நெறியைப் பின்பற்றவும் முகாந்தரமாயிற்று.

ஒரு பிராம்மண குரு அவருக்கு ராம தாரக மந்திரத்தை உபதேசித்து, தினமும் 5,000 முறை செபிக்கச் சொன்னுர். "மந்திர செபத்தின் எண்ணிக் கையை அதிகப்படுத்திஞல் என்ன ஆகும்?" என்று ஆர்வத்துடன் கேட்டார் இவர். "எண்ணிக்கை அதிக மாகும் அளவு நன்மை பயக்கும்" என்று குரு விடை யளித்தார். "எப்பொழுதும் செபித்துக் கொண்டே இருந் தால்?" என்று மேற்கொண்டு கேட்டார் இவ்விளைஞர். சீடனின் ஆர்வப் பெருக்கைக் கண்டு மகிழ்ந்த குருவான வர், "அப்படியே செய்யலாம்" என்று ஒப்புதல் அளித்தார்.

அதுமுதல் எத்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் காலே முதல் இரவு வரை விடாமல் மந்திர செபத்தைச் செய்து வந்தார் ராமையா. கூடவே பிராணுயாமமும் பழகி வந்தார். நாளடைவில் தீவிர வைராக்கியமுற்று, உலக

பந்தபாசங்களை நீத்துத் தவம்புரியக் காசிக்குப் பயணமானார். காசிக்குச் செல்லும் வழியில் குருநாதரைச் சந்தித்தார். "புனித யாத்திரை மேற்கொள்ளத் தாயாரின் அனுமதி கிடைத்ததா?" என்று குரு வினவ, சீடன், "இல்லை" என்று பதிலளித்தான். "கிராமத்திற்குத் திரும்பிச் செல்; ஏகாந்தமாகத் தோட்டத்தில் தவம் செய்; உன் தவத்தின் முன்னேற்றம் காண விரைவில் வருவேன்" என்று கூறி விடைபெற்றார் குருநாதர்.

ராமையா குருமொழிப்படி ஊருக்குச் சென்று, தவம் செய்து வரலானார். நாளடைவில் பிறர் உதவியின்றியே பிராணாயாமம், தியானம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றார். மணிக்கணக்கில் பிராணனை அடக்க வல்லவரானார். அதனால் மனோலயமும் சித்தியானது. தேக ரக்ஷணை நிமித்தம் மிதமான சாத்வீக ஆகாரம் உட்கொண்டு, தூய பிரம்மச்சரியம் காத்து, தீவிர பக்தியுடன் இடைவிடாது செய்து வந்த தாரக மந்திர செபத்தின் பலனாக ஏகாக்ர சித்தரானார் ராமையா.

ஆரம்ப காலத்தில் மூக்கின் நுனியிலும், பிறகு புருவ மத்தியிலும் நாட்டமுற்று, மனதை ஒர்முகப் படுத்தித் தியானம் செய்து, சூரியன், சந்திரன், ஸ்ரீ ராமன் ஆகிய திவ்விய தரிசனங்களைப் பெற்றார். தொடர்ந்து தியானம் செய்து வருகையில் தோன்றி மறையும் காக்ஷிகள் அடியோடு மறைந்து, தோன்றி மறையாது ஒளிரும் உணர்வாகவே நிலைக்கலானார். அதாவது "பாவபலத்தினால் பாவனாதீத சத்பாவத்தில்" இருக்கும் பேறு பெற்றார்.

இவ்வாறு கைவரற்கரிய சற்பாவம் என்னும் பரபக்தி நிலை கைவந்ததும், தன்மை - முன்னிலை - படர்க்கை என்னும் மூவிடங்களையும் ஒன்றுபடுத்த முடியுமா என்று தமக்கு எழுந்ததோர் சந்தேகத்தை வடநாட்டிலுள்ள பல

பெரியோர்களைக் கேட்டும், யாரும் திருப்தியான பதில் அளிக்காமையால், திருவண்ணுமலையில் தெய்வகுருவாய் எழுந்தருளி இருக்கும் பகவான் சந்நிதியில்தான் இதற்குச் சரியான பதில் கிடைக்கக் கூடுமெனும் நம்பிக்கை கொண்டு, பணத்துடனும் பணியாளுடனும் பகவான் சந்நிதி அடைந்து தமது ஐய விஞவை எழுப்பினர். பகவான் அதற்கு விடையாக தாம் அருளிய "உள்ளது நாற்பது" 14வது செய்யுளின் பொருளை விளக்கி அருளினர்.

அன்பர் ராமையா சந்தேகம் தெளிந்தவராய் மஹரிஷிகளையே சற்குருவாக ஏற்று அவர் சந்நிதியிலும் மலை மீதும் பலகாலம் மௌன யோகியாய் வாழ்ந்திருந்து 12-2-62ல் விதேக சித்தராஞர்.

தன்மையுண்டேன் முன்னிலை படர்க்கைக டாமுளவாந்
தன்மையி னுண்மையைத் தாஞய்ந்து ... தன்மையறின்
முன்னிலைப டர்க்கை முடிவுற்ருென் ருயொளிருந்
தன்மையே தன்னிலைமை தான்.

உள்ளது நாற்பது - செய் - 14·

பொருட்சாரம்:-ஐயுருவது தன்மையறிவு தான். அஃதுள்ள வரையில் முன்னிலையும் படர்க்கையும் இருந்து கொண்டு தான் இருக்கும். தன்மையறிவாக இலகுவது யாது? என்று அதன் யதார்த்த நிலையை ஆராயின் அது மறைந்து விடும். அத்துடன் முன்னிலை படர்க்கைகளும் முடிவெய்தும். போலிகளான அம்மூன்று அறிவையும் கடந்த மெய்யறிவே உண்மையான தன்னறிவு நிலை என்பது கருத்து.

முற்றும்

ஸ்ரீ ரமணர்ப்பணம்

சுபம்

பிழை — திருத்தம் அட்டவணை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
ix	செய்யுள் 5 வரி 2	நடையிற்சின்	நடைபயில்சின்
ix	செய்யுள் 5 வரி 4	மெய்தவத்	மெய்த்தவத்
32	13	பிரருடைய	பிறருடைய
60	12	ஊேடன	உடனே
63	29	யாழ்பாணத்தில்	யாழ்ப்பாணத்தில்
70	11	அமர்திருந்த	அமர்ந்திருந்த
72	1	மற்ெறுறு	மற்ெறுரு
90	4	வேெறுறு	வேெறுரு
102	17	சந்ந்	சந்நி
117	27	விடுவத	விடுவது
155	16	தவ விளக்க	தத்துவ விளக்க
161	3	இருப்பதில்	×
180	9	பாடுப்பாடி	பாட்டுப்பாடி
207	23	20 வயது	30 வயது
224	5	நுற்	நூற்
275	21	ஷிவராவ்	சிவராவ்
286	30	பக்தர	பக்தர்
289	1	புதமாக	புமாக
294	26	சந்ரய்யா	சந்திரய்யா
295	8	குறியதாக	குரியதாக
296	5	கைங்காரிய	கைங்கரிய
297	14	அச்சனையும்	அத்தனையும்
,,	18	நிர்பந்தம்	நிர்ப்பந்தம்
299	17	னருட் திறத்	னருட் டிறத்
351	19	அவ்வளவுச்	அவ்வளவு
354	27	துர்பாக்கிய	துர்ப்பாக்கிய